Koviloor Digital Library

முத்தி நெறி

சிருங்கேரி ஜகத்குரு
ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த
மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்



5203
R65

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-5

முத்தி நெறி

சிருங்கேரி ஜகத்குரு சங்கராசார்யாள்

ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

அவர்கள் அருளிய உபந்யாஸங்கள்

KOVILOOR ANDAVAR
A. No. 5203
LIBRARY, KOVILOOR

வெளியிடுவோர்

ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்

சென்னை

Koviloor Digital Library

முதற் பதிப்பு : 2001

விலை : ரூ 30/-

வெளியிடுவோர் : ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்
5, பிருந்தாவனம் தெரு
மைலாப்பூர்
சென்னை – 600 004.
✆ 498 5946

அச்சிட்டோர் : ஸ்ரீ N. சுப்ரமணியன்
சுதர்ஸன் கிராபிக்ஸ்
சென்னை – 600 017
✆ 434 4038

Photos : Kind courtesy Tattvaloka

Koviloor Digital Library

4-5



சிருங்கேரி சாரதா பீடத்தின்
ஜகத்குரு ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

குருவருளே துணை

பதிப்புரை

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே

—திருமூலரின் "திருமந்திரம்"

ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் ஸ்தாபித்த முதல் ஆம்நாய பீடமான ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடத்தின் 35 வது பீடாதிபதியாக அலங்கரித்த ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் 1917ம் ஆண்டு தீபாவளித் திருநாளன்று அவதரித்தார். தமது 13 வது வயதிலேயே துறவறம் பூண்டு கடுந்தவம் புரிந்து 20 வது வயதிற்குள் யோகத்தின் மிக உன்னத நிலையை அடைந்தார். 1954ம் ஆண்டு இவருக்கு நடைபெற்ற பட்டாபிஷேகத்திற்கு முன் சுமார் 23 ஆண்டுகள், மஹாதபஸ்வியும், ஜீவன்முக்தருமான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளின் பிரதம சீடராக இருந்தார். மெய்த்தவத்தில் தன்னை மறந்து "தன்"னில் லயித்திருந்த குருநாதரை ஒரு கணமும் பிரியாமல் அவரைக் கட்டிக் காத்துக் கொண்டு அவருடைய பிரதிநிதியாக சிருங்கேரி மடத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டு நிர்வகித்து வந்தார்.

அந்தக் காலத்தில், யோக நிலையின் முழுமையை எய்துவிட்ட ஒருவர், மாய உலகின் தார்மீகமான லௌகிக காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டு, நடுநிலைமை வகித்து, பதவியின் மேன்மை எந்த விதத்திலும் தாழ்ந்து விடாமலும், அதேசமயம் அதன் உன்னதம் தம் மேல் கவிழ்ந்து அழுத்திவிடாமலும்,தமது தெய்வீகமான ஸ்வரூபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொள்ளாமலும், கத்தி முனையில் நடப்பது போல எப்படி ஜாக்கிரதையாக வாழ வேண்டும் என்பதை அவருடைய வரலாற்றிலிருந்து நாம் அறிந்து கொள்கிறோம். அவரைப் பற்றி ஏற்கெனவே வெளிவந்துள்ள **"Crest Jewel of Yogis", "Yoga Enlightenment and Perfection of Sri AbhinavaVidyatheertha Mahaswamigal"** மற்றும் "பக்தர்களின்

Koviloor Digital Library

அனுபவங்கள்" ஆகிய நூல்கள் இந்த அரிய உண்மையை நமக்குத் தெரியப்படுத்துகின்றன.

ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தரின் திருமேனி கண்டவர் புண்ணியசாலிகள். அவருடைய திருவார்த்தையை நேரில் கேட்டவர்கள் பெரும்பாக்கியம் செய்தவர்கள். அவருடைய திருநாமத்தைச் சொல்பவர்களும், அவர்தம் திருஉருவை மனதில் இருத்தி வழிபடுபவர்களும் மனிதப்பிறவி பெற்றதின் உயர்ந்த பயனை அனுபவிப்பார்கள்.

இம்மஹானின் உபந்யாஸங்கள் பல புத்தகங்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. "எனது குருநாதர்", "ஜகத்குரு பதிலளிக்கிறார்" ஆகிய பல தொகுதிகளை வெளியிடும், பொன்னிலும் மேலான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தப் புத்தகத்தில் உள்ளவை யாவும் இம்மஹான் அருள்கூர்ந்து நமக்கு வழங்கிய வேதாந்தக் கருத்துக்களை கொண்ட உபதேசங்களாகும். பல பண்டிதர்களின் கூட்டங்களில் அவர் ஆற்றிய அருளுரைகளே இவை. சில தமிழிலேயே நிகழ்த்தப்பட்டவை, சில பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டவையாகும். மிகுந்த சிரத்தையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் இவைகளைத் திரட்டி அளித்தவர்கள் திரு. E. R. இரவிகுமார், திரு. G. இராமசுப்ரமணியன், திரு. V. சுப்ரமணியன் ஆகியோர் ஆகும்.

குருவின் உருவத்தையும் நாமத்தையும் எந்நேரமும் உள்ளத்தில் நிலைநிறுத்தி வழிபட்டு வாழ்ந்துவருபவரான ஸ்ரீ இரா. மு. உமேஷ் அவர்களுடைய வாழ்த்தும், வழிகாட்டுதலும் எப்போதும் போல இப்புத்தகத்திற்கும் இருந்திருக்கிறது.

இந்த உயர்ந்த புத்தகம் எல்லோருடைய இல்லங்களிலும் இருக்க வேண்டும் என்பதற்காக மிகக் குறைந்த விலையில் அளிக்கப்படுகிறது. இதற்கு, குருபக்தியால் உந்தப்பட்டு M M Forgings Ltd என்ற நிறுவனத்தினர் மனமுவந்து அளித்த கணிசமான உதவித்தொகையே காரணமாகும். அந்நிறுவனத்தினர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

Koviloor Digital Library

அச்சுத்துறையில் சிறப்பிடம் பெற்றிருக்கும் Sudarsan Graphics என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ஸ்ரீ. N. சுப்ரமணியன் அவர்களும் மிகவும் சிரத்தையுடனும், திறமையுடனும் செயல்பட்டு இந்த நல்ல பணியைச் செய்து முடித்துள்ளார். அவருக்கு எங்கள் மனம் நிறைந்த நன்றி.

முத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே
பத்திக்கு வித்து பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்து சிவபரந் தானாதல்
சத்திக்கு வித்து தனதுப சாந்தமே

— திருமூலர்

சென்னை
05.07.2001
விஷு ஞூ
ஆஷாட பௌர்ணமி

நிர்வாகிகள்
ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பொருளடக்கம்

பதிப்புரை

நெஞ்சில் நிறைந்த ஜகத்குரு 1

1. பரம்பொருளைப் பற்றிய விசாரம் 21

2. இலட்சியமும் அதற்கான வழியும் 53

3. சங்கரரின் சுலோகங்களில் உயர்ந்த தத்துவம் 85

4. ஆத்ம தரிசனமே பிறவிப்பயன் 99

5. பரம்பொருளை அறிவதே உயர்ந்த கல்வி 109

6. கீதை புகட்டும் நெறி 121

7. ஸத்குருவின் லக்ஷணங்கள் 129

8. சீடனுக்கு வேண்டிய தகுதிகள் 153

9. ஆத்ம ஞானமே பேரின்ப சாதனம் 175

10. ஆன்மீக சாதகனின் எதிரிகள் 203

11. விசாரம் செய்ய நான்கு தகுதிகள் 219

12. பரம்பொருளின் லக்ஷணம் 243

13. திசைக்கும் காலத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருள் 267

14. அத்வைத அனுபவமும் அதற்கான தகுதிகளும் 271

15. மனிதப் பிறவியை வீணாக்காதீர் 291

16. சங்கரர் நிலைநாட்டிய உபநிடத தத்துவம் 315

அனுபந்தம்

அருளுரைகளில் ஆசார்யாள் கூறும் மேற்கோள்கள் 327

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

நெஞ்சில் நிறைந்த ஜகத்குரு

1

சிருங்கேரி – கர்நாடகத்தில் உள்ள சிக்மகளூர் தாலுகாவில் உள்ள ஒரு மலைப்பாங்கான அழகிய சிற்றூர். வற்றாத ஜீவநதியாய் தவழ்ந்தோடி வரும் துங்காவின் கரையில்தான் ஆதிசங்கரர் 12 ஆண்டுகள் தங்கியிருந்து ஸ்ரீ சாரதா பீடத்தை ஸ்தாபனம் செய்தார். அதன் 35வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ அபிநவவித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள் ஞானிகள் என்னும் ஒரு முத்துமாலைக்கு தங்கப் பதக்கமாய் திகழ்கிறார் எனின் அது சற்றும் மிகையாகாது.

பெங்களூரில் ஓர் எளிமையான குடும்பத்தில் 1917ம் ஆண்டு தீபாவளித் திருநாளன்று ஸ்ரீ இராமா சாஸ்திரி, வெங்கட லக்ஷ்மியம்மாள் என்ற தம்பதியருக்கு இம்மஹான் மகனாக அவதரித்தார். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் ஸ்ரீநிவாஸன். இறைவனிடம் மிகுந்த பக்தியும், துறவறம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் இவரிடம் சிறு வயதிலிருந்தே மேலோங்கியிருந்தது. சிருங்கேரியில் 13வது வயதில் இவருக்கு உபநயனம் நடந்தது. பிறகு ஸ்ரீமடத்து ஸம்ஸ்கிருத வேதபாடசாலையில் சேர்ந்து படித்தார்.

எல்லா ஆத்ம குணங்களும் முழுமை பெற்ற உறைவிடமாய் திகழ்ந்த இவரின் எளிமையையும், நேர்மையையும், இறையன்பையும், மனத் தூய்மையையும், புத்தி கூர்மையையும் கண்ட அப்போதைய (34வது) பீடாதிபதியான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் தமக்கு வாரிசாக இவரைத் தேர்ந்தெடுத்து ஸந்யாஸம் கொடுத்து "ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர்" என்ற யோக பட்டத்தையும் கொடுத்தருளினார். அப்போது இவருக்கு 14 வயதுகூட பூர்த்தியாகவில்லை.

சிஷ்யனைத் தேர்ந்தெடுத்த நாளன்று தங்கப் பல்லக்கில் குருவும், வெள்ளிப் பல்லக்கில் சிஷ்யனும் சிருங்கேரியை பவனி வருவது ஸ்ரீமடத்துச் சம்பிரதாயம். ஆனால்

Koviloor Digital Library

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளோ தாம் வெள்ளிப் பல்லக்கில் அமர்ந்து சிஷ்யனை தங்கப் பல்லக்கில் அமரும்படி கட்டளையிட்டார். அங்கு குழுமியிருந்த பிரமுகர்கள் பலர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளிடம் வந்து, "சம்பிரதாயப்படி தாங்களே தங்கப் பல்லக்கில் அமர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர் கூறிய பதில் – தனது சிஷ்யனின் மேல் அக்குருவிற்கு இருந்த அபாரமான நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

"இதுவே இன்று சம்பிரதாயமாய் இருக்கட்டும். இன்றைய நிகழ்ச்சியின் உட்கருத்தை மறந்துவிட்டீர்களா? அப்படியெனில் ஞாபகப்படுத்திக் கொண்டு என்றைக்கும் மனதில் பசுமையாய் பதித்து வைத்துக் கொள்ளுங்கள். இன்று முதல் எனக்கு அளிக்கும் மரியாதைகள் யாவையும் அவருக்குக் காட்டுங்கள். எனக்கு வேண்டாம். இந்த உலக வியாபாரங்களிலிருந்து முற்றிலும் விடுபட விரும்புகிறேன் நான்" என்று கூறினார்.

சாஸ்திரங்கள் நியதிப்படி குருவைத் தொடர்ந்துதான் சீடன் செல்ல வேண்டுமே தவிர அவருக்கு முன்னால் செல்லக் கூடாது. ஆனால் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் இட்ட கட்டளையோ ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தரை அந்த நியதியை முறிக்கச் செய்தது. ஏனென்றால், குருவின் ஆஸனமோ போற்றி வணங்குதற்குரியதே தவிர சீடன் அமருவதற்கு அல்ல. தங்கப் பல்லக்கோ ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளால் பல வருடங்கள் உபயோகப்படுத்தப்பட்டது.

அங்கு கூடியிருந்த பக்தர்களுக்கு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் ஏன் தங்கப் பல்லக்கில் அமர்ந்திருந்தார் என்பதற்கான விளக்கம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் இவ்விளம் சீடனை தவறுதலாகக்கூட நினைத்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் 14 வயதுகூட பூர்த்தியாகாத அந்த இளம் ஸந்யாஸியோ அதைப் ப்ற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் எந்தவிதக் குழப்பமும் அடையாமல் தம்முடைய குரு இட்ட கட்டளையைத் தயக்கமின்றி மேற்கொள்வதற்காகத் தங்கப் பல்லக்கில் அமர்ந்தார். ஸந்யாஸம் பெற்ற அன்றே அவர் குருவின் வாக்கை

Koviloor Digital Library

எப்படி சீடனானவன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை உலகிற்கு இதன் வாயிலாக எடுத்துக் காட்டினார்.

இந்நிகழ்ச்சியைப் பற்றிப் பல வருடங்களுக்குப் பிறகு ஒரு பக்தர் அவரிடம், "இப்படிப்பட்ட கடினமான ஒரு கட்டளையை உங்களுக்கு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் வழங்கிய போது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?" என்று கேட்க, அதற்கு அவர் அளித்த பதில் குரு சொற்படி நடத்தலுக்கு மேலும் ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது. "அங்கே நினைப்பதற்கு என்ன இருக்கிறது? என்னுடைய குருவின் கட்டளை மீறப்படக் கூடாத ஒன்று. சீடன் என்கிற முறையில் குரு இட்ட கட்டளையை கடைப்பிடிப்பதே என்னுடைய கடமை. அதுவே எனக்கு அந்த நேரத்தில் இருந்த சிந்தனை." இப்படி அவர் துறவறம் பூண்ட முதல் நாளிலிருந்து தாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் திறம்படச் செய்து தம்முடைய வாழ்க்கையையே ஒரு பாடமாக்கி நமக்கு அளித்திருக்கிறார்.

இறைவனிடம் அளவிலா அன்பும், குரு பக்திக்கு இலக்கணமாகவும் திகழ்ந்த ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் சிறு வயதிலிருந்தே உலக விஷயங்களில் ஆசையைத் துறந்து வைராக்கியத்துடன் தமது காலத்தைத் தவம் புரிவதிலேயே கழித்தார்.

சிருங்கேரி ஓர் அழகான, மலைப்பாங்கான குளிர் பிரதேசம். மழைக்காலத்திலோ இங்கு குளிர் மிகவும் அதிகமாக இருக்கும். கம்பளி இல்லாமல் தூங்கவே முடியாது. அப்படிப்பட்ட குளிரில் இவர் இளம் வயதில் ஈரமான ஒரு துண்டை மட்டும் இடுப்பில் அணிந்து கொண்டு தரையில் படுத்துத் தூங்குவாராம். போதாததற்கு ஈரமான துணியை வேறு மேலே போர்த்திக் கொள்வாராம். தனது அதிகாரத்தில்தான் உடல் இருக்க வேண்டுமே தவிர அதன் வசத்தில் தான் இருக்கக் கூடாது என்று நினைத்தார் இவ்விளம் துறவி.

இவருடைய குருபக்தியைக் கண்டு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் இவரைத் தமது குருவின் மறு அவதாரம் என்று நினைத்தது மட்டுமின்றி இவருக்காக எழுந்து நின்று கதவைத்

Koviloor Digital Library

திறந்துவிட்ட நிகழ்ச்சியும் உண்டு. மேலும் தமது பால சிஷ்யனைப் போற்றி சில சுலோகங்களையும் இயற்றியுள்ளார். ஆனால் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளோ இத்தகைய பெருமைகளையெல்லாம் தமது மனதிற்குள் செல்ல அனுமதித்ததில்லை. "என்மேல் இருக்கும் அன்பினால் அவர் அப்படிக் கூறுகிறார்" என்று மட்டும் சொல்வாராம்.

"மஹாஸந்நிதானம்" என்றும் "ஆசார்யாள்" என்றும் சிஷ்யகோடிகளால் அன்போடு அழைக்கப்படும் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர் தமது குருநாதரின் பரிபூரண அன்பையும் அருளையும் பெற்று சாஸ்திரத்திலும், வேதாந்தத்திலும், தர்க்கத்திலும் மிகப்பெரிய பண்டிதராய் திகழ்ந்தார்.

மஹரிஷி பதஞ்சலி வகைப்படுத்திய அஷ்டாங்க யோகமாகிய யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணா, தியானம் மற்றும் ஸமாதி என்னும் ஞானப்படிகளின் வாயிலாய் இம்மஹான் 18 வயதிற்குள் தியானத்தின் முதல் சிகரமாம் ஸவிகல்ப ஸமாதிநிலையை அடைந்தார். இந்நிலையில் ஸ்ரீ பால அம்பாள், ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர், ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் அஷ்ட புஜங்களுடன் கூடிய ஸ்ரீ விஷ்ணு ஆகிய தெய்வங்களின் அருட்காட்சி இவருக்கு கிடைத்தது. மேலும் தவத்தை மேற்கொண்ட இவர் 20 வயதிற்குள் யோகத்தின் மிக உன்னதமான நிலையாம் நிர்விகல்ப ஸமாதியை அடைந்தார். பிறகு பலமுறை இந்த நிர்விகல்ப ஸமாதியை அனுபவித்து, வாழும் பொழுதே முக்தி பெறும் ஜீவன்முக்த நிலையையும் அடைந்தார்.

வேதாந்த பாடங்களைக் கேட்கும் முன்னரேஇம்மஹானுக்கு ப்ரஹ்ம ஞான அனுபவம் ஏற்பட்டிருந்ததால் அப்பாடங்களைப் பற்றிக் கூறும்பொழுது, "ஓ! உபநிஷத்துக்கள் முழங்கும் ப்ரஹ்ம ஞானமும் என்னுடைய அனுபவமும் ஒன்றாகவே உள்ளது" என்று தமக்குத் தோன்றியதாக இம்மஹான் தமது மிக நெருங்கிய சீடர் ஒருவரிடம் கூறியுள்ளார்.

இவருடைய காலத்தில் ஸ்ரீசாரதா பீடம் மிகவும் க்ஷீணதசையில் எவ்வித வசதிகளுமின்றி காணப்பட்டது.

Koviloor Digital Library

யாத்ரீகர்கள் தங்க ஒரே ஒரு விடுதி மட்டும்தான் இருந்தது. ஆயிரம் பக்தர்கள் ஒரே சமயத்தில் வந்தாலும் தங்குவதற்கு வசதியாக பல விடுதிகள் இவரால் ஏற்படுத்தப்பட்டன. பாடசாலைகளை அபிவிருத்தி செய்து வேதக்கல்வியை பரவச் செய்தார். பொதுமக்களின் நலனுக்காக அனைத்து வசதிகளும் உடைய "சாரதா தந்வந்தரி" என்ற மருத்துவமனையையும் உருவாக்கினார்.

சிருங்கேரியில் ஆசார்யாள் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் ஏராளம். ஆலயங்களில் திருப்பணிகளை மேற்கொண்டு பல மாற்றங்களைஏற்படுத்தினார். சிருங்கேரியில் துங்கா நதிக் கரையில் ஓர் அழகான முருகர் ஆலயத்தை அமைத்து "ஸ்ரீ பாலசுப்ரமண்ய ஸ்வாமி கோவில்" என்று அதற்கு பெயரிட்டார். நிர்வாகத்தில் பல புதிய முறைகளைக் கையாண்டார். மடத்தின் விவசாய தேவைகளுக்கு பல நவீன முறைகளை அமல்படுத்தினார். ஒரு தென்னை மரத்தைக் கூட சிருங்கேரியில் பார்க்க இயலாது. காரணம், அப்பூமி தென்னை மரத்திற்கு உகந்தது இல்லை என்று அவ்வூர் மக்கள் நினைத்திருந்தனர். ஆனால் சில விவசாய நுணுக்கங்களைப் பயன்படுத்தி ஸ்ரீ மஹாஸந்நிதானம் யாவரும் வியக்கும் வண்ணம் ஒரு பெரிய தென்னந்தோப்பையே உருவாக்கிக் காட்டினார்.

ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காக்வும் பெரிதும் பாடுபட்டார் ஸ்ரீ மஹாஸந்நிதானம். நம் நாட்டு ஜனாதிபதிகள், பிரதமர்கள், வெளிநாட்டு பிரமுகர்கள், பண்டிதர்கள், மற்ற மடாதிபதிகள், பொறியியல் வல்லுநர்கள் என்று பலதரப்பட்ட மக்கள் இவரை தரிசிக்க வந்தனர். தர்ம மார்க்கத்தைப் பரப்ப பாரதம் முழுவதும் மூன்று முறை விஜயம் செய்துள்ளார். ஆதிசங்கரருக்குப் பிறகு நேபாள விஜயம் மேற்கொண்ட முதல் சங்கராச்சார்யார் இவரேயாவார். விஜய யாத்திரையின் போது பல்வேறு நகரங்களில் பல கிளை மடங்களையும் ஸ்தாபனம் செய்து அவற்றால் தர்ம காரியங்கள் நடைபெற ஏற்பாடு செய்தார். அவரால் நடத்தப்பட்ட கும்பாபிஷேக வைபவங்கள் பலப்பல. அவற்றுள் ஆசார்யாள் காசியில்

Koviloor Digital Library

"ஸ்ரீ அன்னபூர்ணா" வை பிரதிஷ்டை செய்து நடத்திய கும்பாபிஷேகமும், இராமேஸ்வரத்தில் நடத்திய கும்பாபிஷேகமும் குறிப்பிடத்தக்கவை. சபரி மலைக்கு முதன்முறையாக விஜயம் செய்த ஜகத்குருவும் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளே.

ஸம்ஸ்கிருதம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் போன்ற பல மொழிகளில் புலமைப் பெற்ற ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் சொற்பொழிவுகள் எளிமையாகவும் அதே நேரத்தில் கருத்தாழம் மிக்கதாயும் மக்களை தர்ம நெறியில் இழுத்துச் செல்வதாயும் இருக்கும். வேத சாஸ்திர பிரசாரத்திற்காக ஒவ்வொரு வருடமும் சங்கர ஜெயந்தி, வினாயகச் சதுர்த்தி போன்ற விசேஷ சந்தர்ப்பங்களில் பண்டித சபைகளை நடத்தி, பாரதம் முழுவதும் உள்ள சிறந்த பண்டிதர்களை சிருங்கேரிக்கு வரவழைத்து அவ்வித்வான்களை விசேஷமாக கௌரவித்தார். ஆன்மீக சாதனைகளுக்காக இவரை அணுகிவந்த பக்தர்களுக்கு முதலிடம் கொடுத்து அவர்களுக்கு மந்திர உபதேசமும், தத்துவ உபதேசமும் அளித்து ஞான மார்க்கத்தைக் காட்டியருளினார்.

1974 ம் ஆண்டு, நவம்பர் மாதம் 11ம் தேதி, வேதவித்பன்ன குடும்பத்தில் பிறந்த "ஸ்ரீ சீதாராம ஆஞ்சநேயலு" என்ற 23 வயது பிரஹ்மச்சாரியைத் தமது வாரிசாக தேர்ந்தெடுத்து அவருக்கு ஸந்யாஸ தீக்ஷையை அருளினார். பிறகு "ஸ்ரீ பாரதீ தீர்த்தர்" என்று அவருக்கு யோகப் பட்டத்தையும் அளித்தார். ஸ்ரீ பாரதீ தீர்த்தர் அவர்களின் பேச்சாற்றலையும், பாண்டித்யையும், குருபக்தியையும் கண்டு ஸ்ரீ மஹாஸந்நிதானம் பெரிதும் மகிழ்ந்தார். மடத்தின் மேன்மைக்காகவும், பக்தர்களின் நலனுக்காகவும் தமது உடல் நலத்தையும் பாராது ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஆற்றிய தொண்டுகள் கணக்கிலடங்கா. 1989ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆசார்யாளின் உடல்நிலை மிகவும் பாதிப்புக்குள்ளானது. ஆனால் அப்பொழுதும் ஆசார்யாள் தமது அந்தரங்க காரியதரிசியை வரவழைத்து பஜ கோவிந்தம், சிவ மானஸ பூஜா ஸ்தோத்ரம் மற்றும் ப்ரஹ்மானுசிந்தனம் போன்ற நூல்களை வாசிக்கச் சொல்லிக் கேட்பாராம். "உடல் நிலை சரியில்லாமல் இருக்கும்போது அதை நினைத்து புலம்பிக் கொண்டும் அழுது

Koviloor Digital Library

கொண்டும் இருப்பதைவிட இத்தகைய தெய்வீக நூல்களை ஒருவர் படிக்கலாம். இது எனது குருநாதர் எனக்குக் கற்றுத் தந்த பாடம்.இப்பொழுது என்னால் படிக்க இயலவில்லை. அதனால்தான் உன்னைப் படிக்கச் சொல்லிக் கேட்கிறேன்" என்று கூறினாராம் ஆசார்யாள்.

1989 ம் வருஷம், செப்டம்பர் மாதம் 21ம் தேதி இயற்கையின் நியதியையொட்டி இவர் தம் தேஹத்தைத் துறந்தாலும், இன்றும் பக்தர்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் கனவிலும் நினைவிலும் வந்து அனுக்ரஹித்து வருகிறார் என்பது அவர்களின் நித்திய அனுபவமாய் உள்ளது.

2

தஞ்சம் புகுந்த நெஞ்சங்களின் துன்பத்தை நீக்கும் நமது ஜகத்குருவாம் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைத் தரிசிக்கச் சென்ற போது பக்தர்களுக்கு ஏற்பட்ட மெய்சிலிர்க்கும் அனுபவங்கள் பலப்பல. நமது மனதிலே புதைந்திருக்கும் எண்ணங்களையெல்லாம் சொல்லாமலேயே அறிந்து கொள்ளும் வல்லமை கொண்டவர் இம்மஹான். பக்தர்களின் உள்ளத்தில் உள்ள ஆசைகளை முறையிடுவதற்கு முன்பே ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவைகளைப் பூர்த்தி செய்த சம்பவங்கள் எத்தனையோ.

அமெரிக்காவில் இருக்கும் ஓர் இந்திய அன்பர் ஸ்ரீ மஹாஸந்நிதானத்திடம் மிகுந்த பக்தியும் மரியாதையும் கொண்டிருந்தார். அவர் சில மனக் கவலைகளில் மூழ்கி இருந்தார். இந்தியாவில் உள்ள தன் பெற்றோர்களை ஸ்ரீ மஹாஸந்நிதானத்திடம் தனது குறைகளைக் கூறி அதற்கு அவர் கூறும் பதில்களை கேசட்டில் பதிவு செய்து அனுப்புமாறு கேட்டிருந்தார்.

சாதாரணமாக ஸ்ரீ மஹாஸந்நிதானம் கேசட்டில் பதிவு செய்ய அனுமதிப்பதில்லை. ஆனால் இந்த பக்தர் கேட்ட தருணத்தில் ஆசார்யாள் இதற்கு ஒப்புக்கொண்டார். பிறகு அந்த கேசட் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டது.

Koviloor Digital Library

அதைக் கேட்ட அந்த பக்தர் மனக் கவலைகளிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியுற்றார்.

சில காலத்திற்குப் பின் மற்றொரு நெருக்கடியான சூழ்நிலையில் மீண்டும் அப்பக்தர் மனக் கவலைக்கு ஆளானார். பழைய கேசட் ஞாபகம் வந்த அந்த பக்தர் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் குரலைக் கேட்டாலாவது தனக்கு சற்று ஆறுதலாக இருக்கும் என்று எண்ணி அதைப் போட்டுக் கேட்டார். போட்டுக் கேட்டவருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. காரணம் அதிலிருந்து புதிய பதில்கள் – அப்பொழுது ஏற்பட்டிருந்த குழப்பங்களுக்குத் தீர்வாக – வந்து கொண்டிருந்தன.

★

ஸ்ரீ மஹாஸந்நிதானம் மிகவும் இளகிய நெஞ்சம் படைத்தவர். மக்கள் படும் சிறிய துன்பத்தைப் பார்த்தாலும் ஆசார்யாளின் கண்கள் குளமாகும். அவரது கன்னங்களில் தாரை தாரையாக கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்.

திருச்சியில் ஆசார்யாள் யாத்திரை மேற்கொண்ட பொழுது ஒரு நாள் காலையில் ஸ்ரீ சந்திரமௌலீச்வர லிங்க அபிஷேக தீர்த்தப் பிரசாதத்தை வழங்கிக் கொண்டிருந்தார். ஆசார்யாளின் அனுக்ரஹத்தைப் பெற வேண்டி தீர்த்தப் பிரசாதத்திற்காக நின்று கொண்டிருந்த பக்தர்களின் வரிசையில் ஒரு வயதான பெண்மணியும் வந்து நின்றாள். மிகவும் ஏழ்மை நிலையுடன் காணப்பட்ட அப்பெண்மணி ஆசார்யாளிடம் அபார பக்தி வைத்திருந்தாள். தீர்த்தப் பிரசாதக் காணிக்கைக்காக தன்னிடம் உள்ள சில்லரைக் காசுகளை அங்கேயிருந்த ஒரு தட்டில் போட நினைத்தாள்.

ஆசார்யாள் அருகே வந்தவுடன் தீர்த்தம் வாங்குவதற்கு முன் தான் புடவையில் முடித்து வைத்திருந்த காசுகளை எடுக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள் அப்பெண். அவளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த மக்கள் கூட்டம் அவளை சீக்கிரம் செல்லுமாறு தள்ளியது. அப்பெண்மணியின் கஷ்டத்தைப் புரிந்து கொண்ட ஆசார்யாள் தமது உதவியாளரை அழைத்து

Koviloor Digital Library

வரிசையை சரி செய்யுமாறு கட்டளையிட்டார். பிறகு அந்த வயதான பெண்மணியைப் பார்த்து, "நீங்கள் முடிச்சை எடுக்கும் வரையில் நான் காத்திருக்கிறேன்" என்று கூறினார்.

சிறிது நேரத்திற்குப் பின் அந்தப் பெண் சில்லரையை எடுத்து தட்டில் போட்டாள். ஆசார்யாள் அவளுக்குத் தீர்த்தப் பிரசாதம் கொடுத்து அனுக்ரஹித்தார். பின் தம் உதவியாளரைக் கூப்பிட்டு, அப்பெண்ணை சிறிது காத்திருக்குமாறு கூறினார். பிறகு ஆசார்யாள் மடத்து பக்தர் ஒருவரை அழைத்து, "பழையதாகவும் கிழிந்ததாகவும் காணப்படும் புடவையை அணிந்து கொண்டிருக்கும் இந்தப் பெண்ணை பார்க்க மிகவும் பரிதாபமாகவுள்ளது. இன்றைக்கு எப்படியாவது (அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் கடைகள் மூடியிருந்தன) ஒரு புதுப்புடவையை அவளுக்கு வாங்கித் தர வேண்டும். அவள் மடத்திலேயே சாப்பிட ஏற்பாடு செய்யுங்கள். மாலை உபந்யாஸத்திற்குப் பிறகு அவள் மடத்திலிருந்து சென்றால் போதும்" என்று கட்டளை இட்டார்.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் கூறியவாறே அப்பக்தர் செய்து முடித்தார். அந்தப் பெண்மணி அடைந்த சந்தோஷத்தை விவரிக்க வார்த்தைகளால்தான் முடியுமா?

★

சிருங்கேரி மடத்தில் "கோசாலை" (பசு மடம்) ஒன்று உள்ளது. இதில் பணிபுரியும் ஓர் ஏழைத் தொழிலாளி தனது வருவாயைக் கொண்டு தனக்கு அமைந்த பெரிய குடும்பத்தை நடத்திச் செல்ல மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். போதாததற்கு இவருடைய இரண்டாவது பையன் ஊமை மட்டுமின்றி செவிடன், குருடன், முடவனும் கூட. மேலும் பல குறைபாடுகளுடன் காணப்பட்டான் அந்தப் பையன். அவன் ஒரு மண் உருண்டைதான் என்று நினைத்தார் அந்தத் தொழிலாளி.

தானாக எதையும் செய்து கொள்ள முடியாத அந்தப் பையனுக்கு எல்லாக் காரியங்களையும் யாராவது ஒருவர்

Koviloor Digital Library

செய்தாக வேண்டும் என்ற சூழ்நிலை. அவனுக்கு உபநயனம் செய்து வைக்க வேண்டுமா வேண்டாமா என்று அந்த ஏழைப் பிராஹ்மணர் மனதில் குழம்பிக் கொண்டிருந்தார். இதற்காக, அவர் அணுகிய பண்டிதர்கள் யாரும் சரிவர பதிலளிக்காததால் ஆசார்யாளிடம் இதனைப் பற்றி கேட்டு விடுவது என்று தீர்மானித்தார்.

இவருடைய சோகக் கதையை பொறுமையுடன் கேட்ட ஸ்ரீ மஹாஸந்நிதானம், "அவனுக்கு உபநயனம் செய்ய வேண்டும். ஆனால் நித்திய கர்மா செய்யும் நிலையில் அவன் இல்லாததால், நீயே அவன் சார்பில் சிறிது கூடுதலாக காயத்ரீ மந்திரத்தை ஜபித்தால் போதும்" என்று கூறினார். இத்துடன் நிற்காமல் மடத்திலேயே உபநயனத்தை நடத்த முடிவு செய்தார் ஆசார்யாள். இதற்காக புரோகிதர், இடம், சாப்பாடு போன்ற எல்லா ஏற்பாடுகளையும் ஆசார்யாளே முன்னின்று நடத்தினார். அப்பொழுது சங்கர ஜெயந்தி விழா மடத்தில் அதிவிமரிசையாக நடந்து கொண்டிருந்தது. இத்தனை உபநயன ஏற்பாடுகளையும் இந்த விழாவின் நடுவிலேதான் செய்து முடித்தார் ஸ்ரீ மஹாஸந்நிதானம். சென்ற வருடம்தான் இந்தப் பிரஹ்மச்சாரி இறைவனடியை சேர்ந்தான்.

★

தர்க்க, வேதாந்த சாஸ்திரத்தில் சிறந்த பண்டிதராகத் திகழ்ந்த இம்மஹான் கட்டிடக் கலை, விவசாயம், மின் பொறியியல் ஆகிய பல்வேறு துறைகளில் ஆர்வம் காட்டினார்.

"நான் முறையாக பொறியியல் படிப்பைப் படிக்காவிட்டாலும் கேள்விகள் கேட்டும், கூர்ந்து கவனித்தும் விஷயங்களை அறிந்து கொள்வதில் எப்போதும் தயாராக இருப்பேன். முதலில் என் கருத்துக்கள் சில தவறுதலாக இருந்தன. ஆனால் பாதியில் விட்டுவிடாமல் தொடர்ந்து கவனம் செலுத்தியதால் இப்பொழுது என்னால் தவறில்லாமல் சொல்ல முடிகிறது" என்று இம்மஹான் ஒருமுறை கூறியுள்ளார்.

ஒரு சமயம் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் தேவைக்காக அவருடைய மிக நெருங்கிய சிஷ்யர் ஒருவர் 6 வோல்ட் கார்

Koviloor Digital Library

பேட்டரியிலிருந்து 230 வோல்ட் ஆக மாற்றும் ஓர் உபகரணத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். ஆசார்யாள் இதைப் பற்றி அப்பக்தரிடம் கேட்டபோது அவர், அதற்கான சரியான டிரான்ஸ்பார்மர் தனக்குக் கிடைக்காமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். உடனே ஆசார்யாள், "நான் சில டிரான்ஸ்பார்மர்களை மாடியில் வைத்திருக்கிறேன். உனக்கு எது தகுந்ததாக இருக்கிறதோ அதை நீ எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினார். பிறகு தமது உதவியாளரை அனுப்பி ஒரு குறிப்பிட்ட டிரான்ஸ்பார்மரை கொண்டு வரச் சொன்னார். அப்பக்தர் தானே மாடிக்குச் சென்று தனக்கு வேண்டிய தகுந்த டிரான்ஸ்பார்மரை எடுத்துக்கொள்ள நினைத்தார். அப்பொழுது ஆசார்யாள், "நான் சொன்னதை பார்த்துவிட்டு அது சரியாக இல்லை என்றால் நீயே மாடிக்குச் சென்று உனக்கு விருப்பமானதை எடுத்துக்கொள். அதுவரை சற்றுப் பொறுத்திரு" என்றார். உதவியாளர் கொண்டுவந்த டிரான்ஸ்பார்மரை பார்த்த அப்பக்தர் மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். காரணம், இவர் என்ன மனதில் நினைத்திருந்தாரோ அத்தனை தேவைகளுக்கும் ஏற்றவாறு அமைந்திருந்தது அந்த டிரான்ஸ்பார்மர். அந்த சிஷ்யர் மனதில் நினைத்திருந்ததை ஆசார்யாள் தமது உள்ளுணர்வாலேயே அறிந்து கொண்டார் என்பதைத் தெளிவாய் இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

★

ஒரு சமயம் மலேசியாவிலிருந்து ஆசார்யாளை தரிசிக்க வந்தவர்களிடம் ஸ்ரீ மஹாஸந்நிதானம் அந்நாட்டின் இயற்கை வனப்பையும், அழகையும், அங்குள்ள மற்ற பல இடங்கள் பற்றியும் உரையாடிக் கொண்டிருந்தார். இவற்றைக் கேட்ட அம்மலேசிய மக்கள் மிகவும் ஆச்சரியத்தில் மூழ்கினர். ஓரிடத்தின் பெயரைக் கூறி, "அங்கு ஏராளமான பாம்புகள் இருக்குமல்லவா? ஆனால் ஒன்று கூட யாரையும் கடிக்காது இல்லையா? கடித்தாலும் விஷம் கிடையாது இல்லையா?" என்று ஆசார்யாள் கூறியது அவர்களுக்கு சந்தோஷமான அதிர்ச்சியாய் இருந்தது. பிறகு அவ்விடத்தை விட்டு சிறிது நகர்ந்த ஆசார்யாள், "யோக சக்தியால் இவர் அறிந்து இவற்றைக் கூறுகிறார்" என்று அவர்கள் தன்னைப் பற்றி தவறாக

Koviloor Digital Library

எண்ணிவிடுவார்களோ என நினைத்து மீண்டும் அவர்களைத் திரும்பிப் பார்த்து, "நான் இவற்றையெல்லாம் புத்தகம் படித்து, மற்றவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்" என்று கூறியது அவருடைய எளிமையையும், கபடமற்ற உள்ளத்தையும் நமக்கு பறைசாற்றுகின்றது.

★

இயற்கை இவர் வசத்தில் கட்டுப்பட்ட நிகழ்ச்சிகள் எத்தனையோ. ஆனால் அதைப் பக்தர்கள் மிகைப்படுத்தா வண்ணம் பார்த்துக் கொள்வார் ஆசார்யாள். எனினும் சில நிகழ்ச்சிகளில், அங்கு கூடியுள்ள பக்தர்களுக்கு இயற்கை எப்படி இவர் வசத்தில் உள்ளது என்பது தெள்ளத் தெளிவாகப் புலப்படும்.

பெங்களூரில் ஒரு சமயம் யாத்திரையை முடித்துக் கொண்டு புறப்படுவதற்கு முன்பு அங்குள்ள பக்தர்கள் அன்று மாலை ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் அச்சமயம் கர்நாடகத்தின் ஆளுநராக பணிபுரிந்த ஸ்ரீ உமாசங்கர் தீட்சித் அவர்கள். பெங்களூரில் உள்ள சங்கர மடத்தின் நுழைவாயிலில் திறந்த வெளியில் நிகழ்ச்சி ஏற்பாடு ஆகியிருந்தது. அந்த மாலை நேரத்தில் கருமையான மேகக் கூட்டங்கள் வானிலே திடீரென்று கூடின. மிகப் பெரிய மழை எந்த நேரத்திலும் பெய்யலாம் என்ற அளவில் வானம் காணப்பட்டது.

கூட்டத்தின் நடுவில் இருந்த ஒரு பக்தர், "மழை பெய்தால் இந்த நிகழ்ச்சியே கெட்டுவிடுமே! ஆசார்யாள் ஏன் இந்த மழையை நிறுத்தக் கூடாது?" என்று அருகாமையில் உள்ளவர்களிடம் இடைவிடாமல் புலம்பிக் கொண்டிருந்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு ஸ்ரீ மஹாஸந்நிதானம் வானத்தை நோக்கி இருகரம் கூப்பி வணங்கினார். உடனே "சென்று வா" என்று சொன்னது போல் மேகக் கூட்டங்கள் பின்னோக்கி நகரத் தொடங்கின. சுமார் 20 நிமிடங்களில் கதிரவனின் கிரணங்கள் அவ்விடத்தை ஒளி வீசச் செய்தன. அங்கு கூடியிருந்த அனைவரும் இதைக் கண்டு மிகவும் ஆச்சரியத்தில் மூழ்கினர். அந்தப் பக்தர் அடைந்த மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ!

★

Koviloor Digital Library

1958ம் ஆண்டு ஸ்ரீ மஹாஸந்நிதானம் தென்னிந்திய விஜயயாத்திரையின்போது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பத்தை கிராமத்திற்கு விஜயம் செய்வதாக இருந்தார்கள். அதற்கான பலவித ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களுக்கு ஒரு பெரிய கவலை. அப்பொழுது ஊரில் வறட்சியிருந்ததால் ஆசார்யாளுக்கு ஸ்நானம் முதலிய வசதிகளுக்குக்கூட மிகவும் சிரமமாயிருக்கும் போல் தோன்றியது. எனவே ஆசார்யாள் விஜயத்தையே தள்ளிப் போடும்படி நேருமோ என்று எல்லோரும் பயந்தனர். அப்பொழுது வரவேற்பு கமிட்டியில் இருந்த ஒரு வயதான பக்தர், "ஆசார்யாள் வந்தேயாக வேண்டும். எவ்வளவு தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்றாலும் நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆகையால் ஆசார்யாள் விஜயத்தைத் தள்ளிப்போட வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார்.

ஒரு வாரம் முன்னதாக இந்த வயதான பக்தரும் மற்ற சில பிரமுகர்களும் ஆசார்யாளிடம், தங்கள் ஊருக்கு விஜயம் செய்யுமாறு விக்ஞாபனம் செய்து கொள்ளச் சென்றார்கள். ஆசார்யாள் அப்பொழுது நாகர்கோவிலில் விஜயம் செய்திருந்தார். "எல்லாம் சரியாக நடக்கும்" என்று சொல்லி ஆசார்யாள் அனுக்ரஹித்தார்கள். என்ன ஆச்சரியம்! போனவர்கள் திரும்பி வருவதற்குள் கிராமத்தில் பலத்த மழை ஆரம்பித்து ஆசார்யாள் வருவதற்குள் ஊரின் இரண்டு பெரிய குளங்களும் நிரம்பி விட்டன. ஆசார்யாளின் கருணை மழை இங்கு ஸாக்ஷாத்தாக வருண பகவானை அனுப்பி வைத்தது.

★

ஒரு சமயம் சிருங்கேரியில் துங்கா நதியில் ஏற்பட்டிருந்த வெள்ளப் பெருக்கு காரணமாக, ஆபத்து விளையலாம் என்று அஞ்சப்பட்டது. அச்சமயம் கடுமையான மழையையும் பொருட்படுத்தாமல் ஆசார்யாள் வெளியில் கிளம்பினார். அந்த மழையில் ஏன் அவ்வாறு செல்ல விரும்பினார் என்று சிலர் கேட்ட போது, "நான் மழையை நிறுத்தச் செல்கிறேன்" என்று சொல்லி நடந்தார். அதற்குப்பின் மழை நின்று விட்டது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

★

Koviloor Digital Library

ஆசார்யாளின் ஆந்திரப் பிரதேச யாத்திரையின் போது பாரதம் முழுவதும் உள்ள பல பண்டிதர்களை வரவழைத்து "வித்வத்ஸதஸ்" ஒன்று நடத்தப்பட்டது. நன்கு தேர்ந்த வித்வான்கள் கூடியிருந்த ஸதஸ் (சபை) நடைபெறுகையில், அங்கு நுழைந்த உள்ளூர்ப் பண்டிதர் ஒருவர் ஆசார்யாளை நமஸ்கரித்து தன்னுடைய கோரிக்கை ஒன்றை வெளிப்படுத்த சம்மதம் வேண்டினார். ஆசார்யாள் சம்மதித்ததும், அப்பண்டிதர் சந்நிதான ஆஸ்தான வித்வான்களைத் தான் வாக்யார்த்தத்தில் சோதித்துப் பார்க்க வேண்டும் என்றும் ஆசார்யாள் அவ்வித்வான்களுக்கு உதவக் கூடாதென்றும் நிபந்தனை போட்டார். பண்டிதரின் விபரீத எண்ணத்தை அறிந்து கொண்ட ஆசார்யாள் லேசாகப் புன்னகைத்து, "அப்படியே ஆகட்டும்" என்றார்.

பண்டிதரின் கேள்விப் பிரவாஹத்தை ஆஸ்தான வித்வான்களால் எதிர்க்க முடியவில்லை. வாதப் பிரதிவாதங்களை அவர்களால் அடுக்கவே இயலவில்லை. எல்லோரும் அதிர்ச்சியோடு வாயடைத்துப் போயிருந்த சமயத்தில், வித்வத்ஸதஸ்ஸின் நடவடிக்கைகளில் மிக்க நாட்டம் கொண்டிருந்த ஓர் இளம் வித்யார்த்தி ஒரு வினோதமான உணர்வை தன்னுள் அனுபவிக்கலானான். அவன் எழுந்து ஆசார்யாளை நமஸ்கரித்து, ஆசி பெற்றுப் பண்டிதரின் கேள்விக் கணைகளுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான். வாக்யார்த்த சாஸ்திரத்தின் நுணுக்கங்களையெல்லாம் எடுத்துரைத்து, பண்டிதரைச் சில கேள்விகள் கேட்க முற்பட்டதும், அப்பண்டிதர் பதிலளிக்க இயலாமல் திணறினார். தனது அகந்தையை உணர்ந்து வெட்கித் தலை குனிந்து, ஆசார்யாளை நமஸ்கரித்து சபையை விட்டு அகன்றார். அவ்விளம் வித்யார்த்தி பின்னர் ஆசார்யாளின் அருள் பெற்று பெரும் பண்டிதராய்த் திகழ்ந்தார்.

★

இந்துக்கள் மட்டுமின்றி பிற மதத்தினரும் இம்மஹானை தரிசிக்க வருவார்கள். ஆஸ்திகர்களிடம் பழகுவது போலவே நாஸ்திகர்களிடமும் இவர் பழகுவார். ஆசார்யாளை ஒரு முறை

Koviloor Digital Library

ஒருவர் தரிசித்தாலும் அவர்கள் வாழ்நாளில் அது ஒரு மறக்க முடியாத நிகழ்ச்சியாக அமைந்து விடும்.

தமிழ் நாட்டைச் சார்ந்த பிரபல தொழில் மேதை ஜி.டி. நாயுடு அவர்கள் (இவர் ஒரு நாஸ்திகர்) தம்முடைய வாழ்நாளில் பலமுறை ஸ்ரீ மஹாஸந்நிதானத்தை தரிசித்திருக்கிறார். ஸ்ரீ மஹாஸந்நிதானமும் ஜி.டி. நாயுடுவின் அற்புதச் செயல்களில் ஆர்வம் காட்டி அவரை மிகவும் பாராட்டியிருக்கிறார்.

இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த ஒருவர் சிருங்கேரிக்கு அடிக்கடி செல்லும் தன்னுடைய நெருங்கிய நண்பரிடம் தன்னையும் சங்கராச்சார்ய ஸ்வாமிகளை தரிசிக்க அழைத்துச் செல்லுமாறு கோரினார். இந்த முஸ்லீம் அன்பருக்கு இந்து மதக் கோட்பாடுகள் ஓரளவிற்கு தெரிந்திருப்பது மட்டுமன்றி ஸம்ஸ்கிருதத்திலும் புலமை இருந்தது. இருப்பினும் அவர் நண்பர் பிறமதத்தினரை எப்படி அழைத்துச் செல்வது என்று தயங்கி தன் நண்பரின் கோரிக்கையை தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தார்.

1982 ம் ஆண்டு ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் பம்பாய் விஜய யாத்திரையின் போது இந்த முஸ்லீம் அன்பருக்கு ஸ்ரீ மஹாஸந்நிதானத்தைத் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது. அன்பரின் ஸம்ஸ்கிருத ஞானத்தையறிந்த ஜகத்குரு ஸம்ஸ்கிருதத்திலேயே அவரிடம் உரையாடி தன்னை யார் வேண்டுமானாலும் பார்க்க வரலாம் என்பதை எடுத்துரைத்தார். மேலும் மெக்கா சென்று திரும்பிய சில முஸ்லீம் பக்தர்கள் தம்மை அன்மையில் பார்க்க வந்ததாகவும் அப்பொழுது அவர்கள் மெக்காவிலிருந்து கொண்டு வந்த விலையுயர்ந்த சில கற்களை தன்னிடம் கொடுத்ததாகவும் ஸ்ரீ மஹாஸந்நிதானம் குறிப்பிட்டார். பிறகு சில கற்களை வரவழைத்து, "இந்தப் புனிதக் கற்களை நீ வைத்துக் கொள். இவற்றுள் ஒன்றை சிருங்கேரிக்கு அடிக்கடி வரும் உன்னுடைய நண்பனிடமும் கொடு" என்று கட்டளையிட்டார் ஸ்ரீ மஹாஸந்நிதானம்.

மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த அந்த முஸ்லீம் அன்பர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் தினசரி இரவில் நிகழ்த்தும்

Koviloor Digital Library

ஸ்ரீ சந்திரமௌலீச்வர பூஜையைப் பார்க்க அனுமதி கோரினார். ஸ்ரீ மஹாஸந்நிதானம், "தாராளமாக நீ வரலாம்" என்று கூறியிருக்கிறார். பூஜை முடிந்த பிறகு, பக்தர்களின் கூட்டத்தில் கடைசியில் இருந்த இந்த முஸ்லீம் அன்பரை ஸ்ரீ மஹாஸந்நிதானம் அருகே வரவழைத்து பூஜா புஷ்பத்தைப் பிரசாதமாக தந்தருளினார். முஸ்லீம் அன்பர் தான் தினசரி பாராயணம் செய்யும் குரான் புத்தகத்தில் இம்மஹான் அளித்த புஷ்பங்களை பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டாராம்.

★

ஒரு சமயம் ஆசார்யாளுக்கு கடுமையான மாரடைப்பு ஏற்பட்டதால் உடல்நிலை மிகவும் குன்றி மருத்துவர்களின் மேற்பார்வையில் இருந்தார். நடந்தோ, பேசியோ உடம்பை வருத்திக் கொள்ளக் கூடாது என்றும் ஓய்வில் இருக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் கூறியிருந்தார்கள். அதனால் அமைதியான ஓரிடத்தில் ஆசார்யாள் அமர்ந்திருந்தார். அப்பொழுது அங்கே ஒரு வயதான தம்பதியர் வந்தனர். அந்த வயதான மனிதர் நோயினால் பீடிக்கப்பட்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் போதே முதுகு வளைந்தும் காணப்பட்டார். அவரது மனைவி ஆசார்யாளிடம் வந்து தனது கணவரின் உடல்நிலைப் பற்றியும், அவர் எப்படிக் கஷ்டப்படுகிறார் என்றும், அந்த வயதான காலத்தில் அவரைக் கவனித்துக் கொள்வது எவ்வளவு சிரமமாக உள்ளது என்றும் கூறி ஆசார்யாள் தங்களை அனுக்ரஹித்து இந்தக் கஷ்டங்களிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

ஆசார்யாள் உடனே, "ஓ! இவ்வளவு அவஸ்தைகளா இவருக்கு? உண்மையில் இக்கஷ்டங்களைத் தாங்குவது சிரமம்தான். கவலைப்பட வேண்டாம். எல்லாம் நல்லதாகவே நடக்கும்!" என்று கூறி அவர்களுக்கு பிரஸாதம் வழங்கினார். பிரஸாதத்தைப் பெற்றுக் கொண்டு சிறிது தூரம் தள்ளி அப்பெண்மணி உட்கார்ந்து கொண்டாள். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் ஆசார்யாளிடம் வந்த அப்பெபண் தனது துயரங்களை மறுபடியும் தெரிவித்துக் கொண்டாள்.

Koviloor Digital Library

ஆசார்யாள் முதல் தடவை எப்படிக் கேட்டாரோ அதே ஆவலோடு கேட்டுவிட்டு அதே வார்த்தைகளை மீண்டும் கூறி அவர்களை ஆசீர்வதித்து மந்திராக்ஷதை கொடுத்தார்.

இதேபோல் குறைந்தது ஐந்து முறையாவது ஆசார்யாளிடம் சென்று வந்து கொண்டிருந்த அப்பெண்ணிடம் ஆசார்யாள் ஒவ்வொரு முறையும், சிறிதும் எரிச்சலடையாமல், சளைக்காமல், தமது முகத்தில் காட்டிய பச்சாதாபத்தைச் சிறிதும் குறைக்காமல் அவர்களுக்கு ஆசிகள் வழங்கியது ஆசார்யாளின் சகிப்புத்திறனை மட்டுமின்றி அவரின் கருணையுள்ளத்தையும் ஒருங்கே பறைசாற்றியது. மஹான்களிடம் நாம் எப்படி அணுகுகின்றோமோ அப்படியே கண்ணாடியைப் போல் அவர்கள் காரியங்களில் அவை பிரதிபலிக்கும் என்னும் கூற்றிற்கு இந்நிகழ்ச்சியே ஓர் எடுத்துக்காட்டு.

சிறிது நேரம் சென்றதும், திடீரென்று ஆசார்யாள் எதிரில் நடுத்தர வயதுக்காரர் ஒருவர் வந்து நின்றாபுர். தனது பையனுக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் உபநயனம் நிகழ்த்தப் போவதாக தெரிவித்தார். ஆசார்யாளின் அனுக்ரஹத்தைப் பெற சிறிதளவுகூட பணிவையும் மரியாதையையும் காட்டாமல் மிகவும் தற்செயலாய் அறிவிப்பதுபோல் கூறினார். ஆசார்யாள் இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். கருணைப் புன்னகையுடன் அவருக்கு மந்திராக்ஷதையைக் கொடுத்து அவரையும் வடுவையும் ஆசீர்வதித்தார். அம்மனிதனின் அற்பத்தனத்திற்கும் பணிவற்ற தன்மைக்கும் முன் ஆசார்யாளின் உயர்ந்த உள்ளம் கோடி மடங்குப் பெருகி ஒளி வீசியது.

சம்பவம் இத்துடன் முடியவில்லை. இம்மனிதர் விடை பெற்றுக் கொள்ளாமல் ஆசார்யாள் முன்பு நின்று கொண்டேயிருந்தார். திடீரென்று மீண்டும் சாதாரணமாகப் பேசும் தொனியில் "உங்கள் குரு யார்?" என்று ஆசார்யாளிடம் கேட்டார். ஒரு ஸந்யாஸியிடம் இப்படிக் கேட்பதையே சாஸ்திரம் அனுமதிக்காதபோது இவ்வளவு உயர்ந்த பீடத்தின் அதிபதியாய் இருப்பவரிடம் கேட்கலாமா? அருகில் நின்று கொண்டிருந்த பக்தர்கள், இம்மனிதனின் நடத்தையைக் கண்டு ஆசார்யாள் என்ன சொல்வாரோ என எண்ணிப் பயந்தனர்.

Koviloor Digital Library

முதலில் சொன்னபடி ஆசார்யாள் கண்டிப்பாக எழுந்திருந்தோ நடந்தோ தன்னை சிரமப்படுத்திக் கொள்ளக் கூடாது என்று மருத்துவர்கள் கூறியிருந்தும், "குரு" என்ற வார்த்தை காதில் விழுந்தவுடனேயே ஆசார்யாளின் முகம் குரு பக்தியால் மலர்ந்தது; உள்ளம் கனிந்தது. தமது இருக்கையை விட்டு குதித்து எழுந்து எதிரில் இருந்த சுவற்றின் அருகே சென்றார். அங்கே சுவற்றில் முந்தைய பீடாதிபதிகளின் வரைபடங்கள் மாட்டப்பட்டிருந்தன. மிகவும் பயபக்தியோடு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளின் படத்தின் முன்பு நின்றுகொண்டு தமது இரு கரங்களையும் தலைக்கு மேல் கூப்பி வணங்கினார். குருபக்தியால் நா தழுதழுக்க, "இவர்தான் என் குரு, ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்" என்று கூறினார். பிறகு சிறிது நகர்ந்து பக்கத்தில் இருந்த படத்திற்கு முன் நின்று கொண்டு, பக்திப் பெருக்கில், "இவர் என்னுடைய பரமாச்சார்யாள், ஸ்ரீ ஸ்ரீ நரஸிம்ம பாரதீ மஹாஸ்வாமிகள்" என்று கூறினார். சில நிமிடங்கள் அப்படியே நின்றுவிட்டு, பேரானந்தத்தில் திளைத்தவராய், ஆன்மீக ஒளி முகத்தில் பிரகாசிக்க – ஏதோ அவர்களை நேரிலேயே தரிசித்ததைப் போல் மிக்க மகிழ்ச்சியுடன் தமது இருப்பிடம் வந்து அமர்ந்தார். குருபக்தி என்றால் என்ன என்பதை அன்றைய தினம் இதைக் கண்டவர்கள் சொல்லாமலேயே தெரிந்து கொண்டார்கள். மஹான்கள் வெறும் வார்த்தைகளால் மட்டுமின்றி தங்கள் செயல்களினாலும் உபதேசிப்பர் என்பதையும் அங்கிருந்த பக்தர்கள் அன்று அறிந்து கொண்டார்கள்.

மிகச் சிறந்த ஜீவன்முக்தராக விளங்கி நம்மை அருள்பாலித்த, அருள்பாலித்து வரும் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் பெருமைகள் கணக்கிலடங்கா. அவரின் பாத தாமரைகளை இடைவிடாமல் தியானிப்பதன் மூலம் இந்த சம்ஸாரம் என்னும் மிகவும் கோரமான கடலை மிக எளிதில் நம்மைக் கடக்க வைத்து நமக்குப் பேரானந்தத்தை அளிக்கவல்ல ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் அவர்கள் நமது நெஞ்சில் நிறைந்த ஜகத்குரு அல்லவா!

– E. R. இரவிகுமார்

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

1. பரம்பொருளைப் பற்றிய விசாரம்

யஸ்மாத்விச்வமுதேதி யத்ர நிவஸத்யந்தே யதப்யேதி யத்
ஸத்யக்ஞானஸுகஸ்வரூபமவதித்வைதப்ரணாசோஜ்ஜிதம் ।
யஜ்ஜாக்ரத்ஸ்வபனப்ரஸுப்திஷு விபாத்யேகம் விசோகம் பரம்
ப்ரத்யக்ப்ரஹ்ம ததஸ்மி யஸ்ய க்ருபயா தம் தேசிகேந்த்ரம் பஜே ॥ (1.)

உலகில் மனிதர்களுக்கு இருக்கப்பட்ட சக்திகளில் ஒரு சக்தி மிகவும் சிறப்பானது. நாம் மீதி சக்திகளையெல்லாம் மற்ற பிராணிகளிடத்தில் பார்க்கலாமென்றாலும் ஒரு சக்தியை மட்டும் மனிதனிடத்தில்தான் பார்க்க முடியும். இந்த சக்திக்கு "விசார சக்தி" என்பது பெயர். விசார சக்தியானது முழுவதுமாக மனிதர்களிடத்திலேதான் வாய்க்கப் பெற்றிருக்கிறது. பிராணிகளுக்கும் ஒரு விதமான விசார சக்தி உண்டு. அது எவ்வாறென்றால் யாராவது கையில் தடியை எடுத்துக்கொண்டு வந்தால் அவன் தன்னை அடிக்க வருகின்றான் என்று நினைத்து அவை ஓடும். அல்லது யாராவது புல்லை எடுத்துக்கொண்டு வந்தால் "தனக்கு ஏதோ கொடுக்கப்போகிறான்" என்று அருகில் வரும். இதுதான் அவைகளின் விசார சக்தி. வேறு எந்தவிதமான அறிவும் அவைகளுக்குக் கிடையாது.

மனிதனுக்கு எப்படிப்பட்ட விசார சக்தி இருக்கிறது தெரியுமோ? வேண்டாத ஒருவன் தனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பொருளைக் கொண்டு வந்தாலும்கூட ஆளைப் பார்த்துவிட்டு இவன் கொண்டு வந்திருப்பது எனக்குப் பிரியமான பொருளானாலும் "இதை நான் எடுத்துக் கொள்ளக் கூடாது" என்பதை ஒருவன் தீர்மானம் செய்து கொள்ளலாம். "இவன் என்னை மோசம் செய்வதற்காகக் கொண்டு வந்திருக்கின்றான். இதை நான் எடுத்துக் கொள்ளக் கூடாது" என்று ஒருவனுக்குத் தெரியும். அதேசமயம் ஒரு மருத்துவர் வயிற்றையே அறுக்க வந்தாலும், 'இவர் வயிற்றை அறுத்தால் எனக்கு இதனால் பிரயோஜனமுண்டு. ஆகையால் இவர் வயிற்றை அறுக்கட்டும்' என்று ஒருவன் வாளாவிருந்து விடுவான். ஏன் இவ்வாறென்றால் மனிதனிடத்தில் விசார சக்தி இருக்கின்றது. மீதிப் பிராணிகளிடத்தில் அத்தகைய சக்தி இல்லை. ஆதலால்தான் மனிதனில் "முழுமை" என்பது இருக்கின்றது.

Koviloor Digital Library

நாமும் விசாரம் செய்து கொண்டிருக்கிறோம். சந்திர மண்டலத்திற்கு எவ்வாறு போவது? அதற்கு மேலே உள்ள சுக்கிர கிரஹத்திற்கு எவ்வாறு செல்வது? என்று சிந்தித்து ஆயிரக் கணக்கான மக்கள் பாடுபடுவர். அதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். இதையெல்லாம் செய்துவிட்டு என்ன சாதித்தாய் என்று கேட்டால் "அங்கு போய்விட்டு வந்தேன்" என்ற ஒரு பதிலைத்தான் அவர்கள் தருவார்கள். அவர்களிடம் சென்று "நீங்கள் மேலே போய் வந்தீர்கள். அதனால் உங்களுக்கு என்ன விசேஷம் வந்தது? நான் போய்வரவில்லை. ஆதலால் எனக்கு என்ன குறைச்சல்?" என்று கேட்டால் "ஏய், இப்படியெல்லாம் கேட்டால் நான் என்ன சொல்வது? நான் போய் வந்திருக்கிறேன் என்று என்னால் சொல்ல முடிகிறதே, உங்களால் அவ்வாறு சொல்ல முடிவதில்லையே. அதுதான் சிறப்பு" என்பார்கள். ஆனால் அவ்வாறு சொல்லிக்கொள்வதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்க வேண்டுமா என்ன? மனிதனுக்கு எந்த விசாரத்தைச் செய்தால் அதற்கு மேலே எதையும் செய்யத் தேவை இல்லையோ, செய்ய வேண்டியவனவற்றை எல்லாம் செய்த ஒரு நிலை வருமோ அத்தகைய விசாரம் ஒன்று இருக்கின்றது. அது என்ன விசாரம் என்று விளக்கமாய்ப் பார்ப்போம்.

உலகில் எல்லோருக்கும் பிடித்தமான பொருட்கள் பல உண்டு. ஆனால் உண்மையில் எல்லோருக்கும் மிகவும் பிரியமான பொருள் எது?

ஆத்மா ப்ரியதமோ யத: (2.)

(ஒருவன் தனக்குத்தானே மிகவும் பிடித்தவனாக இருப்பதால்)

என்று மேற்கோள் ஒன்று வருகிறது.

ஒருவன் தனக்குத் தான் எப்போதும் பிரியமாகவே இருப்பான். மற்றவர்களுக்கு அவன் வேண்டாதவனாக இருந்தாலும்கூட தனக்கு அவன் எப்பொழுதுமே வேண்டியவனாகத்தான் இருப்பான். தனக்குத் தான் வேண்டாதவன் என்று யாராவது சொல்லி நாம் கேட்டிருக்கிறோமா? அவ்வாறு கிடையவே கிடையாது. தற்கொலை செய்து கொள்பவர்கள்கூட இந்த ஆத்மாவிற்கு (தனக்கு) இந்த உடலினால் சுகம் ஒன்றும் வருவதில்லை என்று

Koviloor Digital Library

நினைத்து இந்த உடலை விட்டுவிட வேண்டும் என்று கருதித்தான் அவர்களும் தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் "நானே இருக்க வேண்டாம்" என்பதற்காக யாராவது தற்கொலை செய்து கொள்வார்களா? "என்னால் துக்கம் தாங்க முடியவில்லை. அதனால் தற்கொலை செய்து கொள்கிறேன். தற்கொலை செய்து கொண்டால் எனக்கு ஏதோ சுகம் கிடைக்கும்" என்ற ஓர் எண்ணத்தினால்தான் அவர்களும் தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கிறார்கள். ஆகவே,

ஆத்மா ப்ரியதமோ யத:

என்று கூறப்பட்டது.

சங்கரபகவத்பாதாள் "சதச்லோகீ" என்னும் ஒரு நூலில் ஆத்மாவைப் பற்றிக் கூறுகையில் யார் ஒருவனுக்கு மிகவும் பிரியமானவன் என்பதை ஆராய்கிறார். அவர் அந்த சுலோகத்தில்,

யஸ்மாத் யாவத் ஸுகம் ஸ்யாதிஹ ஹி விஷயத:
தாவதஸ்மின் ப்ரியத்வம்
யாவத் துக்கம் ச யஸ்மாத் பவதி கலு தத:
தாவதேவாப்ரியத்வம் ।
நைகஸ்மின் ஸர்வகாலேऽஸ்த்யுபயமபி கதாऽப்யப்ரியோऽபி
ப்ரிய: ஸ்யாத்
ப்ரேயானப்யப்ரியோ வா ஸததமபி தத: ப்ரேய ஆத்மாக்ய
வஸ்து॥ (3.)

(எந்தப் பொருளிலிருந்து எதுவரை இன்பமானது ஏற்படுமோ அதுவரை அப்பொருளில் பிரியமாயிருக்கும் தன்மையும், எப்பொருளிலிருந்து எதுவரை துன்பமானது ஏற்படுகிறதோ அப்பொருளில் அதுவரை பிரியமில்லாத தன்மையும் உண்டென்பது பிரஸித்தமல்லவா? ஒரே பொருளில் எல்லா சமயத்திலும்கூட இவ்விரண்டு (தன்மைகளும்) இருப்பதில்லை. பிரியமில்லாத பொருள்கூட ஏதாவதொரு சமயத்தில் பிரியமாக இருக்கலாம். மிகவும் பிரியமான பொருளும் (வேறு சமயத்தில்) பிரியமில்லாததாக மாறிவிடலாம். ஆகையால் எப்பொழுதும் மிகவும் பிரியமாயிருக்கும் பொருள் ஆத்மா எனப்படும் பொருளே.)

Koviloor Digital Library

என்று கூறியுள்ளார். ஆத்மா என்னும் பொருள்தான் ஒருவனுக்கு எப்பொழுதும் பிரியமானது. ஒருவனுக்குச் சர்க்கரைப் பொங்கல் என்பது மிகவும் பிரியமான பொருளாக இருக்கலாம். ஆனால் அவனுக்குச் சர்க்கரை வியாதி வந்துவிட்டால் "இந்தச் சர்க்கரைப் பொங்கல் எனக்கு வேண்டாம்" என்றுதான் அவன் மனதிற்குத் தோன்றும். சர்க்கரை வியாதி வந்திருக்கும் சமயத்தில் தேவைப்பட்டால் வேப்பெண்ணையாவது சாப்பிடலாம் என்று தோன்றுமே தவிர சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட மனம் வராது. இவ்வளவு நாள் வரை பிடித்தமான பொருளாக இருந்தது இன்று ஏன் பிரியமில்லாத பொருளாக மாறிவிட்டது என்று கேட்டால் எப்பொழுதுமே ஒருவனுக்குப் பிடித்ததாக இருக்கக் கூடிய பொருள் இல்லை. இதேபோல ஒருவனுக்குச் சாதாரணமாக பிடிக்காத பொருட்களை நாம் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். உதாரணத்திற்கு மாத்திரை விஷயத்தை எடுத்துக்கொள்ளலாம்.

யாராவது ஒருவனுக்கு திடீரென்று மாத்திரையைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னால் "அந்த மருந்தைப் போய் யார் சாப்பிடுவார்கள்? ஏதாவது இனிப்பாக இருக்கக்கூடிய ஒரு தின்பண்டத்தையோ, இனிப்பான ஒரு பானகத்தையோ சாப்பிடலாம். அதை விட்டுவிட்டு மாத்திரையை யார்தான் சாப்பிடுவார்கள்?" என்று கேட்பான். அதே சமயம் ஜுரம் வந்திருக்கும் சமயத்தில் "மாத்திரை வாங்கி வைத்திருக்கிறது. அதைக் கொண்டுவா" என்று ஆவலோடு கேட்பான். ஆகவே முன்பு சாதாரணமாக ஒருவனுக்குப் பிடிக்காததாகக் கருதப்படும் பொருளான து இப்பொழுது பிடித்த பொருளாக மாறிவிட்டது.

கதாऽப்ய அப்ரியோऽபி ப்ரிய: ஸ்யாத்

என்று கூறப்பட்ட வகையில் (முன்பு துக்கத்தைத் தந்த பொருளினால்) இப்பொழுது துக்கமில்லை. ஆகவே முன்பு துக்ககரமாக இருந்த பொருள் இப்பொழுது சந்தோஷகரமாக மாறிவிடலாம். ஆகவே எந்த ஒரு பொருளாலும் சுகமும் உண்டு, துக்கமும் உண்டு. ஆகவே ஒரு பொருள் மிகவும் பிடித்தமானது, இன்னொரு பொருளை நாம் வெறுக்கிறோம் என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருப்பது தவறு. எந்த ஒரு பொருளும் நிலையாக

Koviloor Digital Library

A. No. 5203 R65 நூலகம் கோவிலூர்

இன்பத்தையோ துன்பத்தையோ தந்து கொண்டிருப்பதில்லை. ஆனால் எப்பொழுதுமே பிரியமாக இருக்கக்கூடிய ஒரு பொருள் உண்டா என்று கேட்டால்

ஸததமபி தத: ப்ரேய ஆத்மாக்யவஸ்து

என்பதுதான் அது. இந்த ஆத்மா என்பது ஒருவனுக்கு எப்பொழுதும் பிரியமான ஒன்று. ஒருவன், தான் விழிப்பு நிலையில் இருக்கும் பொழுதும், கனவு நிலையில் இருக்கும் பொழுதும் அவனுக்குப் பிரியமானது ஆத்மா ஒன்றுதான். ஆழ்ந்த உறக்க நிலையிலும் அவனுக்குப் பிரியமானது ஆத்மாதான். ஸுஷுப்தியிலும் (உறக்கத்தில்) ஆத்மாவுடைய பிரதிபானம் (அறிவு) உண்டு. ஆனால் அறியாமையுடைய சேர்க்கை இருப்பதினால் அப்பொழுது நமக்கு ஆத்மாவின் அறிவு தெரிவதில்லை. சில பொருட்களை நாம் பார்ப்போம். அதனுடைய தத்துவங்கள் நமக்குத் தெரியாவிட்டாலும் பொருளை மட்டும் நாம் பார்த்துக்கொண்டிருப்போம். ஆகவே (உறக்கம் முதலான நிலைகளிலும் கூட) ஆத்மபானம் உண்டு என்பதுதான் சாஸ்திரங்களின் கூற்று. உறக்க நிலையில் ஆத்மபானம் என்பதே இல்லாதிருந்தால் நாம் விழித்த பிறகு 'நான் சுகமாகத் தூங்கினேன்' என்று கூறுவது எவ்வாறு சாத்தியமாகும்? 'சுகமாக நான் தூங்கினேன்' என்று கூறும்பொழுது அதற்கு 1."சுகம்", 2. "நான்", 3. "இருந்தேன்" என்ற மூன்றும் தேவைப்படுகின்றன. (உறக்க நிலையின் பொழுது) நாம் இல்லாமலிருந்தாலோ அல்லது (சுகம் என்ற) அனுபவம் இல்லாமலிருந்தாலோ 'சுகம் அனுபவித்தேன்' என்று எவ்வாறு கூற முடியும்? ஆகவே நாமும் இருந்துகொண்டு சுகத்தையும் அனுபவித்துக் கொண்டிருந்தோம் என்றுதான் நாம் கூற வேண்டும். ஆகவே மிகவும் பிரியமாக இருக்கப்பட்ட பொருள் ஆத்மா ஒன்றுதான்.

ஆத்மா ப்ரியதமோ யத:

இதற்கு ஓர் உதாரணத்தை வித்யாரண்ய மஹாமுனிவர் ஒரிடத்தில் கூறியுள்ளார்.

ச்மச்ருகண்டகவேதேன பாலே ருததி தத் பிதா।
சும்பத்யேவ, ந ஸா ப்ரீதி: பாலார்த்தே ஸ்வார்த்த ஏவ ஸா॥ (4.)

Koviloor Digital Library

(மீசையானது முள்ளைப்போன்று குத்துவதினால் குழந்தை அழுகையில் அதன் தகப்பன் முத்தமிட்டுக் கொண்டேயிருக்கிறான். அந்த பிரீதி குழந்தையின் பயனுக்காக அல்ல; அது தன்னுடைய பயனுக்காகத்தான்.)

குழந்தைகளை நாம் முத்தமிடுவோம். "குழந்தை மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக ஒருவன் முத்தம் கொடுக்கிறானா? அல்லது தான் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக முத்தம் கொடுக்கிறானா?" என்று ஸ்ரீ வித்யாரண்யர் கேட்கிறார். தந்தையானவன் தான் முத்தம் கொடுப்பதினால் குழந்தைக்கு மிகவும் சந்தோஷம் ஆகும் என்று நினைத்துக்கொண்டு முத்தம் கொடுப்பான். ஆனால் உண்மையில் அப்படியில்லை.

ச்மச்ருகண்டகவேதேன பாலே ருததி தத் பிதா |

தந்தையானவன் முக க்ஷவரம் செய்து நாலைந்து நாட்கள் ஆகி அவனுடைய தாடி மயிரெல்லாம் முள் போல் இருக்கும். அவ்வாறு இருக்கும் நிலையில் குழந்தையைக் கட்டிக்கொண்டு "அழாதே குழந்தாய், அழாதே குழந்தாய்" என்று சொல்லி முத்தமிடுவான். இவன் பலமாகக் கட்டி முத்தமிடும்பொழுது அந்தக் குழந்தைக்குத் தாடி மயிர் குத்தி அதிகமாக வலிக்கும். ஆகவே முத்தமிடுவது குழந்தையின் சந்தோஷத்திற்காக அல்ல; தந்தையின் சந்தோஷத்திற்காகத்தான் என்று அவர் கூறியுள்ளார்.

குழந்தையின் சந்தோஷத்திற்காகத்தான் ஒருவன் முத்தமிடுகிறான் என்றால் அவன் முதன் முதலிலேயே குழந்தையை விட்டிருக்க வேண்டும். (குழந்தையைக் கட்டி அணைத்து) அதற்கு மேலும் துன்பத்தை உண்டாக்கக் கூடாது. ஆனால் தந்தையோ அவ்வாறு நிறுத்துவதில்லை. "அழாதே குழந்தாய்" என்று சொல்லிக் கொண்டு மீண்டும் மீண்டும் முத்தம் கொடுத்துக் கொண்டே இருப்பான். ஆகவே ஒருவன் "நான் இவனது சந்தோஷத்திற்காக இதைச் செய்தேன், அவனது சந்தோஷத்திற்காக அதைச் செய்தேன்" என்று கூறுவதெல்லாம் தவறு. (யாவருமே தம்முடைய சந்தோஷத்திற்காகத்தான் செயல்களைச் செய்கின்றனர்.) ஆகவே மிகவும் பிரியமானவன் நமக்கு யார் என்று கேட்டால் ஆத்மாதான்.

Koviloor Digital Library

எதுவரை ஒரு பொருளிலிருந்து நமக்கு சுகம் வருமோ அது வரையில் தான் அந்தப் பொருள் மிகவும் பிரியமான பொருள். எதுவரை ஒரு பொருளிலிருந்து நமக்குத் துன்பம் வருமோ அதுவரை அந்தப் பொருள் பிரியமில்லாத பொருளாக இருக்கிறது. இந்த இரண்டையும் தவிர உண்மையில் பிரியமான பொருள், அப்பிரியமான பொருள் என்பவை கிடையாது. ஆனால் நாம்தான் நமக்கு எப்பொழுதும் மிகவும் பிரியமானவர் ஆவோம்.

மா ந பூவம் ஹி பூயாஸம் இதி ப்ரேமாத்மனி ஈக்ஷ்யதே ॥ (5.)

("நான்" இல்லாமல் போகக் கூடாது, (எப்பொழுதும்) இருக்க வேண்டும் என்கிற பிரீதி ஆத்மாவிடத்தில் காணப்படுகிறதல்லவா?)

"நான் இருக்க மாட்டேன் என்ற நிலையே இருக்கக் கூடாது. நான் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்க வேண்டும்." இவ்வாறு ஆத்மாவினிடத்தில் அன்பு ஒருவனுக்கு உண்டு. ஆகவே மிகவும் பிரியமானவன் யார் என்று கேட்டால் – தனக்குத் தானே என்பதுதான். ஒருவர் மற்றவர்களை நம்பாமல் இருக்கலாம். ஆனால் தன்னையே நம்புவதில்லை என்று நாம் யாரும் கூறக் கேட்பதில்லை. ஒருவன் தன் மனைவியை நம்பாதிருக்கலாம். தன் பையனை நம்பாதிருக்கலாம். வேலைக்காரர்களை நம்பாதிருக்கலாம். ஆனால் "தன்னையே நம்புவதில்லை" என்று ஒருவன் கூறுவதேயில்லை. ஏனென்றால் ஆத்மாதான் மிகவும் பிரியமான வஸ்து.

உலகத்திலுள்ள பல பொருட்களை நாம் விசாரம் செய்து கொண்டிருக்கிறோமே, இவ்வளவு பிரியமாக இருக்கும் ஆத்மாவைப் பற்றி என்றாவது விசாரம் செய்திருக்கிறோமா? விசார சக்தியை இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறான். மற்ற பொருட்களையெல்லாம் விசாரம் செய்துதான் பார்க்கிறான் மனிதன். ஆனால் ஆத்மாவைப் பற்றி விசாரம் செய்வதே இல்லை.

ஏதாவது ஒன்றைப் பற்றி விசாரம் செய்ய வேண்டுமானால் அதைப் பற்றிய அறிவு சிறிதளவாவது இருக்க வேண்டும். (நமக்கு) ப்ரஹ்ம விசாரம் செய்வதைப்பற்றி பகவத்பாதாள் ஓரிடத்தில்

தத் புனர்ப்ரஹ்ம ப்ரஸித்தம் அப்ரஸித்தம் வா ஸ்யாத் (6.)

Koviloor Digital Library

(அந்தப் பரம்பொருள் தெரிந்ததாகவோ, தெரியாததாகவோ இருக்கட்டும்.)

என்று கூறுகிறார். அதாவது பரம்பொருள் என்பது பிரஸித்தமா (தெரியப்பட்டதா), அப்பிரஸித்தமா (தெரியப்படாததா) என்று கேட்கிறார்.

ஏதாவது ஒரு பொருளைப் பார்த்தால் நாம் அந்தப் பொருளைப் பற்றி விசாரம் செய்ய முடியும். பார்க்காத பொருளைப் பற்றி நாம் எவ்வாறு விசாரம் செய்ய முடியும்?

யதி ப்ரஸித்தம் ந ஜிக்ஞாஸிதவ்யம்;
அதாப்ரஸித்தம் நைவ சக்யம் ஜிக்ஞாஸிதுமிதி | (7.)

(தெரிந்ததாக இருந்தால், தெரிவதற்காக விரும்பப்படக் கூடாது. தெரியாததாக இருந்தால், தெரிவதற்காக விரும்பப்படவே முடியாது.)

ஒரு பொருளைப் பற்றி ஒருவனுக்கு தெரிந்திருக்கிறது என்றால் தெரிந்த பொருளைப் பற்றி என்ன விசாரம் செய்ய வேண்டியிருக்கிறது? (அதுதான் தெரிந்த பொருளாயிற்றே!)

நாத்யந்தமக்ஞோ நோ தஜ்க்ஞ: ஸோ஽ஸ்மின்
சாஸ்த்ரே஽திகாரவான் (8.)

(எவன் ஒன்றுமே தெரியாத அக்ஞானியாக இல்லையோ அதேசமயம் ஞானியாகவும் இல்லையோ அவன் இந்த சாஸ்திரத்தைப் படிக்கத் தகுதியுள்ளவன்.)

பரம்பொருளைப் பற்றி நன்கு அறிந்தவனுமில்லை, ஒன்றுமே தெரியாதவனுமில்லை. அப்படிப்பட்டவன்தான் இதைப்பற்றி விசாரம் செய்வதற்கு அதிகாரி, (தகுதி உள்ளவன்) என்று அங்கு கூறப்பட்டிருக்கிறது.

நாமும் ஆத்மாவைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறோம். எவ்வாறு தெரிந்து கொண்டிருக்கிறோம்?

தேஹோ஽ஹம் இத்யேவ ஜடஸ்ய புத்தி:
தேஹே ச ஜீவே விதுஷஸ்த்வஹந்தீ: | (9.)

Koviloor Digital Library

(முட்டாளானவன் "நான் உடல்தான்" என்று எண்ணுகிறான். சாஸ்திரம் கற்றவன் உடலிலும் ஜீவனிலும் சேர்த்து "நான்" என்ற பாவனையைக் கொண்டுள்ளான்.)

என்று விவேகசூடாமணியில் கூறப்பட்டுள்ளது.

சிலர் "தேஹமே நான்" என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். "தேஹமே நான்" என்று நினைத்துவிட்டால் நாம் செய்யும் ஸந்த்யாவந்தனம் போன்றவை எதற்காக? ஸந்த்யாவந்தனம், தேவ பூஜை இவையெல்லாம் இந்த தேஹம் இருக்கும் பொழுதே பலன்களைக் கொடுத்துவிடும் என்று கூறமுடியாது. அப்படியிருக்கையில் நாம் செய்யும் தேவ பூஜைக்கும், ஸந்த்யாவந்தனத்திற்கும் என்ன பயன்? நாம் செய்யும் யக்ஞங்களுக்கெல்லாம் என்ன பயன்? ஆகவே "தேஹமே நான்" என்று கூறிவிட்டால் இவைகளுக்கெல்லாம் பலனே இல்லாது போய்விடும்.

தேஹே ச ஜீவே விதுஷஸ்த்வஹந்தீ:

சிலரோ இந்த உடலிலும் ஜீவனிலும் சேர்த்து "நான்" என்ற பாவனையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தர்க்க சாஸ்திரத்திலும் அறிவு இருக்கலாம். மீமாம்ஸா சாஸ்திரத்திலும் அறிவு இருக்கலாம். அவர்கள் இந்த தேஹத்திலும், சைதன்யத்திலும் சேர்த்து "நான்" என்ற பாவனையை வைத்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் "தேஹத்துடன் சைதன்யம் கலந்து ஏதாவது வேலை செய்ய முடியுமே தவிர வெறும் தேஹம் ஏதாவது செய்ய முடியுமோ! அது ஒன்றும் வேலை செய்ய முடியாது. குணங்களும் உருவமுமற்ற சைதன்யம் தனியே ஏதாவது செய்ய முடியுமோ? மேலும் சைதன்யத்திற்கு எதுவும் செய்தாக வேண்டியதில்லை. இப்படியிருக்கும்பொழுது, பயன்களையெல்லாம் அனுபவிப்பது தேஹத்தில் அபிமானம் வைத்துள்ள சைதன்யமே ஆகும்" என்று கூறுவர்.

தேஹாவச்சின்னம் சைதன்யம் (10.)

(உடலினால் வரையறுக்கப்பட்ட சைதன்யம்)

Koviloor Digital Library

மேற்கூறியபடியான பாவனையை அப்படிப்பட்டவர்கள் கொண்டிருக்கிறார்கள். நாமும்கூட அவ்வாறே எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் தீய செயல்களைச் செய்தால் நரகம் வரும் என்றெல்லாம் நம்புகின்றவர்களாக நாம் இருக்கிறோம். நரகம் யாருக்கு வரும்? "நமக்கே நரகம் வரும்" என்று சொல்கிறோம். "நீ இருக்கிறாயா?" என்று கேட்டால், "ஆம், நான் இருக்கின்றேன்" என்போம். ஏனென்றால்,

வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோऽபராணி।
ததா சரீராணி விஹாய ஜீர்ணானி
அன்யானி ஸம்யாதி நவானி தேஹீ ॥ (11.)

(பழுதுபட்ட துணிகளைக் களைத்துவிட்டு மனிதன் புதியவைகளைப் போட்டுக்கொள்வது போன்று ஆத்மா பழைய உடல்களை நீத்துப் புதியனவற்றில் புகுகிறது.)

என்று நாம் (கீதையில்) படிக்கிறோம். பலருக்கு இத்தகைய உலக அனுபவமும் உண்டு. ஆகவே உடல் இல்லாத ஒருவன் இருக்கிறான் என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். ஆனால் எப்படி வந்து உடலில் அவன் மாட்டிக் கொண்டான்? என்ற விஷயம் மட்டும் தெரியாது. அப்படிப்பட்டவர்கள் யார் இருக்கிறார்களோ அவர்கள்தான் "*ஸோऽஸ்மின் சாஸ்த்ரேऽதிகாரவான்*" (வேதாந்த விசாரம்) செய்வதற்கு தகுதியுள்ளவர்கள்.

விவேகவிக்ஞானவதோ மஹாத்மனோ
ப்ரஹ்மாஹமித்யேவ மதி: ஸதாத்மனி ॥ (12.)

(விவேகத்தினால் ஏற்பட்ட அறிவுள்ள மஹாத்மாவானவர் தன்னை எப்போதுமே, "நான் பரம்பொருள்" என்றே சிந்தித்துக்கொள்கிறார். ஸதாத்மனி என்பதை ஸதா + ஆத்மனி என்று பிரித்துப் படித்தால் இவ்வாறு பொருள் கிடைக்கும். ஸதாத்மனி என்பதை ஸமாஸ பதமாக எடுத்துக்கொண்டு அதை ஸத்+ஆத்மனி என்று பிரித்தால் "மஹாத்மாவானவர் மெய்யான ஆத்மாவில் 'நான் பரம்பொருள்' என்றே சிந்தித்துக் கொள்கிறார்" என்றும் "மெய்யான 'தன்னில்' 'நான் பரம்பொருள்' என்றே சிந்தித்துக் கொள்கிறார்" என்றும் பொருள் வரும்.)

Koviloor Digital Library

சச்சிதானந்த ஸ்வரூபமாக இருக்கக்கூடிய ஆத்மாதான் "நான்" என்ற அறிவே சரியான அறிவு. இதுதான் உண்மையானது. முதலில் சொல்லப்பட்டது போல இந்த உடல்தான் "நான்" என்றால் அதுவும் தவறான அறிவு. அவ்வாறில்லாமல், இந்த உடலும், சைதன்யமும் சேர்ந்ததுதான் "நான்" என்றால் அதுவும் முழுமையாகச் சரியானது அல்ல. சச்சிதானந்த ஸ்வரூபமானவனே நான் என்பதே சரியான அறிவு. சச்சிதானந்த ஆத்மாவேதான் "நான்" என்னும் அறிவு யாருக்கு வரும்? எப்படி வரும்? என்பவை சில பெரிய கேள்விகள். உபந்யாஸத்தின் முடிவில் அனைவரும் "ஆத்மாவைப்பற்றி ஆசார்யாள் சொல்லியாகிவிட்டது. நாம் எல்லோரும் கேட்டாகிவிட்டது. இந்த வார்த்தைகளுக்கெல்லாம் என்ன பொருள் என்பது நமக்குத் தெரிந்தாகிவிட்டது. இதனால் அறிவு ஏற்பட்டுவிட்டதா" என்று கேட்டால், அத்தகைய அறிவு எவ்வளவு நேரம் நீடிக்கும்? நீடிக்கவே நீடிக்காது. ஏனென்றால்,

ப்ரக்ஞாவானபி பண்டிதோ஽பி சதுரோ஽ப்யத்யந்தஸூக்ஷ்
மார்த்தத்ருக்
வ்யாலீடஸ்தமஸா ந வேத்தி பஹுதா ஸம்போதிதோ஽பி ஸ்புடம் |
ப்ராந்த்யாரோபிதமேவ ஸாது கலயத்யாலம்பதே தத்குணான்
ஹந்தாஸௌ ப்ரபலா துரந்ததமஸ: சக்திர்மஹத்யாவ்ருதி: || (13.)

(ஒருவன் அறிவுடையவனாகியிருந்தாலும், சாஸ்திரங்களை அறிந்திருந்தாலும், மிகவும் ஸூக்ஷ்மமான பார்வையுடனிருந்தாலும், தமஸ்ஸினால் வெல்லப்பட்டதால், அவன் நன்கு பலமுறை உபதேசிக்கப்பட்டாலும் ஆத்மாவை அறிந்து கொள்வதில்லை. ஆரோபணம் செய்யப்பட்டதை (உடல் போன்றவைகளை) உண்மை என்று கருதி அவைகளின் குணங்களில் பற்று வைக்கிறான். அந்தோ பரிதாபம்! பெரிய கஷ்டங்களைத் தரும் தமஸ்ஸின் மறைக்கும் சக்தி மிகவும் அதிகமானது.)

கனவில் ஏதோ ஒரு பொருளைப் பார்த்து ஒருவன் தவறான அறிவினால் பயத்தை அடைகிறான். அவ்வாறு தவறான அறிவு கொண்டவனுக்கு உண்மையான பொருள் தோன்றவே தோன்றாது. அவன் எந்தப் பொருளைப் பார்த்து பயந்தானோ அந்தப் பொருளைப் பற்றிய நினைவுதான் மீண்டும் மீண்டும் வந்து அவனைப் பயமுறுத்திக்கொண்டே இருக்கும். உண்மையான பொருளைப்

Koviloor Digital Library

பற்றிய அறிவு ஏற்படாது. ஒருவன் நடந்து கொண்டிருக்கும்பொழுது இரவு நேரத்து நிலவொளியில் ஒரு மரம் அசைந்து கொண்டிருப்பதைப் பார்த்து "அது ஒரு பிசாசு" என்று நினைத்து பயந்துவிட்டான். உடனே "ஐயோ பிசாசு, ஐயோ பிசாசு" என்று கத்த ஆரம்பித்துவிட்டான். மாமரத்தைப் பார்த்துப் பிசாசு என்று அவனுக்குத் தோன்றியது. அப்படி பயம் ஏற்பட்டவனைப் பார்த்து நாம் என்ன செய்யவேண்டும்? அவனுடைய கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டுபோய் அந்த மரத்தின் அருகில் அவனை நிற்கவைத்து அந்த மரத்தை இரண்டு அடி அடித்து "இதோ பார், பிசாசா இது?" என்று கேட்டால் "ஐயய்யோ! இதைப் பார்த்தா நான் பயந்தேன்" என்று அவனுக்குத் தோன்றும். ஆனால் மரத்தின் அருகில் போகாத வரையில் அவனுக்கு அது பிசாசு என்றுதான் தோன்றிக்கொண்டிருந்தது. இதற்குக் காரணம் தவறான அறிவே ஆகும். இதைத்தான் சங்கரர்,

ப்ராந்த்யாரோபிதமேவ ஸாது கலயதி

என்று கூறினார். ஆனால் விவேக விக்ஞானம் (பகுத்தறிவு) ஏற்பட்டுள்ள மனிதனுக்கு எவ்வாறு இருக்குமென்றால்,

ப்ரஹ்மாஹம் இத்யேவ மதிः ஸதாத்மனி (14.)

(நிலையான ஆத்மாவினிடத்தில் "நான்தான் பரம்பொருள்" என்ற எண்ணம்.)

அதாவது "*ஸதா வா-ஆத்மபுத்தி: ப்ரஹ்மாஹம் இதி*"(15.)

("நான் பரம்பொருள்" என்று தன்னைப்பற்றியே எப்போதும் கருதுவது.)

என்று கூறப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கும் ஆத்ம புத்தி (ஆத்மாவைப் பற்றிய அறிவு) இருந்தாலும் தவறான அறிவு இருக்கலாம். ஆனால் இந்த விவேகம் உள்ளவனுக்கு "பரம்பொருள்தான் நான்" என்ற சரியான ஆத்ம அறிவு இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட விவேகத்தை எவ்வாறு பெறுவது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

உலகத்தில் பல கொள்கைகள் (மதங்கள்) இருக்கின்றன. ஒவ்வொரு மதத்திலும் மனிதன் மோக்ஷம் பெறுவதற்கு

Koviloor Digital Library

என்னென்ன வழிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. சிலர் வைகுண்டத்திற்குச் சென்று பகவானான மகாவிஷ்ணுவின் பாதங்களில் இருந்துவிட்டால் அதுதான் மோக்ஷம் என்று கூறுவர். ஆனால் வைகுண்டத்திற்குப் போவதற்கு எவ்வளவு பேர் தயாராக இருக்கிறார்கள்? என்றே நான் கேட்க விரும்புகின்றேன். யாரும் தயாராக இருப்பதில்லை. ஒருவரும் கைலாசத்திற்கும் போகமாட்டார்கள், வைகுண்டத்தையும் விரும்பமாட்டார்கள். ஆனால் வேதாந்தத்தில்,

அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே (16.)

(அவர் இங்கேயே பரம்பொருளை அடைகிறார்.)

என்று கூறப்பட்ட வகையில் இங்கேயே ஒருவனுக்கு மோக்ஷம் இருக்கிறது. இதைப் பார்த்த அனைவருக்கும் இந்த சாஸ்திரத்தைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஏற்படும். ஏனென்றால் வேறு எங்கும் போக வேண்டாம், இங்கேயே உட்கார்ந்து கொண்டு மோக்ஷம் பெறலாம் என்றால் அனைவருக்கும் அதில் விருப்பம் இருக்கும். வெளியில் போக வேண்டும் என்றால் தான் பயமே ஏற்படும். இங்கேயே இருக்க வேண்டுமானால் ஒரு விதமான தைரியம் மனதில் ஏற்பட்டு விடுகிறது. ஒருவனை வேலை விஷயமாக வேறு ஊருக்குச் செல்ல நாம் கட்டளையிட்டால் அவன், "ஐயய்யோ, மற்றவர்களெல்லாம் இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் கவனிக்க வேண்டுமே" என்றெல்லாம் கூறுவான். அதேசமயம் "இங்கேயே இருந்து நீ வேலையை பார்த்துக் கொள்ளலாம்" என்றால் மிகவும் சந்தோஷமாக இருந்து கொள்வான். ஏனென்றால் இங்கேயே இருந்து இருந்து அவனுக்குப் பழக்கமாகிவிட்டது. அதேபோல்,

அஸ்மின்னேவ ஜன்மனி ப்ரஹ்ம ஸமச்னுதே (17.)

(இந்தப் பிறவியிலேயே பரம்பொருளை அடைகிறான்.)

என்று வேதாந்தத்தில் கூறப்பட்டிருப்பது அத்வைத வேதாந்தத்தில் உள்ள ஒரு சிறிய சுவாரஸ்யமாகும்.

அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே

Koviloor Digital Library

என்று சொல்லியாகிவிட்டது. "அதை எவ்வாறு அடைவது?" என்பது ஒரு கேள்வி. ஆனால் அதை அடைவது ஒரு பக்கத்திலிருந்து பார்த்தால் மிகவும் சுலபமான ஒன்று. இன்னொரு நோக்கிலிருந்து பார்த்தால் அது மிகவும் கஷ்டமான ஒன்றாகும். (விவேகம் முதலிய) அதிகார சம்பத்துக்கள் இருந்தால் அதை அடைவது மிகச் சுலபமாகும். அத்தகைய அதிகார சம்பத்துக்கள் இல்லாவிட்டால் அதை இப்பொழுது அடைவது மிகவும் கடினமான ஒன்றாகும்.

எனக்கு முன்னே வைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தைப் பற்றி விரிவாகக் கேட்டாலும் அது எவ்வாறு வார்த்தைகளையெல்லாம் பதிவு செய்து கொள்கிறது என்பதைப்பற்றி நமக்கு ஒன்றும் கூறத் தெரியாது. மற்றவர்கள் கூறினாலும் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் 'ரேடியோ இஞ்சினீயரிங்' என்ற படிப்பு இருக்கிறது. அந்தப் படிப்பைப் படித்தவர்களிடம் சொன்னால் "ஆம்! வேறு இயந்திரத்தைக் காட்டிலும் இதற்கு ஒரு சிறப்பு உண்டு. இந்த சர்க்யூட் நல்ல முறையில் செய்யப்பட்டிருக்கிறது. இதைச் செய்தவன் மிகவும் புத்திசாலி" என்றெல்லாம் பாராட்டிக் கூறுவார்கள். ஏனென்றால் அத்தகையவர்களுக்குத் தகுதி என்பது இருக்கிறது. தகுதியே இல்லாத ஒருவன் இதைப் பார்த்தால் "இந்தப் பெட்டி மிகவும் அழகாக இருக்கிறது. இது பார்ப்பதற்கு பளபளவென்று இருக்கிறது. முள் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது" என்பான். இவ்வளவு சொல்லிவிட்டால் அவனுக்குப் போதும். அதற்கு மேல் ஏதாவது சொன்னால் அவனது தலையில் ஒன்றுமே ஏறாது. இத்தகைய சாதாரணமான ஒரு விஷயத்திலேயே நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது,

தம் துர்தர்சம் கூடமனுப்ரவிஷ்டம்
குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம் |
அத்யாத்மயோகாதிகமேன தேவம்
மத்வா தீரோ ஹர்ஷசோகௌ ஜஹாதி || (18.)

(புத்திக்கூர்மை வாய்ந்தவன் ஒருநிலைமனதுடன் ஆத்மாவைச் சிந்திப்பதாலும், பழமையானவனும், அறிய முடியாதவனும், அடைய முடியாதவனும், புத்தியில் உறைபவனும், (உடல் மற்றும் புலன்கள் காரணமான) துன்பத்தின் நடுவிலுள்ளவனுமான தேவனை தியானிப்பதாலும் இன்பத்தையும் துன்பத்தையும் கடக்கிறான்.)

Koviloor Digital Library

என்று கூறப்பட்டுள்ள பரம்பொருள் சிந்திப்பதற்கே அரியது. நாம் பார்த்துக் கொண்டே இருந்தாலும் பரம்பொருளை எப்படிப் பார்க்க வேண்டும் என்கிற முறை மட்டும் தெரியவில்லை. பரம்பொருளை எவ்வாறு பார்க்க வேண்டும்? இதற்கு,

அத்யாத்மயோகாதிகமேன தேவம்

என வரும் வரி பதில் கூறுகிறது. "அத்யாத்ம யோகத்தினால் பரம்பொருளைப் பார்க்கலாம்" என்று கூறப்பட்டுள்ளது. பார்த்து என்ன பயன்?

" *மத்வா தீரோ ஹர்ஷசோகௌ ஜஹாதி* " என்பதே பயன்.

ஆத்மாவைத் தெரிந்துகொண்ட பின்

நைவ தஸ்ய க்ருதேநார்த்த: நாக்ருதேனேஹ கச்சன |
ந சாஸ்ய ஸர்வபூதேஷு கச்சிதர்த்தவ்யபாச்ரய: || (19.)

(அவனுக்குக் கர்மம் செய்து ஒன்றைப் பெறுதலும், செய்யாது எதையாவது இழத்தலும் இல்லை. ஏதாவது பொருளை நாடி உயிர்களைச் சார்ந்திருப்பதும் அவனுக்கில்லை.)

என்று கூறப்பட்டுள்ளபடி ஒருவன் மகிழ்ச்சியையும், துன்பத்தையும் மீறிப் போய்விடலாம்.

இங்கு சிலர் ஒரு கேள்வியை எழுப்புவர். "சந்தோஷத்தையும் விட்டுவிடுவோம், துக்கத்தையும் விட்டு விடுவோம்" என்பதில் "துக்கத்தை மட்டும் விட்டுவிடுவோம்" என்றால் பரவாயில்லை. "சந்தோஷத்தையும் விட்டுவிடுவோம்" என்றால் அது கேட்பதற்கே நன்றாக இல்லையே! சந்தோஷம் பெறுவதற்காக அல்லவா இதையே நாம் நாடுகிறோம்!" மேலும் "ப்ரஹ்ம ஞானம் பெறுவதற்கு முன் பாயசம் சாப்பிட்டால் மகிழ்ச்சி இருந்தது. ஏதோ ஒரு சினிமா பார்த்தால் மகிழ்ச்சி இருக்கிறது. ப்ரஹ்ம ஞானம் அடைந்த பின் அதுவும் போய் விட்டதே" என்ற கருத்தும் எழும். ஆனால் உண்மையில் இத்தகைய மகிழ்ச்சிகளும் ஒருவனை விட்டு நீங்க வேண்டியதுதான். இது எப்படி? ஒருவனுக்கு ஒரு வேலையின் மூலமாக ரூபாய் ஐம்பது சம்பளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. அதிர்ஷ்டவசமாக வேறொரு இடத்தில் அவனுக்கு ஐநூறு ரூபாய்க்கு

Koviloor Digital Library

வேலை ஒன்று கிடைத்தது. அந்த வேலை கிடைத்தவுடன், "ஐயய்யோ, ஐம்பது ரூபாய் சம்பளம் போய் விட்டதே" என்று அவன் வருந்தினால் அது எப்படி இருக்கும்? ஐம்பது ரூபாய் சம்பளம் போனால் என்ன? அந்த ஐம்பது ரூபாயும் இந்த ஐநூறு ரூபாய்க்குள்ளே அடக்கமல்லவோ! அதேபோல் ஆயிரம் ரூபாய் சம்பளம் வந்தவுடன் முன்பு வாங்கிக்கொண்டிருந்த ஐநூறு ரூபாய் சம்பளத்தைப்பற்றி யாராவது கவலைப்படுவானோ? அந்த ஆயிரம் ரூபாய்க்குள் ஐநூறு ரூபாய் அடங்கவில்லையா! ஆகவே முன்பு கிடைத்த சந்தோஷத்திற்காக யாராவது அழுவதுண்டா! ஒருவன் எப்பேற்பட்ட மகிழ்ச்சியை வேண்டுகிறான் என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். ஒருவன் ஏதாவது ஒரு வேலையில் சேர நினைக்கும் பொழுது தனக்கு டெம்பரரியான (தாற்காலிகமான) வேலை கிடைக்க வேண்டுமென்று விரும்புவானா? யாரைக் கேட்டாலும்கூட, "ஐநூறு ரூபாய்க்கான டெம்பரரி உத்யோகம் வந்தாலும் வேண்டாம்; ஆனால் நிலையான உத்யோகம் ரூபாய் இருநூற்றி ஐம்பதுக்குக் கிடைத்தால் அதுவே போதும்" என்று தான் சொல்லுவார்கள். ஏனென்றால் தாற்காலிகமான வேலையிலிருந்து எப்பொழுது நீக்கிவிடுவார்களோ என்பது தெரியாது. இரண்டு மாதம் கழித்து, "வீட்டிற்குப் போ" என்றால் என்ன செய்வது? இருநூற்றி ஐம்பது ரூபாய்கூட கையில் இல்லாமல் போய்விடும். ஆகவே நிலையாக இருக்கும் வேலைதான் சிறந்தது என்று அனைவரும் கருதுவர். ஆத்மாவை அறிந்தவர்களுடைய மகிழ்ச்சி எப்படிப்பட்ட மகிழ்ச்சி? (அது நிலையான மகிழ்ச்சியாகும்.)

ரவாகேசரியைச் சாப்பிடும் வரை ஒருவனுக்கு ஆனந்தமாகத் தான் இருக்கும். ஆனால் சற்றே அளவிற்கு அதிகமாகச் சாப்பிட்டால் அதனால் எத்தகைய ஒரு வயிற்று வலி வரும் என்பது எல்லோருக்கும் தெரியும். ருசியாக இருக்கும் பொருளைச் சாப்பிட முடியாவிட்டால் அதனால் என்ன பயன்?

அபத்யாதாஹாராத் அபி தவ கியன்மானஸபயம் (20.)

(பத்தியமில்லாத உணவைச் சாப்பிடுவதனால் மனதில் எத்தகைய ஒரு பயம் ஏற்படுகிறது!)

வயிற்றுக்கு வேண்டும் என்று தோன்றினாலும் சாப்பிட முடியாவிட்டால் அதை வைத்துக் கொண்டு என்ன பிரயோஜனம்?

Koviloor Digital Library

பச்சாத்தந்த சரீரே ரோக: (21.)

(ஐயோ! பிறகு உடலில் வியாதி (என்ற பயம்) இருக்கிறது.)

பலருக்கும் விஷயங்களை அனுபவிக்க வேண்டும் என்று மனதிற்குள் ஆசை வந்தாலும், அவற்றை அளவிற்கு அதிகமாக அனுபவிக்க நேரிட்டால் அதனால் என்ன ஆபத்து விளையுமோ என்று பயம் இருக்கும். அதனால்தான்,

போக்தும் ந மோக்தும் க்ஷமா : (22.)

((பொருட்களை) அனுபவிப்பதற்கும் நமக்குத் தகுதியில்லை; துறப்பதற்கும் தகுதியில்லை.)

என்று கூறப்பட்டுள்ளது. சாப்பிடுவதற்கும் ஆசை. ஆனால் சாப்பிட்டால் என்ன ஆகுமோ என்கிற பயம். இப்படி இருந்தால் அதில் என்ன சந்தோஷம்?

ஒருவன் தனக்குப் பசி எடுக்கும்பொழுது அந்தப் பசியை நீக்குவதற்காக முயற்சி செய்வான். பசியை நீக்குவதற்காக ஏதாவது உணவு சாப்பிடலாம். உண்டபின் பசியினால் ஏற்பட்ட துன்பம் நீங்கிவிடும். அதேபோல் தாகம் ஏற்படுகிறது. அதனால் துன்பம் ஏற்பட்டது. அதைத் தணித்துக் கொண்டவுடன், "ஆஹா, இப்பொழுது திருப்தியாகிவிட்டது" என்று துன்பம் நீங்கிய பிறகு ஒரு சந்தோஷம் வருகிறது. ஆனால் அத்தகைய சந்தோஷம் எவ்வளவு நேரம் நீடிக்கும்? அடுத்த முறை தாகம் ஏற்படும்வரைதான் நீடிக்கும். (இதேபோல்தான் பசி நீங்கிய இன்பமும் அடுத்த முறை பசி ஏற்படும்வரைதான் இருக்கும்.) பசி, தாகம் ஆகியவை முதலில் நீங்குகின்றன. மீண்டும் ஏற்படுகின்றன. இவ்வாறு மாறி மாறி வந்துகொண்டே இருக்கின்றன. (இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும்) மனிதர்களுக்கு வெட்கமாக இல்லையா! தினமும் ஒரேபோல உணவு உண்பது, ஒரேபோல அருந்துவது, அதேபோலத் தூங்குவது இவைகள்தான் இருக்கின்றனவே தவிர இதில் எந்தவிதமான சிறப்பும் வேண்டாமா! சினிமாவிற்குப் போனால் நல்லது என்று கருதுபவர்கள்கூட ஒரே சினிமாவை மீண்டும் மீண்டும் போட்டால், "யார் இதைப் பார்ப்பார்கள்?" என்றுதான் கூறுவார்கள். அதேபோல நாம் தினமும் குளிப்பது, தினமும் குடிப்பது, தினமும் சாப்பிடுவது, தினமும் தூங்குவது,

Koviloor Digital Library

அலுவலகத்தில் வேலை பார்ப்பது போன்ற செயல்களையே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

வ்யாபாரை: புனருக்தபூதவிஷயைரித்தம் விதேனாமுனா
ஸம்ஸாரேண கதர்த்திதா வயமஹோ மோஹாந்ந
லஜ்ஜாமஹே II (23.)

(அறிவு மயங்கியவர்களாய், மீண்டும் மீண்டும் வருகின்ற வியாபாரங்களில் ஈடுபட்டு ஸம்ஸாரத்தினால் ஏமாற்றப்பட்டும் நாம் வெட்கமடைவதில்லை.)

இவையெல்லாம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மோகம் ஏற்பட்டு நாம் வெட்கமே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, "*ஹர்ஷசோகௌ ஜஹாதி*" என்ற இடத்தில் "*ஹர்ஷம்*" அதாவது இன்பம் எப்படிப்பட்டது? நமக்கு இருக்கக்கூடிய இன்பம் மிகவும் தாற்காலிகமானது. Temporary தான். (உலகில் இருக்கக்கூடிய) எந்த ஒரு சுகமும் நிலைத்து இருப்பதில்லை. ஆனால் நாம் எதிர்பார்க்கக்கூடிய சுகமோ வேறுவகையானது. "ஒரு தடவை சாப்பிட்டால் மீண்டும் பசியே ஏற்படாது" என்பது போன்ற உணவு வந்து விட்டால் மனிதர்கள் பிறகு மீண்டும் மீண்டும் சாப்பிட்டுக்கொண்டா இருப்பார்கள்? ஆனால் அந்த மாதிரியான உணவு கிடைக்கவே இல்லை என்றால் என்ன பண்ணுவது? அதே போல் மின்சார விளக்குகள் கிடைக்கும்பொழுது கை விளக்கை யாராவது வீட்டில் வைத்துக் கொண்டிருப்பாரா? ஆனால் சிலர் மின்சார விளக்கு கிடைக்காததினால்தான் கை விளக்கை வைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் என்ன செய்ய முடியும்? இத்தகைய பொருட்களெல்லாம் கிடைக்காவிட்டால், "அந்தப் பொருட்கள் இருந்திருந்தால் என்ன சந்தோஷம் ஏற்படுமோ" என்று ஒருவன் நினைத்தால் அதில் பிரயோஜனமில்லை. (ஆகவே அப்படிப்பட்ட கிடைக்காத இன்பங்களானவை (ஹர்ஷம்) போனாலும் ஒருவித தீங்கும் இல்லை. இந்த ஹர்ஷத்தைத்தான் வேதாந்த சாஸ்திரம் ஒருவனை நீக்கச் சொல்கிறது என்று பார்த்தோம்.)

Koviloor Digital Library

ஆகவே ஆத்மாவில் மனதை நிறுத்திய ஒருவனது வருத்தங்கள் அனைத்தும் அவனை விட்டு நீங்கிவிட்டன என்பது பொருள்.

தம் துர்தர்சம் கூடமனுப்ரவிஷ்டம் ...

என்று கூறப்பட்டதில் "குஹாஹிதம்" என்று ஒரு வார்த்தை வருகிறது. அதற்கு என்ன பொருள்? குஹா என்பதன் விளக்கத்தைப் பார்க்க நாம் பஞ்ச கோசங்கள் (ஐந்து உரைகள்) பற்றி விளக்கம் கொடுக்கலாம். இன்னொரு விதமாக ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என்பதைப் பற்றியும் விளக்கமாகக் கூறலாம். இந்த மூன்றையும் மேலும் விளக்கினால் அதுவே பஞ்ச கோசங்கள் ஆகிவிடும். வித்யாரண்யர் இது விஷயமாக நன்கு விளக்கம் கொடுத்துள்ளார். ஒரு கத்தியை நாம் உர்ரயில் இட்டு இருக்கிறோம். உரையிலிருந்து கத்தியை எடுக்காவிட்டால் அந்தக் கத்தியின் ரூபம் நமக்கு எவ்வாறு விளங்கும்? ஆனால் பிரித்துப் பார்ப்பதைக் காட்டிலும் புத்திசாலித்தனம் வேறொன்றும் இல்லை! ஆனால் அதேபோல் ஸ்தூல சரீரத்தையே–உடம்பையே–பிரித்துப் பார்த்துவிடுவோமே என்றால் அது சுலபமா என்ன?

ஒருவன் ஓர் ஆர்மோனியத்தை வாசித்துக் கொண்டிருந்தான். அதிலிருந்து மிகவும் அழகான சப்தங்கள் வந்து கொண்டிருந்தன. ஒருவனுக்கு ஓர் ஆசை. இந்தப் பெட்டியிலிருந்து இவ்வளவு இனிமையான சப்தங்கள் எவ்வாறு வருகிறது? இதை உடனேயே பிரித்துப் பார்த்து விடுவோம் என்பதுதான் அந்த ஆசை. அவனும் அந்த வாத்தியத்தை உடனே ஒவ்வொன்றாக பிரித்தெடுத்தான். எந்த விதமான சப்தமும் உள்ளே இல்லை. அதையெல்லாம் எடுத்துப் பார்த்தால் டகடக வென்றுதான் சப்தம் வந்தது. அவ்வளவுதான். ஒரு ஸ்வரமும் சரியாக வரவேயில்லை. ஆர்மோனியத்தை அது முழுமையாக இருக்கும்போதுதான் நாம் அதைப்பற்றி புரிந்துகொள்ள வேண்டும். இது எப்படி? சில பொருட்களைப் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் அவற்றைப் பிரித்துப் பார்த்து தான் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் வேறு சில பொருட்களைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டுமானால் நாம் நம்முடைய விவேசனத்தினால்தான் புரிந்து கொள்ள முடியும். அவைகளைப் பிரித்துப் பார்க்க முடியாது. அதே போல இந்த ஆத்மாவைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதை விவேசனத்தினால்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

என்ன விவேசனம் செய்வது? நாம் என்ன விவேசனம் செய்தாலும் ஒன்றும் புரியவில்லையே என்பதுதான் நமது பிரச்சினை. அதற்காகத்தான் சாஸ்திரங்களில்,

தத்விக்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்–
ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் || (24.)

(அதை அறிய ஒருவன் ஸமித்துக்களைக் கையில் எடுத்துக் கொண்டு, சாஸ்திரங்களில் புலமை பெற்றவரும், பரம் பொருளில் நிலைத்தவருமான குருவையே நாட வேண்டும்.)

என்று கூறப்பட்டுள்ளது.

நம்மிடம் யாராவது வந்து சூரிய மண்டலம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்று கேட்டால் நாம் உடனே நம் வீட்டிலுள்ள தாம்பாளத்தின் அளவு இருக்கும் என்று கூறுவோம். அதற்கு மேலே பெரியதாக அளவுடைய சூரியனை யார் இங்கிருந்து பார்த்தார்கள்! நாம் பார்ப்பது தாம்பாளம் அளவுள்ள சூரியனைத்தான். ஆகவே சூரிய மண்டலமானது ஒன்றரை அடி விட்டம் உள்ளதாகும் என்றுதான் அனைவருடைய நினைப்பும் இருக்கும். இது தவறு என்று யாராவது கூறினால் நாம் அவர்களை நோக்கி, “நாங்கள் தினமும் இவ்வாறுதான் பார்த்துக்கொண்டிருக்கிறோம்” (அது தாம்பாளம் அளவிற்குத் தான் தோன்றிக் கொண்டிருக்கிறது.) என்று கூறி விடுவோம். ஆனால் வானில் உள்ள பொருள் எவ்வளவு பெரியதாக இருந்தால் நம் கண்ணுக்கு இவ்வளவு சிறியதாகத் தோன்றும் என்பதையெல்லாம் பற்றி நமக்குக் கூற ஒரு சாஸ்திரம் இருக்கிறது. அந்தப் படிப்பை நாம் கற்றுக்கொண்டால் சூரிய மண்டலமானது இந்த பூ மண்டலத்தை விட பலமடங்கு பெரியது என்ற உண்மை விளங்கும். ஆனால் நாம் பார்க்கும் காட்சியே வேறு! சூரியன் உண்மையில் இருக்கும் நிலையே வேறு. இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? (அதேபோல பரம்பொருளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால்) அதை நமக்கு யார் சொல்லித் தருவது? இதற்காக ஆத்மாவை அறிந்தவரை (அந்த சாஸ்திரத்தைக் கற்றவரை) நாம் நாட வேண்டும். அவர் நமக்கு அதைக் கற்றுத் தருவதற்காக பல உவமைகளைக் கூறி விளக்குவார். வான சாஸ்திரம் கற்றவன் ஒரு பொருள் இத்தகைய தூரத்திலிருந்தால் எவ்வாறு காட்சி அளிக்கும்

Koviloor Digital Library

என்பதையெல்லாம் நமக்குக் கூறுவான். தூரத்தினால்தான் ஒரு பொருள் சிறியதாகத் தெரிகிறதா? அல்லது உண்மையிலேயே அந்தப் பொருள் சிறியதாகத்தான் இருக்கிறதா? என்பதெல்லாம் அவனுக்குத்தான் தெரியும். இதற்கான கணக்குகளையெல்லாம் அவன் வைத்திருக்கிறான். அந்தக் கணக்குகளைக் கொண்டு சூரியன் மிகவும் பெரியவன் என்று அவன் கூறியவுடன் நாமும் அத்தகைய தீர்மானத்திற்கு வருவோம். பிறகு நாம் கண்களால் சூரியனைப் பார்க்கும் பொழுது நமக்கு முன்பு தோன்றியது போலத்தான் தோன்றும். விவேசனை செய்து பார்ப்பவனுக்கும் விவேசனை செய்து பார்க்காதவனுக்கும் என்ன வித்தியாசம்? ஒரு ஜீவன்முக்தருக்கும் (ஆத்மாவை அறிந்தவருக்கும்) ஒரு அக்ஞானிக்கும் இருக்கும் வேறுபாடுதான் இவர்கள் இருவருக்கும் இருக்கிறது. ஜீவன்முக்தருக்குத் தன்னுடைய ஸ்வரூபம் எது என்பது தெளிவாகத் தெரிந்திருக்கிறது. அதேபோல வானவெளி படிப்பைப் படித்தவன் சூரியனைப்பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறான். வெகு தொலைவில் இருப்பதினால் சூரியன் நமக்கு இவ்வளவு சிறிதாகத்தான் தோன்ற முடியும் என்று அவன் கூறுவான். அதேபோல ஆத்மஞானியாக இருப்பவன் என்ன கூறுவான்?

ஸ நித்யோபலப்திஸ்வரூபோऽஹமாத்மா (25.)

(கருத்து: என்றும் நிலையான ஆத்மாதான் நான்.)

என்ற மேற்கோளில் கூறப்பட்டதுபோல் ஆத்மா இருந்தாலும் பிராரப்த கர்மா எதுவரையில் இருக்கின்றதோ, அதேபோல "நான் பார்ப்பவன்" என்ற அபிமானம் எதுவரையில் இருக்கின்றதோ அதுவரையிலும் நாம் (உலகம் முதலியவைகளை இப்பொழுது உள்ளதைப் போல்) பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். "பார்ப்பவன்தான் நான்" என்ற அபிமானத்தை விட்டு "பார்வையே நான்" என்ற ஒரு பாவனை வந்துவிட்டால் பிறகு துன்பமே இல்லை. பார்க்கிறவனுக்கும் பார்வைக்கும் உள்ள தூரம் போய் இவன் பார்வையே ஆகிவிட்டால் பிறகு துக்கமேயில்லை. தூரத்தினால், இடைவெளியினால் சூரியன் சிறியதாகத் தோன்றுகிறான் என்று வானியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அவர்கள் சொல்வதால் நாமும் நம்ப வேண்டியதாயிருக்கிறது. நம்பாவிட்டால் நம்மைப் "பைத்தியக்காரர்கள்" என்று சொல்லுவார்கள். ஆதலால்

Koviloor Digital Library

"நம்புகிறோம்" என்றுதான் மக்கள் கூறுவார்கள். இவ்வாறு மற்றவர்களுக்குப் பயந்து யாரும் நம்பக்கூடாது. மாறாக வானியல் கல்வியைக் கற்ற ஒருவன் வேறு யாருக்கும் பயந்து நம்ப வேண்டிய தேவையில்லை.

ஆத்மாவைப் பற்றிய அறிவு யாருக்கு வரும் என்பதற்கு சங்கரபகவத்பாதாள்,

ஸ்வஸ்யாவித்யா-பந்த-ஸம்பந்தமோக்ஷாத்
ஸத்யக்ஞானாநந்த ரூபாத்மலப்தௌ |
சாஸ்த்ரம் யுக்திர்தேசிகோக்தி: ப்ரமாணம்
சாந்த: ஸித்தா ஸ்வானுபூதி: ப்ரமாணம் || (26.)

(தனது அவித்யையின் பந்தத்திலிருந்து விடுதலை பெற்று, ஸத்யம், ஞானம் மேலும் ஆனந்த வடிவாகியிருக்கும் ஆத்மாவை அடைவதற்கு சாஸ்திரம், யுக்தி மேலும் குருவின் வார்த்தைகள் ப்ரமாணங்களாக இருக்கின்றன. மேலும் தனது உள்ளுணர்வினால் ஏற்படும் அனுபவமும் (இவ்விஷயத்தில்) ப்ரமாணம்.)

என்று கூறியுள்ளார்.

ஒருவர் மீமாம்ஸா சாஸ்திரத்தையெல்லாம் நன்கு கற்றுத் தேர்ந்தார். யாகங்களையெல்லாம் செய்தார். அப்படிப்பட்டவர் ஸ்வர்கத்திற்குச் செல்ல வேண்டியது என்று நாம் சொன்னால் யார் நம்புவார்கள்? ஸ்வர்கத்திற்குச் சென்று அவர் வந்து சொன்ன பிறகுதான் நம்புவார்கள்!

ஸ்வஸ்யாவித்யா-பந்த-ஸம்பந்தமோக்ஷாத்

அறியாமையின் சம்பந்தப்பட்ட பந்தத்தளையிலிருந்து மோக்ஷம் பெறுவதற்கு சாஸ்திரம், யுக்தி, குருவின் சொற்கள் இவை மூன்றும் ப்ரமாணங்களாக இருக்கின்றன என்று மேற்கோளில் கூறப்பட்டுள்ளது.

சாஸ்த்ரம் யுக்திர்தேசிகோக்தி: ப்ரமாணம்

என்று முதலாவதாக சாஸ்திரம் ப்ரமாணமாகக் கூறப்பட்டுள்ளது.

(இதற்கு விளக்கம் கூறுவதற்குமுன் ஓர் உதாரணத்தைப் பார்க்க வேண்டும்.) வெல்லம் என்பது தின்பதற்கு இனிப்பாக இருக்கும்

Koviloor Digital Library

என்று சொல்வர். சொன்னால் மட்டும் போதுமா என்றால் அது போதாது. வெல்லம் இனிப்பாக இருக்கும் என்று சொன்னால் அது எப்படிப் போதும்? ஏதோ சொன்னார்கள். நானும் கேட்டேன். ஆகவே,

ஸ நித்யோபலப்திஸ்வரூபோऽஹமாத்மா

என்று ஆத்மாவைப் பற்றி சாஸ்திரங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. எவ்வாறு வெல்லம் இனிப்பாக இருக்குமென்று வெறுமென வார்த்தைகளால் சொன்னார்களோ அதேபோல்தான் ஆத்மாவைப் பற்றியும் வெறும் வார்த்தைகளால் கூறினார்கள். (ஆகவே சாஸ்திரம் என்பது இதுவரை பயன்படுகிறது.) வெல்லத்தை இனிப்பாக இருக்கும் என்று சொல்லுவதோடு நிறுத்தாமல் நம் முன்னே கொண்டுவந்து வைத்தால் "ஆஹா பரவாயில்லை" என்று நமக்குத் தோன்றும். முன்னால் கொண்டு வைப்பது "யுக்தி"க்குச் சமானமாக எடுத்துக்கொள்ளலாம். அதேபோல்தான் ஆத்மாவின் விஷயத்திலும் யுக்தி என்பது மேலும் பயனளிக்கும். பிறகு வெல்லத்தைக் கையில் பெற்றுக் கொண்டான். அது தேசிகோக்திக்குச் (குருவாக்கிற்கு) சமானம். பிறகு வெல்லத்தை எடுத்து வாயிலும் போட்டுக்கொண்டான். இது 'அனுபவம்' எனப்படும்.

ஆகவே முதலில் சாஸ்திரம் என்கிற ப்ரமாணம் தேவைப்படுகிறது. சிலருக்கு, "சாஸ்திரம் ஏதேதோ சொல்கிறது. ஆனால் மனதில் ஒன்றுமே நிற்பதில்லை" என்ற எண்ணம் ஏற்படலாம். அப்பேர்பட்டவர்கள் மனதில் ஏற வேண்டும் என்பதற்காகச் சில யுக்திகளை நாம் கூறலாம். சில யுக்திகளை இப்பொழுது பார்ப்போம். "நீ யார்?" என்று ஒருவனைக் கேட்கிறோம். "நான் யார்" என்றால் அவன் என்ன சொல்லுவான்? எப்பொழுதுமே ஊடுருவி நிற்கும் பொருள் நிலையாக இருக்கும் என்பதை நாம் பார்க்கலாம். உதாரணத்திற்கு ஒரு மாலையை எடுத்துக் கொண்டோமானால் அதில் உள்ள முத்துக்களுக்குள் ஊடுருவி நிற்கும் நூலானது நிலையாக இருக்கும். ஆனால் நூலில் கோர்க்கப்பட்டிருக்கும் மணிகளெல்லாம் எப்போதாவது கீழே உருண்டு ஓடி விடலாம். ஆனால் நூல் மட்டும் எப்பொழுதும் நிலையாக இருக்கும்.

Koviloor Digital Library

ஒருவனுக்கு எவ்வளவு நிலைகள் (அவஸ்தைகள்) இருக்கின்றன? (அதற்குப் பின் வரும் மேற்கோள் பதில் கூறுகிறது.)

ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்திஷு ஸ்புடதரம் யோ஽ஸெள ஸமுஜ்ஜ்ரும்பதே (28.)

(விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய நிலைகளில் நன்கு விளங்கிக்கொண்டு...)

"எப்பொழுதும் விழிப்பு நிலைதான் உன்னுடைய நிலையா?" என்று கேட்டால், "தூங்கும் காலத்தில் 'ஜாக்ரத் அவஸ்தை' (விழிப்பு நிலை) இருந்தால் நான் எப்படி தூங்க முடியும்? ஆகவே தூங்கும்பொழுது ஜாக்ரத் அவஸ்தை (விழிப்பு நிலை) கிடையாது" என்று கூறுவான். "தூங்கும்பொழுது நீ இருக்கிறாயா?" என்று கேட்டால், "ஆமாம், நான் எங்கு போனேன்? தூங்கும் பொழுது நான் இருந்தேன். ஆனால் விழிப்புநிலை மட்டும் கிடையாது" என்று கூறுவான். "சரி, விழிப்பு நிலை இருக்கும் காலத்தில் தூக்கம் இருக்குமா" என்று கேட்டால், "இது என்னய்யா கேள்வி? விழிப்பு நிலை இருக்கும் காலத்தில் தூக்கம் இருக்குமா?" என்று கேட்பான். "சரி, விழிப்பு நிலையில் நீ இருக்கிறாயா?" என்று கேட்டால், "நான் எப்போதும் இருக்கிறேன் ஐயா" என்பான். பிறகு, "கனவு நிலையின் போது நீ இருக்கிறாயா?" என்று அவனைக் கேட்டால், "கனவை நான்தானே பார்க்கிறேன். நானே இல்லாது போனால் யாருக்கு ஸ்வப்னம் வரும்? நானே ஸ்வப்னத்தில் உள்ளதையெல்லாம் பார்த்து பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்" என்பான். கனவில் சிலர் பயந்து ஓடுவது உண்டு. சில சமயங்களில் கனவு காணும் பொழுது பயந்து சப்தமெழுப்புவதும் உண்டு. அந்த சப்தத்தைக் கேட்டு மற்றவர்களும் பயப்படுவதுண்டு. ஆகவே இந்த மூன்று நிலைகளிலும்கூட "நான் இருக்கத்தான் செய்கிறேனே தவிர, நான் இல்லாத காலத்தில் இந்த மூன்று அவஸ்தைகளும் நடப்பதே கிடையாது" என்று ஒருவன் கூறுவான். ஆகவே ஜாக்ரத் நிலை ஒருவனுடைய லக்ஷணமா, கனவு நிலை ஒருவனுடைய லக்ஷணமா, அல்லது ஆழ்ந்த உறக்க நிலை ஒருவனுடைய லக்ஷணமா என்ற கேள்வியை நாம் கேட்பதற்குமுன், லக்ஷணம் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி நாம் பார்ப்போம்.

சங்கு வெள்ளையாக இருக்கிறது என்று நாம் சொல்வதாக வைத்துக் கொள்வோம். ஏதாவது ஒரு கருப்புச் சங்கை நாம் பார்த்தால்

Koviloor Digital Library

பின் சங்கு வெள்ளையாக இருக்கிறது என்று எவ்வாறு கூற முடியும்? நாம் சங்கு வெள்ளையாக இருக்கும் என்று சொல்லிவிட்டால் சங்கில் இருக்கக்கூடிய வெண்மை நிறமானது போகவே கூடாது. (லக்ஷணம் என்றால் எப்போதும் இருக்கக்கூடிய பண்பு ஆகும்.) ஆகவே ஒருவனுடைய ஸ்வரூபம் விழிப்பு நிலையா, கனவு நிலையா, ஆழ்ந்த உறக்க நிலையா என்று கேட்டால், இவற்றில் எந்த ஒரு நிலையுமே ஒருவனுக்கு எப்பொழுதுமே இருப்பதில்லை. ஆகவே ஏதோ ஒரு நிலைதான் ஒருவனுடைய லக்ஷணமாக இருக்க வேண்டுமென்று கூறினால் அது நடக்காத காரியம்.

ஒரு சமயம் ஒருவன் தூங்குகிறான். அடுத்த நிமிடமே விழிப்பு நிலையில் இருக்கிறான். பிறகு அவனே கனவு நிலையையும் கொள்கிறான். ஆகவே இந்த மூன்று நிலைகளுமே ஒருவனுடைய லக்ஷணமில்லை என்பது தீர்மானமாகிவிட்டது. ஆனால் மூன்று காலங்களிலும், "நீ பார்த்துக் கொண்டிருக்கிறாயா, இல்லையா" என்று நாம் ஒருவனிடம் கேட்டால், "ஆமாம், ஆமாம், மூன்று காலங்களிலும் நான்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று அவன் பதில் சொல்லுவான். அவனிடம் நாம், "நீ பார்க்கிறாய் என்று சொல்கிறாயே, பார்க்கிறவனை யார் பார்ப்பது?" என்று கேட்டால், "அவனையும் நான்தான் பார்க்கிறேன்" என்று அவன் பதில் கூறுவான். ஆகவே பார்க்கிறவனையும் "நான்தான்" பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் பார்வை பார்க்கும். பார்வையில்லாமல் பார்ப்பவன் கிடையாது. அந்தப் பார்வையே "நான்தான்" என்பதே முடிபு.

கிம் ஜ்யோதிஸ்தவ பானுமானஹனி மே ராத்ரௌ ப்ரதீபாதிகம்
ஸ்யாதேவம் ரவிதீபதர்சனவிதௌ கிம் ஜ்யோதிராக்யாஹி மே।
சக்ஷுஸ்தஸ்ய நிமீலனாதிஸமயே கிம் தீர்தியோ தர்சனே
கிம் தத்ராஹமதோ பவான் பரமகம் ஜ்யோதிஸ்ததஸ்மி ப்ரபோ॥ (27.)

(உனது ஒளி என்ன? பகலில் ஆதவனும் இரவில் தீபம் முதலியவையும். எந்த ஒளியினால் ஆதவனும் தீபமும் பார்க்கப்படுகின்றன என்பதைச் சொல். கண். கண் மூடியிருக்கும்போது எந்த ஒளி இருக்கிறது? புத்தி. புத்தியைப் பார்ப்பதற்கு உனது ஒளி என்ன? நானே இருக்கிறேன். ஆகவே நீதான் உயர்ந்த ஒளி. ஆமாம் பிரபுவே!)

Koviloor Digital Library

குரு சீடனிடம், "உனக்குப் பிரகாசமாக இருப்பது எது? அதாவது, எது இருந்தால் நீ பார்க்க முடியும்?" என்று கேட்கிறார். அதற்கு சீடன், "சூரியன் இருந்தால் நான் பார்க்க முடியும்" என்று பதில் கூறுகிறான். இரவுநேரத்தில் சந்திரனைக் கொண்டோ, தீபத்தைக் கொண்டோ பார்த்துக் கொள்ள முடியும் என்கிறான் சீடன். "சூரியனையோ, சந்திரனையோ, தீபத்தையோ பார்ப்பதற்கு–அதைப் பிரகாசப்படுத்துவது எது?" என்று கேட்கிறார் குரு. நாம் தீபத்தைப் பார்ப்பதற்கு வேறு ஏதாவது ஒரு தீபம் வேண்டுமா என்ன! வேறு ஏதாவது பொருளைப் பார்க்க வேண்டுமானால் தீபம் தேவைப்படலாம். ஆனால் தீபத்தையே பார்ப்பதற்கு வேறொரு தீபம் தேவையில்லை. நாம் நேரிடையாகவே பார்த்துவிடலாம். "அதைப் பார்ப்பது கண்" என்று கூறுகிறான் சீடன். "கண்ணை மூடிக் கொண்டு விட்டால் அப்பொழுது எதன் மூலமாகப் பார்க்கிறாய்?" என்று கேட்கிறார் குரு. கண்ணை மூடிக்கொண்ட பிறகு மனதில் பலவிதமான எண்ணங்கள் அவரவர்கள் ஸம்ஸ்காரத்திற்குத் தக்கவாறு ஓடுவதை ஒருவன் பார்க்க முடியும். அந்த மனதின் ஓட்டங்களையும் பார்ப்பது யார் என்றால் "புத்தி" என்றான். அந்த "புத்தியையும் பார்ப்பவன் யார்?" என்று கேட்டால், 'அது நானே' என்கிறான் சீடன். ஆகவே எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருப்பவன் 'நீதான்' என்றார் குரு. இவ்வாறு ஜோதிவடிவாக இருக்கப்பட்டவன்தான் ஆத்மா. அவன் எப்பொழுதும் மாறாமல் இருப்பவன். எந்தப் பொருளையும் பார்க்க வேண்டுமானால் 'நான்' என்ற ஜோதி இருக்கத்தான் வேண்டும். 'நான்' இல்லாமல் எந்த ஒரு பொருளையும் பார்க்கவே முடியாது. ஆகவே ஆத்மா என்பவன் பரமப் பிரகாசமானவன் என்று தெரிகிறது. அடுத்ததாக இன்னொரு கேள்வி வருகிறது. இந்த ஆத்மா நிலையானவனா, நிலையற்றவனா என்று ஒரு கேள்வி எழுகிறது. எவ்வளவு யுகங்களானாலும், எவ்வளவு ஸம்வத்ஸரங்களானாலும் எப்பொழுதும் 'அவன்' ஒருவனாகவே இருந்து கொண்டிருக்கிறான். அவனுடைய அருள் நமக்குக் கிடைக்க வேண்டும். அவனுடைய அருளை நாம் எவ்வாறு பெறுவது?

ஜாக்ரத்ஸ்வப்னஸுஷுப்திஷு ஸ்புடதரம் யோऽஸௌ ஸமுஜ்ஜ்ரும்பதே
ப்ரத்யக்ரூபதயா ஸதாऽஹமஹமித்யந்த: ஸ்புரன்னேகதா।
நானாகாரவிகாரபாஜின இமான் பச்யந்நஹந்தீமுகான்
நித்யானந்தசிதாத்மனா ஸ்புரதி தம் வித்தி ஸ்வமேதம் ஹ்ருதி॥ (28.)

Koviloor Digital Library

((ஆத்மாவானது) விழிப்பு, கனவு, கனவில்லாத உறக்கம் ஆகிய நிலைகளில் நன்கு விளங்கிக்கொண்டு, ஒரேபோல் எப்போதும் உள்ளே "நான்" என்ற அறிவுக்குக் காரணமாக இருந்துகொண்டு, அஹங்காரம், புத்தி போன்ற மாறுதல்களின் வடிவங்களைப் பார்த்துக்கொண்டு, ஆனந்தமயமான சைதன்யம் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது என்பதை உனது உள்ளத்தில் உணர்வாய்.)

மேற்காணும் சுலோகத்தில் ஆத்மா ஆனந்த வடிவானவன் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதுகாறும் நாம் "ஆத்மா பிரகாச ஸ்வரூபன்" என்று ஏற்றுக்கொண்டோம். நமக்கு ஆனந்தம்தானே வேண்டியிருக்கிறது. ஆகவே அதைப்பற்றியும் நாம் பார்க்க வேண்டும் அல்லவா? உண்மையில் ஆனந்த வடிவும் அவன்தான்.

ஏதஸ்யைவ ஆனந்தஸ்ய அன்யானி பூதானி
மாத்ராமுபஜீவந்தி I (29.)

(எல்லா உயிர்களும் இந்த ஆனந்தத்தின் துளியில் வாழ்கிறார்கள்.) என்று மேற்கோள் வருகிறது.

ஆகவே ஆத்மா ஆனந்த ஸ்வரூபியாக இருக்கிறான். இதற்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

பெரிய குளம் ஒன்று உள்ளது. அதில் பாசி மிகவும் அடர்ந்து இருக்கிறது. அதில் தண்ணீர் இருக்கிறதா என்று பார்க்க வேண்டி ஒருவன் அதில் ஒரு கல்லை விட்டெறிந்தான். பாசி சிறிதளவு விலகி தண்ணீர் சற்றே தெரிந்தது. ஆனால் அந்த நிலை ஓர் இரண்டு நிமிடங்களுக்கோ, ஐந்து நிமிடங்களுக்கோதான் நீடிக்கும். (மீண்டும் அந்தப் பாசியானது தண்ணீரை மூடிக்கொண்டு விடும்.) வெளிப் பொருட்களிலிருந்து வரும் ஆனந்தமும், அவ்வளவு காலம்தான் நமக்கும் நீடிக்கிறது. (எவ்வாறு ஒரு பாசியுள்ள குளத்தில் கல்லை விட்டு எறிந்தவுடன் பாசி சற்றே விலகி தண்ணீரை நமக்குக் காட்டுகிறதோ அதேபோல் வெளிப் பொருட்கள் நமக்கு ஆனந்தத்தின் ஒரு சிறிதளவை மட்டும்தான் தருகின்றன.) விஷயம் என்பது கல்லுக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது. இவ்வாறு எவ்வளவு கற்களைத்தான் நாம் வீசிக்கொண்டே இருப்பது? எவ்வளவு முறைதான் மீண்டும், மீண்டும் பாசியானது மூடிக்கொள்வது? நாம் நமக்கு வேண்டிய (நிலையான) ஆனந்தத்தை எப்போது அனுபவிப்பது? அதனால்தான் சங்கரர்,

Koviloor Digital Library

பங்காபாயே ஜலம் ஸ்புடம் (30.)

(பாசியை அகற்றியவுடன் தண்ணீர் தெளிவாகத் தெரியும்.)

என்றார். அதாவது "அந்தப் பாசியை முழுவதுமாக அகற்றிவிடு" என்றார் அவர். நாம் ஆனந்த ஸ்வரூபி என்று தீர்மானமானால்தானே ஆனந்தம் மூடப்பட்டுள்ளது என்ற பாவனையே ஏற்படும்!

சிலர் – வெளிப்பொருட்களினால் தான் ஆனந்தம் இருக்கிறது! ஆகவே வெளிப்பொருட்கள் இல்லையேல் ஆனந்தம் இல்லை – என்று நினைப்பார்கள். (இது தவறு.) பாசி இருந்தால் அங்கே உள்ளே தண்ணீர் இருக்கிறதே தவிர பாசி இல்லாவிட்டால் அங்கு தண்ணீர் இல்லை என்று கூற முடியுமா! (முடியாது.)

நிர்விஷய: ய: ஆனந்த: உபலப்யதே ஸுஷுப்தௌ (31.)

(ஆழ்ந்த உறக்கத்தில் – பொருட்களின் தொடர்பு அற்ற – இன்பம் எது அனுபவிக்கப்படுகிறதோ ...)

ஒருவன் தூங்கும்பொழுது எதற்காகத் தூங்குகிறான்? அது வேண்டும், இது வேண்டும் என்று சொல்லிக்கொண்டு தூங்குகிறானா, அல்லது எல்லாவற்றையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு தூங்குகிறானா? "தூங்கும்போது ரேடியோவை பெரிதாக அலற வைத்துக்கொண்டு தூங்கு, அல்லது நன்றாக விளக்கைப் போட்டுக்கொண்டு தூங்கு, அல்லது அரண்மனையில் உள்ள பெரிய சிம்மாசனத்தில் தூங்கு" என்று யாராவது கூறுவார்களா? தூக்கம் எங்கே வருகிறதோ அங்கே தூங்கட்டும் என்றுதான் சொல்லுவார்கள். எதற்காகத் தூங்குவது என்றால் இந்த விஷயங்களையெல்லாம் நம்மை விட்டு விலக்கிக் கொள்வதற்காகத்தான் தூங்குவது. அதுதான் காரணம். விலக்கிக்கொள்ள வேண்டும் என்று தூங்கும்பொழுது விஷயங்கள் பக்கத்திலே இருந்தால் தூக்கம் வருமா? பலருக்குத் தூக்க மாத்திரை சாப்பிட்டால்தான் தூக்கம் வரும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. எதனாலென்றால் மனம் ஏதாவது சிந்தனை செய்து கொண்டே இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தி தூங்கச் செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் தூக்க மாத்திரையை உபயோகப்படுத்துவார்கள். சிலர் மனது இந்த விஷயத்தில் சிந்தனை

Koviloor Digital Library

பண்ணக்கூடாது என்று நினைத்தால் அந்த சிந்தனை உடனே நின்றுவிடும். சிலருக்கோ சிந்தனை செய்யக்கூடாது என்று தோன்றினால் மேலும் மேலும் சிந்தனை செய்யத்தான் தோன்றுமே தவிர நிற்காது. இந்த இரண்டாவதாகச் சொன்ன வகையினர் தூக்கம் வருவதற்காக தூக்க மாத்திரைகளைச் சாப்பிடுவர். வெளிப் பொருட்களினாலும், விஷயங்களினாலும்தான் தனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று ஒருவன் நினைப்பானேயானால் அவன் தன்னைச்சுற்றி எல்லாவிதமான வெளிப் பொருட்களையும் வைத்துக்கொள்ளட்டும். தானே பிரம்மா என்று நினைத்துக்கொள்ளட்டும். ஆனால் இது எவ்வளவு நேரம் நிலைக்கும்? அப்படிப்பட்ட மனிதனுக்கே சற்று நேரத்தில் அலுப்புத் தட்டிவிடும். "என்ன இது! இத்தனை பொருட்களையும் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருப்பதா! பத்து நிமிடம் தூங்கினால் நன்றாக இருக்கும்" என்று தோன்றும். இதிலிருந்து "ஆத்மா என்பவன் ஆனந்த ஸ்வரூபன்" என்று தெரிகின்றது. அவன் அக்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கிறான். விஷயங்களினால் ஏற்படும் ஆனந்தம் (விஷயங்களைச் சிந்தனை செய்யும்பொழுது ஏற்படும் ஆனந்தமானது) சில நிமிடங்கள்தான் நீடிக்கிறது. ஆனால் எப்பொழுதும் அது நிலைப்பதில்லை. மறுபடியும் மறுபடியும் அக்ஞானம் என்பது அந்த (ஆத்ம) ஆனந்தத்தை மூடிவிடும்.

ஒருவன் தடாகத்திலுள்ள சுத்தமான நீரை முழுவதுமாகப் பார்க்க வேண்டுமென்றால்,

பங்காபாயே ஜலம் ஸ்புடம் (30.)

என்று கூறியது போல பாசி அனைத்தையும் அகற்றிவிட வேண்டும். அதே போல அக்ஞானத்தைப் போக்கிக் கொண்டால் ஒருவன் ஆனந்த ஸ்வரூபியாக இருக்கலாம்.

ஒருவனுக்கு வெளியில் இருந்து எந்தவிதமான ஆனந்தமும் வருவதில்லை. உள்ளிருக்கும் ஆனந்தமே அவ்வப்பொழுது சற்றே வெளிப்படுகிறது. ஆனால் எவ்வாறு பாசியை முழுவதுமாக அகற்றி விடுகிறோமோ அதே போல அக்ஞானத்தை முழுவதுமாகப் போக்கிக் கொண்டால் அந்த ஆனந்தம் என்பது நிலையாக

Koviloor Digital Library

ஏற்பட்டுவிடும். ஆனால் மனிதனானவன் கண்ட கண்ட வெளி விஷயங்களிலெல்லாம் சிந்தனை செய்து தன்னுடைய (பொன்னான) காலத்தைக் கழித்து விடுகிறான்.

நானாயோனிஸஹஸ்ரஸம்பவவசாத் ஜாதா ஜனன்ய: கதி
ப்ரக்யாதா ஜனகா: கியந்த இதி மே ஸேத்ஸ்யந்தி சாக்ரே கதி।
ஏதேஷாம் கணனைவ நாஸ்தி ... (32.)

(எத்தனையோ ஆயிரக்கணக்கான யோனிகளில் ஜன்மம் எடுத்ததனால், எத்தனையோ தாயார்கள் ஆகிவிட்டனர். எத்தனையோ தந்தையர் ஆகிவிட்டனர். நமக்கு முன்னால் எவ்வளவோ பேர் போய்க் கொண்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் ஓர் எண்ணிக்கையே கிடையாது...)

(இவ்வாறுதான் நமது வாழ்க்கை வீணாகிக்கொண்டே இருக்கிறது.)

ஏதோ மானிட ஜன்மம் கிடைத்திருக்கிறது. விசாரம் செய்வதற்கு ஓரளவு சக்தியும் கிடைத்திருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் சூழ்நிலையும் அநுகூலமாக அமைந்திருக்கிறது. தத்துவத்தைத் தெரியப்படுத்துவதற்காக யாரோ ஒருவரும் கிடைத்திருக்கிறார். பிறகும் ஒருவன் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்து விட்டான் என்றால் அதனால் என்ன பயன்?

ஒரு கதை கூறப்படுவதுண்டு. பார்வதியும் பரமசிவனும் ஒரு சமயம் (ஆகாய மார்க்கத்தில்) சஞ்சரித்துப் (போய்க்) கொண்டிருந்தார்கள். அப்பொழுது கீழே ஒரு பிச்சைக்காரன் நடந்து கொண்டிருந்தான். இதைப் பார்த்த பார்வதி, "ஓ! பரமேச்வரனே! இந்த மனிதன் நண்பகலில் வெய்யிலில் இவ்வாறு திரிந்து கொண்டிருக்கிறானே! உங்களுக்குக் கருணையே இல்லையா? இவனுக்கு ஏதாவது பணத்தைக் கொடுத்து அவனை வீட்டிலேயே உட்கார்த்தி வைக்கக் கூடாதா?" என்று கேட்டாள். அதற்கு பரமேச்வரன், "நான் அவனுக்குச் செல்வத்தைக் கொடுக்கலாம். ஆனால் அதைப் பெறுவதற்கு அவனுக்கு யோகம் இல்லை" என்று கூறினாராம். அதற்குப் பார்வதி, "இல்லையில்லை! நீங்கள் கொடுத்தீர்களானால் அவன் தனது வீட்டிற்குக் கொண்டு போய் விடுவான்" என்றாளாம். அதற்குப் பரமேச்வரன், "சரி!

Koviloor Digital Library

நான் அப்படியே அவனுக்குச் செல்வத்தைத் தருகிறேன். நீ பார்த்துக் கொண்டிரு" என்று கூறினாராம். பகவான் பரமசிவன் ஒரு பெட்டி நிறைய பணத்தை வைத்து அந்தப் பிச்சைக்காரன் நடந்து போகக்கூடிய வழியில் வைத்துவிட்டார். இந்தப் பிச்சைக்காரனும் நடந்து கொண்டிருக்கிறான். அப்பொழுது அவன் மனதிற்குள் திடீரென்று ஒரு யோசனை உதித்தது. "இப்பொழுது எனக்கு இரண்டு கண்களும் நன்றாக இருக்கின்றன. எனக்கு வயதான பிறகு இந்த இரண்டு கண்களுமே சக்தியற்றுப் போய்விடலாம். அப்பொழுதும் நான் நடந்து போக வேண்டியிருக்கும். அந்தச் சமயத்தில் என்னால் நடக்க முடியுமா, முடியாதா என்பதைப் பார்க்க வேண்டும். இப்பொழுதே அவ்வாறு பார்க்கிறேன்" என்று நினைத்துக் கண்களை மூடிக்கொண்டான். பிறகு பணப்பெட்டி இருந்த இடத்தை அவ்வாறு கண்களை மூடிக்கொண்டே தாண்டிச் சென்று விட்டான் அந்த மனிதன். பகவான் உடனே, "நான் கொடுத்தாலும் வாங்குவதற்கு யோகம் இல்லாமல் அவன் முட்டாளாக இருக்கின்றான். அதற்கு நான் என்ன செய்வது?" என்றாராம்.

அபி மானுஷ்யகம் லப்த்வா பவந்தி ஞானினோ ந ஹி |
பசுதைவ வரம் தேஷாம் ப்ரத்யவாயாப்ரவர்தநாத் || (33.)

(மனிதப் பிறவியைப் பெற்றும் ஞானிகளாகாதவர்களைக் காட்டிலும் மிருக வாழ்க்கையே சிறந்தது. ஏனென்றால் பிராணிகளின் வாழ்க்கையில் பாவம் என்பது ஏற்படுவதில்லை.)

என்று கூறப்பட்ட வகையில் உலக வாழ்க்கையிலும் சரி, சாஸ்த்ரீய வாழ்க்கையிலும் சரி, விதியும் (அதாவது செய்ய வேண்டிய செயல்களும்) நிஷேதங்களும் (தவிர்க்க வேண்டிய செயல்களும்) மனிதர்களுக்கு மட்டும்தான் இருக்கின்றன. நாம் இவற்றைப் புரிந்து கொண்டு,

அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே

என்ற வேத வாக்கியத்தைத் தினமும் படித்துக்கொண்டு அதை (பரம்பொருளை) அடைய முயற்சி செய்யாமலிருந்தால்,

இத: கோன்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்த்தே ப்ரமாத்யதி |
துர்லபம் மானுஷம் தேஹம் ப்ராப்ய தத்ராபி பௌருஷம் || (34.)

Koviloor Digital Library

(பெறற்கரிய மனித உடலையும், அதிலும் புருஷத் தன்மையையும் அடைந்தபின் எவன் தன் (ஆத்ம) விஷயத்திலேயே தவறுகிறானோ அவனைவிட முட்டாளாக யாரேனும் இருக்க முடியுமா?) என்று கூறப்பட்ட வகையில் ஆகக்கூடாது.

தினே தினே ச வேதாந்தச்ரவணாத் பக்திஸம்யுதாத் |
குருசுச்ரூஷயா லப்தாத் க்ருச்ராசீதிபலம் லபேத் || (35.)

(தினந்தோறும் பக்தியுடன், குருவிற்குச் செய்த சேவையோடு கேட்கப்பட்ட வேதாந்தத்தின் மூலமாக 80 "க்ருச்ரம்" (உடலை மிகவும் வருத்திக்கொண்டு செய்யக்கூடிய கடினமான ப்ராயச்சித்த கர்மா) செய்த பலன் பெறப்படுகிறது.)

என்று மேற்கோள் ஒன்று வருகிறது. ஆகவே இதற்காக நாம் சிறிதளவாவது முயற்சி செய்ய வேண்டும். "எனக்கு சமம், தமம், உபரதி, திதிக்ஷா, ச்ரத்தா, சமாதானம் ஆகிய சமாதி ஷட்க சம்பத்திகள் இல்லை. இதெல்லாம் இல்லாமலிருந்து வேதாந்தத்தைப் படித்தால் அதனால் எந்த விதமான உபயோகமும் இல்லை" என்ற பாவனையை நாம் வைத்துக்கொள்ளக் கூடாது. நாம் சிறிதளவாவது முயற்சி செய்துகொண்டு வந்தால்

ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் (36.)

(அந்த தர்மம் சிறிதளவே ஆயினும் அது ஒருவனை பெரும் பயத்திலிருந்து காப்பாற்றும்.)

என்று கூறப்பட்டது போல் ஆகும். ஆகவே முயற்சி செய்தால் நாம் ச்ரேயஸ்ஸை அடைய முடியும் என்று கூறி இந்த உபந்யாஸத்தை இங்கு முடிக்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

2. இலட்சியமும் அதற்கான வழியும்

ஆசார்யாள் இந்த அனுக்ரஹபாஷணத்தை, 2-7-1989ம் ஆண்டு பெங்களூரில் கன்னட மொழியில் அருளினார். “பாரதீய வித்யா பவன்” என்ற இடத்தில் ஆற்றிய இந்தத் தெய்வீக உபந்யாஸத்தின் கால அளவு 35 நிமிடங்கள். இவ்வருளுரை சம்பந்தமான சில விஷயங்கள் விசேஷமாகக் குறிப்பிடும்படியாய் உள்ளன.

1. இவ்வுபந்யாஸம், 21-09-1989 அன்று ஆசார்யாள் மஹாஸமாதி அடைவதற்கு முன்னர் மேற்கொண்ட கடைசி விஜயயாத்திரையில், பெங்களூருக்கு கடைசி முறையாக அவர் வந்திருந்தபோது வழங்கியதாகும். பிறகு பெங்களூரிலிருந்து ஆசார்யாள் சாதுர்மாஸ்ய விரதத்தை அனுஷ்டிப்பதற்காக சிருங்கேரிக்கு வந்து சேர்ந்தார். ஆகையால், அவர் இறுதியாக வழங்கிய 5 அனுக்ரஹபாஷணங்களுள் இது ஒன்றாகும்.

2. தாம் நிகழ்த்திய அருளுரைகளைப் பற்றி ஆசார்யாள் பேசுவதோ அல்லது அதைப் பற்றிய தமது கருத்துக்களைத் தெரிவிப்பதோ மிகவும் அபூர்வமான ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால், சொல்வதற்கு சந்தர்ப்பம் ஏதுமின்றி, தாமாகவே அவர் 1989ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் சிருங்கேரியில் இந்தப் புனித உபந்யாஸத்தை நினைவு கூர்ந்து தமது கருத்துக்களைத் தெரிவித்தார். ஆசார்யாள் என்னிடம், “ஒரு நாள், நான் பெங்களூரில் உள்ள போது, ‘பாரதீய வித்யா பவன்’ என்ற இடத்திற்குச் சென்றது எனக்கு நினைவிருக்கிறது. அன்று காலை நான் நிர்விகல்ப ஸமாதியில் நீண்ட நேரம் அமர்ந்திருந்தேன். என்னுடைய வழக்கமான காரியங்களில் நான் எப்பொழுதும் போல் ஈடுபட்டிருந்தபோதிலும், அன்றைக்கு என் மனம் குறிப்பிடும்படியாக உள்நோக்கியிருந்தது. அதனால்தான், தத்துவத்தை அறிந்த ஒருவரின் நிலையைப் பற்றியும், ஸமாதியைப் பற்றியும் நான் பேசியிருக்கிறேன் போலும். இத்தகைய அடிப்படையில் நான் இனிமேல் பேசப் போவதில்லை என்ற ஓர் உணர்வு இப்பொழுது எனக்கு ஏற்படுகிறது” என்றார்.

Koviloor Digital Library

3. ஓர் ஒப்பற்ற யோகியான ஆசார்யாள், தமது வாலிப வயதிலிருந்தே யோகத்தின் சிகரமான நிர்விகல்ப ஸமாதியில் அடிக்கடி நிலைத்திருந்தார். மற்றவர்களுக்கும் ஸமாதியைக் கொடுக்கும் சக்தி அவரிடம் இருந்தது. அவரே திருவாய் மலர்ந்தது போல், 02-07-1989 அன்று நீண்ட நேரம் ஸமாதியில் நிலைத்திருந்திருக்கிறார். ஆயினும், இந்தத் தெய்வீக உபந்யாஸத்தில் ஸமாதியைப் பற்றி சொல்லும்போது, தம்முடைய அனுபவங்களைச் சொல்லாமல், ஒரு சிஷ்யனின் ஸமாதி அனுபவங்களையே அவர் எடுத்துரைத்தார். அவர் தம்முடைய ஸமாதி அனுபவங்களுக்காக சிறிதளவுகூட பெருமைப்பட்டுக் கொண்டதுமில்லை. அந்த அளவிற்கு அவர் அஹங்காரத்திலிருந்து ஈடு இணையின்றி விடுபட்டிருந்தார்.

– மொழிபெயர்ப்பாளர்

Koviloor Digital Library

இலட்சியமும் அதற்கான வழியும்

விசுத்தஞானதேஹாய த்ரிவேதீ திவ்யசக்ஷுஷே
ச்ரேய: ப்ராப்திநிமித்தாய நம: ஸோமார்த்தாரிணே |
நமாமி யாமினீநாதலேகாலங்க்ருதகுந்தலாம்
பவானீம் பவஸந்தாபநிர்வாபண ஸுதாநதீம் || (1.)

(சுத்த சைதன்யத்தையே தேஹமாகக் கொண்டவரும், வேதம் அறிந்தவரும், திவ்யக் கண் படைத்தவரும், அம்புலியை அணிந்தவரும், மோக்ஷஸாதனம் ஆனவருமான சிவனுக்கு வணக்கம். கூந்தலில் அம்புலியை அலங்காரமாகப் பெற்றிருப்பவளும், ஸம்ஸாரத்தளையின் மிகுந்த வெப்பத்தை நீக்கும் அமுத நதியானவளுமான சிவனின் துணையாளை வணங்குகிறேன்.)

உலகில் பல்வேறு மத–சம்பிரதாயங்கள் உள்ளன. நமது பாரம்பரியத்தைப் பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொண்டு அவற்றின்படியே வாழ்க்கை நடத்துவது நமது கடமையாகும்.

உலகில் இருவகையான மனிதர்கள் உள்ளனர். சிலர்,

அயம் லோகோ நாஸ்தி பர: (2.)

(அனுபவிக்கப்படும் இந்த உலகம்தான் உள்ளதே தவிர இறப்பிற்குப் பிறகு எவ்வுலகும் இல்லை.)

என்கின்றனர்.

வேறு சிலரோ,

அயம் லோக: பரச்ச (3.)

(இவ்வுலகும், மறுவுலகும்கூட உள்ளன.)

எனக் கருதுகின்றனர். எது எவ்வாறிருப்பினும், நாஸ்திகர்கள் ஆஸ்திகர்கள் ஆகிய இருவருமே, பின்னாலிருந்து கொண்டு எல்லாச் செயல்களையும் நடத்துவதும், மனிதனின் எண்ணத்திற்கு அப்பாற்பட்டதுமான ஒரு சக்தியின் அனுக்ரஹம் எப்போதும் தேவைப்படுபவர்களாகவே இருக்கிறார்கள்.

Koviloor Digital Library

யாருமே தன்னுடைய எல்லா விருப்பங்களையும் நிச்சயமாக நிறைவேற்றிக்கொள்ள முடிவதில்லை என்பதை புராணங்களிலிருந்தும், நமது அனுபவத்திலிருந்தும் நன்கு அறிகிறோம். இராவணன் ஓர் ஒப்பற்ற வீரன். அவன், "கடவுளிடமிருந்து ஆத்மலிங்கத்தைப் பெற்றுக்கொண்டு அதை என்னிடம் வைத்துக்கொண்டு பூஜிப்பேன். பிறகு எதெல்லாம் உலகில் செய்ய முடியாதது என்று கருதப்படுகிறதோ அதெல்லாவற்றையும் செய்வேன். நான் சாவற்றவன் ஆயிற்றே. எனக்கென்ன இடையூறு வர முடியும், பார்க்கலாம்" என்று நினைத்தான். ஆனால் அவன் உறுதியாகவும், நலமாகவும் இருக்கையிலேயே அவனுடைய திட்டம் இன்னொருவரால் தவிடுபொடியானது.

(ஆசார்யாள் இங்கு உபந்யாஸத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மக்களுக்குப் பரிச்சயமான கதை ஒன்றைக் குறித்தே மேற்கண்டவாறு கூறினார். இராவணன் ஒரு சமயம் கைலாசத்திற்குச் சென்று கடவுளின் மிகப் புனிதமான ஆத்மலிங்கத்தைத் தருமாறு வேண்டிக்கொண்டான். பக்தர்களுடைய விருப்பத்தை ஒருபோதும் தட்டாமல் பூர்த்தி செய்யும் பகவான், இராவணனின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டான். இராவணன் ஆத்மலிங்கத்தை கைகளில் எடுத்துக்கொண்டு தனது தாய் நாடான இலங்கையை நோக்கிப் புறப்பட்டான். அளவிட முடியாத சக்தி வாய்ந்த ஆத்மலிங்கத்தை அதிகார வெறிபிடித்த இராவணன் இலங்கையில் பிரதிஷ்டை செய்து பூஜையும் செய்தால் என்னவெல்லாம் நடக்குமோ என்பதை எண்ணிப் பார்க்கவே பயந்து நடுங்கினர் தேவர்கள்.

இராவணன் இலங்கையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது மாலை நேரம் வந்தது. ஸந்த்யாவந்தனம் பண்ணுவதற்காக அவன் பயணத்தை நிறுத்தினான். இத்தருணத்தை உபயோகித்துக் கொள்வதற்காக விநாயகக் கடவுள் அவன் முன் ஒரு சிறுவன் வடிவத்தில் தோன்றினார். ஆத்மலிங்கத்தை அது எங்கு பிரதிஷ்டை செய்யப்பட வேண்டுமோ அந்த இடத்தில்தான் கீழே வைக்க வேண்டும் என்பது இராவணனுக்குத் தெரியும். எனவே அவன் அந்தச் சிறுவனை அழைத்து ஆத்மலிங்கத்தைச் சிறிது காலம் கையில் பிடித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான். சிறுவனும்

Koviloor Digital Library

ஒப்புக்கொண்டான். ஆனால் ஒரு நிபந்தனையுடன். நிபந்தனை என்னவென்றால் சிறுவன் தான் எப்போது செல்ல வேண்டும் என்று விரும்புகிறானோ, அப்போது இராவணனைக் கூப்பிடுவான். மும்முறை கூப்பிட்ட பிறகும் இராவணன் திரும்பாவிட்டால் பையன் லிங்கத்தைத் தரையிலே வைத்துவிட்டுச் சென்று விடுவான். வேறு யாரும் அருகில் உதவிக்கு இல்லாததால் இராவணன் இந்நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டான்.

சிறிது நேரத்திலேயே பையன் 'இராவணா' என்று கூக்குரல் எழுப்பினான். இராக்ஷஸன் அவனைச் சிறிது பொறுக்குமாறு கூறினான். சில கணங்களிலேயே அவன் இன்னொரு முறையும் கூப்பிட்டான். அதேமாதிரி குறுகிய இடைவேளைக்குள் அவன் மூன்றாவது முறையும் கூப்பிட்டான். பிறகு இராவணன் வருவதற்குள் அந்த லிங்கத்தை தரையில் வைத்தும் விட்டான். இராவணன் மிக்க ஆத்திரமடைந்தான். ஆனால் நடந்தது நடந்தாய் விட்டது. முடிந்தவரை பிரயத்தினப்பட்டும் லிங்கத்தை அவனால் தரையிலிருந்து தூக்க முடியவில்லை. வேறு எவ்வித வழியும் தெரியாமல், ஆத்மலிங்கத்தை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற தன்னுடைய விருப்பம் ஈடேறாத நிலைமையில் இராவணன் வெறுங்கையோடு இலங்கை திரும்பினான்.)

ஆசை உண்டாவது, பிறகு அது வெறுப்பாக மாறுவது ஆகிய எவைகளை இராவணன் அனுபவித்தானோ, அவைகள் வாஸ்தவத்தில் எல்லோராலும் அனுபவிக்கப்படுகின்றன. நமக்கும் கூட இயற்கையாகவே சிறியதும், பெரியதுமாக ஆசைகள் இருக்கின்றன. அவற்றுள் பல ஆசைகள் ஈடேறிவிட்டால் நாம் 'என்னைப் போல் யாருமேயில்லை. நான்தான் மிகப் பெரியவன்' என்று நினைத்து கர்வப்பட்டுக் கொள்கிறோம். ஆனால் நம்முடைய ஆசைகளை எப்போதும் பூர்த்தி செய்து கொள்வது என்பது இயலாத காரியம். நமக்கு தோல்விகள் ஏற்படத்தான் செய்கின்றன. மிகச் சிறந்த தீரர்களே அழிந்திருக்கிறார்கள். சாவு நெருங்குகையில் அவர்களும், "நாம் விரும்பிய அனைத்தையும் அடைய முடியும் என்று கருதியது எல்லாம் அபத்தம்" என்று உணர்ந்தனர். விரும்பும் எல்லாப் பொருட்களையும் அடைவது அசாத்தியம் என்பது மட்டுமின்றி, அடைந்த பொருட்களிடமிருந்து பிரிவு ஏற்படுவதும் மிக்க உறுதி. உண்மையில் பார்த்தால் உலகப் பொருட்கள், அவை

Koviloor Digital Library

விரும்பப்பட்டவையானாலும், தாற்காலிகமாக அடையப்பட்டவை ஆனாலும் அவையெல்லாமே மித்யைதான்.

சச்வந்நச்வரமேவ விச்வமகிலம் (4.)

(அகில உலகமும் எப்போதும் நாசமடைவதாய் இருக்கிறது.)

இங்கு ஒருவன் ஆட்சேபம் எழுப்பலாம். "அத்வைதிகள் நாசமடைவதான இந்த உலகை மித்யை அல்லது பொய் என்கிறார்கள். ஆனால் நான் நிச்சயம் உலகைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பிறகு எப்படி இது மித்யை ஆகும்?" இது ஒரு பொருத்தமான கேள்வி. எவன் தத்துவத்தை அறிந்திருக்கிறானோ அவனுக்கு உலகம் மித்யைதான். ஆனால் தத்துவத்தை அறியாத ஜனங்களுக்கு உலகம் உண்மையாகவே தெரிகிறது. இவ்விரு கருத்துக்களில் உள்ள வித்தியாசத்தை ஓர் உதாரணம் மூலம் விளக்கலாம்.

சில சமயம் குழந்தைகள் பொம்மை வீடுகளை உண்டாக்குவர். ஆனால், அவர்களைப் பொறுத்த வரையில் அவை உண்மை வீடுகளே. "எனது வீடு நன்றாக இருக்கிறது" என்று அவர்கள் கூறிக் கொள்வர். அதேசமயம் சிறிது நேரத்தில் தாம் செய்தவற்றிலேயே வெறுப்புத்தட்டி பொம்மை வீடுகளை இடித்துத் தள்ளவும் செய்வர். பெரியவர்களைப் பொறுத்த மட்டில் குழந்தைகள் விளையாடுகின்றனர் என்றே கருதுவர். ஆனால் குழந்தைகளோ தாம் ஒரு மிகத் தேவையான காரியத்தில் ஈடுபட்டிருப்பதாக நினைத்துக்கொள்வர்; வெறும் விளையாட்டு என்று அப்போது எண்ணமாட்டார்கள். குழந்தைகளால் முக்கியமான காரியம் என்று கருதப்படும் செயல் ஏன் பெரியோர்களான நம்மால் வெறும் விளையாட்டாகக் கருதப்படுகிறது? ஏனென்றால் பொம்மை வீட்டைவிட உயர்ந்த உண்மையான ஒன்று நம்மால் மிகத்தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டிருப்பதால். நமக்கு உண்மை வீடுகளும் அதன் கட்டுமானமும் தெரியும். நமக்கு விவரம் தெரியும் வரை நாம்கூட பொம்மை வீடுகளை வெறும் விளையாட்டு என்று கருதவில்லை. நாமும் பொம்மை வீடுகளை கட்டிவிட்டு, "எனது வீடு பெரியது. உன்னுடையது சிறியது. என்னுடையது அழகாயிருக்கிறது. உன்னுடையது நன்றாக இல்லை" என்றெல்லாம் கூறி வந்திருக்கிறோம். இப்போது அவ்வாறு செய்வதில்லை!

Koviloor Digital Library

பரம ஸத்தியம் அல்லது உயர்ந்த ஸத்தியம் என்ற ஒன்று இருக்கிறது; உலகில் உள்ளது எல்லாம் உண்மை, ஆனால் இது உயர்ந்த உண்மை. எது உயர்ந்த ஸத்தியத்தின் லக்ஷணம்? அது 'த்ரிகால அபாத்யம்'–அதாவது முக்காலங்களிலும் அழிவில்லாததாக இருக்க வேண்டும்.

உலகம் எப்படிப்பட்டது? அது நம் பிறப்பிற்கு முன் இருந்தது. நமது சாவிற்குப் பிறகும் தொடர்ந்து இருக்கும். அப்படியென்றால் உலகம் முன்பு எப்போதும் இருந்ததா? அது முடியாதது. இப்போது அது இருக்கிறது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. நாம் இறந்ததற்குப் பிறகும் அது இருக்கலாம். ஆனால் எவ்வளவு காலம்? அது ஏதோ ஒரு நீண்ட காலத்திற்கு பின் அழியக்கூடும் என்பது நம்மைப் போன்ற சாமானியர்களால்கூட ஊகிக்க முடியும்.

பரம ஸத்தியமானது முன்பும், இப்போதும், எப்போதும் இருக்கும். எப்போதிலிருந்து அது இருக்கிறது? எப்போதுமே அது இருந்துகொண்டிருப்பதால் இக்கேள்விக்கே இடமில்லை. நீ எந்தக் காலத்தை எடுத்துக் கொண்டாலும் அப்போது அது இருந்திருக்கிறது. இப்போது அது இருக்கிறது. வருங்காலத்திலும் எப்போதுமே அது தொடர்ந்து இருக்கும். எதுவரை? அதற்கு ஒரு கால வரையறையைக் கூற இயலாது. ஏனென்றால், அது எப்போதும் இருக்கக்கூடியது.

காலத்தினால் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்ற நிபந்தனையை இந்த உலகினால் எப்போதாவது பூர்த்தி செய்ய முடியுமா? என்றைக்கும் முடியாது. நாஸ்திகனோ, ஆஸ்திகனோ இருவருமே உலகிற்கு எப்போதுமே அழிவில்லை என்பதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

அதேசமயம் எப்போதும் இருக்கக்கூடிய இந்த பரம ஸத்தியத்தை லௌகிக எல்லைகளுக்கு உட்படாமல் ஒருவன் பார்த்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு இந்த உலகம்,

சச்வந்நச்வரமேவ விச்வமகிலம்

(இந்த அகில உலகமும் எப்போதும் அழியக்கூடியது.)

என்று சொல்லப்பட்டுள்ளவாறே தெளிவாகத் தோன்றும்.

Koviloor Digital Library

இதிலிருந்து உலகம் இல்லவே இல்லை என்று அர்த்தம் வராது. சந்தேகத்துக்கிடமின்றி உலகம் கண்ணால் பார்க்க முடிவதாகவும், கைகளால் பொருட்களை பிடிக்க முடிவதாயும்தான் இருக்கிறது. ஆனால், நாம் நினைப்பது மாதிரி உண்மையானதல்ல அது. தர்க்க சாஸ்திரத்தில் சில பொருட்களை 'ப்ரவாஹத நித்யம்' அல்லது ஒரு பிரவாஹம் போல் எப்போதும் உள்ளது என்பர். அதில் மாறுதல்கள் ஏற்படலாம். சில பொருட்கள் 'கூடஸ்த நித்யம்'— அதாவது மாறுதலற்று எப்போதும் உள்ளவை என்பர். தார்க்கீகர்களைப் பொறுத்தவரை, ஆகாசம் 'ப்ரவாஹத நித்யம்' ஆகாது. ஏனென்றால், அதில் மாறுதல் ஏற்படுவதில்லை. ஆகவே அது 'கூடஸ்த நித்யம்'. ஆனால் வேதாந்திகளைப் பொறுத்தவரை ஆகாசம் அவ்வாறில்லை. ஏனென்றால், ஆகாசத்திற்கும் தோற்றத்தையும், அழிவையும் அவர்கள் (வேதாந்திகள்) ஒப்புக்கொள்கிறார்கள். மக்களைப் பொறுத்தவரையில் இந்த உலகம் 'ப்ரவாஹத நித்யம்'. ஏதாவது ஒன்று உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால் உலகத்திலுள்ள எந்த ஒரு பொருளையும் மாறுதல் எதுவும் இல்லாமல் அது எப்போதும் நிலைபெற்று இருக்கிறது என்று ஒருவரும் உறுதியாகச் சொல்வது கிடையாது.

பரம்பொருளின் மீது மிகுந்த கவனம் செலுத்தி அதன் ஸ்வரூபத்தை உணர்ந்து, அதைப்பற்றிய அசைக்க முடியாத தீர்மானமும் ஏற்பட்ட ஒருவரைப் பாருங்கள். எதிர்பார்க்கப்பட வேண்டியவாறு, அவர் பரம்பொருளை மட்டும்தான் உண்மையானது என்று கருதுவார். பரம தத்துவத்தின் அனுபவம் இருப்பதால், மற்ற எல்லாவற்றையும் அவர் மிகவும் தாற்காலிகம் (க்ஷணம் தோன்றி மறைகிறது) என்றுதான் கருதுவார். ஆகவே அவர் உலகை மித்யை அல்லது பொய் எனக் கருதுவது இயற்கையே. பகவத்பாதரின் நிலை அப்படிப்பட்டதுதான். பரம்பொருளைப் பற்றிய சரியான ஞானம்தான் மோக்ஷத்திற்குக் காரணம் என்று தெளிவுபடுத்தினார் அவர்.

ஆஸ்திகர், நாஸ்திகர் என்று இருவகையாக மனிதர்கள் இருப்பதையும் அவர்கள் இருவருக்குமே ஓர் உயர்ந்த சக்தியின் அனுக்ரஹம் தேவைப்படுகிறது என்றும் முன்பு கூறினோம். கடவுள்தான் அந்த உயர்ந்த சக்தி. நாம் இதுகாறும் பார்த்த அந்த

Koviloor Digital Library

பரம்பொருள்தான் உண்மையில் அவர். ஆஸ்திகர்கள் கடவுள் இருப்பதை எப்போதும் ஒப்புக்கொள்வர். ஆயினும், மாயையால் மோஹமடைந்து அவர்கள் செய்யத்தகாதவற்றையும் செய்வர். நாஸ்திகர்கள் எப்போதாவது கடவுள் இருக்கலாம் என்று கூறுவர். அவர்களும் கெட்ட செயல்களைச் செய்வர். பிறகு இவர்கள் இருவரின் நடத்தைகளில், இருவருமே தவறான செயல்களைச் செய்வதினால், என்ன வித்தியாசம்?

வீட்டில் யாராவது மரியாதைக்குரிய பெரியவர் இருந்தால், தவறு செய்வதற்கு சந்தர்ப்பம் வந்தாலும்கூட, ஒருவன் "வீட்டிற்குப் போனால் நான் என்ன விளக்கம் கூறுவேன்?" என்று யோசித்து தவறான செயல் செய்வதைத் தவிர்ப்பான். ஆனால், அப்படிப்பட்ட பெரியவர் யாரும் இல்லையென்றால், யாருக்கும் விளக்கம் தர வேண்டிய கட்டாயம் இல்லாததால், அவன் தன் மனதிற்கு தோன்றியவாறெல்லாம் செய்வான். தவறு செய்ததால், பிறகு அவன் வருந்த நேரிடும்.

ஆஸ்திகனின் விஷயத்தில், கடவுள் உண்டு என்ற திடமான நம்பிக்கையானது, வீட்டில் உள்ள பெரியவரைப்போல், அவனிடம் ஒரு கட்டுப்பாட்டைச் செலுத்த உதவுகிறது. ஆகவே, கெட்டுப்போவதற்கு பல வாய்ப்புகள் வந்தாலும், அவன் அவற்றை ஒதுக்கிவிடுகிறான். இப்படிப்பட்ட சீர்திருத்தும் சக்தியின் பயனை நாஸ்திகன் இழந்து விடுகிறான். ஆஸ்திகனிடத்தில் சீர்திருத்தும் சக்தியாக விளங்கும் இறைவன், உண்மையில் எங்கே இருக்கிறார்?

ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்டதி । (5.)

இறைவன் நமது ஹ்ருதயத்தின் உள்ளே வசிக்கிறார். அப்படியானால் வெளியில் அவர் இல்லையா?

அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்த்தித: ॥ (6.)

(இந்த உலகத்தில் காணப்படும் மற்றும் கேட்கப்படும் எல்லாவற்றின் உள்ளும் புறமும் பரவியுள்ளார் பகவான் நாராயணன்.)

ஆகையால், இறைவன் உள்ளேயும் உள்ளார்; வெளியேயும் உள்ளார். இறைவனை உள்ளேயும்,வெளியேயும் காண்பதை

Koviloor Digital Library

ஒப்பிட்டுப் பார்க்கையில் வெளியில் காண்பது சுலபம்; ஆனால் உள்ளே காண்பது கடினம். மதுஸூதன ஸரஸ்வதீ என்ற மஹான்,

த்யானாப்யாஸ வசீக்ருதேன மனஸா யந்நிர்குணம் நிஷ்க்ரியம்
ஜ்யோதி: கிஞ்சன யோகினோ யதி பரம் பச்யந்தி பச்யந்து தே | (7.)

(தியானத்தை அப்யாஸம் செய்து, மனதை தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் யோகிகள், அதன்மூலம் குணங்களற்ற, மற்றும் செயல்களற்ற பரஞ்ஜோதியை காண்கிறார்கள். அவர்கள் வேண்டுமானால் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கட்டும்.)

என்று கூறியுள்ளார். வடிவமும் குணங்களும் இன்றி பூரண உண்மைப் பொருளாய் திகழும் பரப்ரஹ்மத்தை சிலர் பார்க்கிறார்கள். யார் அவர்கள்?

த்யானாப்யாஸ வசீக்ருதேன மனஸா

தியானத்தை பயிற்சி செய்வதன்மூலம், தங்கள் மனதை முழுவதும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்களே அவர்கள். இப்படிப்பட்ட ஒருவர் ஒரு மக்கள் கூட்டத்தின் நடுவில் அமர்ந்துகொண்டு சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தாலும், அப்பொழுது அவரை, “நீ எங்கிருக்கிறாய்?” என்று கேட்டால், அதற்கு அவர் உள்ளத்தினின்று வரும் பதில் “நான் எங்கும் இருக்கிறேன்” என்பதாகத்தான் இருக்கும். தான் தேஹத்தினால் வரையறுக்கப்பட்டவர் என்று அவர் நினைக்கமாட்டார். அப்படிப்பட்ட யோகிகளால் இறைவனை உள்ளே காண்பது என்பது எளிது.

நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜனம் | (8.)

(அங்கமற்றதாயும், காரியமற்றதாயும், சாந்தமாயும், களங்கமற்றதாயும் உள்ள பரம்பொருள்...)

பூரண உண்மைப் பொருளாம் இறைவன் மேற்கூறியவாறு இருந்தாலும், வடிவங்களைப் பெற்றுக் கொள்வார். கீதையில் கண்ணன்,

அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதானாமீச்வரோऽபி ஸன் |
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா || (9.)

Koviloor Digital Library

(நான் பிறப்பற்றவனாயிருந்தாலும், இயற்கையாகவே அழிவற்றவனாயிருந்தாலும், எல்லா உயிர்க்கும் பிரபுவாக விளங்கினாலும் என் மாயையை என் வசத்தில் கொண்டு என்னுடைய மாயையால் நான் அவதரிக்கிறேன்.)

உண்மையில் பிறப்பற்றவராயும், அழிவற்றவராயும் இருந்தாலும், இறைவன் உலகின் நலத்திற்காக அவதரிக்கிறார். இதனால் இறைவன், மக்கள் அவரை தங்களுக்கு வெளியில் பார்க்கின்ற செயலை சுலபமாக்கி விடுகிறார். உதாரணத்திற்கு, த்ரேதா மற்றும் த்வாபர யுகங்களில் முறையே அவதரித்த ஸ்ரீ இராமரையும், ஸ்ரீ கிருஷ்ணரையும் பார்க்கும் அரும்பாக்கியம் எண்ணற்ற ஜனங்களுக்கு கிட்டியது. அவர்களை நாம் இப்பொழுது விக்ரஹங்கள் மூலமாகவும், படங்கள் மூலமாகவும் காணலாம். ஒரு கிருஷ்ணருடைய படத்தையோ அல்லது சிவனின் படத்தையோ ஒருவன் பார்க்கும்போது, அந்த உருவம் அவன் மனதில் எளிதாக வருகிறது.

ஆனாலும், இப்படிப்பட்ட பார்வை மட்டுமே ஆழ்ந்த தியானமாகிவிடாது; மற்றும் இறைவனை தனக்குள்ளே தெளிவாக பார்க்கவும் செய்யாது. ஒரு படத்தை சிறிது நேரம் பார்த்துவிட்டு ஒருவன் தன் கண்களை மூடிக்கொண்டு, தனது மனத்திரையில் அவ்வுருவத்தை நிலைநிறுத்த முயன்றால், சாதாரணமாக அவன் வெற்றியடைவதில்லை என்பதைப் பார்க்கிறோம். அந்தத் தெய்வீக உருவத்தின் தலையை அவன் பார்க்க நேர்ந்தால், அத்தெய்வத்தின் பாதங்களைப் பார்க்க தவறிவிடுகிறான்; பாதங்களைப் பார்த்தான் என்றால், கைகள் அவன் மனதிற்கு தெரிவதில்லை; ஒரு கையைப் பார்த்துக் கொண்டிருந்தால் வேறு சில பகுதிகள் தென்படுவதில்லை. இது பொதுவான ஒரு பிரச்சினை.

இப்படி இறைவனின் உருவத்தை தியானம் செய்ய முடியாமைக்கு என்ன பரிகாரம்? ஒரு படத்தை நீண்ட நேரம் ஒருவன் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு கண்களை மூடிக் கொண்டால், அப்படம் அவன் மனதில் தெளிவாகப் பதியும். இவ்வாறு மனதில் நன்கு பதிந்த உருவத்தை பிறகு அவனால் தியானம் செய்ய முடியும். போதுமான பயிற்சிக்குப் பிறகு ஒருவன் இதில் வெற்றியடைகிறான்.

Koviloor Digital Library

"கோவில்களின் உபயோகம் என்ன?" என்று சிலர் கேட்கலாம். அவை தேவையில்லை என்பது உண்மைதான். ஆனால் யாருக்கு? தான் எங்கே உட்கார்ந்திருந்தாலும் அங்கெல்லாம் ஒருவனால் இறைவனைப் பார்க்க முடியும் என்றால் அப்படிப்பட்டவனுக்கு கோவில்கள் தேவையில்லை. அதேசமயம், கோவிலுக்குச் சென்றும், இறைவனிடம் மனதை ஒருநிலைப்படுத்த இயலாத ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். கோவில்களே இல்லையென்றால் அவன் நிலை எப்படியிருக்கும்? ஆகையால், இப்படிப்பட்ட மனிதர்களுக்கு கோவில் அவசியமாகிறது.

சங்கரபகவத்பாதாள் இதனை உணர்ந்தார். அவர் தத்துவத்தை விவரித்த விதம் மிக அழகானது. "உண்மையில் இறைவனுக்கு உருவமில்லை. ஆனால் அவரால் எந்த உருவத்தையும் எடுத்துக் கொள்ள முடியும்" என்று உறுதியுடன் அறிவித்தார். சிலருக்கு இறைவன் நண்பனின் உருவத்திலும் வருகிறார். சொல்லப் போனால், கிருஷ்ணர் அர்ஜுனனிடம் வந்தது இறைவனாக இல்லை, ஆனால் நண்பனாகத்தான். வசுதேவன், தேவகி தம்பதியிடம் கிருஷ்ணர் பரம்பொருளாய் வரவில்லை, ஆனால் அவர்கள் புத்திரனாக வந்தார். கம்ஸனிடமோ ஓர் எதிரியின் பாத்திரத்தை ஏற்றுத் தோன்றினார். இறைவன் நம்மிடத்தில் எந்த உருவத்தில் வருவார் என்று நம்மால் கூற இயலாது.

வா ஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: || (10.)

எல்லாவற்றிலும் ஸாரபூதமாய் இருப்பது இறைவனே என்று நாம் பார்ப்பதே மிகச் சிறந்த மார்க்கமாகும். எங்கும் வ்யாபித்திருக்கிறார் என்றும் உருவத்தையும் கொண்டிருக்கிறார் என்றும் நாம் இறைவனை சிந்தனை செய்து, அவரை அநுபவ ரீதியாக உணர்வதையே நமது வாழ்வின் குறிக்கோளாக வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது, 'நாம் உண்மையில் இறைவனே; குணங்களற்ற, இரண்டற்ற பரம்பொருள்' என்று நேரிடையாக அறிந்து இந்த ஜன்மத்தையே கடைசிப் பிறவியாக்கிக் கொள்ள நாம் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் நாம் மனிதராகப் பிறவி எடுத்ததற்கு உண்மையிலேயே பயனுள்ளதாக இருக்கும்.

Koviloor Digital Library

ஆனால், மனிதப் பிறவியை அடைந்து, ஒரு மஹானின் சம்பந்தமும் கிடைத்து, பகுத்தறியும் திறனையும் பெற்ற பின்னரும் நாம் இவ்வுலக இன்பங்களிலேயும், அவைகளை அடைவதற்கான வழிகளிலுமேயே நம் மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தோமேயானால், கீழ்வரும் கூற்று நமக்கு நன்கு பொருந்திவிடும்.

இத: கோன்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்த்தே ப்ரமாத்யதி। (1.34)

(தன்னுடைய சொந்த நலனிலேயே அக்கறை கொண்டிராத ஒருவனைக் காட்டிலும் பெரிய முட்டாள் யாராவது இருக்க முடியுமா?)

சாஸ்திரம் நமக்குக் கற்றுக் கொடுப்பது நம்முடைய நலனிற்காகத்தானே தவிர நமக்குத் தெரியாத யாரோ ஒரு மூன்றாவது மனிதனின் நலனிற்காக அல்ல. "உன்னை உயர்த்திக்கொள்" என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் அதைச் செய்யவில்லையென்றால் நாம் முழு முட்டாள்களே.

பகவத்பாதாளின் காலத்தில் பல மதங்கள் இருந்தன. சைவர்கள், வைணவர்கள், சாக்தர்கள், பௌத்தர்கள் மற்றும் முழு நாஸ்திகர்களான சார்வாகர்கள் என்று பலர் இருந்தனர். யார் சொல்வது சரி, யார் சொல்வது தவறு என்று தெரியாமல் ஒரே முரண்பாடாய் இருந்தது. மனிதர்களின் கற்பனைக்கு அளவே இல்லாததால் அவர்களின் வெறும் கற்பனைகளிலிருந்து வெளிவரும் வாதங்களிலிருந்து ஸித்தாந்தம் (முடிபு) ஏற்படுவதில்லை. மிகுந்த சிரமத்துடன் சில நிபுணர்கள் ஒரு வாதத்தைக் கண்டு பிடித்தால் அதனை மற்ற நிபுணர்கள் சேர்ந்து பொய்யாக்கி வேறு வாதத்தை ஸ்தாபிக்கின்றனர் என்று பார்க்க முடிகிறது. பிறகு வரும் நிபுணர்கள் கொடுக்கும் வாதத்தை, அதற்குப் பின் வருபவர்கள் ஒன்றுமில்லாததாகச் செய்து விடுகின்றனர். ஆகையால், வெறும் ஊகத்திலிருந்து வரும் எந்த ஒரு வார்த்தையும் யாரும் ஸித்தாந்தம் என்று கருத முடியாது. ஏனென்றால், மனிதர்களின் புத்தி வெவ்வேறாக இருக்கிறது.

ஆனாலும், புராதன காலத்திலிருந்து, இந்தியாவில் இருக்கும் நமக்கு வேதங்களைப் பற்றித் தெரியும். வேதமானது, மனிதனால்

Koviloor Digital Library

கற்பிக்கப்பட்ட மதங்களுக்கு அப்பாற்பட்டதாகவும், முடிவான தீர்மானத்தைக் கூறும் அதிகாரம் பெற்றதாகவும் விளங்குகிறது. “பௌத்தர்கள் வேதத்தை ப்ரமாணமாக எடுத்துக்கொள்ள வில்லையே” என்று சிலர் இவ்விடத்தில் ஆட்சேபனையைக் கிளப்பலாம். சரியான அறிவைக் கூறுவது வேதம்தான் என்று பௌத்தர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஆரம்ப காலத்தில் இருந்த பௌத்தர்களின் மனப்போக்கு வேதத்தைச் சார்ந்தே இருந்தது. ஏனென்றால், அவர்கள் வேதத்தைக் கற்றிருந்தவர்கள் அல்லவா ? அவர்கள் தங்களுக்கு உடன்பட்ட பாகங்களை மட்டும் எடுத்துக்கொண்டு ஒப்புதலில்லாத பாகங்களை தள்ளிவிட்டனர். அதனால்தான் “அவைதிகர்கள்” அதாவது “வேதத்தை அனுஸரிக்காதவர்கள்” என்று அவர்களுக்குப் பெயர் வந்தது. மாறாக, அவர்கள் வேதத்தில் கூறப்பட்ட எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டிருந்தால், அவர்களுக்கும் “வைதிகர்கள்” அதாவது “வேதத்தை அனுஸரிப்பவர்கள்” என்றே பெயர் வந்திருக்கும்.

ஸத்யம் வத I (11.)

(உண்மையைப் பேசு.)

வேதத்தின் இந்த அறிவுரையை அவர்கள் ஏற்றுக் கொள்வர். இதற்குப் பிறகு வருகின்ற கட்டளையான,

தர்மம் சர I (12.)

(தர்மத்தைக் கடைப்பிடி.)

என்பதும் அவர்களுக்குப் பிடித்ததாகவே இருக்கிறது. வேதம் இதற்கு மேல் கூறுவதாவது :

ஸ்வாத்யாயப்ரவசனாப்யாம் ந ப்ரமதிதவ்யம் II (13.)

(கற்றுக்கொள்வதிலும், கற்பிப்பதிலும் கவனக் குறைவாய் இருந்துவிடாதே.)

இந்தக் கட்டளையை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். பிறகு வருவன :

Koviloor Digital Library

மாத்ருதேவோ பவ | (14.)

(உனது தாயை கடவுளாக வழிபடு.)

பித்ருதேவோ பவ | (14.)

(உனது தந்தையை கடவுளாக வழிபடு.)

ஆசார்யதேவோ பவ | (14.)

(உனது குருவை கடவுளாக வழிபடு.)

அதிதிதேவோ பவ | (14.)

(உனது விருந்தினரை கடவுளாக வழிபடு.)

தாய், தந்தை, குரு மற்றும் விருந்தினர் ஆகியோர் வழிபாட்டிற்கு உரியவர்கள் என்ற கருத்தை நம்பியதால் அவர்கள் மேற்சொன்ன வேதக் கூற்றுகளை கடைப்பிடித்தார்கள். ஆதிபௌத்தர்கள் வேதங்களைத் தெரிந்திருந்த குடும்பங்களிலிருந்து தானே வந்திருந்தனர்! ஆனால்,

அக்னீஷோமீயம் பசுமாலபேத (15.)

(அக்னிக்காகவும், சோமத்திற்காகவும் ஒரு மிருகத்தை ஒருவன் பலியிட வேண்டும்.)

என்ற வாக்கியத்தை வேதத்தில் காணும்பொழுது பௌத்தர்கள் அதனை நிராகரித்தனர். வேதம் கூறும் அறிவுரைகளில் சிலவற்றை மட்டும் ஏற்றுக் கொண்டு சிலவற்றைத் தள்ளிவிடும் பௌத்தர்களுக்கு கீழ்வரும் பழமொழி மிகவும் பொருந்தும்.

அர்தம் பாகாயார்தம் ப்ரஸவாய (16.)

(பாதி சமையலுக்கும் பாதி (குஞ்சு) பொரித்தலுக்கும்.)

ஒருவன் முட்டை ஒன்றை வாங்கினான். அதிலிருந்து குஞ்சு பொரித்து வெளியே வரும் வரை அதனைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். அதே சமயத்தில், முட்டையின் ருசியில் உள்ள ஆசையை அவனால்

Koviloor Digital Library

அடக்க முடியவில்லை. ஆகையால், "முட்டையின் ஒரு பாதியை நான் குஞ்சு பொரிக்க வைத்துவிட்டு, மறு பாதியை சாப்பிடலாம்" என்று அவன் நினைத்தான். தனது யோசனையை செயலாற்றினான். இதன் விளைவு குஞ்சு பொரிக்க இயலாதது மட்டுமின்றி அவனுக்குச் சாப்பிட பாதி முட்டைதான் கிடைத்தது.

எனவே, வேதமோ வேதத்தைப் போன்ற ஒரு நூலையோ ப்ரமாணம் அல்லது அறிவைப் பெற உதவும் சரியான சாதனம் என்று எடுத்துக்கொண்டால், ஒருவன் அதனை முழுமையாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

இங்கே முரண்பாடான கருத்துக்கள் வேதத்தின் உள்ளே இருப்பதால், அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது என்று பௌத்தனைப் போல் ஒருவன் ஆட்சேபனையைக் கூறலாம். மேலோட்டமாகக் காண்கையில் அவை முரண்பாடாகத் தோன்றினாலும், உண்மையில் அப்படியல்ல. தகுந்த விளக்கங்களை தர்க்க ரீதியாகக் கொடுத்து அம்முரண்பாடுகளை முழுமையாக சரி செய்துவிட முடியும். அத்தகைய தர்க்கத்தை நாட வேண்டும். வேதம்,

ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதானி (17.)

(எந்த உயிரையும் ஹிம்ஸை செய்யாதே.)

என்று கூறுகிறது. மேலும், அதே வேதம்தான்,

அக்னீஷோமீயம் பசுமாலபேத

(அக்னிக்காகவும், சோமத்திற்காகவும் ஒரு மிருகத்தை ஒருவன் பலியிட வேண்டும்.)

என்றும் கூறுகிறது. முரண்பாடு ஏதும் இங்கே இல்லை. ஏனென்றால், முதலில் கூறியது பொதுவான விதியாகும்; இரண்டாவது ஒரு விதிவிலக்காகும். வேதத்தின் கர்ம காண்டத்தில், "நீ இதை விரும்பினால், இத்தகைய கர்மாவைச் செய்" என்று கூறும் வழிமுறைகளை நாம் காண்கிறோம். இந்த இடத்தில் விருப்பமானது சரியா, தவறா என்ற கேள்வி ஆராயப்படுவதில்லை. விருப்பம் இல்லையென்றால், அந்த கர்மாவை செய்வது தேவையற்றதாகும்.

Koviloor Digital Library

இந்த மாதிரி நாம் பார்த்தால், வேதம் குறை கூற முடியாததாகவும் முரண்பாடுகளற்றதாகவுமே உள்ளது.

ஒருவனை க்ருஹஸ்தனாக இருக்க வேண்டுமென்று வேத நூல்கள் அறிவுறுத்துகிறதா அல்லது ஸந்யாஸியாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறதா என்று ஒருவன் கேட்கலாம். "உபதேச பஞ்சகம்" என்னும் நூலில் சங்கரபகவத்பாதர் இது சம்பந்தமாகக் கூறியது மிகவும் சிறப்பாக உள்ளது. அதில் பல உபதேசங்கள் உள்ளன.

வேதோ நித்யமதீயதாம் ததுதிதம் கர்ம ஸ்வனுஷ்டீயதாம்
தேனேசஸ்ய விதீயதாமபசிதி: காம்யே மதிஸ்த்யஜ்யதாம் ।
பாபௌக: பரிதூயதாம் பவஸுகே தோஷோऽனுஸந்தீயதா-
மாத்மேச்சா வ்யவஸீயதாம் ... (18.)

(தினமும் வேதத்தைப் படி. அதில் சொல்லப்பட்ட கர்மங்களை நன்கு கடைப்பிடி. கடமைகளைச் செய்வதின் மூலம் இறைவனை வழிபடு. ஆசையைத் தூண்டும் கர்மங்களைச் செய்யும் எண்ணத்தைக் கைவிடு. பாவக்கூட்டத்தை வேருடன் நீக்கு. உலக இன்பங்களில் உள்ள தோஷங்களை (குறைகளை) சிந்தனை செய். ஆத்மாவிடம் ஆசையை உண்டாக்கிக் கொள்.)

இதெல்லாம் கேட்பதற்கு மிக நன்றாக உள்ளது. திடீரென்று பகவத்பாதர்,

நிஜக்ருஹாத்தூர்ணம் விநிர்கம்யதாம் ॥ (18.)

(சீக்கிரமாக உனது வீட்டை விட்டு வெளியே போய்விடு.)

என்று கூறிவிடுகிறார். இங்கே, "ஓ ! இவ்வளவையும் அடைந்து, நான் வீட்டைத் துறக்க வேண்டுமா?" என்று ஒருவன் நினைக்கலாம். ஆமாம். இதையெல்லாம் செய்து முடித்த பிறகு, இந்த உலகத்தில் நான் பட்டது போதும் என்று நீ நினைத்தாயேயானால், வீட்டை விட்டு வெளியேறு. நீ அடைந்த உலக அனுபவங்கள் போதுமானதாக இல்லை என்று நீ உணர்ந்தால், உடனே சென்று மேற்சொன்ன காரியங்களை இந்த ஜன்மா முழுக்க மட்டுமின்றி, வரப்போகும் ஜன்மங்களிலும் செய்து கொண்டு வா. அதற்கு பிறகாவது, "போதுமப்பா இந்த உலக வாழ்க்கை!" என்று உனக்குத் தோன்றும். இதுதான் வேதத்தைத் தழுவி பகவத்பாதர் அளித்த

Koviloor Digital Library

அறிவுரையின் சிறப்பு அம்சமாகும். இது ஒருவனுடைய தகுதியை முற்றிலும் எடுத்துக் கொண்டு கூறப்பட்டதாகும்.

அடுத்ததாக வரும் கேள்வி, "ஒருவன் இறைவனை குணங்களோடு கூடிய ஸகுணமாகப் பார்க்க வேண்டுமா, அல்லது குணங்களற்ற நிர்குணமாகப் பார்க்க வேண்டுமா?" என்பதேயாகும். ஒரு சாதாரண மனிதனைப் பொருத்த வரையில் இதற்குப் பதில் கூறினால், "நீ இறைவனை ஸகுணமாகத்தான் பார்க்க வேண்டும்" என்றே கூற வேண்டி வரும். குணங்களோடு கூடிய இறைவன் விஷயத்தில், "உயர்ந்தவர் யார் சிவனா? விஷ்ணுவா ? சக்தியா ? அல்லது வேறு கடவுளா ?" என்று ஒருவன் ஆச்சரியப்படலாம். அப்படி சந்தேகம் கொண்ட மக்களுக்கு பகவத்பாதர் கூறும் அறிவுரை, "குணங்களும், ரூபமுமின்றி இருக்கும் ப்ரப்ரஹ்மமே உண்மையில் உயர்ந்ததாகும். இந்த உண்மைதான் சிவனாகவும், விஷ்ணுவாகவும், மற்ற தெய்வங்களாகவும் காணப்படுகிறது. நீ சிவனையாவது அல்லது விஷ்ணுவையாவது அல்லது சக்தியையாவது அல்லது அதே போன்ற வேறு ஏதாவது ஒரு தெய்வ உருவத்தை வழிபடலாம். உண்மையில் அவர்கள் எல்லோருமே ஒன்றாய் இருக்கும்போது அவர்களை வேறுபடுத்திப் பார்க்க எங்கே இடமிருக்கிறது ?" என்பதேயாகும்.

யேனாஸ்ய பிதரோ யாதா யேன யாதா: பிதாமஹா: । (19.)

(அவன் தனது தந்தை மற்றும் தாத்தா சென்ற பாதையில் செல்ல வேண்டும்.)

இந்தக் கூற்றுப்படி, ஒருவன் அவனது குடும்ப வழக்கத்திற்கேற்ப வழிபட வேண்டும்.

ருசீனாம் வைசித்ர்யாத்ருஜுகுடிலனானாபதஜுஷாம் ।
ந்ருணாமேகோ கம்யஸ்த்வமஸி பயஸாமர்ணவ இவ ॥ (20.)

(எப்படி நதிகளுக்கு கடல் இலக்காய் உள்ளதோ அதேபோல், தம் விருப்பங்கள் வெவ்வேறாய் உள்ளதால், நேராகவும் சுற்றாகவும் உள்ள பல்வேறு மார்க்கங்களில் செல்லும் மனிதர்களுக்கு நீதான் ஒரே இலட்சியமாய் இருக்கிறாய்.)

Koviloor Digital Library

ஒருவனுடைய விருப்பம்தான் அவன் எடுக்கும் தீர்மானத்திற்குக் காரணமாய் உள்ளது. எனினும், ஒருவனுக்கு உள்ள சுதந்திரம் பூரணமானதன்று. தனது கற்பனையில் தோன்றியவாறெல்லாம் ஒருவன் நடந்துகொள்ளக் கூடாது. சாஸ்திரம் அனுமதிக்காததை விட்டுவிட வேண்டும். சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களின் வழிபாடு சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளன. இவற்றுள் எது ஒருவனுக்குப் பிடித்திருக்கிறதோ அதை வைத்துக்கொள்ளலாம். சாஸ்திரம் அனுமதிக்காதது என்ன?

ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதானி

(எந்த உயிரையும் ஹிம்ஸை செய்யாதே.)

"நான் இந்த சட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்று ஒருவன் சொல்ல முடியாது. இதைக் கடைப்பிடிக்கத்தான் வேண்டும். பிறகு வருவன,

மாத்ருதேவோ பவ । பித்ருதேவோ பவ ।
ஆசார்யதேவோ பவ ।

(உனது தாயை கடவுளாக வழிபடு. உனது தந்தையை கடவுளாக வழிபடு. உனது குருவைக் கடவுளாக வழிபடு.)

இதையெல்லாம் ஒருவன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மேலும், சாஸ்திரம் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்று குறிப்பிட்டுச் சொல்கிற விஷயத்தில் மனிதர்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. "நான் செய்யப்பட வேண்டிய எல்லாவற்றையும் செய்யும் நிலையில் இல்லை" என்று ஒருவன் நினைக்கலாம். இதற்கு சாஸ்திரமே விடை அளித்துள்ளது.

ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் ॥ (1.36)

(இந்த தர்மத்தின் ஒரு சிறு பகுதியேகூட ஒருவனை பெரும் பயத்திலிருந்து காப்பாற்றும்.)

நம்பிக்கையை வைத்து, உனக்கு எவ்வளவு செய்வதற்கு சக்தியிருக்கிறதோ அவ்வளவு செய். பொதுவான விதி என்னவென்றால்

Koviloor Digital Library

ஒருவன் குளித்த பிறகுதான் ஸந்த்யாவந்தனமும், பூஜையும் செய்ய வேண்டும்.

உனக்குக் காய்ச்சல் இருக்கிறது என்றும் , குளித்தால் காய்ச்சல் அதிகமாகி ஆபத்தாகி விடும் என டாக்டர் சொல்கிறார் என்றும் வைத்துக்கொள்வோம். அப்பொழுதும் நீ குளித்துவிட்டுத்தான் ஸந்த்யாவந்தனம் செய்வாயா? கூடாது. விபூதியையோ, கோபி சந்தனத்தையோ அல்லது உன்னுடைய குல வழக்கப்படி வேறு என்ன சொல்லியிருக்கிறதோ அதை இட்டுக்கொண்டால் போதும். அதற்குப் பிறகு ஸந்த்யாவந்தனத்தைச் செய்யலாம்; குளிக்க வேண்டிய தேவையில்லை.

நிலைமை இன்னும் மோசமாக இருந்து விபூதியும், தண்ணீரும் கிடைக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம்.

அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்த்தாம் கதோSபி வா |
ய: ஸ்மரேத்புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தர: சுசி: || (21.)

(அசுத்தமாகவோ அல்லது சுத்தமாகவோ அல்லது வேறு எப்படி இருப்பினும், எவன் இறைவனை நினைக்கின்றானோ அவன் உள்ளும் புறமும் தூய்மையை அடைகிறான்.)

இந்தக் கூற்றுப்படி ஒருவன் இறைவனை நினைத்துக் கொண்டு, "ஓ, பிரபுவே! தண்ணீர்கூட எனக்குக் கிடைக்கவில்லை. பிறகு எப்படி நான் குளிப்பேன். மேலும், அப்படிச் செய்வதற்கு சக்திகூட தற்சமயம் என்னிடம் இல்லை. ஆனால் தூய்மையாக இருக்கும்போதுதான் எந்த ஒரு நல்ல காரியத்தையும் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தூய்மையடைய, எனக்கு, தூய்மையிலும் தூய்மையான நீதான் இருக்கிறாய். ஆகையால் உன்னை நினைத்துக்கொள்கிறேன்" என்று பிரார்த்திக்க வேண்டும். இப்படி உண்மையாக பிரார்த்தனை செய்த பிறகு ஒருவன் ஸந்த்யாவந்தனம் செய்வானேயானால், இறைவன் அதனை ஏற்றுக்கொள்வார்.

சாஸ்திரங்களில் சொல்லப்படும் ஸ்நான நியமத்தைக் குறித்து ஒரு பையன், விபரீதமாக இப்படி நினைத்தான்: "குளிர் காலத்தில் நான் குளிக்க வேண்டிய தேவையேயில்லை.

Koviloor Digital Library

அப்படியே ஸந்த்யாவந்தனம் செய்யலாம். இதற்குப் பதில், கோடைக் காலத்தில் நான் மூன்று ஸ்நானங்களைச் செய்து விட்டு ஸந்த்யாவந்தனம் செய்வேன்". இது வெறும் ஒருவனின் ஆசைகளினால் ஈர்க்கப்பட்டு எடுத்த முடிவுதானே தவிர, சாஸ்திரங்களைத் தழுவி எடுத்த முடிவு ஆகாது. சாஸ்திரங்கள் கூறும் விதிகளை கடைப்பிடிக்க வேண்டும் ; இவ்விதிகளிலிருந்து விலகுவது அசாதாரணமான சந்தர்ப்பங்களில் மட்டுமே அநுமதிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஒருவனுக்கு எவ்வளவு விஷயங்களைச் சொல்லலாம் என்பதை ஓர் ஆசிரியர் அவசியம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் மேற்சொன்ன பையனின் நிகழ்ச்சி எடுத்துரைக்கிறது. சில வருடங்களுக்கு முன், மத்திய பிரதேசத்தில் உள்ள பரமஹம்ஸி கங்கா ஆச்ரமத்தில், எனக்கு மிகவும் நெருங்கிய ஸ்ரீ ஸ்வரூபானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அவர்களால் ஒரு பெரிய சபை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்ட மக்கள் 10,000த்திலிருந்து 20,000க்குள் இருக்கும். ஒரு பேச்சாளர் பின்வரும் கதையைக் கூறினார்.

இறைவனிடம் மிகுந்த பக்தி கொண்ட சாது ஒருவர் இருந்தார். பகவானுக்கு முதலில் சமர்ப்பிக்காமல் அவர் எப்பொழுதும் சாப்பிட்டது கிடையாது. ஒரு நாள், அவர் நைவேத்தியத்திற்காக எடுத்து வைத்திருந்த உணவில் பாம்பின் விஷம் கலந்து விட்டது. இதனை அறியாமல், அவர் அவ்வுணவை இறைவனுக்குப் படைத்தார். அதற்குப் பிறகு, அவர் சாப்பிட்டுவிட்டு தூங்கப் போனார். காலையில், நல்ல ஆரோக்கியத்துடன் எழுந்தார். ஆனால், இவர் வழிபட்டுவந்த விக்ரஹம் தரையில் விழுந்திருப்பதைப் பார்த்தார். நடந்தது என்னவென்றால், பகவான் உணவை உட்கொண்டதும் அது பரிசுத்தமாகிவிட்டது. அதனால்தான், அந்தப் பக்தரை விஷம் தாக்கவில்லை. பகவானின் சிலையே இதன் விளைவாக பாதிக்கப்பட்டது.

இந்தக் கதையைக் கேட்டதும், நான் அந்தப் பேச்சாளரைப் பார்த்துச் சொன்னேன், "தயவு செய்து இந்த மாதிரி விஷயங்களைச் சொல்லாதீர். இச்சபையில் பல சிறுவர்கள் இருக்கிறார்கள். கெட்டுப்போன பாலையும் அவர்கள் பகவானுக்கு நைவேத்தியம்

Koviloor Digital Library

செய்ய நேரிடலாம். உங்கள் கதையால் கவரப்பட்டு, தனக்கு ஒன்றும் செய்யாது என எதிர்பார்த்து, பிறகு அப்பாலை தற்செயலாக அவர்கள் அருந்தவும் செய்யலாம். இப்படிப்பட்ட ஆபத்துக்களுக்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ளாதீர். நீங்கள் சொன்னவையெல்லாம் 'பக்த்யுத்ரேகா' அல்லது உயர்ந்த பக்திக்குப் பொருந்தும். அது இருந்தால், அசாதாரணமான செயல்களான, விஷம் கலந்த உணவை உண்பது, போன்றவைகளை மேற்கொள்ளலாம். ஆனால் சாதாரணமான நிலைமை வேறுபட்டிருக்கிறது. ஆகையால் கேட்பவருடைய தகுதியை மனதில் கொள்வது அவசியமாகும்".

அதிகாரிணமாசாஸ்தே பலஸித்திர்விசேஷத: । (22.)

(அடையும் பலன், குறிப்பாக ஒருவனுடைய தகுதியைப் பொருத்தே அமையும்.)

"கர்மா அல்லது ஆன்மீகச் செயல்கள், ஞானம் அல்லது அறிவோ, இதில் எதுவுமே நிஷேதிக்கப்படவில்லை (தள்ளப்பட வில்லை); கர்மாவும் தேவை, ஞானமும் தேவை. அதேபோல் பக்தியும் வேண்டும்" என்பதுதான் பகவத்பாதாளின் நிலைப்பாடு. ஒருவன் உயர்ந்த நிலையை அடைய கர்மா, பக்தி மற்றும் ஞானம் ஆகிய மூன்றும் உபாயங்களாக உள்ளன என்றும், இம்மூன்றைத் தவிர வேறு மார்க்கங்கள் இல்லை என்றும் பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளது. சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களை தியானம் செய்தல் பக்தி மார்க்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கர்மா, ஞானம் இரண்டும் தேவை என்று சொல்லப்படும்போது, அவைகளை இணைக்க வேண்டும் என்றா அதற்கு அர்த்தம்? இல்லையெனில், அவைகளை ஒரே சமயத்தில் பயிற்சிக்க வேண்டுமா? இது, முடியாதது. நீரையும், நெருப்பையும் ஒரே இடத்தில், ஒரே சமயத்தில் ஒன்றாக வைத்திருக்க முடியுமா? முடியாது. அதேபோல்தான் இங்கும்.

பகவத்பாதர் நமக்கு அறிவுறுத்துவது யாதெனில், "நீ கர்மாவை ஸ்ரத்தையாக செய்துகொண்டு வர வேண்டும். அவ்வாறு அநுஷ்டிப்பதனால், உன் மனம் நாளடைவில் தூய்மையடையும். பிறகு இறைவனைப் பற்றி சிந்திப்பதைப் பழகு. இப்படி சிந்தித்துக்கொண்டேயிருந்தால், படிப்படியாக உயர்ந்து,

Koviloor Digital Library

பரப்ரஹ்மத்தைத் தவிர, இந்தப் பிரபஞ்சம் முழுவதிற்கும் இருப்பு இல்லை என்று நீ பார்க்கும் நிலையை அடைவாய். பிறகு நீ ஞானியாக அல்லது உண்மையை அறிந்தவனாக ஆகிவிடுவாய்" என்பதேயாகும்.

த்வயி மயி சான்யத்ரைகோ விஷ்ணு:
வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: । (23.)

(உன்னிலும், என்னிலும், மற்ற இடங்களிலும் இருப்பது விஷ்ணுதான். பொறுமையின்மையால், நீ தேவையில்லாமல் என்னிடம் கோபப்படுகிறாய்.)

கோபத்தைப் பொருத்த வரையில், ஓர் இளைஞனுக்கும், ஒரு முதியவருக்கும் என்ன வேறுபாடு உள்ளது என்று பார்க்க என்னை நான் பரிசோதித்திருக்கிறேன். நான் சிறுவனாக இருக்கையில், என்னை யாராவது திட்டினால், நான் கோபமடைந்து, "என்னை எதற்காகத் திட்டுகிறாய்?" என்று கேட்பேன். இப்பொழுது எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், "அவருடைய காரியம் ஏதோ ஒன்று என்னால் செய்யப்படவில்லை. எதிர்பார்ப்புகளுடன் அவர் என்னிடம் வந்திருக்கிறார். இப்பொழுது அவர் ஏமாற்றத்தில் இருக்கிறார். அவரால் என்னை அடிக்க முடியாது. ஆகையால், அவருடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்த என்னைக் குறை கூறுவதைத் தவிர வேறு என்ன அவர் செய்வார்? அவருடைய வேலையை நான் செய்திருந்தால், என்னைப் புகழ்ந்தவாறே இவ்விடத்தை விட்டுச் சென்றிருப்பார். அவருக்கு வேண்டியதை செய்யும் ஆற்றல் தற்சமயம் என்னிடத்தில் இல்லை. இதை அவரால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆகையால், அவர் என்னைத் திட்டுகிறார். திட்டிக் கொள்ளட்டும்" என்றே தோன்றுகிறது.

மற்றவர்கள் தன்னைக் குறைகூறும் அனுபவங்களை ஒருவன் நிறைய அடைந்துவிட்டால், "இந்த உலகத்தில் இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் ஒரு மதிப்பும் இல்லை" என்ற ஞானோதயத்தை அவன் கொஞ்சம் கொஞ்சமாக அடைகிறான். நம்மை ஆத்திரமூட்டும் போதுகூட நாம் சலனமின்றி அமைதியுடன் இருந்தால், நாம் உயர்ந்த மனிதர்களாகி விடுகிறோம். இந்த மனப்பாங்கு எப்போது உதயமாகும் ? சாதாரணமாக, நாம் வயதானவர்களாகும்

Koviloor Digital Library

போது. ஒரு சிறு பையனின் விஷயத்தில், கீழ்வரும் உரையாடல் நடக்கக்கூடியதே.

பையன்: அவன் என்னைத் திட்டியதால் நான் பதிலுக்கு அவனைக் கத்தினேன்.

முதியவர்: நீ அவனைத் திட்டியதால், அதிலிருந்து உனக்கு என்ன வந்தது ?

பையன்: நான் பழி தீர்த்துக் கொண்டேன்.

முதியவர்: அவ்வளவுதானா? நீ என்ன சாதித்துவிட்டாய்? ஒன்றுமில்லை.

பையன்: ....

வருடங்கள் செல்லச் செல்ல, எப்படி மக்கள் முதிர்ச்சியின்மை மற்றும் எளிதில் கோபங்கொள்ளும் தன்மை ஆகிய நிலைகளிலிருந்து முதிர்ச்சி மற்றும் அமைதி நிலைகளுக்கு முன்னேறுகிறார்களோ, அப்படியே ஒருவன் படிப்படியாக செயல்களிலிருந்து துறவை நோக்கி முன்னேறுகிறான். தனது ஆன்மீகக் கடமைகளை ஒழுங்காக பின்பற்றுவதிலிருந்து ஒருவன் ஆரம்பிக்க வேண்டும்.

குர்வன்னேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம் ஸமா: । (24.)

(ஆன்மீக கர்மாக்களைச் செய்து கொண்டுதான், ஒருவன் இங்கே நூறு வருடங்கள் வாழ ஆசைப்பட வேண்டும்.)

கர்மாவை அநுஷ்டித்த பிறகு, ஒருவன் சிறிது சிறிதாக கீழ்க்காணும் முடிவிற்கு வருகிறான் :

ஸம்ஸாரமேவ நிஸ்ஸாரம் த்ருஷ்ட்வா ஸாரதித்ருக்ஷயா । (25.)

(உலகம் உண்மையில் அற்பத்தனமானது என்று பார்த்துவிட்டு, ஸாராம்சத்தை (மிகவும் உள்ளான உண்மைப் பொருளை) அடைவதற்கு ஆசைப்பட்டு. . .)

இந்த உலகத்தில் எதை எடுத்துக் கொண்டாலும், அதில் பெரிதாக ஒன்றும் இல்லை. சூரியன் உதித்தான். நாம் எழுந்தோம். பிறகு குளித்தோம். அதன்பின், சிற்றுண்டியை சாப்பிட்டுவிட்டு

Koviloor Digital Library

அலுவலகத்திற்குப் புறப்பட்டோம். அங்கே, வேலையைச் செய்து விட்டு, வீட்டிற்கு வந்து, இரவு உணவை உண்டு தூங்கச் சென்றோம். அடுத்த நாள், இதே கிரமம் மீண்டும் செய்யப்படுகிறது. வேறொன்றுமில்லை.

மோஹான்ன லஜ்ஜாமஹே || (26.)

பர்த்ருஹரி என்ற கவி, "நாம் ஒரே செயல்களையே மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருக்கிறோம். இவ்வாறு இருந்தாலும், நம்முடைய மோஹத்தின் காரணமாக, நம்மைப் பார்த்து நாம் வெட்கப்படுவது கூட கிடையாது" என்று கூறியுள்ளார். ஒருவன் அமர்ந்து, ஆழ்ந்து சிந்தித்து, 'உலகத்தின் நடவடிக்கை இப்படித் தான் இருக்கும்' என்று அறிய வேண்டும். ஏதாவது செய்ய வேண்டியிருந்தால், அது செயலாற்றப்படட்டும்; இல்லையெனில் அது செய்யப்படாமலேயே இருக்கட்டும். இப்படிப்பட்ட ஞானம் எப்பொழுது உதிக்கும் ? உலகத்தின் வழிமுறைகளை நீண்ட காலம் ஆராய்ந்த பிறகுதான். இங்கேயிருந்து ஒருவன் ஸ்வர்கத்திற்கே சென்றாலும்,

க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி || (27.)

(புண்ணியம் கரைந்ததும், அவர்கள் மண்ணுலகத்திற்கே திரும்புகிறார்கள்.)

மீண்டும் இங்கு வந்து பிறக்கிறான். வந்த பிறகு, ஸ்வர்கத்திற்குச் சென்றவன் மேலும் கர்மாவில் ஈடுபடுகிறான். மீண்டும், அவன் ஸ்வர்கத்திற்குச் சென்று பிறகு திரும்புகிறான். ஆகவே, இந்த உலகத்திலாகட்டும் அல்லது ஸ்வர்கத்திற்குப் போய் திரும்புவதாகட்டும், இதனால் ஒரு பிரயோஜனமும் கிடையாது. "போதும்" என்று தோன்றவில்லையா?

நதியானது ஓடிக்கொண்டேயிருக்கிறது. எது வரைக்கும்? கடலை அது அடையும் வரை. பிறகு அது கடலாகவே ஆகிவிடுகிறது. கடலின் நீர்தான் ஆவியாகின்றது. பிறகு மேகமாகி, மழையாக பூமியை நோக்கிப் பொழிகிறது. இந்த மழை நீர் சிற்றாறாகி, பிறகு நதியாய் மீண்டும் கடலைச் சென்றடைகிறது. இதனை ஆராய்ந்து அறியாதவன், "கடலும், நதியின் மூலமும் எங்கோ

Koviloor Digital Library

தொலைவில் தனித்தனியாய் இருந்தாலும், சிலர் நதியும் கடலும் ஒன்று என்று கூறுகிறார்கள். அவர்கள் முட்டாள்கள்" என்று சொல்வான். ஆனால், ஆராய்ந்தறிந்தவன், "கடலின்றி நதி உற்பத்தியாகியிருக்கவே முடியாது. நதியின் மூலம் கடலேதான். மேலும், அந்தக் கடலையே அது திரும்பி வந்தடைகிறது. பார்க்கப்போனால், அவை இரண்டும் அடிப்படையில் ஒன்றே" என்று சொல்லுவான்.

ஒரு நதியின் நீர் எப்படி ஓடிக்கொண்டிருக்கிறதோ அப்படி ஒரு ஜன்மாவிலிருந்து மற்றொரு ஜன்மாவிற்குத் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் ஒரு ஜீவனுக்கு, எப்பொழுது இந்த ஸம்ஸார சுழற்சியிலிருந்து விடுதலை கிடைக்கும் ? பகவான் கீதையில் ,

மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜந்ம ந வித்யதே || (28.)

(ஆனால் என்னை அடைந்த பிறகு, மறு ஜன்மம் என்பது இல்லை.)

என்று கூறியுள்ளார். உலகத்தில் காணப்படும் ஜீவர்கள் அல்லது தனித்தனி ஆத்மாக்கள் எண்ணற்றவை. யார் அவர்கள்?

மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன: | (29.)

(வாஸ்தவத்தில் என்னுடைய ஓர் அம்சமான அது, உலகத்தில் நிலையான ஜீவாத்மாவாய் விளங்குகிறது.)

ஒரு பெரிய நெருப்பிலிருந்து ஒரு தீப்பொறி தோன்றுகிறது. இந்தப் பொறி அந்த நெருப்பிலிருந்து வேறுபட்டதா ? இல்லை, அவை அடிப்படையில் ஒன்றே. அதனுடைய மூலத்திலிருந்து விலகியதும், பயங்கர தீயின் ஒரு துணுக்கு பொறியாக உண்டாகிறது. அதனுடைய மூலத்தோடு அது மறுபடி சேர்ந்ததும், அப்பெரிய நெருப்பிலிருந்து வித்தியாசம் காணமுடியாதவாறு அது ஆகிவிடுகிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், "அதேபோல், பெரிய நெருப்பாய் இருக்கும் என்னிலிருந்து வெளிப்பட்ட ஒரு பொறியாய் உள்ள நீ , ஜன்மம், மூப்பு மற்றும் மரணம் ஆகிய இந்தச் சக்கரத்திலிருந்து விடுபட விரும்பினால் என்னுடன் ஒன்று சேர்" என்று கூறுகிறார். இறைவனோடு எப்படி நாம் ஒன்று சேர்வது ?

Koviloor Digital Library

யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரேSஸ்தம்
கச்சந்தி நாமரூபே விஹாய । (30.)

(எப்படி ஓடும் நதிகள், கடலைச் சென்றடைந்ததும் தம்முடைய பெயர்களையும், உருவங்களையும் துறந்து பிரித்துப் பார்க்க முடியாதவாறு ஆகி விடுகின்றனவோ . . .)

ஒரு நதிக்கு பெயரும் வடிவமும் அது கடலைச் சென்றடையும் வரை உண்டு; ஆனால் அதற்குப் பிறகு இல்லை. கடலுடன் அது இரண்டறக் கலந்ததும்,

ஸமுத்ர இத்யேவம் ப்ரோச்யதே (31.)

(அது வெறும் "ஸமுத்ரம்" என்றே அழைக்கப்படுகிறது.)

ஓடும் நதியைப் போல், ஒரு ஜன்மத்திலிருந்து மற்றொரு ஜன்மம் என்று இந்த ஸம்ஸார சக்கரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் நமக்கு, பரம்பொருளாம் கடலில் இரண்டறக் கலப்பதே இலட்சியமாகும். நம்முடைய ஐக்கியத்திற்கும், நதியும், தீப்பொறியும் அதனதன் மூலங்களில் சென்று ஐக்கியமாவதற்கும் என்ன வேறுபாடு என்றால், நாம் உண்மையில் நமது மூலமான பரப்ரஹ்மத்தினின்று பிரிக்கப்படவே இல்லை. நம்முடைய பிரிவு ஒரு தோற்றமே. நாம் பரம்பொருளாக மட்டுமே தொடர்ந்து இருந்து கொண்டிருந்தாலும், நமது உண்மை ஸ்வரூபத்தில் நமக்கு ஏற்பட்டிருக்கும் அக்ஞானத்தின் காரணமாக, நாம் கஷ்டப்படுகிறோம்.

மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜந்ம ந வித்யதே ॥ (28.)

(ஆனால் என்னை அடைந்த பிறகு, மறுஜன்மம் என்பது இல்லை.)

பரம்பொருளுடன் ஐக்கியமாவதின் லக்ஷணமான நமது உண்மை ஸ்வரூபத்தை அறிந்துகொள்வதே, நாம் அடைய வேண்டிய இலட்சியமாகும். இதற்காக, கர்மா, பக்தி மற்றும் ஞானம் என்னும் பாதைகள் உள்ளன. கர்மா பக்திக்கும், மேலும் பக்தி ஞானத்திற்கும் கொண்டு செல்கிறது. ஞானத்திற்குப் பிறகு, அதாவது உண்மையை உறுதியாக அறிந்துகொள்ளும் நிலையை

Koviloor Digital Library

அடைந்ததும், ஒருவன் செய்ய வேண்டியது என்ன உள்ளது? ஒன்றுமில்லை. அவன் தேஹத்துடன் சம்பந்தம் வைத்துக் கொள்வதில்லை; ஆனந்தத்தில் ஒன்றிவிடுகிறான்.

என்னுடைய சிஷ்யன் ஒருவன் இருக்கிறான். அவனது முற்பிறவியில், அவன் அடைந்த விசேஷமான புண்ணியத்தால், யோகத்தின் உயர்ந்த நிலையான சமாதியில் அவன் அமர்ந்து, மூன்று நாட்கள் கடந்தும்கூட எழுந்திருப்பதில்லை. "(அந்த நாட்களில்) ஸந்த்யாவந்தனம் செய்யப்படாமல் விட்டுப்போயிற்றே?" என்று ஒருவன் கேட்கலாம். ஸந்த்யா வந்தனத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததான ஒன்றை அவன் செய்து கொண்டிருக்கிறான்.

லீன: பரே ப்ரஹ்மணி (32.)

(அவன் பரப்ரஹ்மத்தில் ஒன்றிவிட்டான்.)

நான்: நீ மூன்று நாட்கள் சமாதியில் நிலைத்திருந்த போது எப்படியிருந்தது? பகல், இரவு பற்றிய உணர்வு உனக்கு இருந்ததா?

சிஷ்யன்: இல்லை, வெளி விஷயங்கள் எதையும் நான் அறிந்திருக்கவில்லை. நான் அந்த நிலையிலேயே இருந்துவிட்டேன்.

நான்: மூன்று நாட்கள் கடந்தன என்பதை எப்படி நீ அறிந்து கொண்டாய்?

சிஷ்யன்: நான் ஒரு கைக்கடிகாரத்தை என்னிடம் வைத்துக் கொண்டிருந்தேன். அதிலிருந்து, நான் எழுந்ததும், மூன்று நாட்கள் சென்றுவிட்டிருந்தன என்று தெரிந்து கொண்டேன்.

உயர்ந்த நிலையை அவன் அடைந்திருக்கும்போது ஸந்த்யாவந்தனம் செய்வதோ அல்லது சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதோ அவனுக்கு அவசியமா ? இல்லை.

அதே சமயத்தில், டிபன் சாப்பிடுவதிலும், காபி குடிப்பதிலும், வெளியே சென்று தெருக்களிலெல்லாம் சுற்றுவதிலும்

Koviloor Digital Library

ஆசையுள்ள ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். இதையெல்லாம் செய்யும் அவன் இறைவனை ஆராதிப்பதை மட்டும் செய்ய மாட்டான். "நீ ஒரு வடிகட்டிய நாஸ்திகன்" என்று அவனிடம் சொல்வதைத்தவிர வேறென்ன சொல்ல முடியும். அதே சமயத்தில், என்னுடைய இந்த சிஷ்யன் விஷயத்தில், அவன்தான் ஆஸ்திகத்தின் சிகரம் என்று சொல்லப்பட வேண்டும். ஏன்? ஏனெனில், சமாதியில் அவன் ஒன்றும் செய்யவில்லை. செயல்களில் அவன் ஈடுபட்டிருந்தானேயானால், ஸந்த்யாவந்தனத்தையும் செய்யும்படி சுட்டிக்காட்டியிருக்கலாம். ஆனால் எந்த ஒரு காரியத்தையும் அவன் செய்யவில்லை; உணவு கூட அவனுக்கு தேவைப்படவில்லை. இப்படிப்பட்ட மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

நான் என்னுடைய சிஷ்யனிடத்தில் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேனோ அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவனுடைய சாதனைக்குக் காரணம் அவன் முற்பிறவியில் சம்பாதித்து வைத்திருந்த விசேஷமான புண்ணியமாகும். அவன் என்னிடம், "நான் காட்டிற்குச் சென்று தவத்தில் உட்கார விரும்புகிறேன்" என்று கூறினான்.

நான் : எத்தனை நாளைக்கு?

சிஷ்யன்: ஒரு மாதம்.

நான்: நீ என்ன சாப்பிடுவாய் ?

சிஷ்யன்: நான் என்னிடம் சிறிது அவல் வைத்துக் கொண்டிருப்பேன்.

நான்: புலி வந்ததென்றால் நீ என்ன செய்வாய் ?

சிஷ்யன்: அந்தப் புலிக்கு நான் அங்கே உணவாக இருக்கிறேன் இல்லையா? என்னைச் சாப்பிட வேண்டும் என்று அது விரும்பினால், சாப்பிட்டுக் கொள்ளட்டும்.

அவனுடைய மன உறுதி அந்த அளவிற்கு இருக்கிறது. ஒரு நாள், அவன் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, நிஜமாகவே ஒரு புலி அங்கே வந்தது. அவன் அதனைப் பார்த்து, "இறைவன் இந்தப் புலியின் வடிவத்தில் என்னிடம் வந்திருக்கிறார். அவர்

Koviloor Digital Library

தன்னை இப்படிக் காட்டுகிறார் " என்று உணர்ந்தான். அவன் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் தன்னுடைய கைகளையோ அல்லது கால்களையோ அல்லது தலையையோ அசைக்கிறானா என்று புலி அவனை உற்றுக் கவனித்தது. அவன் அசையவே இல்லை. புலி என்ன நினைத்துக் கொண்டது? ஒரு வேளை, இந்த மனிதன் நிச்சயமாக ஏதோ கல்லாகத்தான் இருக்க வேண்டும் என்று புலி முடிவு செய்திருக்கலாம். அது விலகிச் சென்றுவிட்டது. அப்படிப்பட்ட தகுதியை நாம் அடைந்தால், இறைவனை நாம் ஆராதிக்க வேண்டிய அவசியம் இருக்குமா ? இல்லை, ஏனென்றால் நாம் இருக்கும் இடத்திலேயே இறைவனை அனுபவித்துக் கொண்டிருப்போம். உண்மையில்,

அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணः ஸ்த்திதः ||

(இந்த உலகத்தில் காணப்படும் மற்றும் கேட்கப்படும் எல்லாவற்றின் உள்ளும் புறமும் பரவியுள்ளார் பகவான் நாராயணன்.)

இறைவனை உள்ளே பார்க்க முடியாதவனுக்கு, வெளியில் தான், கோவிலில் இறைவன் உள்ளார். அப்படிப்பட்டவனை நோக்கி, "கோவிலிலாவது தவறான செயல்களை விலக்கு" என்று புத்திமதி கூறலாம்.

அடுத்தவர்களை கெடுக்கும் நோக்கத்துடன், வழிபடும் ஓரிடத்தில் மந்திரவாதி ஒருவன் சூனியம் வைப்பதில் ஈடுபட்டிருந்தான். "ஏன் இங்கே இப்படிப்பட்ட துஷ்ட செயல்களைச் செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டதற்கு அவன், "இறைவன் இங்கே இருந்தாலும்கூட, தகாத செயல்களைச் செய்ய முடியும். இறைவன் இல்லை என்று நான் தீர்மானித்து விட்டேன். ஆகையால், நான், எங்கே, என்ன செய்கிறேன் என்பது பொருட்டாகாது" என பதிலளித்தான். இப்படிப்பட்ட குதர்க்கவாதிக்கு என்ன பரிகாரம்? தன்னடக்கம் அவனிடம் இல்லாததால், அவனுடைய இந்திரியங்களால் அவன் அலைக்கழிக்கப்படுகிறான். அவன் தன்னைத்தானே நியாயப் படுத்திக்கொள்வது

பரோபதேசே பாண்டித்யம் (33.)

Koviloor Digital Library

(பிறருக்கு உபதேசிப்பதிலேதான் அறிவாற்றல்.)

என்பது போலத்தான்.

அத்தகைய அறிவாற்றல் பிரயோஜனமற்றது. ஒருவனுக்கு வாழ்க்கையில் சொந்த அனுபவம் இருக்க வேண்டும். எனவே, மனு,

அபிவாதனசீலஸ்ய நித்யம் வ்ருத்தோபஸேவின: |
சத்வாரி தஸ்ய வர்தந்தே ஆயுர்வித்யா யசோ பலம் || (34.)

(பெரியோர்களை வணங்கி எப்பொழுதும் அவர்களுக்கு சேவைப் புரிவதை பழக்கத்தில் கொண்டுள்ளவனுக்கு நான்கு விஷயங்கள் – ஆயுள், அறிவு, புகழ், மற்றும் வலிமை அதிகமாகின்றன.)

என்று கூறியுள்ளார்.

இக்காலத்தில் ஒரு பெரியவரைப் பார்த்ததும், இளைஞர்கள், “ஏய் ! கிழவா ! விலகி நில்” என்று கூறுகிறார்கள். “தயவுசெய்து நான் செல்ல வழி விடுங்கள்” என்று பணிவுடன் கேட்கும் விநயம் அவர்களிடத்தில் இல்லை. 90 வயதை அடைந்ததும், ஒருவர் சமுதாயத்தில் எந்த நிலையில் இருந்தாலும், அவர் பூஜிக்கத்தக்கவராக விளங்குகிறார் என்று மனு கூறுகிறார். ஏன்? ஏனெனில், அவருடைய உயர்ந்த அனுபவங்களினால், ஓர் இளைஞன் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய உள்ளது. உதாரணத்திற்கு அவருடைய நீண்ட ஆயுட்காலத்தில் அவர் பல்வேறு உணவுப் பொருட்களைச் சாப்பிட்டுள்ளதால் ஏதேனும் ஒன்றை சாப்பிட்டால் அதற்கு என்ன விளைவு நேரும் என்று அவரால் சொல்ல முடியும். அவரது வயதின் காரணத்தாலேயே அவர் பூஜிக்கத்தக்கவராகிறார்.

நாம் எல்லோரிடமும் சமநோக்குடன் நடந்துகொண்டாலும் கூட, நமக்கு எது உகந்ததோ அதைத்தான் நாம் நம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். யாருடைய நடத்தையை நாம் பின்பற்ற வேண்டும் ?

யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்சின: |
யுக்தா ஆயுக்தா: | அலூக்ஷா தர்மகாமா: ஸ்யு: | (35.)

Koviloor Digital Library

(யோசித்து நன்கு செயல் புரிபவர்களாய், கடமைகளிலும் வழக்கங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாய், மற்றவர்களால் வழிகாட்டப்படாதவர்களாய், கொடூரமற்றவர்களாய், தர்மத்தில் விருப்பம் கொண்டவர்களாய் உள்ள அந்த பிராஹ்மணர்கள் அங்கே இருக்கக் கூடும் ...)

தர்மத்தில் விருப்பம் கொண்டவர்களாய், அடுத்தவரின் மனதில் எந்த வருத்தத்தையும் உண்டாக்க விரும்பாத மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நடத்தையே நம்முடைய ப்ரமாணமாய் இருக்க வேண்டும். அவர்களைப் பின்பற்றுவதன் மூலம், நம்முடைய புனிதமான கலாச்சாரத்தை நாம் கடைப்பிடிப்பவர்களாவோம்; இலட்சியத்தை நோக்கியும் சென்றடைவோம்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

3. சங்கரரின் சுலோகங்களில் உயர்ந்த தத்துவம்

விசுத்தஞானதேஹாய த்ரிவேதீதிவ்யசக்ஷுஷே
ச்ரேய: ப்ராப்திநிமித்தாய நமஸ்ஸோமார்த்ததாரிணே |
நமாமி யாமினீநாதலேகாலங்க்ருதகுந்தலாம்
பவானீம் பவஸந்தாபநிர்வாபணஸுதாநதீம் || (2.1)

உலகிலுள்ள உயிர்களில் மனிதர்களுடன் பிராணிகளும், மரங்களும் அடங்கும். இவற்றில் மனிதர்களுக்கும் மற்றவைகளுக்கும் என்ன வித்தியாஸம்? இவையிரண்டும் சுகதுக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. சுகதுக்கங்கள் எக்காரணத்தினால் வந்தன? காரணமில்லாமல் ஒன்றும் ஏற்படாது. சாஸ்திரத்தின்படி நமக்கு இப்போது வந்துள்ள பிறவி முதல் பிறவி இல்லை. அதேசமயம் நமது பிறவிக்கு ஆதியும் (தொடக்கமும்) கிடையாது. கடவுளுடைய ஸாக்ஷாத்காரம் ஆகும் வரை (பரம்பொருளை அடையும் வரை) இந்தப் பிறப்பு எடுப்பதிலிருந்து முடிவே கிடையாது. நாம் முடிவில்லாமல் பிராணியாகவோ, மனிதனாகவோ பிறவி எடுத்துக்கொண்டேயிருப்போம். இப்பொழுது கிடைத்துள்ள மனிதப் பிறவியை எவன் நல்ல விதத்தில் உபயோகப்படுத்துவானோ அவன்தான் 'புத்திமான்' என்று சொல்லப்படுவதற்குத் தகுதி வாய்ந்தவன்.

கடவுளை நாம் அடைந்துவிட்டால் அதாவது அவனிடத்தில் நாம் ஐக்கியமடைந்துவிட்டால் அதற்குப் பின் நமக்கு மீண்டும் பிறவி என்பது கிடையாது. இறைவனின் வடிவம் ஸச்சிதானந்த வடிவமாகும். இதற்கு விளக்கமென்னவென்றால் அவன் எப்போதும் இருந்து கொண்டிருப்பவன். ஆனந்த வடிவாயும் ஞான வடிவாயும் திகழ்பவன். நாம் அவனுடைய வடிவத்தை அடைந்துவிட்டால் அப்போது நமக்கு ஒருவிதமான துன்பமும் இருக்காது.

இப்போது நமக்கு நம்முடைய நல்ல செயல்களின் பலனாக பெறுதற்கரிய மானிடப் பிறவி கிடைத்துள்ளது. அதை அடைந்ததால் நாம் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். இதற்குக் காரணமென்னவென்றால் நமக்கு இந்த மனிதப் பிறவி முடிந்து வேறு ஏதாவது பிறவி வந்துவிட்டதென்றால் நம்மால் எதுவும் செய்ய

Koviloor Digital Library

முடியாது. ஆதலால் நாம் மிக்க கவனத்துடன் காரியங்களைச் செய்து வர வேண்டும். சிலர், 'மனிதப் பிறவியில் என்ன சிறப்பு? மனிதனைப் போல்தான் பிராணிகளும் உள்ளன' எனக் கூறுவதுண்டு. பிராணிகளும் சாப்பிடுகின்றன; தூங்குகின்றன; சுற்றுகின்றன. இவற்றையெல்லாம் நாமும் செய்கிறோம். ஏதாவது ஒரு நாள் அவை இறந்துவிடுவது போல் நாமும் இறந்துவிடுவோம். ஆனால், பிராணிகளுக்குத் தாம் எங்கு போய்ச் சேர்வோம் என்பதெல்லாம் தெரியாது. ஆனால் மனிதர்களாகிய நாமோ, சாஸ்திரத்தைக் கவனித்து இவைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

நாம் நல்ல கர்மாவைச் செய்தால் நல்ல பிறவியைப் பெறலாம். கெட்ட கர்மாவைச் செய்தால் துக்கத்தை அனுபவிப்பதற்குரிய பிறவியைப் பெறுவோம். ஆகையால் இப்போது நமக்கு மனிதப் பிறவி கிடைத்திருப்பதால், நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது அவசியம்.

நம்முடைய உண்மையான ஸ்வரூபம் ஸம்ஸாரத்திற்கு (பிறப்பு, இறப்பு) அப்பாற்பட்டது. அதுவேதான் பிரமையினால் (தோற்றத்தினால்) இந்தப் பிறவித் துன்பத்தில் மாட்டிக்கொண்டு உழன்று கொண்டிருக்கிறது. உலகத்தில் ஜனங்கள் பலவிதமான பொருட்களை விரும்புகின்றனர். அவற்றை அடைவதற்காகக் கடவுளைப் பிரார்த்தனை செய்கின்றனர். 'எனக்குக் குழந்தையில்லை, செல்வமில்லை, பதவியில்லை. இவையெல்லாம் எனக்கு நீ தர வேண்டும்' என்பது போன்ற பலவிதமான எண்ணங்களை வைத்துக் கொண்டு கடவுளிடம் செல்கின்றனர். ஆனால் இவையெல்லாம் அநித்யமானவை. சிறிது காலம் சென்றவுடன் அழிந்துவிடுபவை.

ஆனால் நாமோ (ஆத்மா) எப்பொழுதும் இருந்து கொண்டேயிருப்போம். நாம் என்றைக்கும் இறக்கப் போவதில்லை; புதிதாகப் பிறக்கப்போவதுமில்லை. ஆனால் நாம் பிறப்பதைப் போலவும் இறப்பதைப் போலவும் ஒரு தோற்றம் நடைமுறையில் இருக்கிறது. அவ்வளவுதான். ஆகவே நாம் பகவானிடம் எப்படிப் பிரார்த்தனை செய்வது? ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக எவ்வாறு இறைவனின் கிருபையைப் பெற முடியும்? (எத்தகைய இறைவனை பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதைப் பற்றி முதலில் பார்ப்போம்.)

Koviloor Digital Library

சிலர் விஷ்ணுவிடம் பிரியம் கொண்டு அவரை வழிபடுவார்கள். சிலர் சிவனையும், சிலர் இராமரையும் வழிபடுவார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தான் வணங்கும் தெய்வமே சக்தி வாய்ந்தது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற தெய்வங்களிடம் சக்தி இல்லை என்று நினைப்பார்கள். இது மிகவும் தவறான விஷயமாகும். இந்த மாதிரி வேறுபாடுகளைப் பார்க்கக் கூடாது. இது குறித்து சங்கரர்,

த்வயிமயி சான்யத்ரைகோ விஷ்ணு:
வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: ।
ஸர்வஸ்மின்னபி பச்யாத்மானம்
ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதக்ஞானம் ॥ (1.)

(உன்னிடத்திலும், என்னிடத்திலும், மற்ற இடத்திலும் ஒரே விஷ்ணுவானவர் (எங்கும் நிறைந்தவராக இருக்கிறார்); (அப்படியிருக்க) பொறுமையற்றவனாய், என்னிடத்தில் வீணாகக் கோபம் செய்கிறாயே, ஏன்? எல்லாப் பொருட்களிலும் தன் ஸ்வரூபத்தையே பார் ; எவ்விடத்திலேயும் பேதத்தைத் தோற்றுவிக்கிற அக்ஞானத்தை விட்டுவிடு.)

என்று சொல்கிறார்.

ஒருவன் வீணாக எதற்காகக் கோபத்திற்கு இடங்கொடுக்க வேண்டும்? வேற்றுமையைப் பார்ப்பதனால்தானே ஒருவனுக்குக் கோபம் வருகிறது? தன்னைக் காட்டிலும் வேறொருவன் (பெரியவன்) இருக்கிறான் என்ற எண்ணமே கோபத்தை வரவழைக்கிறது. வெறும் உடலின் மேல் நமக்குக் கோபம் வரவில்லை. அந்த உடலில் பற்று வைத்துக்கொண்டிருக்கும் ஜீவனின் மேல்தான் நமக்குக் கோபம் வருகிறது. ஆனால் அந்த ஜீவன் உண்மையில் பரம்பொருள்தான். அந்த ஜீவன், தான் செய்த கர்மாவின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

த்வயிமயி சான்யத்ரைகோ விஷ்ணு:

என்னிடத்திலும் உன்னிடத்திலும் ஒரே சைதன்யம்தான் இருக்கிறது.

வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: ।

Koviloor Digital Library

அப்படியிருக்க வீணாக ஏன் கோபத்திற்கு இடங்கொடுக்க வேண்டும்? ஆகையால் வேறொருவனிடம் கோபப்படுவது தன் மீது தானே கோபப்படுவது போல்தான் ஆகும்.

ஸர்வஸ்மின்னபி பச்யாத்மானம்

எல்லாவிடத்திலும் ஒரே பரமாத்மாதான் இருக்கிறாரென்று பார்த்துக் கொண்டு வர வேண்டும்.

ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதக்ஞானம் ||

இந்த வேற்றுமையைக் காட்டக்கூடிய அக்ஞானத்தை விட்டுவிட வேண்டும். அப்போதுதான் ஒருவன் மேன்மையை அடையலாம்.

கடவுளுக்கு உண்மையில் 'உடல்' என்பதே கிடையாது. ஆனால் உலகத்தின் நலனுக்காக பலவிதமான உடல்களை (அவதாரங்களை) தன்னிடத்தில் பெற்றுக் கொள்கின்றான். இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், ஆதிசங்கரர் – இது போன்ற பலவிதமான அவதாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் எந்த ரூபத்தை நாம் குறை சொல்வது? எந்த ரூபத்தைப் பாராட்டுவது? எல்லாம் ஒன்றேதான்.

நமக்கு சாமர்த்தியமோ இல்லை. பகவானிடத்தில் சக்திக்காக வேண்டுகின்றோம். எல்லாவிடத்திலும் வியாபித்து இருக்கும் ஒரே பரம்பொருளிடம் என்ன பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று நாம் முதலில் யோசிக்க வேண்டியதிருக்கிறது. நாம் சாதாரணப் பொருட்களுக்கு ஆசைப்பட்டு அவற்றிற்காகப் பிரார்த்தனை செய்தால், அவை கிடைத்தாலும் பின்பு நாசமாகிவிடும். அவையெல்லாம் இன்று இருக்கும், நாளை போய்விடும். சங்கரர் மேற்கூறிய எல்லா தெய்வங்களும் ஒன்று என்று காட்டிய பிறகு விஷ்ணுவைப் பற்றிய ஒரு சுலோகத்தில்,

அவினயமபனய விஷ்ணோ
தமய மன: சமய விஷய ம்ருகத்ருஷ்ணாம் |
பூததயாம் விஸ்தாரய
தாரய ஸம்ஸாரஸாகரத: || (2.)

Koviloor Digital Library

(விஷ்ணுவே! பணிவில்லாத நிலைமையைப் போக்குவாயாக. என் மனதை அடக்குவாயாக. பொருட்களில் ஆசையைப் போக்குவாயாக. எல்லோர் விஷயத்திலும் எனக்குக் கருணையைத் தருவாயாக. ஸம்ஸாரம் என்னும் கடலைத் தாண்டச் செய்வாயாக.)

என்று கூறுகிறார். "கடவுளே ! நாங்கள் ஒன்றும் விரும்பவில்லை. எங்கள் புத்திக்கு ஏற்றவாறெல்லாம் ஏதாவது கேட்டோமென்றால், அதனால் கடைசியில் துக்கம்தான் வந்து முடியும்" என்கிறார் சங்கரர். பிறகு எவ்வாறு பிரார்த்தனை செய்ய வேண்டுமென்பதையும் அவரே காட்டிவிடுகிறார்.

இந்த உலகத்தில் எவனுக்கு விநயமில்லையோ (பணிவில்லையோ) அவனே கஷ்டப்படுவான். ஒருவன் தன்னைவிடப் பெரியவர்களிடத்திலும், சிறியவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது தெரிந்து வாழ்ந்தால் நல்லது. அதற்கு என்ன வழி என்றால், 'விநயம்' என்பதே அது. ஆனால் இந்த விநயம் நம்மிடம் இல்லை. நமக்கு அஹங்காரம் (அகந்தை) வந்துவிட்டது. அதனால்தான் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்த அஹங்காரத்தை நாம் விட்டுவிட்டால் பிறகு நாம் மிகவும் சந்தோஷமாக இருக்கலாம். எல்லா வகையான துன்பத்திற்கும் காரணம் இந்த அஹங்காரம்தான். ஆகையால் சங்கரர்

அவிநயமபனய விஷ்ணோ

எனக் கூறுகிறார். "கடவுளே ! நீ எங்களுடைய அஹங்காரத்தை நாசம் செய்துவிட்டு எங்களுக்கு விநயத்தைக் கொடுத்துவிடு" என்று பிரார்த்தனை செய்கின்றார்.

'அவிநயம்' (அடக்கமின்மை) என்பது நம் மனம் நம்முடைய வசத்திலில்லாததனால்தான் வருகிறது. இதனால் நாம் வீணாக சில ஜனங்களைத் திட்டிவிடுகிறோம். அவர்களைப் பற்றி மட்டமாகவும் தவறாகவும் நினைத்துவிடுகின்றோம். இவையெல்லாம் நம் மனம் நம் வசத்திலில்லாததனால்தான் ஏற்படுகின்றன. அடுத்த வரியில் சங்கரர்,

தமய மன:

Koviloor Digital Library

என்று கூறுகிறார். நமது அந்தஃகரணம் (உட்கருவியான மனம்) நம் வசத்திலிருக்க வேண்டும். நாம் சில சமயங்களில் எதைச் செய்ய வேண்டுமென்று முடிவெடுக்கிறோமோ அதைச் செய்ய நம் மனம் ஒப்புக்கொள்ள மறுக்கிறது. "இது கெட்ட செயல். இவ்வுலகத்தில் நாம் இந்தச் செயலைச் செய்தால் கீழ்நிலைக்குப் போய்விடுவோம்" என்று தெரிந்தாலும் சிலர் திருடுகிறார்கள். பிறருக்குத் துன்பம் விளைவிக்கிறார்கள். இவையெல்லாம் தவறு என்று தெரிந்தும் ஏன் செய்கிறார்கள்? மனம் தம் வசத்திலில்லாததால்தான் அவ்வாறு செய்கிறார்கள். அதனால்தான் இரண்டாவது பிரார்த்தனையாக 'மனதை அடக்கி வை' என்று சங்கரர் வேண்டுகிறார். மனவடக்கம் இருந்தால்தான் விநயம் வர ஏதுவாகும்.

சமய விஷய ம்ருகத்ருஷ்ணாம்

என்று சுலோகத்தில் அடுத்ததாக வருகிறது. பிறரைக் குறை சொல்வது, தவறான செயல்களைச் செய்வது இவையெல்லாம் எதற்காகச் செய்கிறோம்? (காரணம்: நம் ஆசைகள் ஓர் அளவுடன் இருப்பதில்லை.) உலகிலுள்ள விஷயங்கள் எல்லாவற்றையும் கண்ட பிறகுகூட நாம் திருப்தியை அடைவது கிடையாது. இது குறித்து வியாஸர்,

யத்ப்ருதிவ்யாம் வ்ரீஹியவம் ஹிரண்யம் பசவ: ஸ்த்ரிய: |
ஏகஸ்யாபி ந பர்யாப்தம் ததித்யதித்ருஷம் த்யஜேத் || (3.)

(நிலம், நெல், தங்கம், பசுக்கள், பெண்கள் – இவைகளில் எதனாலும் முழுதான திருப்தியுண்டாவதில்லை. ஆதலால் அதிகமான ஆசையை விட்டுவிட வேண்டும்.)

என்று கூறுகிறார். நம் ஆசைக்கு ஓர் அளவு என்பதே இல்லை. எவனோ ஒருவன், கையில் ஒரு கடிகாரத்தை (அணிந்து கொண்டிருப்பதை) நாம் பார்த்தால் அது நமக்கு வேண்டும் என்ற ஆசை நம் மனதில் எழுகிறது. சிறிது நாட்களுக்குப் பிறகு அந்தக் கடிகாரம் நமது கையில் இருந்தாலும் நமக்கு அதில் அவ்வளவாக ஆர்வம் ஏற்படுவதில்லை. ஏனெனில் அது அதிக நாள் சரியாக வேலை செய்வதில்லை என்ற எண்ணம் நமக்கு வருகிறது. இதேபோல் ஆசைகள் ஒன்றன்மேல் ஒன்றாக வளர்ந்து கொண்டே போகின்றன. ஆசைகள் இவ்வாறு வளர்ந்துகொண்டே போனால்

Koviloor Digital Library

அவற்றை அடைவதற்கான செயல்களிலேயே ஈடுபட்டு மனமானது நம் வசத்திலில்லாமற் போய்விடுகிறது. ஆகவே மனதை அடக்கிக் கொள்ள வேண்டியது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம், புலன்களின் விஷயங்களில் ஆசையைப் போக்கிக் கொள்வதும் அவசியம். (நெடுந்தூரத்திலுள்ள தரையில்) 'கானல் நீர்' என்பதை நாம் பார்ப்பதுண்டு. அதாவது தொலை தூரத்தில் தரையில் தண்ணீர் இருப்பது போல் தோன்றும். அங்கு அருகில் போய் பார்த்தால் சிறிதளவுகூட நீர் இல்லை என்பது தெரியும். இந்த ஸம்ஸார பொருட்களெல்லாம் கானல் நீரைப் போலிருக்கின்றன. ஆகையால் அவற்றில் ஆசை வைத்துக்கொண்டு எதற்காக வாழ வேண்டும்? ஆகையால்தான் பொருட்களில் உள்ள ஆசைகளைப் போக்குமாறு பிரார்த்திக்கிறார். அதாவது 'எங்களுக்கு விஷயங்களின் மேலுள்ள ஆசையை அடக்கிவிடு' என்று கூறுகிறார். அப்போதுதான் மனதை அடக்க முடியும்.

நமக்குப் பாவம், புண்ணியம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்று உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. ஓரிடத்தில்,

பரோபகார: புண்யாய பாபாய பரபீடனம் (4.)

(மற்றவர்களுக்கு உதவி செய்தால் புண்ணியம். மற்றவர்களைத் துன்புறுத்தினால் பாவம்.)

என்று வருகிறது. இவ்வாறு நாம் புண்ணியத்தையும், பாவத்தையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறோம். மற்றவர்களுக்குக் கெடுதல் செய்வது பெரிய பாவம் ஆகும். மற்றவர்களுக்கு உதவி செய்வது, உணவு தருவது, கல்வி கற்றுக் கொடுப்பது, அவர்களைக் காப்பாற்றுவது – இவையெல்லாம் தயையின் (கருணையின்) லக்ஷணங்களாகும். இவை ஒருவனுக்குப் புண்ணியத்தைத் தருபவை. இந்த லக்ஷணங்கள் நம்மிடமிருந்தால் நமக்குத் 'தயை' இருக்கிறதென்று கூற முடியும். இந்த லக்ஷணங்களே இல்லாவிட்டால் நம்மைத் 'தயாவான்' (கருணைப் பொருந்தியவன்) என்று எவ்வாறு சொல்ல முடியும்? ஆதலால்தான் சங்கரர்,

பூததயாம் விஸ்தாரய

என்றார். 'பூத தயையை எனக்குக் கொடு' என்று கூறினார்.

Koviloor Digital Library

ஒவ்வொரு மனிதனுக்கும், பிராணிக்கும் தன்னுடைய வாழ்க்கையை, தான் செய்திருந்த கர்மாக்களுக்கேற்ற வகையில் நடத்திக்கொள்ளும் அதிகாரம் உண்டு. ஒரு நாயாக இருந்தாலும் பூனையாக இருந்தாலும் இதேபோல்தான் அதிகாரமுண்டு. ஆனால் மனிதர்கள் பிராணிகளுக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு மாடுகளைக் கொண்டு வயலை உழும் பொழுது மாடுகளின் சிரமத்தைச் சிறிதளவும் யோசிப்பதில்லை. அவற்றின் திருப்தி, சந்தோஷம் இவற்றைப் பற்றி சிந்திப்பதே இல்லை. நம் வாழ்க்கைக்கு உதவும் பிராணிகளுக்குத் துன்பத்தையே நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு பிராணியின் விஷயத்திலும் கருணையைக் காட்ட வேண்டியது நம்முடைய முதற் கடமையாகும். இதை அனைவரின் விஷயத்திலும் காட்ட வேண்டும். அதனால்தான் "பூததயாம் விஸ்தாரய" என்றார் சங்கரர். இவையெல்லாவற்றையும் ஒழுங்காகப் பின்பற்றி வந்தால்,

தாரய ஸம்ஸாரஸாகரத:

என்று சங்கரர் கூறிய வகையில் (ஸம்ஸாரக் கடலைத் தாண்டுதல்) ஏற்பட்டுவிடும்.

ஸம்ஸாரத்தில் (உலகில்) ஒரு பங்கு சுகத்தைக் காண்கிறோம் என்றால் பத்து பங்கு துக்கத்தையும் அதில் காண்கிறோம். "நீ சந்தோஷமாக இருக்கிறாயா? எல்லா விஷயத்திலும் பரிபூர்ண திருப்தியை அடைந்திருக்கிறாயா?" என்று யாரிடமாவது கேட்டுப் பார்த்தால் அதற்கு ஒருவன், "அது எப்படி முடியும்? மனிதனாகப் பிறந்துவிட்டேனே! பல விஷயங்களில் சுகமும் வரும்; துக்கமும் வரும். எனினும் நான் சுகமாகத்தானிருக்கிறேன்" என்றே பதில் வரும். அப்படியென்றால் துக்கமும் நம் வாழ்வில் இருக்கிறதென்றுதான் பொருள். ஆனால் நமக்கு அணுவளவிற்குக் கூட துன்பம் நம்மை அண்டக் கூடாது என்றே நாம் விரும்புகிறோம். எப்போது நாம் பகவானிடம் ஒன்றிவிடுகிறோமோ, அப்போதுதான் நம் துன்பம் முழுவதுமாக விலகும். அதுவரையில் துன்பம் இருந்து

Koviloor Digital Library

கொண்டுதானிருக்கும். அதனால்தான் ஸம்ஸார சுகத்திலிருந்து காப்பாற்றுமாறு பிரார்த்தனை செய்கிறார் சங்கரர்.

அதனால்தான்,

தாரய ஸம்ஸாரஸாகரத:

என்று சுலோகத்தின் கடைசி வரி உள்ளது.

ஸம்ஸாரம் என்பது ஒரு பெரிய கடல். இதில் பலவகையான ஜீவராசிகள் இருந்துகொண்டிருக்கின்றன. உயிர்கள் அனைத்தும் எப்போதும் ஏதோ வயிற்றுக்காக முயற்சி செய்கின்றன. தூக்கம் வந்தால் தூங்கிவிடுகின்றன. பசியெடுத்தால் மீண்டும் உணவிற்காக முயற்சி செய்கின்றன. இதை எல்லோரும் செய்து கொண்டு தானிருக்கிறார்கள். இத்தகைய ஸம்ஸாரம் என்பது ஒரு கடலைப் போலுள்ளது. இதைத் தாண்ட வேண்டுமென்றால் கடவுளிடம் சரணமடைய வேண்டும். ஆசைகளை விட வேண்டும். மனதை அடக்க வேண்டும்.

வெளிப்பொருட்கள் விஷயத்தில் அதிகமாகக் கவனம் செலுத்தக் கூடாது. ஏனெனில் இவைகள் நம் மனதை இழுத்துவிடுகின்றன. நம்மைக் காட்டிலும் துன்பப்படுபவன் யாரிருந்தாலும் அவன் விஷயத்தில் நாம் தயை காட்ட வேண்டும். இவற்றையெல்லாம் செய்துகொண்டு வந்தால் பகவானின் அநுக்ரஹத்தைப் பெற்று ஸம்ஸாரத்தைத் தாண்டலாம். பரம்பொருளை அடைந்து வாழ்க்கையை சாச்வதமாக்கிக் கொள்ளலாம். ஏதோ ஒருவனுக்குக் காமதேனு கிடைத்திருந்ததாம். காமதேனுவின் இயற்கை என்ன? எதை வேண்டுமென்று அதனிடம் கேட்டாலும் உடனே அதைக் காமதேனு, கேட்டவனுக்குக் கொடுத்துவிடும். ஆனால் அவன் அதை உழுவதற்கு உபயோகப்படுத்தினான். இதனால் காமதேனுவிற்கும் கஷ்டம்! இவனுக்கும் ஆறு மாதம் கழிந்தே (பயிர் விளைந்தவுடன்தான்) பலன் கிடைத்தது. அவ்வாறில்லாமல், "காமதேனுவே! உன்னை நான் சரணமடைகின்றேன். எனக்கு இந்தப் பொருள் தேவைப்படுகிறது" என்று வேண்டினால் அவள் சந்தோஷமாகக் கொடுத்துவிடுவாள். அறியாமையினால் அதை உழுவதற்கு

Koviloor Digital Library

உபயோகப்படுத்தியவனை முட்டாள் என்றோ, ஞானசூன்யம் என்றோ அல்லவா சொல்வோம் !

அதேபோல் நமக்கும் இவ்வளவு உயர்ந்த மனிதப் பிறவி கிடைத்திருக்கிறது. விசாரம் செய்வதற்கு (பகுத்தறிவதற்கு) வாய்ப்பிருந்தும் விசாரம் செய்வதில்லை. மற்றவர்களைத் துன்புறுத்துவதிலேயே ஈடுபட்டிருக்கிறோம். நமக்கு இப்போது மனிதப் பிறவியும் மஹான்களுடைய சகவாசமும் கிடைத்திருக்கிறது. ஆகவே இப்பொழுதே பிறவிப் பயனை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் புத்திசாலிகள் என்று சொல்லப்பட முடியும். அவ்வாறில்லையென்றால் நமக்கு புத்தியினால் எந்தவிதப் பிரயோஜனமுமில்லை. ஆகையினால்தான் மனிதனாகப் பிறந்த எவனொருவனும் மிகவும் கவனமாக இருந்து தன் வாழ்க்கையை நடத்தி பிறவியைப் பயனுள்ளதாகச் செய்து கொள்ள வேண்டும். (பிறவியைப் பயனுள்ளதாகச் செய்து கொள்வதற்கு ஆத்மாவைப் பற்றிய அறிவே தேவை.)

பகவத்பாதாள் ஆத்மாவைப் பற்றிய அறிவை உண்டாக்குவதற்கு மிகவும் தெளிவாக உபதேசம் கொடுத்துள்ளார். அவர் அந்த சுலோகத்தில் சிஷ்யன் குருவிடம் கேள்வி கேட்பதைப் போல் கேட்டுத் தானே பதிலும் கொடுத்துள்ளார்.

கிம் ஜ்யோதிஸ்தவ பானுமானஹனி மே ராத்ரௌ
ப்ரதீபாதிகம்
ஸ்யாதேவம் ரவிதீபதர்சனவிதௌ கிம் ஜ்யோதிராக்யாஹி மே |
சக்ஷுஸ்தஸ்ய நிமீலனாதிஸமயே கிம் தீர்தியோ தர்சனே
கிம் தத்ராஹமதோ பவான் பரமகம் ஜ்யோதிஸ்ததஸ்மி
ப்ரபோ || (1.27)

(உனது ஒளி என்ன? பகலில் ஆதவனும் இரவில் தீபம் முதலியவையும். எந்த ஒளியினால் ஆதவனும் தீபமும் பார்க்கப்படுகின்றன என்பதைச்சொல். கண். கண் மூடியிருக்கும் போது எந்த ஒளி இருக்கிறது? புத்தி. புத்தியைப் பார்ப்பதற்கு உனது ஒளி என்ன? நானே இருக்கிறேன். ஆகவே நீதான் உயர்ந்த ஒளி. ஆமாம் பிரபுவே!)

Koviloor Digital Library

குரு: "*கிம் ஜ்யோதிஸ்தவ*" — "எந்தப் பிரகாசம் மூலமாக நீ எல்லாப் பொருட்களையும் பார்க்கின்றாய்?"

சீடன்: "*பானுமானஹனி மே ராத்ரெள ப்ரதீபாதிகம்*" — "பகலில் சூரிய வெளிச்சமிருக்கின்றது. அதன் மூலமாக எல்லாப் பொருட்களையும் நாம் தெரிந்து கொள்கின்றோம். இரவு ஆகிவிட்டால் விளக்கு, சந்திரன் ஆகிய இவற்றின் உதவியால் நமக்குப் பொருட்களைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது".

குரு: பகலில் சூரிய வெளிச்சம் மூலமாகப் பொருட்களை அறிந்து கொள்கிறாய். இரவில் சந்திரன், விளக்கு இவற்றின் பிரகாசம் மூலமாக அறிந்து கொள்கிறாய். அது அப்படியே ஆகட்டும். "*ஸ்யாதேவம் ரவிதீபதர்சனவிதெள கிம்*" — "சூரியனின் ஒளியையும் சந்திரனின் ஒளியையும் எவ்வாறு அறிந்து கொள்கிறாய்? இவற்றைக் காட்டுவதற்கு எந்த ஒளி இருக்கிறது?"

சீடன்: "*சக்ஷு:*" – "கண்". இவைகளைப் பார்க்க வேறொரு ஒளி தேவையில்லை. சூரியனைப் பார்ப்பதற்கு வேறொரு சூரியனோ, சந்திரனைப் பார்ப்பதற்கு வேறொரு பிரகாசமோ தேவையில்லை. பார்க்கத் தேவையானது கண் ஒன்றுதான்.

குரு: "*நிமீலனாதிஸமயே கிம்*" — "கண்களிரண்டும் மூடிக் கொண்டிருந்தாலும், பலவிதமான அறிவுரைகள் ஏற்படத்தான் செய்கின்றன. இது எந்த ஒளியின் மூலமாக ஏற்படுகிறது?"

சீடன்: "*தீ*": – "அப்போது புத்தியின் மூலமாகத்தான் ஞானம் ஏற்படுகிறது".

குரு: சரி ! புத்தியின் மூலமாகத்தான் பலவிதமான பொருட்களை அறிந்து கொள்கிறோம் என்று ஒப்புக்கொள்ளலாம். புத்தி இருக்கிறதென்று தெரிகிறதா?

சீடன்: தெரிகிறது.

குரு: புத்தி இருக்கிறது என்பதை எதன் மூலமாகத் தெரிந்து கொண்டாய்? "*கிம் தத்ர*"– அங்கு என்ன இருக்கிறது?

சீடன்: "*அஹம்*" – "நானேதான்".

Koviloor Digital Library

(அதுதான் ஆத்மா. அந்த ஆத்மாவே கண்ணையும் பார்க்கிறது. சூரிய சந்திரர்களையும் பார்க்கிறது. எல்லாவற்றையும் பார்ப்பது அதுதான். மூலப்பிரகாசம் அதுவே.)

குரு: "*அத: பவான் பரமகம் ஜ்யோதி:*" – "ஆதலால் எல்லாவற்றிற்கும் பரமப்பிரகாசமானவன் நீதான். உன்னுடைய சங்கல்பத்தினால்தான் சந்திரன், தீபம், இந்திரியம், புத்தி இவையனைத்தும் பிரகாசிக்க முடிகிறது. உன்னைக் காட்டிலும் உயர்ந்த பிரகாசம் எதுவுமில்லை".

இந்த ஸ்வரூபத்தை ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்று சொல்வோம். சித் என்றால் ஞானம். ஆனந்த வடிவும் இதுதான். ஆனந்தம் வருவது வெளிப் பொருட்களினால் இல்லை. ஆத்மாதான் ஆனந்தத்திற்குக் காரணம். நமது மனம் வெளிப் பொருட்களின் சம்பந்தத்தினால் தூய்மையற்றிருக்கிறது. அது பொருட்களை அனுபவிக்கும்போது மனதில் மாசு படிகிறது. மனம் தூய்மையடைந்து உள் பக்கம் திரும்பினால் அப்போது உள்ளிருக்கும் ஆனந்தம் தெரிகிறது. 'நாம்' எப்போதும் ஆனந்த ஸ்வரூபம்தான். 'நாம்' எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறோம். பரப்ரஹ்மத்தின் ஸச்சிதானந்த ஸ்வரூபத்தைப் பற்றி சங்கரபகவத்பாதாள் இவ்வாறு மிக அழகாகச் சொன்னார். இந்த ஏகசுலோகீயைப் போல் பல நூல்களை அவர் எழுதியிருக்கிறார். இவை நம் வாழ்வைப் பயனுள்ளதாகச் செய்து கொள்வதற்கு வழியைக் கூறுகின்றன.

பகவத்பாதர் எத்தகையவர்?

சங்காரூபேண மச்சித்தம் பங்கீக்ருதமபூத்யயா |
கிங்கரீ யஸ்ய ஸா மாயா சங்கராசார்யமாச்ரயே || (5.)

(என் மனதில் சந்தேகங்கள் படிந்திருப்பதற்குக் காரணமான மாயையைத் தன் அடிமையாகக் கொண்டிருக்கும் சங்கராசார்யாளிடம் சரணமடைகின்றேன்.)

என்று சுலோகம் ஒன்று வருகிறது. சந்தேகங்கள் நம் மனதை அலைக்கழிப்பதற்குக் காரணம் மாயை ஆகும். அதுவே அக்ஞானம். இந்த அக்ஞானத்தின் வசத்தில் நாம் இருக்கிறோம். ஆனால்

Koviloor Digital Library

மாயையோ அந்த பகவத்பாதரின் வசத்திலிருக்கிறாள். அத்தகையவர் பகவத்பாதாள். அவரைச் சரணமடைந்து நாம் ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

4. ஆத்ம தரிசனமே பிறவிப்பயன்

விசுத்தஞானதேஹாய த்ரிவேதீதிவ்யசக்ஷுஷே
ச்ரேய: ப்ராப்திநிமித்தாய நம: ஸோமார்த்ததாரிணே |
நமாமி யாமினீநாதலேகாலங்க்ருதகுந்தலாம்
பவானீம் பவஸந்தாபநிர்வாபணஸுதாநதீம் || (2.1)

நாம் அனைவரும் சங்கரபகவத்பாதரின் சிஷ்யர்களாக இருக்கிறோம். நாம் எவ்வாறு அவரது சீடர்களானோம்? நாம் அறியாமை என்ற இருட்டில் சுற்றிக் கொண்டிருந்தபோது பகவத்பாதாள்தான் நமக்கு ஞானோபதேசம் செய்து நல்வழியைக் காட்டி அந்த அறியாமையான இருளை நீக்கினார். அத்தகைய சங்கர பகவத்பாதாளைப் பற்றி,

சங்காரூபேண மச்சித்தம் பங்கீக்ருதமபூத்யயா |
கிங்கரீ யஸ்ய ஸா மாயா சங்கராசார்யமாச்ரயே || (3.5)

(எனது மனதைச் சந்தேகங்களினால் கறைப்படுத்துவதற்குக் காரணமான மாயையைத் தன் அடிமையாகக் கொண்டுள்ள அந்த சங்கராசார்யரை வணங்குகிறேன்.)

என்ற சுலோகம் ஒன்று உள்ளது. ஒரு சீடனுடைய கடமையைப் பற்றிச் சொல்லும்போது சீடன் தனது குருவின் கட்டளைகளைப் பரிபாலனம் செய்ய வேண்டும் என்றும் குருவைப் பற்றியே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் (சாஸ்திரங்களில்) கூறப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் நாம் பகவத்பாதாளை ஸ்மரணம் செய்வது, எப்போதும் நினைத்துக் கொண்டிருத்தல் மிகவும் அவசியம் ஆகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் பலவிதமான சிந்தனைகள் இருக்கின்றன. சிந்தனைகளும், சந்தேகங்களும் எங்கிருந்து உண்டாகின்றன? எவனுக்குத் தத்துவத்தின் அறிவு (தன் உண்மையான ஸ்வரூபத்தின் அறிவு) ஏற்பட்டுள்ளதோ, அவனுக்குச் சிந்தனை என்பதே கிடையாது. தத்துவம் தெரியாததினால் கவலைகளும், சந்தேகங்களும் தானாக வந்து கொண்டேயிருக்கின்றன. மனிதனுக்குச் சந்தேகங்கள் பலவிதமாக இருக்கலாம்.

Koviloor Digital Library

சங்காரூபேண மச்சித்தம் பங்கீக்ருதமபூத்யயா |

என்று கூறப்பட்டதால், இந்த சந்தேகங்கள் மாயையினால் ஏற்படுகின்றன.

பரலோகம் (மறு உலகம்) என்பது இருக்கின்றதா இல்லையா, பரமேச்வரன் என்று ஒருவன் இருக்கின்றானா இல்லையா, ஆத்மா என்று ஒன்று இருக்கின்றதா இல்லையா, பரலோகத்தை அடைவதற்காகச் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வழிகளெல்லாம் உண்மையில் உள்ளனவா இல்லையா என்பது போன்ற பலவிதமான சந்தேகங்கள் நம் மனதில் ஏற்படுகின்றன. இத்தகைய சந்தேகங்களினால் நம் மனம் மிகவும் கெட்டுப் போய் விட்டது.

தண்ணீரானது தெளிவாக இருந்தால் நாம் அதை அருந்தலாம். அதே நீரில் அசுத்தங்களும் சேறும் இருந்தால் அதை யாரும் அருந்த முடியாது. அதேபோல் நம் மனமும் இந்தச் சந்தேகங்களினால் சகதியைப் போல ஆகிவிட்டது. ஆனால், ஒருவர், இந்த சந்தேகங்களுக்குக் காரணமான மாயை என்பது எது உண்டோ அதையே தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளார்.

கிங்கரீ யஸ்ய ஸா மாயா சங்கராசார்யமாச்ரயே ||

நமது சந்தேகங்களுக்குக் காரணமாகிய மாயையே எவருக்கு அடிமையைப் போலிருக்கிறாளோ, எவரது கட்டளைகளைக் கேட்டுச் செயல்படத் தயாராக இருக்கிறாளோ, அத்தகையவர் மஹா புருஷராகத்தான் இருக்க வேண்டும். அத்தகைய ஆசார்யரின் (குருவின்) மேல் மாயையானது தனது விநோதங்களைக் காட்ட முடியாது. அவருடைய கட்டளைகளைத்தான் அந்த மாயையே கேட்டுக் கொண்டிருக்கிறாளாம். அப்படிப்பட்டவர்தான் சங்கர பகவத்பாதாள். அவரிடம் நாம் சரணமடைகின்றோம். இதுவே சுலோகத்தின் பொருள்.

இவ்வுலகத்தில் பலபேருக்கு உடலைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா என்று ஒன்று இருக்கிறதா, இல்லையா என்பது ஒரு முக்கியமான சந்தேகம். சந்தேகத்தைத் தீர்க்க வேண்டுமென்றால் அதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டு முக்கியமான வழிகள் உள்ளன. முதலாவது வழி, ஓர் ஆப்தரின்

Koviloor Digital Library

(அந்தரங்கமானவர்) வாக்கியத்தைக் கேட்டு நமது சந்தேகம் தீரலாம். இரண்டாவது நமது யுக்தியை உபயோகப்படுத்தி சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். இப்போது முதலாவதான ஆப்த வாக்கியத்தைப் பற்றி பார்ப்போம்.

வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோऽபராணி ।
ததா சரீராணி விஹாய ஜீர்ணானி
அன்யானி ஸம்யாதி நவானி தேஹீ ॥ (1.11)

(பழுதுபட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதியவைகளைப் போட்டுக் கொள்வதைப் போல, ஆத்மா பழைய உடல்களை நீத்து புதியனவற்றில் புகுகிறது.)

என்று கீதையில் சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய ஆடைகள் பழையனவாகி விட்டதென்றால் என்ன செய்வோம்? அதைக் களைந்துவிட்டு வேறு புதிய ஆடைகளை உடுத்திக் கொள்வோம். அதேபோல் ஆத்மாவும் தான் இருக்கும் சரீரத்தை, கர்மாவை அனுபவிப்பதற்காக உபயோகப்படுத்துகிறது. அந்தக் குறிப்பிட்ட கர்மா முடிந்துவிட்டதென்றால் ஒரு சரீரத்தை விட்டுவிட்டு வேறொரு சரீரத்தைப் பெற்றுக் கொள்கிறது. சாஸ்திரத்திலேயே இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. இது சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதால் 'ஆப்தவசனம்' எனப்படும். 'சப்தப் ப்ரமாணம்' என்றும் சொல்லப்படும்.

அடுத்ததாக யுக்தியின் மூலமாகப் பார்ப்போம். நாம் பலவிதமான மனிதர்களைப் பார்க்கிறோம். எல்லோரும் ஒரே போல் இருப்பதில்லை. சிலர் திருப்தியாயிருக்கின்றார்கள். சிலர் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். இந்த வேறுபாடு எவ்வாறு ஏற்பட்டிருக்கிறது? இதற்குக் காரணம் 'பரமேச்வரன்' என்று சொன்னால் அப்போது அந்த இறைவனுடைய உள்ளம் கல்லைப் போலிருக்கிறதென்று சொல்ல வேண்டும். அவனுக்குக் கருணையே இல்லை என்றும் சொல்ல வேண்டும். இத்தகையவர்தான் பரமாத்மா என்றால் யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நாமெல்லோரும் பரமாத்மாவை மிகுந்த கருணை பொருந்தியவன் என்றே சொல்கிறோம்.

Koviloor Digital Library

இறைவன்தான் ஸம்ஸாரத்தை (பிறப்பு – இறப்பை) உண்டாக்குகிறான். ஆனாலும் மக்களிடையே இன்பம் – துன்பம் முதலியவைகளால் ஒருவருக்கொருவர் வேறுபாட்டுடன் இருக்கிறார்கள். இவ்வாறு இருப்பதற்கு ஈச்வரன் காரணமாயிருந்தாலும், அவன் அவரவர்களது கர்மாவிற்கு இணங்கத்தான் பலன்களைக் கொடுக்கிறான். ஆகவே இவ்வகையில்தான் இறைவன் நமது இன்ப துன்பங்களுக்குக் காரணமாயிருக்கிறார்.

நாம் இந்தப் பிறவியில் குறிப்பிடும்படியாக எந்தச் செயலையும் செய்யாமலிருக்கலாம். அப்படியிருந்தும் இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆதலால் பூர்வஜன்மம் (முந்தைய பிறவி) என்று ஒன்று இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அந்தப் பிறவியில் நாம் ஏதாவது கர்மாவை செய்திருப்போம். அதற்குண்டான பலனையே இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் இந்தச் சரீரத்தையே ஆத்மா என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் இந்தச் சரீரத்தையே சாசுவதமாக (நிலையாக) வைத்துக்கொள்ள விரும்புகிறோம். இவ்வுடல் எவ்வளவு நாட்கள் உயிரோடு இருந்தாலும் ஒருவன் திருப்திப்படுவதில்லை. (இன்னும் பல நாட்கள் உயிர் வாழவே விரும்புகிறான்.) புலன்கள் தொடர்பான பொருட்களை நாம் அனுபவிக்க அனுபவிக்க, நமது ஆசை அதிகமாகிக்கொண்டே வரும். பொருட்களின் இயற்கையே அதுதான். உடலை விட்டுவிட்டால் நம்மால் பொருட்களை அனுபவிக்க முடியாது என்ற நினைப்பு அனைவருக்கும் இருக்கத்தானிருக்கும்.

உலகின் நிலை எவ்வாறு உள்ளது?

யேனாசாந்தா: ஸலிலநிதயோ யேன ஸ்ருஷ்டா ப்ரதித்யௌ:
சஸ்த்ராண்யஸ்த்ராண்யபி கபலிதானி ஏகயா யஸ்ய யஷ்ட்யா।
கஸ்தாத்ருச: ப்ரபவதி ஜனோ தேவபூதேவவர்கே
கால: கீடானிவ கபலயாமாஸ தானப்யயத்னம் || (1.)

(யாரால் சமுத்திரங்கள் அருந்தப்பட்டனவோ, யாரால் இன்னொரு ஸ்வர்கமே படைக்கப்பட்டதோ, யாருடைய

Koviloor Digital Library

ப்ரஹ்மதண்டம் எல்லாவிதமான அஸ்திரங்களையும் விழுங்கியதோ – இவர்களுக்கு இணையாகப் பூமியிலும் ஸ்வர்கத்திலும் யார் இருக்கிறார்கள்? ஆனாலும் காலம் இவர்களையும்கூட புழுக்களை உண்பது போல விழுங்கி விட்டது!)

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் அகத்தியர் கடலையே குடித்துவிட்டார். அது நம்மால் சிந்தித்துப் பார்க்கவும் முடியாத பெரிய செயல். 'விச்வாமித்திரர்' என்று ஒரு ரிஷி (முனிவர்) இருந்தார். அவர் தேவர்களிடம் 'எனது த்ரிசங்குவிற்கு ஸ்வர்கத்தில் இடமில்லையென்றால் நான் வேறொரு ஸ்வர்கத்தையே உருவாக்கி விடுவேன்' என்று சூளுரைத்தார். அதைப்போல் செய்தும் காட்டினார்.

சஸ்த்ராண்யஸ்த்ராண்யபி கபலிதானி ஏகயா யஸ்ய யஷ்ட்யா

வசிஷ்டர் பெரிய தபஸ்வியாக இருந்தார். அவரிடம் நந்தினி என்று பசுமாடு ஒன்று இருந்தது. ஒருவன் விரும்பியதைத் தரவல்லது அந்தப் பசுமாடு. விச்வாமித்திரர் அந்தப் பசுமாட்டைத் தனக்கு வேண்டும் எனக் கேட்டார். ஆனால் வசிஷ்டர் அதைக் கொடுப்பதற்கு மறுத்தார். விச்வாமித்திரர் அரசனாக இருந்ததால் பல அஸ்திரங்களையெல்லாம் பயன்படுத்தி அந்த மாட்டைப் பிடித்துக்கொண்டு போக முயற்சித்தார். ஆனால் பசுமாடு அவருக்குக் கிடைக்கவில்லை. அப்போது விச்வாமித்திரர் கோபித்துக்கொண்டு வசிஷ்டருடன் போர் புரிய வந்தார். பலவிதமான அம்புகளையும் அஸ்திரங்களையும் உபயோகப்படுத்தினார். ஆனால் வசிஷ்டரோ தாம் அனுஷ்டானத்திற்கு உபயோகப்படுத்தும் ப்ரஹ்மதண்டத்தைத் தன் முன்னால் வைத்துவிட்டார். அந்தப் ப்ரஹ்மதண்டம் விச்வாமித்திரர் விடுத்த அனைத்து அஸ்திரங்களையும் தடுத்துவிட்டது. இதைக் கண்டவுடன் விச்வாமித்திரருக்கு வைராக்யம் ஏற்பட்டுவிட்டது. அத்தகைய மஹான்களும் இப்போது இல்லை. காலத்தின் வசத்திற்கு அவர்களும் பலியாகிவிட்டனர்.

Koviloor Digital Library

நிலைமை இவ்வாறிருக்கையில் நம்போன்று இருப்பவர்களுக்கு எப்போதும் வாழ வேண்டும் என்று ஆசை இருந்தால் அது எப்படி சாத்தியமாகும்? அவ்வாறிருக்கையிலும் நாம் எப்போதும் வாழ வேண்டும், நீண்ட காலம் வாழ வேண்டும் என்று விரும்புகின்றோம். ஆனால் "நாம் உண்மையில் ஆத்மா" என்று தெரிந்துகொண்டால் இந்த ஆசை விட்டுப்போய்விடும். உடலை நீண்ட காலம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை எதனாலிருக்கிறது? நமக்கு சரீரத்தில் 'நான்' என்கிற தவறான அறிவு இருப்பதனால்தான் அத்தகைய ஆசை இருக்கிறது. நாம் உடலைக்காட்டிலும் வேறுபட்ட சச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மா என்ற ஞானத்தை நாம் அடைந்துவிட்டால் அப்போது இந்தத் தவறான அறிவு நிச்சயமாக நீங்கிவிடும். நாம் அந்த ஞானத்தைப் பெறுதலும் நமது ஆசைகளின் முடிவும் ஒரே சமயத்தில் ஏற்படுகின்றது. அந்த 'ஞானம்' வந்துவிட்டால் ஆசைகளனைத்தும் தாமாகவே அகன்றுவிடும். எதுவரையில் நாம் ஆசைகளை வைத்துக்கொண்டு உலக விஷயங்களையே தேடிக்கொண்டு போய்க்கொண்டிருப்போமோ அதுவரையிலும் நமக்கு இன்பம் கிடைக்கப்போவதில்லை. நமக்கு இந்த உண்மைகளை உணர்த்துவதற்காக பகவத்பாதர் பலவிதமான புத்தகங்களை இயற்றியுள்ளார். அவர் உபநிஷத்துக்களுக்கும், ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கும், பகவத் கீதைக்கும் பாஷ்யங்களை எழுதியுள்ளார். ஆனால் அந்த பாஷ்யங்களை நேரடியாகப் புரிந்து அறிந்துகொள்வது சற்றே கடினம். எனவே மக்களுக்கு சுலபமாகப் புரிவதற்காகப் பல புத்தகங்களை எழுதினார். அவற்றுள் ஒன்று விவேகசூடாமணியாகும். அப்புத்தகம் அளவில் சிறியதாகவும், அதே சமயத்தில் புரிந்துகொள்ள எளிதாகவும் உள்ளது. அதில் ஓரிடத்தில் அவர்,

ருணமோசனகர்தார: பிது: ஸந்தி ஸுதாதய: |
பந்தமோசனகர்தா து ஸ்வஸ்மாதன்யோ ந கச்சன || (2.)

(தகப்பனாருக்கு கடன்களிலிருந்து விடுதலை செய்விப்பவர்களாக புத்திரன் முதலானவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் (ஒருவனை) அறியாமைத்தளையிலிருந்து விடுதலை செய்விப்பவன் தன்னையன்றி வேறு யாரும் கிடையாது.)

Koviloor Digital Library

ஒருவன் (யாரிடமாவது) கடன்பட்டிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கு மற்றொருவனால் உதவி செய்ய முடியும். ஆனால் ஒருவன் தன்னுடைய பந்தத்தை (ஸம்ஸாரம் என்னும் தளையை) நீக்கிக்கொள்வதற்குத் தானாகவேதான் முயற்சி செய்ய வேண்டும். மற்றொருவரால் அதற்காக ஒன்றும் செய்ய முடியாது.

பந்தமோசனகர்தா து ஸ்வஸ்மாதன்யோ ந கச்சன ||

என்று கூறப்பட்டது போல் தன்னுடைய பந்தத்தை நீக்கிக் கொள்வதற்கு ஒருவன் தானாகவேதான் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு அவன் தன் மனதைப் புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும். மனதைப் புனிதப்படுத்த வேண்டுமென்றால் கெட்ட எண்ணங்களுக்கு மனதில் இடங்கொடுக்கக் கூடாது. அவ்வாறு நடந்து கொண்டால் மனம் புனிதமாகிவிடும். அது எவ்வாறு நிகழ்கிறது?

ச்ருதிப்ரமாணைகமதே: ஸ்வதர்மநிஷ்டா (3.)

(வேதம்தான் ப்ரமாணம் என்ற ஒரே உறுதியான எண்ணமுள்ளவனுக்கு தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் தர்மத்திலேயே நிலைத்திருக்கும் தன்மை ஏற்படும்.)

நாம் எதைச் செய்ய வேண்டுமென்றாலும் அதற்கு ஏதாவது ஒரு ப்ரமாணம் தேவை. ப்ரமாணம் இல்லாமல் நாம் எதையும் செய்ய முடியாது. அவ்வாறு செய்தால் அது நியமத்தை (முறையை) மீறியதாகும். சட்டங்களை மீறி நாம் செயல்களைச் செய்தால் பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகிறது என்பதை நாம் இவ்வுலகத்திலேயே பார்க்கலாம். நமக்கு இப்போது மனிதப் பிறவி கிடைத்திருக்கிறது. இந்தப் பிறவியில் நாம் தர்மத்தைச் செய்யாது போனால் அடுத்த பிறவியைப் பெற வேண்டியது வரும். அதில் கஷ்டத்தை அனுபவிக்க நேரிடும். அப்போதும் தர்மத்தை செய்யாவிட்டால் வேறொரு பிறவியையும் நாம் அனுபவிக்க நேரிடும்.

மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாங்கதிம் (4.)

(என்னையடையாமல், இன்னும் கீழான கதியையே அடைகிறார்கள்.)

Koviloor Digital Library

பாவத்தைச் செய்வதனால் என்னை அடையாமல் ஒருவன் மிகுந்த இழிநிலையை அடைகிறான் என்று பகவான் கூறியிருக்கிறார். ஆதலால் நமக்கு ஸ்வதர்ம நிஷ்டை (தன்னுடைய தர்மத்திலேயே நிலைக்கும் தன்மை) இருக்க வேண்டும். நாம் எந்த வர்ணாசிரமங்களைச் சேர்ந்தவர்களோ அவற்றிலுள்ள தர்மங்களை அனுஷ்டித்து வர வேண்டும். அவ்வாறு அனுஷ்டித்துக்கொண்டு வந்தால் நம் மனம் புனிதமாகும். ஆகவேதான்

தயைவாத்மவிசுத்திரஸ்ய (3.)

(இவனுக்கு அதனால்தான் சித்தம் நன்கு தெளிவடையும்.)

என்று விவேகசூடாமணியில் வரும் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பின் என்ன ஆகும்?

விசுத்தபுத்தே: பரமாத்மவேதனம் (3.)

(நன்கு பரிசுத்தமான புத்தியுடையவருக்கு ஆத்மாவின் ஸாக்ஷாத்காரம் கிடைக்கும்.)

மனதைப் புனிதமாக்கிய பின் நாம் வேதாந்த விசாரம் செய்தால் பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரம் கிடைக்கும். பலர் சாஸ்திரத்தைப் படித்திருக்கின்றார்கள். சாஸ்திரங்கள் உபதேசித்ததை மற்றவர்களுக்கு விளக்குகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஞானம் வரவில்லை. ஏன்? இந்த நிலை எதற்குப் பயன்படும் என்ற கேள்விக்குப் பகவத்பாதர்,

வாக்வைகரீ சப்தஜரீ சாஸ்த்ரவ்யாக்யானகௌசலம் ।
வைதுஷ்யம் விதுஷாம் தத்வத்புக்தயே ந து முக்தயே ॥ (5.)

(சரளமாகப் பேசும் தன்மை, தடையில்லாமல் அருவிபோல சொற்களை உபயோகிக்கும் திறமை, சாஸ்திரங்களை நன்கு விவரித்து உரையாற்றக்கூடிய திறமை, (இவ்விதமான) அறிவாளிகளின் அறிவுத்திறமையும் அதைப்போலவே (வீணை வாசிப்பதுபோலவே) புகழ், பணம் முதலிய போகத்தையடைய (உபயோகப்படுமே தவிர), ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலையடைவதற்குக் கொஞ்சமேனும் பிரயோஜனப்படாது.)

என்று கூறுகிறார் சங்கரர்.

Koviloor Digital Library

மனத் தூய்மையில்லாமலும், சாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றை நடைமுறைக்குக் கொண்டுவராமலும் இருக்கும் ஒருவன் சாஸ்திரத்திற்கு விளக்கம் கொடுத்தால் அவனுடைய விளக்கம் செய்யும் திறமை மோக்ஷத்தைத் தராமல் அவனுடைய வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் பயன்படுகிறது. சாஸ்திரத்தில் நல்ல ஞானமிருந்தாலும், 'அமரகோசம்' முதலியவை நன்கு தெரிந்திருந்தாலும், இராமாயணத்தைப் படிக்கும் முறையை வைத்துக் கொண்டு அதேவகையில் மஹாபாரதத்திற்கு விளக்கம் அளிக்கும் சாமர்த்தியமும், மஹாபாரதத்தைப் படிக்கும் வகையில் இராமாயணத்திற்கு விளக்கம் தரும் திறமையும் இருப்பினும் இவையெல்லாம் தனக்குப் புகழை உண்டாக்குவதற்குப் பயன்படுமே தவிர ஆத்ம ஞானத்திற்குப் பயன்படாது. அதற்குத் தூய மனம் இருக்க வேண்டும். மேலும் அனுஷ்டானத்தையும் சரிவரச் செய்ய வேண்டும்.

அழுக்குச் சேர்ந்த பாத்திரத்தில் தண்ணீரை வைத்திருந்தால் நாம் குடிக்க மாட்டோம். தூய்மையான பாத்திரத்தில் வைத்திருந்தால்தான் நாம் குடிப்போம். அதேபோல் தூய மனதில் தத்துவத்தைப் பற்றிய விசாரம் செய்தால்,

விசுத்தபுத்தே: பரமாத்மவேதனம்

என்று சொல்லப்பட்ட வகையில் அங்கு ஆத்ம ஞானம் ஏற்படும். மாயையின் நாயகனாகி விளங்குபவர் ஈச்வரன். அந்த ஈச்வரனுடைய கருணை இருந்தால் நமக்கு ஸ்வதர்ம நிஷ்டை (நமது தர்மத்திலேயே நிலைத்துள்ள தன்மை) ஏற்படும்.

நமது தர்மங்களை இறைவன்தான் உபதேசித்தான். ஆதலால் தர்மங்கள் ஈச்வரனுடைய கட்டளைகள் ஆகும். அவற்றை நாம் பரிபாலனம் செய்து வந்தால் ஈச்வரனுடைய கிருபைக்கு விசேஷமாகப் பாத்திரர்களாவோம். அந்த ஈச்வரனுடைய அனுக்ரஹத்தினால் ஒருவனுக்கு 'ஸத்குரு' கிடைப்பார். அவரது உபதேசத்தினால் ஒருவன் ஆத்ம ஞானத்தை அடையலாம். ஆத்ம ஞானத்தை அடைந்தால் பரிபூர்ணமான முக்தியைப் பெறலாம். பல சாஸ்திரங்களை நாம் உலகில் பார்க்கலாம். உபநிஷத்துக்களின் கருத்தை உலகிற்கு அறிவித்தவர் பகவத்பாதாளே ஆவார்.

Koviloor Digital Library

இந்த உலகமும் இருக்கிறது. ஆத்மாவுமிருக்கிறது. ஆனால் இந்த உலகம் இப்போது தோன்றுகிறது. பிறகு மறைந்து விடுகிறது. ஆனால் ஆத்மா மட்டும் எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும்.

ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்
நாயம் பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: சாச்வதோऽயம் புராண:
ந ஹன்யதே ஹன்யமானே சரீரே ॥ (6.)

(இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததல்ல. (இருந்து பிறகு இறந்ததல்ல). இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது. உடல் கொல்லப்படுமிடத்தும் ஆத்மா கொல்லப்படுவதில்லை.)

என்று சொல்லப்பட்டுள்ளது. உடலிற்கு அழிவு இருந்தாலும் இந்த ஆத்மாவிற்கு அழிவே கிடையாது. இதுதான் ஆத்மாவின் நிலை. ஆத்மாவைத் தகுந்த வழியில் அறிந்து கொண்டால் அதுவே பரமாத்மா என்பதும் தெரியும். இந்த ஸாக்ஷாத்காரம் வந்தால்தான் நாம் பிறவிப் பயனை அடைந்தவர்களாவோம். இந்த விஷயங்களையெல்லாம் பகவத்பாதர் தெளிவாகத் தெரிவித்தார். இதை மக்களுக்கு உணர்த்துவதற்காக அவர் பாரதம் முழுவதையும் பல தடவை சஞ்சாரம் செய்தார். அவர்தம் கருத்துக்களின்படி வாழ்ந்து நாம் நன்மையை அடைய வேண்டும்.

ஹர நம: பார்வதீபதயே ।
ஹர ஹர மஹாதேவ ॥
ஜானகீகாந்தஸ்மரணம் ।
ஜய ஜய ராம ராம ॥

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

5. பரம்பொருளை அறிவதே உயர்ந்த கல்வி

உலகத்தில் பல பொருட்கள் இருக்கின்றன. அவைகளை அடைவதற்கெல்லாம் நாம் முயற்சி செய்கின்றோம். ஆனால் இங்கு ஒன்றை அடைந்தால் நாம் செய்ய வேண்டியதைச் செய்தவர்கள் ஆகிவிடுவோம். அதுதான் "ஞானம்". மற்ற பொருட்களையெல்லாம் அடைந்தாலும் நாம் மரணமடையும் போது அவற்றை விட்டுவிட்டுச் செல்லவேண்டி வரும். அது செல்வமானாலும் சரி, ஒரு பதவியானாலும் சரி. (பரம்பொருளை அடைந்தால்தான் நாம் செய்ய வேண்டியதைச் செய்தவர்கள் ஆவோம்.)

அத்யாத்மவித்யா வித்யானாம் வாத: ப்ரவததாம் அஹம் I (1.)

(வித்யைகளுள் (கல்விகளுள்) நான் ஆத்மவித்யை. தர்க்கம் செய்பவர்களுக்குள் நான் வாதமாகிறேன்.)

ஆகவே அத்யாத்ம வித்யையை நாம் பெற்றுக் கொண்டோமென்றால் இறைவனை அடைந்தது போல் ஆகும். ஞானத்தைக் காட்டிலும் தனிப்பட்ட இறைவன் என்பவனே கிடையாது. ஏனென்றால் பகவான் 'ஞான ஸ்வரூபியாக' (அறிவு வடிவானவனாக) உள்ளான். பரம்பொருளின் லக்ஷணம் என்ன?

ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம (2.)

அந்தப் பரம்பொருள் ஸத்ய வடிவாகவும் (எப்பொழுதும் இருப்பதாகவும்), ஞானவடிவாகவும் (அறிவு வடிவாகவும்), அளவில்லாமலும் உள்ளது. அதை அடைவதற்கு என்ன வழி? அதை அடைவதற்கு வேதமே வழியைக் காட்டுகின்றது. வேதங்களை அடிப்படையாகக் கொண்ட (இராமாயணம் போன்ற) ஸ்ம்ருதிகளும் வழிகாட்டிகளாக இருக்கின்றன. பரம்பொருளை அடைவதற்கு நாம் வேதங்களைத்தான் சரணமடைய வேண்டும். அவை இல்லாமல் நம் யுக்திகளை மட்டும் உபயோகம் செய்தால் போதாது. நாம் யுக்திகளை உபயோகப்படுத்திப் பல விஷயங்களை முடிவு செய்யலாம். ஆனால் நாம் சென்று கொண்டிருக்கும் வழி, சரியான வழியா இல்லையா என்பதை வெறும் யுக்திகளின் உதவியால் மட்டும் தீர்மானம் செய்ய முடியாது. யுக்திகளின்

Koviloor Digital Library

மூலமாகவே நாம் ஏன் கண்டுபிடிக்க முடியாது என்னும் கேள்வி எழலாம். அதற்குப் பதிலாக,

அசிந்த்யா: கலு யே பாவா ந தாம்ஸ்தர்கேண யோஜயேத் |
ப்ரக்ருதிப்ய: பரம் யச்சததசிந்த்யஸ்ய லக்ஷணம் || (3.)

(சிந்தனை செய்யப்பட முடியாத விஷயங்கள் தர்க்கத்தினால் விவாதிக்கப்படலாகாது. இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்குவது தான் சிந்தனை செய்யப்பட முடியாத ஒன்றின் தன்மை.)

என்று கூறப்பட்டுள்ளது.

சில பொருட்கள் புலன்களுக்கும், சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்டவையாக இருக்கின்றன. அவைதான் இங்கு "அசிந்த்யா:" என்று கூறப்பட்டுள்ளன. காற்று உள்ளது. அதை நம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால், காற்று உள்ளதா? என்று யாராவது கேள்வி கேட்டால் நாம் காற்று உண்டு என்றுதான் சொல்லுவோம். ஏனென்றால் காற்றினால் அசையும் இலைகளை நாம் காண்கின்றோம். இந்த இலைகள் அசைவதற்குக் காரணமாக ஏதாவது இருக்க வேண்டும். அதுவேதான் காற்று என்று நாம் அனுமானம் (ஊகம்) செய்து கொள்ளலாம். இந்த நிலையில் ஒருவன், "நான் எனக்குக் காற்றை காட்டிவிடு என்று சொல்கிறேன். நீயோ என்னை இலையைப் பார்க்கச் சொல்கிறாயே" என்று கேட்கலாம். இவ்வாறு கேட்பவனுக்கு நாம் என்னதான் சொல்வது? ஒன்று மட்டும் செய்யலாம். அவனது மூக்கைப் பலாத்காரமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது அவன், "விட்டுவிடு, விட்டுவிடு, எனக்கு உயிரே போய்க் கொண்டிருக்கின்றது. என்னால் மூச்சு விடவே முடியவில்லை" என்று கதறுவான். அப்பொழுது நாம் அவனிடம், "நீதான் காற்றே இல்லை என்கின்றாய். ஆனால் காற்றைப் பார்க்க வேண்டும் என்றும் கூறுகின்றாய். நீ பார்க்காத காற்று உனக்கு வேண்டும் என்று மட்டும் எப்படிச் சொல்லுவாய்?" என்று கேட்கலாம். அப்பொழுது தவித்துக் கொண்டிருப்பவன் எப்படியாவது விடுதலை பெற்று, "அப்பாடா! இந்தக் காற்று இல்லாமல் எப்படி உயிர் வாழ முடியும்?" என்று கூறுவான். இதன் மூலமாகக் காற்று இருக்கின்றது என்பதை நம்மால் நிரூபிக்க முடியும்.

Koviloor Digital Library

சில விஷயங்களை நம்மால், கண்ணால் பார்த்துத் தீர்மானம் செய்ய முடியும். நெருப்பு, மலை, பொருட்கள் போன்றவைகளை நாம் கண்ணால் பார்த்துத் தீர்மானம் செய்யலாம். மற்ற சில விஷயங்களைக் காதுகளால் கேட்டால்தான் நம்மால் தீர்மானம் செய்ய முடியும். இதற்கு உதாரணம் சங்கீதம் ஆகும். ஒரு செவிடன், "சங்கீதம் எப்படி இருக்கின்றது? நீ நன்றாக இருக்கின்றது என்று சொன்னாயே, அதை எனக்குத் தெரியப்படுத்து" என்று சொன்னால் நம்மால் என்னதான் செய்ய முடியும்? கைகளால் சைகைகள் செய்து, "இது இவ்வாறு இருக்கின்றது; ஆகையால் நன்றாக உள்ளது" என்று காண்பிக்கவா முடியும்? சங்கீதத்தைக் காதால் கேட்டால்தான் அதன் சுவையைத் தெரிந்துகொள்ள முடியும். ஒருவனுக்குக் காது கேட்கவில்லையென்றால் அவனுக்குச் சங்கீதத்தின் தன்மையைப் புரிய வைப்பது மிகக் கடினம். அதேபோல்தான் பரமாத்மாவையும் புலன்களால் அடைய முடியாது. அந்தப் பரம்பொருளைப் பற்றி,

ந தத்ர வாக்கச்சதி நோ மன: (4.)

(அங்கு வாக்கோ, மனமோ செல்வதில்லை.)

என்று கூறப்பட்டிருக்கிறது. அதேபோல்,

யதோ வாசோ நிவர்தந்தே | *அப்ராப்ய மனஸா ஸஹ* | (5.)

(எதை வாக்காலும் மனதாலும் அடைய முடியாதோ....)

என்றும் கூறப்பட்டிருக்கிறது. அதை வாக்கினாலும் அடைய முடியாது; மனதாலும் அடைய முடியாது.

இதன் பிறகு ஒரு கேள்வி வரும். புலன்களுக்கு அப்பாற்பட்டதாக ஒரு பொருள் இருந்தால் அதை எவ்வாறுதான் நாம் அடைவது? அதற்கும் பதில் வேதத்தில் உள்ளது.

தத்விக்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் (1.24)

(அதை (பரம்பொருளை) அடைய ஒருவன் குருவிடம்தான் செல்ல வேண்டும்.)

Koviloor Digital Library

அதை அடைவதற்குக் குருவிடம் செல்ல வேண்டும். பரம் பொருள் எப்படிப்பட்டது? (பரம்பொருள் எப்படிப்பட்டது என்று தெரிந்துகொண்டுவிட்டு, குரு சொல்லிக் கொடுப்பதைப் பற்றிப் பார்ப்போம்.)

தம் த்வௌபநிஷதம் புருஷம் (6.)

(உபநிஷத்துக்களின் மூலமாக மட்டும் தெரியப்படுத்தப் படுகின்ற புருஷன்...)

என்று ஓரிடத்தில் மேற்கோள் ஒன்று வருகிறது. உபநிஷத்துக்களில் தீர்மானிக்கப்பட்ட புருஷன் பரம்பொருள். அதாவது பரம்பொருளை உபநிஷத்துக்களின் மூலமாகத்தான் நாம் தெரிந்துகொள்ள முடியும். உபநிஷத்துக்களின் உதவி இல்லாமல் நாம் அதைத் தெரிந்துகொள்ள முடியாது. (குருவும் உபநிஷத்துக்களை ஆதாரமாகக் கொண்டுதான் உபதேசம் கொடுப்பார்.)

சூரியனை நாம் தெரிந்துகொள்ள விரும்பினால் அங்கு சென்றுவிட்டா வரமுடியும்? முடியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காக வானவியல் சாஸ்திரத்தை உபயோகப்படுத்த வேண்டும். அதற்கு முதலில் அந்த சாஸ்திரத்தில் ஓரளவு நம்பிக்கை வைத்துக்கொள்ள வேண்டும். பிறகுதான் நாம் தீர்மானம் செய்துகொள்ளலாம். அதேபோல்தான் பரம்பொருளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் வேதம் நமக்குத் தேவைப் படுகின்றது. வேதத்தில் நாம் நம்பிக்கை வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகின்றது.

சிலர் இங்கு ஓர் எதிர்ப்பை எழுப்பலாம். “உபநிஷத்துக்களில் பரம்பொருளைப் பற்றிச் சொல்ல வேண்டியிருந்தால் பரம்பொருளைப் பற்றி மட்டும் சொல்லி விட்டிருக்கலாமே, ஏன் மற்றவைகளைப் பற்றியும் கூற வேண்டும்?” என்ற கேள்வி வரலாம். உலகத்திலேயே பாருங்கள். ஒருவன் ஆறாவது வகுப்புவரைப் படித்துவிட்டு படிப்பை நிறுத்தி விடுகின்றான். மற்றொருவன் ‘மெட்ரிக்’ வரையில் படிக்கின்றான். மூன்றாமவன் ஒரு பட்டத்தைப் பெறுகின்றான். மற்றொருவன் நீண்டகாலம் ஆராய்ச்சி செய்து உலகத்திலேயே பெரிய நிபுணன் என்கின்ற பெயரை வாங்குகின்றான். இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதத்தில், (வெவ்வேறு விகிதத்தில்) படிக்கின்றனர்.

Koviloor Digital Library

அதேபோல்தான் உலகத்திலும் சில மக்கள், லௌகீகமான பொருட்களிலேயே ஈடுபாடு வைத்துக்கொண்டிருப்பர். அவர்களுக்குச் சிறிதளவுதான் வைராக்யம் இருக்கும். மற்ற சிலர் மோக்ஷத்தை விரும்புகின்றார்கள். ஆனால் மோக்ஷமானது அடுத்த பிறவியில் கிடைத்தாலும் பரவாயில்லை என்று கருதிக்கொண்டு தங்களது வாழ்க்கையை ஆசாரம் பொருந்தியதாக நடத்திக்கொண்டு வருகின்றார்கள். ஆனால் உலகத்தில் உள்ள பற்றை அவர்கள் முழுவதுமாக விட்டிருப்பதில்லை. வேறு சிலரும் இருக்கின்றார்கள். அவர்கள்,

அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே (1.16)

(இங்கேயே பரம்பொருளை அடைகிறார்கள்.)

என்று கூறப்பட்ட வகையில் தீவிரமாக மோக்ஷத்தில் ஒரு விருப்பத்தை வைத்துக் கொண்டு இப்பொழுதே பரம்பொருளை அடைவதற்கு முயற்சி செய்கின்றனர். இவர்கள் எல்லோருக்கும் ஒரேபோல் உபதேசம் கொடுத்தால் அது நியாயம் ஆகுமா? நியாயம் ஆகவே ஆகாது. ஆதலால்தான், "கர்மாவைச் செய், உபாஸனையைச் செய். பிறகு ஞானத்தைப் பெற்றுக் கொள்" என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளது.

உலகத்தை நம்மால் மாற்ற முடியாது. உலகம் தானாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதில் ஒவ்வொருவனும் அவனவனுக்குப் பொருத்தமான வழியில் சென்று கொண்டிருக்க வேண்டும். உலகத்தில் ஓரளவு பற்று வைத்திருப்பவனை நோக்கி வேதம், "நீ கர்மாவைச் சரிவர செய்துகொண்டு வா! உலகத்தையும் பார்த்துக்கொண்டு வா" என்று கூறுகிறது.

பரீக்ஷ்ய லோகான் கர்மசிதான் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத் (7.)

(உலகைப் பரிசோதித்துவிட்டு பிராஹ்மணன் வைராக்யத்தை அடைய வேண்டும்.)

என்று கூறப்பட்டுள்ளது போல் உலகத்தை பரிசோதனை செய்துகொண்டு வந்து, "எதிலும் சுகம் இல்லை, எதுவும் நிலைபெற்றதாக இல்லை" என்று தீர்மானம் செய்தால்தான் ஒருவனுக்கு வைராக்யம் வர முடியும். அவ்வாறு உலகத்தை பரீக்ஷை

Koviloor Digital Library

செய்து வைராக்யம் வந்த பிறகு ஒருவன் ஞானத்தை அடைய முடியும். ஞானம் அடைந்த பிறகு மக்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? அதற்குப் பதிலாக,

ஆசார்யாத் லப்தபோதா அபி விதிவசத: ஸந்நிதௌ
ஸம்ஸ்திதானாம் ।
த்ரேதா தாபம் ச பாபம் ஸகருணஹ்ருதயா: ஸ்வோக்திபி:
க்ஷாலயந்தி ॥ (8.)

(ஆசார்யரிடமிருந்து முன் செய்த புண்ணியத்தின் பயனாக ஞானத்தைப் பெற்றவர்களும், தம் முன் இருக்கக் கூடியவர்களுடைய (ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்ற) மூன்றுவிதமாக இருக்கும் துன்பத்தையும், (மனம், மொழி, மெய் என்பவைகளால் செய்யப்படும் முவ்வகையான) பாவத்தையும் கருணை இதயமுள்ளவர்களாக இருந்து கொண்டு தங்களது சொற்களால் போக்கிவிடுகின்றார்கள்.)

சதச்லோகீயில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "ஆசார்யன்" என்றால் எத்தகையவன்? அவன் ஞானத்தை அடைந்தவன்.

வஸந்தவல்லோகஹிதம் சரந்த: (9.)

(வசந்த காலத்தைப் போல உலக நன்மைக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.)

என்று சொல்லப்பட்ட வகையில் ஆசார்யன், வசந்த ருதுவைப் போல் உலகத்தின் நன்மைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றான். வசந்த ருதுவில் அதிக வெய்யிலும் கிடையாது, அதிகக் குளிர்ச்சியும் கிடையாது. ஆனந்தத்தைத் தரக் கூடிய காற்று வீசிக் கொண்டிருக்கும். அதேபோல் இந்த மஹாபுருஷர்கள் ஆத்மாவை அறிந்து தாம் அடைய வேண்டியதை அடைந்தவர்களாகிவிட்டாலும் உலகத்தின் நன்மைக்காக மக்களின் மனதுக்குப் பொருத்தமான வகையில் உபதேசம் செய்கின்றனர். உதாரணத்திற்கு சிலருக்குச் செயல்கள் செய்வதில் அதிக சிரத்தை இருந்தால் அவர்களுக்குத் தகுந்த வகையில் கர்மாக்கள் தொடர்பான உபதேசங்களையும் செய்கின்றனர். ஆயினும், "நீங்கள் கர்மாக்களைச் செய்துகொண்டு வந்தாலும், அவற்றை மட்டும்

Koviloor Digital Library

செய்துகொண்டு வந்தால் போதாது" என்று அவர்கள் கூறுவர். ஏனென்றால்,

க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி (2.27)

(புண்ணிய கர்மா முடிந்து விட்டால் ஒருவன் ஸ்வர்கத்திலிருந்து மீண்டும் மனித உலகத்திற்கு வந்து விடுவான்.)

என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் "நீ ஓரளவிற்கு உபாஸனையும் செய்துகொண்டு வா" என்று சீடனிடம் ஆசார்யர்கள் கூறுவார்கள். கர்மாவை எப்படிச் செய்வது? என்கின்ற கேள்விக்குப் பதிலாக கீதையில்,

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுன |
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக: ஸாத்த்விகோ மத: || (10.)

(அர்ஜுனனே! பற்றுதலையும் பலனையும் விட்டு, செய்தற்குரியதென்றே எந்த நித்திய கர்மம் செய்யப்படுகிறதோ, அந்தத் தியாகம் ஸாத்விகமானதென்று கருதப்படுகிறது.)

என்று சொல்லப்பட்டுள்ளது. "நீ காரியங்களைச் செய்து கொண்டு வருகின்றாய். (ஆனால்) அதன் மூலமாக பகவானின் ஆராதனையைச் செய்வதில்லை. பகவானை ஆராதனை செய்வதற்குப் பலவிதமான வழிகள் இருக்கின்றன. செயல்களைச் செய்யும்பொழுது பகவானையே சிந்தனை செய்து "பகவானுக்காக" என்று அந்தக் காரியங்களை செய்துகொண்டு சென்றால், அது பகவானின் ஆராதனையாகும். ஆகையால் ஒருவன் தன்னுடைய கடமையை "இறைவனுக்காக" என்று நினைத்துக்கொண்டு செய்தால் அது ஆராதனையாகும்" என்றெல்லாம் மஹான்கள் உபதேசம் தருவார்கள். உபாஸனை செய்வதற்கும் பலவிதமான முறைகள் இருக்கின்றன.

பகவானே,

அஹம் வைச்வானரோ பூத்வா ப்ராணினாம் தேஹமாச்ரித: |
ப்ராணாபானஸமாயுக்த: பசாம்யன்னம் சதுர்விதம் || (11.)

(உதரக்கனலாக நான் உயிர்களின் உடலில் இருந்துகொண்டு பிராண, அபான வாயுக்களுடன் கூடி நான்குவித அன்னத்தை ஜீரணிக்கிறேன்.)

Koviloor Digital Library

என்று கீதையில் கூறுகின்றார். இதிலிருந்து, "பகவானே வைச்வானர ரூபத்தில் இருந்துகொண்டு ஆஹாரங்களை ஜீரணம் செய்து கொண்டு வருகின்றார்" என்று தெரிகின்றது. இவ்வாறும் நாம் பகவானைப் பார்க்க வேண்டும். பயிற்சி செய்துகொண்டே சென்று கடைசியில் எங்கும் பரம்பொருளையே பார்க்கும் நிலை வந்துவிட்டால் அது மிக நன்று.

பச்யஞ்ச்ருண்வன் ஸ்ப்ருசஞ்ஜிக்ரன்
அச்னன்கச்சன்ஸ்வபஞ்ச்வஸன் ll (12.)

(பார்த்தாலும், கேட்டாலும், தொட்டாலும், முகர்ந்தாலும், அருந்தினாலும், நடந்தாலும், உறங்கினாலும், சுவாசித்தாலும்...)

என்றும்,

இந்த்ரியாணீந்த்ரியார்த்தேஷு வர்தந்த இதி தாரயன் ll (13.)

(புலன்கள் தத்தம் விஷயங்களுடன் தொடர்புகொண்டு செயலாற்றுகின்றன என்று உறுதிகொண்டு...)

இவ்வாறு ஒருவன் இருந்துகொண்டு வந்தால்,

ப்ரஹ்மண்யாதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி ய: ।
லிப்யதே ந ஸ பாபேன பத்மபத்ரமிவாம்பஸா ll (14.)

(பரம்பொருளைச் சார்ந்து பற்றுதலைத் துறந்து கர்மங்களைச் செய்கின்றவன், நீரில் (உள்ள) தாமரையிலை (நனையாததைப்) போன்று பாவத்தில் சிக்குவதில்லை.)

என்று கூறப்பட்டுள்ளது போல் எப்படித் தாமரை இலையில் நீர் ஒட்டுவதில்லையோ அதேபோல் அத்தகையவனுக்குப் பாவம் ஒட்டவே ஒட்டாது.

நாம் பகவானையே காண வேண்டும் என்று சொன்னால் அவனை நம்மைக் காட்டிலும் வேறாகக் காண வேண்டுமா? என்னும் கேள்வி நமக்கு எழும். இறைவனை நம்மைக் காட்டிலும் வேறாக நாம் கண்டோமென்றால் எப்பொழுதும் அவன் விஷயத்தில் நமக்கு ஓரளவிற்கு பயம் இருந்துகொண்டுதானிருக்கும். மேலும் அவன் உயர்ந்தவனாக இருப்பான். அவனது நோக்கில் நாம்

Koviloor Digital Library

ஓரளவிற்குத் தாழ்ந்தவர்களாகவே இருப்போம். இவ்வாறு இருந்தால் பரிபூரண (முழுமையான) நிலையை அடைய முடியாது. உதாரணத்திற்கு ஒருவன் அமைச்சராக விரும்பலாம். அவன் அமைச்சரானாலும் அவனுக்கு மேல் முதலமைச்சர் என்ற ஒருவர் இருக்கத்தான் செய்வார். ஆதலால் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று எண்ணி ஒருவர் முதலமைச்சர் ஆவதற்கு முயற்சி செய்யலாம். அவனால் அவ்வாறு பதவி பெற முடியுமோ, முடியாதோ என்கின்ற பிரச்சினைக்கு நாம் போகவில்லை. அப்படியே அவன் "முதலமைச்சர்" ஆனாலும் அவனுக்கு மேல் "பிரதமர்" என்ற ஒருவர் இருக்கின்றார். ஆதலால் இவ்வாறு (மேலும் மேலும்) சென்று கொண்டேயிருந்தால் இதற்கு முடிவே இராது. ஆகையால்தான் சாஸ்திரங்களில் "இரண்டாவதாக ஒரு பேர்வழி இருந்தால் அப்போது பயம் ஓரளவிற்கு இருக்கத்தான் செய்யும். பரிபூரண நிலை இருக்காது" என்று கூறப்பட்டுள்ளது.

த்விதீயாத்வை பயம் பவதி (15.)

(இரண்டாவது பொருளிருந்தால் பயம் ஏற்படுகிறது.)

என்று (முன்னோர்கள்) சொன்னார்கள். எந்தப் பொருள் நமக்கு முன்னால் இருந்தாலும் அதன் மூலமாக ஓரளவிற்கு நமக்கு பயம் ஏற்படத்தான் செய்யும். ஆனால் பரம்பொருள்தான் உலக ரூபத்தில் தோன்றுகிறது. நாம் அந்தப் பரம்பொருளைக் காட்டிலும் வேறானவர்களில்லை.

இதம் ஸர்வமஸ்ருஜத । யதிதம் கிஞ்ச ।
தத் ஸ்ருஷ்ட்வா । ததேவானுப்ராவிசத் । (16.)

(உள்ளவையனைத்தையும் "அவன்" படைத்தான். அந்தப் பரமாத்மாவே இவ்வாறு படைத்துவிட்டு அதிலேயே நுழைந்தான்.)

என்றும்,

ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத் (17.)

(அழகியவனே! இதற்கு (படைப்பிற்கு) முன் 'ஸத்' மட்டும்தான் இருந்தது.)

என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

Koviloor Digital Library

இந்தப் படைப்பிற்கு முன் வெறும் அந்த 'ஸத்' ஆகிய (மூன்று காலங்களிலும் நிலைபெற்றுள்ள) பரம்பொருள் மட்டும்தான் இருந்தது. அந்தப் பரம்பொருள்தான் உலக ரூபத்தில் பிறகு தோன்றியது. உலக ரூபத்தில் தோன்றியதால் பரம்பொருளில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டதா? (இல்லை). அது தனது ஸ்வரூபத்தை மாற்றாமல் தான் அவ்வாறே இருந்துகொண்டு உலக வடிவாகத் தோன்றுகிறது. எவ்வாறு தங்கமானது, வளையல் போன்ற அணிகலன்களின் வடிவில் தோன்றுகின்றதோ, அவ்வாறு தோன்றும்போதும், தங்கம் தனது ஸ்வரூபத்தில் மாறுதல் அடைவதில்லையோ, அதேபோல்தான் பரம்பொருளும். (உலக வடிவில் தோன்றும் போதும் பரம்பொருள் மாறுதல் அடைவதில்லை.) அதே பரம்பொருள்தான் உலக வடிவில் மட்டுமின்றி ஜீவர்களின் வடிவிலும் தோன்றுகிறது.

அறியாமையினால் பரம்பொருள் ஜீவ வடிவாகத் தோன்றி "நான் சுகமாக இருக்கின்றேன்; நான் துக்கமாக இருக்கின்றேன்" என்றெல்லாம் கூறச் செய்கின்றது. பரம்பொருளின் உண்மையான ஸ்வரூபத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இந்த உபதேசத்தை பகவத்பாதாள் நமக்குக் கொடுத்துள்ளார். பகவத்பாதாள் சொந்தமாகத் தாமாகவே இந்த உபதேசத்தைக் கொடுக்கவில்லை. அவர் வேதத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் இத்தகைய உபதேசங்களைக் கொடுத்தார். அவரது வழி வந்த நாம் இந்த உபதேசங்களுக்கு மிகுந்த மதிப்பைக் கொடுக்க வேண்டும். மேலும் வேதத்தின் பராமரிப்புக்காகவும் முயற்சி செய்ய வேண்டும்.

வேதத்திற்குப் பராமரிப்பு இருந்தால்தான் நமக்கும் முன்னேற்றம் ஏற்பட நல்ல வாய்ப்புண்டு. வேதம் இறைவனது மூச்சுக் காற்றைப் போல் உள்ளது. அது பரம ப்ரமாணமாக (உயர்ந்த சான்றாக) உள்ளது. நாம் (வாழ்வில்) சென்று கொண்டிருக்கும் வழி சரியா, இல்லையா என்பதை நாம் வேதத்தை வைத்துக்கொண்டு முடிவு செய்துவிடலாம். நம் முன்னோர்கள் வேதத்தை உயர்ந்த ப்ரமாணமாக வைத்துக்கொண்டு அதில் கூறப்பட்டபடி வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆதலால் அவர்கள் இன்பகரமான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

Koviloor Digital Library

எல்லோரும் அவ்வாறு சிரத்தையோடிருந்து, ஞானப் பாதையில் சென்று பரம்பொருளை அடைந்தால்தான் செய்ய வேண்டியதைச் செய்தவர்களாவோம்.

ஹர நம: பார்வதீபதயே।
ஹர ஹர மஹாதேவ॥
ஜானகிகாந்தஸ்மரணம்।
ஜய ஜய ராம ராம॥

Koviloor Digital Library

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

6. கீதை புகட்டும் நெறி

விசுத்தஞானதேஹாய த்ரிவேதீதிவ்யசக்ஷுஷே
ச்ரேய: ப்ராப்திநிமித்தாய நம: ஸோமார்ததாரிணே ।
நமாமி யாமினீநாதலேகாலங்க்ருதகுந்தலாம்
பவானீம் பவஸந்தாபநிர்வாபணஸுதாநதீம் ॥ (2.1)

பகவத் கீதை என்பது பகவான் அருளிக் கொடுத்த ஒரு நூல். "கீதையினால் நமக்கு என்ன பிரயோஜனம்? நாம் இதை ஏன் படிக்க வேண்டும்? எந்த அளவு சிரத்தையுடன் படிக்க வேண்டும்?" என்ற கேள்விகளுக்கு நமக்குப் பதில் கிடைத்தால் நாம் எல்லோரும் பகவத் கீதையைப் படிப்போம்.

விஸ்ருஜ்ய ஸசரம் சாபம் சோகஸம்விக்னமானஸ: ॥ (1.)

(அம்பையும் வில்லையும் எறிந்துவிட்டுத் துயரம் வருத்துகின்ற மனதோடு...)

அர்ஜுனன் பெரிய யுத்தத்தைச் செய்வதற்கு தயாராக வந்தான். அந்த யுத்தத்திற்கு ஒரு விசேஷம் உண்டு. (அக்காலத்திலெல்லாம்) கண்டவனைக் கண்ட இடத்தில் கண்டவன் அவன் மேல் பாணத்தை செலுத்த மாட்டான். யார் யுத்தத்திற்குத் தன் எதிரில் வந்திருக்கிறார்களோ அவர்களைத் தோற்கடித்து விட்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அம்பு எய்துவர். அப்பேற்பட்ட காலம் அது. இப்போது உள்ளதைப் போல் "திடீரென்று இரவு நேரத்தில் மக்களின் மேல் அணுகுண்டைப் போட்டு யுத்தத்தை வெற்றி கொள்ள வேண்டும்" என்ற எண்ணம் அக்காலத்தவர்களுக்குக் கிடையாது. ஆகவே நன்கு ஆராய்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட யுத்தத்தை மேற்கொண்டிருக்கும் அர்ஜுனன் போர்க்களத்திற்கு வந்தான்.

தமுவாச ஹ்ருஷீகேச: ப்ரஹஸன்னிவ பாரத (2.)

(திருதராஷ்டிரரே ! ஹ்ரிஷீகேசர் (பகவான்) புன்முறுவல் பூத்தவண்ணம் (இரண்டு சேனைகளின் நடுவே இன்னற்படும்) அர்ஜுனனிடம் கூறினார்.)

Koviloor Digital Library

அர்ஜுனன் துன்பத்தினால் கலக்கமுற்று மதி மயங்கியவனானான். மோஹத்தினால் "எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்ய வேண்டாம்" என்பதை மறந்த அர்ஜுனன், திகைத்து நிற்கும் சமயத்தில் உபதேசம் கொடுக்கிறான் பகவான்.

நமக்கு நம் கடமைகளில் ஏதாவது சந்தேகம் வந்தால் அப்பொழுது சம்பந்தப்பட்ட புத்தகத்தை எடுத்துப் பார்ப்போம். நாம் செய்யும் தூங்குவது, சாப்பிடுவது, சினிமாவிற்குச் செல்வது முதலிய எல்லாக் காரியங்களும் சரியானவைதான் என்ற நிச்சயம் வந்து விட்டால் அப்பொழுது நாம் பகவத் கீதையின் வழிக்குச் செல்ல வேண்டியதேயில்லை. "நாம் செய்வது சரியோ? தவறோ?" என்று நமக்கு மோஹம் (கலக்கம்) வந்திருந்தால் அதைப் போக்குவதற்காக "கீதையை எல்லோரும் படியுங்கள்" என்று நான் சொல்வேன். கேட்பவன் கவலை நிரம்பிய மனதினனாய் இருக்கிறான். உபதேசம் கொடுப்பவன் எப்பேற்பட்டவனாக இருக்கிறான்?

தமுவாச ஹருஷீகேச: ப்ரஹஸன்னிவ பாரத

என்று கூறப்படுவது போலிருந்தான் இறைவன்.

ஒருவன் மிகுந்த துக்கப்பட்டுக் கொண்டு வ்யாமோஹம் (மதிமயக்கம்) கொண்டிருக்கையில், உபதேசம் கொடுப்பவரும், "ஐயோ ! எனக்கும் அப்படியே ஆகிவிட்டது. எனக்கும் ஒன்றுமே தெரியாமல் இருக்கிறது" என்று உட்கார்ந்திருந்தால் அப்பேற்பட்டவரால் என்ன பிரயோஜனம் ? ஆனால் எதிலும் பற்றுக்கொள்ளாத பகவான் கிருஷ்ணன், அர்ஜுனனை நோக்கி, "ஐயோ! பைத்தியக்காரனே! நீ எவ்வளவு நன்றாக ஆராய்ந்து, செய்ய வேண்டிய தீர்மானம் எல்லாவற்றையும் நன்கு செய்து கொண்டு வந்து, போர்க்களத்திற்கு வந்துள்ள சமயத்தில் 'கடமைகள் எவை?' என்ற விஷயத்தில் சிந்தனையில்லாமல் இருக்கிறாயே! இது பைத்தியக்காரத்தனம் தானே" என்று சொல்லி, சிறு குழந்தைகள் போடும் சண்டையைப் பார்த்து நாம் சிரித்து அதைப் பைத்தியக்காரத்தனம் என்று சொல்வதைப் போல், யுத்தத்தில் உபதேசம் செய்துள்ளான். நாமும் 'குரு' என்று யாரையாவது நாட இருந்தால் அப்பேற்பட்ட(கிருஷ்ணனைப் போன்ற) குருவை நாட வேண்டும்.

Koviloor Digital Library

மனிதர்கள் செல்வாக்கை ஆதாரமாக வைத்துக்கொண்டு பல பாவங்களைச் செய்கிறார்கள். இறைவனே ஓரிடத்தில்,

சாரீரகஸ்யாபி க்ருதே மூடா: பாபானி குர்வதே (3.)

(நன்றியில்லாத அழியக்கூடிய உடலைப் போஷிப்பதற்காகவே மூடர்கள் பாவங்களைச் செய்கிறார்கள் என்பது கருத்து.)

என்று கூறியுள்ளார். இவ்வாறு மனிதர்கள் பாவங்களைச் செய்கிறார்கள். நம் 'சரீரம்' என்பது அழியக்கூடியது. அழியக்கூடிய இந்த உடலை நாம் நிரந்தரமாக வைத்துக்கொள்ளப் பாடுபடுகிறோம். எந்தப் பொருளின் இயற்கை அழியக்கூடியதாய் உள்ளதோ அதை எப்போதும் இருக்குமாறு செய்து கொள்ள முடியாது. அதேபோல் எது எப்போதும் இருக்குமோ அதை அழிப்பதும் சாத்தியமில்லாத காரியம். இப்படி இருக்கும்பொழுது இந்த சரீரம் என்பது அழியக்கூடியது என்று தெரிந்தும் அதை நாம் எப்போதும் இருக்குமாறு செய்துகொள்ள என்னென்னவோ பாடுபடுகிறோம். காரணம் என்னவென்றால் 'இந்த அழியக்கூடிய தேஹம் நம்முடையது' என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். "நாம் யார்? நம்முடைய சரீரம் யார்?" என்ற ஒரு சந்தேகம் நமக்கு வந்துள்ளது.

அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: சரீரிண: |
அனாசினோऽப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத || (4.)

(நிலையாகவும், அழிவற்றதாகவும், அளவிட முடியாததாகவும் உள்ள ஆத்மாவின் இவ்வுடல்கள் யாவும் அழியும் தன்மையுள்ளவையாகும். ஆகையால் பாரதனே! போர் புரிவாயாக.)

இது குறித்து பகவான், "இந்த சரீரம் என்று சொல்லப்படுவது அழியக்கூடியது. ஆனால் ஆத்மா என்று சொல்லப்படுவது அழிவில்லாதது. நீ அழிவில்லாத ஆத்மா. உன்னுடைய பழைய கர்மாவினால் இந்த உடலை அடைந்திருக்கிறாய். அப்படி அடைந்திருக்கும் உடல் 'அழியுமா? அழியாதா?' என்று கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நீ அரசகுலத்தில் பிறந்து போர்க்களத்திற்கு வந்திருக்கையில் உனக்குச் சொல்லியிருக்கப்பட்ட கடமையைச் செய்தால்தான் உனக்கு உயர்ந்த நன்மை உண்டாகும்" என்று சொல்கிறார். இப்படி

Koviloor Digital Library

இருக்கையில் பகவானின் பகவத் கீதையைப் பார்த்தால் நாம் எப்பேற்பட்ட கஷ்டத்தில் இருந்தாலும் சுகத்தில் இருந்தாலும், பகவானின் வடிவத்தை அறிந்துகொள்ள வேண்டியிருந்தாலும் அது நமக்கு உதவும்.

"பகவான்தான் உலகைப் படைத்தான்" என்று சொல்கிறார்கள். உலகைப் பகவான் படைத்தான் என்பது உண்மையா? பொய்யா? என்று பார்க்கும்பொழுது பகவானே கீதையில்,

தஸ்ய கர்தாரமபி மாம் வித்த்யகர்தாரமவ்யயம் || (5.)

(இவைகளை நான்தான் படைத்தேன் என்றாலும் என்னை "மாறுதலற்றவன்" என்றும் "செயலற்றவன்" என்றும் அறிக.)

என்று கூறுகிறார். இவைகளைப் படைப்பவனும் நானே! உதாசீனப்படுத்துபவனும் நானே! "இரண்டும் ஒரே இடத்தில் ஏற்படுமா?" என்றால், இரண்டும் ஒரே இடத்தில் இருக்கும்படி தெரியுமானால் அது உண்மையிலேயே அவ்வாறிருக்க வேண்டும். அல்லது நாம் வ்யவஹாரத்திற்காக இவ்வாறு கற்பித்துக் கொண்டதாய் இருக்க வேண்டும். பகவானின் கர்த்ருத்துவம் (செயல் செய்வது) உண்மையாய் இருக்கும் பட்சத்தில் உதாசீனத்தை நாம் என்றும் பார்க்க முடியாது. ஆனால் இறைவனே, "உண்மையில் நான் செயல் புரியாதவன்தான். ஆனால் வ்யவஹாரிக திருஷ்டியில் நான் செயல் செய்பவனாகத் தோன்றுகிறேன்" என்றான்.

அர்ஜுனன் கஷ்டத்தினால் மிகவும் ஆலோசித்துக் கொண்டிருக்கையில், பகவான்,

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச |
தஸ்மாத் அபரிஹார்யேऽர்த்தே ந த்வம் சோசிதுமர்ஹஸி || (6.)

(பிறந்தவன் இறப்பதும் , இறந்தவன் பிறப்பதும் உறுதி. ஆகவே விலக்க முடியாத விஷயத்தில் நீ வருந்துவது பொருத்தமாகாது.)

என்று கூறினார். இவ்வாறு வரும் பல சுலோகங்கள் மூலம் அர்ஜுனனுக்கு போர் புரிதல் என்ற அவனது கடமையை

Koviloor Digital Library

உணர்த்தினார் பகவான். நாம் நம் கடமையை மறவாமல் இருக்க வேண்டும் என்று கீதையில் அர்ஜுனனை நிமித்தமாக வைத்துக் கொண்டு, ஆங்காங்கே அநேகமான மிக நுட்பமான விஷயங்களைச் சுலபமான வகையில் பகவான் நமக்குத் தெளிவுபடுத்துகிறார். அதற்காக நாம் எதுவும் கஷ்டப்படத் தேவையில்லை. நாம் தர்மத்தைச் செய்து கொண்டிருந்தால் போதும். எவ்வளவு தூரம் தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும்?

நேஹாபிக்ரம நாசோऽஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே |
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் || (7.)

(இதில் முயற்சி வீண்போவது கிடையாது. குற்றமொன்றும் வராது. இதைச் சிறிது பழகினும் பெரும் பயத்தினின்றும் இது காப்பாற்றும்.)

முயற்சி செய்தது என்றும் பலனைக் கொடுக்காமல் போகாது. மேலும் (முடிந்தவரை) செய்ததனால் பாவமும் இல்லை. ஆனால் நம்மால் இயன்றவரை தர்மத்தைக் கடைப்பிடித்தால் நாம் நன்மை அடைவோம். இத்தகைய விலைமதிப்பற்ற உபதேசங்களை பகவான் கீதையில் கொடுத்திருக்கிறார். இந்த நூல் பரம்பொருள் பற்றிய நூல்களில் முதலிடத்தைப் பெறத் தகுதியுள்ளது. பல ஆசார்ய புருஷர்கள் பகவத் கீதைக்கு பாஷ்யங்களை (விரிவுரைகளை) எழுதியிருக்கிறார்கள். அவரவர் பார்வையிலிருந்து அவரவர்கள், பகவத் கீதைக்கு உரை எழுதியிருக்கிறார்கள். ஒருவன் பகவத் கீதையின் பொருளை (ஆழ்ந்து ஆராயாமல்) மேலோட்டமாகப் பார்த்தால் அவனுக்கு விபரீதமான பலன்கள் தான் கிடைக்கும். ஆகையால் எல்லோரும், பகவத் கீதை என்ற இந்த உயர்ந்த நூலை "இது நம்முடையது. இது நம்முடைய நன்மைக்காகச் சொல்லப்பட்டது" என்ற பாவனையுடன் பார்க்க வேண்டும். (கீதையில் அத்வைத தத்துவம் தெளிவாக உபதேசிக்கப்படுகிறது. அகு குறித்து இப்போது பார்ப்போம்.)

உலகம் எல்லாவற்றையும் மறந்தால் அத்வைதம். எனவே நாம் உலகத்தை மறந்து கொண்டே வர வேண்டும். ஒரு கூத்தாடியானவன் தலையில் குடத்தில் தண்ணீரை வைத்து ஆடிக் கொண்டேயிருப்பான். ஆடும்பொழுது நம்மையே பார்த்துக்

Koviloor Digital Library

கொண்டிருப்பான். கை கால்களை ஆட்டிக் கொண்டு குதிப்பான். ஆனால் அவன் யோசனையெல்லாம், "குடம் எங்கே விழுந்துவிடுமோ? அல்லது அதிலிருக்கும் தண்ணீரெல்லாம் கொட்டிவிடுமோ?" என்பதில்தான் இருக்கிறது. அதேபோல் நம்முடைய யோசனையெல்லாம் பரம்பொருளில் மட்டும் வைத்து விட்டு இந்தக் காரியங்களைச் செய்யும்போது உதாஸீனத்துடன் (பற்றில்லாமல்) இருக்க வேண்டும். நாம் பேசிக் கொண்டேயிருப்போம். ஆனால் அதே சமயத்தில் கையை ஆட்டிக் கொண்டேயிருப்போம். அப்போது கையை ஆட்டுவதற்காக நாம் யோசனை செய்ய வேண்டிய அவசியமில்லை. அது கையின் இயற்கையாகவே தென்படும். அதேபோல் இந்த உலகத்தில் வ்யவஹாரம் செய்வது நம் இயற்கை. அதற்கு அதிகமாக புத்தியை செலவு செய்யத் தேவையில்லை. (உலக விஷயங்களில்) நாம் உதாஸீனமான ஒரு மனோபாவனையை ஏற்படுத்திக்கொண்டு அதை மேன்மேலும் நிலையாக்கிக் கொண்டு வந்தால் அத்யாத்ம (பரம்பொருளின்) அனுபவம் தானாகவே வந்துவிடும். ஆத்மா ஸ்வயம்பிரகாசமானவன் (தானே ஒளிர்பவன்). அவனை ஒளிர்விப்பதற்கு வேறு எந்தப் பொருளும் தேவையில்லை. ஆனால் இப்போது என்ன நடந்துள்ளது? வேறு ஏதாவது பொருள் வந்து சேர்ந்துள்ள பொழுது, ஆத்மாவின் உண்மை நிலை மறந்து போய் விடுகிறது. (ஆத்மாவைப் பற்றிய) ஞானம் இருக்க வேண்டும். அதே நேரத்தில் (உலக விஷயங்களில்) மறதியும் இருக்க வேண்டும். அப்பொழுது அத்வைத ஆத்ம அனுபவம் தானாக வரும்.

'த்வைதம்' என்றால் எல்லோருக்கும் தெரிந்ததுதான். "நான் வேறு, இறைவன் வேறு என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே! ஏதோ நமக்குத் தெரியாததைச் சொல்லிக் கொடுத்தால் பரவாயில்லை" என்று நமக்கு ஆசை எழும். இதையெல்லாம் பார்த்த சங்கரர், "நீயே பரம்பொருள் என்பதை தெரிந்து கொண்டுவிடு" என்றார். அவர் "தெரிந்து கொண்டுவிடு" என்று சொல்லியிருப்பதைப் பார்க்கையில் நமக்கும் தெரிந்து கொண்டது போலிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அது நமக்கு வேறாகவே தெரிகிறது என்பது சிலரது சந்தேகம். ஆமாம்! அப்படித்தான்

Koviloor Digital Library

தெரியும். "காண்பதெல்லாம் நானே" என்று அறிந்து கொண்டு விடு. இதனால் உலகத்திற்கு எந்தவிதமான கஷ்டமுமில்லை. நமக்கும் உலகத்தால் எந்தவிதமான கஷ்டமுமில்லை. பகவான்,

ஹர்ஷாமர்ஷபயோத்வேகை: முக்தோ ய: ஸ ச மே ப்ரிய: || (8.)

(யார் களிப்பு, கோபம், அச்சம், கலக்கம் இவைகளினின்றும் விடுபட்டவனோ அவன் எனக்குப் பிரியமானவன்.)

என்று கூறியுள்ளான். எவனால் உலகம் உத்வேகம் (கலக்கம்) கொள்வதில்லையோ, மேலும் எவன் உலகத்தால் உத்வேகம் கொள்வதில்லையோ அவனே பகவத்பக்தன் என்று மேற்கோளில் கூறப்பட்டுள்ளது. எவனோ ஒருவன் ஒரு சிறு தவறு செய்யும் போது அதைப் பார்த்து நாம் உத்வேகம் கொள்வது, அல்லது உலகத்திற்கு உத்வேகம் தரக்கூடிய செயல்களில் நாம் ஈடுபடுவது - போன்றவற்றை மேற்கொள்பவர்கள் பக்தர்கள் அல்லர்.

நான் பகவத் கீதையிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய அறிவுரை மேற்சொன்ன சுலோகத்திலிருந்து தெரிகிறது. வேறு எதையும் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. நம்மால் யாருக்கும் எந்தவிதமான குறையும் ஏற்படக் கூடாது. யார் மூலமாக என்ன நடந்தாலும் நாமும் உத்வேகப்படக் கூடாது. மேலும் சந்தோஷம், வெறுப்பு, பயம், துக்கம் போன்றவற்றை நாம் விட்டொழித்தல் வேண்டும். இவை வ்யவஹாரிகளுக்குத் (உலக வாழ்க்கை வாழ்பவர்களுக்குத்) தேவையானதா அல்லது ப்ரஹ்மஞானிகளுக்குத் தேவையானதா என்றால், 'பயம் போன்றவை இல்லாமலிருத்தல்' முதலில் வ்யவஹாரிகளுக்குத் தேவையானவை. ப்ரஹ்மஞானிகளுக்கு இவை தானாகவே இருக்கும். நாம் அவ்வாறு இருக்க கற்றுக் கொள்ள வேண்டியதுதான். ப்ரஹ்மஞானியின் குணங்களைச் சொல்ல வேண்டுமானால்,

அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச | (9.)

(அனைத்துயிர்களையும் வெறுக்காமை, நட்பும் கருணையும் வாய்க்கப் பெற்றிருத்தல் ...)

என்னும் இறைவனின் வாக்கியத்தையே நாம் எடுத்துக் கொள்ளலாம். "யாரையும் வெறுக்காதே! எல்லோரிடத்திலும்

Koviloor Digital Library

அன்போடிரு! எல்லோரிடத்திலும் கருணையைக் காட்டு" என்பது இறைவனின் உபதேசம். இராமா சாஸ்திரி நமக்கு வேண்டியவர் என்றால் கிருஷ்ண சாஸ்திரிக்குக் கோபம் வந்து விடும். அதனால் "யாருமே வேண்டாதவர்கள் இல்லை" என்று சொல்லிவிட்டால் யாருக்கும் யார் பேரிலும் கோபமில்லை. கோபம் வர வேண்டும் என்றால் முதலில் சரீரத்தில் அஹங்காரம் (அகந்தை) இருக்க வேண்டும். (ஞானிக்கு) அதுவும் இல்லை. ஏனென்றால், "ஏதோ நடந்து கொண்டிருக்கிறது. அதை நான் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். அதற்கு நான் சாட்சியாக இருக்கிறேன்" என்றுதான் ஞானி கருதுகிறான். இப்பேற்பட்ட பாவனையை நாமும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது நாம் பகவானின் ப்ரீதிக்கு உட்பட்டவனாக இருப்போம். இப்பேற்பட்ட நிலை யாருக்குத்தான் வேண்டாம்? மந்திரிகளுக்கும் வேண்டும்! உலக வாழ்க்கை வாழ்பவர்களுக்கும் இந்த நிலை தேவையாயிருக்கிறது. ப்ரஹ்மஞானிக்கோ தானாகவே இந்த நிலை இருக்கும். ப்ரஹ்மஞானிக்குத் தானாகவே எந்த நிலை இருக்கிறதோ அது லோகத்தில் உலக வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கட்டாயம் வேண்டும். (இப்பேற்பட்ட நல்லறிவுரைகளே கீதையில் இறைவனால் உபதேசிக்கப்பட்டுள்ளன.)

இதிலிருந்து கீதையைப் படிப்பது தவறானதா சரியானதா என்பதை நாம் பார்த்துக் கொள்ளலாம். சிலர் இதைப் படிக்காமலேயே ப்ரஹ்மஞானிகளாகியிருக்கலாம். அல்லது வேறு வழியில் ப்ரஹ்மஞானிகளாகி இந்த நற்குணங்கள் எல்லாம் அவர்களுக்கு வந்திருக்கலாம். ஆனால் நாம் கீதையைப் படித்தே தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் "இவர் - அவர்" என்ற பாகுபாடின்றி எல்லோருமே இதைப் படித்து ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும் என்று கூறி என்னுடைய இந்த உரையை முடித்துக் கொள்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகிகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

7. ஸத்குருவின் லக்ஷணங்கள்

ஓம் நம: ஸர்வபூதானி விஷ்டப்ய பரிதிஷ்டதே |
அகண்டாநந்தபோதாய பூர்ணாய பரமாத்மனே || (1.)

சீடனானவன் குருவைச் சரணமடைந்து சேவை செய்ய வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும். எப்பேற்பட்டவர் குரு? குருவினிடம் இருக்க வேண்டிய லக்ஷணங்கள் எவை என்பது குறித்து வேதாந்ததேசிகர் சுலோகம் ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்.

ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியமனகம் ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்
ஸத்வஸ்தம் ஸத்யவாசம் ஸமயநியதயா ஸாதுவ்ருத்த்யா ஸமேதம் |
தம்பாஸூயாதிமுக்தம் ஜிதவிஷயகணம் தீர்கபந்தும் தயாலும்
ஸ்காலித்யே சாஸிதாரம் ஸ்வபரஹிதபரம் தேசிகம் பூஷ்ணுரீப்ஸேத் || (2.)

(நல்ல சம்பிரதாயத்தில் சித்தமுடையவரும், திடமான மனதுடையவரும், பாவமற்றவரும், சாஸ்திரங்களை அறிந்தவரும், ப்ரஹ்மத்தில் ஒன்றியவரும், ஸத்வ குணம் அதிகமாகப் பெற்றுள்ளவரும், உண்மை பேசுபவரும், நல்ல ஆசாரத்துடன் இருப்பவரும், டம்பம், பொறாமை போன்றவைகளில்லாதவரும், வெளிப்பொருட்கள் விஷயமான பற்றை வென்றவரும், எப்போதும் உறவினராக விளங்குபவரும், தயையுடையவரும், தவறுகளைத் திருத்துபவரும், தனக்குச் சேர்ந்தவர்களுக்கும், பிறருக்கும் நன்மையை விரும்புபவருமான குருநாதரை வணங்குகிறேன்.)

தத்துவத்தை அறிய வேண்டும் என்ற ஆசையுள்ள சிஷ்யன் எப்படிப்பட்ட குருவை சரணமடைய வேண்டும் என்பதற்கு சுலோகத்தின் முதலில்,

ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே

என்று கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். கல்லூரி ஆசிரியர் வேலைக்கு ஒருவனை நியமனம் செய்யும்போது 'நீ என்ன படிப்புப்படித்து பாஸ் செய்திருக்கிறாய்?' என்று கேட்பர். ஒருவன் நல்ல அறிவாளி என்று தன்னைக் கூறிக் கொண்டாலும், நன்கு பாடம் கற்பிக்கும் திறமை இருந்தாலும், அவனுக்கும் ஒரு Qualification (தகுதி) என்பது வேண்டும். அவன் ஒரு கல்லூரியில் கற்றுப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் அவனுக்குள்ள அறிவுக்கு M.A. வகுப்பிற்கு பாடம் சொல்லிக்கொடுக்கும் தகுதி உண்டு என்றாலும், அவனை B.A. வகுப்பிற்கு பாடஞ்சொல்லிக் கொடுக்கக்கூட அனுமதிப்பதற்கு மிகவும் யோசிக்க வேண்டும். அவன் ஒரு கல்லூரியில் பட்டம் பெற்றிருக்கிறான் என்பது தெரிந்து விட்டதானால் பிறகு நாம் அவ்வளவிற்கு யோசிக்க வேண்டியதில்லை. அதுபோல் குருவாய் இருக்கப்பட்டவருக்கும் அவர் நல்ல சம்பிரதாயத்தில் வித்யை கற்றவர் என்ற தகுதி இருக்க வேண்டும். அதனால்தான் "ஸத்ஸம்ப்ரதாயே" என்று கூறப்பட்டது.

ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபதி (3.)

(ஆசார்யரிடமிருந்து பெற்ற கல்விதான் மேன்மையான பலனைத் தருகிறது.)

என்று கூறப்பட்டுள்ளது.

எப்படியோ அறிவைச் சம்பாதிக்க வேண்டும் என்ற நினைப்புடன் ஒருவன் ஏதேதோ புத்தகங்களைப் படித்துவிட்டு விபரீதமாகவோ, சந்தேகத்துடன் கூடியதாகவோ கல்வியைப் புரிந்துகொண்டு அதையே மற்றவர்களுக்கும் உபதேசித்தால்,

ஸ்வயம் நஷ்ட: பரான் நாசயதி (4.)

(தானும் அழிந்து பிறரையும் அழிய வைக்கிறான்.)

என்பதுபோல் ஆகிவிடும். ஆகையினால்தான் 'ப்ரமாணம்' என்ற ஒன்றை வைத்துக்கொண்டுதான் விசாரம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரத்தில் கூறுவர். இவ்வாறில்லாமல் 'நான் ஆகாசத்திலேயே கோட்டை கட்டிவிட்டேன்' என்று கூறினால் அது எவ்வளவு நாள் அங்கேயே நிலைக்கும். ஆகாசத்தில் கோட்டை கட்டுவது சுலபமா? 'விமானம் வைத்துக் கொண்டு கட்டினேன்' என்று கூறினால் அந்த

Koviloor Digital Library

விமானம்தான் எவ்வளவு காலம் நிற்கும்? இதைப்போல்தான் ப்ரமாணம், சம்பிரதாயம் எதுவும் கொள்ளாத ஒருவனின் வித்யையும் நிலைக்காது. ஆகவே, ப்ரமாணம் என்பது வேண்டும். ப்ரமாணம் வைத்துக்கொண்டு செயல்படுபவர்தான் சரியான ஆசார்யன். அவ்வாறில்லாமல் "இன்று நான் இதை அறிந்து வந்தேன். நாளை இன்னொன்றை வேறிடத்திலிருந்து அறிவேன்" என்று இருப்பவன் ஆசார்யனே கிடையாது.

அடுத்ததாக "*ஸ்திரதியம்*" என்று கூறப்பட்டிருக்கிறது.

வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தன |
பஹு᳚சாகா ஹ்யநந்தாச்ச புத்தயோऽவ்யவஸாயினாம் || (5.)

('குரு' குலத்தில் வந்தவனே ! இந்த யோகத்தில் உறுதி கொண்டவனுக்குப் புத்தி ஒன்றேயாகும். உறுதி கொள்ளாதவர்களின் புத்திகள் பல கிளைகள் உள்ளவை ; முடிவுமற்றவை.)

என்று கீதையில் பகவான் கூறியுள்ளான்.

ஆத்ம ஞான நிஷ்டர்களாய் இருப்பவர்களுக்குத்தான் ஸ்திரமான புத்தி இருக்கிறது. ஆகையால்தான், அர்ஜு᳚னன் பகவானிடம்,

ஸ்திதப்ரக்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேசவ |
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் || (6.)

(கேசவனே ! ஸமாதியில் நிலைத்த நிறை ஞானியின் லக்ஷணம் யாது? உறுதியான அறிவுடையவன் எதைப் பேசுகிறான்? எப்படி அமர்கிறான்? எவ்வாறு நடக்கிறான்?)

என்று கேள்வி கேட்கிறான். சுலோகத்தில் 'ஸ்திதப் ப்ரக்ஞன்' என்று வருமிடத்தே 'ஜீவன்முக்தன்' என்று பொருள். ஏனென்றால் ஜீவன்முக்தனுடைய பிரக்ஞை (அதாவது அறிவுதான்) ஸ்திரமாக இருக்கும் (நிலைத்திருக்கும்). அவ்வாறில்லாமல் இருப்பவர்களுடைய அறிவு நிலையற்றதுதான்.

உதாரணத்திற்கு பால் வேண்டும் என்று தோன்றும் ஒருவனுக்கு 'நம் வீட்டில் பசு இல்லையே, பசு வேண்டும்' என்று ஆசை ஏற்படும். பசு வந்துவிட்டது என்றால், அந்த ஆசை நிறைவேறிவிடுகிறது.

Koviloor Digital Library

பிறகு பையனுக்கு காய்ச்சல் வந்ததென்றால் அவனுக்கு ஆரோக்யம் வர வேண்டுமே என்று சிந்தனை வரும். அது முடிந்தவுடன் மற்றொரு விஷயத்தில் சிந்தனை வரும். ஆகவே மனிதனுடைய சிந்தனைகள் ஏராளமானவைகளாக இருக்கின்றன. ஆனால் இவைகளெல்லாம் இல்லாமலிருக்கக் கூடியவன் ஜீவன்முக்தன். அவனுக்கு கடவுளுடைய ஞானத்தைத் தவிர வேறு ஞானம் கிடையாது. அவனுடைய ஞானம் ஸ்திரமானது. இப்படிப்பட்ட ஜீவன்முக்தனாக இருக்கப்பட்ட ஓர் ஆசார்யனை விட்டுவிட்டு, ஒரு சாதாரணமானவனிடம், நாம் 'பர' தத்துவத்தைப் (ஆத்ம தத்துவத்தை) பற்றிக் கேட்டோம் என்றால் அப்படிப்பட்ட ஆசார்யனின் வார்த்தை தகுந்த பலனைத் தராது. ஆகவே 'ஸ்திரதியம்' என்ற தகுதி குருவுக்குக் கூறப்பட்டது.

'ஸ்திரதியம்' என்ற ஒரு சொல்லின் மூலமாகவே ஜீவன்முக்தர்களுடைய லக்ஷணங்கள் சொல்லப்பட்டுவிட்டன. மேலும் வேறு லக்ஷணங்கள் சொல்ல வேண்டிய தேவையில்லாவிட்டாலும் ஜீவன்முக்தன் ஒருவனை, மேலோட்டமாகப் பார்க்கும் ஒருவனுக்கு, 'அவன் ஸ்திரமான புத்தி உள்ளவனா' என்ற சந்தேகம் ஏற்படலாம். அதற்காக மேலும் பல லக்ஷணங்கள் சுலோகத்தில் ஆசார்யனுக்காகச் சொல்லப்பட்டுள்ளன.

அடுத்ததாக,

'அனகம்' (பாவமற்றவர்)

என்று சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

ஸ்திரதியம் – அதாவது நிலையான புத்தியுடன் உள்ள ஜீவன்முக்தர்கள் எப்பொழுதும் பாவம் அற்றவர்களாக இருப்பர். ஏன் அவர்கள் மாத்திரம் பாவமற்றவர்கள் ? நாமும் அப்படி ஆக முடியாதா என்று கேட்டால் நமக்கும் 'ஸ்திரதியம்' வந்தால் நாமும் பாவமற்றவர்கள் ஆகிவிடுகிறோம். ஆனால் சாமான்யமான மனிதர்கள் அவ்வாறு பாவமற்றவர்களாக ஆக முடியாது.

ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா I (7.)

(ஞானம் என்னும் நெருப்பு எல்லாக் கர்மங்களையும் சாம்பலாக்கி விடுகிறது.)

Koviloor Digital Library

என்று பகவான் கூறினார். எல்லாவிதமான புண்ணியங்களையும், பாவங்களையும் எரிப்பது ஞானம் ஒன்றுதான். அந்த ஞானம் ஏற்படாத வரையில் ஒருவனுக்கு புண்ணியமும் பாவமும் இருந்து கொண்டேதான் இருக்கும். ஒருவேளை புண்ணியமோ அல்லது பாவமோ ஒருவரிடத்தே அதிகமாக இருக்கலாம். ஆனால் இவ்வாறில்லாமல் புண்ணியமும், பாவமும் அறவேயில்லாதவன் யாரும் கிடைப்பதில்லை. ஆகவே பாவமேயில்லாதவன் ஜீவன் முக்தன் ஒருவன்தான்.

அடுத்ததாக ,

'ச்ரோத்ரியம்'

என்று கூறப்பட்டுள்ளது. வேதத்தைப் ப்ரமாணம் என்று ஒப்புக்கொண்டு அதன் வழி நடப்பவர்தான் ச்ரோத்ரியர். குண்டலங்கள் அணிந்து கொண்டிருப்பதாலும், சால்வையைப் போர்த்திக் கொண்டிருப்பதாலும் ஒருவன் 'ச்ரோத்ரியன்' ஆவதில்லை. வேதம் என்பதை ப்ரமாணமாகக் கருதி, அந்த முறையில் நடந்தால்தான் ச்ரேயஸ்ஸை அடைய முடியும் என்ற தீர்மானத்துடன் இருந்து அந்த முறைப்படி நடப்பவன் 'ச்ரோத்ரியன்'. சங்கரபகவத்பாதாள், வேதம் சொன்ன முறையில் நடந்தால்தான் ஒருவன் ச்ரேயஸ் அடைய முடியும் என்கிற கருத்தை,

ச்ருதிப்ரமாணைகமதே: ஸ்வதர்மநிஷ்டா தயைவாத்ம
விசுத்திரஸ்ய |
விசுத்தபுத்தே: பரமாத்மவேதனம் தேனைவ
ஸம்ஸாரஸமூலநாச: || (8.)

(வேதம்தான் ப்ரமாணம் என்று ஒரே தீர்மானமுள்ளவனுக்கு தனது தர்மத்தை மேற்கொள்வதிலேயே ஈடுபட்டிருத்தல் ஏற்படும். அதனால்தான் சித்தம் நன்கு தெளிவடையும். நன்கு தூய்மையான புத்தியையுடையவனுக்கு உத்தமமான ஆத்மாவின் ஸாக்ஷாத்காரம் ஏற்படும். அந்த ஸாக்ஷாத்காரத்தினால்தான் ஸம்ஸாரத்தளைக்கு, அதன் காரணமான அறியாமையுள்பட அழியும்.)

என்ற சுலோகத்தில் கூறியுள்ளார். ஆத்மதத்துவம் ஒருவன் பெற வேண்டுமென்றால் அவன் பரிசுத்தமான புத்தியுடன் இருக்க

Koviloor Digital Library

வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. காமம் (ஆசை), க்ரோதம் (கோபம்) போன்ற ஆறு எதிரிகளினால் நமது புத்தியானது மாசடைந்து போயிருக்கிறது. அந்த ஆறு எதிரிகளையும் நம்மிடத்தே இல்லாமல் செய்துகொண்டால் தான் புத்தியைப் பரிசுத்தமாக்க முடியும். புத்தி அசுத்தமாக இருக்கிறது. அதைப் பரிசுத்தப் படுத்து என்று சொன்னால் அதன்மேல் ஏதோ 'சகதி'யை யாரோ போட்டுவிட்டிருக்கிறார்கள் என்று அர்த்தமில்லை. காமம், கோபம் முதலியவைதான் புத்தியில் உள்ள சகதி. காமத்திலிருந்தும், கோபத்திலிருந்தும் விலகுவதற்கான சாமர்த்தியம் நமக்கு வர வேண்டுமென்றால் நாம் தர்மானுஷ்டானங்களை நடத்துவதில் சிரத்தையுடையவர்களாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆசையிலிருந்தும், கோபத்திலிருந்தும் நாம் விலக முடியும். ஆனால் மனிதனுக்கு இயற்கையாகவே காமம் போன்றவை இருக்கின்றன.

தர்மாவிருத்தோ பூதேஷு காமோ஽ஸ்மி பரதர்ஷப | (9.)

(எல்லா உயிர்களிலும் தர்மத்திற்கு எதிர்மாறாய் இல்லாத ஆசையாய் உள்ளேன்.)

என்று பகவான் கூறியுள்ளார்.

தர்மத்தில் ஈடுபட்டுள்ள ஒருவனுக்கு தர்மத்திற்கு நேர்மாறாக இருக்கக்கூடிய ஆசை ஒன்று ஏற்பட்டால் "என்னடா, நான் தர்மத்தில் ஈடுபாடுள்ளவனாக இருக்கிறேனே, இந்தக் காரியத்தை நான் செய்தால் அதர்மம் செய்தது போல் ஆகாதா?" என்று பயம் ஏற்படும். இத்தகைய பயம் ஏற்படுவதால் காமத்தை ஜெயிக்க இவனுக்கு சாமர்த்தியம் வரும். தர்மத்தில் சிரத்தையே இல்லையென்றால், ஒருவனுக்குத் தன் மனதில் தோன்றுவதையெல்லாம் செய்யத் தோன்றும். 'தீயவற்றைச் செய்தால் என்ன தவறு?' என்றுதான் அப்பேற்பட்டவர்களுக்குத் தோன்றும். ஆனால், தர்மத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு படிப்படியாக காமத்தை அடக்குவதற்கு சாமர்த்தியம் ஏற்படும். காமத்தை அடக்குதல் என்று சொன்னால் அதை அடக்கி உள்ளேயே வைத்திருத்தல் என்று பொருளல்ல. இவ்வாறு மனதினுள் ஆசைகளை வைத்துக் கொண்டு வெளியில் மட்டும் தர்மத்தைச் செய்பவனாக காட்டிக் கொண்டிருப்பவனைப் பற்றி பகவான்,

Koviloor Digital Library

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன் ।
இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே ॥ (10.)

(கர்மேந்திரியங்களை அடக்கிவிட்டு, புலன்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை மனதால் எண்ணிக் கொண்டிருக்கும் மூடன், பொய்யொழுக்கம் உள்ளவன் என்று சொல்லப்படுகிறான்.)

என்று கூறியுள்ளார். அவனை நாம் "ஆஷாடபூதி" என்று கூறுவதுண்டு. அவர்களுக்கு மனதில் மட்டும் ஆசையுண்டு. ஆனால் அதை வெளியில் காட்டாமல் இருப்பர். வெளி இந்திரியங்களை அடக்கி ஆசாரமாக இருப்பதுபோல் காட்டிக்கொண்டு, உள்ளுக்குள் வெளி போகங்களையே நினைத்துக் கொண்டிருப்பவனை பகவான் பொய்யான ஆசாரக்காரன் என்று கூறியிருக்கிறார். அப்பேற்பட்டவனுக்கு "தர்மத்வஜீ" என்று பெயர். வாழ்க்கை நடத்துவதற்கு மட்டும் தர்மத்தை ஒருவன் நடத்திக்கொண்டு வந்தால், அப்படிப்பட்டவனுடன் பேச்சுக்கூட வைத்துக்கொள்ளக் கூடாது என்று மனு கூறியுள்ளார். அப்பேற்பட்டவர்களை நாஸ்திகர்களின் கோஷ்டிகளில் நாம் சேர்த்து விடலாம். ஆனால் தர்மத்தில் ஈடுபாடு உள்ளவனுக்கு பகவானைப் பற்றி மனதில் எப்பொழுதும் ஒரு பயம் இருக்கும். "நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும், எல்லாவற்றிற்கும் சாட்சியான இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான். ஆகவே சாஸ்திரத்திற்கு எதிரிடையாக உள்ள செயலை நான் செய்யக் கூடாது" என்று சிந்தித்து சாஸ்திரங்களுக்கு எதிரிடையாக இருக்கின்ற செயல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு அவனுக்குச் சாமர்த்தியம் உண்டு.

இவ்விடத்தில் தர்மம் எது? அதர்மம் எது? என்று கேள்வி எழுகிறது. சபர ஸ்வாமின் என்ற ஒருவர் மீமாம்ஸா ஸூத்ரத்திற்குப் பாஷ்யம் எழுதியவர். அவரைப் போன்ற ஒரு மஹான் இல்லை என்று சொல்லும் அளவிற்கு மிகப் பெரியவர். அவர் சொல்கிறார்:

கேசிதன்யம் தர்மமாஹு: கேசிதன்யம் (11.)

(சிலவற்றைச் சிலர் தர்மம் என்பர். மற்றவர்கள் வேறொன்றைத் தர்மம் என்பர்.)

Koviloor Digital Library

ஒரு சிலர் சிவன் கோவிலுக்குச் சென்று சிவனை ஆராதிப்பது தர்மம் என்று கூறுவர். மற்றொருவர் பெருமாள் கோவிலுக்குச் சென்று விஷ்ணுவை ஆராதிப்பது தர்மம் என்று கூறுவர். பெரிய மனது உடைய வேறு சிலர் இரு கோவில்களுக்குமே சென்று ஆராதிப்பது தர்மம் என்று கூறுவர். ஆகவே வேதத்தைப் ப்ரமாணம் என்று வைத்திருப்பவர்களிலேயே இவ்வாறான மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. வேதத்தை நம்பாதவர்களில் ஒருவன் இன்றைக்கு, "கள் குடிப்பது தவறு" என்பான் ; நாளை, "கள் குடிப்பது சரி" என்பான். ஏனென்றால், மனதிற்கு இவ்வாறாக வேறுவேறாகத் தோன்றும். மனதில் எப்போதும் ஒரே தீர்மானம் யாருக்கும் இருப்பது கிடையாது. சேர்க்கையாலும் சூழ்நிலைகளாலும் ஒருவனுடைய மனதில் அத்தகைய மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒருவன் இன்றைக்கு ஒன்றைத் தர்மம் என்றும், அதையே வேறு ஒருவன் நாளை அதர்மம் என்றும் சொல்லலாம். ஆனால், ஒருவனே இன்றைக்கு ஒன்றை தர்மமாகவும், நாளைக்கு ஒன்றை தர்மமாகவும் கூறினால், அவனுடைய வார்த்தைகளை நம்பி, அவன் கூறும்படி நடை முறையில் நாம் எவ்வாறு அனுஷ்டானம் செய்ய முடியும் ?

அதனால்தான்,

ச்ருதிப்ரமாணைகமதே: ஸ்வதர்மநிஷ்டா

என்று கூறப்பட்டுள்ளது. வேதத்தைப் ப்ரமாணம் என்று நம்புபவனுக்குத்தான் தர்ம விஷயத்தில் தீர்மானம் இருக்கும். அவ்வாறு நம்பாதவனுக்கு தர்ம விஷயத்தில் நிஷ்டையே ஏற்பட முடியாது.

தர்ம அனுஷ்டானம் என்பதும், தர்ம நிஷ்டை என்பதும் வெவ்வேறு. தர்ம நிஷ்டை என்றால் தர்மத்திலேயே நிலைத்து விடுவது. ஓரளவிற்குத் தர்ம சிந்தனையுடன் தன்னால் இயன்றவரை தர்மத்தைக் கடைப்பிடித்தால், அதைத் தர்ம – அனுஷ்டானம் என்று கூறலாம். ஆனால் அது தர்ம நிஷ்டை ஆகாது. ஆகையால் தர்மநிஷ்டனாக இருப்பவனுக்குத்தான் மனது பரிசுத்தமாகும்.

பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரம் பெறுவதினால்தான்

தேனைவ *ஸம்ஸாரஸமூலநாச:*

Koviloor Digital Library

என்று கூறப்பட்டதுபோல், பரமாத்மாவை அறிவதினால்தான் பிறப்பு, இறப்பென்னும் தளையிலிருந்து விடுதலை பெற முடியும். அப்பேற்பட்ட ஞானம் சம்பாதிப்பதற்குப் புத்தியைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு பரிசுத்தமாக வைத்திருப்பவனும், வேதத்தைப் ப்ரமாணம் என்று நம்புபவனுமான ஒருவன்தான் 'ச்ரோத்ரியன்' என்று கூறப்பட்டுள்ளான்.

ஆகவே ச்ரோத்ரியம் என்பது குரு ஒருவனுக்கு லக்ஷணமாகக் கூறப்பட்டுள்ளது. அக்னிஹோத்ரம் போன்ற கர்மங்கள் செய்கிற ஒருவன் மாத்திரம் ச்ரோத்ரியனல்ல. ஸந்யாஸியாயிருக்கப்பட்டவனும் ச்ரோத்ரியன்தான். வேதம் ப்ரமாணம் என்று நம்பி அதில் சொன்னவாறு நடப்பவர்கள் எல்லோருமே ச்ரோத்ரியர்கள்தான். அவ்வாறில்லாவிட்டால் ஒருவன் ச்ரோத்ரியன் ஆக மாட்டான். இப்படி இருப்பவர்களுக்கு என்ன கிடைக்கும் என்றால் "ப்ரஹ்ம நிஷ்டம்" என்று அடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. ச்ரோத்ரியர்களாக இருந்து, கர்மானுஷ்டானங்கள் செய்ததினால் புத்தி பரிசுத்தமாகி அவர்களுக்கு ஆத்மஞானம் கிடைக்கிறது. அப்பேற்பட்டவர்களைத்தான் நாம் "குரு" என்று ஆச்ரயிக்க வேண்டும். அடுத்து,

ஸத்வஸ்தம்

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸத்த்வாத்ஸஞ்ஜாயதே ஞானம் ரஜஸோ லோப ஏவ ச |
ப்ரமாத மோஹௌ தமஸோ பவதோऽஞானமேவ ச || (12.)

(ஸத்வத்திலிருந்து ஞானம் உதிக்கிறது; ரஜஸிலிருந்து பேராசையும், தமஸிலிருந்து அக்ஞானமும் (அறியாமையும்), கவனமின்மையும், மதி மயக்கமுமே உண்டாகின்றன.)

த்ரிபிர்குணமயைர்பாவை: ஏபி: ஸர்வமிதம் ஜகத் |
மோஹிதம் நாபிஜானாதி மாமேப்ய: பரமவ்யயம் || (13.)

(இம் முக்குணங்களாலாகிய (ஸத்வம், ரஜஸ், தமஸ்) வஸ்துக்களினால் இவ்வுலகமெல்லாம் மயங்கிப் போய், இவைகளுக்கு மேலாகிய அழியாத என்னை அறிகிறதில்லை.)

Koviloor Digital Library

என்று கூறப்பட்டுள்ளது. உலகில் உள்ள எந்த ஒரு பொருளும் 'ஸத்வம், ரஜஸ், தமஸ்' என்னும் மூன்று குணங்களில் ஏதேனும் ஒரு குணத்தை முக்கியமாகக் கொண்டிருக்கிறது. ஆனால் இறைவனிடத்தில் இந்தக் குணங்கள் சூழப்படுவதில்லை. இறைவன்(பரம்பொருள்) இவைகளிலிருந்து விலகியிருப்பவன். நாமும் இவைகளிலிருந்து விலகிவிட்டோமானால் அவனே “நாம்” ஆகி விடுவோம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தன் புண்ணிய பாவங்களினால் ஒவ்வொரு சமயத்திலும் ஒருவனுக்கு ஏதாவது ஒரு குணம் மிகுந்து காணப்படுகிறது. உலகமெல்லாம் ஸத்வம், ரஜஸ்,தமஸ் என்று சொன்னால் அதற்கு என்ன பொருள்? உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். வாசஸ்பதி ஓரிடத்தில்,

ஸத்த்வம் சுகே ஸஞ்ஜயதி (14.)

(ஸத்வகுணம் சுகத்தில் விளங்குகிறது.)

ஒரு பெண்ணிடம் ஸ்வாபாவிகமாக எதுவும் கிடையாது என்றாலும் அவளது கணவனுக்கு அவள் மூலம் சுகம் கிடைக்கிறது. வெளியில் சென்று கொண்டிருக்கும் மூன்றாம் மனிதன் ஒருவனுக்கு அந்தப் பெண்ணைக் குறித்து வ்யாமோஹம் (மயங்குதல்) மட்டும் வரும். ஆனால் அதே பெண்ணினால் (கணவனின்) இரண்டாவது மனைவிக்குத் துன்பம் ஏற்படுகிறது. ஆகவே ஒரே பெண்ணினால் மூன்று பேருக்கு வெவ்வேறான அனுபவங்கள் ஏற்படுகின்றன.

ஸத்வ குணத்தின் காரியம் ஞானம், சந்தோஷம். துன்பம் என்பது ரஜோ குணத்தின் காரியம். தமஸ்ஸினால் சுகமோ, துக்கமோ ஒன்றும் கிடையாவிட்டாலும், அதனால், ஒன்றும் தெரியாத நிலையான வ்யாமோஹம் இருக்கிறது. தமஸ் மட்டும் இருந்தால் அது ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. அத்துடன் ரஜஸ் வந்து சேர்ந்தால் அது ஒருவனை காரியத்தில் ஈடுபடுத்த வைக்கும். அவ்வாறு தமஸ்ஸும், ரஜஸ்ஸும் சேர்ந்தால் நிறைய அனர்த்தங்கள்தான் (கஷ்டங்கள்) வந்து சேரும். ஆகவே ஒரு பொருளினால் ஒருவனுக்குச் சந்தோஷம் ஏற்படலாம். மற்றொருவனுக்கு அதே பொருளினால் துன்பம் ஏற்படலாம். இன்னொருவனுக்கு அதே பொருளினால் வ்யாமோஹம் ஏற்படலாம். இந்த சுகம், துன்பம்,வ்யாமோஹம் இவை மூன்றும் இருப்பதற்குக் காரணம் உலகத்தில் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் இருப்பதே ஆகும். ஆனால்

Koviloor Digital Library

ஸத்த்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம் யதேபி: ஸ்யாத்த்ரிபிர்-
குணை: || (15.)

(இயற்கையிலிருந்து வந்த - முக்குணங்களிலிருந்து விடுதலை பெற்ற உயிர் மண்ணுலகில் அல்லது விண்ணுலகில் வானவர்களுள்ளும் இல்லை.)

என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார். ப்ரஹ்ம நிஷ்டர்களாய் இருக்கப்பட்டவர்கள் எப்பொழுதும் ஸத்வ குணத்திலேயே இருப்பவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஸத்வத்தில் இருப்பவருடைய நிலை

ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஞானம்

(ஸத்வத்திலிருந்து அறிவு ஏற்படுகிறது.)

என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸத்வ குணத்திலேயே இருப்பவர் எப்பொழுதும் தவறான அறிவில்லாமல் யதார்த்தமான (ஒரு பொருளின் உண்மையான நிலையின்) அறிவையே கொண்டிருப்பர். ஆகையால் அப்பேற்பட்டவர்களிடம் நாம் சரணமடைந்தோமானால் நமக்கு எப்பொழுதும் தவறான அறிவு இருக்கவே இருக்காது. அதை விடுத்து மூன்று குணங்களும் பொருந்தி இருப்பவர்களிடம் சேர்ந்தோமானால் நமக்கும் பயம், தவறான அறிவு, மோஹம் ஆகியவைகள் எல்லாம் வந்து சேரும். அதனால்தான் சுலோகத்தில் 'ஸத்வஸ்தம்' என்று கூறப்பட்டிருக்கிறது. அடுத்ததாக,

ஸத்யவாசம்

என்று கூறப்பட்டிருக்கிறது. ப்ரஹ்ம நிஷ்டர்களாய் இருக்கப்பட்டவர்கள் எப்பொழுதும் உண்மையாக இருக்கப் பட்டவற்றையே பேசுவார்கள். ஏதோ ஒரு நீதிமன்றத்திற்கு அவரை அழைத்துச் சென்றால் சாட்சி சொல்லும்போது அவர் உண்மையே பேசுவார் என்று இதற்குப் பொருளில்லை. ஸத்யம் என்பது

ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம (5.2)

(உண்மை, அறிவு மற்றும் எல்லையற்ற வடிவான பரம்பொருள்.)

Koviloor Digital Library

என்று கூறப்பட்டிருக்கும் பரம்பொருளையே குறிக்கிறது. ஸத்புருஷருக்கு, ஸத்யமாக இருப்பது அந்தப் பரம்பொருள் ஒன்றுதான் என்ற அறிவு இருப்பதால், ஏதாவது பேசுவதாய் இருந்தால் அந்தப் பரம்பொருளைப் பற்றியே பேசுவார். இல்லாவிடில் பேசவேமாட்டார்.

தச்சிந்தனம் தத்கதனமன்யோன்யம் தத்ப்ரபோதனம் |
ஏததேகபரத்வம் ச ப்ரஹ்மாப்யாஸம் விதுர்புதா: || (16.)

(அதைப் (பரம்பொருளை) பற்றிச் சிந்திப்பது, அதைப் பற்றி ஒருவருக்கொருவர் பேசுவது, சொல்லித் தருவது – அது ஒன்றே உத்தமமானதும், ப்ரஹ்மாப்யாசமானதும் என அறிவுடையோர் கருதுகிறார்கள்.)

என்று கீதையில் கூறப்பட்டிருக்கிறது. அதுதான் ப்ரஹ்மாப்யாஸம். அவர்கள் ஏதாவது சிந்தனை செய்வதாயிருந்தாலும் அந்தப் பரம்பொருளைத்தான் சிந்தனை செய்வர். பேசினாலும் பரம்பொருளைப் பற்றித்தான் பேசுவர்.

நித்ராயா லோகவார்தாயா: சப்தாதேரபி விஸ்ம்ருதே: |
க்வசின்னாவஸரம் தத்த்வா சிந்தயாத்மானமாத்மனி || (17.)

(தூக்கத்திற்கும் உலக விஷயமான பேச்சுக்கும், சப்தம் (ஸ்பர்சம்) போன்ற விஷயங்களுக்கும் அவ்வாறே மறதிக்கும் எக்காலத்திலும் இடங்கொடுக்காமல் புத்தியில் ஆத்ம ஸ்வரூபத்தைச் சிந்தித்துக் கொண்டிரு.)

என்று சங்கரர் விவேகசூடாமணியில் கூறியுள்ளார். அப்படிப்பட்ட குருவானவர் பரம்பொருளைப்பற்றி சீடன் கூறும்போது மகிழ்ச்சியடைவார். தான் சொல்லிக் கொண்டிருப்பவைகளை மட்டும் சீடன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குக் கிடையாது. அந்தப் பரம்பொருளைப் பற்றிய சிந்தனையையும், அதைப் பற்றிய பேச்சையும் தவிர அவரிடம் வேறு எதுவும் கிடையாது. அதனால்தான் ஜீவன்முக்தராகிய குருவைக் குறிக்கும்போது சுலோகத்தில்,

'*ஸத்யவாசம்*' என்று கூறப்பட்டுள்ளது. அடுத்து '*ஸமயநியதயா ஸாதுவ்ருத்த்யா ஸமேதம்*' என்று கூறப்பட்டுள்ளது. அவருக்கு

Koviloor Digital Library

எவ்வளவோ செயல்கள் இருக்கின்றன. என்ன? பகவான் கீதையில்,

சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேத கர்மண: || (18.)

(செயல் இல்லாதவனுக்கு உடலைப் பேணுதல்கூட இயலாது.)

யக்ஞார்த்தாத்கர்மணோऽன்யத்ர லோகோऽயம் கர்மபந்தன: |
ததர்த்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர || (19.)

(யக்ஞ கர்மம் தவிர மற்ற கர்மத்தால் இவ்வுலகம் கட்டுப்பட்டுள்ளது. குந்தியின் மைந்தா, யக்ஞத்துக்கான கர்மத்தைப் பற்றற்று நன்கியற்று.)

தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர | (20.)

(ஆகையால் எப்பொழுதும் பற்றற்றுப் பண்புடன் செய்ய வேண்டியதைச் செய்து வா.)

என்றெல்லாம் கூறியிருக்கிறார். ஆனால் ஞானியாய் இருப்பவர் எவ்வளவோ பல செயல்களைச் செய்வார். கீதையில்,

நைவதஸ்ய க்ருதேனார்த்த: நாக்ருதேனேஹ கச்சன | (1.19)

(அவனுக்கு (ஞானிக்கு) கர்மம் செய்து ஒன்றைப் பெறுதலும், செய்யாது எதையாவது இழத்தலும் இல்லை.)

என்று சொல்லப்பட்டுள்ளது. ஜீவன்முக்தராய் இருப்பவர் எந்தக் காரியமும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. காரியம் செய்து எந்தப் பலனையும் சம்பாதிக்க வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. அப்படியிருந்தாலும்கூட அவரும் காரியம் செய்து கொண்டிருப்பார்.

ஏனென்றால்,

சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேத கர்மண: ||

என்று கூறப்பட்டிருப்பதால். ஆனாலும் அவருக்கு எந்த செயல் செய்தும் ஏதும் ஆக வேண்டியது இல்லை. நம்முடைய புண்ணிய கர்மாக்களின் விசேஷத்தாலும் அவர்களுடைய

Koviloor Digital Library

ப்ராரப்த கர்மாக்களின் பலனினாலும் ஜீவன்முக்தர்களும் செயல்களை மேற்கொள்வதுண்டு.

ஆனால் அவர்,

ஸமயநியதயா ஸாதுவ்ருத்த்யா ஸமேதம் | (2.)

என்று கூறப்பட்டிருக்கிறார். ஜீவன்முக்தரானவர் உலகத்திற்கெல்லாம் அப்பாற்பட்டவர் ; அவர் எப்படியிருந்தாலும் அதனால் தவறில்லை என்றாலும், அவ்வாறு அவர் இருக்கமாட்டார். வித்யாரண்யர்

சுனாம் தத்த்வத்ருசாம் சைவ கோ பேதோऽசுசிபக்ஷணே (21.)

என்று கூறியிருக்கிறார். ப்ரஹ்ம ஞானியாய் இருக்கப்பட்டவர் வர்ணம், ஆசிரமம் முதலியவைகளைக் கடந்தவராகையால் அவர் எப்படி வேண்டுமானாலும் வாழ்க்கையை நடத்தலாம் என்றால், கண்டதெல்லாம் சாப்பிடும் நாய்க்கும் அவருக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும் என்று மேற்கோளில் கூறப்பட்டுள்ளது.

கீதையில், பன்னிரண்டாவது அத்யாயத்தில் வரும்,

அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச | (6.9)

(உயிர்கள் அனைத்திடத்தும் வெறுப்பின்றி நட்பும், கருணையும் உடையவனாய்...)

என்ற சுலோகத்திற்கு சங்கரபகவத்பாதாள் வ்யாக்யானம் எழுதுகையில் "*அத்வேஷ்ட்ருத்வாதயோ குணா: தர்மா: அப்யாஸதசாயாம் ஸாதனதாம் ஆபன்னா: ஜீவன்முக்ததசாயாம் அலங்காரவதாம் பஜந்தே*" என்றார். இப்படிப்பட்ட அறவழியிலேயே சென்று கொண்டிருக்கும் ஒருவன் அதிலேயே ஏதாவது சாதித்து விட்டானென்றால் அந்த நல்வழியை விட்டுக் கெட்ட வழியில் அவ்வளவு எளிதில் சென்றுவிட மாட்டான். முதலில் நல்வழியில் போக வேண்டும் என்பதை ஒரு சாதனமாகக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு, நற்பலன்களை அடைந்த பிறகு, அந்த நல்வழி என்பதே அவனுக்கு ஓர் அலங்காரமாக விளங்குகிறது. ஆனால் முன்னர் இவன் நல்வழியை அலங்கரித்துக் கொண்டிருந்தான்.

Koviloor Digital Library

பகவானை நாம் முதலில் ஆராதனை செய்யும் காலத்தில் நாம் தான் முதலில் அவனுக்கு ஆராதனை செய்ய வேண்டும். பகவானை நாம் ஆராதித்துவிட்டோமென்றால் பிறகு நாம் நம்மை கவனித்துக் கொள்ள வேண்டுமென்பதேயில்லை. அவனே நம்மைக் கவனித்துக் கொள்வான்.

அனன்யாச்சிந்தயந்தோ மாம் யே ஜனா: பர்யுபாஸதே |
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம்
வஹாம்யஹம் || (22.)

(என்னையன்றி வேறொன்றிலும் நாட்டமில்லாதவராய் என்னையே சிந்திப்பவராய், எப்போதும் என்னையே வழிபடும் நித்திய யோகிகளிடம் இருப்பவைகளைக் காத்து, இல்லாத புதியவைகளைக் கொடுக்கிறேன்.)

என்று பகவான் கீதையில் கூறியுள்ளார்.

முதலில் நாம் சிறிதளவாவது முயற்சி செய்கிறோமா என்று இறைவன் பார்ப்பான். ஏனென்றால் அவன் நம்மை மனிதர்களாகப் படைத்துவிட்டான். ஒரு கழுதையாகவோ, ஒரு குதிரையாகவோ நம்மைப் படைத்திருந்தால் அப்பொழுது நம்முடைய முயற்சியையே எதிர்பார்க்காமல் தானே நமக்குப் பலனைக் கொடுத்திருப்பான். ஆனால் நமக்கு புத்தியையும் கொடுத்திருக்கிறான்; ஐம்புலன்களைக் கொடுத்திருக்கிறான்; அவைகளுக்குச் சாமர்த்தியத்தையும் கொடுத்திருக்கிறான். இவ்வாறிருக்கையில் அவற்றையெல்லாம் நாம் வீணாக்கிக் கொண்டிருந்தால் நம்மைவிட முட்டாள்கள் வேறு யாரும் கிடையாது. ஆகையால் நாம் சிறிதளவாவது நல்வழியில் செல்ல முயற்சி செய்தால் எங்கிருந்தாலும் நம்மைக் காந்தம் போல் இறைவன் இழுத்துக் கொண்டு விடுவர்ன். அதனால்தான் கீதையில்,

"*அனன்யா ... வஹாம்யஹம்*" என்று கூறினார் பகவான்.

சங்கரபகவத்பாதரும், வெறுப்பின்மை போன்ற குணங்கள் ஜீவன்முக்தருக்கு அலங்காரங்களாக விளங்குகின்றன என்று கூறியுள்ளார். அதனால் ஜீவன்முக்தர்கள் சாஸ்திரத்திற்கு விரோதமாக எப்போதுமே செல்லமாட்டார்கள். அதை வைத்துக் கொண்டுதான்

Koviloor Digital Library

"சுனாம் தத்த்வத்ருசாம் சைவ கோ பேதோடாசுசிபக்ஷணே" என்று கூறப்பட்டிருக்கிறது. ஸர்வம் ப்ரஹ்மம் என்பதனால் எல்லா உணவையும் நாய் போல இவரும் சாப்பிடுவாரா? அப்படி இருக்கமாட்டார்கள் என்று பரிகாசமாகக் கூறினார் வித்யாரண்யர். கிரந்தங்களில் கடினமான விஷயங்களைச் சொல்லிக்கொண்டு வருவார்கள். கேட்பவர்களுக்கு சிரமம் ஏற்படுமோ என்று சந்தேகம் ஏற்பட்டால் உடனே ஏதாவது ஒரு சமத்காரமான விஷயத்தைக் கூறிவிடுவர். அதுபோலத்தான் இதுவும். ப்ரஹ்மஞானியானவர்கள் எதை வேண்டுமானாலும் நாய் மாதிரி சாப்பிடலாம் என்றெல்லாம் நினைக்க மாட்டார்கள்.

சாதாரணமாக 'ஹோட்டல்' களில் சாப்பிடும் ஒருவன் ஸந்யாஸியான பிறகும் அப்பழக்கத்தைத் தொடர்ந்தானானால் அது அவனுக்குப் பாவத்தையே தரும். அதே சமயம் ஸந்யாஸத்திற்கு முன் சாப்பிடாமலிருந்து, ஸந்யாஸம் எடுத்துக் கொண்ட பிறகு சாப்பிட்டால் அது முன்பிருந்த நிலையிலிருந்து அவனைக் கீழேதான் இறக்குமே தவிர என்றும் அவனால் முன்னேற முடியாது. ஆனால் *"ஸமய நியதயா ஸாது வ்ருத்த்யா ஸமேதம்"* என்று கூறப்பட்டதால் குருவானவர் எந்தெந்த காலத்தில் எந்தெந்த நற்செயலைச் செய்ய வேண்டுமோ அப்படிப்பட்டவற்றையே செய்வார். ஜீவன் முக்தராக இருக்கும் காரணத்திற்காக தவறான செயல்களில் அவர் ஈடுபடமாட்டார்.

வேதாந்ததேசிகரின் சுலோகத்தில் அடுத்ததாக,

தம்பாஸூயாதிமுக்தம்

என்று கூறப்பட்டுள்ளது.

பால்யம் ச பாண்டித்யம் ச நிர்வித்ய அத முனி: (23.)

பாலகனைப் போல் யோகாப்யாசம் செய்பவன் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. குழந்தைப் பருவத்தில் சிறுவன் டம்பம், அகந்தை முதலியவைகளைக் கொண்டிருக்க மாட்டான். ஆனால் விவரம் புரியாமல், நின்று கொண்டு மூத்ர விஸர்ஜனம் செய்வது; கண்ட கண்ட இடங்களில் சாப்பிடுவது போன்ற பழக்கங்களைக் கொண்டிருப்பான். சிறுவனைப் போல்

Koviloor Digital Library

டம்பம், அகந்தை போன்றவைகளில்லாமல் யோகாப்யாசம் செய்பவன் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டதேயன்றி அவன் சிறுவனைப் போல் கண்ட இடத்தில் சாப்பிடலாம், நின்று கொண்டு மூத்ர விஸர்ஜனம் செய்யலாம் என்று கூறப்படவில்லை. பாலகனுக்கு எவ்வாறு டம்பம், தர்பம், அஹங்காரம் முதலியவை இருப்பதில்லையோ, யோகியாயிருப்பவனுக்கு டம்பம், தர்பம் (அசூயை), அஹங்காரம் ஆகியவை இருக்கக் கூடாது. "*டம்பதர்ப அஹங்காராதி ராஹித்யம் பால்யமித்யுச்யதே*" – டம்பம், அசூயை (பொறாமை), அஹங்காரம் முதலியவற்றைக் கொண்டிருப்பவனுக்குக் கல்வியே வருவதில்லை.

வித்யா ஹ வை ப்ராஹ்மணமாஜகாம கோபாய மா
சேவுதிஷ்டேடஹமஸ்மி |
அஸூய காயான்ருஜவேடயதாய ந மா ப்ரூயா வீர்யவதீ ததா
ஸ்யாம் || (24.)

(கல்வியானது ப்ராஹ்மணனை அணுகி, 'என்னைக் காப்பாற்றுவாயாக. நான் உனது செல்வம். பொறாமைக்காரன், கீழ்புத்தியுடையவன், அடக்கமில்லாதவன் ஆகியோரிடம் என்னைப்பற்றி பேசாதே! அப்போதுதான் நான் வீர்யத்துடன் இருப்பேன்' என்று கூறியதாம்.)

ஒருவனிடம் கல்வியானது "ஐயா ! உன்னிடம் வந்திருக்கிறேன். என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கேட்டுக் கொண்டதாம். எவ்வாறு கல்வியைக் காப்பாற்றுவது? 'பொறாமையுள்ளவனுக்குக் கல்வி கற்றுக் கொடுக்காமலிருப்பதுதான் கல்வியைக் காப்பாற்றும் வழியாகும்' என்று கூறியதாம்.

ந ச மாம் யோடப்யஸூயதி (25.)

(எவர் என்னைக் குறை சொல்வதில்லையோ ...)

என்று பகவான் கீதையில் கூறியுள்ளான். இறைவன் இருக்கிறான் என்று தெரிந்தும் எவன் பொறாமையுடனிருக்கிறானோ அவனுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பது கூடாது என்று கூறப்பட்டுள்ளது. சுலோகத்தில் அடுத்ததாக, குருவின் லக்ஷணமாக

Koviloor Digital Library

ஜிதவிஷயகணம்

என்று கூறப்பட்டிருக்கிறது. 'விஷயம்' என்றால் என்ன ? சாதாரணமாக ஏதாவது சண்டை– சச்சரவுகளை 'விஷயம்' என்று கூறுவோம். வேதாந்த சாஸ்திரத்தில் ஐந்து விஷயங்கள் உண்டு. கணக்கில்லாத எல்லா விஷயங்களும் இந்த ஐந்து விஷயங்களில் அடங்கும். விஷயங்கள் புலன்கள் சம்பந்தப்பட்ட பொருட்களேயாகும். விவேகசூடாமணியில், உயிர்கள் புலன்களினால் அடையும் அழிவை விளக்கும்வண்ணமாக ,

சப்தாதிபி: பஞ்சபிரேவ பஞ்ச பஞ்சத்வமாபு: ஸ்வகுணேன பத்தா: |
குரங்க – மாதங்க – பதங்க – மீன – ப்ருங்கா: நர: பஞ்சபிரஞ்சித: கிம் || (26.)

(மான், யானை, விட்டில் பூச்சி, மீன், தேனீ இவைகள் ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் இவைகளில் முறையாகப் பற்றுதல் வைத்ததால் நாசம் அடைந்தன. ஐந்துடனும் சம்பந்தம் வைத்திருக்கும் மனிதனது கதி என்ன ?)

என்று கூறப்பட்டிருக்கிறது. சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம், (ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்) ஆகியவை அந்த ஐந்து புலன்கள். நாம் ஏதாவது பூஜை செய்து கொண்டிருந்தாலும்கூட நல்ல சங்கீதத்தைக் கேட்கும்போது காது அதன் பின் போய்விடும். அதுதான் 'சப்தம்' என்பது. அடுத்தது 'ஸ்பர்சம்' எனப்படும். ஒரு நல்ல 'மெத்தென்று' இருக்கும் ஆசனத்தைக் கண்டால், அதில் உட்கார்ந்தால் நன்றாக இருக்கும் என்று மனதிற்குத் தோன்றும். அப்போது உட்கார வேண்டும் என்கிற அவசியமில்லையென்றாலும் அவ்வாறு தோன்றும். உட்கார்ந்தோமானால் 'மிகவும் நன்றாயிருக்கிறது' என்ற பாவனை உண்டாகும். அதன்பின் நம் வீட்டிலேயும் இது போன்ற 'சோபா' இருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றும். பின் இதேபோல் ஒன்று, இரண்டு, மூன்று என்று வாங்கி இருக்கிற பணமெல்லாம் தீர்ந்துவிடும். பிறகு இவற்றைத் திருட்டுத்தனமாகவாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றும். இதுவே

புருஷம் பத்னாதி விஷய: (27.)

Koviloor Digital Library

(மனிதனை வெளிப்பொருள் கட்டுப்படுத்துகிறது.)

என்று ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு விஷயங்கள் ஒருவனைக் கட்டிப் பாதாளத்தில் கொண்டு போய்த் தள்ளி மேலே கல்லை வைத்து மூடிவிடும்.

அடுத்தது ரூபம். ரூபம் எப்படிப்பட்டது என்றால் ஒரு கடையில் ஒரு 'பவுண்டன்' பேனாவின் (Fountain Pen) ரூபத்தைப் பார்த்து ஆசைப்பட்டு அதை வாங்க வேண்டும் என்று நமக்குத் தோன்றலாம். விற்பவன் விலை அதிகம் சொன்னாலும் உள்ளே இருப்பது என்னவென்றுகூட பார்க்காமல் நாம் வாங்கிக் கொண்டு வந்து விடுவோம். கடைசியில் "என்னடா ஜப்பான் பேனாவாயிற்றே இது! 'இங்க்' (Ink) கொட்டுகிறதே ! என்னவாயிற்று" என்று பார்த்தால் சரியாகவே எழுத வராது. உண்மையில் விஷயம் எப்படி இருக்கிறது என்று கவனிக்க மனதில் தோன்றுவதே கிடையாது. வெளிப்பூச்சு நன்றாக இருந்தால் அதுவே நமக்குப் போதும் என்று தோன்றும். மேற்கூறப்பட்ட உதாரணம் ரூபத்தினால் மனிதனுக்கு ஏற்படும் விளைவை விளக்கும்.

அதற்குப் பின் 'ரசம்' என்பதைப் பார்ப்போம். இதை விளக்க ஓர் உதாரணம் கூறலாம். ஒரு வியாதியஸ்தனை நோக்கி வைத்தியர், "கண்டதைச் சாப்பிடாதே! காய்ச்சல் அதிகமாகிவிடும். குளிர்ந்த ஜலம் சாப்பிடாதே. உஷ்ணமான ஜலம் சாப்பிடு" என்று கூறுவார். ஆனால் நோயாளி, "உடம்புக்கு ஏற்ற பொருள்களில் ருசி இல்லையே! ருசியான பொருளைச் சாப்பிட்டுப் பின் மருந்து சாப்பிட்டுக் கொள்ளலாமே!" என்று சாப்பிட்டுவிடுவான். கடைசியில் 'டைபாய்டு', 'நிமோனியா' போன்ற ஜுரங்கள் மீண்டும் வந்துவிடும். "ஆஹா! வைத்தியர் அன்றே கண்டதைச் சாப்பிடாதே என்று சொன்னாரே! நான் தப்புச் செய்து விட்டேனே. இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்" என்று உணர்வான். இவ்வாறு விஷயத்திற்கு 'ரசம்' மூலமாகவும் ஒருவன் அடிமையாவான்.

அடுத்ததாக 'கந்தம்' என்று சொன்னார். அதற்கு ஏதாவது ஒன்றை உதாரணமாக வைத்துக் கொள்ளலாம். இப்படி ஐந்து விஷயங்கள் மனிதனுக்குக் கூறப்பட்டிருக்கின்றன. இவை ஐந்தும் மனிதனைக் கட்டிப்போட்டு விடுகின்றன.

Koviloor Digital Library

"ஒவ்வொரு விஷயத்தில் மட்டுமே ஆசை வைத்திருக்கும் சில பிராணிகள் தம் உயிரையே அதனால் இழக்கின்றன. ஆனால் ஐந்து விஷயங்களிலும் ஆசை வைத்திருக்கும் மனிதனுடைய கதி என்னவாகும்?" என்று கேட்கிறார் சங்கரர். இந்த மேற்கூறிய ஜீவன்களைப் பற்றி அவர்,

குரங்க–மாதங்க–பதங்க–மீனா–ப்ருங்கா:

என்று கூறியுள்ளார். முதலில் 'மான்'. இதனுடைய ஸ்வபாவம் என்னவென்றால் நல்ல சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டு தன்னை மறந்து நிற்கும். வேடன் பின்னால் வலையைப் போட்டு அதைப் பிடித்தால்கூடத் தெரியாது. கடைசியில் அந்த மான் யாரோ ஒருவனுக்கு ஆஹாரமாகப் போய்விடும்.

அடுத்தது யானையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆண் யானையைப் பிடிக்க வேண்டுமென்றால் இன்னொரு பெண் யானையை ஒரு பள்ளத்தில் விடுவார்கள். இந்த ஆண் யானையை பெண் யானையின் பக்கத்தில் கொண்டு செல்வார்கள். தன்னுடைய சகதர்மிணிதான் (தன் இனத்தைச் சேர்ந்தது) வருகிறது என்று நினைத்து ஆண் யானை சந்தோஷப்படும். ஆனால் அந்தப் பெண் யானை இந்த ஆண் யானையைக் காப்பாற்றுவதற்கு வரவில்லை. அதன் காலில் பலமாகக் கட்டிப்போட்டு பாகனுக்குக் கொடுப்பதற்குத்தான் அது வந்திருக்கிறது. இவ்வாறு ஸ்பர்ச சுகம் ஏற்பட்டதால் ஏற்படும் விளைவினால் ஆண் யானை, தானும் மாவுத்தனிடம் மாட்டிக் கொண்டு விடும். அடுத்ததாக விட்டில் பூச்சியின் உதாரணத்தைப் பார்க்கலாம். மழைக் காலத்தில் ஒரு விளக்கை வைத்தோமென்றால் லட்சக்கணக்கானப் பூச்சிகள் தானாக விளக்கில் விழுந்து இறந்துவிடும். விளக்கில் அவைகளுக்குத் தேவையான ஆஹாரம் ஒன்றும் கிடையாது. பூச்சியானது விளக்கை என்னவோ ஆஹாரம் என்று நினைத்து அதில் விழுந்து இறந்துவிடும். இவ்வாறு 'ரூபப் ப்ராந்தியில்' (ரூபத்தைப் பற்றிய தவறான அறிவினால்) இந்தப் பூச்சிகள் இறக்கின்றன.

அடுத்தது மீனைப் பற்றிய உதாரணம். குளத்தில் இருக்கப்பட்ட மீனுக்கு குளத்தில் கிடைக்கும் உணவே போதும். நாம் போடும் உணவு தேவையேயில்லை. ஆனால் மேலிருந்து தூண்டிலினால்

Koviloor Digital Library

காட்டப்படும் பூச்சி முதலிய ஆஹாரத்தைக் கண்டு அதைச் சாப்பிட முயற்சி செய்யப் போக, இதன் நாக்கு அந்த தூண்டிலில் மாட்டிக்கொண்டு விடும். இவ்வாறு அது, அந்த மீன் பிடிப்பவனிடம் சேர, அவன் அதைத் தன் பெட்டியில் போட்டுவிட அது தன் உயிரையே இழந்துவிடுகிறது.

அடுத்தது தேனீயைப் பற்றிய உதாரணம். தேனைச் சம்பாதிப்பதற்காக தேனீ மிகவும் சிரமப்பட்டு நான்கு மைல் கூடத் தள்ளிப்போய் பூக்களைத் தேடும். ஓர் அங்குல நீளம் உள்ள தேனீ பல மைல்கள் பறந்து செல்லும். ஆனால் தேனை உறிஞ்சுவதற்கு உட்கார்ந்த தேனீ பேராசை காரணமாக அம்மலரினுள்ளேயே அமர்ந்திருக்கும். பிறகு மலர் மூடிக் கொண்டுவிடும். யானை போன்ற மிருகங்கள் அந்த மலரை அழித்துவிட்டால் அத்தேனீயும் அழிந்து விடும். இவ்வாறு நாற்றம் என்ற புலனின் மூலம் தேனீக்கள் அழிவடைகின்றன.

தேனீக்கள் போன்றவை ஒவ்வொரு புலனில் பற்று வைத்ததால் உயிரை வீணாக்கிக் கொண்டு விடுகிறது. ஆனால் நாமோ இந்த ஐந்து விஷயங்களிலும் விசேஷமான பற்று வைத்துக் கொண்டு விட்டோமானால் இந்த உலகமும் நமக்கு இல்லை, பரலோகமும் கிடையாது. பிறகு

ஸம்சயாத்மா விநச்யதி (28.)

(சந்தேகப் பேர்வழி அழிவடைகிறான்.)

என்று கூறப்பட்டது போல் புலன்களில் பற்று வைத்துக் கொள்பவர்களும் அவற்றினாலேயே அழிந்துதான் போக வேண்டும். தத்துவ ஞானியாக இருக்கப்பட்டவன் 'ஜிதவிஷயகணம்' அதாவது புலன்களை வென்றவனாக இருப்பான்.

அடுத்து '*தீர்கபந்தும் தயாலும்*'

என்று சுலோகத்தில் கூறப்பட்டது. குருவானவர் 'தீர்கபந்து' என்று கூறப்படுகிறார். ஒருவர் ஒரு சமயத்தில் ஒருவனுக்கு உறவினராகவும் மற்றொரு சமயத்தில் அவனுடைய எதிரியாகவும் மாறிவிட்டால் அவர் குருவே ஆகமாட்டார். எந்தக் காலத்திலும் ஒருவனுக்கு

Koviloor Digital Library

குருவானவர் உறவினராகவே இருப்பார் என்பதுதான் தீர்கபந்து என்பதற்குப் பொருள். சீடனை அவர் ஒரு தடவை, 'காப்பாற்றுகிறேன்' என்று கூறியவுடன் பின் எப்பொழுதுமே அவனைக் காப்பாற்றி விடுவார். அதனால்தான் '*தீர்கபந்தும் தயாலும்*' என்று கூறப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக '*ஸ்காலித்யே சாஸிதாரம்*' என்று கூறப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் அறிந்திருக்கும் ஒருவன் குருவைத் தேடி வர வேண்டியதில்லை. ஒன்றும் அறியாதவனும் குருவைத் தேடி வர வேண்டியதில்லை. (தத்துவ ஞானம் பற்றிச் சரிவர முழுவதும் அறியாமல் இருப்பவன்தான் குருவை நாடுவான்.) அதேபோல் சாஸ்திரங்கள் அத்யாத்ம ஞானம் இருக்கப்பட்டவர்களுக்காக உபதேசம் செய்கின்றனவா, அல்லது ஓரறிவும் இல்லாதிருப்பவர்களுக்காக உபதேசம் செய்கின்றனவா என்று கேட்டால் இருவருக்குமே இல்லை. யாருக்கு ஓரளவிற்கு மட்டும் அத்யாத்ம ஞானம் இருந்து முழுவதுமாக இல்லையோ அப்பேற்பட்டவர்களுக்குத்தான் சாஸ்திரம் உபதேசங்களைக் கூறுகிறது. அதே போல் குருவானவரும், தத்துவ அறிவைச் சரிவர தெரியாத சீடனைத் திருத்துவார். சீடனிடம் எனக்குக் கருணை மிகவும் உண்டு. ஆகவே அவன் தப்புக் காரியம் செய்யும் போது நான் அவனைத் திருத்தினால் அவன் ஏதாவது தவறாக நினைத்துவிடுவான் என்று கருதி அவர் விட்டுவிடமாட்டார். உலகத்தில் யாராவது ஒருவர் தவறான காரியம் செய்துவிட்டால் மற்றவர்கள் அவரிடம் அந்தத் தப்புக் காரியத்தைக் கூறித் திருத்தத் தயங்குவார்கள். ஏனென்றால், அந்த மனிதர் இதைத் தவறாக எடுத்துக்கொண்டுவிடுவார் என்ற அச்சம் அவர்களுக்கு உண்டு. ஆனால் குழந்தைகளை நாம் தாராளமாக திட்டி அவர்களை தப்புக் காரியம் செய்வதிலிருந்து தடுப்போம். அதுபோல குருவும் சீடன் செய்யும் தப்புக் காரியங்களைத் திருத்துவார்.

அடுத்ததாக,

ஸ்வபரஹிதபரம் தேசிகம் பூஷ்ணுரீப்ஸேத்

என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு தத்துவ ஞானத்தை அடைவதற்காக தன்னிடம் வந்துள்ள சிஷ்யனுடைய நன்மைக்காகப்

Koviloor Digital Library

பாடுபடும் குருவைத்தான் 'தேசிகர்' அல்லது 'ஆசார்யர்' என்று நாம் கூறலாம். 'அப்பேற்பட்ட குருவை நான் ஆராதிக்கிறேன்' என்று சுலோகத்தில் வருகிறது. அப்பேற்பட்ட குருவை தெரிந்துகொண்டு அவரை ஆராதித்து, அனைவரும் ஸம்ஸாரக் கடலைத் தாண்டி கடைத்தேற வேண்டும்.

வேதாந்ததேசிகர் விசிஷ்டாத்வைதத்தை சேர்ந்தவராகையால் அவருடைய சுலோகத்தை நாம் எவ்வாறு கடைப்பிடிக்க முடியும் என்று (அத்வைதி) யாராவது கேட்கலாம். 'நீங்கள் ஸ்மார்த்த ஸ்வாமிகள் ஆயிற்றே' என்றால் எனக்கு எல்லாம் சமம்தான். எந்த மதமானாலும் அவற்றில் வேதத்திற்கு உடன்பாடாக எத்தகைய கருத்துக்கள் இருக்கின்றனவோ அத்தகைய கருத்துக்களையெல்லாம் நாம் ஏற்றுக் கொண்டு அவற்றின் சாரத்தை கடைப்பிடிப்பது நமக்குச் சம்மதமேயாகும். ஆகவே நாம் ஸத்குருவைச் சரணமடைந்து ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும்.

ஹர நம: பார்வதீபதயே ।
ஹர ஹர மஹாதேவ ॥
ஜானகீகாந்தஸ்மரணம் ।
ஜய ஜய ராம ராம ॥

Koviloor Digital Library

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

8. சீடனுக்கு வேண்டிய தகுதிகள்

யஸ்மாத்விச்வமுதேதி யத்ர நிவஸத்யந்தே யதப்யேதி யத்
ஸத்யக்ஞானஸுகஸ்வரூபமவதித்வைதப்ரணாசோஜ்ஜிதம் ।
யஜ்ஜாக்ரத்ஸ்வபனப்ரஸுப்திஷு விபாத்யேகம் விசோகம் பரம்
ப்ரத்யக்ப்ரஹ்ம ததஸ்மி யஸ்ய க்ருபயா தம் தேசிகேந்த்ரம்
பஜே ॥ (1.1)

"குரு என்பவர் எப்படிப்பட்டவர்? குருவிற்கு இருக்க வேண்டிய லக்ஷணங்கள் அனைத்தையும் அவர் ஒருங்கே வாய்க்கப்பட்டிருக்கின்றாரா?" என்றெல்லாம் நாம் பார்க்கும்பொழுது, குருவானவர், "சிஷ்யன் எப்படிப்பட்டவன்? இவனுக்கு வித்யையை (கல்வியை) கற்றுக் கொடுத்தால் அது பயனளிக்குமா? அவ்வாறில்லாமல் எவ்வளவு கல்வி கற்றுக் கொடுத்தாலும் பாலைவனத்தில் தண்ணீர் விட்டுக்கொண்டேயிருந்தாலும் எவ்வாறு அது வீணாகிக் கொண்டேயிருக்குமோ அதேபோல் நான் அவனுக்குக் கற்றுக் கொடுக்கும் வித்யையும் வீணாகிப் போய்விடுமா?" என்று பார்ப்பார்.

வித்யைகளைப் பற்றிப் பேசும்பொழுது பகவான் கீதையில்,

அத்யாத்மவித்யா வித்யானாம் (5.1)

(கல்விகளில் ஆத்மாவைப் பற்றிய அறிவாய் இருக்கிறேன்.)

என்று கூறியுள்ளார். கல்வி என்பதில் மூன்று விதங்கள் உண்டு. (1) வைதிகம், (2) லௌகிகம், (3) ஆத்யாத்மிகம் என்பவையே அவை. மனு ஓரிடத்தில்,

லௌகிகம் வைதிகம் வாபி ததாऽऽத்யாத்மிகமேவ ச ।
ஆததீத யதோ ஞானம் தம் பூர்வமபிவாதயேத் ॥ (1.)

(லௌகிகம், வைதிகம் மற்றும் ஆத்யாத்மிகம் ஆகிய ஞானத்தைக் கொடுப்பதனால் குருவை முதலில் வணங்க வேண்டும்.)

என்று கூறியுள்ளார். இறைவனைச் சேவித்து நாம் ச்ரேயஸ்ஸைப் பெற்றுக் கொள்வதற்கான வழி வைதிகமான கல்வியில்

Koviloor Digital Library

தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏதோ ஒரு கஷ்டம் வந்ததென்றால், பரிகாரமாக ஒரு ஹோமம் நடத்தி வைக்கிறோம். ஹோமத்தைப் பற்றிய அறிவு, அதுகூட வைதிகமான அறிவு எனப்படும். லௌகிகமான அறிவு எப்படிப்பட்டது ?

"அர்த்த சாஸ்திரம்" என்று ஒரு நூல் கௌடில்யரால் இயற்றப்பட்டது. அந்த நூல், "அரசனாய் இருக்கப்பட்டவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? குடிமகனாய் இருப்பவன் எவ்வாறு இருக்க வேண்டும்? அரசனுக்கு இடையூறு ஏற்பட்டால் அவற்றை எவ்வாறு நீக்கிக் கொள்வது? அரசாங்கம் எவ்வாறு இருந்தால் எல்லாம் சரிவர இயங்கும்? பிரஜைகள் தங்கள் பிழைப்புக்கு மேற்கொள்ள வேண்டிய தொழில்கள் யாவை?" என்ற முறைகளையெல்லாம் சொல்லிக் கொடுக்கும் நூலாக விளங்குகிறது. இத்தகைய அறிவானது லௌகிகமான அறிவு என்று கூறப்படுகிறது.

இந்த இரண்டு அறிவையும் விட்டு மூன்றாவதாக இருக்கப்பட்ட மற்றுமோர் அறிவு உண்டு. அதுதான் ஆத்யாத்மிகமான அறிவு என்று சொல்லப்படுகிறது. ஆத்மா என்றால் "தான்". தன்னைப்பற்றிய அறிவு எது உண்டோ அதை ஒருவன் சம்பாதித்தால் அது 'ஆத்யாத்மிக ஞானம்' எனப்படும். வித்யை என்றால் ஞானம். அப்பேற்பட்ட மூன்றாவதான ஞானம் எது உண்டோ அதுதான் (உயர்ந்த) கல்வி. "உலகத்தில் எந்தெந்த பொருட்களெல்லாம் மிகவும் விசேஷமாக இருக்கின்றனவோ அத்தகைய வஸ்துக்கள் எல்லாம் என்னுடைய அம்சங்கள் என்று அறிவாயாக" என்று கீதையில் பகவான் கூறியுள்ளார். அத்யாத்ம வித்யை என்பது எல்லா கல்விகளிலும் மிக உயர்ந்த கல்வியாகும். ஆனால் அத்யாத்ம கல்வியை உபதேசிக்கும் பொழுது மிகவும் பார்த்துத்தான் செய்ய வேண்டும். தெலுங்கில் பழமொழி ஒன்று, "உனக்குக் கற்றுக் கொடுத்து எனக்கு மானம் போய்விட்டது. உனக்கும் கல்வி வருவதில்லை. எனக்கும் நான் கற்ற கல்வி மறந்து போவதில்லை" என வருகிறது. இவ்வாறு நாம் நடந்து கொள்ளக் கூடாது. ஓரிடத்தில் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. வேதாந்தமெல்லாம் வாசித்து ஒருவன் என்ன கற்றுக் கொண்டான் என்றால், "கீதையில் ,

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ । (2.)

Koviloor Digital Library

(அனைத்து தர்மங்களையும் துறந்துவிட்டு என்னையே சரணமடைவாயாக.)

என்று பகவான் கூறியிருக்கிறான். அதில்,

ஸர்வதர்மான் பரித்யஜ்ய

என்று கூறும்பொழுது பகவானுக்கும் நம்மைப் போலவே தீவிரமான புத்தி இல்லை போலும் என ஒருவன் எண்ணலாம். ஏனென்றால் பகவான்,

ஸர்வ அதர்மான் பரித்யஜ்ய

(அனைத்து அதர்மங்களையும் துறந்துவிட்டு...)

என்று சொல்லியிருந்தால் அது நன்றாக இருக்கும். அதைவிட்டு

ஸர்வதர்மான் பரித்யஜ்ய

என்று மட்டும் பகவான் கூறிவிட்டதாக கீதை சுலோகத்தை ஒருவன் தவறாகப் புரிந்து கொண்டான். அதை மட்டும் பலமாகப் பிடித்துக் கொண்டான். பிறகு

மாமேகம் சரணம் வ்ரஜ

என்பதை, இறைவனைச் சரணமடைவதற்குப் பதிலாக 'தன்னைத்தானே சரணமடைவது' என்று தீர்மானித்துத் தனக்குத் தோன்றியவாறு நடந்துகொள்ள வேண்டும் என்று புரிந்துகொண்டு விட்டான். இவ்வாறு ஆகிவிட்டது என்றால் ஒருவனுக்குக் கல்வி கற்றுக் கொடுத்ததனால் என்னதான் பயன் இருக்க முடியும்? அப்படிப்பட்ட சீடனுக்கு நாம் கல்வியைக் கற்றுக் கொடுத்து, அதே கல்வியை அவன் தவறாகப் புரிந்து கொண்டு, அதை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுத்து, உலகையே கெடுக்கும் பிரயோஜனம்தான் வரும். ஆகவே சீடனானவனுக்கு எந்தக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதாக இருந்தாலும்கூட அவனைப் பரீட்சை செய்வது குருவின் வழக்கம். சிஷ்யனானவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு மேற்கோள் விளக்கம் தருகிறது.

Koviloor Digital Library

ஸத்புத்தி: ஸாதுஸேவீ ஸமுசிதசரித: தத்த்வபோதாபிலாஷீ
சுச்ரூஷு: த்யக்தமான: ப்ரணிபதனபர: ப்ரச்னகாலப்ரதீக்ஷ: |
சாந்தோ தாந்தோऽனஸூய: சரணமுபகத: சாஸ்த்ரவிச்வாஸசாலீ
சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதம் தத்த்வத:
சிக்ஷணீய: || (3.)

(நல்ல மனதுள்ளவன், மஹான்களுக்குச் சேவை செய்பவன், சரியான நடத்தை உள்ளவன், தத்துவத்தை அறிய ஆர்வமுள்ளவன், குருவின் சேவையையே கருத்தில் கொண்டிருப்பவன், அகந்தையற்றவன், குருவை நமஸ்கரிப்பதற்கு ஆர்வமுடனிருப்பவன், கேள்விகளை வினவ தக்க தருணத்தை எதிர்நோக்குபவன், மனவடக்கம் பொருந்தியவன், புலனடக்கம் வாய்க்கப் பெற்றவன், பகைமையற்றவன், குருவிடம் சரணமடைந்தவன், சாஸ்திரத்தில் நம்பிக்கை கொண்டிருப்பவன் – தகுந்த பரீட்சையில் தேறிய நன்றியுள்ள இத்தகைய சீடனுக்கு விருப்பமாயுள்ளதான (தத்துவம்) கற்றுத்தரப்பட வேண்டும்.)

அத்யாத்ம வித்யையை கற்றுக்கொள்ள விரும்பும் சீடன் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று மேற்கோளில் கூறப்பட்டுள்ளது. முதலில் அவன் "ஸத்புத்தி:" – அதாவது நல்ல புத்தியுடன் இருக்க வேண்டும். புத்தியே இல்லாவிட்டால் மிகுந்த சிரமம்தான். ஆனால் இருக்கும் புத்தி விபரீதமாய் (கெட்ட புத்தியாய்) இருந்தால் அது இன்னும் சிரமத்தையே தரும். சுலோகம் ஒன்றில் ,

அஜாதம்ருதமூர்க்காணாம் ம்ருதாஜாதௌ வரௌ ஸுதௌ |
தௌ கிஞ்சித் சோகதௌ புத்ரௌ
மூர்க்கஸ்த்வத்யந்ததுக்கத: || (4.)

(பிறக்காத, இறந்த, மற்றும் மூடப் புதல்வர்களில், இறந்த மற்றும் பிறக்காத புதல்வர்கள் மேலானவர்கள். அவர்கள் ஓரளவிற்குத்தான் துன்பத்தை தருகின்றனர். ஆனால் மூடனோ மிகுந்த துன்பத்தைத் தருகிறான்.)

என்று கூறப்பட்டுள்ளது. மேற்காணும் சுலோகத்தில் குழந்தைகள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். 'ஆண், பெண், நபும்ஸகம்' என்ற மூன்று விதத்தை அவர் சொல்லவில்லை. பிறக்காமலிருக்கும் ஒரு குழந்தை, இறந்து போன ஒரு குழந்தை, மற்றும் இருக்கும்போது

Koviloor Digital Library

முட்டாளாக இருக்கும் ஒரு குழந்தை – இந்த மூன்று குழந்தைகளைப் பற்றித்தான் அவர் சுலோகத்தில் கூறுகிறார். இந்த மூன்று குழந்தைகளில் இறந்த குழந்தையினால் எந்தவிதமான நஷ்டமும் இல்லை. பிறக்காத குழந்தையினால் ஒன்றும் நஷ்டம் இல்லை. ஆனால் பிறந்து முட்டாளாக இருக்கும் குழந்தையைக் காட்டிலும் துக்கம் தரக்கூடியது வேறு ஒன்றுமே இல்லை. அந்த மூடக் குழந்தை மிகுந்த துக்கத்திற்குக் காரணமாகும் என்று மேற்கோளில் கூறப்பட்டுள்ளது. பிறக்காத குழந்தையினாலும், இறந்த குழந்தையினாலும் எப்போதாவது சில சமயங்களில் 'பிறக்கவில்லை' என்றும், 'இறந்து விட்டது' என்றும் துக்கம் ஏற்படும். ஆனால் பிறந்து முட்டாளாக இருக்கும் குழந்தையினால் என்றென்றும் ஒருவனுக்கு துக்கம் ஏற்படுகிறது. ஆகவே முட்டாளாக இருக்கும் குழந்தை இருப்பதைக் காட்டிலும் இல்லாதிருப்பதே மேல் என்று சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

இதைப்போல இறைவன் எல்லோருக்கும் புத்தியைக் கொடுத்துள்ளான். சிலருக்கு விசேஷமான புத்தி இருக்காது. மற்ற சிலர், கொடுத்த புத்தியை கெட்ட காரியங்களுக்காக செலவழித்து பிறருக்கு இம்சை கொடுத்துக் கொண்டிருப்பார்கள். ஸம்ஸ்கிருதத்தில் ஒரு சுலோகம் இது சம்பந்தமாகக் கூறப்படுகிறது.

வித்யா விவாதாய தனம் மதாய சக்தி: பரேஷாம் பரிபீடனாய |
கலஸ்ய, ஸாதோ: விபரீதமேதத் ஞானாய தானாய ச
ரக்ஷணாய || (5.)

(கல்வி – வாய்ச்சண்டைக்காகவும், தனம் – அகந்தை கொள்வதற்காகவும், சக்தி–பிறருக்குத் துன்பம் கொடுப்பதற்காகவும் கெட்டவனுக்கு இருக்கின்றன. (ஆனால்) நல்லோர்களுக்கு இவை வேறு விதமாக இருக்கின்றன. (கல்வி, பணம், சக்தி முதலிய மூன்றையும்) அவர்கள் அறிவுக்காகவும், தானம் செய்வதற்காகவும், பிறரைக் காப்பாற்றுவதற்காகவும் பெற்றிருப்பர்.)

சிலர் சாஸ்திரம் வாசிப்பார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் சாஸ்திரம் வாசிப்பது எதற்காக என்று கேட்டால் ஏதாவது ஒரு விவாதத்தின்பொழுது இன்னொருவனுடைய வாயை மூடி வைப்பதற்காகத்தான். மற்றவர்கள் சரியாக சொல்லிக்

Koviloor Digital Library

கொண்டிருந்தாலும் கூட இவர்களிடம் இருக்கப்பட்ட கல்வியின் சாமர்த்தியத்தினால் மற்றவர்களின் வாயை மூடி விட்டால், இவர்களுக்கு சாஸ்திர அறிவு இருக்கிறது என்பது நிலை நாட்டப்படும் என்று நினைக்கிறார்கள். அதேபோல் அதிக பணத்தைப் பெற்றிருப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? "நான் ஒருவன்தான் மனிதன். மற்ற அனைவரும் புழுக்கள் போல்தான்" என்று மதம் கொண்டு நினைப்பார்கள். இவ்வாறு நினைத்து நினைத்து தம்மைப் பற்றியே மிகவும் கர்வப்பட்டுக் கொள்வார்கள். இதுதான் பணத்தினால் அவர்களுக்குக் கிடைப்பது. அதேபோல் சிலருக்கு ஏதேனும் விசேஷமாக சக்தி வந்திருந்தால் அந்த சக்தியைக் கெட்ட காரியங்களைச் செய்வதற்காக உபயோகிப்பார்கள். கெட்டவர்கள் அனைவரும் இத்தகைய ரீதியில் தங்களுடைய கல்வியையும், செல்வத்தையும், சக்தியையும் வீணடித்துக் கொண்டிருக்கையில் சத்புருஷர்களுக்கு இத்தகைய அரிய குணங்கள் கிடைத்தால் அவர்கள்,

ஞானாய தானாய ச ரக்ஷணாய

என்று கூறிய வகையில் தமக்குக் கிடைத்தவற்றைச் செலவிடுவர். சாஸ்திரம் வாசித்து வாசித்துத் தம்முடைய அறிவை மேலும் மேலும் விருத்தி செய்து கொள்வாரே தவிர அவர்கள் மற்றவர்களை வீணாக மட்டம் தட்டமாட்டார்கள். பணம் வந்து சேர்ந்தது என்றால் அத்தகைய சத்புருஷர்கள், "இந்த வங்கியில் போட்டால் அதிக வட்டி வருமா, அந்த வங்கியில் போட்டால் அதிக வட்டி வருமா," என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்காமல் ஏழையாய் இருக்கப்பட்டவர்களுக்குத் தானம் செய்து அவர்களும் இன்ப வாழ்க்கை வாழ உதவி செய்வார்கள். அதேபோல் சத்புருஷர்களுக்குச் சக்தி வந்தது என்றால் யாரெல்லாம் அவர்களிடம் சரணமடைகின்றார்களோ அவர்களைக் காப்பாற்றுவதற்கு அந்தச் சக்தியை உபயோகம் செய்வார்கள்.

இறைவன் இவ்வாறு புத்தி கொடுத்த பின்னும் அந்த புத்தியைக் கெட்ட வழிகளில் விநியோகம் செய்தால் அவ்வாறு இருப்பவனைக் காட்டிலும் ஒரு புத்தியில்லாத பைத்தியக்காரனாக இருந்தால் கூட பாதகமில்லை என்பதுதான் கருத்து. அதனால்தான் சிஷ்யனுக்கு இருக்க வேண்டிய லக்ஷணங்களில் முதன்முதலாக "ஸத்புத்தி:"

Koviloor Digital Library

என்று கூறப்பட்டிருக்கிறது. ஸத்புத்தி இருந்தால்தான் அவனுக்குக் கல்வி விசேஷமாக வரும் என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்ததாக சிஷ்யனுக்கு இருக்க வேண்டிய குணமாகக் கூறப்படுவது “ஸாதுஸேவீ” என்பதாகும். பகவான் கீதையில்,

மயி சானன்யயோகேன பக்திரவ்யபிசாரிணீ |
விவிக்ததேசஸேவித்வமரதிர்ஜனஸம்ஸதி || (6.)

(வேறு எதையும் எண்ணாத யோகத்தால் என்னிடம் பிறழாத பக்தியுடனிருத்தல், தனியிடத்தை நாடுதல், ஜனக் கூட்டத்தில் விருப்பமின்மை)

என்று கூறியிருக்கிறார். சாதகன் (ஆன்மீக வழியில் செல்லும் ஒருவன்) என்ன முறையில் இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு வரும்பொழுது பகவான் மேற்காணும் லக்ஷணங்களைக் கூறினார். இங்கு கூறப்பட்டவாறு சாதகன், கூட்டமாக இருக்கும் இடங்களுக்கெல்லாம் செல்லக் கூடாது. ஏனென்றால் கூட்டமானது உத்தமமான கூட்டமாக இருக்கலாம். அல்லது அயோக்கியமான கூட்டமாகவும் இருக்கலாம். சாதகனாக இருக்கப்பட்டவன் தனது மனது சஞ்சலமாக இருக்கையில் அந்த அயோக்கியமான கூட்டத்திற்குச் சென்று அதன் மூலம் அசத்புருஷர்களின் (கெட்டவர்களின்) சேர்க்கையால் கெட்டு விடும் அபாயம் இருக்கிறது. அதனால்தான் கீதையில் பகவான்,

ஸங்காத்ஸஞ்ஜாயதே காம: காமாத்க்ரோதோऽபிஜாயதே | (7.)

(சேர்க்கையினால் ஆசை ஏற்படுகிறது. ஆசையினால் கோபம் ஏற்படுகிறது.)

எனக் கூறியுள்ளார்.

முதலில் கங்கையானது வைகுண்டத்தில் பகவானுடைய பாதங்களிலிருந்து தோன்றியது. பிறகு ஸ்வர்கலோகத்தில் நுழைந்துவிட்டு பரமசிவனின் தலையில் விழுந்தது. கடைசியாக இமய பர்வதத்திலே விழுந்து அங்கிருந்து பூமியில் ஓடியது. கடைசியில் அந்தப் பெயரும் இல்லாமல் சமுத்திரத்தில் போய்ச் சேர்கிறது. இதேபோல ஒருவனுடைய புத்தி மிகவும் உயர்ந்த

Koviloor Digital Library

நிலையில் விளங்கிக் கொண்டிருந்தாலும் கெட்ட சேர்க்கை என்பது ஏற்பட்டுவிட்டால் அவனுடைய மன நிலை ஒவ்வொரு படியாக இறங்கி, கடைசியில் அவனே "அசத்புருஷன்" என்று பெயர் வாங்கும் அளவு யோக்யதை மோசமாகிவிடும். அதனால்தான் 'எப்பொழுதும் ஏகாந்தமாக இருக்கும் இடத்தில்தான் இருக்க வேண்டும். அசத்புருஷர்களின் கூட்டத்தில் பற்று வைத்துக் கொள்ளக் கூடாது' என்று பகவான் கூறினார். ஸத்ஸங்கத்தின் தேவையைப்பற்றி பகவத்பாதாளும் ஓரிடத்தில்,

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் (8.)

(நல்லோர்களின் சேர்க்கையினால் பற்றற்ற தன்மை ஏற்படுகிறது.)

என்று கூறியுள்ளார். நல்லோர்களின் சேர்க்கை ஏற்பட்டுவிட்டால் அப்பொழுது மனது பற்றற்று இருந்து விடும் என்று சங்கரர் கூறியுள்ளார். அவ்வாறு நல்லோர்களின் சேர்க்கையில் சேர்ந்ததினால் அந்த நல்லோர்களின் குணமெல்லாம் இவனுக்கும் (சேர்பவர்களுக்கும்) வந்துவிடும். ஆகவே நல்லோர்களின் சேர்க்கை என்பது மிகவும் அவசியம். சிஷ்யனின் குணங்களாக, 'ஸாதுஸேவீ' அதாவது சத்புருஷர்களை சேவிக்க வேண்டும் என்பது சீடனுக்குத் தேவைப்படும் இரண்டாவது குணமாகக் கூறப்பட்டுள்ளது. அடுத்ததாக,

ஸமுசிதசரித:

என்று கூறப்பட்டுள்ளது. ஒருவன் ஸாதுக்களை சேவித்துக் கொண்டிருந்தாலும் அவனுடைய நடவடிக்கை (சரித்திரம்) கெட்டதாகவே இருந்தது என்றால், அதனாலும் ஒரு விதமான பிரயோஜனமும் இல்லை.

அஸமஞ்ஜன் என்று அரச வம்சத்தில் பிறந்தவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு கெட்ட குணம் இருந்தது. குழந்தைகள் யாராவது அழுது கொண்டிருந்தால் அவர்களைத் தூக்கி சரயு நதியில் போடுவது என்ற குணம்தான் அது. குழந்தைகள் இறக்கும் சமயத்தில் கையையும், காலையும் ஆட்டி துடித்துக் கொண்டிருந்தால் இவனுக்கு அதைப் பார்க்க சந்தோஷமாக இருந்ததாம். அதேசமயம்

Koviloor Digital Library

பிறந்தது அரச வம்சத்தில். இப்படிப்பட்ட மன்னனின் சேர்க்கை மிகவும் உத்தமமானதாக இருந்தது. அவனுடைய நண்பர்கள் மிகவும் உத்தமமானவர்கள். ஆனாலும் இவனுடைய முற்பிறவி ஸம்ஸ்காரங்களினாலும், பிராரப்தம் (முன் வினை) பிரபலமாய் (சக்தி வாய்ந்ததாய்) இருந்ததாலும் இத்தகைய தீய செயல்களையே அவன் செய்து கொண்டிருந்தான். ஆகவே நல்லோர்களின் சகவாசம் மட்டும் இருந்தால் போதாது. நல்ல நடத்தை என்பதும் ஒருவனுக்கு இருக்க வேண்டும். மனு ஓரிடத்தில் நல்ல நடத்தைப் பற்றி,

லோஷ்டமர்தீ த்ருணச்சேதீ நககாதீ ச யோ நர: ।
ஸ விநாசம் வ்ரஜத்யாசு ஸூசகோSசுசிரேவ ச ॥ (9.)

(கருத்து : மண் (உருண்டைகளைப்) பொடி செய்பவன், புல்லை வீணாக பிடுங்கி எறிபவன், நகத்தைக் கடிப்பவன், பிறரிடம் குறை உண்மையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் குறை கூறுபவன், அகத் தூய்மையும் புறத் தூய்மையும் இல்லாதவன் – இத்தகைய மனிதன் அழிவை விரைவில் அடைகிறான்.)

என்று கூறியுள்ளார். அதில் கூறப்பட்ட செயல்களை நாம் செய்யக் கூடாது என்கிறார் மனு. அவை என்னவென்று பார்ப்போம்.

சிலர் உட்கார்ந்து கொண்டிருந்தால் பேசாமல் உட்கார மாட்டார்கள். அவர்களுடைய கை எதையாவது செய்து கொண்டிருக்கும். ஏதாவது மண் பக்கத்தில் இருந்தால் அந்த மண்ணை உருட்டிப் போட்டுக் கொண்டிருப்பார்கள். கதாகாலக்ஷேபம் கேட்க உட்கார்ந்திருக்கும் ஒருவன் மண் உருண்டைகளை எல்லாம் பொடி பண்ணி வைத்திருப்பான். அருகில் மண் ஏதும் கிடைக்கவில்லை என்றால் ஏதாவது புல் கிடைத்தால் அந்தப் புல்லை பிய்த்துப் பிய்த்துக் கீழே போட்டிருப்பான். புராணம் முடிவதற்குள் நூறு புல்லாவது பிடுங்கப்பட்டு விடும்.

இக்காலத்துக் குழந்தைகள் நகத்தைக் கடிப்பதற்கு நன்றாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் எந்தக் குழந்தையாவது வாயில் விரல் போட்டுக் கொண்டிருந்தால் 'எச்சில் பண்ணாதே' என்று கூறி அந்தக் குழந்தையைத் திட்டுவார்கள். இப்பொழுது அவ்வாறில்லை. பெரிய நகத்தையோ சிறிய நகத்தையோ கடித்துக் கொண்டேயிருப்பார்கள். அதில் என்ன

Koviloor Digital Library

சுவை இருக்கிறதோ அது அந்த பகவானுக்குத்தான் தெரியும். அவனுக்குத்தான் தெரியும். நகம் கடிப்பது பெரிய தவறுதல்.

அதேபோல் வேறு சிலர் மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுவது என்றாலே மிகவும் சந்தோஷமாக இருப்பர். அதை வேறு வேலை இல்லாமல் கேட்டுக் கொண்டிருக்கிறானே, அவனுக்கு அதனால் எந்த விதமான பிரயோஜனமும் கிடையாது. ஆனால் அவன் பாவத்தை மட்டும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். குறை சொல்பவருடைய குறை உண்மையோ, பொய்யோ, இவனுக்குத் தெரியாமல், சில பொய்களைக் கேட்பதனால் கேட்பவன் பாவத்தை மட்டும் சம்பாதிக்கிறான். அதனால்தான்,

பிசுனை: ப்ரகாமமுதிதாம் பரஸ்ய நிந்தாம் ச்ருணோதி கர்ணாப்யாம் |
தேன பர: கிம் ம்ரியதே வ்யர்த்தம் மனுஜோ஽திபாபபாக் – பவதி || (10.)

(கருத்து – ஒருவன் பிறரைப் பற்றிய குறைகளைக் காதுகளால் கேட்கிறான். அதனால் குறை கூறப்பட்டவன் இறந்தா போய்விடுவான்? (போகமாட்டான் – மாறாக) குறைகளைக் கேட்பவன் பெரிய பாவத்தை அனுபவிக்கிறான்.)

என்று கூறப்பட்டிருக்கிறது. உட்கார்ந்து கொண்டே பாவம் சம்பாதிப்பதற்கான வழிகளை மனு அந்த மேற்கோளில் கூறியிருக்கிறார். சத்புருஷர்கள் நல்ல விஷயங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட அதைக் கேட்காமல் ஊர்க் கதைகளையெல்லாம் பேசிக் கொண்டிருத்தல் ஒரு வகையான பாவமாகும். சத்புருஷர்கள் கூறுகின்ற நல்ல பேச்சுக்களைக் கேட்டால் சொல்பவருக்கு மட்டுமின்றி கேட்பவர்களுக்கும் பாவங்கள் குறைந்து விடும். ஆனால் மற்றவர்களைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருந்தால், கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு பாவம் ஏற்படுவதோடு சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கும் விசேஷமான பாவம் ஏற்படும்.

அடுத்ததாக, தூய்மை என்பது அவசியம். தூய்மையில் அகத் தூய்மை புறத் தூய்மை என்று இருவகையான தூய்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புறத் தூய்மையைப் பற்றி இப்பொழுது

Koviloor Digital Library

பார்ப்போம். ஒருவன் குளித்து எட்டு நாட்கள் ஆகியிருக்கும் ! அப்பேற்பட்டவன் தீர்த்தம் வாங்குவதற்கு வந்து விட்டால் தீர்த்தம் கொடுப்பவர் என்ன செய்வது என்று தெரியாது நிற்பார். ஆனால் அவனுக்குப் பின்னால் நின்று கொண்டு தீர்த்தம் வாங்குவோருக்கு, “இவனுக்குக் கொடுத்த தீர்த்தத்தை நமக்கும் கொடுக்கிறார்களே” என்ற எண்ணம் வரும். அதேசமயம் தீர்த்தத்தைச் சாப்பிடாமல் இருப்பதற்கு மனம் வருவதில்லை. சாப்பிடுவதற்கும் தயக்கமாக இருக்கும். இதனால்தான் மனிதனாய் இருப்பவன் எப்பொழுதும் தூய்மையாய் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதைத்தான் முன்னோர்கள் “ஆசாரம்” என்று கூறியிருக்கிறார்கள். இப்பொழுது குழந்தைகள் நகம் கடிக்கும் பழக்கத்தை மிகவும் சாதாரணமாக வைத்துக் கொண்டிருப்பதால் எச்சில் என்பது இப்பொழுது ஒரு குற்றம் என்று கருதப்படுவதில்லை. இது பற்றிய சிறிய கதை ஒன்றைப் பார்ப்போம்.

கோவில் என்றால் என்ன என்பதே தெரியாத ஒருவனுக்கு இறைவன், அவன் கோவிலுக்கு வரும் சந்தர்ப்பத்தை ஒரு நாள் அளித்தார். அப்பேற்பட்ட மனிதன் தன்னுடைய வாழ்வில் ‘கோவில் என்றால் என்ன?’ என்பதை அப்பொழுதுதான் தெரிந்துகொள்ளப் போகிறான். கோவிலுக்கு வந்த மனிதனுக்கு சந்நிதியில் தீர்த்தம் கொடுத்தார்கள். தீர்த்தத்தில் துளசி இலை ஒன்று இருந்தது. துளசி இலையோடு தீர்த்தத்தைச் சாப்பிட்ட அவன், அதில் துளசி இருக்கிறது என்பது தெரியாமல் வாயில் ஏதோ இருக்கிறதே என்று நினைத்து அருகிலேயே துப்பி விட்டான். அருகிலிருந்தவர்கள், “இங்கே ஏனடா துப்பினாய்” என்று கோபித்துக் கொண்டவுடன் கீழே துப்பிய அந்த துளசி இலையைக் கையினால் எடுத்து பக்கத்திலிருந்த இறைவனின் உருவச் சிலை மீது வைத்து விட்டான். இதைப் பார்த்த மற்றவர்கள் “அது இறைவனின் சிலையடா, ஏன் இறைவனின் சிலை மீது வைக்கிறாய்” என்று கோபித்துக் கொண்டனர். இவ்வாறு திட்டு வாங்கியவுடன் அந்த மனிதன் உடனே துளசி இலையை எடுத்துத் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு விட்டான். கடைசியில் அவனுடைய சட்டைப் பையும் அசுத்தமாகிவிட்டது. ஏனென்றால் கோவிலைப் பற்றிய அறிவு அவனுக்குக் கிடையவே கிடையாது ; தீர்த்தத்தைப் பற்றியும் யாரும் கற்றுத் தந்தது கிடையாது.

Koviloor Digital Library

முன்பெல்லாம் எச்சிலைத் தொட்டால் கையலம்ப வேண்டும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். இப்பொழுது ஏதாவது கிருமிகள் பரவக் கூடும் என்பதால் இன்னொருவர் எச்சிலை நாம் தொடக் கூடாது என்று மருத்துவ ரீதியாகக் கூறுகிறார்கள். ஆனால் நாம் நம்முடைய எச்சிலையும் தொடாமலிருந்தால் அது மிகவும் நல்லது என்று கூறியிருக்கிறோம். ஆரோக்கிய நியமத்திற்கும், பாரமார்த்திகமாக இருக்கப்பட்ட மனத் தூய்மைக்கும் ஆசார நியமங்களையெல்லாம் முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் விட்டுவிட்டு, அநாசாரமாக (ஆசாரமில்லாமல்) இருக்கும் சீடனுக்கு அந்த அத்யாத்ம வித்யையானது வருவதே கிடையாது.

அடுத்ததாக, (சீடனின் தகுதியாக)

தத்த்வபோதாபிலாஷீ

என்று கூறப்பட்டுள்ளது. சிலர் நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பார்கள். ஏதோ ஒரு துறவி ஓரிடத்தில் உபந்யாஸம் செய்தார் என்றால் அதை மிகவும் சுவாரசியத்தோடு கேட்டுக் கொள்வார்கள். பிறகு இன்னொரு நாள் ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்ப்பார்கள். கடைசியில் இரண்டுமே தலையில் ஏறுவதில்லை அவர்களுக்கு. ஏனென்றால் தத்துவத்தை அறிந்து கொள்வதில் அவர்களுக்குத் தீவிரமான விருப்பம் இருப்பதில்லை. ஆகவே தீவிரமான விருப்பம் என்பது இருத்தலே தத்துவ போதத்தை அறிவதற்கு ஏதுவாக இருக்கிறது. “தத்துவ அறிவானது எப்பொழுதாவது தானாக வந்தால் வரட்டும்; இல்லாவிட்டால் போகட்டும்” என்ற எண்ணம் இருப்பவனுக்கு சொல்லிக் கொடுக்கக் கூடாது. தத்துவ அறிவு தானாகவே வருமா என்ன? தத்துவத்தை அறிவதில் தீவிரமான விருப்பம் வைத்திருப்பவனுக்குத்தான் குருவானவர் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு விருப்பம் இல்லாதவனுக்குச் சொல்லிக் கொடுத்தால் அது விபரீதமாகி விடும்.

அடுத்ததாக, சிஷ்யனானவன்,

சுச்ரூஷு:

Koviloor Digital Library

என்று கூறப்பட்ட முறையில் இருக்க வேண்டும். ஒருவனுக்கு தத்துவத்தை அறியும் விஷயத்தில் மிகவும் விருப்பம் இருக்கலாம். சிலர், தத்துவங்களையெல்லாம் குருவிடம் கற்றுக் கொண்டாலும், கற்றுக் கொள்ளாவிட்டாலும் புத்தகத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம் என்ற நினைப்பில் இருப்பர். அப்பேற்பட்டவர்களுக்குக் குருவானவர் எவ்வளவுதான் சொல்லிக் கொடுத்தாலும் குரு சொல்லிக் கொடுத்து அவர்கள் ஒன்றும் கேட்கப் போவதில்லை. அவர்கள் எப்படியிருந்தாலும் புத்தகத்தைத்தான் பார்க்கப் போகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது. ஆகவே சிஷ்யனானவன் முதலில் குருவிடமிருந்து கற்றுக் கொண்டு பிறகுதான் புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஹடயோகத்தில் ஆசனம் போடுவதற்கான பல வழிகளை புத்தகத்தில் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வழிகளை ஒருவன் புத்தகத்தில் மட்டும் பார்த்து ஆசனம் போட்டால் கை, கால், ஏதாவது Fracture ஆகி (முறிவு ஏற்பட்டு) கடைசியில் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதுதான். ஆனால் முதலில் குருவிடம் கற்றுக் கொண்டு, பிறகு கொஞ்ச நாள் கழிந்து அதில் ஏதோ சந்தேகம் ஏற்பட்டது என்றால் அப்பொழுது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகப் புத்தகம் பார்ப்பதில் தவறில்லை. அதைவிட்டு முதலிலேயே புத்தகம் பார்க்க ஆரம்பித்தால் அதனால் இடைஞ்சல்தான் ஏற்படும்.

ஆகவே தத்துவ அறிவு வேண்டும் என்ற விருப்பம் மட்டும் இருந்தால் போதாது. தத்துவ அறிவைக் குருவிடமிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்து அதற்காக சீடன் முயற்சிக்க வேண்டும். அடுத்ததாக,

த்யக்தமான:

என்று கூறப்பட்டிருக்கிறது. இப்பேற்பட்ட பரம்பொருளைப் பற்றிக் கற்றுக் கொள்ள வரும் சீடனுக்கு ஒரு பெரிய எதிரி உண்டு. “அகந்தை” என்பதுதான் அப்பேற்பட்ட எதிரி. அதற்கு ஒரு கதை சொல்லப்படுவதுண்டு.

Koviloor Digital Library

ஒருவன் ஒரு குருவினிடத்தில் சென்று, "பரமாத்மாவைப் பற்றிய அறிவைக் கற்றுத் தாருங்கள்" என்று கேட்டுக் கொண்டான். அவர் அவனை நோக்கி "நீ ஆறு மாத காலம் பிரஹ்மச்சரியத்தோடு இருந்து வா" என்று கூறிவிட்டார். அவன் அவ்வாறே இருந்தான். பிறகு ஆறு மாதங்கள் கழிந்தபின் குருவைத் தரிசனம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தான். குரு, அவன் வந்து கொண்டிருக்கையில், துப்புரவு பணியாள் ஒருவனிடம் குப்பைக் கூடையை எடுத்து அந்த சீடனின் தலையில் கவிழ்க்குமாறு கூறிவிட்டார். அவனும் அவ்வாறு செய்ய சீடனுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டு அந்தத் துப்புரவு பணியாளை நன்கு அடித்து விட்டான். பிறகு குருவினிடத்தில் தான் வந்திருப்பதைக் கூறி உபதேசம் செய்யுமாறு வேண்டிக் கொண்டான். அதற்கு அவர், "நீ என்ன செய்தாய்?" என்று கேட்டார். அவன், "இவ்வளவு நாள் சரியாக இருந்தேன். எனக்கு இன்று மிகுந்த கோபம் வந்தது. நான் ஒருவனை நன்றாக அடித்து விட்டேன்" என்றான். குருவானவர், "சரி. அப்படியென்றால் உபதேசம் இன்று வேண்டாம். இன்னும் நீ மூன்று மாதம் இருந்து விட்டு வா" என்றார். மூன்று மாதம் கழிந்து சீடனானவன் மீண்டும் குருவினிடத்தே வந்தான். மீண்டும் அதே போல் அவன் தலையில் குப்பைக் கூடையை போட்டுவிடுமாறு பணியாளுக்கு உத்தரவு ஆகியிருந்தது. அதேபோல் அவனும் செய்ய, சீடன் இச்சமயம் அவனிடம் சண்டை போட்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிவிட்டான். பிறகு குருவிடம் நடந்த கதையைச் சொல்லித் தான் ஒருவனை வாயில் வந்தபடி திட்டியதையும் கூறினான். அப்பொழுது குருவானவர், "நீ இன்னும் மூன்று மாதம் இருந்து விட்டுப் பிறகு வா" என்று கூறிவிட்டார். இவ்வாறு மூன்று மாதங்கள் கழிந்தன. மீண்டும் சீடன் வந்த போதும் முன்பு போலவே அவன் மீது குப்பைக் கூடை போடப்பட்டது. ஆனால் இம்முறை சீடன் அந்தப் பணியாளை நமஸ்கரித்து, "ஐயா, எனக்கு இருக்கப்பட்ட காமம், கோபம் முதலியவை நீங்குவதற்காக நீங்கள் இறைவனுடைய வடிவத்தில வந்து பரீட்சை செய்தீர்கள். நான் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டேன். ஆனால் இன்று நான் காம க்ரோதங்களை விட்டு விட்டேன். முன்பு எனக்குப் பாவ கர்மா இருந்தது. அதனால்தான் என் மீது அசுத்தம் (குப்பை) விழ வேண்டியிருந்தது. நான் போய் குளித்துவிட்டு வருகிறேன்" என்று கூறி மன்னிப்பும் கேட்டுக்

Koviloor Digital Library

கொண்டான். பிறகு குரு அவனுக்கு உபதேசித்தார் என்று கூறிக் கதை முடிகிறது.

ஆகவே சீடனுக்கு அகந்தை என்பது இருந்துவிட்டால் அவனால் தத்துவத்தை அறிவதற்கு தகுதி உள்ளவனாக ஆக முடியாது. அடுத்ததாக '*ப்ரணிபதனபர:*' என்று வருகிறது.

இது மட்டுமில்லாமல் சீடனானவன் குருவை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பதற்கு மனு,

அபிவாதனசீலஸ்ய நித்யம் வ்ருத்தோபஸேவின: |
சத்வாரி தஸ்ய வர்தந்தே ஆயுர்வித்யா யசோ பலம் || (2.34)

(எப்பொழுதும் நமஸ்காரம் செய்து வ்ருத்தர்களை (பெரியோர்களை) ஸேவிப்பவனின் ஆயுள், அறிவு, கீர்த்தி, பலம் என்பவையான நான்கும் விசேஷமாக அதிகமாகும்.)

என்று கூறியிருக்கிறார். இந்தக் காலத்தில் இவ்வாறெல்லாம் கிடையாது. சீடனுக்கு குருவை மதிக்க வேண்டும் என்கிற பாவனையே வருவது கிடையாது. அவன் என்ன நினைப்பான்? “நான் மாதா மாதம் Fees (சம்பளம்) கொடுக்கிறேன். அதற்காக அவர் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். ஆகவே அவருக்குத்தான் என் மேல் விசுவாசம் வர வேண்டும்” என்று இக்காலச் சீடன் நினைப்பான். அதே சமயம் பாடம் சொல்லிக் கொடுப்பவனுக்கும் சீடன் விஷயத்தில் இதே பாவனைதான். அவரைப் பொறுத்த வரையில் நாற்பது பேருக்கு பாடம் சொல்லிக் கொடுத்து பத்து பேர் அதில் தேர்ச்சி அடைந்தால் அவருக்கு அது போதும். மீதி முப்பது பேர் Fail ஆனால் (தோல்வி அடைந்தால்) தனக்கு என்ன வந்தது? என்று அவர் கண்டு கொள்ளாமல் இருப்பார். எல்லோருமே தேர்ச்சி அடையாவிட்டால் ஆசிரியருடைய வேலை போய் விடும். ஆகவே பத்து பேர் மட்டும் தேர்ச்சி அடைந்தால் அது போதும். அதுவும் Private Tuition வைத்துக் கொண்டிருப்பவர்கள் தேர்ச்சி பெற வாய்ப்பிருக்கிறதே. ஆகவே தான் சரியாகக் கற்றுத் தர அவசியம் இல்லை என்று நினைப்பார். சீடனுடைய பாவனையும், குருவினுடைய பாவனையும் இக்காலத்தில் இப்படி இருக்கிறது. அந்தக் காலத்தில் இவ்வாறு இல்லை. சீடனைத் தன்னுடைய குழந்தைகளைப் போல் குருவானவர் பாவித்து வந்தார் என்று

Koviloor Digital Library

கூறப்பட்டிருக்கிறது. நாமெல்லாம் குழந்தைகளை அடிக்கக் கூடாது என்று கூறக் கேட்டிருக்கிறோம். 'அடிக்கக் கூடாது' என்ற விஷயம் நிருக்தம் என்னும் ப்ராசீனமான நூலிலேயே வருகிறது.

ய ஆத்ருணத்த்யவிததேன கர்ணாவதுக்கம்
குர்வன்னம்ருதம் ஸம்ப்ரயச்சன் ।
தம் மந்யேன பிதரம் மாதரம் ச தஸ்மை ந
த்ருஹ்யேத கதமச்சனாஹ ॥ (11.)

(எந்த குருவானவர் சத்தியமான வேத ஞானத்தின் மூலமாக சிறிதளவும் துன்பம் உண்டாக்காமல் மோக்ஷம் அடைவதற்குக் காரணமான ஞானத்தைக் கொடுத்துக்கொண்டு (சீடர்களின் மூடிய) காதுகளைத் திறந்து விடுகின்றாரோ, அப்பேற்பட்ட குருவை தந்தையாகவும் தாயாகவும் நினைத்துக்கொள்ள வேண்டும்.)

குழந்தைகளுக்குக் காது குத்தும் காலத்தில் வலி உண்டாகக் கூடாது என்பதற்காக நாம் அருகில் மருந்துகளையெல்லாம் வைத்துக் கொண்டிருப்போம். காதை குத்தும் சமயத்தில் அந்தக் குழந்தைக்கு சற்றே வலி ஏற்பட்டாலும் குத்தியவுடன் வலி ஏற்படக் கூடாது என்பதற்காக நாம் அந்த மருந்தை உபயோகப்படுத்துவோம். அதேபோல குருவானவரும் சீடனுக்கு வித்யையை கற்றுத் தர வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. வித்யை கற்றுத் தரும் சமயத்தில் சீடனுக்கு குருவானவர் துக்கம் தரக் கூடாது. அவனுக்கு ருசி ஏற்படும் ரீதியில் வித்யையைத் தர வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளும் குருவிடம் 'அவர் தாயாரும்–தகப்பனாரும் ஆவார்' என்ற பாவனையுடன் சீடன் நடந்து கொள்ள வேண்டும். அவன் குருவிற்கு எந்த விதத்திலும் துரோகம் செய்யக் கூடாது. அவ்வாறு ஏதாவது குருத் துரோகம் செய்து விட்டால் குரு கற்றுக் கொடுத்த கல்வியெல்லாம் சீடனுக்கு மறந்து போய்விடும். அவன் கற்றுக் கொண்ட கல்வி வீர்யமுள்ளதாக இருக்காது. உதாரணத்திற்கு பாலின் வகைகளில் எருமைப் பாலானது ஒரு வகை என்றாலும், அது கெட்டியாக இருக்கும்போதிலும் யக்ஞங்களுக்கு (யாகங்களுக்கு) உபயோகப்படுவதில்லை. பசும் பாலானது சற்றே நீர் கலந்தது போல் காணப்படும். ஆனாலும் பசும்பால்தான் யாகங்களுக்கு உபயோகப்படுகிறது. அதேபோல

Koviloor Digital Library

குருவிடம் நல்ல பாவனை வைத்துக் கொள்ளாத சீடனுடைய கல்வி கல்வியே ஆகாது. அந்தக் கல்வி எதற்கும் உபயோகப்படாது. ஆகவே லௌகீகமான வித்யையை கற்றுக் கொள்பவன் தன் குருவினிடத்தில் சிறந்த முறையில் பக்தியை வைத்துக் கொண்டு அவரைக் கண்டால் நமஸ்கரிக்க வேண்டும். அவ்வாறு நமஸ்கரித்தால் சீடனுக்கு என்ன கிடைக்கும்? அவனுடைய ஆயுள், கல்வி, கீர்த்தி, சாமர்த்தியம் இவை அனைத்தும் வளர்ந்து வரும். ஆகவே,

ப்ரணிபதனபர:

என்று கூறப்பட்டது போல் குருவானவரைச் சீடன் எப்போதும் சேவிக்க வேண்டும்.

பரம்பொருளைப் பற்றிக் கற்றுக் கொண்டிருக்கும் சீடன் எப்போதும் குருவானவர் பிரசன்னராக (திருப்தியாகும்படி) இருக்கும்படி அவருக்கு கௌரவம் கொடுத்து வர வேண்டும். அடுத்ததாக,

ப்ரச்னகாலப்ரதீக்ஷ:

என்று கூறப்பட்டுள்ளது. குருவினிடம் ஏதாவது சந்தேகம் கேட்கையில் தனக்குத் தோன்றியவற்றையெல்லாம் கேள்வியாகக் கேட்கக் கூடாது. அதே சமயத்தில் தோன்றிய போதெல்லாம் கேள்வி கேட்டுக் கொள்ளக் கூடாது. அவ்வாறு சீடனானவன் கேட்டால் குருவும் ஏதாவது சம்பந்தமில்லாமல் பதிலைக் கூறலாம். உதாரணத்திற்கு, குரு குளிக்கப் போகும் சமயத்தில் போய் கேள்வி கேட்டால் அவர் ஒரு பதிலும் சொல்லாமல் சென்று விடக் கூடும். ஆகவே குருவிற்கு எந்தச் சமயத்தில் அவகாசம் இருக்கிறதோ அந்தச் சமயத்தில் அவரிடம் கேள்வி கேட்டுச் சீடனானவன் தன்னுடைய சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக,

சாந்தோ தாந்த:

என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது 'சாந்த:' என்று வருகிறது. 'சாந்த:' என்றால் – புலன்கள் விஷயமாக மனம் வெளியிலே போவதை அடக்கி வைத்துக் கொள்ளுதல் ஆகும். பிறகு 'தாந்த:'

Koviloor Digital Library

என்றால் வெளியில் உள்ள இந்திரியங்களை அடக்கி வைப்பதே ஆகும். அதாவது நமது கண், மூக்கு, காது, நாக்கு இவற்றை எல்லாம் நம்முடைய வசத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒருவன் வெளிப் புலன்களை மட்டும் தன்னுடைய வசத்தில் வைத்துக் கொண்டு மனதிற்குள் ஆசையை நீக்காமல் இருந்தால் அவனுக்கு இறைவன், "மித்யாசாரன்" என்று பெயர் கொடுத்திருக்கிறான்.

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன் |
இந்த்ரியார்த்தான்விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே || (7.10)

(கர்மேந்திரியங்களை அடக்கி, புலன்களைப் பற்றிய விஷயங்களை மனதால் எண்ணிக் கொண்டிருக்கும் மூடன் பொய்யொழுக்கமுடையவன் என்று அழைக்கப்படுகிறான்.)

என்று கூறப்பட்டிருக்கிறது. அப்பேற்பட்டவர்களுக்கு,

நாயம் லோக: நாபர: (12.)

(இந்த உலகமும் கிடையாது, மறு உலகமும் கிடையாது.)

ஆதலால், வெளியில் உள்ள இந்திரியங்களையும், மனம் என்று சொல்லப்படும் 'உள்ளே உள்ள இந்திரியத்தையும்' ஒருவன் அடக்கி வைக்க வேண்டும்.

அடுத்ததாக,

அனஸூய:

என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு குருவிற்குப் பத்துப்பேர்கள் சீடர்களாக இருந்தால் அதில் ஒருவனுக்கு மட்டும் கல்வி சற்றே அதிகமாக வந்துவிட்டது என்றால் மற்றவர்கள், 'குரு அவனுக்கு மட்டும் தனியாக உள்ளே சென்று அதிகமாகச் சொல்லிக் கொடுத்துவிட்டார்' என்று நினைக்கக் கூடாது. ஏனென்றால் அத்தகையவனுக்கு ஒரு தடவை சொல்லிக் கொடுத்தாலும் மனதில் புரிந்து கொள்ளும் திறமை இருக்கலாம். மற்றவர்களுக்கு அவ்வாறு இல்லாமலிருக்கலாம். ஆகவே அவனவனுடைய அறிவைப் பொறுத்தே திறமை இருக்கிறதே தவிர இதற்காக குருவைக் குறை சொல்லி அசூயையோடு (பொறாமையோடு) இருப்பது தவறாகும்.

Koviloor Digital Library

வித்யா ஹ வை ப்ராஹ்மணமாஜகாம கோபாய மா
சேவதிஷ்டேsஹமஸ்மி ।
அஸூயகாயான்ருஜவேsயதாய ந மா ப்ரூயா வீர்யவதீ ததா
ஸ்யாம் ॥ (7.24)

(கல்வியானது ப்ராஹ்மணனை அணுகி, 'என்னைக் காப்பாற்றுவாயாக. நான் உனது செல்வம். பொறாமைக்காரன், கீழ்புத்தியுடையவன், அடக்கமில்லாதவன் ஆகியோரிடம் என்னைப் பற்றிப் பேசாதே! அப்போது நான் வீர்யத்துடன் இருப்பேன்' என்று கூறியது.)

என்று கூறப்பட்டது போல் எவன் பரிசுத்த மனமுடையவனாய் இருப்பதில்லையோ, எவன் செய்கையிலும் பரிசுத்தமாய் இருப்பதில்லையோ, பொறாமையுடன் இருக்கிறானோ அப்பேற்பட்டவனுக்குக் கல்வி கற்றுத் தரக் கூடாது. அடுத்ததாக,

சரணமுபகத:

என்று கூறப்பட்டிருக்கிறது. ஒருவனுக்குப் பல குரு இருந்தால்

குருத்வயம் சிஷ்யநிபாதஹேது: (13.)

(இரண்டு குரு இருந்தால் அது சிஷ்யனுடைய வீழ்ச்சிக்குக் காரணம்.)

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவனுக்கு, "அவரும் குரு, இன்னொருவரும் குரு. இவனும் ஒரே பாடம் சொல்லித் தருகிறான்; அவனும் ஒரே பாடம் சொல்லித் தருகிறான். இதற்குள் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா" என்றும் "இது சரியா, அது சரியா" என்றும் தீர்மானம் செய்வதிலேயே நேரமெல்லாம் செலவாகிவிடும். இவ்வாறு இருக்காமல் ஒருவன் ஒரு குருவை அடைக்கலம் அடைந்து இறைவனுடைய கிருபையினால் வித்யையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அடுத்ததாக,

சாஸ்த்ரவிச்வாஸசாலீ

என்று கூறப்பட்டிருக்கிறது. நமக்கு இறைவன் புத்தியைக் கொடுத்திருக்கிறான். அதை உபயோகப்படுத்தத் திறமையையும்

Koviloor Digital Library

கொடுத்திருக்கிறான். அதற்காக நாம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட முறையில் அதை உபயோகிப்பதை விட்டுவிட்டு நம்முடைய புத்திக்குத் தோன்றும்படியெல்லாம் செய்யக் கூடாது. சாஸ்திரமானது ப்ரமாணம் என்ற நிச்சயம் ஒருவனுக்கு இருக்க வேண்டும்.

ய: சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத: |
ந ஸ ஸித்திமவாப்னோதி ந ஸுகம் ந பராம் கதிம் || (14.)

(காமத்தின் வசப்பட்டு சாஸ்திரத்தின் ஆணையை மீறி நடப்பவன் எவனோ அவன் 'பரிபூர்ணமானவன்' ஆகமாட்டான் – சுகத்தைப் பெற மாட்டான் – முக்தியை அடைய மாட்டான்.)

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யாகார்யவ்யவஸ்திதௌ || (15.)

(ஆகையால் செய்யத் தகுந்ததையும், தகாததையும் முடிவு செய்வதில் சாஸ்திரம் உனக்குப் ப்ரமாணமாகிறது.)

என்று கீதையில் இறைவன் கூறியிருக்கிறார். இவ்வாறு சிஷ்யனானவன் மேற்காணும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

கடைசியாக 'க்ருதவித்' என்ற லக்ஷணம் சுலோகத்தில் வருகிறது. ஸம்ஸ்கிருதத்தில்,

உபாத்யாயாச்ச வைத்யாச்ச கார்யாந்தே஽ப்ரயோஜகா: (16.)

(ஆசிரியர்களும், மருத்துவர்களும் காரியம் முடிந்தவுடன் பிரயோஜனமற்றவர்கள் (ஆகிவிடுவர்).)

என்று ஒரு வாக்கியம் உண்டு. அதுவும் இந்த உதாரணம் வைத்தியர்களின் விஷயத்தில் மிகவும் பொருந்தும். ஒருவனுக்கு உடல் நலம் சரியில்லை என்றால் மருத்துவர் என்ன சொன்னாலும் கேட்பான். ஆனால் உடல் நலம் சரியாகிவிட்டது என்றால் பிறகு அந்த மருத்துவரின் பக்கம்கூட திரும்ப மாட்டான். அதேபோல் சிலர் வித்யையைக் கற்றுக் கொண்ட பிறகு குருவிடம் செல்லவே மாட்டார்கள். மேலும், "நானாக புத்தகத்தை வாசித்துக் கல்வியைக் கற்றுக் கொண்டேன். நான் வெறுமென அவரிடம் போய்க்

Koviloor Digital Library

கொண்டிருந்தேன். அவர் எனக்குச் சொல்லிக் கொடுத்ததே தப்புத் தப்பாக இருந்தது. அவரிடம் நான் கற்றுக் கொண்டதே இல்லை" என்பார்கள். அதேபோல்தான் வக்கீல்கள் விஷயத்திலும். கேஸில் வெற்றி கிடைக்கும் வரையிலும் வக்கீல் வீட்டு வாசல்படியிலேயே எப்போதும் பகவானைத் தியானம் செய்து உட்கார்ந்து கொண்டிருப்பதைப் போல் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். கேஸ் ஜெயித்து விட்ட பின், 'வக்கீலெல்லாம் ஒன்றும் செய்யவில்லை, நானே ஜெயித்துவிட்டேன்' என்று சொல்வார்கள். நன்றியறிதல் என்பது வேண்டும்.

இப்பேற்பட்ட தகுதிகளைப் பெற்றிருப்பவன் தான் சிஷ்யன். அப்பேற்பட்ட சிஷ்யனுக்குத்தான் தத்துவ அறிவைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். மேலும் அவனுக்கு எதைச் சொல்லிக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்குமோ அத்தகைய தத்துவ அறிவைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. தத்துவம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே சொல்லிக் கொடுக்க வேண்டும். உலகத்தில் ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்ய வேண்டியிருந்தால் அது சம்பந்தமான மேல் நோக்கான விஷயங்களை மட்டும் நமக்கு அதனைச் செய்பவர்கள் கற்றுத் தருவார்களே தவிர அந்த உற்பத்தியில் உள்ள இரகசியங்களை அவர்கள் சொல்லிக் கொடுப்பதில்லை. ஏனென்றால் அவர்களுடைய வியாபாரத்திற்கு நாமும் போட்டி போட்டால் என்ன செய்வது? என்ற பயம் அவர்களுக்கு இருக்கும். ஆகவே முக்கியமான வியாபார இரகசியங்களை அவர்கள் சொல்லிக் கொடுப்பதில்லை. நாமும் அவர்களைப் போல் பொருளை உற்பத்தி செய்ய முடிந்தாலும் நம்முடைய பொருளிற்கு அவ்வளவு மதிப்பு இருப்பதில்லை. ஏனென்றால் நம் மீது அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. ஆனால் சுலோகத்தில் கூறப்பட்ட தகுதிகளையெல்லாம் பெற்றிருக்கும் சீடனுக்கு குருவானவர் தத்துவத்தை உள்ளவாறே சொல்லிக் கொடுப்பார்.

ஆகவே நாம் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் இவ்வளவு அரிய குணங்கள் நம்மிடத்தே வாய்க்கப் பெற்றிருந்து நாம் ஒரு குருவைச் சரணமடைந்தால்தான் தத்துவத்தை அறிந்து கொள்ள முடியும். ஆகவே இறைவன் அனைவருக்கும் இத்தகைய நல்ல

Koviloor Digital Library

குணங்களைக் கொடுத்து பரம்பொருளை அனைவரும் அறிந்து கொள்ள யோக்யதையைக் கொடுத்து நம்மைக் காக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து இந்த உரையை முடிக்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே ।
ஹர ஹர மஹாதேவ ॥
ஜானகீகாந்தஸ்மரணம் ।
ஜய ஜய ராம ராம ॥

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

9. ஆத்ம ஞானமே பேரின்ப சாதனம்

விசுத்தஞானதேஹாய த்ரிவேதீதிவ்யசக்ஷுஷே
ச்ரேய: ப்ராப்திநிமித்தாய நம: ஸோமார்த்ததாரிணே ।
நமாமி யாமினீநாதலேகாலங்க்ருதகுந்தலாம்
பவானீம் பவஸந்தாபநிர்வாபணஸுதாநதீம் ॥ (2.1)

உலகத்தில் நாம் யாரிடமாவது "நீ சுகமாக இருக்கிறாயா?" என்று கேட்டால் அவன் "ஆம், நான் சுகமாக இருக்கின்றேன்" என்று கூறலாம். ஆனால், "பரிபூரண இன்பத்தை நீ பெற்றுள்ளாயா? அல்லது துன்பமும் இருக்கின்றதா?" என்று கேட்டால், "துன்பம் இருக்கின்றது" என்று அவன் சொல்வான். பத்து ரூபாய் வைத்திருப்பவனிடம் இக்கேள்வியை நாம் சென்று கேட்டோமானால் "நான் சுகமாக இருக்கிறேன். ஆனால் நூறு ரூபாய் வைத்துள்ளவனிடம்தான் அதிக அளவிற்கு சுகம் உள்ளது" என்பான். நூறு ரூபாய் வைத்துள்ளவனிடம் நாம் சென்று கேட்டால் "எனக்குள்ள சுகம் என்ன சுகம்? கோடி ரூபாய் வைத்திருப்பவனுக்குத் தான் உண்மையான சுகம் உள்ளது" என்பான். இவ்வாறு பொருட்களில் தராதரம் இருப்பதினாலும், நமக்குப் பொருட்களை பெற வேண்டும் என்கிற ஆசை இருப்பதினாலும் எந்த மனிதனும் பரிபூரணமான இன்பத்தை அனுபவிப்பதில்லை. ஒருவன் ஒரு பதவியைப் பெறுவதற்காக முயற்சி செய்யலாம். அந்தப் பதவி கிடைத்து விட்டது என்று வைத்துக்கொள்வோம். பதவி கிடைத்தவுடன் அதைக்காட்டிலும் மேலான பதவி வேண்டும் என்ற ஆசை மனிதனுக்கு ஏற்படும். இத்தகைய ஆசைகள் இருந்துக் கொண்டே இருக்கும். ஆதலால் ஆசைப்படும் மனிதனுக்குத் துன்பங்களும் இருந்துகொண்டே இருக்கும்.

சுகத்தைப் பற்றியும், துக்கத்தைப் பற்றியும் சாஸ்திரங்களில் ஆராய்ந்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். மனம் அலையாமல் நிலையாக இருந்தால் இன்பம் கிடைக்கும். மனம் அலைந்து கொண்டிருந்தால் இன்பம் கிடையாது. ஆழ்ந்த உறக்கத்தில் மனம் அலைவதில்லை. யாரைக் கேட்டாலும் "நான் இன்பத்தைப் பெற்றேன்" என்றுதான் ஆழ்-உறக்க நிலை பற்றி கூறுவார்கள். மற்ற நிலைகளில் மனம் ஓடிக்கொண்டிருக்கிறது. அது ஓடும் வகை

Koviloor Digital Library

வெவ்வேறு விதமாக இருந்தாலும், ஓடிக்கொண்டிருப்பதால் மனிதன் முழுவதுமாக இன்பத்தைப் பெறுவதில்லை. மனம் எவ்வாறு ஓடுகிறது? முதலில் மனம் ஒரு பொருளை விரும்பும். அப்பொருளைப் பெறுவதற்காக முயற்சியும் மேற்கொள்ளும். ஆனால் அந்தப் பொருள் கிடைத்தவுடன் சிறிது நேரத்திற்கு, "ஆகா! நம் ஆசை பூர்த்தியாகி விட்டது" என்று சாந்தமாக இருக்கும். ஆனால் பிறகு வேறு ஒரு பொருளைக் கண்டு அதன் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும். இம்மாதிரிதான் மனம் ஒவ்வொரு விஷயத்தைப் பார்த்தும் ஓடிக்கொண்டே இருக்கிறது. மனதின் இயற்கையைக் கருத்தில் கொண்டு வியாசர்,

யத்ப்ருதிவ்யாம் வ்ரீஹியவம் ஹிரண்யம் பசவ: ஸ்த்ரிய: |
ஏகஸ்யாபி ந பர்யாப்தம் ததித்யதித்ருஷம் த்யஜேத் || (3.3)

(நிலம், நெல், பொன், பசுக்கள், பெண்கள் – இவைகளில் எதனாலும் முழுமையான திருப்தியுண்டாவதில்லை. ஆதலால் அதிகமான ஆசையை விட்டுவிட வேண்டும்.)

என்றார். எந்தப் பொருளானாலும் சரி, நெல்லாகட்டும், பசுக்களாகட்டும், ஸ்த்ரீகளாகட்டும், பொன்னாகட்டும்– இவைகளில், எந்த விஷயத்திலும் மனிதனின் மனம் "போதும்" என்கின்ற எண்ணத்தைப் பெறுவதில்லை. நமக்குச் சாப்பிடுவதற்கு எவ்வளவு தேவை? குடிப்பதற்கு எவ்வளவு தேவை? வாழ்வதற்கு எவ்வளவு வீடுகள் தேவை?இவையெல்லாம் அதிகமில்லை. அவ்வாறு இருந்தாலும் நாம் மேலும் மேலும் விரும்பிக்கொண்டே இருக்கிறோம். ஒருவனிடம் ஒரு வீடு இருக்கலாம். அவன் "இன்னும் இரண்டு வீடுகளைக் கட்டி விடுகின்றேன். ஏனென்றால் அவைகள் என் புதல்வர்களுக்கு உபயோகப்படும்" என்று நினைப்பான். சரி! மூன்று வீடுகள் ஆகிவிட்டன. அவன் "இன்னும் மூன்று, நான்கு வீடுகள் கட்டினால் நன்றாக இருக்குமே! என் பேரன்களும் சுகமாக இருக்கலாமே" என்கின்ற ஆசையும் அவனுக்கு வரும். இவ்வாறு ஆசைகள் அதிகமாகிக்கொண்டே செல்லும். ஆதலால்தான் வியாசர், "எந்த ஒரு பொருளை வைத்துக் கொண்டும் மனிதனின் மனம் திருப்தி என்பதை அடைவதே இல்லை" என்று கூறினார்.

Koviloor Digital Library

நம்மிடம் ஓரளவிற்கு சக்தி இருக்கிறது. இருக்கும் சக்தியை வைத்துக் கொண்டு நாம் நம் செயல்களை நடத்திக் கொண்டு திருப்தியடைந்து வாழலாம். ஆனால் அவ்வாறு நாம் இருக்க மாட்டோம். ஒரு பக்கம் நாமே பொருட்களை அடைய விரும்பிக் கொண்டு செல்வோம். மற்றொரு பக்கம் மற்றவர்கள் அவ்வாறு அடைந்துவிடக் கூடாது என்று தடுக்க முயல்வோம். "வேறு ஒருவனுக்கு நம் பதவி கிடைத்து விட்டால் என்ன செய்வது? அவன் நம்மை நீக்கிவிட்டால் என்ன செய்வது? அவன் நம்மை தோற்கடித்துவிட்டால் என்ன செய்வது?" என்கின்ற எண்ணமெல்லாம் இருக்கும். அதனால்தான்,

த்விதீயாத்வை பயம் பவதி (5.15)

(இரண்டாவது பொருளிலிருந்து பயம் ஏற்படுகிறது.)

என்று சொல்லப்பட்டுள்ளது. இரண்டாவதாக ஒரு பொருள் இருந்தால் நமக்குத் தொந்தரவுகள் வந்துவிடுமோ? என்கின்ற பயம் இருந்துகொண்டுதான் இருக்கும்.

நமக்கு ஆசைகள் இருப்பதினால்தான் நம் மனம் அலைகின்றது. ஆதலால் நாம் துன்பம் அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. எல்லோரும் இன்பத்தையே விரும்புகின்றார்கள். அவர்கள் விரும்பும் இன்பம் கிடைக்க வேண்டுமென்றால் மனதை அடக்குவது மிக அவசியம். இங்கு சிலர், "உயிர் இருக்கும் வரையில்தான் மனம் அலைய முடியும். மரணம் அடைந்த பிறகு மனம் எவ்வாறு அலைய முடியும்?" என்றெல்லாம் சொல்லுவார்கள். ஒன்றை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். இறந்த பிறகு ஒருவன் இல்லாமல் போய்விடுவதில்லை. மறுபிறவி என்பது இருக்கின்றது. ஆதலால் "இறந்த மாத்திரத்தில் இனிமேல் மனம் அசையவே அசையாது. நாம் இன்பத்தையே பெறலாம்" என்கின்ற எண்ணம் வெறும் பிரமைதான்.

சிலர் உலகத்திலுள்ள துன்பங்களைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொள்வதற்கும் தயாராய் இருப்பார்கள். அவ்வாறு தற்கொலையையும் செய்துகொள்வார்கள். ஆனால் அவ்வாறு செய்வதனால் பிரயோஜனமே இல்லை. நாம் உலகில் துன்பம் பெறுவதற்குக் காரணம் நமது பாவமே ஆகும். தற்கொலை செய்துகொள்வது தவறு. அதுவே பெரிய பாவமாகிவிடும். ஒருவன்

Koviloor Digital Library

துன்பத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகத் தற்கொலை செய்து கொண்டான் என்றால் அதற்கு ஒப்பாக,

வ்ருச்சிகபயாத் பலாயமானஸ்ய ஆசீமுகே நிபாத: (1.)

(தேளுக்கு பயந்து ஓடிய ஒருவன் பாம்பின் வாயில் விழுகிறான்.)

என்றுதான் சொல்ல வேண்டும். "தேள் கொட்டும்" என்ற பயத்தினால் ஒருவன் ஓடிக்கொண்டே இருந்தான். அவ்வாறு ஓடிக்கொண்டு இருக்கும்பொழுது அவன் ஒரு பாம்பின் வாயில் சென்று விழுந்தான். அப்பொழுது அவன் கதி என்ன ஆகும்? அதேபோல் துன்பத்தைத் தாங்க முடியவில்லை என்கின்ற காரணத்தினால் இங்கு ஒருவன் தற்கொலை செய்துகொள்கிறான். பிறகு எத்தகைய கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை அவன் யோசனை செய்வதில்லை. உபநிஷத்திலேயே ஓரிடத்தில்,

அந்தம் தம: ப்ரவிசந்தி (2.)

(கண்களைக் குருடாக்கும் இருட்டில் நுழைகிறார்கள்.)

என்றும் மற்றோரிடத்தில்,

யே கே சாத்மஹனோ ஜனா: (3.)

(யார் தற்கொலை செய்து கொள்கிறார்களோ...)

என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு நேரடியான பொருள், எவர்களுக்கு "ஆத்ம ஞானம்" கிடைக்கவில்லையோ அவர்களுக்குக் கஷ்டம்தான் என்பதாகும். ஆனால்

ஸாரவத் விச்வதோமுகம் (4.)

(சுருக்கமானது, ஆனால் பல முகப்புகளுள்ளது.)

என்று கூறப்பட்டதுபோல் பலவிதமான அர்த்தங்களை நாம் சொற்களிலிருந்து எடுக்கலாம். ஆகவே மேற்கூறப்பட்ட உபநிஷத் வார்த்தைகளின் மற்றொரு பொருள், "யார் தற்கொலை செய்து கொள்வார்களோ அவன் பேரிருட்டில் நுழைகின்றான்" என்பதாகும்.

Koviloor Digital Library

சிலர், "ஆத்மாவே கிடையாது. உலகில் எந்த சுகத்தை அனுபவிக்க வேண்டுமோ அதை அனுபவித்து ஒருவன் இறந்து போகலாம். அதுவேதான் மோக்ஷம்" என்று ஆட்சேபிப்பர். இது சரியான தீர்மானமே ஆகாது. ஆத்மா என்பது உண்மையில் இருக்கின்றது. நாம் உலக நடப்பை ஆராய்ந்து பார்த்தால் இந்த விஷயம் புரியும். உலகில் "காரிய காரணங்களை" நாம் ஆராய்ந்தால் நாம் இறந்த பிறகும் இருப்போம் என்பது தெளிவாகும். உலகத்தில் சிலர் இன்பத்தைப் பெறுகின்றார்கள். மற்ற சிலர் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். (துன்பம், இன்பம் போன்ற) காரியம் ஏற்பட வேண்டுமென்றால் அதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும். உலகில் ஒருவன் துன்பம் அடைவதற்கும் மற்றொருவன் இன்பம் பெறுவதற்கும் காரணம் என்ன? ஒருவனின் முயற்சியேதான் காரணம். "சிலர் முயற்சி செய்கிறார்கள். தகுந்த முயற்சி செய்ததினால் அதன் பயனாக சுகத்தைப் பெறுகிறார்கள். மற்ற சிலர் அவ்வாறு செய்வதில்லை. ஆதலால் சுகம் பெறுவதில்லை" என்று சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். ஆனால் இந்த நியமம் எப்பொழுதும் சரிவருவதில்லை.

சில சமயங்களில், நாம் சரியான விகிதத்தில் முயற்சி செய்தாலும் இன்பத்தைப் பெறுவதில்லை. ஆதலால் இப்பிறவியிலேயே, நாம் செய்த முயற்சியின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்ல முடியாது.

துல்யம் கர்ஷந்தி ப்ருதிவீம் துல்யம் சாஸ்த்ராண்யதீயதே |
உந்மஜ்ஜந்தி நிமஜ்ஜந்தி தைவஸ்யைகஸ்ய லீலயா || (5.)

இருவர் சாஸ்திரங்களைச் சமமாகவே படித்தனர். ஒருவன் பெரிய பண்டிதனாகிவிட்டான், மற்றவனுக்கு சாஸ்திர அறிவே வரவில்லை. விதி என்ற ஒன்றின் லீலையால் இவ்வாறு நடக்கிறது.

நிலம் வைத்துக்கொண்டிருந்தனர் இருவர். அவர்கள் இருவரும் சமமாகவே உழுதல் முதலான வேலைகளைச் செய்தனர். ஒருவனுக்கு ஒரு பலனும் கிடைக்கவில்லை. மற்றொருவனுக்கு நிறையப் பலன் கிடைத்தது என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் நன்றாகப் படித்திருக்கலாம். தேர்வையும் நன்றாக எழுதியிருக்கலாம். அவ்வாறு இருந்தாலும் தேர்வில் வேண்டுமளவிற்கு மதிப்பெண்கள்

Koviloor Digital Library

வராமல் போகலாம். மதிப்பெண்கள் அவ்வாறு குறைவாக வரக் காரணம் தேர்வு நடத்துபவருக்கு பாரபட்சமான கருத்து இருக்கின்றது என்று பொருளில்லை. தேர்வு எழுதியவனின் எழுத்துக்கள் சிறியனவாக இருந்திருக்கலாம். அதைச் சரியாகப் படிக்க வேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் திருத்துபவர் சரியாக மதிப்பெண்கள் அளிக்காமல் இருந்திருக்கலாம். அல்லது ஒருவன் எல்லா கேள்விகளுக்கும் பதில் எழுதியிருந்தும் இரண்டு கேள்விகளுக்கு நன்கு பதில் எழுதாமல் இருந்திருக்கலாம். அந்தக் கேள்விகளின் மேல் திருத்துபவரின் கவனம் சென்று, “எல்லாப் பதில்களையும் இவன் நன்றாக எழுதி இருக்க மாட்டான்” என்கின்ற எண்ணம் ஏற்பட்டு அவர் சரியாக மதிப்பெண்கள் அளிக்காமல் இருந்திருக்கலாம். இது ஒரு பக்கம்.

மற்றொரு பக்கம் எவ்வாறென்றால் பரீட்சை எழுதியவன் எல்லாப் பதில்களையும் நன்றாக எழுதாமல் இரண்டு பதில்களை மட்டும் நன்றாக எழுதியிருக்கலாம். தேர்வுத் தாளைத் திருத்துபவருக்கு முழுவதும் படிப்பதற்கு சோம்பலாக இருந்து அவர் ஒரே ஒரு பதிலின் பக்கம் கவனத்தைச் செலுத்தியிருக்கலாம். அது நன்கு எழுதப்பட்ட பதிலானால் அதைக் கண்டவுடன் அவர் “இம்மாணவன் எல்லாப் பதில்களையும் நன்றாக எழுதியிருப்பான்” என்று எண்ணி மதிப்பெண்களை அதிகமாகக் கொடுத்திருக்கலாம். ஆதலால், ஒருவன் எழுதியது அதிகமாக இருந்தும் மதிப்பெண்கள் குறைவாகக் கிடைத்திருக்கலாம். குறைவாக எழுதியவனுக்கும் மதிப்பெண்கள் அதிகமாகக் கிடைத்திருக்கலாம். இவ்வாறும் நாம் உலகில் பார்க்கிறோம்.

மற்றோர் உதாரணம் பார்ப்போம். இரண்டு உழவர்கள் இருக்கிறார்கள். இருவரும் நன்றாக வயலை உழுதிருக்கிறார்கள். விதைகளை நன்கு தூவியிருக்கின்றார்கள். இருவரின் வயல்களிலும் மழை சரியாகப் பெய்திருக்கிறது. இருவருக்கும் நிறைய விளைச்சல் கிடைத்துவிட்டது. அவர்கள் தானியங்களை தத்தம் வயலிலேயே சேர்த்து வைத்திருக்கிறார்கள். சாலை ஒன்றின் இருபுறங்களிலும் எதிரெதிராக இவர்களது வயல்கள் அமைந்துள்ளன. கடைசி நாளன்று தானியங்கள் எல்லாவற்றையும் சேர்த்துவைத்த பிறகு நல்ல மழை பெய்தது. மழை ஒருவனின் பகுதியில் அடித்துப் பெய்தது. மற்றொருவனின் பகுதியில் மிகக் குறைவாகவே பெய்தது. மறுநாள்

Koviloor Digital Library

காலையில் இரு உழவர்களும் வந்து பார்க்கின்றார்கள். ஒருவன் அழுகின்றான், மற்றொருவனோ சிரிக்கின்றான். ஒருவன் பூமியில் சேமித்துவைத்த தானியங்கள் கெட்டுப் போய்விட்டன, மற்றொருவனுக்கோ ஒருவிதமான இடைஞ்சலும் ஏற்படவில்லை.

இவ்வாறு நடப்பதையும் நாம் உலகத்தில் பார்க்கலாம். ஆதலால் இப்பொழுது நாம் செய்யும் முயற்சிகளை வைத்துக் கொண்டுதான் பலனைச் சொல்ல முடியும் என்கின்ற நியமம் எப்பொழுதும் சரிவராது. உதாரணங்களில் நாம் பார்த்த பேர்வழிகள்,

துல்யம் கர்ஷந்தி ப்ருதிவீம் துல்யம் சாஸ்த்ராண்யதீயதே ।

என்று சொல்லப்பட்ட வகையில் சரிசமமாக வேலை செய்தார்கள். அப்படி இருந்தும்

"உந்மஜ்ஜந்தி நிமஜ்ஜந்தி தைவஸ்யைகஸ்ய லீலயா"

என்று கூறப்பட்டவகையில் ஒருவன் சிரித்துக் கொண்டிருந்தான். மற்றொருவன் அழுது கொண்டிருந்தான். அது அவனவனுடைய தலைவிதி.

விதி என்றால் என்ன? அதை நாம் கண்களாலேயா பார்க்கின்றோம்! இல்லை. நாம் செய்த கர்மாவின் ஸம்ஸ்காரமே (பலனே) அந்த விதி போன்று இருக்கின்றது. நாம் நல்லவைகளையோ, தீயவைகளையோ செய்வோம். தர்மத்தையோ அல்லது அதர்மத்தையோ அனுஸரிப்போம். அவை அங்கேயே அழிந்து போவதில்லை. ஸம்ஸ்கார வடிவில் இருந்து வந்து ஏதாவது ஒரு காலத்தில் பலனைக் கொடுத்தே தீர்கிறது. அதுதான் விதி என்பது. ஒருவன் முற்பிறவியில் பாவங்களை அதிகமாகச் செய்திருக்கலாம். ஆகையினால் ஒருவனுக்கு இப்பிறவியில் முன் சொல்லப்பட்ட உழவனைப்போல் அழுது கொண்டிருக்கும் நிலைமை ஏற்படலாம். மற்றொருவன் முன்பு நல்ல கர்மாவைச் செய்திருக்கலாம். ஆதலால் அவனுக்கு இரண்டாவதாக கூறப்பட்ட உழவனைப்போல இப்போது சிரிக்கும் வாய்ப்புக் கிடைக்கலாம். இதிலிருந்து ஒருவனது கர்மா அவனுக்குத் தற்போது சுகத்தையோ துக்கத்தையோ தருகின்றது என்று தெரிகிறது. (மறுபிறவி இருந்தால்தான் இவ்வாறெல்லாம் முடியும். ஆதலால் "வெறும்

Koviloor Digital Library

உடலே ஆத்மா; ஒருவன் மரணமடைந்துவிட்டால் அதுவே மோக்ஷம்" என்கின்ற கோட்பாடு சரியாகாது.)

நமக்கு மற்றொரு கேள்வி வரலாம். "உலகத்தில் நல்லவற்றைச் செய்பவர்களைப் பார்க்கின்றோம். அவர்களும் கஷ்டப்படுகின்றார்கள். ஆனால் கஷ்டத்தை அடையாமல் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் பாவங்களைச் செய்து கொண்டிருப்பதையும் நாம் பார்க்கலாம். இதிலிருந்து பாவம் செய்வது தர்மம், புண்ணியம் செய்வது அதர்மம் என்ற முடிவுக்கு ஏன் வரக் கூடாது? " என்ற கேள்வியே அது.

அது அவ்வாறில்லை. தர்மம் தர்மம்தான். அதர்மம் அதர்மம்தான். அவ்வாறிருக்கையில் தவறுகளைச் செய்பவர்கள் இன்பத்தை பெறுவதற்குக் காரணம் முற்பிறவியில் அவர்கள் செய்த கர்மாக்களினால் தானாகும். இவ்விஷயத்தைப் பற்றி மனு,

அதர்மேணைததே தாவத்ததோ பத்ராணி பச்யதி |
தத: ஸபத்னாஞ்ஜயதி ஸமூலஸ்து விநச்யதி || (6.)

(அதர்மத்தினால் ஒருவன் மேன்மைபெற்று செழிப்படைவது போல் தோன்றுகிறான். பிறகு தன் எதிரிகளை வெல்கின்றான். எப்படியிருந்தாலும் கடைசியில் அவன் அடியோடு அழிகிறான்.)

என்று கூறியுள்ளார். அதர்மத்தைச் செய்பவன் அதன் மூலமாக முதலில் அவன் வாழ்வில் செழிப்பை அடைகிறான். (பிறகு) அவனுக்கு எது "சுகம்" என்று இருக்கின்றதோ அதையெல்லாம் அடைகின்றான். பிறகு அவனை எதிர்ப்பவர்கள் அனைவரும் தோல்வி அடையும்படிச் செய்கின்றான். ஆனால் கடைசியில் வேரோடு நாசமாகின்றான்.

எப்பொழுது அவனுடைய தீய கர்மாவின் (முன்வினை) பலனை அனுபவிக்கும் நிலை வருகின்றதோ அப்பொழுது அவன் அடியோடு நாசமடைந்து விடுகின்றான். எப்பொழுது அவனுக்குக் கர்மாவின் பலன் கிடைக்கும்? ஒருவனுக்குக் கர்மாவின் பலன் விரைவாகவும் கிடைக்கலாம்; காலதாமதத்தோடும் கிடைக்கலாம்.

ஓரிடத்தில்,

Koviloor Digital Library

த்ரிபிர்வர்ஷை: த்ரிபிர்மாஸை: த்ரிபி: பக்ஷை: த்ரிபிர்தினை: |
அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமச்னுதே || (7.)

(மூன்று வருடங்களிலோ, மூன்று மாதங்களிலோ, மூன்று பக்ஷங்களிலோ, மூன்று நாட்களிலோ – ஒருவன் செய்யப்பட்ட மிக நல்ல மற்றும் மிகத் தீய செயல்களுக்கான பலனை இங்கேயே அனுபவிக்கிறான்.)

என்று சொல்லப்பட்டுள்ளது.

நாம் உலகத்திலேயே பார்க்கிறோம். கிரிமினல் வழக்கு என்பதும், சிவில் வழக்கு என்பதும் நீதிமன்றங்களுக்கு வருகின்றன. ஒரு சிவில் வழக்கு இருபது வருடங்கள் வரையில்கூட முடிவடையாமல் இருக்கலாம். ஆனால் ஒரு கிரிமினல் வழக்கு அதைக்காட்டிலும் சீக்கிரம் முடிவடைகிறது. சுமார் ஆறு மாதங்களிலேயே குற்றவாளி பலனை அனுபவிக்க நேரிடலாம். இந்த வித்தியாசம் ஏன்? வித்தியாசத்திற்கு காரணம் என்னவென்றால் கிரிமினல் வழக்கிற்கு உடனடியாகத் தண்டனை அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஆதலால் (இருவகை வழக்குகளுக்கும்) இத்தகைய வேறுபாடுகள் உள்ளன. இதேபோல் தான் இறைவனின் தர்பாரிலும் (அவையிலும்). ஒருவன் செய்த கர்மா தீவிரமாக இருந்தால் உடனடியாக பலன் கிடைத்துவிடும். அதாவது தீவிரமான பாவமோ, புண்ணியமோ இருந்தால் கூடிய சீக்கிரமே பலன் கிடைத்துவிடும்.

கர்மாவின் பலன் "த்ரிபிர்வர்ஷை:" என்று கூறியது போல் மூன்று வருடங்களுக்குள் வரலாம். "த்ரிபிர்மாஸை:" என்பது போல் மூன்று மாதங்களுக்குள் வரலாம். அல்லது "த்ரிபி:பக்ஷை:" என்பது போல் மூன்று பக்ஷங்களுக்குள் (45 நாட்கள்) வரலாம். அதிகத் தீவிரமாகச் சென்றுவிட்டால் "த்ரிபி:தினை:" என்று கூறப்பட்டது போல் மூன்றே நாட்களுக்குள் கர்மாவின் பலனை நாம் அனுபவிக்க நேரலாம். எது தீவிரம், எது தீவிரம் இல்லை என்று நம்மால் உடனடியாகக் கூற முடியாது. கர்மாவின் பலனை அனுபவித்த பிறகுதான் "அது எவ்வளவு தீவிரமாக இருந்தது? உடனடியாகப் பலனை அளித்ததா இல்லையா?" என்றெல்லாம் தெரிந்து கொள்ளலாம். நாம் இப்பொழுது செய்யும் கர்மா பலனைக் கொடுக்காமல் தீரவே தீராது. நாம் செய்த கர்மா அவ்வளவு

Koviloor Digital Library

தீவிரமான கர்மாவாக இல்லையென்றால் நாம் சாகும்வரை அதனுடைய பலனை நாம் அனுபவிக்காமல் இருக்கலாம். அதைக் கண்டு நாஸ்திகர்கள், "இவன் செய்த கர்மாவிற்குப் பலனே இல்லை" என்று கூறலாம். ஆனால் அது அவர்கள் கூறுவது போல் இல்லை. அவ்வாறு இருந்திருந்தால் சாஸ்திரங்களின் உபதேசம் எல்லாம் வீணானவையாகிவிடும். (ஆகவே கர்மாக்களுக்கு ஏதாவது) ஒரு பிறவியில் பலன் கிடைத்தே தீரும். இவ்வாறு இல்லாவிட்டால் காரியம் – காரணம் என்ற அமைப்பிற்கே உலகத்தில் இடையூறு வரும்.

நாம் செய்யும் கர்மாவிற்கு ஏதாவது ஒரு காலத்தில் பலன் கிடைத்தே தீரும் என்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் மனு,

கதேऽபி வயஸி க்ராஹ்யா வித்யா ஸர்வாத்மனா புதை: |
யத்யபி ஸ்யான்ன பலதா ஸுலபா ஸாऽன்யஜன்மனி || (8.)

(வயதானாலும் ஒருவன் அனைத்து முயற்சிகளுடனும் அறிவைப் பெற வேண்டும். அது இப்போது பலனளிக்கா விட்டாலும் மற்றொரு பிறவியில் (அறிவு) பெற எளிதாக இருக்கும்.)

என்று கூறியுள்ளார். "வயதானாலும் கல்வி கற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்துகொண்டு வா" என்கிறார் மனு. இப்பொழுது இந்தக் காலத்திலும் Evening Classes (மாலை நேரப் பாடம்), Night Classes (இரவு நேரப் பாடம்) முதலியவை நடத்தப்படுவதைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். இதேபோல்தான் பழைய காலத்திலும் மனு, "வயதானாலும் வித்யையைக் கற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்து கொண்டு வா" என்று கூறினார் போலும்! அவ்வாறு முயற்சி செய்வதால் என்ன பிரயோஜனம்? கற்பதன் பலன் கிடைப்பதற்கு முன்னாலேயே நாம் மரணமடைந்து விடலாமே என்றால்,

யத்யபி ஸ்யான்ன பலதா

என்று கூறியது போல் இப்பிறவியிலேயே படிப்புக்குப் பலன் கிடைக்காமல் இருக்கலாம். ஆனால் இப்பொழுது செய்த முயற்சி வீணாகாது.

ஸுலபா ஸாऽன்யஜன்மனி

Koviloor Digital Library

என்று கூறப்பட்டதுபோல் வேறு ஒரு பிறவியிலாவது நமக்கு அந்தக் கர்மாவின் பலன் – அதாவது படிப்பின் பலன் அவசியம் கிடைக்கும். அடுத்த பிறவியில் நாம் மிக எளிதாக அக்கல்வியைக் கற்றுக் கொள்ளலாம். ஆதலால் "வயதானாலும் கல்வியைக் கற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்" என்றார் மனு.

இதெல்லாம் எதைத் தெரிவிக்கின்றது? "நாம் செய்த கர்மாவிற்கு அவசியம் பலன் உண்டு. இந்தப் பிறவியில் இல்லா விட்டாலும் அடுத்த பிறவியில் கண்டிப்பாகப் பலன் கிடைக்கும்" என்று தெரிவிக்கிறது. (இன்பத்தை விரும்பினால் நாம் தர்மத்தைச் செய்ய வேண்டும். நாம் இப்பொழுது அதர்மத்தைச் செய்து விட்டால் பிறகு துன்பம்தான் வரும்.) இவ்வாறு கர்மாவின் பலனை அனுபவித்துக் கொண்டேதான் போக வேண்டுமா? நிலைத்த இன்பம் கிடைப்பதற்கு வழி இல்லையா? என்று கேட்டால் அதற்கு பதில் "நிலையான இன்பம் உண்டு" என்பதே ஆகும். பகவானே,

மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜன்ம ந வித்யதே (2.28)

(குந்தியின் மைந்தா, ஆனால் என்னை அடைந்தவனுக்கு மறுபிறவியில்லை.)

என்று கூறியுள்ளபடி இறைவனுடன் நாம் ஒன்றிவிட்டால் நமக்கு மறுபிறவியே கிடையாது. துன்பம் என்பதும் கிடையாது. அவ்வாறு இறைவனுடன் ஒன்றிய நிலை வராவிட்டால் நமக்கு மறுபிறவி இருந்தே தீரும்.

மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாங்கதிம் (9.)

(... குந்தியின் மகனே, என்னையடையாமல் இன்னும் கீழான கதியையே அடைகிறார்கள்.)

என்று சொல்லப்பட்டபடி கீழான நிலையை அடைந்து கொண்டே இருப்பான்.

ஆஸ்திகர்களின் நம்பிக்கை "கர்மா" எப்பொழுதும் பலன் கொடுத்தே தீரும் என்பதே ஆகும். நாஸ்திகர்களோ கர்மாவைச் செய்தாலும் நமக்குப் பலன் கிடைக்காமல் போய் விடலாம் என்று நம்புவார்கள். நாஸ்திகர்கள், ஏதாவது ஒன்றை அடைய

Koviloor Digital Library

வேண்டுமென்றால் எந்த வழியிலாவது அடைந்துவிடலாம் என்று நம்புகின்றார்கள். ஆஸ்திகர்களோ எதற்கும் தவறான கர்மாவைச் செய்வதற்குத் தயங்குவார்கள். ஏனென்றால் ஆஸ்திகர்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை உண்டு. அப்பிறவியிலாவது பலனை அனுபவிக்க நேரிடும் என்று தெரியும். நாஸ்திகர்களுக்கு அவ்வாறு பயம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாஸ்திகன் "நான் என் காரியத்தைச் சாதித்து விட்டேன்" என்று கூறலாம். அப்பொழுது ஆஸ்திகன், "இவன் காரியத்தைத் தவறான வழியில் செய்து பலனைச் சாதித்து விட்டான். பலனைச் சாதித்தாலும் தவறான வழியில் சென்றதற்காக நாஸ்திகன் துன்பத்தை நிச்சயமாக அனுபவிக்க நேரிடும்" என நினைப்பான். ஆகவே நாம் கர்மா என்பது உண்டு, இறைவன் உள்ளான் என்ற நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்தால் அதிகமாகத் தவறுகளைச் செய்ய மாட்டோம்.

வேதமே ஓரிடத்தில்,

பீஷாऽஸ்மாத்வாத: பவதே । பீஷோதேதி ஸூர்ய: ॥ (10.)

(அவர் விஷயத்திலுள்ள பயத்தினால் காற்று வீசுகிறது. அவர் விஷயத்திலுள்ள பயத்தினால் கதிரவன் உதிக்கிறான்.)

என்று கூறுகிறது. இறைவனின் கட்டளைக்கு இணங்க, பயத்தினால்தான் கதிரவன் உதயமாகின்றான். காற்றும் வீசுகின்றது என்றெல்லாம் வேதம் கூறுகின்றது. இத்தகைய பகவான் (ஒருவன் செய்த கர்மாவிற்குப்) பலனைக் கொடுத்தே தீருவான் என்கின்ற நம்பிக்கை இருந்தால் தவறு செய்யும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தாலும் நாம் தவறைச் செய்யாமல் இருந்து விடுவோம். (அவ்வாறு இருந்தோமென்றால் நாம் இன்பத்தைப் பெறலாம்.)

மக்களில் பல வேற்றுமைகள் உள்ளன. சாமான்யமான மக்களுக்கு அளவில்லாத ஆசைகள் இருந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் உயர்ந்த நிலையை அடைந்தவனுக்கு, அதாவது பரம்பொருளின் ஸாக்ஷாத்காரம் பெற்றவனுக்கு ஒரு விதமான ஆசையும் கிடையாது. அவன் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருக்கின்றான். அத்தகையவனை மனதில் வைத்துக்கொண்டு பகவான்,

Koviloor Digital Library

நைவ தஸ்ய க்ருதேனார்த்தோ நாக்ருதேனேஹ கச்சன (1.19)

(அவனுக்கு கர்மம் செய்து ஒன்றைப் பெறுதலும், கர்மம் செய்யாது ஒன்றை இழத்தலும் இல்லை.)

என்று கூறுகிறார். அத்தகையவனுக்கு செய்யப்பட்ட செயல்களுடனும் தொடர்பு கிடையாது. செய்யப்பட வேண்டியவற்றுடனும் தொடர்பு கிடையாது.

உலகத்தில் மக்களுக்குப் பகுத்தறியும் திறனில் வேற்றுமை உள்ளது. சில மனிதர்கள் அதிகமாக விசாரம் (பகுத்தறிதலை) செய்வார்கள். சில மனிதர்களுக்கு அதிகமாக விசாரம் செய்ய சாமர்த்தியம் இல்லாமல் இருக்கலாம்.

விசாரம் செய்யாதவனுக்கு இரவு நேரம் வந்துவிட்டது என்றால் "இன்றைக்கு ஏதோ நடந்துவிட்டது. பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது தூங்கலாம்" என்று எண்ணித் தூங்கப் போய்விடுவான். ஆனால் புத்தி உள்ளவன் அவ்வாறு இருப்பதில்லை. இன்றைக்கு நாம் என்ன செய்தோம்? நல்லவைகளைச் செய்தோமா? தவறுகளைச் செய்தோமா? நாளை இவற்றிற்காக நாம் பதில் சொல்லியாக வேண்டுமே என்றெல்லாம் யோசனை செய்வான்.

தன்யோ ஜன: ப்ராக்ஞ: (11.)

(அறிவாளி அதிர்ஷ்டம் படைத்தவன்.)

அறிவாளி கொடுத்து வைத்தவன். அவன் "நான் என்ன செய்கின்றேனோ அதற்கு அவசியம் நான் பதில் சொல்லியாக வேண்டும்.

நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி । (12.)

(அனுபவிக்கப் பெறாத கர்மா நூறு கோடி கல்பங்கள் முடிவுற்றாலும் அழிவதில்லை.)

என்று கூறப்பட்டதனால், கர்மா பலன் கொடுக்காமல் இருந்தால் நூறு கோடி கல்பங்கள் ஆனாலும் அது அவ்வாறு இருக்கும். பலனைக் கொடுத்த பிறகுதான் அழியும்" என்றெல்லாம்

Koviloor Digital Library

யோசனை செய்வான். ஆகையால் அறிவாளிகள் கர்மாக்களைக் கவனத்துடன் செய்து கொண்டு வருவார்கள்.

ஒழுங்காகக் கர்மாவைச் செய்யாததன் பலனாகத்தான் மனிதர்கள் (பிறப்பு–இறப்பென்னும்) ஸம்ஸாரத்தில் மாட்டிக் கொள்கிறார்கள். ஸம்ஸாரத்தில் அகப்பட்டுக் கொண்டபின் யாருக்குத்தான் நல்ல இன்பம் வரும்? இரண்டு மூன்று நாட்களுக்கு இன்பம் இருப்பது போல் தோன்றும். பிறகு, உலகைப் பார்த்தோமென்றால் இங்கு இன்பம் கிடையாது என்று தெரியவரும். ஆகையால்தான்,

ஸம்ஸாரமேவ நிஸ்ஸாரம்

(ஸம்ஸாரம் சுவையற்று விளங்குகிறது.) (2.25)

என்று முன்னோர்கள் கூறினர். ஸம்ஸாரத்தில் ஒருவிதமான ஸாரமும் கிடையாது. கடைசியில் துன்பத்தில்தான் வந்து முடியும்.

உலகத்தில் இருந்துகொண்டே இன்பத்தைப் பெற்று விடலாம் என்று மக்களுக்கு ஆசைகள் இருக்கும். இத்தகைய ஆசைகளை அவர்கள் தீர்த்துக்கொள்ள முடியாது என்பது (சில காலம்) உலகைப் பார்த்துக் கொண்டே இருந்தால் தெரியவரும். சாஸ்திரங்களிலேயே “பகவானை நாம் அடைய முடியும். அவனை அடைந்தால்தான் நம்மால் முழுமையான இன்பத்தைப் பெற முடியும்” என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

பகவானின் ஸாக்ஷாத்காரம் பெற வேண்டும் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. அதை எவ்வாறு நாம் பெறுவது? பகவானின் ஸாக்ஷாத்காரம் பெற வேண்டுமென்றால் நாம் உலகத்திலிருந்து நம் மனதை எடுத்துவிட்டு பகவான் விஷயத்திலேயே வைத்திருக்க வேண்டும். சிரவணம், மனனம், நிதித்யாஸனம் (இறைவனைப் பற்றிக் கேட்டல், சிந்தித்தல், ஒருநிலை மனதோடு தியானித்தல்) போன்றவற்றைச் செய்து கொண்டு வர வேண்டும். பகவானிடத்திலேயே மனதை வைத்திருக்க வேண்டுமென்றால் பகவானை ஸகுண ரூபத்திலேயோ (உருவமுள்ளவனாகவோ) அல்லது நிர்குணத்திலேயோ (உருவமற்றவனாகவோ) சிந்திக்க வேண்டும். பகவானுக்கு ஸகுண

Koviloor Digital Library

உருவமும் உண்டு, நிர்குண ரூபமும் உண்டு. இதில் எந்த ரூபம் உண்மையானது? என்ற கேள்வி நமக்கு வரலாம். தெளிவான நீர் இருக்கின்றது. அந்த சுத்தமான நீரில் வர்ணத்தையோ, ருசி உண்டாக்கும் பொருளையோ கலந்து விடலாம். அப்போது அந்த நீர், அந்த ருசி இருப்பதைப் போலவோ அல்லது அந்த வர்ணம் இருப்பதைப் போலவோ தோற்றமளிக்கும். அதேபோல் இறைவன் உண்மையில்,

அசப்தம் அஸ்பர்சம் அரூபம் அவ்யயம்
ததாऽரஸம் நித்யம் அகந்தவச்ச யத் I (13.)

(அது–ஓசை, ஊறு, உருவம் (நிறம்), சுவை மற்றும் நாற்றம்– இவைகள் இல்லாதது, காலப் போக்கில் குறைவு ஏற்பட்டு அழிவை அடையாதது. மேலும், ஆரம்பமின்றி என்றும் நிலைத்திருக்கும் தன்மையது.)

என்று சொல்லப்பட்டுள்ளது போல் ஒலி போன்றவைகள் இல்லாமல் இருக்கின்றான்.

ஆகாசவத் ஸர்வகதச்ச நித்ய: (14.)

(ஆகாயத்தைப் போல் எங்குமிருப்பதாகவும் – நிலையாகவும்)

என்றும் கூறியவாறு இறைவன் ஆகாயத்தைப் போல் எங்கும் பரவி உள்ளவனாயும், நாசமற்றவனாயும் இருக்கின்றான்.

இவ்வாறு நாம் சொல்லும்பொழுது சிலர், "நீங்கள் எதற்காகக் கல்லைப் பூஜை செய்கின்றீர்கள்? பகவான் எங்கும் நிறைந்தவனாயிற்றே! எல்லா இடங்களிலும் விளங்கிக் கொண்டிருக்கிறான் என்றால் அவன் கல்லுக்குள் மட்டுமா உட்கார்ந்து கொண்டிருக்கிறான்? கல்லைப் பூஜை செய்வதாக இருந்தால் அதைக் காட்டிலும் பெரிதாக உள்ள ஒரு பெரிய மலையையே பூஜை செய்யுங்கள்" என்று எதிர்ப்புத் தெரிவித்து ஸகுண (உருவ) ஆராதனையை நிந்தனை (திட்டுவார்கள்) செய்வார்கள். இம்மாதிரி ஸகுண ரூபத்தில் ஆராதனை செய்வதுதான் தலை சிறந்தது என்று நாமும் சொல்ல வரவில்லை. பல மனிதர்களுக்கு நிர்குணமும் நிராகாரமுமான பரம்பொருளில் மனம் செல்வதில்லை. அவர்களிடம்,

Koviloor Digital Library

"உருவமுள்ள இறைவனே கிடையாது. அவ்வாறு வழிபடக் கூடாது" என்றால் அவர்கள் என்னதான் செய்வார்கள்?

நிர்குணமோ கிடைப்பதில்லை, ஸகுணமோ ஆராதிக்கக் கூடாது என்கிறீர்கள். அந்நிலையில் அவர்களுக்கு இங்கும் இல்லை, அங்கும் இல்லை என்றாகிவிடும். அவ்வாறு செய்வது சரியா? இல்லை. ஆதலால்தான் மதுஸூதன ஸரஸ்வதீ ஓரிடத்தில்,

த்யானாப்யாஸவசீக்ருதேன மனஸா யந்நிர்குணம் நிஷ்க்ரியம்
ஜ்யோதி: கிஞ்சன யோகினோ யதி பரம் பச்யந்தி பச்யந்து தே ।
அஸ்மாகம் து ததேவ லோசனசமத்காராய பூயாச்சிரம்
காலிந்தீபுலினேஷு தத்கிமபி யந்நீலம் அஹோ தாவதி ॥ (15.)

(தியானத்தின் வசத்திலுள்ள மனதின் மூலம் யோகிகள் குணமும், செயலுமில்லாத ஏதோ ஓர் உயர்ந்த. ஒளியைக் காண்கிறார்களென்றால் அதை அவர்கள் பார்க்கட்டும். ஆனால் எங்களுக்கு, யமுனைக் கரையில் நீலமாய் ஓடிக் கொண்டிருக்கும் கண்களைக் கவரும் ஸ்ரீ கிருஷ்ணனின் காட்சி நீண்ட காலம் நிற்கட்டும்.)

என்று சொல்கிறார்.

எவர்கள் ப்ராணாயாமம் (மூச்சின் கட்டுப்பாடு), ப்ரத்யாஹாரம் (புலன்களை அடக்குதல்), தாரணா (மனதை ஓரிடத்தில் வைப்பது), தியானம் (மனதை ஒரு நிலைப்படுத்தி ஒரே பொருளைப் பற்றி சிந்தனை செய்வது), ஸமாதி (தியானத்தின் உயர்ந்த நிலை) ஆகியவைகளை எல்லாம் நன்கு பயிற்சி செய்கின்றார்களோ, அவர்கள் நிர்குணமான, நிராகாரமான பரம்பொருளில் மனதை வைக்கலாம். "அவ்வாறே அவர்கள் வைத்துக் கொள்ளட்டும், நாங்கள் அதை குறை கூறவில்லை" என்று மதுஸூதன ஸரஸ்வதீ கூறுகின்றார். அவர் மேலும்,

அஸ்மாகம் து ததேவ லோசனசமத்காராய பூயாச்சிரம்
காலிந்தீபுலினேஷு தத்கிமபி யந்நீலம் அஹோ தாவதி ॥

என்று கூறியிருப்பதால், "அவ்வாறு மனம் நிற்காவிட்டால் ஸகுண ரூபத்தில் தியானம் செய்ய வேண்டும்" என்று கூறுகின்றார். மதுஸூதன ஸரஸ்வதீ நிர்குண உபாஸனையைப் பற்றி

Koviloor Digital Library

அறியாதவரில்லை. அவருக்கு நிர்குணத்தில் விருப்பம் இல்லை என்றும் கிடையாது. அவர் உயர்ந்த "அத்வைதி" தான். ஆனாலும் ஸகுண ஆராதனையைப் பற்றி இவ்வாறு (புகழ்ந்து) கூறியுள்ளார்.

மக்களின் சௌகரியத்தை மனதில் வைத்துக் கொண்டு மட்டும் அவர் அவ்வாறு கூறவில்லை. பாகவதத்தில் இதற்கான காரணங்களை கொடுத்துள்ளார்கள்.

ஆத்மாராமாச்ச முனயோ நிர்க்ரந்த்தா அப்யுருக்ரமே |
குர்வந்த்யஹைதுகீம் பக்திமித்தம்பூதகுணோ ஹரி: || (16.)

(ஆத்மாவிலேயே இன்பம் பெற்ற, பந்தங்களில்லாத முனிவர்களும் இறைவனிடம் காரணமற்ற பக்தியைச் செலுத்துகிறார்கள். இதுவே இறைவனின் குணங்களின் மகிமை.)

சிலர் ஆத்மாராமர்களாக இருப்பார்கள். "ஆத்மாராமர்கள்" என்றால் ஆத்மாவிலேயே ஈடுபாடு வைத்துக் கொண்டிருப்பவர்கள். "ஆத்மா" என்பது நாம் நினைப்பது போல் உடலில் இல்லை. பரம்பொருளிலேயே ஈடுபாடு வைத்துக்கொண்டு அதிலேயே ஒன்றி விடுபவர்கள்தான் ஆத்மாராமர்கள்.

அத்தகையவர்களும் இறைவனிடம் பக்தி செலுத்துவார்கள். ஏனென்றால்,

இத்தம்பூதகுணோ ஹரி:

என்று கூறப்பட்டுள்ளது போல் அத்தகைய உயர்ந்த குணங்கள் பகவானிடத்தில் உள்ளன.

பல மக்கள் "நானே பகவான்" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். நாம் கூறும் ஆத்மாராமர்களானவர்கள் அப்படிப்பட்டவர்களன்று. அவர்கள் நேரடியாக ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றவர்கள். மேலும் அவர்கள் எத்தகையவர்கள் என்று சுலோகத்திலேயே கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு அவித்யை (அறியாமை) என்னும் பந்தம் எதுவும் கிடையாது. அவர்களுக்குப் புத்தகமும் கிடையாது. அதாவது அவர்கள் சாஸ்திரங்களை எல்லாம் படித்துவிட்டு அனுபவம் வந்ததனால் எல்லாவற்றையும் விட்டுவிட்டவர்கள்.

Koviloor Digital Library

பலாலமிவ தான்யார்த்தீ த்யஜேத் க்ரந்த்தானசேஷத: (17.)

(எவ்வாறு அரிசியை விரும்புபவன் உமியை அகற்றி விடுகிறானோ அதேபோல் ஒருவன் மீதமின்றிப் புத்தகங்களையும் விட்டுவிட வேண்டும்.)

என்று சொல்லப்பட்டுள்ளது போல் அவர்கள் புத்தகங்களையும் விட்டுவிட்டவர்கள். புத்தகத்தை மட்டுமே படித்துக் கொண்டிருந்தால் எங்குதான் அதற்கு முடிவு? முதலில் தர்க்கம் படிக்க வேண்டும். பிறகு வியாகரணம், மீமாம்ஸா, சாங்க்யம், வேதாந்தம் என்றெல்லாம் படித்துக் கொண்டே சென்றால் "சொல்" என்கின்ற வலையில் மாட்டிக் கொண்டது போல் ஆகும். ஆகையால்தான் ஓரிடத்தில்,

சப்தஜாலம் மஹாரண்யம் (18.)

(சொற்களின் விந்தை ஒரு பெரிய காட்டைப் போலுள்ளது.)

என்று கூறப்பட்டிருக்கிறது. சப்தத்தின் ஜாலமே ஒரு பெரிய காட்டைப் போல் இருக்கின்றது. அதிலேயே எப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் எவ்வாறு நன்மை கிடைக்கும்? மேற்கூறப்பட்ட மஹான்கள் அவ்வாறு இல்லை. பரம்பொருளை அறிந்த பிறகு புத்தகங்களையெல்லாம் விட்டு விட்டவர்கள். அவர்கள் எங்கு பக்தியைச் செலுத்துகின்றார்கள்? "உருக்ரமே" – பகவானிடத்தில்தான் பக்தியை செலுத்துகின்றார்கள். பகவான் திரிவிக்கிரம ரூபத்தை எடுத்துக்கொள்ளும்பொழுது பெரிய வடிவத்தைப் பெற்றுக் கொண்டான். (அத்தகைய சக்தி வாய்ந்தவன் அவன்.) மஹான்கள் எத்தகைய பக்தியை செலுத்துகின்றார்கள்?

குர்வந்த்யஹைதுகீம் பக்திம்

என்று சொல்லப்பட்டதால் மஹான்கள் காரணமில்லாமல் சுத்தமான பக்தியைச் செலுத்துகின்றார்கள். நாமும் பக்தியைச் செலுத்துகின்றோம். ஏன்? நமக்கு ஏதாவது தேவைப்படுகின்றது. ஆதலால்தான் பக்தி செலுத்துகின்றோம்.

ஒருவனுக்குப் புதல்வன் கிடையாது. நேராக ஆஞ்சநேயரின் ஆலயத்திற்குச் செல்கிறான். அங்கு, "ஆஞ்சநேயனே! எனக்குப்

Koviloor Digital Library

புதல்வனைக் கொடுங்கள், நீங்கள் எனக்குப் புதல்வனைக் கொடுத்தால் நான் உங்களுக்கு உத்தமமான சேவை செய்வேன்" என்றெல்லாம் பிரார்த்தனை செய்கின்றான். இத்தகைய பக்தி சாமான்யமான மனிதர்களுக்கு இருக்கும். ஆனால் 'ஆத்மாராமர்களாகியும்', 'நிர்க்ரந்தர்களாகியும்' இருப்பவர்கள் இம்மாதிரியான பக்தியைச் செலுத்துவார்களா? இல்லை. அவர்கள் ஒரு காரணமும் இல்லாமல் இயற்கையான பக்தியை பகவானிடத்தில் செலுத்துகிறார்கள். அவர்களை பொருத்தமட்டில் "பகவானுக்கு இரண்டு உருவங்கள் இருக்கின்றன. ஒன்று நிர்குணமான உருவம், மற்றொன்று ஸகுணமான உருவம். நிர்குணம் உண்மையாக இருந்தாலும் பகவான் ஸகுண உருவத்தைப் பெற்றுக் கொண்டான்" என்பதே உண்மை.

எதற்காக பகவான் ஸகுண உருவத்தைப் பெற்றுக் கொண்டான்? என்பதைப் பற்றி ஒரு கதை மூலமாகவும் சொல்வதுண்டு. பகவான் தராசின் ஒரு பக்கத்தில் மோக்ஷத்தை வைத்தான். மற்றொரு பக்கம் வேறு பொருட்களை வைத்துக் கொண்டே சென்றான். என்ன வைத்தாலும், மோக்ஷத்திற்கே எடை அதிகமாக இருந்தது. அப்பொழுது பகவான் மற்றொரு தட்டில் பரோபகாரத்தை (மற்றவர்களுக்கு உதவி செய்தல் என்பதை) இட்டான். பரோபகாரத்தைப் போட்டவுடன் மோக்ஷம் உள்ள தட்டு மேல் நோக்கிச் சென்றது. இதிலிருந்து பகவான் பரோபகாரத்திற்கு மிகுந்த விலை உண்டு என்று தெரிந்து கொண்டானாம். "உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் மனதைக் கவருவதற்கு ஏதாவது ஒரு வழி வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்றெல்லாம் கருதி,

பரோபக்ருதிகைவல்யே தோலயித்வா ஜனார்தன: |
குர்வீமுபக்ருதிம் மத்வா அவதாரான் தசாக்ரஹீத் || (19.)

(பிறருக்கு நன்மை செய்வதையும், மோக்ஷத்தையும் தராசில் வைத்து (பார்த்த இறைவன்), மற்றவர்களுக்குச் சேவை செய்வதே அதிக எடை உடையது என்று அறிந்து, பத்து அவதாரங்களையெடுத்தான்.)

Koviloor Digital Library

என்று சொல்லப்பட்டுள்ளது போல் அவன் மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹம் போன்ற பத்து அவதாரங்களைப் பெற்றுக் கொண்டான். ஆகையால், பகவான் ஒருவனாக இருந்தாலும்,

அஜாயமானோ பஹுதா விஜாயதே (20.)

(பிறப்பற்றவன் பலவிதமாகத் தோன்றுகிறான்.)

எனக் கூறப்பட்டது போல் பிறப்பில்லாதவனாக இருந்தாலும் அவன் பலவிதமாகக் காட்சி அளிக்கின்றான். இவ்வாறு அவன் "நரஸிம்மம்" போன்ற பல வடிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்; வெறும் நண்பனைப் போன்றும் காட்சி அளிக்கலாம். நண்பனைப் போல் காட்சி அளிப்பான் என்பதற்கு உதாரணம் அர்ஜுனனின் வாக்கியமே ஆகும். அவன் பகவானை நோக்கி,

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி | (21.)

(கவனக் குறைவினாலோ, அன்பினாலோ, நான் அவசரப்பட்டு உன்னை 'கிருஷ்ணா, யாதவனே, நண்பனே' என்று, நண்பனென நினைத்து எவற்றையெல்லாம் கூறினேனோ...)

என்று சொல்கிறான். "பகவானே ! உன்னைப் பார்த்தவுடன் நீ ஒரு நண்பன் என்றுதான் தோன்றியதே தவிர கடவுள் என்று தோன்றவில்லை" என்றான் அர்ஜுனன். பகவான் எப்பொழுது அவனுக்குத் தன் சக்தியை கொடுத்தானோ, அப்பொழுது அதே அர்ஜுனன்,

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய (22.)

(நீதான் இவ்வுலகத்திற்கும், அசைவன மற்றும் அசையாதிருப்பவைகளுக்கும் தந்தை.)

என்று சொல்கிறான். "நீ அனைத்து உலகத்திற்கும் தந்தையைப் போன்று இருந்துகொண்டு வருகிறாய் " என்றெல்லாம் அர்ஜுனன் பகவானைத் துதிக்கின்றான். பகவானே,

அஜோऽபி ஸன்னவ்யயாத்மா பூதானாமீச்வரோऽபி ஸன் | (2.9)

Koviloor Digital Library

(நான் பிறப்பற்றவன், அழிவற்றவன், உயிர்களுக்கெல்லாம் இறைவன் எனினும்...)

என்று சொல்கின்றான். "நான் பிறவி இல்லாதவனாக இருந்தாலும் பிறந்தவனைப்போல் காட்சி அளிக்கின்றேன்" என்றான். அவன் "நான் பிறவிகளை உடையவன்; ஆனால் பிறவிகள் இல்லாதவனைப் போல் காட்சி அளிக்கிறேன்" என்றெல்லாம் கூறவில்லை. இதிலிருந்து நிர்குணமான பரம்பொருளின் தத்துவம்தான் உண்மையானாலும் பகவான் ஸகுண உருவத்தையும் பெற்றுக்கொள்கிறான் என்று தெரிகின்றது.

ஆத்மாராமாச்ச முனயோ நிர்க்ரந்த்தா அபி

என்று சொல்லப்பட்டவர்கள்கூட பகவானின் ஸகுண உருவத்தில் ஒரு பற்றுதலை வைத்துக்கொண்டு ஒரு காரணமுமின்றி பக்தியைச் செலுத்துகின்றார்கள் என்பதே அந்த சுலோகத்தின் தாத்பர்யம். இங்கு ஒரு எதிர்ப்பு வரலாம். "பகவான் விஷயத்தில் இத்தகைய மஹான்கள் காரணமில்லாமல் பக்தி செலுத்துகின்றார்கள் என்று கூறினார்கள்.

ப்ரயோஜனமனுத்திச்ய ந மந்தோऽபி ப்ரவர்ததே (23.)

(ஆதாயமில்லாமல் முட்டாள்கூட ஒரு செயலில் இறங்க மாட்டான்.)

என்று கூறப்பட்டது போல் ஒரு முட்டாள் கூட பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் காரியத்தைச் செய்யமாட்டான் என்ற நியமம் உள்ளது. இவ்வாறிருக்கையில் மஹான்கள் எவ்வாறு காரணமில்லாமல் பகவான் விஷயத்தில் பக்தி செலுத்துவார்கள்?" என்ற எதிர்ப்பே அது.

எப்பொழுதும் பலனைக் கருதித்தான் செயலைச் செய்ய வேண்டும் என்கின்ற நியமம் கிடையாது. உதாரணத்திற்கு இது விஷயமாக பகவானே,

ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன |
நானவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி || (24.)

Koviloor Digital Library

(பார்த்தனே! மூவுலகிலும் எனக்குக் கடமையொன்றும் கிடையாது. அடையாத ஒன்றை இனி அடைந்தாக வேண்டும் என்பதும் இல்லவேயில்லை. ஆயினும் நான் கர்மம் செய்து கொண்டேயிருக்கிறேன்.)

என்றும்,

உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் | (25.)

(நான் கர்மம் செய்யாவிட்டால் இவ்வுலகம் அழிந்து போகும்.)

என்றும் சொல்கின்றான். மேலும் பகவானே,

ந புத்திபேதம் ஜனயேத் அக்ஞானாம் கர்மஸங்கினாம் |
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வான் யுக்த: ஸமாசரன் || (26.)

(ஞானியானவன் கர்மப்பற்றுள்ள அக்ஞானிகளிடத்தே மனக்கலக்கத்தை உண்டுபண்ணலாகாது. எல்லாக் கர்மங்களிலும் தானே ஈடுபட்டுக்கொண்டு மற்றவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.)

என்று சொல்கின்றான். பகவானும்தான் (அவதாரங்களின் போது) ஸந்த்யாவந்தனத்தைச் செய்து கொண்டிருந்தான். ஈச்வர பூஜை செய்து கொண்டிருந்தான். வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு சுகம் என்ன? துக்கம் என்ன? ஸந்த்யாவந்தனம் எல்லாம் எதற்காக? அவனுக்குத் தேவை இல்லாவிட்டாலும் மக்களுக்கு வழி காட்டுவதற்காக அவற்றை அனுஸரித்துக் கொண்டிருந்தான்.

ஒரு ஸ்வாமிகள் இருக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவர் சரியான சமயத்தில் ஸ்நானமும் செய்வதில்லை; அனுஷ்டானமும் செய்வதில்லை. அந்த ஸ்வாமிகள் உபந்யாஸம் செய்யும் பொழுது, "தர்மத்தை அனுஸரித்துக் கொண்டு வா" என்றெல்லாம் உபதேசம் செய்வார். ஆனால் என்னவெல்லாம் மக்கள் (தாங்கள் சாப்பிட) வைத்துக் கொண்டிருப்பார்களோ அதை அவரும் சாப்பிட்டுக் கொண்டிருப்பார் ! இவ்வாறு இருக்கும் ஸ்வாமிகளை மக்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?

Koviloor Digital Library

உபந்யாஸம் செய்யும் பொழுது, "ஆஹா! என்ன அழகாகச் சொல்கின்றார். இவர் பெரிய மஹான் தான் " என்று நினைத்துக் கொள்வார்கள். ஆனால் அந்த ஸ்வாமிகளுடன் (நெருங்கிய) தொடர்பு ஏற்பட்டால், "இவர் உண்மையில் இவ்வாறு உபதேசம் கொடுக்கும் வகையில் நடப்பதில்லை. உபதேசம் கொடுக்கும் சமயங்களில் மட்டும் அவ்வாறு அவர் தோற்றமளிக்கிறார். ஆனால் சொந்த வாழ்க்கையில் வேறு விதமாக நடந்து கொண்டிருக்கிறார் ! நாமும் அவ்வாறு இருக்கலாமே" என்று நினைத்துவிடுவார்கள் மக்கள்.

ஸத்யம் வத (2.11)

(உண்மை பேசு.)

என்று சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? உபந்யாஸம் செய்யும் காலங்களில் சத்தியம் சொல்வது, பிறகு பொய் பேசுவது என்று ஒருவர் வைத்துக் கொண்டால் அவ்வுபந்யாஸத்தை கேட்பவர்கள் மேலும் பத்து பொய்களைச் சொல்லுவார்கள். இதை மனதில் வைத்துக்கொண்டுதான் பகவான்,

யத்யதாசரதி ச்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜன: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததனுவர்ததே ॥ (27.)

(மேன்மை பொருந்தியவன் எதைச் செய்கின்றானோ அதையே மற்ற மனிதர்களும் பின்பற்றுகின்றனர். அவன் எதைப் ப்ரமாணம் என்று அமைக்கின்றானோ அதையே உலகம் பின்பற்றுகிறது.)

என்று கூறினார்.

மஹான் எந்த வழியைக் காட்டுகின்றாரோ அந்த வழியில்தான் மக்களும் செல்கின்றார்கள். உதாரணத்திற்கு இப்பொழுது பல மக்கள், "பாரதம் கெட்டுப் போய்க் கொண்டே இருக்கிறது. நாடு பாழாகிக் கொண்டே வருகின்றது. உங்களைப் போல் இருக்கும் ஸ்வாமிகள் ஒன்றும் செய்வதில்லையே" என்று கூறுகிறார்கள். நாங்கள் என்ன செய்வது? நாங்கள் மக்களுக்கு உபந்யாஸம் கொடுக்கும் காலத்தில் பெரியவர்களாக இருக்கலாம். ஆனால் இந்த நாட்டில் 'பதவி' யாருக்கு இருக்கின்றது? யாரால் செய்ய முடியும்? நாட்டில் யார் தலைவர்களாக

Koviloor Digital Library

இருக்கின்றார்களோ அவர்களால்தான் சீர்திருத்தங்களைச் செய்ய முடியும். ஆனால் நிலைமை எப்படி இருக்கின்றது?

அரசியல்வாதிகள், "நாங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லலாமே தவிர இன்றைய அரசியல் இருக்கும் சூழ்நிலையில் நாங்கள் கூறியபடியெல்லாம் நாங்கள் நடந்து கொள்வது சாத்தியமில்லை" என்று கூறுவார்கள். அவர்கள் வழி காட்டினால்தானே மக்களும் அதன்படி பின்பற்றுவார்கள்? "அரசியல்வாதிகள் எதற்காகப் பொய் சொன்னார்கள்?" என்றெல்லாம் மக்கள் பார்க்கின்றார்களா? (இல்லை) "அவர்கள் பொய் சொல்லிக் காரியத்தைச் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் ஏன் அவ்வாறு சாதித்துக் கொள்ளக் கூடாது?" என்றே மக்கள் நினைப்பார்கள்.

இன்னொரு கதையையும் நாம் பார்ப்போம். ஒரு பண்டிதர் கிரஹண ஸ்நானம் செய்வதற்காக சமுத்திரத்திற்குச் சென்றார். அவரிடம் தண்ணீர்ப் பாத்திரம் ஒன்று இருந்தது. "அந்தப் பாத்திரத்தை கரையில் வைத்துவிட்டுச் சென்றால் யாராவது அதை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அதை கடலினுள் எடுத்துச் சென்றால், அலைகள் அதைக் கையிலிருந்து அடித்துச் சென்று விடலாம். ஆகையால் என்ன செய்வது?" என்று யோசித்த பண்டிதர், குழி ஒன்றைத் தோண்டினார். அக்குழியில் பாத்திரத்தை வைத்து மூடிவிட்டு அதன் மேல் (திரும்பி வரும்போது அடையாளம் கண்டுபிடிப்பதற்காக) மணலால் ஒரு லிங்கத்தைப் பிடித்து வைத்தார். அங்கு வந்த மக்கள் இவர் பாத்திரத்தைக் குழிக்கு உள்ளே வைத்ததைப் பார்க்கவில்லை. இவர் பெரிய பண்டிதராயிற்றே! இவர் ஒரு லிங்கம் செய்துவிட்டு ஸ்நானத்திற்குச் சென்றார். ஆதலால் அனைவரும் லிங்கம் செய்து விட்டுத்தான் ஸ்நானத்திற்குச் செல்ல வேண்டும் போல் இருக்கின்றது என நினைத்து அவர்களும் லிங்கத்தைச் செய்து விட்டு ஸ்நானத்திற்குச் சென்றார்கள். பண்டிதர் ஸ்நானம் முடித்து விட்டு வந்து பார்க்கின்றார், ஒரே ஆச்சரியம்! பத்து இல்லை, நூறு இல்லை, ஆயிரம் இல்லை, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட லிங்கங்கள் அங்கு இருந்தன. என்ன செய்வது? என்று யோசித்தார். ஒவ்வொரு லிங்கத்தையும் உடைத்தா பாத்திரத்தைத் தேட முடியும்? அவ்வாறு அவர் உடைத்திருந்தால் கஜினி முகமது உடைத்த லிங்கங்களைக் காட்டிலும் ஒரு வேளை

Koviloor Digital Library

அவரே அதிகமாக உடைத்திருப்பார்! அப்பண்டிதர் திரும்பி வந்த பிறகு மிகுந்த பச்சாதாபத்தோடு (மனவருத்தத்தோடு)

ஸேதௌ ஸைகதலிங்கேன நஷ்டம் மே தாம்ரபாஜனம் (28.)

(சேதுவில் (சமுத்திரம்) மணலினால் செய்யப்பட்ட லிங்கத்தினால் எனது செம்புப் பாத்திரம் தொலைந்து போய் விட்டது.)

என்று கூறினார். இதற்குக் காரணம் என்ன?

கதானுகதிகோ லோகோ ந லோக: பாரமார்த்திக: (29.)

(மக்கள் மற்றவர்களைப் பின்பற்றித்தான் செல்கிறார்களே தவிர யாரும் உயர்ந்த இலட்சியங்களுக்காகக் கவலைப் படுவதேயில்லை.)

ஒருவர் செய்வதைப் பார்த்துத்தான் மற்றவர் செய்கின்றனரேயொழியத் தாமாக ஒன்றும் செய்வதில்லை. ஆகையால்தான், "(நாட்டின்) தலைவர்களாக யார் இருக்கின்றார்களோ அவர்கள் நன்கு வழிகாட்ட வேண்டும்" என்று கூறுகின்றேன்.

உலகத்தின் நன்மைக்காக இறைவன் உருவத்தையும் பெற்றுக் கொண்டான் என்று பார்த்தோம். இத்தகைய கருணை பொருந்திய இறைவன் விஷயத்தில் யாருக்குத்தான் பக்தி வராமல் இருக்கும் ! பகவான் விஷயத்தில் நாம் பக்தி செலுத்திக்கொண்டு சென்றால் கடைசியில் பகவானின் ஸாக்ஷாத்காரம் நமக்குக் கிடைக்கும். நாம் எல்லோரும் நிலையான இன்பத்தைப் பெறுவதற்குப் பரம்பொருளைப் பற்றிய அறிவுதான் காரணமாகும். சாஸ்திரத்தில்,

ஞானாதேவ து கைவல்யம் (30.)

(மோக்ஷமானது ஞானத்திலிருந்துதான் பெறப்படுகிறது.)

என்று சொல்லப்பட்டுள்ளது. ஒருவன் ப்ரஹ்ம ஞானத்தைப் பெற்றால்தான் அவன் மோக்ஷத்தை அடைய முடியும். அந்த ப்ரஹ்மஞானம் பெற வேண்டுமென்றால் சிரவணம், மனனம், நிதித்யாஸனம் போன்றவை தேவை.

Koviloor Digital Library

நாம் எல்லோரும் சாஸ்திரங்களைப் படித்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவோ பண்டிதர்கள் சாஸ்திரங்களை வியாக்யானம் (விளக்கம்) செய்கின்றார்கள். ஆனால் அவர்களில் பலருக்கும் இதுவரை 'ஞானம்' வரவில்லை. இதற்குக் காரணம் என்ன? அவர்களுக்குத் தகுந்த ஸம்ஸ்காரமும், அதிகாரமும் (தகுதியும்) இல்லை. அவர்கள் உபந்யாஸம் செய்யும் காலங்களில் வேதாந்தத்தை நன்கு உபதேசம் செய்கின்றார்கள். ஆனால் அவர்கள் தம் வாழ்க்கையில் அதன்படி நடந்து கொள்வதில்லை. வேதாந்த விஷயங்களைச் சரியாக மனனம் செய்வதில்லை. பகவத்பாதாள் ஞானம் பெறுவது பற்றி,

ஸ்வஸ்யாவித்யாபந்தஸம்பந்தமோக்ஷாத்
ஸத்யக்ஞானானந்தரூபாத்மலப்தௌ।
சாஸ்த்ரம் யுக்திர்தேசிகோக்தி: ப்ரமாணம்
சாந்த: ஸித்தா ஸ்வானுபூதி: ப்ரமாணம் ॥ (1.26)

(தனக்கு, அறியாமையின் பிடியிலிருந்து விடுபடுவதன் மூலம், எப்பொழுதும் இருப்பதும், அறிவு வடிவானதுமான ஆத்மாவை அடையும் விஷயத்தில் ப்ரமாணங்களாக இருப்பவை– வேத வாக்கியம், யுக்தி, குருநாதருடைய அறிவுரை ஆகியவையாகும். அவைகளுடன் தனக்குள்ளேயே உறுதியாக ஏற்பட்டிருக்கும் தன் அனுபவமும் ப்ரமாணம் ஆகும்.)

என்ற சுலோகத்தைக் கூறியுள்ளார். நமக்கு அனுபவமும் ப்ரமாணம். ஆனால் ஒருவனது அனுபவம் மற்றொருவனது அனுபவத்தைப் போல் இருப்பதில்லை. நாம் சூரியனைப் பார்க்கின்றோம். நம் பார்வையின்படி சூரியன் ஒரு சிறிய உருண்டையைப் போல் இருக்கின்றான். ஆனால் உண்மையில் சூரியன் ஒரு சிறிய உருண்டையாகவா இருக்கின்றான்? இல்லை. அதைத் தெரிந்து கொள்வதற்கு சாஸ்திரங்களின் உதவியும் தேவை; சூரியன் விஷயத்தில் அறிவு உள்ளவர்களின் பேச்சை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். அதேபோல் பரம்பொருளைப் பற்றிய விஷயத்தில் நமக்கு யுக்தியும் தேவை; சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களும் தேவை; நம் குருநாதர் நமக்குக் கொடுக்கும் அறிவுரைகளும் தேவை. இவையெல்லாம் சேர்ந்து வந்தால்தான் நமக்குப் பிரயோஜனமுண்டு. வெறும் அனுபவம் மட்டும் இருந்து,

Koviloor Digital Library

யுக்தி மற்றும் குருவின் அறிவுரை இவையெல்லாம் இல்லாவிட்டால் அந்த அனுபவத்திற்கு விலையே இல்லை. அந்த அனுபவம் எந்த விதமாகவும் போய்விடலாம்.

பரம்பொருளைப் பற்றி சிரவணம் (கேட்டல்) செய்வது முதல்படியாகும். சிரவணம் செய்யும் பொழுது நாம் சிரத்தையோடு செய்ய வேண்டும். பல மக்கள் "நாம் பகவானிடத்தில் மனதை நிற்க வைக்க வேண்டுமென்று முயன்றாலும் மனது நிற்பதேயில்லை; அது ஓடிக்கொண்டே இருக்கின்றது" என்றெல்லாம் கூறுவார்கள். அது உண்மைதான்; மனம் ஓடுவதுண்டு. ஆனால் நூறு ரூபாய் நோட்டுக்களை எண்ணி யாருக்காவது கொடுக்க வேண்டியிருந்தால் ஒருவனது மனம் ஓடுகின்றதா? ஒரு ரூபாய் நோட்டுக்களை எண்ணிக் கொடுக்க வேண்டியிருந்தால் ஒருவனது மனம் ஓடலாம். ஏனென்றால் ஒரு ரூபாய் நோட்டு ஒன்று எண்ணிக்கையில் தவறிவிட்டாலும் அவ்வளவு நஷ்டம் இல்லை. ஆனால் நூறு ரூபாய் நோட்டுக்களின் எண்ணிக்கையில் ஒரு நோட்டு தவறிவிட்டாலும் பெரிய நஷ்டம் ஏற்படும் என்றெல்லாம் மனிதர்கள் கவலைப்படுகின்றார்கள் அல்லவா? ஆகவே (100 ரூபாய் தாள்களை எண்ணுகையில்) மனம் ஓடுகின்றதா? இல்லை ! அதேபோல் பகவான் விஷயத்தில் மிகுந்த கவனத்தைச் செலுத்தி மனதை வைத்தீர்களானால் மனது ஓடாமல் இருக்கும்.

"கேட்கின்ற இந்த உபந்யாஸத்தில் மனம் ஒன்றிவிட்டால் மிகுந்த நன்மை பயக்கும். மனம் ஓடிக்கொண்டிருந்தால் மிகுந்த கஷ்டம் வரும்" என்றெல்லாம் நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். பூஜையைப் பார்த்துக் கொண்டிருப்போம்; ஏன்! பூஜையைச் செய்து கொண்டிருப்போம். ஏதோ ஒரு திரைப்படம் (புதிதாக ஊருக்கு) வந்திருக்கின்றது என்ற எண்ணம் நம் மனதில் ஏற்பட்டால், மனம் அதன் பக்கம் சென்று விடும். நாமும் எழுந்து சென்று விடுவோம். அதற்குக் காரணம் என்ன? நாம் பூஜையில் அவ்வளவு முக்கியத்துவத்தைச் செலுத்துவதில்லை. தேவையான அளவு முக்கியத்துவத்தைச் செலுத்திக் காரியங்களைச் செய்தால் நமது மனம் ஒரு நிலை அடையும். மனம் ஓடிக்கொண்டு இருக்காது.

"ஸம்ஸாரம் என்பதில் எந்த விதமான சுவையுமில்லை; இதிலிருந்து நீண்ட சுகம் நமக்குக் கிடைக்காது. பரம்பொருளினால்

Koviloor Digital Library

தான் நிலையான சுகம் நமக்குக் கிடைக்கும்” என்றெல்லாம் சிந்தித்து, பரம்பொருளின் விஷயத்தில் மனதைச் செலுத்தி, பரம்பொருளை அறிந்தால் நாம் அளவில்லாத இன்பத்தைப் பெறலாம்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

10. ஆன்மீக சாதகனின் எதிரிகள்

விசுத்தஞானதேஹாய த்ரிவேதீதிவ்யசக்ஷுஷே
ச்ரேய: ப்ராப்திநிமித்தாய நம: ஸோமார்ததாரிணே।
நமாமி யாமினீநாதலேகாலங்க்ருதகுந்தலாம்
பவானீம் பவஸந்தாபநிர்வாபணஸுதாநதீம் ॥ (2.1)

உலகத்தில் மனிதனுக்கு மட்டும் ஏன் தனிச் சிறப்பு கொடுக்கப்படுகிறது? அவனுக்கும் ஒரு மிருகத்திற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? மனிதர்களும் மிருகங்களைப் போலவே சாப்பிடுதல், தூங்குதல், குடித்தல் – இவை போன்ற வேலைகளையே செய்துகொண்டு வந்திருக்கின்றனர். ஒரு தேனீயானது தனது கூட்டைக் கட்டும்பொழுது மிகவும் உறுதியாகவும், அழகாகவும் அதை அமைக்கிறது. அதனுடைய கூடு பொறியியல் வல்லுநர்களுக்கே வியப்பைத் தருவதாக உள்ளது. தேனீயின் கூட்டைப்போல் நாமும் ஒரு கட்டிடத்தைக் கட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று பொறியியல் வல்லுநர்களே வியக்கும் அளவிற்கு அந்தக் கூடு அமைந்துள்ளது. இப்படியிருக்கையிலும் மனிதனை மட்டும் ஏன் உயர்ந்தவன் என்று கூறுகிறோம் ? இதற்குக் காரணம் என்னவென்றால் மனிதன் ஆழ்ந்து பார்த்து சிந்தனை செய்து ஒரு செயலை (நல்லது, கெட்டது என்று அறிந்து) செய்ய முடிவதால் அவன் மற்ற பிராணிகளைவிட உயர்ந்தவன் என்று கருதப்படுகிறான்.

யதா தண்டோத்யதக்ரம் புருஷம் அபிமுகம் உபலப்ய மாம்
ஹந்தும் அயம் இச்சதீதி பலாயிதும் ஆரபந்தே,
ஹரிதத்ருண பூர்ணபாணிமுபலப்ய தம்
ப்ரத்யபிமுகீபவந்தி... (1.)

(எவ்வாறு பசுக்கள் முதலியவை உயரத் தூக்கிய கம்புடனிருக்கும் மனிதனிடமிருந்து, "இவன் என்னை அடிக்க நினைக்கிறான்" என்றெண்ணி விலகி ஓடுகின்றனவோ (அதேபோல்) எவ்வாறு அவை, கையில் புல்லோடு இருக்கும் மனிதனை நோக்கி ஓடி வருகின்றனவோ ...)

என்று மேற்கோள் ஒன்று வருகிறது. பிராணிகள் எந்த மனிதனின் கையிலாவது ஒரு தடி இருந்தால் அதைப் பார்த்து பயந்து ஓடிப்

Koviloor Digital Library

போய்விடுகின்றன. அதே சமயத்தில் ஒரு மனிதனிடம் ஏதாவது புல்கட்டு இருந்தால் அதைத் தின்பதற்காக அந்த மனிதனை நோக்கி அவை ஓடி வருகின்றன. நாமும் இதைப் போலவேதான் வாழ்ந்து வருகிறோம். யாராவது ஒரு மனிதன் மிகுந்த பலம் வாய்ந்தவனாக உரக்கப் பேசிக் கொண்டிருந்தால் அவனுடைய அருகிலேயே நாம் போக மாட்டோம். எங்காவது ஓடிச் சென்று விடுவோம். அதே சமயம் ஒரு மனிதன் மிகுந்த கெட்டிக்காரனாகவும், நல்லவனாகவும் இருந்தால் எல்லோரும் அவனிடம் நட்பு கொள்ள விரும்புவார்கள். ஆனால் சற்றே மூளையுள்ள மனிதன் யாராவது சப்தம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தால், "இதோ இந்த மனிதன் சப்தம் செய்து கொண்டிருக்கிறானே, அவன் யாரைத் திட்டுகிறான்? நம்மைத்தான் உண்மையில் திட்டுகிறான்" என்றெல்லாம் யோசித்துப் பார்ப்பான்.

அத: ஸமான: பச்வாதிபி: புருஷாணாம்
ப்ரமாணப்ரமேயவ்யவஹார: | (2.)

(ஆகையால் அறிவின் ஸாதனங்களையும், பொருட்களையும் பொருத்த வரையில் மனிதனுடைய நடத்தை மிருகங்களின் நடத்தையைப் போல் தானுள்ளது.)

நாம் நம்முடைய அறிவை வைத்து எந்த ஒரு முடிவை எடுக்கிறோமோ அப்பொழுதுதான் கடவுள் நமக்குக் கொடுத்த அறிவை நாம் உபயோகப்படுத்தி விட்டோம் என்ற திருப்தியே நமக்கு ஏற்படும். நாம் அறிவையே உபயோகம் செய்யாமல் இருந்தோமேயானால் கடவுள் நமக்குக் கொடுத்த அறிவு ஒரு விதத்தில் வீண் என்றே சொல்ல வேண்டும்.

நன்றாகப் படித்தால் பெரிய பண்டிதனாகலாம் என்று நம் எல்லோருக்குமே தெரியும். (ஆனால் யாருமே அவ்வாறு செய்வதில்லை.) ஒரு குழந்தையை கட்டாயப்படுத்தினால்தான் அது படிப்பில் நாட்டம் செலுத்துகிறது. அது தானாகவே படிக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அதேபோல பொய் சொல்வது தவறு என்று அனைவருக்கும் தெரியும். ஆனாலும் சிலர் எப்பொழுதும் பொய் சொல்வதையே பழக்கமாக வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

Koviloor Digital Library

ஜானாமிதர்மம் ந ச மே ப்ரவ்ருத்தி:
ஜானாம்யதர்மம் ந ச மே நிவ்ருத்தி: । (3.)

(தர்மம் எது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை நான் கடைப்பிடிப்பதில்லை. எனக்கு அதர்மம் எது என்பது தெரியும். ஆனால் அதைச் செய்வதிலிருந்து நான் விலகுவதில்லை.)

என்று மேற்கோள் ஒன்று வருகிறது. எது தர்மம், எது அதர்மம் என்ற விஷயம் நன்கு தெரிந்தாலும் பலர் தவறான பாதையிலேயே சென்று கொண்டிருக்கின்றனர். இவையெல்லாம் எதனால் ஏற்படுகின்றன ? நாம் சற்றே யோசிக்க வேண்டும். பகவான் இது குறித்துக் கீதையில்,

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன: ।
காம: க்ரோதஸ்ததா லோப: தஸ்மாதேதத்த்ரயம் த்யஜேத் ॥ (4.)

(காமம், குரோதம், லோபம் ஆகிய மூவித வாயிலையுடையது நரகம். இவை ஜீவனைக் கெடுக்கும் தன்மையன. ஆகையால் இம்மூன்றையும் துறத்தல் வேண்டும்.)

என்று கூறுகிறார். காமம்(ஆசை), குரோதம்(கோபம்), லோபம்(பேராசை) இவை மூன்றும் எதிரிகள் என்று பகவான் கூறியுள்ளார்.

அக்ஞானேனாவ்ருதம் ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ: ॥ (5.)

(ஞானம் அக்ஞானத்தால் மூடப்பட்டிருக்கிறது. ஆதலால் உயிர்கள் மயக்கமடைகின்றன.)

நம்முடைய ஞானமானது அக்ஞானத்தால் (அறியாமை) மூடப்பட்டிருக்கின்றது. அக்ஞானத்தினுடைய செயல்தான் நமக்கு நன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: । (6.)

(ரஜோ குணத்திலிருந்து தோன்றிய இக்காமம்தான், இக்குரோதம்தான், எதையும் உண்ணவல்லது...)

சங்கரர் சதச்லோகீயில் ஓரிடத்தில்,

Koviloor Digital Library

காமோ புத்தாவுதேதி ப்ரதமமிஹ மனஸ்யுத்திசத்யர்த்த ஜாதம்
தத் க்ருஹ்ணாதீந்த்ரியாஸ்யை: ததனதிகமத: க்ரோத ஆவிர்பவேச்ச |
ப்ராப்தாவர்த்தஸ்ய ஸம்ரக்ஷணமதிருதிதோ லோப ஏதத் த்ரயம் ஸ்யாத்
ஸர்வேஷாம் பாதஹேது: ததிஹ மதிமதா த்யாஜ்ய மத்யாத்மயோகாத் || (7.)

(இங்கே (சப்தம் முதலிய) விஷயக் கூட்டங்களை மனம் குறி வைத்ததேயானால் முதலில் புத்தியில் ஆசை உண்டாகிறது. அதைப் புலன்கள் மூலமாகக் கிரஹித்துக் கொள்கிறான். அது கிடைக்காமலிருந்தால் கோபமும் வெளிக் கிளம்பும். பொருள் கிடைத்து விட்டதேயானால் அதை நன்கு பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் லோபம் என்று சொல்லப்படுகிறது. இந்த மூன்றும் எல்லோருக்குமே வீழ்ச்சிக்குக் காரணம். ஆகையால் இவை இங்கே புத்தியுள்ளவனால், ஆத்ம ஸ்வரூபத்தை அனுஸந்தானம் செய்வதால், விலக்கத் தகுந்தது.)

என்று சங்கரர் கூறியுள்ளார் .

மருத்துவர், "உனக்குச் சர்க்கரை வியாதி இருக்கிறது. அதனால் நீ இனிப்பே சாப்பிடக் கூடாது" என்று ஒரு நோயாளியிடம் கூறினாலும் அந்த மனிதன் சர்க்கரையில் விருப்பம் அதிகம் வைத்திருந்தானாம். (அவன் இனிப்பையே அதிகம் உண்டு கொண்டிருந்தான்.) இது எதனாலென்றால் நம்முடைய இந்திரியங்கள் (புலன்கள்) எங்கு நம்மை இழுக்கின்றனவோ அங்குதான் நாம் சென்று கொண்டிருக்கின்றோம். இதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால் குதிரையில் சவாரி செய்யும் ஒரு மனிதனுக்கு கடிவாளம் அவன் கையில் இருந்தாலும், அதை அடக்குவதற்கு அவனிடம் சக்தி இல்லாதது போல் ஆகும். குதிரை எங்கு போகின்றதோ, அங்குதான் அவனும் சென்று கொண்டிருக்க வேண்டும். மனிதர்களும் அதே போல புலன்களின் வசப்பட்டு வாழ்வதால் ச்ரேயஸ்ஸை அடையும் வழியில் செல்ல முடிவதில்லை. எது காமம், எது குரோதம், எது லோபம் என்று அனைவருக்கும் தெரியும். கறுப்புப் பணம் சம்பாதிப்பது எல்லோருக்கும் தவறு என்று தெரியும். கறுப்புப் பணம்

Koviloor Digital Library

சேர்ப்பதால் தமது நல்ல பெயர் கெட்டுப் போகும் என்றும் தெரியும். ஆனாலும் பலரும் அதில்தான் இறங்குகின்றனர். இதற்கெல்லாம் காரணமென்ன?

காமோ புத்தாவுதேதி ப்ரதமமிஹ மனஸ்யுத்திசத்யர்த்தஜாதம்

ஒரு விஷயத்தைப் பற்றி ஸங்கல்பம் மனதில் ஏற்பட்ட உடனேயே மனம் அதனைப் பற்றி நினைக்கின்றது.

காம ஜானாமி தே மூலம் ஸங்கல்பாத்த்வம் ஹி ஜாயஸே |
ந த்வாம் ஸங்கல்பயிஷ்யாமி தேன மே ந பவிஷ்யஸி || (8.)

(ஆசையே ! உனது வேரை யானறிவேன். நீ ஸங்கல்பத்தினால் (உறுதியான கற்பனை மற்றும் முடிவால்) பிறக்கிறாய். நான் உன்னைக் குறித்து ஸங்கல்பம் செய்ய மாட்டேன். ஆகவே நீ எனக்குச் சேர மாட்டாய்.)

எவ்வாறு ஸங்கல்பம் ஏற்படுகின்றது? எந்தப் பொருளைப் பற்றியாவது ஆசை ஏற்பட்டவுடன் மனதில் ஸங்கல்பம் ஏற்படுகின்றது. ஸங்கல்பம் ஏற்பட்டவுடனேயே, தான் ஆசைப்பட்டது போலவே நடக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மனதைத் திருப்தி செய்வதற்காக மனிதர்கள் முயற்சி செய்து செய்து தாங்களே களைப்புற்று விடுகின்றனர். மனிதனுடைய இயற்கை என்ன தெரியுமோ ?

ஒருவனுக்கு மிகுந்த தாகம் எடுத்துள்ளது. அவன் கடற்கரையில் இருந்தால் கடல் நீரை எடுத்துச் சிறிதளவு குடிக்கிறான். ஆனாலும் அதன் மூலம் அவனுடைய தாகம் தணிவதில்லை. மேன்மேலும் அதிகரிக்கின்றது. அவன் இன்னும் சிறிதளவு கடல் நீரை எடுத்து அருந்துகிறான். ஆனால் கடல் நீரினால் தாகம் அதிகரிக்கின்றதே தவிர குறைவதேயில்லை. இது எதனால்? நல்ல தண்ணீர் அருந்தப்படாததினால்தான் தாகம் தணிவதில்லை. இதேபோல நாமும் மனதைத் திருப்தி செய்வதற்காக வெளிப் பொருட்களின் விஷயங்களை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம். மனதும் திருப்தியாவதில்லை. அதே சமயம் ஆசைகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. ஒன்று, இரண்டு, மூன்று என்று அவை வளர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. என்னுடைய குரு இதை விளக்க ஒரு கதை சொல்வார்.

Koviloor Digital Library

ஓர் ஊரில் பிச்சைக்காரன் ஒருவன் வசித்து வந்தான். தினமும் ஒரு செல்வந்தர் வீட்டில் பிச்சை எடுப்பது அவனுடைய வழக்கமாக இருந்தது. அந்தப் பிச்சைக்காரன் தான் எடுத்து வந்த பிச்சையின் மூலமாகக் கிடைக்கும் உணவைத் தன்னுடைய வீட்டிற்கும் கொடுத்து மிகவும் சந்தோஷமாக உண்டு உறங்கி வாழ்ந்து வந்தான். அந்தச் செல்வந்தரது வீட்டிலிருப்பவர்கள் அவரை நோக்கி, "நீங்கள் தினமும் சரியாக தூங்குவதேயில்லை. ஆனால் அந்தப் பிச்சைக்காரனோ தினமும் மிகவும் நன்றாகத் தூங்குகிறான்" என்று கூறினார்கள். அதற்கு அச்செல்வந்தர் அவர்களை நோக்கி, "இதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும். அது என்னவென்று நான் விசாரிக்கிறேன்" என்று கூறினான். மறுநாளும் வழக்கம் போல பிச்சைக்காரன் அவர்களது வீட்டிற்கு பிச்சையெடுப்பதற்காக வந்தான். தினமும் அரிசியையும், கோதுமையையும், கொடுத்து வந்த செல்வந்தர் அன்று அவைகளுக்குப் பதிலாக பணத்தைக் கொடுத்தார். பிச்சைக்காரன் (தினமும்) தானியங்களைப் பெற்றாலும் மிகுந்த சந்தோஷத்தோடுதான் வாங்கிக் கொண்டு செல்வான். இன்று பணத்தைப் பெற்றுக் கொண்டதும், "நூறு ரூபாயாகத் தனக்குக் கிடைத்திருக்கக் கூடாதா" என்று நினைத்துக் கொண்டான். மற்ற இடங்களில் வழக்கம் போல் பிச்சை வாங்கிய அரிசியும் கோதுமையும் தேவைக்கு அதிகமாகவே சேர்ந்தது. தினமும் அந்த அதிக தானியங்களை அவன் வீட்டில்தான் கொண்டு வந்து கொடுப்பான். ஆனால் இன்று அவனுக்கு அந்த எண்ணம் தோன்றவில்லை. தேவைக்கு அதிகமாயுள்ள தானியங்களைக் கடையில் கொடுத்து ரூபாயாக மாற்றிவிடலாம் என்று நினைத்து அவ்வாறே செய்துவிட்டான். தன்னுடைய வீட்டிற்கு அரைக்கிலோ அரிசியை மாத்திரம் கொண்டு போனான். உடனே அவனுடைய வீட்டிலுள்ளவர்கள், "தினமும் இரண்டு அல்லது மூன்று கிலோ அரிசியும், கோதுமையும் கிடைக்குமே, இன்று என்ன ஆகிவிட்டது? அரைக்கிலோ அரிசி யாருக்குப் போதும்? நம் வீட்டில் மீதமுள்ள உணவை வைத்துக் கொண்டு விருந்தினர்களையெல்லாம் நாம் உபசரிப்போமே ! அதனால் புண்ணியமும் கிடைக்குமே ! இன்று அதெல்லாம் செய்ய முடியாத நிலையில் தானியங்கள் மிகக் குறைவாக

Koviloor Digital Library

இருக்கின்றனவே" என்று கூறினர். அதற்குப் பிச்சைக்காரன், "இன்று யாராவது வந்தால் அவர்களுக்குச் சாப்பாடு இல்லை என்று கூறி விடுங்கள். ஒருவருக்கும் ஒன்றும் கொடுக்க வேண்டாம். இருப்பதைச் சமையுங்கள். இருக்கும் அளவிற்கு நாம் சாப்பிடுவோம். நாம் பணக்காரர்களாக ஆகிவிட்டோம். சிறிதளவு சொத்து நமக்கும் இருக்கின்றது" என்றான். அவனுடைய சாப்பாட்டை முடித்துக் கொண்ட பிறகு வீட்டில் ஒரு பள்ளத்தைத் தோண்டி அந்தப் பள்ளத்தில் பணத்தைப் புதைத்துவிட்டு அதன் மீது படுக்கையை விரித்து படுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தான். ஆனால் அவனுக்கு ஒரு புதுக் கவலை ஏற்பட்டது. பணத்தைப் பள்ளத்திலிருந்து எடுப்பதையோ, வைப்பதையோ யாராவது பார்த்தால் என்ன செய்வது என்பதுதான் அவனுடைய கவலை. ஆனாலும் தீர்மானம் செய்தபடியே பணத்தைப் பள்ளத்தில் புதைத்தான். இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. எவ்வாறு பணத்தைப் பாதுகாப்பது ? என்றே கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். மறுநாளும் வந்தது. பிச்சைக்காக அந்த செல்வந்தரின் வீட்டிற்குச் சென்றான் அவன். இரவு முழுவதும் கண் விழித்ததினால் கண்கள் சிவந்திருந்ததைப் பார்த்த செல்வந்தர், "நீ நேற்றிரவு சரியாகத் தூங்கவில்லையா ? கண் சிவந்திருக்கிறதே" என்றார். பிச்சைக்காரனுக்குக் காரணம் தெரியவில்லை.

ஆனால், "இரவெல்லாம் பணத்தைப் பாதுகாப்பதிலேயே கவனமாக இருந்தேன்.. என்னால் தூங்கவே முடியவில்லை. உங்கள் வீட்டில் செல்வத்தைப் பாதுகாக்க பெரிய பெரிய துப்பாக்கிகளெல்லாம் இருக்கும். ஆனால் எனக்குப் பணத்தை யாராவது கொடுத்துவிட்டால் அதை நான் எவ்வாறு காப்பாற்றுவது?" என்று பதிலளித்தான், அந்தப் பிச்சைக்காரன். செல்வந்தர் பிச்சைக்காரனின் தூக்கமின்மைக்கான காரணத்தைக் கண்டுபிடித்து விட்டார். பணத்தைப் பற்றிய கவலையானது இரண்டு பேருடைய தூக்கத்தையும் விரட்டிவிட்டிருக்கிறது. ஆகவே மனதிலுள்ள கவலைகள்தான் தூக்கம் வராததற்கான காரணமேயாகும் .

யத்ப்ருதிவ்யாம் வ்ரீஹியவம் ஹிரண்யம் பசவ: ஸ்த்ரிய: |
ஏகஸ்யாபி ந பர்யாப்தம் ததித்யதித்ருஷம் த்யஜேத் || (3.3)

Koviloor Digital Library

(பூமி, நெல், தங்கம், பசுக்கள், பெண்கள் – இவைகளில் எதனாலும் முழுமையான திருப்தியுண்டாவதில்லை. ஆதலால் அதிகமான ஆசையை விட்டுவிட வேண்டும்.)

என்று (விஷ்ணு புராணத்தில்) கூறப்பட்டுள்ளது. காமம் மனிதனுடைய பெரிய எதிரியாகும்.

த்யாயதோ விஷயான் பும்ஸ: ஸங்கஸ்தேஷூபஜாயதே |
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத்
க்ரோதோऽபிஜாயதே || (9.)

என்று கீதையில் வருகிறது. அக்னியில் (நெருப்பில்) நெய்யை விட்டால் எவ்வாறு அந்த நெருப்பு வளருமோ அதேபோல ஆசையானது திருப்திப்படுத்த திருப்திப்படுத்த மேன்மேலும் வளருமேயன்றி குறைவதேயில்லை.

த்ருஷ்ணாகநிரகாதேயம் துஷ்பூரா கேன பூர்யதே |
யா மஹத்பிரபி க்ஷிப்தை: பூரணைரேவ கன்யதே || (10.)

(ஆழங்காண முடியாததும், நிரப்பக் கடினமானதும், நிரப்புவதற்குண்டான பொருட்களைப் போட்டால் அவற்றினால் மேலும் பள்ளமாக ஆகக் கூடியதுமான ஆசை என்னும் கிணற்றை யார்தான் நிரப்ப முடியும்?)

என்று மேற்கோள் ஒன்று வருகிறது. ஏதோ ஒரு கிணற்றை நாம் பார்த்தால் அந்த கிணற்றுக்குள் நிறையக் கற்களைப் போட்டால் தண்ணீரானது மேலே வந்துவிடும் என்று எண்ணுவோம். ஆனால் ஆசை என்கின்ற கிணற்றை "அதைத் திருப்திப்படுத்துதல்" என்ற கற்களினால் மேலும் மேலும் நிரப்பினால் (கவலை என்ற) பள்ளம் அதிகமாகுமேயொழிய திருப்தி என்ற தண்ணீர் என்றுமே நிரம்புவதில்லை. உபேக்ஷை (கண்டு கொள்ளாமலிருத்தல்) என்பதினால்தான் ஆசை என்னும் கிணற்றை நிரப்ப முடியும். ஆசையை வளர்க்காமல், ஒரு பொருள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் அதனை லட்சியமே செய்யாதிருந்தால்தான் ஒருவனுக்குத் திருப்தி ஏற்படும். ஆனால் மனிதர்கள் அவ்வாறெல்லாம் இருப்பதில்லை. இன்று பத்து ரூபாய் கிடைத்தால் நாளை நூறு ரூபாய் கிடைக்காதா என்றுதான் அனைவரும்

Koviloor Digital Library

பார்க்கின்றனர். நூறு ரூபாய் கிடைத்தவுடன் ஆயிரம் ரூபாய் கிடைக்காதா என்றே எதிர்பார்க்கின்றனர்.

யத்ப்ருதிவ்யாம் வ்ரீஹியவம் ஹிரண்யம் பசவ: ஸ்த்ரிய: I

என்று கூறப்பட்டதுபோல் இந்த உலகத்திலுள்ள அனைத்துப் பொருட்களும் கிடைத்தாலும் யாருக்கும் திருப்தி ஏற்படுவதில்லை. இப்பூவுலகம் போதாதென்று ஒருவனுக்குச் சந்திரமண்டலத்திற்கே போக வேண்டும் என்று கூட ஆசை எழும்.

இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும், இவரைத் திருப்திப்படுத்த வேண்டும், அவரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்றெல்லாம் ஒருவன் முயற்சி செய்யும்பொழுது மனதிற்கு கவலையும், வருத்தமும்தான் ஏற்படுகிறது. எவ்வளவு தங்கமும், பணமும் கிடைத்தாலும் கூட ஆசையுள்ளவன் ஒருபோதும் திருப்தி அடைவதில்லை. (எனவேதான் பற்றில்லாமல் செயல்களைச் செய்ய வேண்டுமென்று கீதையில் இறைவன் கூறியுள்ளார்.)

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுன I
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக:
ஸாத்த்விகோ மத: II (5.10)

(அர்ஜுனனே! பற்றுதலையும் பயனையும் விட்டுவிட்டு, செய்தற்குரியதென்றே எந்த நித்யகர்மம் மேற்கொள்ளப்படுகிறதோ, அந்தத் தியாகம் ஸாத்விகமானதென்று கருதப்படுகிறது.)

(பேராசையைப் பற்றி வரும் கதையொன்றை இப்போது பார்ப்போம்.)

ஓர் அரசர் யாருக்கு அதிக ஆசை இருக்கின்றது என்று பரீட்சை செய்து பார்க்க ஓர் ஓட்டப் பந்தயத்தை வைத்தார். மாலையில் சூரியன் மறைவதற்குள் யார் எவ்வளவு தூரம் ஓடுகின்றார்களோ அவர்கள் ஓடுகின்ற தூரம் வரையுள்ள நிலம் அவர்களுக்கே சொந்தமாகும் என்று அவர் பந்தயத்தின் விதியைக் கூறினார். ஒருவன் மிகவும் வேகமாக ஓடினான். நண்பகல் பன்னிரெண்டு மணியாகிவிட்டது. அவனால் அதற்கு மேல் ஓட முடியவில்லை.

Koviloor Digital Library

பிறகு நடக்க ஆரம்பித்தான். சூரிய அஸ்தமனம் ஆவதற்குள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் நடந்தான். இது எதைக் காட்டுகிறது ? ஆசையை அடக்காவிட்டால் அதற்கு ஓர் எல்லையே கிடையாது, மனதிற்குக் கட்டுப்பாடே கிடையாது என்பதையே இது காட்டுகிறது.

காம ஜானாமி தே மூலம் ஸங்கல்பாத்த்வம் ஹி ஜாயஸே ।

என்று கூறப்பட்டதுபோல், ஆசையானது ஒரு நாளும் திருப்தி அடைவதில்லை. வாழ்க்கைக்கு எவையெல்லாம் எந்த அளவிற்கு வேண்டுமோ அந்த அளவிற்கான ஆசையை மட்டும் வைத்துக்கொண்டால்தான் ஒருவனுடைய வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்க முடியும். அதை விட்டுவிட்டு ஒன்று, இரண்டு, மூன்று என்று மேலும் மேலும் ஆசையின் வலையில் ஒரு போதும் சிக்கிவிடக் கூடாது. (நாம் இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும்.) எல்லா ஆசைகளையும் நம்மால் பூர்த்தி செய்து கொள்ள முடியாது. ஏனென்றால் நம்மைப் போல் பல்லாயிரம் மனிதர்கள் உலகத்தில் இருக்கின்றார்கள். அனைவருமே பல மனக்கோட்டைகளைக் கட்டுகின்றனர். ஒரே வேலைக்குப் பலர் மனுச் செய்தாலும் தகுதியுள்ளவனுக்குத்தான் வேலையே கிடைக்கிறது. வேலை கிடைக்காதவர்கள்,

ந த்வாம் ஸங்கல்பயிஷ்யாமி தேன மே ந பவிஷ்யஸி ॥ (8.)

என்று நினைத்துக் கொண்டு திருப்தியோடு இருப்பதில்லை. அவர்கள், "யாரோ நமக்கு வேலை கிடைக்கக் கூடாது என்றெண்ணிக் கெடுதல் இழைத்திருக்கிறார்கள். அதனால்தான் வேலை கிடைக்கவில்லை. எனக்குத் தீங்கிழைத்தவனை நான் கீழே தள்ளிவிட வேண்டும்" என்று நினைக்கிறார்கள்.

அஸௌ மயா ஹத: சத்ரு: ஹனிஷ்யே சாபரானபி ।
ஈச்வரோऽஹமஹம் போகீ ஸித்தோऽஹம்
பலவான் ஸுகீ ॥ (11.)

(அப்பகைவன் என்னால் கொல்லப்பட்டான்; மற்றவர்களையும் கொல்வேன்; நான் ஆள்பவன்; போகத்தையனுபவிப்பவன்; செயலை முடிப்பவன்; வலிவுடையவன்; இன்புறுபவன்.)

Koviloor Digital Library

ஆட்யோऽபிஜனவானஸ்மி கோऽன்யோऽஸ்தி ஸத்ருசோ மயா I (12.)

(செல்வம் படைத்து உயர் குலத்தவனாக இருக்கிறேன்; எனக்கு நிகரானவன் வேறெவன் இருக்கிறான்?)

இத்தகைய எண்ணங்கள் (உள் மனதில் வேலை செய்யும் பொழுது) மனதில் கோபத்தை ஏற்படுத்துகின்றன. வெறுமனே கோபம் ஏற்படுத்துவதோடு அது நின்றுவிடுவதில்லை. கோபத்தின் இயற்கை என்ன தெரியுமோ ?

க்ரோத ஆவிர்பவேச்ச I

(என்று (சதச்லோகீயில்) கூறப்பட்டுள்ளதை நாம் இங்கு நினைவுகூர வேண்டும்.)

"நான் கோபத்தில் எதையோ தெரியாமல் செய்து விட்டேன். அதை தயவு செய்து பெரிதுபடுத்த வேண்டாம்" என்று (கோபம் முடிந்த பிறகு) சிலர் சொல்வதை நாம் பார்த்திருக்கிறோம். கோபம் கொண்டிருப்பவனும் கள் குடித்தவனும் கிட்டத்தட்ட ஒரே மனநிலையில்தான் இருக்கிறார்கள்.

க்ரோதாத்பவதி ஸம்மோஹ: (13.)

(கோபத்தினால் மனக்குழப்பம் ஏற்படுகிறது.)

என்று கீதையில் கூறப்பட்டுள்ளது. கோபம் என்பது உயிரில்லாத ஒரு பொருள். அதற்கு அடிமையானால் மனிதர்கள் வீழ்ந்து விடுவார்கள்.

நமோऽஸ்து கோபதேவாய ஸ்வாச்ரயஜ்வாலினே நம: I (14.)

(கோபதேவனுக்கு நமஸ்காரம். தன்னுடைய ஆதரவையே பொசுக்கும் அவருக்கு நமஸ்காரம்)

என்று ஒரு மேற்கோள் வருகிறது. யாருக்குக் கோபம் வருகின்றதோ அது அவரையே எரித்து விடுகிறது. இது கோபத்தினுடைய இயற்கை. கோபம் கொண்டவனின் கண் சிவக்கிறது. உதடு படபடக்கிறது. ஆமாம், நிச்சயமாக கோபம் ஒரு தேவன்தான். ஆனால் வேறு

Koviloor Digital Library

யாராவது நம்மிடம் கோபம் கொண்டிருந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்? நம் மீது யாராவது கோபம் கொண்டால் மிகவும் நல்லது என்று ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கிறது.

நம்மிடம் கோபம்கொள்ளும் ஒருவன், "நீ பொய் சொன்னாய், என்னை ஏமாற்றினாய். இப்போது என்னவோ நல்லவன் போல் பொய் வேஷம் போடுகின்றாய்" என்றெல்லாம் நம்மைப் பலவாறாகத் திட்டுவது நமக்கு இறைவனின் கருணையால்தான் கிடைக்கிறது என்றே கூற வேண்டும். நாம் நம்முடைய வாழ்நாளின் பழைய ஏடுகளைப் பார்ப்பதில்லை. வருங்காலத்தில்தான் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறோம். நம்மிடம் கோபம் கொண்டுள்ளவர்கள் நாம் இவ்வளவெல்லாம் தவறு செய்திருக்கிறோம் என்று எடுத்துக் கூறி நம்முடைய அறியாமையை நீக்குவதற்கு உதவும்பொழுது அவர்களால் நமக்கு சௌகரியம்தான் ஏற்படுகின்றது. அதுமட்டுமில்லை.

எல்லோருக்கும் எளிதில் சுகம் கிடைப்பதில்லை. ஆனால் நம்முடன் கோபம் கொள்வதினால் ஒருவனுக்குச் சுகம் கிடைக்கிறது. நம்மைத் திட்டுவதினால் ஒருவனுக்குச் சுகம் கிடைக்கிறதென்றால் அப்படிப்பட்ட சுகம் அவனுக்குக் கிடைத்துவிட்டுப் போகட்டுமே. மற்றவர்கள் நம்மைப் பார்த்துத் திட்டினால் திட்டிவிட்டுப் போகட்டுமே. இவ்வாறு ஒருவன் தனது அறிவைக்கொண்டு சிந்தனை செய்தால் அவனுக்குக் கோபமே வராது.

க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத்ஸ்ம்ருதி
விப்ரம: | (13.)

(கோபத்தால் மனக்குழப்பம் ; குழப்பத்தால் நினைவின்மை.)

என்று கூறப்பட்டிருப்பதால், நம்மைக் கோபம் கொண்டு ஏசியவனை நாம் பதிலுக்கு ஏசினால் நாம் மனிதராகப் பிறந்த பிறவியே பயனற்றுப் போய்விடும்.

அடுத்ததாக,

ப்ராப்தாவர்தஸ்ய ஸம்ரக்ஷணமதிருதிதோ லோப: (15.)

என்று பேராசையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

(இங்கு ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும்.)

யாருக்கு உடலில் நல்ல பலம் இருக்கின்றதோ அவர்களுக்குத்தான் கோபம் வரும். சக்தியே இல்லாதவன், "மற்றவர்களுக்கு மிகுந்த சக்தி இருக்கிறது. எனக்கு இல்லை. நான் நாளைக்கு இருக்கப் போகிறேனோ, இல்லையோ தெரியாது. ஆகவே என்னுடைய கோபம் யாரை என்ன செய்ய முடியும்? " என்று கருதி அவன் அவ்வளவாகக் கோபம் கொள்ளமாட்டான். ஆனால் லோபம் என்பது மிகவும் விசித்திரமானது. ஓர் எலியானது தன்னுடைய வளையில் பல தானியங்களைச் சேமித்து வைக்கும் . பல நாள் சேர்த்து வைத்தபின் ஏதோ ஒரு நாள் மழை வந்தால் உள்ளே வைக்கப்பட்ட தானியங்கள் அனைத்தும் வீணாகப் போய்விடும். ஆனால் அந்த எலிக்கு இதெல்லாம் தெரியாது. பிறகும் முன் போலவே தன்னுடைய வளையில் தானியத்தைச் சேர்த்து வைக்கும். லோபியும் அதேபோல்தான். தான் சேர்த்து வைப்பதை அவன் அனுபவிக்கவே மாட்டான். அதுமட்டும் இல்லாமல் மேலும் மேலும் சேர்த்துக் கொண்டே இருப்பான்.

மனமானது அவனுடைய வசத்திற்கு என்றுமே வருவதில்லை. "என்னிடம் இரண்டு லட்சம் ரூபாய் பணம் இருக்கின்றது. இந்த வங்கியில் போட்டால் அதிக வட்டி கிடைக்கும்.ஆகவே இந்த வங்கி அந்த வங்கியை விட நல்லது" என்ற எண்ணமே அவனுக்கு இருக்கும். (இதற்கு ஓர் உதாரணத்தையும் பார்க்கலாம்.) ஒருவனுக்கு மிக வ்யதாகிவிட்டிருக்கும். காலனின் அழைப்பு இன்றோ நாளையோ வந்துவிடும். ஆனால் கடவுளை நினைக்க வேண்டும் என்று மட்டும் அவனுக்கு மனம் கூறுவதில்லை. அவருக்கு மருத்துவம் பார்க்கும் டாக்டரும் பரமசிவனிடம்தான் சரணமடைய வேண்டும் என்று நாம் சொன்னாலும் கூட அவனது மனது அடங்குவதில்லை. புலன்களெல்லாம் தம்முடைய வசத்தில் இல்லாமற் போனாலும் மனமானது பணத்தையும், வீட்டையும் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும். மேலும் இந்த டாக்டர் நல்லவரில்லை. வெளிநாட்டிலுள்ள டாக்டரை வரவழைத்தால் அவர் நன்றாக மருத்துவம் செய்வார் என்றெல்லாம் மனமானது எண்ணிக் கொண்டிருக்கும். வெளிநாட்டிலிருந்து டாக்டரும் வரவழைக்கப்படுவார். ஆனால் அவர் வருவதற்குள் இவரே

Koviloor Digital Library

காலமாகிவிட்டிருப்பார். இவருடைய பையன்கள் அந்த டாக்டருக்கு பணம் மட்டும் கொடுத்துத் திருப்பி அனுப்புவார்கள்.

தாவன் தாவன் திசி திசி சனைரிந்த்ரியாச்வா நிபேது: (16.)

(மீண்டும் மீண்டும் வெவ்வேறு திசைகளில் (பல வருடங்களாக) புலன்களாகிய குதிரைகள் ஓடிக் களைப்படைந்து விட்டன.)

இது போல மனமானது மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு இருந்தாலும் ஒருவன் லோபம் என்பதே இல்லாமல், போதும் என்ற மனதோடு இருக்க வேண்டும். ஆகவே நாம் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலகத்தில் நாம் எதனையும்விட நம்மைத்தான் மிகவும் அதிகமாக விரும்புகிறோம். அப்படிப்பட்ட நிலையில் நாம் நம்முடைய வாழ்நாளில் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று நம்மையே பரிசோதித்துப் பார்க்க வேண்டும். நாம் ஆத்மாவைத் தெரிந்து கொண்டிருக்கிறோமா, இப்படிப்பட்ட நினைவு நமக்கு வருகிறதா, என்றெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அத்யாத்மயோகாதிகமேன தேவம்
மத்வா தீரோ ஹர்ஷசோகௌ ஜஹாதி || (17.)

(புத்திசாலியான மனிதன் மனதை ஆத்மாவின் மீது ஒருமுகப்படுத்தி இன்பதுன்பங்களை கடக்கிறான்)

அத்தகைய நினைவு வந்தால் காமம், கோபம், லோபம் போன்ற எதிரிகள் நம்மைவிட்டுப் போய்விடுவார்கள்.

ஏதைர்விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ்த்ரிபிர்நர: |
ஆசரத்யாத்மன: ச்ரேயஸ்ததோ யாதி பராங் கதிம் || (18.)

(அர்ஜுனனே! இம்மூன்று நரகவாயில்களினின்றும் விடுபட்டவன் தனக்கு நன்மை செய்துகொண்டு பிறகு மோக்ஷத்தை அடைய முடியும்.)

இவ்வாறு நடந்து கொண்டால்தான் ஒருவன் நல்ல கதியை அடைய முடியும்.

Koviloor Digital Library

நாவிரதோ துச்சரிதாத் நாசாந்தோ நாஸமாஹித: |
நாசாந்தமானஸோ வாபி ப்ரக்ஞானேனைனம்
ஆப்னுயாத் || (19.)

(கெட்ட நடத்தையினின்றும் விடுபடாதவன், புலன்களை எல்லாம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளாதவன், ஒருநிலை மனம் இல்லாதவன், தியானத்தின் பலன் வரவில்லையே என்று கவலையுறுபவன் – இவர்கள் அறிவின் மூலமாக ஆத்மாவை அடைய முடியாது.)

இவ்வாறு இந்த எதிரிகளிடமிருந்து நாம் தப்பித்துக் கொண்டு நற்கதியைப் பெற வேண்டும்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

11. விசாரம் செய்ய நான்கு தகுதிகள்

யா திர்யங்நரதேவதாபிரஹமித்யந்த: ஸ்புடா க்ருஹ்யதே
யத்பாஸா ஹ்ருதயாக்ஷதேஹவிஷயா பாந்தி
ஸ்வதோऽசேதனா: ।
தாம் பாஸ்யை: பிஹிதார்கமண்டலநிபாம் ஸ்பூர்திம்
ஸதா பாவயன்
யோகீ நிர்வ்ருதமானஸோ ஹி குருரித்யேஷா
மனீஷா மம ॥ (1.)

சாஸ்திரம் என்ற பதத்திற்கு நம்மைப் பொருத்தவரை "சாரீரக மீமாம்ஸா சாஸ்திரம்" என்று பொருள். நாம் எல்லோரும் துக்கக்கடலில் மூழ்கி அதிலிருந்து எப்படியாவது கடைத்தேற வேண்டும் என்ற ஆசை உள்ளவர்களாய் இருக்கிறோம். மேலும் ஏதாவது தாற்காலிகமாக இருக்கப்பட்ட துக்க நிவிருத்தி வந்தால் அது நமக்குப் போதாது. நிலையான துக்க நிவிருத்தி தான் நமக்கு வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டு. அதை அடைய என்ன ஸாதனம் என்று யோசனை செய்யும்போது, சாஸ்திரம் தவிர வேறு ஸாதனம் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஆகவே யுக்திகளெல்லாம் சொல்லப்பட்டாலும் அவையும் சாஸ்திரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.) எந்த சாஸ்திரத்தை அத்யயனம் செய்தால் பவபந்தம் (பிறப்பு, இறப்பென்னும் தளை) நிவிருத்தி ஆகுமோ அதைத்தான் சாஸ்திரம் என்று ஒப்புக்கொள்கிறோம். இங்கு ஒரு கேள்வி எழுகிறது. பவபந்த நிவிருத்தி எதனால் ஏற்படும்? ஏதாவது கர்மா செய்வதால் ஏற்படுமா அல்லது ஞானத்தினால் ஏற்படுமா? இக்கேள்விக்கு சங்கரபகவத்பாதர் "*அதாதோ ப்ரஹ்மஜிக்ஞாஸா*" என்ற ஸூத்ரத்திற்குப் பொருள் எழுதும் சமயத்தில் விளக்கம் கொடுத்துள்ளார். முதலில் அவர் ஸூத்ரத்தின் பொருளை விளக்குவதில்லை. ஒரு கேள்வியோடு தம் விளக்கத்தை ஆரம்பிக்கிறார். நாம் பார்த்துக் கொண்டிருக்கப்பட்ட துக்கம் என்பது வாஸ்தவிகமா அல்லது நாமே கல்பித்துக் கொண்ட துக்கமா என்று ஒரு கேள்வி கேட்டார். துக்கத்தைக் கல்பித்துக் கொள்வது எப்படி என்று சிலர் கேட்கலாம். நாம் ஒருவர் விஷயத்தில் அன்போடு இருந்தால், அப்படிப்பட்டவருக்கு ஏதாவது துக்கம் வந்தால் நம்

Koviloor Digital Library

மனதிலும் சிரமம் ஏற்படுகிறது. முதலிலேயே அப்படிப்பட்ட பாசம் வைத்துக் கொள்ளாதிருந்தால் யாருக்கு எந்த துக்கம் வந்தாலும் நம் மனதில் வருத்தமே ஏற்படாது. அதனால் பந்தம் என்பது நாமாக உண்டாக்கிக் கொண்டதா அல்லது தானாக வந்ததா என்பதை இந்த சாதாரண உதாரணத்தைக் கொண்டு நாம் புரிந்து கொள்ளலாம்.

புத்ரபார்யாதிஷு விகலேஷு ஸகலேஷு வா
அஹமேவ விகல: ஸகலோ வேதி
பாஹ்யதர்மாநாத்மன்யத்யஸ்யதி... (2.)

(புத்திரன், மனைவி முதலியவர்கள் குறைப்பட்டபோதோ நிறைந்துள்ள போதோ, நானே குறைப்பட்டவன் என்று வெளியிலுள்ளவர்களின் கர்மங்களைத் தன்னிடத்தில் ஏற்றிக் கொள்கிறான்.)

என்று கூறப்பட்டதுபோல் இந்த பந்தம் என்பது நாமாக ஏற்படுத்திக்கொண்டது தான். அது மட்டுமா என்றால், சரீரத்திற்கு ஏதாவது அடிபட்டால் நாம் அழுவோம். இது ஏன்? 'சரீரம் வேறு, நாம் வேறு' என்று சாஸ்திரம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் நமக்கு அந்த விதமான 'பாவம்' இல்லை. அந்த 'பாவம்' வந்தால் நாம் சரீரத்திற்கு அடிபட்டால் அழ வேண்டிய தேவையே கிடையாது. அவ்வாறில்லாமல் இந்த 'சரீரமே நான்' என்ற பிரமை இருக்குமானால் பிறகு சரீரத்திற்கு வரும் சுகமோ துக்கமோ தனக்கே வருகிறது என்றுதான் ஒருவன் எண்ணுவான். அப்படி நினைக்க வேண்டியது கூட ஸஹஜம் தான். 'இந்த சரீரம் போன்றவைகள் தான் 'அஹம்' (நான்) என்ற ஞானம் (அறிவு)' எனக் கூறுவது உண்மையான ஞானமா அல்லது தவறான ஞானமா என்று தீர்மானம் செய்ய வேண்டும். அது உண்மையான ஞானம்தான் என்றால் அப்பொழுது இந்த சரீரத்திற்கு வந்த சுகதுக்கங்களெல்லாம் இந்த ஆத்மாவிற்குத்தான் வந்தது. அதனால் இதற்கு நாம் பரிகாரம் செய்வதற்கு வேறு மார்க்கம் தேட வேண்டியிருக்கிறது. இந்த ஞானம் உண்மையான ஞானமில்லை, வெறும் பிரமைதான் என்றால் சரீரத்திற்கு எந்தவிதமான வியாதியோ, குணமோ, தோஷமோ வந்தாலும் வராவிட்டாலும் பாதகமில்லை. நாம் நம்முடைய ஸ்வரூபத்தில் இருந்து விடுவோம் என்பது தீர்மானமான விஷயம்.

Koviloor Digital Library

யுஷ்மதஸ்மத்ப்ரத்யயகோசரயோ: விஷயவிஷயிணோஸ்தம: ப்ரகாசவத் விருத்தஸ்வபாவயோ: । (3.)

('நீ', 'நான்' என்கிற எண்ணங்களுக்கு விஷயமாய் உள்ளதும், இருட்டு வெளிச்சம் இவைகளைப்போல நேர்மாறான ஸ்வபாவங்களை உடையதுமான விஷயம்...)

என்று சொல்லப்பட்டதிலிருந்து, இந்த ஆத்மா "ஸச்சித் ஸுக ஸ்வரூப:" – அதாவது ஆத்மா என்பது நித்யம், ஞான ஸ்வரூபம், சுக ஸ்வரூபம் என்பதை சாஸ்திரத்தின் மூலமாக மிகத் தெளிவாக தெரிந்து கொள்ளலாம். ஸ்ரீ வித்யாரண்யர் பஞ்சதசீயில் "ஞானம் என்றொரு பொருள் உண்டு. அது ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்ற மூன்று காலத்திலும் ஒன்றாக இருக்கும். ஆனால் அதனுடைய விஷயங்கள் மட்டும் வேறுவேறாக இருக்கும். அப்படிப்பட்ட ஞானம் தான் ஆத்மா. அதுதான் ஒருவனுடைய பரமப்ரீதிக்கு இருப்பிடமாக இருக்கப்பட்டது" என்று கூறுகிறார். ஆனால் நாம் 'இந்த ஆத்மா வேறு; ஸத்சித் ஸ்வரூபமாக இருக்கும் சைதன்யம் வேறு' என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இல்லை. அந்தப் பரம்பொருளாக நாமே இருக்கிறோம் என்ற விஷயத்தை வேதாந்தம் உபதேசிக்கிறது என்று வித்யாரண்யர் கூறி விட்டார். ஆகவே இந்த ஆத்மாவைப் பற்றி விசாரம் செய்யும் அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆத்மாவைப் பற்றி எப்பொழுது விசாரம் செய்வது? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாக '*அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா*' என்ற ஸூத்ரத்தில் 'அத' என்று கூறியுள்ளார். 'அத' என்றால் 'பிறகு' என்று அர்த்தம். பிறகு என்றால் 'எதன் பிறகு' என்ற கேள்வி எழும்.

கர்மாவபோதானந்தர்யம்.... (4.)

(கர்மாவை அறிந்து அதன் பிறகு...)

கர்மாவைப் பற்றி அறிய வேண்டும் என்ற இச்சையோடு அதைத் தெரிந்து கொண்ட மாத்திரத்தில் அதற்கு பலன் இல்லை. அதை அனுஷ்டானம் செய்ய வேண்டியுள்ளது.

அனதீத்ய த்விஜோ வேதானனுத்பாத்ய ததா ஸுதான் । (5.)

Koviloor Digital Library

(த்விஜன் வேதத்தை அத்யயனம் செய்யாமல், புதல்வர்களை உண்டாக்காமல் (யக்ஞங்களைச் செய்யாமல் மோக்ஷத்தை விரும்பினால் நரகத்திற்குத்தான் செல்கிறான்.)

பிறகு,

மனோ மோக்ஷே நிவேசயேத் (6.)

(மனதை மோக்ஷத்தில் சேர்க்க வேண்டும்.)

என்பதுபோல் முதலில் நன்கு கர்மானுஷ்டானம் செய்து ஸம்ஸாரம் பார்த்த பிறகு பிரபஞ்சம் ஸாரமில்லை என்ற கருத்துடன் மோக்ஷ வழியில் செல்ல பரமஹம்ஸ பரிவ்ராஜகம் (ஸந்யாஸம்) வாங்க வேண்டியது என்று ஓர் இடத்தில் சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. அதனால் பூர்வ மீமாம்ஸா சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களையெல்லாம் அனுஷ்டானம் செய்துவிட்டு பிறகுதான் நாம் வேதாந்த விசாரம் செய்ய வேண்டியது என்ற ஒரே வழிதானா என்றால் அப்படி அல்ல. ஓரிடத்தில், "முதலில் பிரஹ்மச்சாரி ஆக வேண்டும், பிறகு கிருஹஸ்தன் ஆக வேண்டும், அதன் பிறகு வானப்பிரஸ்தன் ஆக வேண்டும், அதற்கும் பிறகு ஸந்யாஸி ஆக வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சாஸ்திரங்களிலேயே

ப்ரஹ்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத்க்ருஹாத்வா வனாத்வா (7.)

(பிரஹ்மச்சர்யத்திலிருந்து ஒருவன் ஸந்யாஸம் வாங்கி விடலாம்.)

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரஹ்மச்சர்யத்திலிருந்தே ஸந்யாஸம் பெற்றுக் கொண்டு விடுவது சரியா 'க்ருஹாத்வா, வனாத்வா' என்று கூறப்பட்டது போல் உலகமெல்லாம் பார்த்து விட்டு பிறகு ஸந்யாஸம் பெற்றுக் கொள்வது சரியா என்ற பிரச்சினை நமக்கு எழுகிறது. சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள இரு வாக்கியங்களுக்கும் நாம் ஸமன்வயம் கூற வேண்டும். யார் கிருஹஸ்தனாக இருந்து ஸந்யாஸம் பெற்றுக் கொள்வாரோ அவர் நன்றாக கர்மானுஷ்டானம் செய்து பிறகு ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளலாம். அவனுக்கு அந்த வாக்கியம் சரிப்பட்டு வரும். பிரஹ்மச்சர்யத்திலிருந்தே ஸந்யாஸம் வாங்குபவனுக்கு அந்த

Koviloor Digital Library

வாக்கியம் தவறாகிவிடும். ஆனால் அடுத்த வாக்கியம் அவனுக்கு சரியாகும். அவ்வாறு செய்வதற்கு அவனுக்கு 'ஸாதன ஸம்பத்தி' வேண்டியிருக்கிறது. அப்பேற்பட்டவன் கர்மாவினால் போகம் பெற வேண்டியதில்லை. ஸாதன ஸம்பத்திகள் விவேகம், வைராக்யம், சமாதிஷட்க ஸம்பத்தி, முமுக்ஷுத்வம் என்பவையாகும். இவை நான்கும் மனிதனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்று கூறப்படும். இத்தகைய தகுதிகள் யாருக்கு உண்டோ அவர்கள் வேதாந்த விசாரம் செய்யலாம்.

முதலில் விவேகம் என்றால் என்ன என்று பார்ப்போம். நாம் சுகம் துக்கம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாச்வதமான வஸ்து எது, அசாச்வதமான வஸ்து எது என்ற விசாரம் செய்யும் போது தர்க்க சாஸ்திரத்தில் சொல்லப்படுவது போல் 'ஆகாசம் நித்யம், பிருத்வீ (பூமி) போன்றவை அநித்யம்' என்ற விசாரம் நாம் செய்ய வேண்டியதில்லை. "என்னுடைய ஸ்வரூபத்தைப் பற்றி ஆராய முனைந்தேனா?" என்ற விசாரத்தை நாம் செய்ய வேண்டும். ஆத்மா என்பதுதான் நித்யமான வஸ்து. ஆத்மா நிலையானது என்பது சாஸ்திரங்களில் சிறந்த யுக்திகளினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரபஞ்சம் நிலையற்ற ஒன்று. பிரபஞ்சத்தில் தற்போது நாம் பார்க்கும் ஓர் உருவம் இன்னும் சிறிது நேரத்தில் மறைந்து விடலாம். மேகம் எப்படி அடிக்கடி தன்னுடைய ரூபத்தை மாற்றிக் கொண்டிருக்குமோ அதே மாதிரி பிரபஞ்சமும் மாற்றிக் கொண்டிருக்கும். என்றாவது ஒரு நாள் பிரபஞ்சம் முழுவதும் இல்லாமல் போய்விடலாம். மற்றவர்கள் பிரபஞ்சம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டாலும் கூட ஒரு ஞானியின் பார்வையில் பிரபஞ்சம் இல்லை என்று தான் தீர்மானம். அதனால் நித்யமாயிருக்கப்பட்ட பொருள் ஒன்று உண்டு என்று நமக்குத் தெரிந்ததேயானால் அப்பொழுது நாம் உலகத்தில் "அது வேண்டும், இது வேண்டாம்" என்ற விருப்பு வெறுப்புகளை விட்டுவிட்டு அந்த நித்யமான பொருளை அடைவதற்காக முயற்சி செய்ய முடியும். அவ்வாறில்லாமல் இருந்தால் நாம் இந்த அநித்யமான பொருட்களிலேயே மூழ்கி நித்யமான பொருளை மறந்து விடுவோம். அதனால்தான் "நித்யா நித்ய வஸ்து விவேகம்" தேவை என்று முதல் தகுதியாகச் சொல்லியிருக்கிறார்.

Koviloor Digital Library

வந்துள்ள விவேகத்தின் பலன் வைராக்யம் ஆகும். இது குறித்து இப்போது பார்ப்போம். மனிதர்கள் பொருட்களை சேர்த்துக்கொண்டே போக ஆசைப்படுவர். உதாரணத்திற்கு, யாராவது பாடகர் வந்தால் அவருடைய பாட்டைக் கேட்க வேண்டும் என்று ஆசை ஏற்படும். அடுத்து கிராமபோன் வந்ததும் நம் வீட்டிலும் கிராமபோன் இருக்கட்டும் என்று ஆசை. பிறகு டேப்-ரிகார்டர் வந்தபின் அதுவும் நம்மிடம் இருக்கட்டும் என்று ஆசை! இரண்டும் சேர்ந்து வந்தால் (டூ இன் ஒன்!) அதுவும் நமக்கு வேண்டும் என்று ஆசை! இப்படியாக ஆசை ஒன்று, இரண்டு, மூன்று என்று கணக்கில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. ஆசைக்கு ஏதாவது முடிவு உண்டா?

ஏகஸ்யாபி ந பர்யாப்தம் ததித்யதித்ருஷம் த்யஜேத் || (3.3)

(பூமி, நெல், பொன், பசு, பெண்கள் – இவை ஒன்றினாலும் முழு திருப்தி இல்லை. அதனால் அதிக ஆசையை விட்டுவிடு.)

என்று ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது.

உலகத்திலிருக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் ஒருவனுக்குக் கிடைத்தாலும் அப்போதுகூட ஒருவனுக்கு திருப்தி வருவது சந்தேகம்தான். பார்க்கப் போனால் வரவே வராது என்பது நிச்சயம். அதனால் இம்மை சம்பந்தப்பட்ட சுகமானாலும் மறுமை சம்பந்தப்பட்ட சுகமானாலும் அவை எல்லாம் சரீர சுகங்கள் ஆகும். இப்படிப்பட்ட சுகத்தினால் ஆசை அதிகமாகும். அந்த ஆசையை நாம் திருப்திபடுத்துவதற்காக இன்னும் முயற்சி செய்வோம். அந்த முயற்சியினாலே இன்னும் கொஞ்சம் சுகத்தைப் பெறுவோம். இவ்வாறு அது ஒரு சக்கரம் மாதிரி சுற்றிக் கொண்டேயிருக்கும்.

உபேக்ஷைவோபாய: தவ ஹ்ருதே தேஷாமுபசம: (8.)

(ஏ மனமே ! உன்னை அலட்சியப்படுத்துவதே இந்திரியங்களை அடக்குதல் ஆகும்.)

என்று கூறப்பட்டதுபோல, நமது இந்திரியங்கள் சாந்தமாக இருக்க வேண்டுமென்றால், நாம் பிரபஞ்சத்தில் உபேக்ஷா பாவம் வைத்துக் கொள்ள வேண்டும். அந்த உபேக்ஷைதான் வைராக்யம் என்று சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

ஸவிதர்யபி சீதருசௌ சந்த்ரே தீக்ஷ்ணேடப்யதோ வஹத்யக்னௌ।
மாயிகமிதமிதி ஜானன் ஜீவன்முக்தோ ந விஸ்மயீ பவதி॥ (9.)

(ஸூர்யனுடைய கிரணங்கள் குளிர்ச்சியைத் தந்தாலும், சந்திரன் உஷ்ணமானாலும், அக்னி கீழே வந்தாலும் அதெல்லாம் மாயையினால் வந்தவை என்று ஜீவன்முக்தன் கருதி, அவைப் பற்றி ஆச்சரியப்படமாட்டான்.)

உலகத்தில் நாம் எதைப் பார்த்தாலும்கூட அது எதுவும் நித்யமில்லை. ஒரு காலத்தில் உலகமே இல்லாமல் '*ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்*' என்று கூறப்பட்டது போல் ஆத்மா மட்டும் இருந்தது. சிறிய பீஜத்திலிருந்து பெரிய ஆலமரம் உருவாகுவதைப் போல அந்த ஒரு பரம சைதன்யத்தினால் இவ்வளவு பெரிய உலகத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த உலகம் என்பது சாச்வதமா? சாச்வதமே இல்லை.

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச। (6.6)

பிறந்தது எல்லாம் என்றைக்காவது ஒரு நாள் அழியத்தான் வேண்டும். அதே போல் எந்த வஸ்து அழிவடைகிறதோ அது இன்னொரு ரூபத்தில் மறுபடியும் பிறக்க வேண்டியதுதான். ஆகவே இந்த வஸ்துக்களில் நாம் ஆசையில்லாமல் உதாசீனமாய் (அலட்சியமாக) இருந்து உலகத்தை ஒரு சாட்சியாகப் (பார்வையாளனாகப்) பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதுதான் வைராக்யம். இந்த வைராக்யம் இருந்தால் தான் 'சமாதி ஷட்க ஸம்பத்தி' என்ற மூன்றாவது தகுதி வர ஏதுவாகும். 'சமாதி ஷட்க ஸம்பத்தி' என்பது சமம், தமம், உபரதி, திதிக்ஷா, ச்ரத்தா, சமாதானம் என்ற ஆறு பிரிவுகளைக் கொண்டது. அவற்றை ஒவ்வொன்றாக இப்போது நோக்குவோம்.

சமம் என்பது உள்ளே உள்ள இந்திரியங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல். தமம் என்றால் வெளியில் உள்ள இந்திரியங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல். ஆகவே அந்தரிந்திரியம் பஹிரிந்திரியம் இரண்டையும் ஒருவன்

Koviloor Digital Library

தன்னுடைய வசத்தில் வைத்திருக்க வேண்டும். அந்தரிந்திரியம் என்றால் மனது. கண் முதலியவை பஹிரிந்திரியங்கள். சிலர், "எனக்கு அந்தரிந்திரியம் கட்டுப்பாட்டில் இருக்கிறது. பஹிரிந்திரியம் எப்படி இருந்தால் என்ன?" என்று கூறினால் அது சரியல்ல.

ஒரு மனிதன் பெரிய ஸந்யாஸியைப் போல் வேஷம் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய செயல்கள் மிகவும் மோசமாக இருந்தன. ஒருவர் அவனிடம் "என்ன, நீங்கள் கண்ட இடத்தில் சாப்பிடுகிறீர்களே, கண்ட இடத்தில் சுற்றுகிறீர்களே, நீங்கள் ஸந்யாஸி ஆன பின் இப்படி இருக்கலாமா?" என்றார். அதற்கு அந்த 'ஸந்யாஸி' (!), 'அகண்ட சித்ரூபியாக இருக்கும் ஆத்மாவிற்கு எங்கே சாப்பிட்டால் என்ன? எங்கே சுற்றினால் என்ன? அவனுக்குப் பற்றுதலே இல்லை அல்லவா? அதனால் நான் எப்படியிருந்தாலும் அதனால் தவறில்லை' என்றார். கேள்வி கேட்ட மனிதர் இதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. பின்னர் ஸந்யாஸியை வீட்டில் பிக்ஷைக்குக் கூப்பிட்டார். அவரை உட்கார வைத்தார். ஆனால் ஸந்யாஸிக்கு இலையில் ஒன்றும் பரிமாறவில்லை. எவ்வளவு நேரம் அவர் காத்துக் கொண்டிருக்க முடியும்? "சரி, தண்ணீர் கொண்டு வா ஐயா, மிகவும் தாகமாக இருக்கிறது" என்றார் ஸந்யாஸி. அதற்கு இவர்,

ப்ரஹ்மானந்தேன த்ருப்தஸ்ய (10.)

என்பது போல் ப்ரஹ்மானந்தத்திலேயே திருப்திபட்டிருப்பவருக்கு தாகம் எங்கிருந்து வந்தது?.அதனால்,

யத்ஸௌக்யாம்புதிலேசலேசத இமே சக்ராதயோ
நிர்வ்ருதா: (11.)

(பரம்பொருளின் ஒரு துளி ஆனந்தத்தில் இந்திரன் முதலானோர் திருப்தியுற்றனர்...)

என்று கூறப்பட்டது போல் அந்த சௌக்கியத்திலேயே நீங்கள் அமிழ்ந்து போயிருக்கிறீர்கள். உங்களுக்கு நான் தண்ணீர் மேலிருந்து விடுவதா அல்லது வாய்க்குள்ளே விடுவதா? ஒன்றும் புரியவில்லை" என்றார். உடனே ஸந்யாஸி "ஏய் அப்படியெல்லாம் கேட்டால் பசி தாங்க முடியாது. நான் என்ன செய்யட்டும்?"என்றார்.

Koviloor Digital Library

உதாரணத்தில் வந்த ஸந்யாஸியைப் போல் அந்தரிந்திரியம் வசப்படுத்தி விட்டோம் என்று வாயில் மட்டும் சொல்லிவிட்டு அதற்குத் தகுந்தாற் போல் நடந்து கொள்ளாமல் இந்திரியங்களை கட்டுப்பாடில்லாமல் விட்டிருந்தால் "*மித்யாசார: ஸ உச்யதே*" – அப்படிப்பட்டவன் ஒரு மித்யாசாரி – என்று பகவான் அவனுக்கு ஒரு விருது கொடுத்தார். அந்த விருது நமக்கு இருக்கக் கூடாது. அதனால் சமம் இருந்தால் தமம், தமம் இருந்தால் சமம் ஆகிய இரண்டும் இருக்க வேண்டியது அவசியம்.

அடுத்ததாகக் கூறப்பட்டது 'உபரதி' என்பது.

ததஸ்தத: சோபரதி: க்ரியாப்ய: (12.)

(கிரியைகளிலிருந்து (செயல்களிலிருந்து) விடுவித்துக் கொண்ட பிறகு...)

என்று கூறப்பட்டதுபோல், பிரபஞ்சத்திலே பலர், "நாளைக்கு நாம் நல்ல செயல்களைச் செய்வோம். இப்பொழுது நாம் பிரபஞ்சத்திலே அனுபவிக்க வேண்டியது எவ்வளவோ உண்டு. இதையெல்லாம் விட்டால் வாழ்க்கை நடத்த முடியாது" என்று கூறுவர். வயது அதிகமான பின் விட்டு விடலாம் என்று நினைத்துக் கொண்டே இருப்பர். கடைசியில் வயதாக ஆக இந்தக் கர்ம ஸங்கதி என்பது அதிகமாகிக் கொண்டே வரும். முதலில் இவனுடைய சிந்தை, அதன் பிறகு இவன், மற்றும் இவனுடைய ஸம்ஸாரத்தினுடைய சிந்தை. அதன் பிறகு இவன், மற்றும் ஸம்ஸாரம், இவனுடைய குழந்தைகள், பேரன்கள், பேத்திகளுடைய சிந்தை என்று இவ்வாறு சிந்தனைகள் அதிகமாகிக் கொண்டு போகுமே தவிர, குறைவது என்பது கிடையவே கிடையாது. அதனால்தான்

ததஸ்தத: சோபரதி: க்ரியாப்ய:

என்று கூறப்பட்டுள்ளது. ஒன்றைச் செய்ய வேண்டிய கடமையிருந்தாலும் செய்ய வேண்டிய காலம் எப்போதானாலும் கூட அதில் பற்றுதல் இருக்கக் கூடாது. கடமையே இல்லாதிருக்கப்பட்டவன் கடமையைத் தானாகவே உண்டாக்கிக் கொள்வதும் தவறு. யாருக்கு "உலகம் ஸத்தியம்" என்ற பாவனை

Koviloor Digital Library

உண்டோ அப்படிப்பட்டவர் சாட்சியாக இருந்து கர்மங்களைச் செய்து வர வேண்டும்.

அதிகாரிகளில் உத்தமம், மத்யமம், மந்தம் என்று மூன்று வகைகள் உண்டு.

த்யக்த்வா ஜாதிகுலாச்ரமேஷ்வபிமதிம் முஞ்ச்யாத்
ஸுதூராத் க்ரியா: (13.)

(ஜாதி, குலம் ஆச்ரமம் என்பவைகளில் பற்றுதலை விட்டுவிட்டு எல்லாக் கிரியைகளையும் தூரத்திலிருந்து விட்டுவிட வேண்டும்.)

என்பது போல் உத்தம அதிகாரிக்கு ஜாதி, மதம், குலம் போன்றவற்றிலெல்லாம் அபிமானம் இருக்க வேண்டிய தேவையில்லை. 'ஜாதி, மதம், போன்றவற்றை விட நான் தயாராக இருக்கிறேன்' என்று யாராவது சொன்னால், தயாராக இருந்தால் மட்டும் போதாது.

தேஹாதௌ அஸதி த்யஜாத்மதிஷணாம் (14.)

(மெய்யில்லாத உடல் போன்றவைகளில் இதுதான் ஆத்மா என்ற எண்ணத்தை விடு.)

என்று கூறப்பட்டது போல் இருந்து விட்டால் அத்தகைய அபிமானத்தை விட்டுவிடலாம். 'தேஹாதௌ' – தேஹம் இந்திரியம் இவைகளெல்லாம். 'அஸதி' – இவைகளெல்லாம் கல்பிதமானவை என்று எண்ணி இவற்றில் அபிமானத்தை விட்டுவிட்டால் அப்பொழுது நாம் ஜாதி, மதம் போன்றவற்றை விட்டுவிடலாம். ஒருவன் தான் எந்த அதிகாரத்தைச் சேர்ந்தவன் என்று தானே பார்த்துக் கொள்ள வேண்டும். இன்னொருவர் சொல்லி அதைக் கண்டுபிடிக்க முடியாது. தேஹத்தில் அபிமானம் இல்லையென்றால் ஒருவன் எங்கு சாப்பிட்டாலும் தவறில்லை. தேஹத்தில் யாராவது இரண்டு அடி அடித்தால் திருப்பி நான் அடிக்க வேண்டும் என்று யாருக்குத் தோன்றுகிறதோ அப்படிப்பட்டவன் கண்ட இடத்தில் சாப்பிட முடியாது. வீட்டில்தான் சாப்பிட வேண்டும். தேஹத்திலே பற்றுதல் இல்லையென்றால் ஒருவனுக்கு விஷம் போட்டாலும் ஒன்றுதான்,

Koviloor Digital Library

சாதம் போட்டாலும் ஒன்றுதான். அவனுக்கு விஷம் விஷமாவதே இல்லை. அதனால்தான் உத்தமமான அதிகாரியாக இருக்கப்பட்டவனுக்கு '*ததஸ்தத: சோபரதி: க்ரியாப்ய:*' என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்ததாக 'திதிக்ஷா' என்பது சொல்லப்பட்டுள்ளது. திதிக்ஷா என்றால் என்ன ?

ஸஹனம் ஸர்வதுக்கானாம் அப்ரதீகாரபூர்வகம் |
சிந்தாவிலாபரஹிதம் ஸா திதிக்ஷா நிகத்யதே || (15.)

(பரிகாரம் செய்ய வேண்டும் என்ற முயற்சி முன்னர் இல்லாமலும், கவலையோ புலம்பலும் இல்லாமலும், எல்லாவிதமான துக்கங்களையும் பொறுத்துக் கொள்வது 'திதிக்ஷை' என்று கூறப்பட்டிருக்கிறது.)

என்று திதிக்ஷை விளக்கப்பட்டிருக்கிறது. பிராரப்த கர்மாவினால் ஒருவனுக்கு ஏதாவது துன்பங்கள் வரலாம். அந்த துன்பங்களை வைத்துக் கொண்டு, "ஐயோ, இந்த துன்பம் வந்து விட்டதே" என்று கதறினால், அப்பொழுது ஒருவன் சாஸ்திரம் வாசிப்பதற்கு அதிகாரம் உள்ளவன் ஆகமாட்டான். எது வந்தாலும்கூட, இந்த ஸச்சிதானந்த ஸ்வரூபியாக இருக்கப்பட்ட ஆத்மாவிற்கு சம்பந்தம் இல்லை என்று கருத வேண்டும். சரீரத்திற்கு ஏதாவது துன்பமோ இன்பமோ வந்து போகட்டும் என்று இருக்க வேண்டும். அந்த திதிக்ஷைதான் 'சிந்தாவிலாபரஹிதம்' என்று கூறப்பட்டுள்ளது. துன்பம் வந்தால் சிந்திப்பதோ கதறுவதோ கூடாது. இவ்வாறு பொறுத்துக் கொள்ளும் சக்தி இருந்தால் அதற்கு 'திதிக்ஷா' என்று பெயர்.

அடுத்ததாக ச்ரத்தா, ஸமாதானம் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

சாஸ்த்ரஸ்ய குருவாக்யஸ்ய ஸத்யபுத்த்யாவதாரணா |
ஸா ச்ரத்தா கதிதா ஸத்பிர்யயா வஸ்தூபலப்யதே | (16.)

(எதனால் உண்மையான பொருள் அறியப்படுகிறதோ, அந்த சாஸ்திரமும் குருவின் உபதேசமும் ஸத்யம் தான் என்ற எண்ணத்தினால் ஏற்படும் உறுதியான நம்பிக்கை 'சிரத்தை' என்று நல்லோர்களால் கூறப்பட்டிருக்கிறது.)

Koviloor Digital Library

நன்றாக வேதாந்தத்தைப் படித்தாலும் 'என்னவோ ப்ரஹ்மா என்று ஒன்று உண்டாம். சுகர் முக்தராம், வாமதேவரும் முக்தராம்' என்று இவ்வாறு பாடம் சொல்வதாக இருந்தால் அந்தப் பாடம் கேட்காமலிருப்பதே மேல். ஏனென்றால் தான் இருக்கிறானா இல்லையா என்பதிலேயே அப்படிப்பட்டவனுக்கு சந்தேகம். தான் இருந்தால் கண்டிப்பாக ப்ரஹ்மமும் உண்டு. அப்படியிருக்கும் போது தான் உண்டு என்று நினைத்துவிட்டு ப்ரஹ்மம் உண்டோ இல்லையோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டு, 'ப்ரஹ்மம் உண்டு என்று சாஸ்திரம் சொல்கிறது' என்றால் அப்பொழுது சாஸ்திரத்தில் சிரத்தை இல்லை என்றுதான் பொருள். யார் யாருக்குத் தான் உண்டு என்ற அறிவு உள்ளதோ அவர்கள் எல்லோரும் ப்ரஹ்மத்தை ஒரு ரூபத்தில் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்பது தான் பொருள். அதனால்,

சாஸ்த்ரஸ்ய குருவாக்யஸ்ய ஸத்யபுத்த்யாவதாரணா ।

என்று கூறப்பட்டதனால் வேதம் எதைச் சொல்கிறதோ, ஆசார்யாள் எதை உபதேசிக்கிறாரோ அவ்விஷயத்தில் '*ஸத்யபுத்த்யா*' இது ஸத்தியமான வார்த்தை என்ற நிச்சயம் இருக்க வேண்டும். '*யயா வஸ்தூபலப்யதே*' – அந்த சிரத்தை இருந்தால்தான் ஆத்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும். சிரத்தையே இல்லையென்றால் ஆத்மஸாக்ஷாத்காரம் உண்டாகாது. உதாரணம் ஒன்றை இப்போது பார்ப்போம். ஒரு வைரத்தைப் பரீட்சை செய்யும் நகைக் கடைக்காரர் வைரத்தை கையில் வைத்துக் கொண்டு, 'இப்படிப் பார், அப்படிப் பார். இதில் தோஷம் தெரியும், குணம் தெரியும்' என்று சொல்லிக் கொண்டிருப்பான். அவன் சொல்வதெல்லாம் பொய் என்று தீர்மானம் வைத்துக் கொண்டிருந்தால் பார்ப்பவனுக்கு எப்படி அறிவு உண்டாகும்? அறிவு உண்டாகாது. அவன் சொல்வதில் நம்பிக்கை வைக்க வேண்டும். பிறகு நாம் பார்த்தால் அவன் சொல்வதெல்லாம் அங்கே இருக்கும் என்பதை நாம் பார்க்கலாம். ஆகவே சிரத்தை என்பது வேண்டும். ஸமாதானம் என்பது மனதை ஒருநிலைப்படுத்துதல் ஆகும். இந்த ஆறு சமாதி, ஷட்க ஸம்பத்திகள் இருந்தால்தான் அதிகாரம் வரும்.

அடுத்ததாக 'முமுக்ஷுத்வம்' என்பது கூறப்பட்டுள்ளது. முமுக்ஷுத்வம் (மோக்ஷத்தில் விருப்பம்) எல்லோருக்கும் உண்டு.

Koviloor Digital Library

ஏதாவது கஷ்டம் வந்தால் இந்தப் பிரபஞ்சம் வேண்டாம் என்று தோன்றும். அந்தக் கஷ்டம் நீங்கிப் போயிற்று என்றால் இந்தப் பிரபஞ்சத்தைவிட்டு நாம் போகக் கூடாது என்று தோன்றும்.

விறகு விற்கும் ஒரு கிழவி இருந்தாள். வெயில் காலத்தில் விறகை விற்றுக் கொண்டு வருவதற்கு மிகவும் கஷ்டப்பட்ட அவள், "எவ்வளவு நாள் கூப்பிட்டாலும் எமன் வர மறுக்கிறானே, இந்தக் கஷ்டத்திலிருந்து நான் எப்படி விடுபடுவது?" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். ஒரு நாள் எமன் எதிரிலேயே வந்து "ஏனம்மா என்னை அழைத்தாய்?" என்றான். கிழவி பார்த்தாள். "இது என்னடா இவன் வந்துவிட்டான்!" என்று நினைத்துக் கொண்டே, "ஒன்றுமில்லை, இந்த விறகை தூக்கித் தூக்கி மிகவும் கஷ்டமாயிருக்கிறது. விறகை என் தலையில் தூக்கி வைத்துவிட்டால் போதும்" என்றாள். முதலில் எமனை அழைத்தபோது, 'என்னை அழைத்துக் கொண்டு போ' என்று கூப்பிட்டாள். அவன் எதிரில் வந்தவுடனேயே 'வேண்டாம்' என்று கூறிவிட்டாள். நமக்கு அதுபோன்ற முமுக்ஷுத்வம்தான் உண்டு. 'ப்ரஸூதி வைராக்யம், ஸ்மசான (மயான) வைராக்யம்' என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. மயானத்தில் போய்ப் பார்க்கும் பொழுது "இதைப்போல் நானும் சுடுகாட்டிற்குத்தான் வர வேண்டியிருக்கும். எவ்வளவு ஸம்பாதித்தால் என்ன? உலகத்தில் எவ்வளவு சுகம் அனுபவித்தால் என்ன? துக்கம் அனுபவித்தால் என்ன? ஏதோ வந்திருக்கப்பட்ட வாழ்க்கையை நல்லதாக்கிக் கொண்டு, பிறகு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுக்கொள்ளக் கூடாதா?" என்று தோன்றும். சிறிது நேரம் கழிந்தபின் கடைத்தெருவிற்கு வந்தவுடனே அச்சிந்தனையெல்லாம் மாயமாகிவிடும். கீதையில் கண்ணன்,

மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே (17.)

(என்னை மட்டும் நாடியவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள்.)

என்று கூறியுள்ளார். ஆகவே இறைவனைச் சரணடைந்தால்தான் இந்த மாயை போகும் என்று கூறப்பட்டிருக்கிறது. அரைகுறை வைராக்யத்தினால் வரும் முமுக்ஷுத்வம் முமுக்ஷுத்வமே அல்ல.

Koviloor Digital Library

அது இருந்தாலும் பிரயோஜனமில்லை. முமுக்ஷுத்வம் எப்படியிருக்க வேண்டும் என்று கேட்டால், தலைமுடிக்கு நெருப்புப் பிடித்துவிட்டால் அப்பொழுது என்ன செய்வோம்? ஒரு குழாயைக் கண்டால் அந்தக் குழாயின் கீழே உட்கார்ந்து விடுவோம். அல்லது ஒரு குளத்தைப் பார்த்தால் உடனே அதில் போய் குதித்து விடுவோம். நீச்சல் வந்தாலும் சரி, வராதிருந்தாலும் சரி, முதலில் குதித்துவிடுவோம். இதனால்தான்

ப்ரதீப்தசிர: ஜலம் ப்ரவிவிக்ஷுரிவ (18.)

(தலையில் நெருப்புப் பிடித்தவன் ஜலத்தில் பிரவேசிப்பது போல்)

என்று ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது. அதுபோல் உத்தமாதிகாரியின் முமுக்ஷுத்வம் இருக்க வேண்டும். விவேகம், வைராக்யம், சமாதி ஷட்க ஸம்பத்தி, முமுக்ஷுத்வம் முதலியவை ஒரு கிருஹஸ்தனுக்கோ அல்லது வானப்ரஸ்தனுக்கோகூட வரலாம்.

அதவா யோகினாம் ஏவ குலே பவதி தீமதாம் । (19.)

என்று பகவான் கூறியதுபோல் ஜன்மாந்தரத்தில் அனுஷ்டானம் செய்ததற்கேற்ப தற்போது இவைகளை ஒருவன் பெறலாம். அதனால்தான் ஸூத்ரத்தில் 'அத அத:' என்றார் பகவத்பாதர். "விவேகம், வைராக்யம், சமாதி ஷட்க ஸம்பத்தி, முமுக்ஷுத்வம் என்பவை இருக்கும் போது" என்றும் இதற்குப் பொருள். ஆனால் நாம் உலகத்தில் பார்க்கிறோம். யாருக்கும் வைராக்யம் வருவதாக தெரியவில்லை. எல்லோரும் ஒன்று–இரண்டு–மூன்று என்று மாளிகைகள் கட்டிக்கொண்டிருப்பதில்தான் ஆசை வைக்கிறார்கள். யாகம் செய்பவர்களுக்கும் ஜோதிஷ்டோமம், அக்னிஷ்டோமம், வாஜபேயம் என்று இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக யாகம் செய்யத் தோன்றும். ஸ்வர்கத்திற்குப் போக வேண்டும் என்று மட்டும் எல்லோருக்கும் தீவிரமாக விருப்பம் இருக்கிறதே தவிர யாருக்கும் வைராக்யம் வருவதில்லை. "இந்த யாகங்களையே நாம் செய்து கொண்டிருந்தால் ஏதோ ஒரு சுகம் கிடைத்துவிடும். அந்த சுகம் ஸ்திரமானதாக இருக்கும்" என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த வேதம் இவ்வளவு

Koviloor Digital Library

யாகங்களைச் சொல்கிறதோ அதே வேதம் "பிரபஞ்சத்தில் இருக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் அநித்யம்" என்று கூறுகிறது.

நாஸ்த்யக்ருத: க்ருதேன (20.)

என்று கூறப்பட்டுள்ளதன்படி தர்மத்தினால் அழியாத சுகம் என்பது கிடைக்காது. தாற்காலிக சுகமே கிடைக்கும். யாகம் போன்றவைகளினால் என்ன சுகத்தை நாம் சம்பாதிக்கிறோமோ அதே போல் லௌகீகமான செயல்களினால் எவ்வளவு சுகங்களை நாம் பெறுகிறோமோ அவையெல்லாம் புதிதாக உண்டான சுகங்கள்தான். உண்டான எந்த சுகமும் உண்மையான சுகமும் இல்லை. உண்மையாக நிலை பெற்றுள்ள எந்தப் பொருளுக்கும் 'உண்டாதல்' என்பது கிடையாது. எந்தப் பொருள் உண்டானதோ அது

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:

என்ற வகையில் ஒரு நாள் அழிந்து போய்விடும்.

க்ருதேன கர்மணா: அக்ருத: மோக்ஷ: (21.)

என்பதிலிருந்து நித்ய சுகம் இதனால் (கர்மாவினால்) கிடைக்காது என்று கூறப்பட்டிருக்கிறது. நாம் எல்லோரும், 'இன்றைக்கு சுகம் இருக்கட்டும், நாளைக்குப் போய்விட்டாலும் பரவாயில்லை' என்று எதிர்பார்க்க மாட்டோம். 'நிலையான சுகம் இருக்க வேண்டும்' என்றே நாம் நினைக்கிறோம். உலகத்திலேயே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் எந்தப் பொருளை சம்பாதித்து வைத்தாலும்கூட ஒரு நாள் அது போய்விடுகிறது என்பது தீர்மானம். ஆனால் ஆத்மா நித்யமானது என்பதை நாம் சிறிது யோசனை செய்தால் கூட தீர்மானமாகத் தெரிந்து கொள்ளலாம். உலகத்தில் எல்லோரும் எல்லாவற்றையும்கூட விட்டுவிட தயாராக இருப்பார்கள். ஆனால் தன்னை மட்டும் யாரும் விட்டுக் கொடுப்பது என்பது கிடையாது. இந்த சரீரத்தைக்கூட விட்டுவிட ஒருவன் துணியலாம். தான் சுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், கஷ்டம் தாங்க முடியவில்லை என்பதற்காகவும் தன் சரீரத்தை ஒருவன் விட்டுவிடலாம். தான் சுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒருவன் உயிரை விடுவானே தவிர தான்

Koviloor Digital Library

துக்கம் அனுபவிப்பதற்காக யாரும் தற்கொலை செய்து கொள்ள மாட்டார்கள்.

பலருக்கு சிற்சில விஷயங்களில் பிடிவாதம் உண்டு. ஆனால் அது வைராக்யம் ஆகாது. எப்போது விவேகம் நன்றாக வருகிறதோ அப்போதுதான் அவனுக்கு வைராக்யம் வரும். 'அநித்யமாக இருக்கப்பட்ட இந்த உலகத்தில் நான் எதற்காக ருசி வைத்துக்கொள்ள வேண்டும்? நித்யமான ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை நான் பெற்றுக் கொள்வேன்' என்ற வைராக்யம் தானாக வந்துவிடும். விவேகம், வைராக்யம் ஆகிய இந்த இரண்டும் வந்தபின் சமாதி ஷட்க ஸம்பத்தி தானே வரும். முமுக்ஷுத்வமும் ஸபலமாகிவிடும் (கிடைத்துவிடும்).

ஒருவனுக்கு விவேக, வைராக்யம் வருவதற்கே அவகாசம் இல்லையென்றால் அப்பொழுது பரப்ரஹ்ம விசாரத்தை யார்தான் செய்ய முடியும்? ஆனால் சிலருக்கு இயற்கையாகவே வந்துவிடும். சில பேருக்கு நன்றாக பாடுபட்ட பின்னர் வரும். எத்தனை பேர் ஸந்யாஸம் வாங்கத் தயாராக இருக்கிறார்கள்? நம்மைக் கேட்டால் நாம் பயந்து 'ஸந்யாஸம் வேண்டாம்' என்று சொல்வோம்.

நம் பரமாசார்யாள் காலத்தில் ஒருவர் வேதாந்தம் படித்துக் கொண்டிருந்தார். மிகவும் விரக்தராக இருந்தார் அவர். ஆனால் 'நான் ஸந்யாஸம் வாங்க மாட்டேன்' என்று சொன்னாராம். 'ஏன்?' என்று கேட்டதற்கு, "ஸந்யாஸம் வாங்க மாட்டேன், வாங்கினால் வைராக்யம் போய்விடும்; ஸந்யாஸம் வாங்காதிருந்தால் வைராக்யம் இருக்கும்" என்றார். இது உண்மைதான்.

ஸந்யாஸம் வாங்குவதற்கு முன் இருக்கும் அபிமானம் வேறு, அதற்குப் பின் வரும் அபிமானம் வேறு. "ஸந்யாஸம் வாங்குவதற்கு முன்பு மற்றவர்கள் போல் நானும் இருந்தேன். இப்பொழுது அப்படியில்லை. 'நான் பெரியவன்' என்ற அபிமானம் சற்று அதிகமாகிவிட்டது. 'அவன் நமஸ்காரம் செய்யவில்லை', 'இவன் பிக்ஷைக்குக் கூப்பிடவில்லையே' என்றெல்லாம் தோன்றலாம். ஆகவே எனக்கு ஸந்யாஸம் வேண்டாம். நான் இப்படியே இருந்து மற்றவர்களைப் போலவே இருக்கிறேன். அப்படியிருந்தால் எனக்கு ஞானமே இல்லையே என்ற ஒரு தாபமாவது இருக்கும்"

Koviloor Digital Library

என்று சொன்னார். உதாரணத்தில் உள்ளவருக்கு இருந்ததுபோல் அந்த ஸ்திரமான விவேகம் இருந்தால் அப்பொழுது வைராக்யம், சமாதி ஷட்க ஸம்பத்தி எல்லாம் தானாகவே வரும். யாருக்கு ஸாதன ஸம்பத்து உண்டாகவில்லையோ அவர்கள்

ஹரிபதபஜனம் தந்நிவ்ருத்த்யை ப்ரகுர்ம: | (22.)

என்று கூறப்பட்ட வகையில் ஈச்வர ஆராதனை செய்ய வேண்டும். பகவத் கீதையில்,

ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ: (23.)

(தன்னுடைய சரியான கர்மத்தினால் அவனை வழிபட்டு, மனிதன் ஸித்தியை அடைகிறான்.)

'உன்னுடைய வர்ணாச்ரமத்திற்குச் சொல்லப்பட்ட கர்மாக்கள் எவை இருக்கின்றனவோ அவற்றை நன்றாக அனுஷ்டித்துக் கொண்டு வா' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு செய்தால்

ஞானப்ரஸாதேன விசுத்தஸத்த்வ: (24.)

(புத்தியின் ப்ரஸாதத்தால் பரிசுத்த மனமுள்ளவனாவதால்...)

என்பதுபோல் அந்தஃகரணம் என்பது தூய்மையாகிவிடும். அவ்வாறு அது தூய்மையானால் விவேகம் தானே வரும். அப்படி தூய்மையாகாவிட்டால் நாம் எவ்வளவு தடவை வேதாந்தம் வாசித்தாலும்கூட அது கல்லைக் கொண்டு போய் ஸமுத்திரத்திலேயே அமிழ்த்தினாலும் கல் நனையாதது போல் நம்முடைய படிப்பும் பயனற்றதாகிவிடும். ஆனால் அதுவே ஒரு துணியானால் நனையும். கல் அப்படியல்ல.

நிஷ்ணாதோऽபி ச வேதாந்தே வைராக்யம் நைதி துர்ஜன: |
சிரம் ஜலநிதௌ மக்னோ மைனாக இவ மார்தவம் || (25.)

(வேதாந்தத்தில் பண்டிதனாயிருந்தாலும் கெட்ட மனதுடையவன் வைராக்யமடைவதில்லை. (எப்படியென்றால்) மைனாகப் பர்வதம் எவ்வளவு நாட்கள் ஸமுத்திர ஜலத்திலேயே மூழ்கியிருந்தாலும் அது மென்மையாவதில்லை.)

Koviloor Digital Library

என்று கூறப்பட்டது போல் மைனாகப் பர்வதம் எவ்வளவு நாள் கடலில் இருந்தாலும் மிருதுவாகிவிடுமா? அதேபோல் மனத் தூய்மை இல்லாதவன் எவ்வளவு நாள் வேதாந்தம் படித்தாலும் அது அவ்வளவு பலனைத் தராது. பகவானுடைய அருள் இருந்தால் மனம் சஞ்சலத்தை விட்டு விடும். ஸத்வ குணம் அதிகமாகி விடும்.

அதனால் விவேக வைராக்யம் வருவதற்கு அவகாசம் இருப்பதனால் நாம் விமர்சை செய்ய வேண்டும். என்ன விமர்சை என்றால் 'ஆத்ம விசாரம்' செய்ய வேண்டும். ஆத்ம விசாரமும் ப்ரஹ்ம விசாரமும் இரண்டும் ஒன்றுதான்.

சிலருக்கு ஒரு கேள்வி! "ப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்களே, அந்த ப்ரஹ்மாவிற்கு லக்ஷணம் என்ன?" 'ஸத்ய ஞான சுக ஸ்வரூபம்.' இப்படிப்பட்ட ஆத்மாவினுடைய அறிவு இருந்தால் பிறகு நாம் விசாரம் செய்ய வேண்டியதே இல்லை. அந்த அறிவே இல்லை என்றால் நாம் எப்படி விசாரம் செய்வது? ஏதோ ஒரு பொருள் உண்டு என்று தெரிந்தால் அந்தப் பொருளைப் பற்றி விசாரம் செய்யலாம் 'ப்ரஹ்மம் என்று ஒரு பொருள் உண்டு' என்பதே நமக்குத் தெரியாதே. எப்படி விசாரம் செய்வது? அந்தப் பொருள் பற்றித் தெரிந்தால் பிறகு விசாரம் செய்ய வேண்டிய தேவையே இல்லையே!

தத்புனர்ப்ரஹ்ம ப்ரஸித்தமப்ரஸித்தம் வா ஸ்யாத் |
யதி ப்ரஸித்தம் ந ஜிக்ஞாஸிதவ்யம் | (1.6) (1.7)

(அந்தப் பரம்பொருள் ப்ரஸித்தமாகவோ அல்லது ப்ரஸித்தமில்லாததாகவோ இருக்கட்டும். ப்ரஸித்தமில்லாததாக இருந்தால் (அது அறிவதற்கு) விரும்பப்படத் தேவையில்லை.)

அதனால் நாம் ஏன் சாஸ்திர அத்யயனம் செய்ய வேண்டும்? ப்ரஹ்மம் அப்ரஸித்தம் – அதனால் நாம் விசாரம் செய்யவே முடியாது என்று சிலருடைய ஆட்சேபம். இதற்குப் பதிலை இவ்வாறு கூறலாம்.

'எல்லோருக்கும்கூட பரப்ரஹ்மத்தினுடைய அறிவு உண்டு' என்பது நிச்சயம். ஏனென்றால்

ஸர்வோ ஹ்யாத்மாஸ்தித்வம் ப்ரத்யேதி ந
நாஹமஸ்மீதி | (26)

Koviloor Digital Library

(எல்லோருமே 'தான்' இருப்பதை உணர்கிறார்களல்லவா? 'நான் இல்லை' என்று உணர்வது கிடையாது.)

'நீ உள்ளாயா?' என்று யாராவது கேட்டால் 'ஆமாம், நான் உள்ளேன்' என்று ஒருவன் சொல்வானே தவிர 'நான் இல்லை' என்று யாராவது சொல்வதுண்டா? எல்லோரும் 'நான் இருக்கிறேன்' என்றே சொல்வர்.

ஆத்மா ச ப்ரஹ்ம (27.)

(ஆத்மாதான் ப்ரஹ்மம்.)

என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் 'ப்ரஹ்ம ஞானம் எனக்கு இருக்கிறது' என்று ஒருவன் கூறினால் அவனுக்கு ப்ரஹ்மம் உண்டு. (ஆனால் அது எப்படிப்பட்ட ஞானம் என்று இப்போது பார்ப்போம்.)

ஒரு ராஜா தன்னுடைய புத்திரனிடம், 'நான்கு வேதங்களை அறிந்த ஒருவனுக்கு இந்த தானத்தைக் கொடுக்க வேண்டியது' என்று கூறினான். இதைக் கேட்ட பையன், உடனே கையை நீட்டினான். தந்தை அவனிடம் 'என்னடா நீ கையை நீட்டுகிறாய்? என்றைக்கு நீ வேதம் கற்றுக் கொண்டாய்?' என்று கேட்டான். அதற்குப் பையன் 'நீங்கள் கூறியபடியே நான் தெரிந்துகொண்டாகிவிட்டது' என்றான். தந்தை 'என்ன தெரிந்துகொண்டாய்?' என்று கேட்டதற்கு பையன், 'நான்கு வேதங்கள் என்று சொன்னீர்களே, வேதங்கள் நான்கு என்று நான் தெரிந்துகொண்டாகிவிட்டது' என்றான். அதேபோல்தான் நாமும்கூட பரப்ரஹ்மத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன: । (2.29)

(என்னுடைய ஓர் அம்சமானது, ஜீவர்களின் உலகத்தில் நிலையான ஜீவன்.)

என்று கூறப்பட்டதுபோல் பகவானுடைய ஓர் அம்சம்தான் ஜீவன். ஸமுத்திரத்திலிருந்து ஒரு குடம் தண்ணீரை எடுத்து தனியாக வைத்துவிட்டால் அது ஸமுத்திரமாகுமா? ஸமுத்திரமாகாது. ஆனால் ஸமுத்திரமில்லாமல் நாம் அந்தத் தண்ணீரைத் தனியாக வைக்க முடியுமா? முடியாது. ஆனால் ஸமுத்திரத் தண்ணீரானாலும்

Koviloor Digital Library

குடத் தண்ணீரை ஸமுத்திரம் என்று சொல்ல மாட்டோம். அதேபோல் நாம் பரப்ரஹ்மத்தைத் தவிர வேறில்லை. ஆனாலும் அவித்யா ஆவரணத்திற்கு (மறைப்புக்கு) உட்பட்டதால் ஜீவன் என்று பெயர் வைத்துக் கொண்டாகி விட்டது. ஜீவன் என்று ஆனவுடன் எந்தெந்த அறிவுகள் வரும் தெரியுமோ? சரீரம்தான் ஆத்மா என்று சில பேருக்குத் தவறான அறிவு. சிலருக்கோ மனதுதான் ஆத்மா என்ற தவறான அறிவு. வேறு சிலருக்கு இந்திரியங்கள் தான் ஆத்மா என்ற தவறான அறிவு. இன்னும் சிலருக்கு, 'சரீரத்திற்கு அப்பால் ஆத்மா ஒன்று உண்டு; ஆனால் அதற்கு சுகமுண்டு, துக்கமுண்டு. எத்தனையோ பிரபஞ்சங்கள் உண்டு' என்ற தவறான அறிவு உண்டு. ஆனால் உண்மையில் நாம் தெரிந்து கொண்டிருக்கும் ஜீவனுடைய ஸ்வரூபம்தான் ப்ரஹ்மம். குடத்துத் தண்ணீரை நாம் ஸமுத்திரத்தில் கொட்டினால் அப்பொழுது இந்தக் குடத்திலிருந்த தண்ணீர் என்ன ஆகும்? ஸமுத்திரமாகுமே தவிர வேறு ஒன்றும் ஆகாது.

மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே (17.)

(என்னை மட்டும் நாடியவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள்.)

என்றும்,

பக்த்யா மாமபிஜானாதி யாவான் யச்சாஸ்மி தத்த்வத: | (28.)

(பக்தியில் என்னை உண்மையினால், 'நான் யார், என்ன' என்று அவன் அறிகிறான்.)

என்றும் பகவான் கீதையில் கூறுகிறான். முதலில் பக்தி மார்க்கத்தில் இருந்து, சித்தத்தை தூய்மையாக்கிக் கொண்டு, சிரவண, மனன, நிதித்யாஸனங்களைச் செய்தால் அப்பொழுது,

ஸமுத்ர இத்யேவம் ப்ரோச்யதே நாமரூபே விஹாய | (29.)

என்பது போலாகிவிடும். ஆத்மா எங்கும் இருப்பவன். எங்கும் இருக்கப்பட்ட வஸ்துவான ஆத்மாவைத்தவிர வேறு வஸ்துவே கிடையாது. அதை எப்போது தெரிந்து கொள்ள முடியும் ? யார் ப்ரஹ்மவித்தோ அவர்தான் தெரிந்து கொள்ள முடியும்.

Koviloor Digital Library

நாவேதவின்மனுதே தம் ப்ருஹந்தம் (30.)

(அந்தப் பரம்பொருளை வேதமறியாதவன் சிந்திப்பதில்லை.)

தெரிந்து கொண்ட பிறகு, அவர் வேறு, ப்ரஹ்மம் வேறா? என்றால்

ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி (31.)

(ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகி விடுகிறான்.)

என்று கூறப்பட்டிருக்கிறது. எப்படி ஸமுத்திரத்தினுடைய தண்ணீர் குடத்தில் வைத்திருக்கும்போது தனியாக இருந்தாலும், ஸமுத்திரத்தில் போட்ட பிறகு அது மீண்டும் ஸமுத்திரமாகி விடுகிறதோ அதேபோல் ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகி விடுகிறான்.

அதனால் மனிதன் தன்னுடைய ஸ்வரூபத்தைத் தான் தெரிந்து கொண்டு கடைத்தேற வேண்டியது கடமை என்பது வேதாந்த சாஸ்திரத்தின் கருத்து. ஆனால் நாமெல்லாம் இந்த அதிகார ஸம்பத்து உள்ளவர்களா, நாமெல்லாம் வேதாந்த சாஸ்திரம் படிக்கலாமா என்ற கேள்விகள் நமக்கு எழும்.

எல்லோரும் கூட I.A.S. தேர்வில் தேர்ச்சியடைய மாட்டார்கள். ஆனாலும் இந்த துவக்கப் பாடம், நடுநிலைப் பாடம், மேல்நிலைப் பாடம் என்று அதிலும் பல பிரிவுகள் உண்டு.

நம் தகுதிக்குத் தகுந்த பட்டத்தை நாம் பெறலாம். இதே போல் நாமும் இந்த வேதாந்த சாஸ்திரம் வாசித்து ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுக் கொள்ள முடியும். வேதாந்த சாஸ்திரத்தை ஒருவன், உத்தமமான அதிகாரியானாலும் மத்தியமான அதிகாரி ஆனாலும்,

தினே தினே ச வேதாந்த ச்ரவணாத் பக்திஸம்யுதாத் | (1.35)

(தினந்தோறும் பக்தியோடு கூடிய வேதாந்த ச்ரவணம் செய்தால் (ஒருவன் மேன்மை அடைவான் !))

என்று கூறப்பட்டது போல் தினமும் வேதாந்த விசாரம் பண்ணிக் கொண்டிருந்தால் அதுவே ஒரு தபஸ். தபஸுக்கு பலன்

Koviloor Digital Library

பாப நிவிருத்தியாகும். பாப நிவிருத்தியினால் சித்த சுத்தி, பிறகு சித்த சுத்தியினால் தியானம் தானே வரும். ஆகவே வேதாந்த சாஸ்திரம் ஸாதனமாக இருப்பதினால், சிறிதளவிற்காவது ஆத்ம விசாரம் பண்ண வேண்டும்.

ஞாத்வா தேவம் ஸர்வபாசாSபஹானி:
நான்ய: பந்த்தாச்சேதி பூயோவசோபி: ।
ஞப்தே: ஸாக்ஷான்முக்தி ஹேதுத்வஸித்தௌ
அத்யாஸத்வம் பந்தனஸ்யாSர்த்தஸித்தம் ॥ (32.)

(அந்தப் பரம்பொருளை அறிந்தால் எல்லாவிதமான பந்தங்களும் நாசமாகின்றன. வேறு வழியில்லை முக்திக்கு. இதைப் போன்ற பல வேதாந்த வார்த்தைகளினால் ஞானம் மோக்ஷத்திற்கு நேரடி காரணம் என்று தெரிவதால் அர்த்தாபத்தி ப்ரமாணம் மூலமாக பந்தத்தின் தோற்றமான தன்மை தெரியும்.)

(குண்டாயுள்ள தேவதத்தன் பகலில் சாப்பிடுவதில்லை என்பதிலிருந்து இரவில் சாப்பிடுகிறான் என்று அறிவது அர்த்தாபத்திப் ப்ரமாணம் எனப்படும்.)

என்று கூறப்பட்டது போல் நாம் எவ்வளவு கர்மாக்களைச் செய்தாலும் கூட எவ்வளவு பகவத் பக்தி கொண்டாலும் கூட ஆத்ம ஸ்வரூபம் தெரிந்து கொள்ளாமல் இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை கிடையாது. ஏன் கிடையாதென்றால், பவபந்தம் என்பது உண்மையானால் அதற்கு ஏதாவது கர்மா செய்தால் அதிலிருந்து விடுதலை வரலாம். ஆனால் பவபந்தம் என்பது உண்மையே அல்ல.

ஆவித்யோ ஹ்யேஷ பந்த: விரமதி ந விநா வேதனம் கர்மஜாலை: (33.)

(இந்த பந்தம் அவித்யையினால் ஏற்பட்டதுதான். அது ஞானமில்லாமல் கர்மாவினால் விலகுவதில்லை.)

இது அவித்யையினால் ஏற்பட்டது. அவித்யையினால் ஏற்பட்டது பொய்யே ஆகும். இது பொய் என்பது நமக்குத் தெரியப்படுத்த சாஸ்திரமும் அனுபவமும் உண்டு. அதனால்தான்

Koviloor Digital Library

சாஸ்திரத்தில், '*ஞாத்வா தேவம் ஸர்வபாசாஊபஹானி:*' என்று கூறப்பட்டுள்ளது.

யதா சர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மானவா: |
ததா தேவமவிக்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி || (34.)

(எப்போது மனிதர்களால் ஆகாசத்தைப் பாயைச் சுருட்டுவது போல் சுருட்ட முடியுமோ அப்போதுதான் அந்த தேவனைத் தெரிந்து கொள்ளாமலேயே துக்கத்திற்கு முடிவு ஏற்படும்.)

ஆத்ம ஸ்வரூபத்தைப் புரிந்து கொள்ளாமல் இருந்தாலும் கூட ஒருவனுக்கு மோக்ஷம் கிடைக்க வேண்டுமானால் ஒருவன் ஆகாசத்தைப் பாயைச் சுற்றி வைப்பது போல் சுற்றி வைத்தால் தான் முடியும் என்று கூறப்பட்டுள்ளது. கைக்கு கிடைக்காத ஆகாசத்தைச் சுற்றி வைக்க முடியுமா? முடியவே முடியாது. அதனால்

ஞாத்வா தேவம் ஸர்வபாசாஊபஹானி:
நான்ய: பந்த்தாச்சேதி பூயோவசோபி: |
ஞப்தே: ஸாக்ஷான்முக்தி ஹேதுத்வஸித்தௌ

என்பதிலிருந்து முக்திக்கு ஸாதனமாக ஆத்ம ஸ்வரூபத்தின் அறிவு (ஞானம்) ஒன்றுதான் இருக்கிறது என்று தெரிகிறது. அதனால், நமக்கு ஏற்பட்ட பந்தம் கல்பிக்கப்பட்டது. இதைப் போக்க ஞானம்தான் வழி. இந்த ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியது நமது கடமை. சங்கரபகவத்பாதர்,

துர்லபம் த்ரயமேவைதத் தைவானுக்ரஹ ஹேதுகம் |
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷஸம்ச்ரய: || (35.)

(மிகுந்த சிரமப்பட்டுக் கிடைக்கக்கூடிய மனிதத் தன்மை, மோக்ஷத்தில் தீவிர விருப்பம், பெரியோர்களை ஆசிரயித்தல் ஆகிய மூன்றும் தைவத்தின் (கடவுள் அல்லது முன் செய்த புண்ணியத்தின்) கிருபை என்ற காரணம் இருந்தால்தான் கிடைக்கும்.)

என்று கூறியுள்ளார்.

இத: கோன்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்த்தே ப்ரமாத்யதி |
துர்லபம் மானுஷம் தேஹம் ப்ராப்ய தத்ராபி
பௌருஷம் || (1.34)

Koviloor Digital Library

உத்தமமாயிருக்கப்பட்ட மனித ஜன்மா வந்து, அதிலும் புருஷன் என்று சொல்லிக் கொள்கிற அவகாசம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நாம் ஞானத்திற்கு ஸாதனை செய்யாமல், ஸாமான்யமான விஷயங்களில் பற்று வைத்துக்கொண்டு, அவையே ஸத்யம் என்று பிரமித்துக் கொண்டிருந்தால், இதைக் காட்டிலும் மூடத்தனம் என்ன உண்டு? அந்த மூடத்தனத்தை விட்டு, விவேகியாக இருக்க வேண்டும் என்று சங்கரர் உபதேசம் செய்துள்ளார். அம்மாதிரி நடப்பதற்கு பகவான் எல்லோருக்கும் சக்தி கொடுத்து ஆத்ம ஞானத்தை அடைவதற்கு பகவான் அனுக்ரஹம் செய்யட்டும் என்று பிரார்த்தனை செய்து இந்த பாஷணத்தை முடிக்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

12. பரம்பொருளின் லக்ஷணம்

யஸ்மாத்விச்வமுதேதி யத்ர நிவஸத்யந்தே யதப்யேதி யத்
ஸத்யக்ஞானஸுகஸ்வரூபமவதித்வைதப்ரணாசோஜ்ஜிதம் ।
யஜ்ஜாக்ரத்ஸ்வபனப்ரஸுப்திஷு விபாத்யேகம் விசோகம் பரம்
ப்ரத்யக்ப்ரஹ்ம ததஸ்மி யஸ்ய க்ருபயா தம் தேசிகேந்த்ரம் பஜே ॥

(எதிலிருந்து இந்த உலகம் தோன்றியதோ, எதில் இவ்வுலகம் இருக்கிறதோ மற்றும் எதில் இவ்வுலகம் லயமடைகிறதோ, எது ஸத்யம், ஞானம் மற்றும் ஆனந்த வடிவாக இருக்கிறதோ, எது எல்லை, இருமை மற்றும் அழிவு முதலியவை இல்லாமல் இருக்கிறதோ, எது விழிப்பு, ஸ்வப்னம் மற்றும் ஆழ்ந்த உறக்கம் ஆகிய அவஸ்தைகளில் விளங்கிக் கொண்டிருக்கிறதோ, அந்த ஒன்றே ஒன்றான, துயரமற்ற, உத்தமமானதுமான எதுவோ அந்த பரம்பொருளே நான் என்று எவருடைய கருணையினால் (உணர்ந்து கொண்டு) இருக்கிறேனோ அத்தகைய உயர்ந்த குருவை வணங்குகிறேன்.)

வியாச பகவான் ப்ரஹ்ம ஸூத்ரங்களில் முதலாவது ஸூத்ரமாக,

அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா (1.)

என்ற ஸூத்ரத்தை அளித்து அதன் மூலமாக யார் ப்ரஹ்ம விசாரம் செய்வதற்குத் தகுதி பெற்றவர்கள் என்பதைக் கூறினார்.

ப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்டுமென்றால் எவ்வாறு செய்வது? ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபம் (லக்ஷணம்) என்ன என்பது பற்றி, (ஸ்வாராஜ்யஸித்தியில் வரும்) சுலோகம் ஒன்று விளக்கம் தருகின்றது.

ஜன்மாத்யஸ்ய யத: (2.)

(இதனுடைய ஜன்மம் முதலியவை எதிலிருந்தோ...)

என்ற ப்ரஹ்ம ஸூத்ரத்தின் இரண்டாவது ஸூத்ரத்திற்குப் பாஷ்யம் எழுதுகையில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாள், "ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் என்ன?" என்று ஒரு கேள்வியை முதலில் கேட்டு, அதற்கான பதிலையும் தாமே கொடுத்திருக்கிறார். (அதன் சாராம்சம்:)

Koviloor Digital Library

ஜன்மாதி அஸ்ய பரித்ருச்யமானஸ்ய ப்ரபஞ்சஸ்ய
யத: யஸ்மாத் காரணாத் ஸர்வக்ஞாத்
ஸர்வசக்தாத் பவதி தத் ப்ரஹ்ம | (3.)

அதாவது பார்க்கப்படும் இந்த உலகின் படைப்பு போன்றவை எந்த எல்லாமறிந்த, எல்லாம் வல்ல ஒரு காரணத்திலிருந்து ஏற்படுகிறதோ அது ப்ரஹ்மம்.

ப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்டுமானால், ப்ரஹ்மம் எது என்று தெரிந்தபின்தானே செய்ய முடியும்? ஆகவே

யஸ்மாத் ஜன்மஸ்த்திதிபங்க: ... (4.)

(எங்கிருந்து(உலகத்தின்) படைப்பும், காத்தலும், அழிவும்...)

என்று கூறப்பட்ட வகையில் அந்த ப்ரஹ்மத்தைப் பற்றி உலகத்தின் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் ஆகிய மூன்றும் ஒரே சைதன்யத்தினால்தான் ஏற்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இன்னொரு கேள்வி. ப்ரஹ்மம் என்பது குணமும் வடிவமும் இல்லாதது. அதற்குப் படைத்தல் முதலான லக்ஷணங்களைச் சொல்லுகிறீர்களே என்று கேட்டால், லக்ஷணங்கள் இருவிதம் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதற்கு சாஸ்திரங்களில் கூறப்படும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். தேவதத்தன் என்று ஒரு மனிதன் இருந்தான். அவனுடைய வீடு எங்கே இருக்கிறது என்று கேட்கையில் "அதோ, அந்த காக்கை உட்கார்ந்திருக்கிறதே அதுதான் தேவதத்தனுடைய வீடு" என்று ஒருவன் கூறினான். அந்த மனிதன் அந்த வீட்டைப் போய்ப் பார்க்கையில் காகம் அங்கு இல்லை. ஆனால் அது தேவதத்தனுடைய வீடுதான். இதுபோன்ற லக்ஷணம் கூறுவதற்கு 'தடஸ்த லக்ஷணம்' என்று சாஸ்திரத்தில் பெயர் சூட்டப் பட்டிருக்கிறது. நாம் புரிந்துகொள்ளும் வரை அந்த லக்ஷணம் இருக்கும். ஆனால் நாம் அந்த விஷயத்தைப் புரிந்து கொண்டவுடன் அந்த லக்ஷணம் அங்கு இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அதற்குத்தான் 'தடஸ்த லக்ஷணம்' என்று பெயர். எவ்வாறு மேற்கூறிய உதாரணத்தில் வீடு கண்டுபிடிக்கப்பட்ட பின்பும் காகம் அங்கேயே

Koviloor Digital Library

இருக்க வேண்டுமென்பதில்லையோ அதேபோல்தான் மற்ற விஷயங்களிலும் தடஸ்த லக்ஷணம் இருக்கிறது.

சைத்ரன் - அதாவது ஒரு மனிதனை நாம் வர்ணனை செய்யலாம். மற்றொருவன் பார்க்கும் சமயத்திலும் அவன் அப்படியேதான் இருப்பான். "அவன் நேற்று பார்ப்பதற்கு கருப்பாக இருந்தான்; இன்று சிவப்பாக மாறிவிட்டான்" என்பது கிடையாது. அதேபோல் "நேற்று அவனுக்கு இரண்டு கண்கள் இருந்தன; இன்று பார்க்கும்போது ஒரே கண் ஆகிவிட்டது" என்றும் அவன் மாறுவது கிடையாது. இத்தகைய லக்ஷணங்கள் அவனுக்கு எப்போதும் இருப்பவை. அதாவது லக்ஷ்யம் (குறிக்கப்படும் பொருள்) எதுவரை இருக்குமோ அதுவரை லக்ஷணமும் இருக்கும். அவற்றிற்கு 'ஸ்வரூப லக்ஷணம்' என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்த இரண்டு லக்ஷணங்களும் ஒரு பொருளுடைய ஸ்வரூபத்தைத் தெரியப்படுத்துவதற்காகத்தான் இருக்கின்றன.

யத: ஸர்வக்ஞாத் ஸர்வசக்தே: காரணாத் பவதி தத் ப்ரஹ்ம

((உலகின்) ஜன்மம் முதலியவை எந்த எல்லாமறிந்த, எல்லாம் வல்ல, ஒரு காரணத்திலிருந்து ஏற்படுமோ அது ப்ரஹ்மம்.)

என்கிறது சாஸ்திரம்.

இக்கருத்தை மனதில் வைத்துக்கொண்டு,

யஸ்மாத்விச்வமுதேதி யத்ர நிவஸதி அன்தே யதப்யேதி யத்

(எங்கிருந்து அனைத்துலகமும் உண்டாகின்றதோ, எங்கு இருக்கின்றதோ, எங்கு லயமடைகின்றதோ)

என்று (நாம் எடுத்துக்கொண்ட) சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த உலகமெல்லாம் தோன்றி, அவை இருந்து, பிறகு அழிவடைவதற்குக் காரணமாக இருப்பது அந்த சைதன்யம்தான் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று அந்த மேற்கோளில் கூறப்பட்டிருக்கிறது. அதை மனதில் வைத்துக்கொண்டு எந்த ஈச்வரனால் இந்த அனைத்து உலகமும் படைக்கப்பட்டு

Koviloor Digital Library

இருக்கிறதோ, எந்த ஈச்வரனால் இந்த உலகமனைத்தும் காக்கப்பட்டு வருகின்றதோ, கடைசியாக யாரிடத்தில் இந்த அனைத்துலகமும் அடங்கிவிடுமோ அதை ப்ரஹ்மம் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இந்த மூன்றும் ஒரே பொருளில்தான் இருக்க வேண்டும். இவ்வாறில்லாமல் வேறு வேறு பொருட்களில் இருந்தால் உலகத்தின் படைப்பிற்கு ஒன்று காரணம், அது காக்கப்படுவதற்கு வேறொன்று காரணம் என்று இரண்டு மூன்று காரணங்களாகிப் பிறகு அத்வைத மதமே - அத்வைத தத்துவமே இல்லாமற் போய்விடும்.

ஆனால் நாம், ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன் என்றெல்லாம் வேறு வேறாகக் கூறுவோமே என்றால், ஒன்றுதான் சைதன்யம். ஆனால் அந்த ஒரே சைதன்யமே பலவிதமான ரூபங்களில் தோன்றும். இவ்வாறு கூறுவதினால் அத்வைதத்திற்கு எந்தவிதமான எதிர்ப்பும் இல்லை என்பது சாஸ்திர சித்தாந்தம்.

யஸ்மாத்விச்வமுதேதி யத்ர நிவஸத்யந்தே யதப்யேதி யத்

எவ்வாறு காக்கை உட்கார்ந்திருக்கும் வீடு தேவதத்தனுடைய வீடு என்று சொல்வோமோ அதேபோல் இந்த உலகம் ப்ரஹ்மத்தில் கல்பிதம் (கற்பனை செய்யப்படுகிறது) என்று சொல்வோம் நாம். காக்கை எப்போதும் அங்கு உட்கார்ந்திருக்காது. அதேபோல் பரப்ரஹ்மத்தில் கல்பிதமானது உலகம் என்று சொன்ன பிறகு ஜகத்தின் ஹேதுத்வம் (காரணத்தன்மை) அதில் (ப்ரஹ்மத்தில்) எப்போதுமே இருக்குமா என்றால், (ஜகத்தின் ஹேதுத்வமே இல்லாதிருக்கும்போது), ஹேதுத்வம் எப்படி ஸ்வரூப லக்ஷணம் ஆகும்? அது தடஸ்த லக்ஷணம் ஆகும்.

உண்மை நிலை என்ன? உலகத்தைப் பற்றிப் பேசும்போது ப்ரஹ்மத்திற்கு ஜகத் கர்த்ருத்வம் (உலகின் படைப்பிற்குக் காரணம்) ஸித்தமாகிறது. ஆனால் ப்ரஹ்மஞானம் அடைந்து தன்னுடைய உண்மையான ஸ்வரூபம் எது என்று தெரிந்து கொண்டவர்களிடம், ப்ரஹ்ம லக்ஷணம் ஜகத் காரணத்வமா என்று கேட்டால் அவர்களுடைய பார்வையில் உலகம் என்பதே கிடையாது. ஆகவே ஜகத் காரணத்வம் என்பது ப்ரஹ்மத்திற்கு எப்போதுமிருக்கும் லக்ஷணம் என்று கூற முடியாது.

Koviloor Digital Library

ப்ரஹ்மத்தைப் பற்றி,

ஸத்யஞானஸுகஸ்வரூபம் (5.)

(நிலையானது- அறிவு வடிவமானது - இன்ப வடிவமானது)

என்று கூறப்பட்டிருக்கிறது. இதுவே ப்ரஹ்மத்தின் ஸ்வரூப லக்ஷணம் எனப்படுகிறது. ஸ்வரூப லக்ஷணம் என்றால் என்ன? குறிக்கப்படும் பொருளை ஸ்வரூப லக்ஷணம் என்பது ஒரு போதும் விடாது. ஸ்வரூப லக்ஷணம், பொருள் இருக்கும்வரை இருந்துகொண்டேதான் இருக்கும். ப்ரஹ்மத்தைக் குறிக்கும்போது "ஸத்ய ஞான ஸுக ஸ்வரூபம்" என்பது அதன் ஸ்வரூப லக்ஷணம் என்று கூறப்படும்.

உலகத்தில் எத்தனையோ வகையான ஸத்யங்கள் (உண்மைகள்) உண்டு. ஆனால் எல்லாவிதமான ஸத்யங்களுக்கும் மேலான ஒரு ஸத்யம் உண்டு. பரம்பொருள்தான் மிக உயர்ந்த ஸத்யம் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஒருவனுக்குப் பத்து வயது என்று யாராவது சொன்னால் அவனைவிடப் பெரியவனாக இருக்கும் இருபது வயதுக்காரனை நாம் காட்டலாம். அதற்கும் மேலே பெரியவனாக இருக்கும் முப்பது வயதுக்காரனும் இருப்பான். ஆனால் படைப்புத் தொழிலைச் செய்யும் ப்ரஹ்மாவிற்கோ வயது மிக அதிகம். இவ்வாறு நாம் வயதுகளைப் பிரித்துச் சொல்வது போல் ஸத்யத்திலும் தரங்கள் இருக்கின்றன. ப்ரஹ்மம் என்பதுதான் உத்தமமான ஸத்யம்.

த்ரிகாலாபாத்யத்வம் ஸத்யத்வம் (6.)

(முக்காலங்களிலும் அழியாமலிருப்பது ஸத்யம்.)

என சாஸ்திரம் கூறுகிறது.

ஒரு பொருள், முன்பு இருந்ததில்லை என்ற வாக்கியத்திற்கும் இடமாகக் கூடாது, இப்போது இல்லை என்ற வாக்கியத்திற்கும் அது இடமாகக் கூடாது. இனி இருக்கப் போவதில்லை என்ற வாக்கியத்திற்கும் இடமாகக் கூடாது. உலகில் இது போன்ற தகுதிகளுள்ள பொருட்களை நாம் பார்க்க முடியாது. உலகத்தில்

Koviloor Digital Library

நம்மிடம் இருந்த பொருட்கள் பல இப்போது நம்மிடம் இல்லை. இப்போதுள்ள பொருட்கள் பல முன்னே இருந்ததில்லை. வருங்காலத்திலும் இவை இருக்கப்போவதில்லை. ஆகவே முக் காலங்களிலும் இல்லை என்ற ஒரு வார்த்தைக்கு எந்தப் பொருள் இடமாகாதோ அந்தப் பொருள்தான் ஸத்யம் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. சைதன்யம் 'முன்பு இருந்ததில்லை' என்று கிடையாது. 'இப்போது இல்லை' என்பதும் கிடையாது. 'நாளை இருக்கப் போவதில்லை' என்றும் கிடையாது. ஆகவேதான்

த்ரிகாலாபாத்யத்வம் ஸத்யத்வம்

என்று கூறப்பட்டுள்ளது. இந்த லக்ஷணம் எப்போதுமே பரம்பொருளில் இருந்து கொண்டிருக்கும். இன்னொரு பொருளை எதிர்ப்பார்த்து இந்த லக்ஷணம் இல்லை.

ஜகத்காரணம் ப்ரஹ்ம

(உலகிற்கு காரணமான தன்மை)

"ஜகத்காரணத்வம் பரம்பொருளின் லக்ஷணம்" என்று சொன்னால் உலகம் என்பதை அடிப்படையாக வைத்துத்தான் அந்த லக்ஷணம் சொல்லப்படுகிறது. உலகத்தை வைத்துக் கொண்டு நாம் ஒரு ல்க்ஷணத்தைச் சொன்னால் உலகம் இருக்கும் வரைதான் அந்த லக்ஷணத்தைச் சொல்ல முடியும். உலகம் இல்லாவிட்டால் ப்ரஹ்மம் உலகத்திற்குக் காரணம் என்று நாம் கூற முடியாது. ஆனால்,

த்ரிகாலாபாத்யத்வம்

என்பதை 'தடஸ்த லக்ஷணமாக' நாம் கூற முடியாது. முக்காலங்களிலும் இருக்கப்பட்ட லக்ஷணம் ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூப லக்ஷணமாகும். ஆகவே எப்போதும் ப்ரஹ்மம் சாச்வதமாக இருக்கும் என்றுதான் பொருள். 'எப்பொழுதும்' என்ற வார்த்தையை காலவரைக்குட்பட்ட நமது பிறப்பை மனதில் வைத்துக்கொண்டு நாம் சாதாரணமாக உபயோகிப்போம். ஆனால் 'ப்ரஹ்மம் எப்போதும் உண்டு' என்ற இடத்தில் ப்ரஹ்மத்தின் இருப்பிற்குக் காலவரையறை கிடையாது என்று பொருள். அது இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் இருக்கப்பட்டது. ஒரு

Koviloor Digital Library

பொருள் இருந்தாலும் அது இருக்கிறது என்று ஒருவருக்கும் அறிவே இல்லாமல் இருந்தால், அப்போது பொருள் உண்டு என்று எவ்வாறு கூற முடியும்? இந்த அனைத்து உலகமும்கூட எப்போது ப்ரஹ்மத்தினால் கல்பிதமாகி இருக்கிறதோ, அப்போது அந்த ப்ரஹ்மத்தினுடைய அறிவு படைப்பவனுக்காவது இருக்கிறதா இல்லையா? சூரியன் ஸ்வப்ரகாசமாய் (தானே ப்ராகாசிப்பவனாக) இருக்கிறான். சூரியனைப் பார்ப்பதற்கு நமக்கு வேறு எந்த தீபமும் வேண்டாம். அதே சமயம் வேறு ஏதாவது ஒரு பொருளைப் பார்க்க வேண்டுமென்றால் நாம் சூரியனுடைய உதவியை நாடுகிறோம். ஒருவனுக்குக் கண் இருந்தால் அவன் சூரியனைப் பார்க்க முடியும். அந்த ஒன்றுதான் வேண்டும். அதேபோல் இந்த பரப்ரஹ்மம் என்பது தானே பிரகாசிப்பது. இது பிரகாசம் கொடுப்பதாக இருப்பதால், இது அறிவு ஸ்வரூபமாகும். நாம் இருந்தால் அதுவும் இருக்கும். அதைக் காணத் தனிப்பட்ட பொருள் ஒன்றும் வேண்டாம். ஆகவே அறிவு ஸ்வரூபமானது என்ற லக்ஷணம் ஸ்வரூப லக்ஷணம் ஆகும். தடஸ்த லக்ஷணம் இல்லை.

அடுத்ததாக 'ஸுக ஸ்வரூபம்' என்பது கூறப்பட்டுள்ளது. நாம் உலகத்தில் எப்பொழுதும் சுகமாக இருக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறோம்.

ஏதஸ்யைவ ஆனந்தஸ்ய அன்யானி பூதானி மாத்ராமுப ஜீவந்தி (1.29)

(இந்த ஆனந்தத்தின் ஒரு துளியை வைத்துக்கொண்டுதான் மற்ற எல்லாப் பிராணிகளும் ஜீவிக்கின்றன.)

என்றும்,

யஸ்மின் நித்யஸுகாம்புதௌ கலிததீ: ப்ரஹ்மைவ ந ப்ரஹ்மவித் (8.)

(நிலையான இன்பக் கடலில் மனம் ஒன்றிப் போனவன் ப்ரஹ்மத்தை அறிந்தவன் மட்டுமல்ல; அவன் ப்ரஹ்மமே ஆகியுள்ளான்.)

என்றும் கூறப்பட்டிருப்பதால் இந்திரன் முதலியவர்கள் ஏதாவது இன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்றால் அதுவும் அந்த

Koviloor Digital Library

ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தின் ஒரு துளியே ஆகும் என்று வருகிறது. ப்ரஹ்மம் என்பது அப்படிப்பட்ட ஓர் ஆனந்த ஸ்வரூபமாகும். ஆனந்த ஸ்வரூபத்திற்கு எப்பொழுதுமே அழிவு கிடையாது. ஆகவே அதுவும்கூட ப்ரஹ்மத்தினுடைய லக்ஷணம் என்று கூறப்பட்டிருக்கிறது. மேற்கூறப்பட்ட மூன்று லக்ஷணங்களும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் சொல்லும்பொழுது இந்த மூன்றையும் ஒன்றே ஒன்றாகத்தான் கூறுவர். தனித் தனியாகக் கூறமாட்டார்கள். ஆனால் ஸ்வரூபத்தை அறிந்து கொள்வதற்கு நாம் மூன்றையும் இவ்வளவு விளக்கமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் 'ஸத்ய ஞான ஸுக ஸ்வரூபம்' என்று கூறப்பட்டுள்ளது.

அவதித்வைதப்ரணாசோஜ்ஜிதம் (9.)

(எல்லை, இருமை மற்றும் அழிவு இல்லாதது.)

உலகத்தில் நாம் காணும் ஒவ்வொரு பொருளுக்கும்கூட ஓர் அவதி (எல்லை) என்பது உண்டு . "ஒரு பொருள் இரண்டடி உண்டு ; நான்கு அடி உண்டு ; பத்தடி உண்டு ; இதற்கு மேல் கிடையாது" என்றெல்லாம் நாம் கூறுவோம். காலத்தினால் ஓர் எல்லையைப் பரம்பொருளிற்கு விதிக்க முடியாது என்பதை நாம் பார்த்தோம். 'தேசத்தினால்' அதாவது இடத்தினாலும்கூட பரப்ரஹ்மத்திற்கு எந்த ஓர் அளவும் கிடையாது. ஏனென்றால் பரம்பொருளானது எல்லா இடத்திலும் வியாபித்திருக்கிறது. "ஒரு பொருள் இந்த இடத்தில் இருக்கிறது; இன்னொரு இடத்தில் இல்லை" என்றால் அந்தப் பொருளிற்கு இடத்தினால் அளவு இருக்கிறது என்று நாம் கூறுவோம். ஆனால் பரம்பொருளிற்கு எந்தவிதமான அளவும் கிடையாது.

பாதோऽஸ்ய விச்வா பூதானி । த்ரிபாதஸ்யாம்ருதம் திவி (10.)

(உலகம் யாவும் பரம்பொருளுடைய ஒரு பாகமேயாகும். பரம்பொருளுடைய முக்கால் பாகமானது அழிவற்றதாக இருந்து...)

என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது இந்த உலகத்தில் உள்ள அனைத்துமே ப்ரஹ்மத்தினுடைய ஒரு துளிதான் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே இடம் என்கிற கருத்துக்கூட

Koviloor Digital Library

நாம் உலகத்தை பார்க்கும்பொழுதுதான் ஏற்படுகிறது. உலகம் இல்லாத சமயத்தில் அத்தகைய கருத்து இல்லை.

ந தஸ்ய ப்ரதிமாऽஸ்தி (11.)

என்று கூறப்படுவது போல் இந்த ப்ரஹ்மத்திற்கு உவமை என்பதே கூற முடியாது. அது பெரிய பொருள் என்று நாம் கூறினால் "அது எவ்வளவு பெரிய பொருள்?" என்று ஒருவன் கேட்க முடியாது. ஏனென்றால் அதைவிடப் பெரிய பொருள் கிடையவே கிடையாது. அவதி (வரையறை) என்றால் என்ன? ஒரு பொருள் ஓரிடத்தில் இருக்கிறது, இன்னொரு இடத்தில் இல்லை என்றால் அது இடத்தினால் வரையறுக்கப்பட்ட பொருள் என்று ஆகிவிடும். ஒரு சிறிய குடம் இந்த இடத்தில் இருக்கிறது. வேறு இடத்தில் அது இல்லை. ஆகவே குடம் இடத்தினால் வரையறுக்கப்பட்ட பொருள் என்கிறோம். ஆனால் பரம்பொருளிற்கு இதுபோன்று வரையறை கிடையாது.

அவதித்வைதப்ரணாசோஜ்ஜிதம்

(எல்லை, இருமை மற்றும் அழிவில்லாதது.)

என்று கூறப்பட்டுள்ளது.

த்வைதம் என்றால் என்ன என்பதை இப்பொழுது பார்ப்போம். சாஸ்திரத்தில் "*வஸ்துத: பரிச்சேத்யத்வம்*" என்ற ஒரு விஷயம் பேசப்படுகிறது. ப்ரஹ்மம் மற்றொரு பொருளினால் அடக்கப்பட்டதல்ல என்று கூறப்பட்டுள்ளது. "இது ப்ரஹ்மம், இது ப்ரஹ்மம் இல்லை" என்று நாம் எந்தப் பொருளையும் பார்த்துச் சொல்ல முடியாது. ப்ரஹ்மத்தின் ஸத்தை (இருப்பு) தான் உலகத்திலே நிலையான ஸத்தை (இருப்புத்தன்மை) என்று முன்பே கூறினோம். ஆகவே ப்ரஹ்ம ஸத்யத்தைத் தவிர வேறு எந்த ஸத்தும் இல்லாதிருக்கப்பட்ட பொழுது உலகத்தில் பரம்பொருளைத் தவிர வேறு எந்தப் பொருளையும் காட்ட முடியாது. எந்தப் பொருளை நாம் பார்த்தாலும்கூட உண்மையான ஸ்வரூபம் பரம்பொருள்தான். ஆகவே த்வைதம் (இரண்டாவது பொருள்) என்பதே கிடையாது. இரண்டாவது பொருள் என்பது தனியாக இருந்தால் அப்பொழுது த்வைதம் உண்டு. ஆனால் நாம் உலகத்தைப் பார்க்கிறோமே (அது

Koviloor Digital Library

இரண்டாவது பொருளல்லவா?) என்று யாராவது கேட்டால் அவர்களுக்கு நாம் ஓர் உதாரணத்தைக் கூறலாம்.

தங்கம் என்ற உலோகத்தை நாம் மோதிர வடிவில் ஆக்கினாலும் அப்போது தங்கம்தானே அந்த வடிவில் உள்ளது! அதாவது நம் எதிரில் தங்கமே மோதிர வடிவில் தோன்றிக் கொண்டிருக்கிறது.

...வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் (12.)

(கருத்து: அடிப்படைக் காரணமான மண்ணைத் தெரிந்து கொள்வதால் மண்ணினால் உருவாக்கப்பட்ட அனைத்தும் அறியப்பட்டதாக ஆகிவிடும். இது எப்படி? குடம், பாண்டம், தட்டு என்ற மண்ணின் உருவ வேறுபாடுகளானவை வெறும் பெயரளவிலேதான் உண்மையே தவிர அடிப்படையில் அவை மண்தான் என்பதே உண்மை.)

என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. மோதிர விஷயமாகச் சொல்லப்பட்ட உதாரணத்தில் பரிணாமம் (மாற்றம்) என்பதாவது உண்டு. ஆனால் ப்ரஹ்ம விஷயம் அப்படியல்ல. அதில் மாற்றம் என்பதும் கிடையாது. இதை விவர்த்தம் (தோற்றம்) என்று கூறுவர். சில பொருட்கள் நம்முடைய கண்களுக்குப் படும். ஆனால் அந்தப் பொருட்கள் உண்மையிலேயே இருக்க மாட்டா. சேலத்துக்குப் போகும் வழியில் ஒரு மலை உண்டு. மாலை நேரத்தில் சாலையில் நின்று கொண்டு பார்த்தால் அந்த மலை ஒரு மான் நிற்பது போல் தோன்றும்.ஆனால் மான் உண்மையிலேயே கிடையாது. அது பொய் மான்! பக்கத்தில் போனால் மானே கிடையாது. அதேபோல் ஏதாவது மேகத்தை நாம் தூரத்திலிருந்து பார்த்தோமானால் அதைப் பார்க்கும்பொழுது நமது கண்களுக்கு மாடு ஒன்று இருப்பது போல் தோன்றலாம்.

மோஹம் என்கிற இருட்டினால் நம்முடைய கண்களுக்கு ஒரு பொருள் வேறுவிதமாகத் தோன்றும். அரை இருட்டில் சில பொருட்களைக் கண்டு நாம் பயப்படுவதும் உண்டு. ஆனால் அங்கே பொருள் என்பது உண்மையிலேயே இல்லை. ஆகவே அதைப் பார்த்துப் பயப்பட வேண்டியதில்லை; ஓடிப்போக வேண்டிய தேவையும் இல்லை. ஆனால் பொருளின் அறிவு மட்டும்

Koviloor Digital Library

அங்கு உண்டு. சிலர், "அறிவு இருந்தால் போதுமே, பொருள் எதற்கு?" என்று கேட்பர். கண்ணுக்கு ஒரு பொருள் தெரிந்தது என்றால் பொருளில்லாமல் அறிவு உண்டாகாது என்பது தீர்மானம். 'பொருள் இல்லாமல் அறிவு உண்டாவது இல்லை' என்ற ஸித்தாந்தம் நம்முடைய சாஸ்திரங்களில் இருக்கிறது. ஆனால் ஒரு கயிற்றைப் பார்த்து நாம் பாம்பு என்று ப்ரமிக்கிறோமே (தவறாக எண்ணுகிறோமே) என்றால் நம்மைப் பொறுத்தவரை அறியாமையினால் பாம்பு அங்கிருக்கிறது. (அந்தத் தோற்றமான பாம்பும், (உண்மையில் உள்ள) கயிற்றையே அடிப்படையாக உடையது.) அறியாமையினால் தெரிகின்ற அந்தப் பாம்பு அறியாமை நீங்கியவுடன் அகன்றுவிடும். எவ்வாறு நாம் தூரத்திலிருந்து பார்க்கும்போது மான் இருப்பது போலத் தோன்றிப் பின் அருகில் வந்ததும் மறைந்துவிட்டதோ அதேபோல்தான் அறியாமையினால் ஏற்பட்ட பாம்பு விஷயமும்.

ஒருவனைப் பார்த்து அவனுடைய பையன் 'அப்பா' என்று கூப்பிடுகிறான். அவனுடைய மாப்பிள்ளை 'மாமனார்' என்று கூப்பிடுகிறான். ஆனால் இருப்பவன் ஒரே ஒருவன்தான். ஒரு மனிதனை நாம் மாமனாராகப் பார்ப்பதனால் அப்பொழுது மாமனாராக அவன் தோன்றுகிறான். அதாவது மாமனாராக சிருஷ்டிக்கப்படுகிறான். அப்படித் தெரியும் மனிதனும் சிருஷ்டிக்கப்பட்டவனா? என்றால், ஒருவிதமான திருஷ்டியில் பார்த்தால் அவனும் பார்வையினால் சிருஷ்டிக்கப்படுகிறவன்தான் என்று வரும். இவ்வாறு மேற்கொண்டு விசாரம் செய்துகொண்டே போனால் ஒரே பொருளே (அந்த ப்ரஹ்மமே) எல்லாமுமாக தோன்றிக் கொண்டிருக்கிறது என்று ஒரு சித்தாந்தம் வரும். அதேபோல் ஒரே பொருள் பலவிதமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது என்று நாம் கூற முடியும். ப்ரஹ்மத்தைத் தவிர எந்த ஒரு பொருளும் உண்மையில் இருக்குமேயானால், ப்ரஹ்மம் மற்றொரு பொருளுக்குக் கட்டுப்பட்டது என்று ஆகிவிடும். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை. ப்ரஹ்மத்தைத் தவிர எந்தப் பொருளும் கிடையாது. ஆகவே த்வைதம் என்பதே கிடையாது.

ப்ரணாசோஜ்ஜிதம்

என்று அடுத்துக் கூறப்பட்டுள்ளதை நோக்குவோம்.

Koviloor Digital Library

ப்ரஹ்மத்திற்கு நாசம் என்பதும் கிடையாது. ஆகவே ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்பட்ட ஸ்வரூப லக்ஷணங்கள், எப்போதும் ப்ரஹ்மம் ஒரேபோல்தான் இருக்கும் என்று காட்டிக் கொண்டிருக்கின்றன.

"ஈச்வரனும் இருக்கலாம்; ப்ரஹ்மமும் இருக்கலாம். நாம் ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு எங்களுக்கு என்ன ஆக வேண்டியிருக்கிறது? நமது ஸ்வரூபம்தானே நமக்குத் தெரிய வேண்டும்? நாம்தானே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்? நமது ஸ்வரூபம் என்ன?" என்ற கேள்வி நமக்கு வரும்.

யஜ்ஜாக்ரத்ஸ்வபனப்ரஸுப்திஷு விபாத்யேகம் விசோகம் பரம் (13.)

(எது விழிப்பு, கனவு மற்றும் ஆழ்ந்த உறக்க நிலைகளில், தனிப்பட்டதாயும், கவலையற்றதாயும், உயர்ந்ததாயும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதோ...)

மனிதன் பலவிதமான வேஷங்களை அவ்வப்போது போட்டுக் கொண்டிருக்கிறான். ஒரு சமயத்தில் அவன் (விழிப்பு நிலையில்) எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். மற்றொரு சமயத்தில் (கனவு நிலையில்)

ந தத்ர ரதா: ந ரதயோகா ந பந்த்தான: (14.)

(அங்கே (கனவுலகில்) ரதங்கள் இல்லை, குதிரைகளும் இல்லை, சாலைகளும் இல்லை. ஆனால் அவனே (கனவு காண்பவனே) ரதங்களையும் குதிரைகளையும் சாலைகளையும் படைத்துக்கொள்கிறான். அவனேதான் அங்கு உண்மையில் சிருஷ்டிகர்த்தா.)

என்பதுபோல் பலவிதமான கற்பனைகளை ஒருவன் செய்து கொண்டிருக்கிறான். இன்னொரு சமயத்தில் (ஆழ்ந்த உறக்க நிலையில்) அவன் பார்த்துக் கொண்டிருப்பதும் கிடையாது; கற்பனை செய்வதும் கிடையாது. அப்பொழுது நான் 'இருந்து கொண்டிருக்கிறேன்' என்பது மட்டும் தான் இருக்கும். ஆழ்ந்த

Koviloor Digital Library

உறக்கநிலை முடிந்தவுடன், 'நான் சுகமாகத் தூங்கினேன்' என்று ஒருவன் எண்ணுகிறான். முன்பு அவ்வாறு அவன் சுகமாக இருந்திருந்தால்தான் அவன் அவ்வாறு இப்பொழுது கூற முடியும். முன்பு ஒன்றுமில்லாததை இப்பொழுது அவன் புதிதாகக் கூற முடியாது. ஆகவே ஒருவன் விழிப்பு நிலையில் எவ்வளவோ பொருட்களையெல்லாம் பார்த்து அவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். கனவு நிலையில் அதேபோல பல பொருட்களைக் கற்பனை செய்து கொண்டு இருக்கிறான். ஆழ்ந்த உறக்க நிலையையும் நன்றாக அனுபவிக்கிறான். ஒருவனுக்குத் தன்னைப்பற்றிய அறிவு அப்பொழுதெல்லாம் இருக்கிறதா என்று நாம் இப்போது பார்ப்போம். விழிப்பு நிலையில் இருக்கும் பொழுது 'நீ இருக்கிறாயா?' என்று யாராவது ஒருவனை நாம் கேட்டால் 'நான் இருக்கிறேன்' என்றுதான் அவன் சொல்லுவான். 'நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; ஆகவே நான் இருக்கிறேன்' என்று ஒருவன் கூறுவான். கனவிலும் அவ்வாறுதான். 'நான் பலவிதமான பொருட்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்பதால் நான் அப்போதும் இருக்கிறேன்' என்றுதான் ஒருவன் கூறுவான். தூங்கும் காலத்தில்கூட "நான் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்" என்று ஒருவனுக்கு அப்பொழுது தெரியாமல் இருந்தாலும்கூட, தூக்கம் முடிந்து எழுந்த பிறகு "நான் சுகமாகத் தூங்கினேன்" என்ற அறிவு ஒருவனுக்கு வரும். அவ்வாறு தூங்கும் சமயத்தில் அனுபவிப்பவன் என்பவன் ஒருவன் இல்லாமல் இருந்து, சுகத்தையும் அவன் அனுபவிக்காமல் இருந்தால், சுகமாக உறங்கியதைப் பற்றி விழிப்பு நிலையின்போது அவன் கூற முடியாது. ஆகவே 'ஸுஷுப்தி' நிலையிலும் கூட அனுபவம் என்பது உண்டு. ஆனால் அக்ஞானம் (அறியாமை) மிகவும் தீவிரமாக இருப்பதினால் 'நான் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்' என்பது ஒருவனுக்கு உறக்கத்தின் போது தெரியாமல் அவன் சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறான் .

ஆகவே ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்திகளை அனுபவித்துக் கொண்டிருப்பதே ஜீவனுடைய ஸ்வரூபம். ஜீவன் என்பவன் யார்? இவன் தனியாக இருந்தால் அப்பொழுது ஏதாவது கடவுளை உபாஸனை செய்தால் அவனுக்கு ஸ்வர்கமோ, நரகமோ,

Koviloor Digital Library

சுகமோ, துக்கமோ ஏதாவது கிடைக்க ஏதுவாகும். ஆனால் இவன் (ஜீவன்)

யஜ்ஜாக்ரத்ஸ்வபனப்ரஸுப்திஷு விபாத்யேகம் விசோகம் பரம்

(எது விழிப்பு, கனவு மற்றும் ஆழ்ந்த உறக்க நிலைகளில், தனிப்பட்டதாயும், கவலையற்றதாயும், உயர்ந்ததாயும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதோ...)

என்று கூறப்பட்டிருப்பது போல் துன்பமற்றவனாக இருக்கிறான். ஏன் அவ்வாறு என்று கேட்டால், ஜீவனுடைய உண்மையான ஸ்வரூபம் விழிப்பு நிலையா, கனவு நிலையா ஆழ்ந்த உறக்க நிலையா என்று பார்க்க வேண்டும்.

ப்ரஹ்மத்திற்கு நாம் "*ஸத்ய ஞான ஸுக ஸ்வரூபம்*" என்று சொன்னோம். அவன் எப்பொழுதுமே ஸத்யம்தான்; எப்பொழுதும் சுகம்தான்; எப்பொழுதும் அறிவுடையவனாகவே இருக்கிறான்.

அதேபோல் ஜீவனுக்கும் எப்பொழுதுமே விழிப்பு நிலை இருந்துவிட்டால் இவனுடைய லக்ஷணமே விழிப்பு நிலை தான் என்று நாம் கூறும்படி ஆகிவிடும். அப்போது இவனுக்கு எப்பொழுதும் ஸ்வப்னமோ, ஸுஷுப்தியோ கிடையாது என்றே கூற வேண்டிவரும். எப்பொழுதும் ஸ்வப்ன நிலையே உண்டா என்றால் அவ்வாறும் கிடையாது. எப்பொழுதும் ஸுஷுப்தி நிலையா என்று கேட்டால் அவ்வாறும் இல்லை.

ஆனால் ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி போன்ற நிலைகள் ஜீவனுக்கு வந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே "*ஆகமாபாயினோऽநித்யா:*" என்று சொல்லப்பட்டதுபோல் எவை வந்து வந்து போய்க் கொண்டிருக்கின்றனவோ, அவற்றுள் ஒன்றையும் நாம் ஜீவனின் லக்ஷணம் என்று கூற முடியாது. இந்த நிலைகளுக்கு ஜீவன் சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறான். வந்து வந்து போய்க்கொண்டிருப்பவை எல்லாமும் பொய்தான். 'சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கும் ஜீவனுடைய ஸ்வரூபம், துக்க ஸ்வரூபமா (துன்பமயமா), ஸுக ஸ்வரூபமா (இன்பமயமா)?' என்று கேட்டால், 'துக்க ஸ்வரூபம்' என்று நம்மால் கூற முடியாது.

Koviloor Digital Library

இவனுக்கு துக்கம் என்பது எப்போது வருகிறது? வெளிப் பொருட்களுடன் ஜீவன் தொடர்பு வைத்துக்கொள்ளும்போதுதான் துக்கம் வருகிறது. வெளிப் பொருட்களுடன் இவன் சம்பந்தம் வைத்துக்கொள்ளாதபோது இவனுக்கு துக்கம் என்பது வருவதே கிடையாது. ஆகவே துக்கம் என்பது எப்போதும் இருக்கும் என்று கூற முடியாது. அது வந்து போய்க் கொண்டிருப்பதுதான். சுகமும் கூட அப்படித்தானா என்ன?

சுகம்கூட வந்து போவதாகத்தான் தோன்றுகிறது. பாயசம் சாப்பிட்டால் சுகம் உண்டாகிறது. அந்த பாயசம் நமக்குக் கிடைக்காவிட்டால் துக்கம் உண்டாகிறது. அதனால் சுகம்கூட விஷயங்களின் தொடர்பினால்தான் உண்டாகிறது என்று ஆகிறது. ஆகவே என்னுடைய வாஸ்தவிகமான ஸ்வரூபம் சுக ஸ்வரூபமா என்று கேள்வி எழுகிறது. கேள்வி எழுவது நியாயம்தான். சற்று விசாரம் செய்து பார்த்தால் உண்மை புரியும். சுகம் என்பது விஷய சம்பந்தத்துடன்தான் வருமா, தானாகவே வருமா என்று விசாரம் செய்து பார். பாயசம் சாப்பிடும்பொழுது ஒருவனுக்கு சுகம் வருகிறது என்று பார்த்தோம். ஆனால் ஒருவன் தூங்குகிறானே, அப்போது அவனுக்கு சுகம் இருந்ததா என்று பார்க்க வேண்டும். அப்போது சுகம் உண்டா, இல்லையா என்றால்,

நிர்விஷய: ய: அனுபவ: ச்ரூயதே ஸுகஸ்ய (15.)

(விஷயமில்லாத சுகத்தின் அனுபவம் எது இருக்கிறதோ)

என்று கூறப்பட்டதுபோல், ஸுஷுப்தியின்போது எந்த ஒரு விஷயத்தின் தொடர்பினாலும் நமக்கு சுகம் வரவில்லையென்பது திண்ணம். வெளிவிஷயங்களே இல்லாத சமயத்தில் ஸுஷுப்தியில் ஒருவனுக்கு ஆனந்த அனுபவம் வந்தது என்றால், அந்த ஆனந்தம் எதனால் வந்தது? என்று கேள்வி எழுந்தால் 'விஷயங்களிலிருந்து விலகிக் கொண்டதனால் வந்தது' என்று பதில் கிடைக்கும். பிறகு அந்த ஸுகத்தை ஸ்வரூபம்தான் என்று சொல்ல வேண்டும். அப்பொழுது அவனுடைய ஸ்வரூபம் மட்டும்தான் இருந்தது என்றுதான் பொருள். தங்கத்தில் பல உலோகங்களெல்லாம் கலந்திருக்கும். தங்கத்தை உருக்கி விட்டு, அவைகளையெல்லாம் தனியே பிரித்து வைத்துவிட்டால் அப்பொழுது சுத்தமான

Koviloor Digital Library

தங்கம்தானே இருக்கும்? சுத்தமான தங்கத்தினுடைய ஸ்வரூபம் நமக்கு மற்ற உலோகங்களையெல்லாம் எடுத்து விட்டால்தான் தெரியும். அதேபோல் ஸுஷுப்தி சமயத்தில் (விஷயங்கள் இல்லாதபோது) ஜீவனின் ஸ்வரூபம் ஆனந்தம் என்பதை ஒருவன் புரிந்துகொள்ளலாம். அதை நாமே புரிந்து கொண்டால் அதற்கு ஏன் சாஸ்திரம் அவசியம்?

ஸுஷுப்தி சமயத்தில் அக்ஞானம் இருக்கிறது. அக்ஞானத்தைப் போக்க சாஸ்திரம் என்பது அவசியமாக இருக்கிறது. எந்த ஓர் அக்ஞானத்தினால் (அறியாமையால்) ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் (நிலைகளையும்) நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோமோ, அத்தகைய அக்ஞானத்தைப் போக்கிக் கொள்வதற்காக சாஸ்திரம் வாசிக்க வேண்டும். நம்முடைய ஸ்வரூபத்தைப் பற்றிய அறிவு நமக்கு இல்லவே இல்லை என்பது கிடையாது. ஆனால் நம்மைப் பற்றிய அறிவு நமக்கு எவ்விதத்தில் உண்டு என்று கேட்டால், இந்த அக்ஞானம் கலந்திருக்கப்பட்ட தசைகளிலும் (காலங்களிலும்) இருக்கத்தான் செய்கிறது. நான் இந்த மூன்று நிலைகளையும் கடந்து விடலாமல்லவா என்று ஒருவன் கேட்டால் அதற்கு முதலில் இந்த ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி, இந்த சரீரம் இவையனைத்தும் ஒருவனுக்கு எதனால் வந்தது என்று பார்க்க வேண்டும்.

துக்கஜன்மப்ரவ்ருத்திதோஷமித்யாக்ஞானானாம்
ததுத்தரோத்தராபாயே ததனந்தராபாயாதபவர்க: (16.)

என்று ந்யாய ஸூத்ரத்தில் வருகிறது.

துக்கம் என்பது எதனால் வந்தது? சரீரம் வந்திருப்பதால்தான் துக்கம் வந்தது. சரீரமே இல்லாவிட்டால் துக்கமே கிடையாது. ஏனென்றால் ஆத்மா என்பவன் நித்யன் (நிலையானவன்). அவனுக்கு வெளிப்பொருட்களினால் ஏற்படக்கூடிய சம்பந்தமே கிடையாது. விஷயங்களினால் ஏற்படக்கூடிய சம்பந்தம், இந்த உடல் இருந்தால்தான் வரும்.

ஜன்மம் எதனால் வந்தது என்று கேட்டால், பஞ்சதசீயில்,

குர்வதே கர்ம போகாய கர்ம கர்தும் ச புஞ்ஜதே (17.)

Koviloor Digital Library

(போகத்திற்காகக் கர்மாவைச் செய்கிறார்கள் ; கர்மாவிற்காக போகத்தையனுபவிக்கிறார்கள்.)

என்று கூறப்பட்டதுபோல்தான். நாம் செய்யும் செய்கைகளுக்குத் தகுந்தாற்போல்தான், பலனாக, நமக்கு ஜன்மா கிடைக்கிறது.

ஆகவே ஜன்மா என்பது கர்மாவினால் வந்திருக்கிறது. இந்தக் கர்மம் எதனால் வந்தது என்பதற்கு, "தோஷத்தினால்" என்று ஸூத்ரத்தில் கூறப்பட்டுள்ளது. தோஷம் என்றால் என்ன?

ராகத்வேஷ மோஹா தோஷா: (18.)

என்று சொல்லப்பட்டுள்ளது. ராகம், த்வேஷம், மோஹம் என்ற மூன்றும் தோஷங்கள். சில பொருட்களைப் பார்த்தால் விருப்பம் உண்டாகிறது. சில பொருட்களைப் பார்த்தால் நமக்கு வெறுப்பு ஏற்படுகிறது. உதாரணத்திற்குப் பாம்பை பார்த்தால் நமக்கு விசேஷமாக வெறுப்பு ஏற்படுகிறது. நாம் வீட்டில் வளர்த்திருக்கக் கூடிய ஒரு சிறு நாய்க்குட்டியைப் பார்த்தால் நமக்கு மனதில் சந்தோஷம் ஏற்படுகிறது. ஏனென்றால் அந்த நாய் கடிக்காது என்று நமக்கு ஒரு தீர்மானம். பாம்பு கடிக்கும் என்று தீர்மானம். ஆகவே ஒரு பொருள் நமக்கு வேண்டியிருக்கிறது; மற்றொரு பொருள் வேண்டாம் என்றிருக்கிறோம். இவ்வாறான ராகமும், த்வேஷமும் (விருப்பும், வெறுப்பும்) மனிதனுக்கு உண்டு. இந்த ராகத்வேஷம் எதனால் ஏற்படுகிறது என்று கேட்டால், மோஹத்தினால் ஏற்படுகிறது என்பதே அதற்குப் பதில்.

மோஹம் என்றால் என்ன? அநித்யமாக (நிலையில்லாமல்) இருக்கக்கூடிய ஒரு பொருளை, நித்யம் (நிலைபெற்றது) என்று கருதுவது மோஹம் எனப்படும். அதேபோல் அசுசியாக (தூய்மை யற்று) இருக்கக் கூடிய ஒரு பொருளை தூய்மையானது என்று நினைப்பதும் மோஹம்தான். அதேபோல் அசுகமாக (இன்பம் தராமல்) இருக்கப்பட்ட பொருளை இன்பம் என்று நினைப்பதும் மோஹத்தில் சேரும். உதாரணத்திற்கு நாம் இந்த உடலை நித்யம் என்று நினைக்கிறோமோ இல்லையோ, நித்யம் ஆக்கிக் கொண்டு விடவேண்டுமென்று நினைக்கிறோம்.

புக்தா பஹவோ தாரா: லப்தா: புத்ராச்ச பௌத்ராச்ச |
நீதம் சதமப்யாயு: ஸத்யம் வத, மர்துமஸ்தி மன: || (19.)

Koviloor Digital Library

என்று இவ்வாறு வரும் ஒரு சுலோகத்தில் நீலகண்ட தீக்ஷிதர், "ஒருவன் பல திருமணங்கள் செய்து கொண்டு விட்டான். பல பிள்ளைகளையும், பேரன்களையும் பெற்றாகிவிட்டது. நூறு ஆண்டுகளும் வாழ்ந்தாகிவிட்டது. அப்போது யமன் 'வா' என்று அழைத்தாலும் அவன் போகத் தயாராகவா இருக்கிறான்?" என்று கேட்கிறார்.

மனிதன் தன் சரீரத்தையே "நான்" என்று நினைத்துவிடுகிறான். 'நான்' ஸ்திரமாக (எப்பொழுதும்) இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருக்கிறது. இந்த எண்ணம் நியாயம்தான். ஆனால் இந்த 'நான்' என்பதை அவன் எங்கு நினைக்கிறான் என்பதில்தான் விஷயமே இருக்கிறது. நிலையற்ற ஒரு பொருளை 'நான்' என்று நினைத்துக்கொண்டு, அந்த 'நான்' நிலையாக இருக்க வேண்டுமென்று நினைத்தால், அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

மனிதன் அநித்யமாக இருக்கப்பட்ட ஒரு பொருளை நித்யமாக நினைக்கிறான். அடுத்ததாக அசுசியாக இருக்கப்பட்ட பொருளை சுசியாக இருக்கவேண்டுமென்று நினைத்துக் கொள்கிறான். "நான் மிகவும் சிவப்பாக இருக்கிறேன்; மன்மதன் போல் இருக்கிறேன்" என்று ஒருவன் நினைத்துக் கொள்கிறான். ஒரு சிறிய ஊசியினால் அவன் உடலில் ஒரு சிறிய துளை போட்டாலும் அதிலிருந்து உடனே பார்க்கச் சகிக்கமுடியாத இரத்தம்தான் வரும். நான்கு நாட்கள் அப்படியே விட்டு விட்டால் அது புண்ணாகி அதிலிருந்து சீழ் வர ஆரம்பிக்கும். ஆகவே இந்த உடல் என்பது மிகவும் தூய்மையற்ற ஒன்றாகும். பின் எதற்காக இந்தத் தூய்மையற்ற உடல் நமக்கு வேண்டும்?

நாம் ஓர் ஆற்றைக் கடக்க ஒரு தோணியை உபயோகப் படுத்துவோம். ஆற்றைக் கடப்பதற்கு அந்தத் தோணி தகுந்ததா என்றுதான் நாம் பார்ப்போமே தவிர, அந்தத் தோணியின் நீளம், அதனுடைய அகலம், அதனுடைய வடிவம் போன்றவற்றை எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். பகவான் (பிறப்பு - இறப்பு என்னும்) ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவதற்குச் சக்தியை இந்த உடம்பிற்கு கொடுத்திருக்கிறார். ஆகவே இப்பொழுதே இதை வைத்துக்கொண்டு ஸம்ஸாரக் கடலைத்

Koviloor Digital Library

தாண்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமே தவிர, "நான் இன்னும் வெள்ளையாக வேண்டும், உடல் சிவப்பாவதற்கு ஏதேதோ பொடிகளையெல்லாம் பூசிக் கொண்டு அதைச் சிவப்பாக்க வேண்டும்" என்றெல்லாம் ஒருவன் நினைக்கக் கூடாது. உடல் சிவப்பானால் என்ன? கருப்பானால் என்ன? அதனால் எந்த விதமான பிரயோஜனமும் கிடையாது. ஆகவே தூய்மையற்று இருக்கப்பட்ட இந்த உடலைத் தூய்மையாக்க வேண்டும் என்று ஒருவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். இதைத் தூய்மை ஆக்கவே முடியாது. அதே சமயம் "அசுசியாய் இருந்தால் என்ன, சுசியாக இருந்தால் என்ன" என்று நாம் கூறுவதைக் கொண்டு ஒருவன் "நான் ஏன் ஸ்நானம் (குளியல்) செய்ய வேண்டும்?" என்று கேட்கக் கூடாது. எதுவரை ஒருவனுக்கு இந்த சரீரமே "நான்" என்ற மனோபாவனை இருக்கிறதோ அதுவரை அவனுக்கு இந்த "சௌசம்" (தூய்மை) "அசௌசம்" (தூய்மையில்லாமை) என்ற இந்த இரண்டும் உண்டு. இப்படிப்பட்ட பாவனை இல்லை என்றால் நாம் ஒரு விதத்தில் சுசி இல்லாவிட்டாலும் கூட, (ஆத்ம ஞானம் பெற்றிருப்பதனால்) வேறு வகையில் சுசி என்பதை நிரூபித்து விடலாம். ஆகவே இந்த சரீரத்தை வைத்துக்கொண்டு நாம் அடைய வேண்டியதை அடைந்து விட்டால் அதுதான் சிறந்தது. அதை விடுத்து அசுசியாய் இருக்கப்பட்ட இந்த உடலை, "நான் சுசியாக்கப் போகிறேன்" என்றால் அது முடியாத காரியம்.

அடுத்ததாக "அசுகம்" (இன்பமற்றது) என்று கூறப்பட்டுள்ளது.

(அதாவது இன்பமற்ற ஒன்றை இன்பம் தருவதாகக் கருதுவதும் மோஹத்தினாலேயே ஆகும்.)

உலகத்தில் எப்பொழுதும் பிரியமாக இருக்கப்பட்ட பொருள் உண்டா என்று கேட்டால், அதற்கு சங்கரபகவத்பாதாள் ஒரு சுலோகத்தில்

யஸ்மாத் யாவத் ஸுகம் ஸ்யாதிஹ ஹி விஷயத: தா-
வதஸ்மின் ப்ரியத்வம்
யாவத் துக்கம் ச யஸ்மாத் பவதி கலு தத:
தாவதேவாப்ரியத்வம் ।
நைகஸ்மின் ஸர்வகாலேऽஸ்த்யுபயமபி கதாऽப்ய
ப்ரியோऽபி ப்ரிய: ஸ்யாத்

Koviloor Digital Library

ப்ரேயானப்யப்ரியோ வா ஸததமபி தத: ப்ரேய
ஆத்மாக்யவஸ்து II (1.3)

(எதுவரை ஒருவன் ஒரு பொருளிலிருந்து இன்பமுறுகின்றானோ அதுவரை அப்பொருள் விருப்பமாக உள்ளது. எதுவரை அது துன்பம் தருமோ அதுவரை அப்பொருள் வெறுக்கத் தக்கதாயுள்ளது. ஒரே பொருள் எப்பொழுதும் விரும்பத் தக்கதாகவோ, வெறுக்கத்தக்கதாகவோ இருப்பதில்லை. சில சமயங்களில் வெறுக்கத் தகுந்த பொருள் விரும்பத் தக்கதாக மாறலாம். மேலும் விரும்பி ஏற்ற பொருளே வெறுப்பிற்குரியதாகவும் ஆகலாம். ஆதலால் ஆத்மா என்னும் பொருள் எப்போதும் மிகவும் விரும்பத்தக்கதாக உள்ளது.)

என்று விளக்கியுள்ளார். இவ்விஷயம் சாந்தோக்யம் போன்ற உபநிஷத்துக்களிலெல்லாம் நன்கு விவரித்துச் சொல்லப் பட்டிருக்கிறது.

ஒரு தந்தைக்குத் தன் பையன் மீது அன்பு உண்டு. ஆனால் பையன் அப்பாவினுடைய சொற்படி நடக்கும் வரையில்தான் அவன்மேல் அப்பாவிற்குப் பிரியம். அவன் அவ்வாறு நடக்காவிட்டால் அவனை “சுத்த முட்டாள்” என்றெல்லாம் அப்பா திட்டுவார். அப்பா தனக்காகப் பையனிடத்தில் அன்பு காட்டுகிறாரேயொழிய, அந்த அன்பு பையனுக்காக இல்லை. எதுவரை பையன் தன்னுடைய சொற்படி கேட்டுக்கொண்டு, பணம் சம்பாதித்ததில் தான் சொன்னபடி கொடுத்து வருகிறானோ அது வரைதான் அப்பாவிற்கு அவன்மேல் பிரியம் இருக்கும் என்பதை நாம் உலகத்தில் பார்ப்போம். அவன் வேறுவிதமாக நடந்து கொண்டால் ‘பையன் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன’ என்று அவனுக்குத் தோன்றும்.

அதேபோல் எதுவரை துக்கம் இருக்கும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஒருவனுக்குச் சர்க்கரை மிகவும் பிடித்த பண்டமாக இருக்கலாம். இன்னொருவனுக்கு அது பிடித்திருந்தாலும்கூட, சர்க்கரை வியாதி வந்துவிட்டால் அதை அவன் தொடவே மாட்டான். “இவ்வளவு நாட்கள் சர்க்கரை சாப்பிட்டுக் கொண்டிருந்தீர்களே, ஏன் இப்பொழுதுமட்டும் சர்க்கரை

Koviloor Digital Library

சாப்பிடுவதில்லை? "என்று கேட்டால், "அப்போது எனக்கு சர்க்கரை மிகவும் பிடித்திருந்தது. இப்பொழுது எனக்கு வியாதி வந்திருக்கிறது. சாப்பிட்டால் உயிருக்கே ஆபத்து வரும். அதனால் நான் சர்க்கரையை சாப்பிட மாட்டேன்" என்று அவன் கூறுவான். மருந்து சாப்பிட வேண்டும் என்றால் நாமெல்லாம் "வேண்டாம், வேண்டாம்" என்று சாதாரண சமயங்களில் ஒதுக்கித்தள்ளிக் கொண்டிருப்போம். ஆனால் வியாதி வந்த காலத்தில் "முதலில் மருந்தைக் கொண்டு வாருங்கள்" என்று நாமே கேட்டு வாங்கி சாப்பிடுவோம். அப்போது நாம் முன்பு பிரியம் வைக்காத பொருளிலும் பிரியத்தைக் காட்டுவோம். ஆகவே ஒரே பொருள் எல்லா காலத்திலும் வெறுக்கத்தக்கதாகவோ, வேண்டத்தக்கதாகவோ இருப்பதில்லை.

ஆத்மா என்பதுதான் ஒருவனுக்கு எப்போதும் பிரியமான வஸ்து. இப்போது, அப்போது என்றில்லாமல் எப்போதும் பிரியமான பொருள் ஆத்மாதான். ஆகவே ஒருவன் ஆத்மாவின் மீது ப்ரீதி வைக்க வேண்டுமே தவிர இந்த அநித்யம், அசுசி, அசுகமாய் இருக்கப்பட்ட, தாற்காலிக சுகம் தரும் பொருட்களை, அவைதான் தனக்குப் பிரியமானவை என்று நினைத்து அவைகளிலேயே ஆசை வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அப்படி ஆசை வைத்தால் அதுவே அவனுக்கு ம்ருத்யு (யமன்) ஆகிவிடும். இதுதான் மோஹம் என்று ஸூத்ரத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ராகம், த்வேஷம், மோஹம் ஆகிய மூன்று தோஷங்கள் மனிதனுக்கு இருந்தாலும் இவைகளில் ராகமும் த்வேஷமும் அவ்வளவு கெட்ட எதிரிகள் அல்ல. மோஹம்தான் மிகவும் கெட்ட எதிரி. ஏனென்றால் மோஹம் இருந்தால் மற்ற இரண்டும் தாமாகவே வந்துவிடும். மோஹம் இல்லவே இல்லையென்றால் ராகத்வேஷமே வராது.

தேஷாம் மோஹ: பாபீயான் (20.)

(அவைகளில் மோஹம்தான் அதிக அபாயகரமானது.)

என்று கூறியிருப்பதால் மோஹத்தை நாம் விட்டுவிட வேண்டும்.

சாஸ்திரம் வாசிக்கும்பொழுது "மற்ற பொருட்களெல்லாம் மோஹம்" என்று ஒருவனுக்குத் தோன்றலாம். ஆனால் வாசித்த புத்தகத்தைக் கீழே வைத்தவுடன், "இன்னும் கொஞ்சம் டானிக் சாப்பிட்டால் என்ன,நாம் புஷ்டியாக இருக்கலாமே" என்று தோன்றும்.

Koviloor Digital Library

"ஏகம் விசோகம் பரம்" என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து, ஆத்மாவிற்குச் சோகம் இல்லை என்பது தெரியும். சோகம் என்பது வந்து போகக்கூடியது. இந்த ஆத்மா ஸுகஸ்வரூபிதான் என்பதை ஸுஷுப்தியிலேயே நாம் நன்றாக அனுபவத்தின் மூலமாகப் பார்க்கலாம். ஆகவே நாம் ஆத்மாவினுடைய (ஜீவனுடைய) ஸ்வரூபத்தையும் ஆராய்ந்தாகிவிட்டது. ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபத்தைப் பற்றியும் ஆராய்ந்தோம். நாம் இப்படிப் பார்த்தால் ப்ரஹ்மமும் ஸுக ஸ்வரூபியாக இருக்கிறது. ஆத்மாவும் ஸுக ஸ்வரூபியாக இருக்கிறது. 'ஏகம் விசோகம் பரம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஆகவே ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றுதான் எனத் தெரிகிறது.) இதற்கு மேலே எந்த ஒரு பொருளும் கிடையாது.

ப்ரத்யக் ப்ரஹ்ம ததஸ்மி யஸ்ய
க்ருபயா தம் தேசிகேந்த்ரம் பஜே (21.)

(எவருடைய கருணையினால் உள்ளிருக்கும் ஆத்மாவான நான் ப்ரஹ்மமாக இருக்கிறேனோ அந்த உயர்ந்த குருவைத் துதிக்கிறேன்.)

'*ப்ரத்யக் ப்ரஹ்ம*' என்று கூறப்பட்டிருப்பதால்

ப்ரத்யகபின்னம் ப்ரஹ்ம (22.)

(ஜீவனிலிருந்து ப்ரஹ்மம் வேறுபட்டதல்ல.)

இந்த ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றாய்த்தான் இருக்க வேண்டும்.

யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின்னுதரமந்தரம் குருதே ।
அத தஸ்ய பயம் பவதி । (23.)

(அதில் சற்றே வேற்றுமை செய்தாலும் அதனால் பயம் ஏற்படுகிறது.)

என்று வேதம் உரைக்கிறது.

சிலர், "நாம் ஸகுணமாக (குணங்களுடன் கூடிய) இருக்கப்பட்ட ஈச்வரனை ஆராதித்து, அவனுடைய லோகத்திற்குச் சென்றால் பயமே இல்லாமல் இருக்கலாமே" என்று கூறுவர். ஆகவே அந்த லோகங்களில் (உலகங்களில்) இருந்தாலும்கூட

Koviloor Digital Library

த்விதீயாத்வை பயம் பவதி (5.15)

(இரண்டாவது பொருளிருந்தால் பயம் ஏற்படுகிறது.)

என்று கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது பொருள் என்று ஒன்று இருந்தால் அப்போது அவனுக்கு பயம்தான் ஏற்படும். இவ்வாறில்லாமல் ஒருவன் ப்ரஹ்ம விசாரம் செய்தால், ப்ரஹ்ம விசாரம் செய்து தன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டால் அவன் ப்ரஹ்மமே ஆகிவிடுகிறான். அதனால்தான்,

ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி (11.31)

(ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறான்.)

என்று கூறப்பட்டிருக்கிறது.

உண்மையில் அவன் ப்ரஹ்மம்தான். தவறான அறிவினால் அவன் 'தான் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு' என்று நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் விலகி அவன் ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறான் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் சிறிதளவாவது வேதாந்த விசாரம் செய்து ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற முயன்றோமென்றால், அதிலே நாம் சிரத்தை வைத்துக்கொண்டால்,

அனேக ஜன்ம ஸம்ஸித்த: ததோ யாதி பராங்கதிம் || (24.)

என்று பகவான் சொன்ன வகையில், ஒருவேளை இந்த ஜன்மாவில் நமக்கு மோக்ஷம் கிடைக்காவிட்டாலும் அந்த ஸம்ஸ்காரங்களினால் (வாஸனைகளினால்) அடுத்த ஜன்மாவில் நமக்கு "ஆத்ம ஸாக்ஷாத்காரம்" கிடைக்கலாம். ஆகவே நாம் அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

நாம் எந்த உயர்ந்த லோகத்திற்குச் சென்றாலும் "க்ஷீணே *புண்யே மர்த்யலோகம் விசந்தி*" என்று சொன்னது போல் புண்ணியங்கள் தீர்ந்தவுடன் மனிதர்களின் உலகிற்குத்தான் செல்ல வேண்டி வரும். உலகங்கள் எவையும் நிலையில்லை. நாம் நிலையற்ற பொருட்களிலிருந்து விடுபட்டு நிலையான பொருளை அடைவதற்கு பகவான் சக்தி கொடுத்திருக்கிறான். இதற்கு மனிதப் பிறவி என்பது மிகவும் ஏற்றதாகும். இவ்வாறிருக்கும்போது,

Koviloor Digital Library

இத: கோன்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்த்தே ப்ரமாத்யதி (1.34)

(தன் (ஆத்ம) நலனிலேயே தவறான பாவனை கொண்டிருப்பவனைவிட முட்டாளாக யாரேனும் இருக்க முடியுமா?)

நாம் மனிதப் பிறவியை வீணடிக்கக் கூடாது. இது சாஸ்திரங்களுடைய சித்தாந்தம். ஞானிகளின் வார்த்தை. இந்த ஞானத்தை உங்களுக்கு பகவான் அளிக்கட்டும் என்று பிரார்த்தனை செய்து இந்த உபந்யாஸத்தை முடிக்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library

13. திசைக்கும் காலத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருள்

திக்காலாத்யனவச்சின்னானந்தசின்மாத்ரமூர்த்தயே |
ஸ்வானுபூத்யைகமானாய நம: சாந்தாய தேஜஸே || (1.)

(திசை, காலம் முதலியவற்றின் வரையறைக்கு உட்படாத அழிவற்ற சைதன்ய வடிவாயுள்ளதும் மற்றும் எதை அறிவதற்கு ஆத்மானுபவம் ஒன்றே வழியாகுமோ அந்த சாந்தமான தேஜஸ்ஸிற்கு நமஸ்காரம்.)

உபநிஷத்துக்களில் (சாந்தோக்ய உபநிஷத்தின் ஏழாவது அத்யாயத்தில்)

நால்பே ஸுகமஸ்தி (2.)

(எது சிறியதோ அதில் சுகம் கிடையாது.)

யோ வை பூமா தத் ஸுகம் (3.)

(எது பெரியதோ அது இன்ப வடிவானது.)

இவ்விடத்தில் "பெரியது" மற்றும் "சிறியது" என்பதன் பொருள் என்ன?

திக்காலாத்யனவச்சின்னானந்தசின்மாத்ரமூர்த்தயே |

இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும், "இது இங்கேயிருக்கிறது. ஆனால், அங்கு காணப்படவில்லை" என்ற வரையறைக்குட்பட்டதாக இருக்கிறது. எனினும் பூமா (பெரியதான) ப்ரஹ்மம் இட வரையறைக்கு உட்பட்டதாக இல்லை. நீ எந்த இடத்தை நினைத்தாலும் அங்கு அது இருக்கிறது. ஆகவே அது இல்லாத இடமே கிடையாது. ஆகவே திக்கிற்கு (திசைக்கு) அப்பாற்பட்டது அது. திசை என்றால் என்ன? திசை என்பது இதுதான் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. மதுரையில் இருக்கும் மனிதனுக்கு, சென்னை வடக்குத் திசையில் இருக்கிறது. எனினும் விசாகப்பட்டினத்தில் இருப்பவனுக்கு சென்னை தெற்கில் இருக்கிறது. சென்னை வாஸ்தவமாக வடக்குத் திசையில்

Koviloor Digital Library

இருக்கிறதா அல்லது தெற்குத் திசையில் இருக்கிறதா என்று வினவினால், "இரண்டு திசைகளிலுமே இல்லை. அது இருக்கிறது. அவ்வளவுதான்" என்பதே விடையாகும். நாம் விசாகப்பட்டினத்திற்குச் சென்றால், சென்னை நம்மைப் பொருத்த வரையில் தென் திசையில் இருக்கிறது. மாறாக நாம் மதுரைக்கோ அல்லது திருநெல்வேலிக்கோ செல்வோமாகில், நம்மைப் பொருத்த வரையில் சென்னையின் இருப்பு திசை வடக்காகும். ஆகையால் திசை என்பது மற்றொன்றைச் சார்ந்தே உள்ளது. வ்யாவஹார திருஷ்டியிலும் ப்ரஹ்மமானது வடக்கு அல்லது தெற்குத் திசையில் இருக்கிறது என்று கூற முடியாது.

திசை போலவேதான் காலத்தைப் பற்றிய விஷயமும். காலத்தைப்பற்றி நாம் பேசும்போதும் அது (காலம்) மற்றொன்றை சார்ந்தே இருக்கிறது. நாள் என்றால் என்ன? சூரியனுடைய பெயர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நாம் தீர்மானம் செய்வது நாள் எனப்படும். நாம் இப்போது உதிக்கின்ற சூரியனைப் பார்ப்போம். தற்போது உதிக்கின்ற சூரியனைப் பார்ப்பதற்கும், அடுத்து உதிக்கின்ற சூரியனைப் பார்ப்பதற்கும் உள்ள கால இடைவெளி ஒரு நாள் ஆகும். அடுத்து உதிக்கின்ற சூரியனை நாம் பார்க்கும் பொழுது அடுத்த நாள் தொடங்குகிறது. இவ்வாறிருக்கையில் நாம் சூரியனைக் காணாவிடில் என்னவாகும்? அதாவது, நாளைக் கொண்டு கணக்கிடப்படும் காலம், சூரியனின் பெயர்ச்சியை விடுத்து, யாது ? காலம் இருக்கும். ஆனால் அது என்ன காலம் என்ற கேள்விக்கு சூரியனுடைய பெயர்ச்சி போன்ற யாதொரு அடிப்படையுமில்லாமல் விடை அளிக்க முடியாது. எனவே நாள் போன்ற கால அளவீடு, வரையறுக்கும் காரணம் இல்லாவிட்டால், அடிப்படைத் தன்மையை இழந்து விடும்.அதனால் நாள் என்பது வ்யாவஹாரிகமே தவிர, பாரமார்திகமல்ல.

30 நாட்கள் சேர்ந்தது ஒரு மாதம்; மற்றும் 365 நாட்கள் கொண்டது ஒரு வருடம். மற்ற கால அளவீடுகளான மாதம், வருடம் போன்றவை நாள் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே அவைகட்கும், 'நாளை' விட ஸ்திரத் தன்மை கிடையாது. அவைகளை வரையறுக்கும் காரணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதுதான் அவைகளுக்கும் அர்த்தம் இருக்கின்றது. வாஸ்தவத்தில் காலம், இடம், மற்றும் பொருட்கள் எல்லாம்

Koviloor Digital Library

மனதின் கற்பனைகள். நாமாக, வானத்துச் சூரியனின் பெயர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நாள் முதலியவற்றை வரையறுக்கா விட்டால் தற்போதுள்ளதுபோல், காலத்தைப் பகுத்துணர முடியாது. இதேபோல், துருவ நக்ஷத்திரம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் வடக்கு முதலியவற்றை வரையறுத்திருக்காவிட்டால், திசை தனது மதிப்பை இழந்துவிடும். பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களைப் பொருத்தவரையில் அவை காலத்தினால் வரையறுக்கப் பட்டிருக்கின்றனவா என்ற கேள்விக்கு “ஆம்” என்பதே பதிலாகும். பொருட்கள் யாவும் காலத்தினால் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக “நாம் இந்த நாளில் பிறந்தோம், என்றாவது ஒரு நாள் இறப்போம். இப்பொழுது இருக்கிறோம்” என்றெல்லாம் கூறிக் கொண்டிருக்கிறோம்.

தேஹத்தையோ அல்லது வேறு ஏதாவது பொருளையோ ஆராய்ந்து பார்த்தால் அது உற்பத்தியாவதற்கு முன் – ஒரு குறிப்பிட்ட காலத்தில் அது இல்லை என்பது தெளிவாகும். மேலும், ஒரு நாள் அது அழிந்துவிடும். அதன்பின்னர் இல்லாது போய்விடும். உற்பத்திக்கும் அழிவிற்குமிடையே பார்ப்பவனுக்கு அது இருப்பது போலத் தோன்றுகிறது. அதாவது எல்லாப் பொருட்களும் காலவரையறைக்குட்பட்டது எனலாம்.

சைதன்யம் அல்லது (ப்ரஹ்மம்) எவ்வாறுள்ளது? இராமரது பிறப்பிற்கு முன்னால் க்ருதயுகம் இருந்தது. தற்போது கலியுகம் நடந்து கொண்டிருக்கிறது. ப்ரஹ்மம் அவ்வாறான காலங்களினால் வரையறுக்கப்படுவதில்லை; அது இருக்கிறது, அவ்வளவுதான். எப்போது இருக்கிறது என்ற வினா காலத்திற்கு அப்பாற்பட்ட ப்ரஹ்மத்திற்குச் சற்றும் பொருந்தாததாகும். எக்காலத்தைப் பற்றிய கற்பனையை நீ செய்கிறாயோ அக்காலத்திலெல்லாம் ப்ரஹ்மம் இருந்து கொண்டிருக்கிறது. க்ருத யுகத்திற்கு முன்னர் அது இருந்ததா? அது இருந்தது. இராமர் காலத்தில் அது இருந்தது, தற்பொழுது இருக்கிறது, மேலும் நாளையும் இருக்கும். (எனவே,)

திக்காலாத்யனவச்சின்ன

ப்ரஹ்மம் திசை மற்றும் காலம் மற்றும் பொருட்கள் இவைகளின் வரையறைக்கு அப்பாற்பட்டதாகும். எனினும் திசை மற்றும்

Koviloor Digital Library

காலத்திற்கு அப்பாற்பட்டிருந்தாலும், அது (ப்ரஹ்மம்) சூன்யமோ அல்லது ஜடப் பொருளோ ஆகாது. ஆனால் ஞான ஸ்வரூபமாக (அல்லது சைதன்ய ஸ்வரூபமாக) பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஒருவனுக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டால் அவன் வாழ்க்கையின் முழு பயனையும் அடைந்து விடுவான். சாஸ்திரங்கள் இதைத்தான் உரைக்கின்றன. அனுபவமும்கூட இப்படித்தான். எவ்வளவுக்கெவ்வளவு ப்ரஹ்மத்திலேயே நிலைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு, "பிரபஞ்சத்தில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவையெல்லாம் வெறும் (மாய) விளையாட்டு" என்று தோன்றும். உலகம் வெறும் மாய விளையாட்டானால், எந்தப் பொருள் நல்லது மற்றும் எது தீயது? உலகப் பொருட்களில் ஆசையுள்ள மனிதனுக்கு எந்தப் பொருளும் நல்லதாகவோ அல்லது தீயதாகவோ தோன்றும். அப்பொருளை அவன் சுகசாதனமாகவோ, துக்கத்தின் காரணம் என்றோ கருதுவதைப் பொருத்து அவ்வாறு தோன்றும். மாறாக, மனம் ஆத்மாவில் ஒன்றியவனாய், விருப்பும் வெறுப்புமற்ற ஒருவனுக்கு "நான் பார்ப்பவனாக இருக்கிறேன்; அவ்வளவுதான்" என்ற தத்துவ அறிவு உள்ளது. அத்தகையவனிடம், "உனக்கு பிரபஞ்சத்தினால் சுகமோ துக்கமோ ஏற்படுகிறதா?" என்று கேட்கப்பட்டால், "எதை முன்னிட்டும், சிரிப்பதற்கோ அல்லது அழுவதற்கோ எனக்கு ஒரு காரணமும் தெரியவில்லை. எவை கண்களுக்கு முன் தோன்றுகின்றனவோ அவற்றிற்கு ஸாக்ஷியாக நான் இருக்கிறேன்" என்று கூறுவான் . இவ்வனுபவத்தைப் பெற அவர்கள் முயற்சிகூட செய்வதில்லை. இத்தகைய நிலையை நாம் விரும்புகிறோம்.

ஸத்குருவை அடைந்து, அவரது உபதேசங்களைப் பெற்று அவர் கூறிய ஸாதனைகளைப் பின்பற்றினால் நாமும் அதே நிலையை அடையலாம் என்று சங்கரபகவத்பாதாள் கூறியிருக்கிறார்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகிகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

14. அத்வைத அனுபவமும் அதற்கான தகுதிகளும்

தேவீமாஹாத்மியத்தில் ஒரு வாக்கியம் வருகிறது. அங்கு அம்பாளை நோக்கி இராக்ஷஸன் :

அன்யேஷாம் பலமாச்ரித்ய யுத்த்யஸே சாதிமானினீ (1.)

என்று சொன்னான். "நீ ஏதோ பெரியதாக போர் செய்து கொண்டிருக்கிறேன் என்று சொல்கிறாயே! உன்னுடன் எவ்வளவு சக்திகள் இருந்தன? அவைகளுடன் சேர்ந்து போர் செய்து வெற்றி அடைந்த பிறகு, 'நான்தான் போர் புரிந்தேன்' என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறாயே, இது என்ன ஆணவம் தேவி?" என்றான். தேவி பார்த்தாள்; இவனுக்கு இப்பொழுதாவது (அறிவு புகட்டாமல்) போய்விட்டால் இந்த முட்டாள் எவ்வளவோ பிறவிகள் எடுத்துக் கொண்டு நரகத்திற்குச் செல்வான். அது வேண்டாம், இவன் எப்போது என்னைப் பற்றி துச்சமாகப் பேசினானோ அப்பொழுதே இவனுக்கு அறிவு புகட்ட வேண்டும்" என்று தீர்மானம் செய்து அம்பாள்,

ஏகைவாஹம் ஜகத்யத்ர த்விதீயா கா மமாபரா (2.)

(நான் ஒருத்தி மட்டும்தான் இந்த உலகில் உள்ளேன். என்னைத் தவிர வேறு இரண்டாவதாக யார் இருக்கிறார்கள்?)

"இல்லை அப்பா! யார் யாரையோ சேர்த்துக்கொண்டு போர் புரிகிறேன் என்றாயே , நீ மட்டும் என்ன தனியாகவா இருக்கிறாய்? எல்லாவற்றிலுங்கூட நான்தான் இருக்கிறேன். ஏதோ ஒரு ஸம்ஸ்கார விசேஷத்தால் நீ தனியாகத் தோன்றிக் கொண்டிருக்கிறாய். என்னை விட்டுத் தனியாக இருக்கக்கூடிய பொருள் ஏதும் கிடையாது" என்று இந்த வாக்கியத்தை அவனுக்குச் சொல்வாள். இதே போல், இந்த உலகத்தில், அத்வைதம் என்றால் என்ன என்று கேட்டால், 'நான்' (ஒரே பொருள்) அத்வைதம்; 'நீ' (இரண்டாவது பொருள்) என்பது ஏற்பட்டால் த்வைதம். அவ்வளவுதான் ! இதற்கு என்ன பொருள்? நாம் எல்லோரும் உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒருவனிடம் சென்று நாம், "நீ இல்லாவிட்டால் இந்த உலகம்

Koviloor Digital Library

இருக்குமோ" என்று கேட்டால், "உலகம் இருக்கும் என்று மற்றவர்கள் சொல்வார்கள், அவ்வளவுதான்" என்பான். வேடிக்கையாக ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. ஒரு நரி வெள்ளத்தில் சிக்கிக் கொண்டிருந்ததாம். "ஐயோ! இந்த உலகமெல்லாம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறதே!" என்று அது கூவிக் கொண்டிருந்ததாம். ஏனென்றால் அது வெள்ளத்தில் சிக்கிக் கொண்டிருந்தது. (உலகமனைத்துமா வெள்ளத்தில் சிக்கிக் கொண்டிருந்தது?)

உண்மையில், அறிவு என்பது எது இருக்கிறதோ, அதுதான் "நான்". அதே அறிவு வெளிப் பொருட்களுடன் தொடர்பு பெற்றுக் கொண்டால், பலவிதமான பெயர்களைப் பெறுகிறது. வெளி விஷயங்களின் தொடர்பு இல்லாமல் தூய்மையான அந்த அறிவு மட்டும் இருந்தால் அதற்கு எந்தப் பெயரும் எந்த வடிவமும் கிடையாது. அந்த அறிவு என்கிற பொருள் எது உள்ளதோ அதுதான் "நான்". அறிவு இருந்தால் உலகம் இருக்கும். அறிவு இல்லாவிடில் இவ்வுலகமும் இல்லை. இதுதான் அத்வைதக் கோட்பாடு. அறிவு என்பது உண்மையான பொருள். அறிவுக்கு மாறாக இருக்கக்கூடிய எல்லாப் பொருட்களும் அந்த அறிவினுடைய மாறுபாடுகள். ஆகையால் அறிவு எல்லாவற்றைக் காட்டிலும் மேன்மையாக இருக்கக்கூடியது. அதைத்தான் பரம்பொருளின் வடிவம் 'சச்சிதானந்த ஸ்வரூபம்' என்று சொல்வோம்.

அது 'சித்' (அறிவு) ஸ்வரூபமாக இருக்கக்கூடியது. அறிவு ஸ்வரூபமாக இருக்கும் ஒன்று துக்கமயமாக இருந்தால் அதனால் ஒரு பயனுமில்லை. எனவே அது ஆனந்த வடிவமானது. மேலும் அது "ஸத்" (எப்பொழுதும் இருக்கக்கூடியது) ஆகும்.

இப்பொழுது இந்த "சபை" என்பது இருக்கிறது. இன்னும் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு இது இருக்காது. அதேபோல், இரண்டு மணி நேரத்திற்கு முன் இது இருந்ததில்லை; இப்பொழுது இருக்கிறது. ஆனால் தூய்மையான அறிவு என்ற பொருளுக்கு "இருந்தது, இருக்கிறது, இருக்கும்" – இவை மூன்றும் ஒத்து வரும். வேறெந்தப் பொருளையும் இவ்வாறு சொல்ல முடியாது. "எப்போதும் இருந்தது, எப்போதும் இருக்கிறது, எப்போதும் இருக்கப் போகிறது" – என்ற ஒரு பொருள் நம் கண்களுக்குத் தோன்றுவதில்லை.

Koviloor Digital Library

ஆகாசவத் ஸர்வகதச்ச நித்ய: | (9.14)

(ஆகாசத்தைப் போன்று எங்குமிருப்பவன்; நிலைபெற்றவன்.)

(ஆகாசம்) வெட்டவெளி என்ற பொருள் ஒன்று இருக்கிறது. தர்க்க சாஸ்திரத்தில், "பரம்பொருளைப் போல் வெட்டவெளி (ஆகாசம்) இருக்கிறது" என்று கூறினர். அதற்கு வேதாந்திகள், "அப்படி இல்லை, வெட்டவெளி போல் எங்களுடைய பரம்பொருள் இருக்கிறது" என்றார்கள். அதற்கு என்ன பொருள்? அதாவது பரம்பொருளைப் பற்றி தெரியவைக்க வேண்டுமென்றால், பரம்பொருளை போன்றுள்ள எந்தப் பொருளையும் நாம் கூற முடியாது. ஆதலால்தான் அத்வைதிகள், "வெட்டவெளியைப் போல் எங்களது பரம்பொருள் இருக்கிறது" என்று கூறினர். மேலும் அத்வைதிகள் தார்க்கீகர்களை நோக்கி, "உங்களுக்கு ஒரு மயக்கம் (பிராந்தி) ஏற்பட்டிருக்கிறது. அதாவது, அந்த வெட்டவெளி இருந்தது, இருக்கிறது, இருக்கப் போகிறது என்ற மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், அந்த மயக்கத்தைக் கருத்தில் கொண்டு உதாரணம் கொடுக்க வேண்டியிருந்தால் இந்த வெட்டவெளியை உதாரணம் சொல்ல வேண்டும். ஆனால் எங்களுடைய நோக்கில் பார்த்தால், இந்த அறிவு (பரம்பொருள்) என்ற பொருள் இல்லாவிடில் அந்த வெட்டவெளியும் இல்லை. இந்த அறிவு இருந்தால்தான் வெட்டவெளி. இந்த அறிவே இல்லையென்று சொன்னால் அந்த வெட்டவெளியும் இல்லை. அதனால் அறிவிற்கு அப்பாற்பட்ட பொருள் ஏதும் கிடையாது. முக்காலங்களிலும் மாறாமல் இருக்கக்கூடிய பொருள் வேறு ஏதும் இல்லை" என்று கூறுவர்.

உலகமெல்லாம் மித்யை (பொய்) என்று சொன்னால், ஒரு புலி வந்தால் ஓடிப் போகாமல், அதன் வாயில் தலையைக் கொடுத்து விடலாம் என்று பொருள் அல்ல. உலகம் எப்போதும் நிலையாக இருக்கக்கூடிய பொருள் அல்ல என்பதுதான் கருத்து. நாம், "பரம்பொருளும் இல்லை – எந்தப் பொருளுமில்லை" என்று கூறும் சூன்யவாதிகளோடு சேர வேண்டிய அவசியம் இல்லை. இதுவரை நாம் அத்வைதத்திற்கு விளக்கம் கூறினோம். இந்த விஷயத்தை மேலும் தெளிவுபடுத்த வேண்டியிருந்தால் பின்வருமாறு ஆராயலாம்.

Koviloor Digital Library

"நாம்" விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விழிப்பு நிலையில் இருக்கும்போது, கனவுநிலை பொய் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். கனவில் இருக்கும் சமயத்தில் கனவில் பார்த்துக் கொண்டிருப்பதுதான் உண்மை. அந்த சமயத்தில் விழிப்பில் பார்த்தவை உண்மையாகக் கருதப்படுவதில்லை. ஸுஷுப்தியில் (உறக்கநிலையில்) கனவு நிலையும், விழிப்பு நிலையுமே ஒருவனைவிட்டுப் போய் விடுகின்றன. நாமாகவா அவைகளை விடுகிறோம்? அவ்வாறில்லை.

ஒருவன் ஒட்டகங்களை வளர்த்து வந்தான். ஒரு நாள் எல்லா ஒட்டகங்களும் தொலைந்து போய்விட்டன. அப்பொழுது அவன், "நான் பிழைத்தேன்!" என்றானாம். "ஏன் அப்படிச் சொல்கிறாய்" என்று கேட்டதற்கு, "நானே தொலைந்து போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்? நான்மட்டும் அப்படியே இருக்கிறேன். ஆனால் ஒட்டகங்கள் மட்டும் காணாமல் போய்விட்டன" என்று பைத்தியம் பிடித்தவன்போல் அவன் கூறினானாம். அது போல விழிப்பானாலும், கனவானாலும், உறக்கமானாலும் எல்லாம் வந்து போய்க்கொண்டே இருக்கின்றன. எது எப்படி விட்டுப் போனாலும் "நான்" என்பது மட்டும் எப்போதும் விட்டுப் போகவேயில்லை. ஒரு நாளைப் பற்றிய பேச்சே இப்படியென்றால், பக்ஷம், மாதம், பருவம், அயனம், வருடம், யுகம் ஆகியவை வந்து போய்க் கொண்டிருந்தாலும்கூட "நான்" இதே போல் இருப்பது தெரிய வரும். ஸ்ரீ வித்யாரண்யர், பஞ்சதசீயின் ஆரம்பத்தில் மிகவும் அழகாக இந்த தத்துவத்தை வெளிப்படுத்தினார்.

தயோரைக்யம் ச்ருத்யந்தேஷு உபதிச்யதே | (3.)

(அவர்களின் ஐக்கியம் வேதாந்தத்தில் உபதேசிக்கப் பட்டுள்ளது.)

எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கக்கூடிய ப்ரஹ்ம சைதன்யம் எது இருக்கிறதோ, அது இந்த (உடலிலுள்ள) சைதன்யத்தைக் காட்டிலும் வேறு அல்ல.ஒரே பொருள்தான் இருக்கிறது என்பதை உபநிஷத்து தெரிவிக்கிறது என்று அவர் சொன்னார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது, அத்வைத வேதாந்தம் சுலபமாக இருப்பதாக நமக்குத் தோன்றும்.

Koviloor Digital Library

இந்த அத்வைத சாஸ்திரத்தைப் படித்தால் நன்கு வாழ்க்கை நடத்தலாமா என்றால், சுகமாக நடத்தலாம் என்பதுதான் பதில். வேறு ஏதாவது சாஸ்திரத்தைப் படித்தால் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு, "நான் மேலானவன், நீ கீழானவன்" என்ற சண்டைதான் நடந்து கொண்டிருக்கும். ஆனால் அத்வைத சாஸ்திரத்தை மட்டும் படித்து அதற்குத் தகுந்தாற்போல் வாழ்க்கை நடத்தினால் அனைவரும் சுகமாக இருக்கலாம்.

த்வயி மயி சான்யத்ரைகோ விஷ்ணு:
வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: ।
ஸர்வஸ்மின்னபி பச்யாத்மானம்
ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதக்ஞானம் ॥ (3.1)

(உன்னிடத்திலும், என்னிடத்திலும், மற்ற இடத்திலும் ஒரே விஷ்ணுவானவர் (எங்கும் நிறைந்தவராக இருக்கிறார்); (அப்படியிருக்க) பொறுமையற்றவனாய், என்னிடத்தில் வீணாக கோபம் செய்கிறாயே; ஏன்? எல்லாப் பொருட்களிலும் தன் ஸ்வரூபத்தையே பார்; எவ்விடத்திலேயும் பேதத்தைத் தோற்றுவிக்கிற அக்ஞானத்தை விட்டுவிடு.)

இவ்வாறு சங்கரர் கூறியுள்ளார். ஆனாலும் மனிதன்

அஸௌ மயா ஹத: சத்ரு: ஹனிஷ்யே சாபரானபி । (10.11)

(அப்பகைவன் என்னால் கொல்லப்பட்டான், மற்றவர்களையும் கொல்லுவேன், நான் ஆளுபவன்.)

என்ற முறையில்தான் நடந்து கொள்கிறான்.

இதைப் பற்றித்தான் பகவதி அவ்வாறு கூறினாள். ஆத்மாதான் எல்லா வடிவங்களிலும் தோன்றுகிறது. ஒருவன் மற்றவனுக்குத் துயரம் விளைவித்தால் அவன் தனக்கே கேடு விளைவித்துக் கொண்டார்போல்தானாகும். நாம் இப்பொழுது பிள்ளை வேறு அப்பா வேறு என்று கூறுகிறோம். இவ்வாறுதான் சாதாரணமாக அனைவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் தகப்பன் இல்லாமல் மகன் வந்திருக்க முடியாது. தகப்பன்தான் புதல்வன் வடிவமாக வந்திருக்கிறார். ஆகையால் சாஸ்திரம் தந்தைக்கும் மகனுக்கும் வேற்றுமை இல்லை என்கிறது. இதற்கு என்ன பொருள் ?

Koviloor Digital Library

ஆத்மா வை புத்ரநாமாஸி I (4.)

(நீயே புத்திரனின் பெயரோடு இருக்கிறாய்.)

"நீர் தான் புதல்வன் என்ற பெயர் வைத்துக் கொண்டு வெளியில் வந்திருக்கிறீர்" என்று பொருள். ஒரே ஒரு மனிதனாக இருந்த தந்தை, புதல்வன் என்று பெயர் வைத்துக் கொண்டு வெளியில் வந்திருக்கிறான். புதல்வன் என்று பெயர் தாங்கி வெளியில் வந்தவுடனேயே, அந்தப் புதல்வன் மிகவும் சுகமாக இருக்க வேண்டும் என்ற ஆசையை அந்தத் தந்தை வைத்துக் கொண்டிருப்பான். மிக நல்ல வாழ்க்கை நடத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பான் பாருங்கள் ! புதல்வனுடைய நல் வாழ்வைப் பார்த்துத் தான் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்று எதிர்பார்ப்பான். புதல்வனுக்கே கெடுதல் செய்யும் தந்தையர் சிலரும் இருக்கலாம். மகன் அரியணையைப் பிடித்துக் கொண்டு விடுவானோ என்ற எண்ணம் கொண்டு அவனைக் கொன்று விட்டுத் தானே ஆட்சி புரிய வேண்டும் என்று சில தந்தையர் எண்ணியிருக்கலாம். பிள்ளையும் தந்தை விஷயத்தில் இதே போன்ற எண்ணம் கொண்டிருக்கலாம். ஆனால் இது மிகவும் அரிது. ஆகவேதான்,

ஆத்மா வை புத்ரநாமாஸி

தானே புதல்வனாக வெளிவந்திருக்கிறான் தந்தை என்று சாஸ்திரம் கூறுகிறது. அதேபோல் இந்த உலகத்தில் இருக்கின்ற எல்லா உயிர்களிலும், பொருட்களிலும் ஒரே சைதன்யம்தான் விளங்குகிறது.

· *த்வயி மயி சான்யத்ரைகோ விஷ்ணு:*

(என்னிடத்திலும், உன்னிடத்திலும் ஒரே சைதன்யம்தான் இருக்கிறது.)

ஒரே சைதன்யம் ஓரிடத்தில் ஒரு வடிவத்தில் விளங்கிக் கொண்டிருக்கும். மற்றோர் இடத்தில், மற்றொரு உருவத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கும். ஒரே மின்சாரம் பலவிதமாக நமக்குக் காணப்படுவதில்லையா ?

வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: I

Koviloor Digital Library

(அப்படியிருக்க பொறுமையற்றவனாய், என்னிடத்தில் வீணாக கோபம் செய்கிறாயே, ஏன்?)

"இவ்வாறிருக்கும் போது ஒருவன் மேல் மற்றொருவன் ஏன் கோபம் கொள்ள வேண்டும்? ஒருவன் ஏதாவது நல்ல உடைகள் அணிந்து கொண்டிருக்கிறானென்றோ அல்லது ஏதாவது நல்ல உணவு உட்கொள்கிறானென்றோ ஏன் மற்றொருவன் கோபப்பட வேண்டும்?" என்று சங்கரர் கேட்கிறார்.

என்னைப் பொருத்த வரையில் இந்த உலகத்தில் எது நியாயம் எது அநியாயம் என்று சொல்லவே முடியாது. நமது நாட்டில் சாலையில் இடது பக்கம் செல்வதுதான் நியாயம். ஆனால் அமெரிக்காவில் வலது பக்கம் செல்வதுதான் நியாயம். அங்கே வலது பக்கம்தான் கார் ஓட்டிச் செல்ல வேண்டும். இடது பக்கம் ஓட்டிச் சென்றால் போலீஸ்காரன் பிடித்துச் சென்று விடுவான். ஆனால் இங்கே வலது பக்கம் ஓட்டினால் போலீஸ் வந்து விடுவான்.

உலகில் ஒழுங்கு முறையை ஏற்படுத்துவதற்காக நாமே ஏதோ ஓரிரண்டு கற்பனைகளைப் பண்ணி வைத்துள்ளோம். அதனால்தான் இந்த உலகம் முழுவதும் கற்பனையை அடிப்படையாகக் கொண்டது என்று கூறுகிறோம்.

இடது பக்கம் செல்ல வேண்டும் என்பதும், வலது பக்கம் செல்ல வேண்டும் என்பதும் நமக்குத் தேவையில்லாவிட்டாலும் ஏதாவது ஒரு சட்டம் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் இருவரும் ஒரே பக்கம் காரைக் கொண்டு வந்தால் எல்லாமே விபத்தாகி விடும். அப்படி ஆகக் கூடாது. ஆகவேதான் நியமங்கள் ஏற்பட்டுள்ளன. எல்லாம் நமது மனத்தளவில்தான் இருக்கின்றன.

ஸர்வஸ்மின்னபி பச்யாத்மானம்

(எல்லாப் பொருட்களிலும் தன் ஸ்வரூபத்தையே பார்.)

என்று கூறப்பட்ட வகையில், எல்லோரிடத்திலும் நாம் ஒரே பரமாத்மாவைப் பார்த்துக் கொண்டு வந்தால் அப்பொழுது "இவன் வேறு அவன் வேறு" என்ற எண்ணமே ஏற்படாது.

ஒருவர், "யார் இன்புற்றிருக்கிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவர்; யார் துன்புற்றிருக்கிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவர்

Koviloor Digital Library

இல்லை – என்ற அளவிற்குத்தான் தெரிந்து கொண்டுள்ளேன். துன்புற்றிருப்பவர்கள் என்னைச் சார்ந்தவர் என்றெண்ணி, பின்னர் அவர்கள் துன்புற்றிருக்கிறார்களே என்று நான் துயரெய்துவதை விட, யார் இன்புற்றிருக்கிறார்களோ அவர்களே என்னைச் சார்ந்தவர் என்று எண்ணிக் கொள்வேன்" என்று கூறினாராம்.

(எல்லோரிடத்திலும் ஒரே பரமாத்மாவே உள்ளது என்றுதான் கருத வேண்டும்.)

வித்யாரண்யர் ஓரிடத்தில் சொல்கிறார் : "இதோ பார் ! ஈச்வர சிருஷ்டி , ஜீவ சிருஷ்டி என்று இரண்டு உள்ளன. ஈச்வர சிருஷ்டி நமக்கு அவ்வளவு துயரத்தைத் தருவதில்லை. இந்த ஜீவ சிருஷ்டிதான் பெரிய தீவினைப் பயனாக ஆகிறது" என்று உரைத்தார் அவர். அப்படியென்றால் என்ன ?

ஒருவனுடைய மகன் காசிக்கு சென்றிருந்தான். காசியிலிருந்து வந்த ஒருவர் "உங்கள் மகன் இறந்து விட்டான்" என்று அந்த மனிதரிடம் சொன்னார். மிகுந்த வருத்தமடைந்த அத்தந்தை பிள்ளைக்காக சிரார்த்தம் செய்யத் துவங்கிவிட்டான். பின் என்ன செய்வான்? சிரார்த்தம் செய் என்று சாஸ்திரம் சொல்கிறதே! அதற்குப்பின் மற்றொருவர் வந்து சொன்னார், "இல்லையப்பா, உன் மகனை நான் காசியில் பார்த்தேன்" என்று. இதைக் கேட்டவுடன் "ஐயையோ, நான் சிரார்த்தம் பண்ணியதெல்லாம் வீணாகிவிட்டதே! இப்போது என்ன செய்வது?" என்று கூறிப் பின்னர் மகிழ்வுறுகிறான். அதனால் மகனுடைய இறப்போ, இருப்போ அவனது இன்ப துன்பங்களுக்குக் காரணமில்லை. அந்த இறப்பு, இருப்பு சம்பந்தப்பட்ட அறிவு வந்ததே, அதுதான் இது எல்லாவற்றிற்கும் காரணம். ஆகவே அதுதான் இங்கு இருக்கக்கூடிய ஜீவ சிருஷ்டி. அவன் வாஸ்தவத்தில் எப்படி இருக்கிறான் என்பதை ஈச்வர சிருஷ்டி குறிக்கிறது.

மற்றொருவனுடைய கைக்கடிகாரத்தைவிட நம் கடிகாரம் பார்ப்பதற்கு நன்றாக இருந்தால் மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அதே சமயம் மற்றொருவனுடைய கடிகாரம் நம்முடையதைவிட நன்றாக இருக்கும்போது நம் மனதில் ஆதங்கமும் வருத்தமும் ஏற்படுகிறது. மொத்தத்தில் இன்ப துன்பங்கள் பற்றுதலினால் மட்டும்தான் இருக்கின்றன. ஆகவே வேற்றுமை பாராட்டி

Koviloor Digital Library

மற்றவனுடைய சுகத்தை நாசம் செய்து நாம் சுகத்தை அனுபவிக்க வேண்டுமா? வேண்டாம். அவனும் பரம்பொருளின் வடிவம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தேயம் தீனஜனாய ச வித்தம் | (5.)

(ஏழை ஜனங்களுக்கும் பொருள் கொடுக்கப்பட வேண்டும்.)

ஆதரவற்ற நிலையில் யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு எப்படியாவது ஒரு மகிழ்ச்சியான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

ஸந்தோஷம் ஜனயேத் ப்ராக்ஞ: ததேவேச்வரபூஜனம் (6.)

(கருத்து : பிறருக்கு (அறிவுடையோருக்கு) மகிழ்ச்சியை உண்டுபண்ணினால் அதுவே ஈச்வர பூஜை எனப்படும்.)

அவ்வாறு மகிழ்ச்சியை உண்டாக்கும்பொழுதும் சாஸ்திரத்திற்குப் புறம்பான வழிகளில் உண்டு பண்ணக் கூடாது. நடைமுறைக்கு ஒவ்வாத முறையில் செய்யக் கூடாது. யாரோ ஒருவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். நாம், "இதை வாங்கிக்கொள், ஏதாவது குடித்துக்கொள்," என்று இரண்டு ரூபாயைக் கொடுத்துவிட்டு, அவனுடைய துக்கம் நீங்கிவிட்டது என நினைத்துக் கொண்டால் அது சரியாகாது. உழைக்கும் துன்பத்தை ஒருவன் அனுபவித்துத்தான் தீர வேண்டும். ஆனால் நடைமுறைக்கு ஒவ்வாமல் எந்தத் துன்பம் இருந்தாலும் அதை நாம் போக்க வேண்டும். இது அத்வைத தத்துவ அறிவினால் வரக்கூடிய முதல் பாடம்.

சங்கரபகவத்பாதாள் மற்றொரு இடத்தில் இன்னொரு விஷயத்தைப் பற்றிக் கூறியுள்ளார். ஒருவன் ஒரு பத்து ரூபாயைப் பையில் எடுத்துக்கொண்டு சந்தைக்குப்போய் ஏதாவது காய்கறிகள் வாங்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தான். ஊர் அவனுக்குப் புதியது. பாக்கெட்டில் அவன் வைத்துக்கொண்டிருந்த பணத்தை எடுப்பதற்காகவே பலர் அங்கு இருந்தனர். அதில் ஒருவன் அவன் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்துவிட்டான். நமது மனிதன் பணம் பறிபோன துக்கத்தினால் வீடு திரும்பியபின் அழுதுகொண்டேயிருந்தான். "இன்று நான் காய்கறிகளை வாங்கிவந்து சுகமாகச் சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அநியாயமாக எவ்வாறு பணம் தொலைந்ததோ

Koviloor Digital Library

தெரியவில்லை. கீழே போட்டேனா அல்லது யாராவது திருடி விட்டார்களா என்றே தெரியவில்லை. இது என்ன கஷ்டகாலம்" என்று கவலையுற்றான் அவன். ஆனால் அதே மனிதன் வேறொரு சமயம் பணத்தோடு போய்க் கொண்டிருக்கும் பொழுது யாரோ ஓர் ஏழைப் பையன் அவனிடம் வந்து, "ஐயா, நான் ஓர் ஏழைப் பையன். S.S.L.C. தேர்வு எழுத பரீட்சைக்காகச் செலுத்த என்னிடம் பணம் இல்லை. தாங்கள் எனக்குப் பணம் கொடுத்தால் என்னால் எழுத முடியும்" என்று கூறினான். அப்போது நம் மனிதனுக்கு மனதில் இரக்கம் ஏற்பட்டுவிட்டது. பணத்தை பையனுக்கு எடுத்துக் கொடுத்துவிட்டான். சந்தைக்குப் போகாமல் நேரே வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டான். முதலில் என்ன செய்தான்? சந்தைக்குப் போய் அங்கே தன்னுடைய பையில் பணம் இல்லாததைப் பார்த்து, வீட்டுக்குத் திரும்பி வந்து அழுது கொண்டிருந்தான். ஆனால் இப்பொழுது பாதி வழியிலேயே திரும்பிவிட்டான்.

"சீக்கிரமே திரும்பிவிட்டீர்களே! என்ன காய்கறி வாங்கியுள்ளீர்கள்?" என்று வீட்டில் கேட்டார்கள். அதற்கு அவன், "இன்று ஒரு நல்ல காரியம் செய்துள்ளேன்; பத்து ரூபாயை ஒரு பையனுக்குக் கொடுத்து உதவியுள்ளேன்" என்று கூறினான். இரண்டு தினங்களிலும் பணத்தை இழந்தது என்பது ஒன்றுதான். அதில் வேறுபாடு இல்லை. இன்று அவனாகவே ஒரு பையனுக்கு எடுத்துக் கொடுத்தான். அன்று யாரோ பையிலிருந்து திருடி விட்டார்களோ, கீழே விழுந்து விட்டதோ தெரியாது. ஏதோ ஒன்று ஆயிற்று. ஆனால் பணம் போய்விட்டது. இன்று மகிழ்ச்சியாக இருக்கிறது. அன்று வருத்தமாக இருந்தது. பணத்தை இழந்தது எவ்வாறு மகிழ்ச்சிற்கோ வருத்தத்திற்கோ காரணமாக அமைய முடியும் ? இங்கே இழப்பு காரணமா ? அல்லது நம் அறிவா? அன்று, "இழந்து விட்டேன்" என்று அழுதான். இன்று மொத்தத்தில் பணத்தை இழந்தாலும்கூட, பணத்தைத் தானே கொடுத்ததால் மகிழ்ச்சியாக இருக்கிறான். இது விசித்திரமாக இல்லையா?" என்று சங்கரர் சொன்னார்.

த்ரவ்யம் பல்லவதச்ச்யுதம் யதி பவேத் க்வாபி ப்ரமாதாத்ததா
சோகாயாத ததர்பிதம் ச்ருதவதே தோஷாய ச ச்ரேயஸே ।
ஸ்வாதந்த்ர்யாத்விஷயா: ப்ரயாந்தி யதமீ சோகாய தே
ஸ்யுச்சிரம்

Koviloor Digital Library

ஸந்த்யக்தா: ஸ்வயமேவ சேத்ஸுகமயம் நி:ச்ரேயஸம்
தன்வதே || (7.)

(பழுத்துக் கனிந்த ஒரு கனி காம்பிலிருந்து நழுவி எங்காவது போய்விடுமானால் அப்போது அது மன வருத்தத்தையே தரும். அவ்வாறில்லாமல் அது வேதங்களைக் கற்ற ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டால், மகிழ்ச்சிக்காகவும் (பின்னால்) நன்மைக்காகவும் பயன்படுகிறது. இந்தப் புலன் விஷயங்கள், தம் இஷ்டப்படி சென்று விடுமானால் அவைகள் நீண்டகாலம் துன்பத்தைத் தருவதாகவே இருக்கும். தாமாகவே (நம்மால்) விடப்படுமாகில் இன்பம் நிலவும் மோக்ஷத்தைத் தருகின்றன.)

இதேபோல் இந்த உலகத்திலுள்ள விஷயங்கள் என்றாவது ஒரு நாள் அழிந்து போவது உறுதி. நாம் அவற்றை விட்டுவிட வேண்டுமா? அல்லது அவை நம்மை விட வேண்டுமா என்பதுதான் இப்போதைய கேள்வி.

விஷயங்களாகவே நம்மை விட்டுவிட்டால் நாம் அழுது கொண்டிருப்போம். நாமே அவற்றை விட்டுவிட்டால் மகிழ்ச்சியாக இருப்போம். நான் நாகபுரிக்கு (நாக்பூர்) அப்பால் பயணம் செய்யும்போது வழியில் பல மன்னர்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டியுள்ள ஏராளமான கோட்டைகளைப் பார்த்தேன். ஒருவரிடம் நான், "கோட்டைகளைக் கட்டியவர்கள் அங்கே கொஞ்ச காலமாவது ஆட்சி புரிந்தார்களா?" என்று கேட்டேன். அதற்கு "மன்னர்கள் கோட்டையைக் கட்டினார்கள்; ஆனால் சிறிது காலத்தில் பகைவர்கள் அவற்றை ஆக்கிரமித்துக் கொண்டார்கள்", என்ற பதில்தான் கிடைத்தது. ஆகவே இத்தகைய கோட்டைகள்தான் நிறைய இருக்கின்றன. உண்மையிலேயே, அரசர்கள் வாழ்ந்த கோட்டைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. "அந்த அரசன் எப்பேற்பட்ட பைத்தியக்காரன் ? வீணாக இந்த கோட்டைக்கென கஷ்டப்பட்டு ஒரு பயனுமில்லாமல் மாண்டு போனானே!" என்று நமக்கு இப்போது நினைக்கத் தோன்றும். ஆனால் நாம் இப்பொழுது செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, "நாம் செய்வது பைத்தியக்காரத்தனமான செயல்கள்" என்பது நமக்குத் தோன்றவே தோன்றாது.

Koviloor Digital Library

பணத்தை வங்கிகளில் போட்டுக் கொண்டேயிருப்போம். சிலருக்குப் பணத்தை வங்கிகளில் போடுவதே ஒரு வேலையாகிவிட்டது. செல்வந்தன் ஒருவன் திடீரென்று ஒரு நாள் கண்ணை மூடிவிட்டால் அது அந்த வங்கிக்காரர்களுக்கு மிக்க மகிழ்ச்சியான விஷயம். ஏனென்றால் செல்வந்தனின் பணத்தை எடுத்துச்செல்ல யாரும் வரமாட்டார்கள். தங்களுக்குள் பிரித்துக் கொண்டு வங்கி நடத்துபவர்களே சாப்பிட்டுவிடலாம்! (ஆகவே பலருக்கும், பணத்தை சேர்த்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்பது போன்ற பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள் மனதில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன.)

பகவத்பாதாள் நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்ல (உபநிஷத்துக்களில் உள்ள) அத்வைதத்தை உபதேசித்தார் என்றுதான் நாம் சொல்ல வேண்டுமே தவிர, பகவத்பாதாள்தான் அத்வைதத்தையே ஏற்படுத்தினார் என்று நாம் சொல்ல முடியாது. அத்வைதம் என்பது உபநிஷத்துக்களில் தெளிவாக்கப்பட்டுள்ள கோட்பாடு ஆகும்.

நாம் இந்த உலகத்தை "ஆரம்பமே இல்லாதது" என்று கருதுகிறோம். இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையுடனும் இருக்கிறோம். இறைவன் உலகத்தைப் படைக்கும் போது விதிகளை ஏற்படுத்தினான் என்ற நம்பிக்கையும் நமக்கு உண்டு. இத்தகைய வைதிக மார்க்கம் தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கிறது. இதுவரை அதன் கொள்கைகள் நமக்குக் கிடைத்து வந்திருக்கின்றன. (ஆனாலும் இத்தகைய மதத்தில் சிலர் அவ்வளவாகப் பற்றுக்காட்டாமலிருக்கிறார்கள்.)

அதிபரிசயாதவக்ஞா பவதி விசிஷ்டேதி வஸ்துனி ப்ராய: |
நித்யம் ப்ரயாகவாஸீ கூபஸ்நானம் ஸதாசரதி || (8.)

(கருத்து:- ஒரு பொருளில் மிகுந்த தொடர்பு ஏற்பட்டால் பொதுவாக அதன்மேல் முன்பு வைத்த முக்கியத்துவம் குறைந்து விடுகிறது. தினமும், பிரயாகையிலேயே வசித்தாலும் (ஒருவன்) கிணற்று நீரில் குளிப்பதையே மேற்கொள்கிறான்.)

நாம் குளிர்காலத்தில் காசிக்குச் சென்றாலும் கங்கையில் குளிப்போம். ஆனால் அதே ஊரில் வாழ்பவன் வைகாசி மாதம் கூட

Koviloor Digital Library

அங்கே சென்று குளிக்கமாட்டான்! “வீட்டில் வெந்நீரிலேயே குளிக்கலாம், நதிக்கு யார் போவார்கள்” என்று கூறுவான். நாமும் வைதிக வழியிலேயே (நமது மதத்திலேயே) இருந்தாலும், மனதில் உள்ள தீய வாசனையினால் நம் மதத்தின் மீதுள்ள சிரத்தை குறைந்து நமக்குள் இருந்த அறிவு மலிந்து விட்டிருக்கும் சமயத்தில், யாராவது ஒருவர் வந்து அதை மீண்டும் ஒளிர்விக்க வேண்டியிருக்கிறது. அத்தகைய ஒரு சமயத்தில்தான் பகவத்பாதாள் அவதரித்தார். ஆகவே சங்கரர் அத்வைத தத்துவத்தை விளக்கினாரேயொழிய இதைப் புதிதாக உற்பத்தி செய்யவில்லை. அவருக்கு முன்னால் வாழ்ந்தவர்களும் அத்வைதத்தை அறிந்திருந்தனர். உபநிஷத்துக்களிலுள்ள அத்வைதத்தை விளக்கிக் காட்டியவர்கள் அவருக்கு முன்னரும் இருந்தனர்.

ஜீவோ ப்ரஹ்மைவ நாபர: (9.)

(ஜீவன் பரம்பொருள்தான், வேறொன்றுமில்லை.)

இதுவரை “நாமே பரம்பொருள்” என்பதைப் பற்றிப் பார்த்தோம்.

ஓர் அன்பர் “அத்வைதம் பற்றிக் கேட்டாகி விட்டது. இனி பசித்தால் சாப்பிட வேண்டுமா, வேண்டாமா? நான் இப்பொழுது சாப்பிடலாமா, கூடாதா?” என்று கேட்டார். இது நியாயமான கேள்வி.

அத்வைதத்தைப் பற்றி ஒருவன் கேட்டுக் கொண்ட மாத்திரத்தில் ஞானம் உதயமாகி விடுவதில்லை. அத்வைதம் ஒருவனுடைய அனுபவத்திலேயே வர வேண்டும்.

அன்பர் ஒருவர் பொருளாதார வல்லுநராக இருந்தார். ஆனால் அவரிடம் செல்வமே கிடையாது. ஆனால் ஒரு மார்வாடி ‘சேட்’டினுடைய வாழ்வு முழுவதும் செல்வமாக இருக்கிறது. பொருளாதார வல்லுநருக்கு பொருளாதாரப் பாடத்தை மாணவர்களுக்குக் கற்றுத்தரும் பொறுப்பு மட்டும் உள்ளது.

ஆனால் ஒரு மனிதன் மார்வாடி வம்சத்தில் பிறந்த காரணமோ – அல்லது குஜராத்தி வம்சத்தில் பிறந்த காரணமோ – பிறந்தவுடனேயே செல்வந்தன் ஆகிவிட்டான். நம் ஊருக்கு வரும்போது அவன் ஒரு ஜிப்பாவுடன் வருவான். ஐந்தாறு வருடங்கள் கழித்துப் பார்த்தால் ஒரு பெரிய கடை வைத்திருப்பான்.

Koviloor Digital Library

அதற்குப் பிறகு சிறிது காலம் கழித்து, "சேட்ஜி" ஆகிவிடுவான். அதற்குப் பிறகு ஒரு மாடி வீடு கட்டிவிடுவான். என்ன இது? அவன் பொருளாதாரம் படிக்கவில்லை. அவன் வாழ்க்கையே பொருளாதாரமாய் இருக்கிறது! நமது வல்லுநர் பொருளாதாரத்தை நன்கு கற்று உருப்போட்டு அதைப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். (ஆனால் அவர் மட்டும் ஏழையாகவே இருக்கிறார்.) இவ்வளவுதான் வித்தியாசம்.

சிலர் தம் மனைவி குழந்தைகளையெல்லாம் விட்டுவிட்டு ஆயிரம் மைல்கள் தாண்டி நம் தேசத்திற்கு வருவர். ஆரம்ப காலத்தில் வெயில், குளிர், காற்று இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், வீடு வீடாகப் பனியன் விற்கச் செல்வர். ஒரே வேளை மட்டும் உணவு உண்டு வாழ்க்கை நடத்துவர். பணம் வந்த பிறகு அந்தப் பணத்தை எப்படி பெருக்குவது என்பதில் சிந்தனை செல்லும். சாப்பிட்டுக்கொண்டே மட்டும் இருக்கலாம் என்ற எண்ணம் வரவே வராது. மிகக் கஷ்டப்பட்டு அவர்கள் முன்னேறுவர். நாம் என்ன செய்வோம்? ஐந்து ரூபாய் கிடைத்தால் மேலும் ஐந்து ரூபாய் கடன் வாங்கிச் சாப்பிடுவோம். பொருளாதாரத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க நாம் தகுதியில்லாதவர். ஏனென்றால் நாம் அவ்வளவு முயற்சி எடுத்துக் கொள்வதில்லை. மானம், அவமானம் எதையும் சகித்துக்கொள்வது கிடையாது. ஆனால் ஒரு மார்வாடி சேட்ஜியை எவ்வளவு வேண்டுமானாலும் குறை கூறுங்கள். அவர் கொண்டு வந்துள்ள பொருள்கள் நன்றாக இல்லை என்று வேண்டுமானாலும் அவரிடமே சொல்லுங்கள். ஆனாலும் அவர், "இல்லை, ஐயா ! இது மிகவும் சிறந்த பொருள் உங்களுக்காகத்தான் கொண்டு வந்துள்ளேன்," என்றெல்லாம் சொல்லி நமது மனதைத் திருப்தி செய்துவிட்டுத்தான் செல்வான். நாம் இப்படியெல்லாம் யாரிடமுமே பேசமாட்டோம். ஏனென்றால் நமக்கு அந்த வியாபார முறைகளெல்லாம் தெரியாது. 'சேட்'ஜிக்கு அந்த வியாபார முறை தெரியும்.

(இது வரை நாம் பார்த்த உதாரணங்களிலிருந்து அத்வைதத் தத்துவத்தை நாம் அனுபவத்தில் கொண்டு வர சில தகுதிகள் வேண்டும் எனத் தெரிகிறது.)

Koviloor Digital Library

அதிகாரிணமாசாஸ்தே பலஸித்திர்விசேஷத: (2.22)

(ஏற்படும் பலனானது முக்கியமாக அதிகாரியை (தகுதியுள்ளவனை) எதிர்பார்க்கிறது.)

வேதாந்தத்தைப் படிப்பதற்குப் பலருக்கும் தகுதி இருந்தாலும் பரம்பொருளைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு அனைவருக்கும் தகுதி கிடையாது. ஓர் அரசன் ஒருவனிடம், "இதோ பார் ! நான்கு வேதங்களைத் தெரிந்தவனுக்கு இந்த தானத்தைக் கொடு" என்றான்; இதைக் கேட்ட மனிதன் தானத்தைத் தனக்கே அளிக்கும்படியாகக் கேட்டான்.

அரசன் : என்ன, உனக்கு ஏனப்பா தானம் தர வேண்டும்?

அவன் : எனக்குத் தெரிந்து விட்டதே வேதம் நான்கு என்று !

அத்தகைய பதில் கூறிய மனிதனை என்ன செய்ய முடியும்? இதேபோல் நாம் வேதாந்தத்தை மேலோட்டமாகப் பார்த்தால் அதனால் ஒரு பயனுமில்லை.

"ஏதோ பரம்பொருள் என்ற ஒன்று எங்கும் உள்ளதாம், எப்போதும் உள்ளதாம்" என்று மட்டும் ஒருவனுக்குத் தெரிந்து அத்துடன் விட்டுவிட்டால் ஒரு பயனுமில்லை.

வைதுஷ்யம் விதுஷாம் தத்வத்புக்தயே ந து முக்தயே । (4.5)

(அறிவுத் திறமை, புகழ், பணம் முதலிய போகத்தை அடைய உபயோகப்படுமே தவிர, ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு சிறிதளவேனும் பயன்படாது.)

சாஸ்திரங்களை வெறுமெனப் படித்தால் யாருக்காவது நாம் பாடம் சொல்லிக் கொடுக்கலாம்; அதனால் நாம் வாழ்க்கை நடத்தலாம். அவ்வளவுதான். யாருக்கு வேதாந்த சாஸ்திரம் பலனுடையதாகிறது என்று கேட்டால் ஒருவர் ,

அதீதேஜ்யாதானம் வ்ரதஜபஸமாதானநியமை:
விசுத்தஸ்வாந்தானாம் ஜகதிதமஸாரம் விம்ருசதாம் ।
அராகத்வேஷாணாம் அபயசரிதானாம் ஹிதமிதம்
முமுக்ஷூணாம் ஹ்ருத்யம் கிமபி நிகதாம: ஸுமதுரம் ॥ (10.)

Koviloor Digital Library

(கருத்து :– சாஸ்திரங்களை நன்கு கற்று, தானம், விரதம்,ஜபம் ஸமாதி முதலியவைகளினால் மனத்தூய்மை பெற்று உலகம் சுவையற்றது எனத் தெரிந்துகொள்ள வேண்டும். ராகத்வேஷம் இல்லாதவர்களுக்கும், பயமற்று வாழ்க்கை நடத்துபவர்களுக்கும், முமுக்ஷுக்களுக்கும் பிரியமாகவும் இனிமையாகவும் இருக்கும் இந்த விஷயத்தைக் கூறுகின்றோம்.)

என்று கூறினார்.

விமானம் எப்படிப் பறக்கிறது என்று கேட்டால், அதற்கு ஒரு பெரிய படிப்பு இருக்கிறது; அந்தப் படிப்பைப் படிக்காமல் அக்கலை எளிதாக நமக்குத் தெரிய வராது. ஒரு கல்லை மேலே போட்டால் கீழே வந்து விடும். ஆனால் விமானம் மட்டும் மேலேயே பறந்து கொண்டிருக்கும். நம்மைப் பொறுத்தவரையில், "விமானத்துக்கு 'பெட்ரோல்' போட வேண்டும். அதற்கு 'எஞ்ஜின்' உள்ளது" என்று மட்டும் தெரியும். அது எப்படி ஓடுகிறது என்று யாராவது கேட்டால் அது நமக்குத் தெரியாது. நாம் நான்கு வருடம் வந்து படித்தால் விமானம் எப்படி ஓட்டுவது என்பதைக் கற்கலாம். விமானம் எவ்வாறு இயங்குகிறது என்பது விமான ஓட்டிக்குக் கூடத் தெரியாது. அவருக்கு அதை ஓட்டத்தான் தெரியும். இஞ்ஜினீயருக்கு விமானம் எவ்வாறு இயங்குகிறது என்பது தெரியுமே தவிர விமானத்தை ஓட்டத் தெரியாது.

இதேபோல், வேதாந்த சாஸ்திரத்தைப் படிக்க வேண்டியிருந்தால் ஒரு தூய்மையான ஸம்ஸ்காரம் வேண்டும். அது என்ன ஸம்ஸ்காரம்? பள்ளிப் பையன்கள் தினமும் பாடம் படித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் தேர்வு நெருங்கும் சமயத்தில் அவர்கள் படிக்கும் முறையே தனி. அப்பொழுது சினிமா பார்க்கமாட்டார்கள். விளையாடச் செல்லவே மாட்டார்கள். வீட்டில் ஏதாவது வேலை செய்யச் சொன்னாலும் அதைச் செய்ய மாட்டார்கள். எப்பொழுதுமே பெரியோர் சொல்வதைக் கேட்காமல் இருக்கலாம். ஆனால் தேர்வு சமயங்களில் கண்டிப்பாக பெரியோர் சொற்படிக் கேட்பதே இல்லை! படிக்கும் சமயத்தில் மனம் ஒருநிலை அடைய வேண்டும். ஊர் சுற்றுவது, விளையாடச் செல்வது, சினிமாவிற்குப் போவது இவையெல்லாம் இருந்தால் படிக்க முடியாது. இந்த ஒரு சிறிய தேர்வில் தேறுவதற்கே அந்த மன–ஒருமுக–நிலை (சித்த ஏகாக்ரதை) தேவை. இப்படி இருக்கும்பொழுது,

தம் துர்தர்சம் கூடமனுப்ரவிஷ்டம்

Koviloor Digital Library

குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம் (1.18)

(கருத்து : பரம்பொருளானது காண்பதற்கு அரியது, உள்ளே இருப்பது, புரிந்து கொள்ளக் கடினமானது, பழமையானது ஆகும்.)

அறிந்துகொள்ள வேண்டிய எல்லாப் பொருட்களைக் காட்டிலும் மிக நுட்பமானதான பொருளின் விஷயத்தில் எத்தகைய மன–ஒருமுகம் தேவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. வெளிப் பொருள் கவர்ச்சியாக இருக்கிறது என்று எண்ணி மனது அங்கே சென்றால் அப்பொழுது தியானம் செய்ய முடியாது. வேறு எந்த வெளிப் பொருளும் மனதை இழுக்க முடியாது என்ற நிலை வந்தால் அதைத்தான் 'வைராக்யம்' என்று சொல்வர். அது மிகவும் தேவை.

உலகத்தில் எவ்வளவு பார்க்க வேண்டும்? இந்த ஸம்ஸாரத்திலிருந்து எவ்வளவு நம் வாழ்க்கைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் ? இதிலிருந்து என்ன தெரிந்து கொள்ள வேண்டும்? என்பதை முதலில் ஆராய வேண்டும். வாழ்க்கை ஒழுங்காக நடத்தி நம் உண்மையான ஸ்வரூபத்தின் அறிவை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்கிற அறிவு இல்லாமல், ஏதாவது பாயஸம் பண்ணினால் அது வேண்டும், ஏதாவது ஜிலேபி இருந்தால் அதுவும் வேண்டும், இன்னும் வேறு ஏதாவது இருந்தால் அதுவும் தேவை என்று இவ்வகையிலேயே வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருந்தால் மன–ஒருநிலைப்பாடு அடையவே முடியாது. ஆகவே வைராக்யம் பெற வேண்டும் என்பது மிக அவசியமானது.

புக்தா பஹவோ தாரா லப்தா: புத்ராச்ச பௌத்ராச்ச |
நீதம் சதமப்யாயு: ஸத்யம் வத மர்துமஸ்தி மன: || (12.19)

(பல மனைவிகளை அனுபவித்துவிட்டாய். புத்திரன்களும், பேரன்களும் பிறந்து விட்டார்கள். நூறு வருடம் வாழ்ந்து விட்டாய். ஆனால் உண்மையைக் கூறு. (உன்) மனம் மரணத்திற்குச் சித்தமாக இருக்கிறதா? (இல்லவே இல்லை.))

என்று நீலகண்ட தீக்ஷிதர் கூறுகிறார்.

Koviloor Digital Library

ஒரு மனைவி போதாமல் நான்கு பேரைத் திருமணம் செய்து கொண்டு ஸம்ஸாரத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்திருந்தாலும் ஒருவனுக்கு இவ்வுலகத்தை விட்டுப் போவதற்கு மனது வருவதில்லை.

ஸத்யம் வத மர்துமஸ்தி மன: ||

பிள்ளைகள், பேரன்கள் ஆகியவர்களனைவரும் பெற்றாயிற்று. இப்போது உண்மையாகச் சொல், ஸம்ஸாரத்தை விட்டு வெளியில் வருவதற்கு கொஞ்சமாவது மனம் இருக்கிறதா? எல்லாவற்றையும் தன்னுடன் கட்டிக்கொண்டு செல்ல வேண்டும் என்றுதான் ஒருவன் விரும்புவான். வீணாக வாயினால் (நாம் ஆத்மாவைப் பற்றி) சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர உண்மையில் அனுபவத்தில் தெரிந்திருப்பதில்லை. இதற்கு என்ன காரணம்?

அதீதேஜ்யாதானம் வ்ரதஜபஸமாதானநியமை:

என்று கூறப்பட்டது போல் அதற்கு எவ்வளவோ ஸம்ஸ்காரங்கள் வேண்டும். எவ்வளவோ நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். நமது கல்வியினால் மனம் பரிபக்குவம் ஆக வேண்டும். அதற்குப் பிறகு மனதில், 'உலகத்தினால் பயனொன்றுமில்லை' என்ற தீர்மானத்திற்கு வர வேண்டும். அதற்குப் பிறகு நாம் வேதாந்தத்தைக் கற்றால் அது உண்மையான பலனைத் தரும்.

ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:

(ஜீவன் பரம்பொருள்தான், வேறொன்றுமில்லை.)

என்று கூறப்பட்டதை, "ஏதோ சொல்லியிருக்கிறார்கள், எனக்கும் ஆத்மாவைப் பற்றி தெரிந்தாயிற்று" என்று மட்டும் ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தால், பசித்தால் மறு நிமிடமே சமையலறைக்குச் செல்ல வேண்டும் என்றுதான் அவனுக்குத் தோன்றும். அது ஏன் என்று கேட்டால் அத்வைத அனுபவம் தேவை. அந்த அனுபவம் ஸம்ஸ்காரம் பக்குவப்பட்டால்தான் வரும். நாம் என்ன நல்லுரையைக் கேட்கிறோமோ, அந்த விஷயத்தைச் சிந்தித்து நமது வாழ்க்கையில் பழக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

ஆகவே நம்மை நாமே பரிசோதனை செய்து கொண்டிருந்தால் நாம் உத்தமமான மனிதன் ஆகலாம் என்று கூறி என் உபந்யாஸத்தை முடிக்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

15. மனிதப் பிறவியை வீணாக்காதீர்

கங்காபூரப்ரசலிதஜடாஸ்ரஸ்தபோகிந்த்ரபீதாம்
ஆலிங்கந்தீமசலதனயாம் ஸஸ்மிதம் வீக்ஷமாண: |
லீலாபாங்கை: ப்ரணதஜனதாம் நந்தயம்ச்சந்த்ரமௌலி:
மோஹத்வாந்தம் ஹரது பரமானந்தமூர்த்திச்சிவோ ந: || (1.)

மனிதனாக பிறந்துள்ள யாராயிருந்தாலும் தான் ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும் என்னும் ஆசை தீவிரமாக இருப்பது இயற்கையேயாகும். அந்த ச்ரேயஸ்ஸைப் பற்றிப் பலருக்கு பலவிதமான சந்தேகங்கள் உள்ளன. சிலர் தாம் உலகத்தில் சாப்பிடுவது, தூங்குவது, சுகமான வசதிகளைப் பெற்றிருப்பது போன்றவற்றைத்தான் ச்ரேயஸ் என்று நினைத்துவிடுகிறார்கள். இது தவறு. நித்யமான (நிலைபெற்ற) சுகம் எது உண்டோ அதுவே ச்ரேயஸ் எனப்படும். இதைத்தவிர வேறு எந்த சுகம் இருந்தாலும் அதற்கு ப்ரேயஸ் என்று பெயர். ச்ரேயஸ்ஸிற்கும் ப்ரேயஸ்ஸிற்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் சாதாரணமான வைபவத்திற்கும் (அநித்யமான சுகத்திற்கும்) ச்ரேயஸ் என்றே சொல்லிவிடுவோம்.

கடோபநிஷத்தில்

அன்யச்ச்ரேயோऽன்யதுதைவ ப்ரேய –
ஸ்தே உபே நாநார்த்தே புருஷம் ஸிநீத: |
தயோ: ச்ரேய ஆததானஸ்ய ஸாது
பவதி ஹீயதேऽர்த்தாத்ய உ ப்ரேயோ வ்ருணீதே || (2.)

(ச்ரேயஸ் என்பது வேறு, அதனின்றும் வேறானது ப்ரேயஸ். அவை வெவ்வேறு வழிகளில் சென்று மனிதர்களைத் தம் கட்டுப்பாட்டில் வைக்கின்றன. இவை இரண்டிலும் ச்ரேயஸ்ஸைத் தேர்ந்தெடுப்பவனை நன்மை நாடுகிறது. (ஆனால்) ப்ரேயஸ்ஸைத் தேர்ந்தெடுப்பவன் உண்மையான இலட்சியத்திலிருந்து தவறிவிடுகிறான்.)

என்று கூறப்பட்டுள்ளது. ச்ரேயஸ், ப்ரேயஸ் என்று இரண்டு உள்ளன. ச்ரேயஸ்ஸை அடைந்தவன் எப்போதுமே அதில் நிலைப் பெற்றிருப்பான். அதாவது அவனுக்கு நித்யமான சுகம் உண்டு. ஆனால் ப்ரேயஸ்ஸின் விஷயம் எப்படியென்றால், அந்த சுகம்

Koviloor Digital Library

இன்றைக்கு இருக்கும்; நாளையே போய்விடும். நாம் தாற்காலிகமான சுகத்தை எதிர்பார்ப்பதில்லை. நிலைத்த சுகம் வேண்டுமென்றே விரும்புகிறோம். நிலையான சுகத்தைப் பெற சாமர்த்தியம் இல்லை என்றால் நாம் தாற்காலிக சுகத்திலேயே சந்தோஷப்பட்டுக்கொண்டு திருப்தி அடைந்துவிடுவோம். புத்திசாலியாய் இருக்கப்பட்டவன் ச்ரேயஸ்ஸையே அபேட்சிக்க (விரும்ப) வேண்டும். ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

மனிதப் பிறவி என்பது நமக்கு இப்போது புதிதாக வந்ததில்லை. துர்வாச மஹரிஷி சக்தி மஹிம்ன ஸ்தோத்ரத்தில்

நாநாயோனிஸஹஸ்ரஸம்பவவசாத் ஜாதா ஜனன்ய: கதி
ப்ரக்யாதா ஜனகா: கியந்த இதி மே ஸேத்ஸ்யந்தி
சாக்ரே கதி | (1.32)
ஏதேஷாம் கணனைவ நாஸ்தி...

'எத்தனையோ ஆயிரக்கணக்கான யோனிகளில் ஜன்மம் எடுத்ததனால், எவ்வளவோ தாயார்கள் ஆகிவிட்டனர். எவ்வளவோ தந்தையர் ஆகிவிட்டனர். நமக்கு முன்னால் எவ்வளவோ பேர் போய்க்கொண்டிருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் ஓர் எண்ணிக்கையே இல்லை' என்று கூறியுள்ளார். ஜன்மங்கள் ஏன் வந்தன என்று ஒரு கேள்வி கேட்கலாம். மனிதனுக்கு ஜன்மங்கள் வர வேண்டியது நியாயமா இல்லையா? மனிதன் என்றால், அவனுடைய உண்மையான ஸ்வரூபம் ஆத்மா என்றே எடுத்துக் கொள்ளுங்கள். ஆத்மா எப்படிப்பட்டவன்? உபநிஷத்துக்களில் ஆத்மாவைப்பற்றி

ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம (5.2)

என்று விவரிக்கப்பட்டுள்ளது. அதாவது ஆத்மா ஸத்ய ஸ்வரூபி, ஞான ஸ்வரூபி, அனந்த (அளவற்றது) ஸ்வரூபி; அவன் அளவற்ற சுக ஸ்வரூபி.

யத்ஸௌக்யாம்புதிலேசலேசத இமே சக்ராதயோ
நிர்வ்ருதா: (11.11)

அந்த பரமானந்தத்தின் ஒரு துளியை அனுபவித்துவிட்டு இந்திரன் முதலானவர்கள் திருப்தியடைந்துவிட்டனர். இதிலிருந்து

Koviloor Digital Library

அந்த ஆனந்த ஸாகரம் எப்பேற்பட்டது என்று நாம் உணரலாம். இந்த ஆனந்த ஸாகரமே சைதன்யம். இந்த சைதன்யமே ஜீவரூபம் பெற்றுக்கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

ஆகாசம் (வெளி) என்பது ஒரேவிதமாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு குடத்தை நாம் வைத்தால், 'குடத்தில் உள்ள ஆகாசம்' (கடாகாசம்) என்று பெயர் வந்துவிடுகிறது. அதேபோல் ஒரு வீடு கட்டினால் 'க்ருஹாகாசம்' (வீட்டிலுள்ள ஆகாசம்) என்று பெயர் வந்துவிடுகிறது.

ஸ ஏஷ இஹ ப்ரவிஷ்ட: | ஆ நகாக்ரேப்ய: (3.)

(இந்தப் பரம்பொருள் இந்த உடல்களில் நகங்களின் நுனி வரை பிரவேசித்தது.)

அதேபோல் சைதன்யம், ஒன்றாக இருந்தாலும், அநாதியாயிருக்கும் ஸம்ஸார சக்கரத்தில் (பிறப்பு, இறப்பு எனும் சக்கரத்தில்) பிரவேசித்தது. அதனால் பந்தத்தில் மாட்டிக் கொண்டது போலாயிற்று. ஆகாசம் உண்மையில் ஒன்றானாலும், 'கடாகாசம்' என்று நாம் சொல்வதைப்போல்தான் இங்கும். ஆகவே ஜீவர்கள் அநாதியாக இருக்கப்பட்ட இந்த ஸம்ஸார சக்கரத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள்.

ஸம்ஸார சக்கரம் ஏன் அநாதி (தொடக்கமற்றது) என்று சொல்லப்படுகிறது என்று சிலருக்கு கேள்வி எழும். ஸம்ஸாரத்திற்கு மூலம் (ஆரம்பம்) சொல்லவே முடியாது. சிலவற்றிற்குக் காரணம் சொல்ல முடியும். சிலவற்றிற்குக் காரணத்தைச் சொல்ல முடியாது. மரத்தினால் பழம் வருகிறதா அல்லது பழத்தினால் மரமா என்று கேட்டால் 'வந்து கொண்டிருக்கிறது' என்று சொல்ல முடியுமே தவிர அதற்கு மூலம் காட்ட முடியாது. அதேபோல் கர்மாவினால் (செயல்களால்) ஜன்மா, ஜன்மத்தினால் சுக துக்கங்கள், பிறகு ருசி, பிறகு மீண்டும் கர்மா என்று இது தொடர்ந்து வந்து சக்கரம் போல் சுற்றிக்கொண்டிருக்கிறது. இச்சக்கரத்தில் விழுந்தவனுக்கு இதிலிருந்து விடுதலை ஏற்பட வேண்டுமென்று ஆசை வருவது ஸகஜம். எப்படி விடுதலையை சம்பாதிப்பது? எப்படிப்போய் அந்த சைதன்யத்தில் சேர்வது?

Koviloor Digital Library

ஸமுத்திரத்தில் உள்ள நீரானது ஆவியாக மாறிப் பின் மேகமாகிறது. பிறகு மழையாக பொழிந்து நதியாக ஓடிக் கடலில் கலக்கிறது. நாம் ஸமுத்ர ஸ்தானீயமாய் (சமுத்திரம் போன்று இருக்கப்பட்ட) ப்ரஹ்மத்திலிருந்து பிரிந்தவர்கள். ஆனாலும் ப்ரஹ்மம்தான். வேறு வடிவம் பெற்ற பிறகு ப்ரஹ்மம் என்று பெயர் கிடையாது. ஸமுத்திரத்திலிருக்கும் தண்ணீருக்கு, அது ஸமுத்திரத்தில் இருக்கும் வரை தண்ணீர் என்று பெயர். மேகமாய்விட்டால் அதற்கு ஸமுத்திரம் என்று பெயர் சொல்வதில்லை. அதேபோல் நதியாக இருக்கும்போதும் அதற்கு ஸமுத்திரம் என்று பெயர் கிடையாது. ஆனால் நதி ஸமுத்திரத்தைச் சென்றடைந்தவுடன்

ஸமுத்ர இத்யேவம் ப்ரோச்யதே நாமரூபே விஹாய (11.29)

என்று ஆகிவிடுகிறது. நாமும் ப்ரஹ்மத்தில் சேரும்வரை சுற்றிக்கொண்டேதானிருக்கிறோம். நம்முடைய இலட்சியம் ப்ரஹ்மத்தை அடைவதேயாகும். அப்போதுதான் அமைதி கிட்டும். ஆனால் பலர், அதை விட்டுவிட்டு, 'நாம் பரமசிவனுடைய லோகத்திற்கோ, விஷ்ணுவின் லோகத்திற்கோ, ப்ரஹ்மாவின் லோகத்திற்கோ போய் இருந்தால் அது மோக்ஷம்' என்பர். ஆனால் எப்போதும்

த்விதீயாத்வை பயம் பவதி (5.15)

என்று கூறப்பட்டிருப்பதுபோல் இரண்டாவது பொருள் ஒன்று உண்டு என்றாலே அதனால் பயம்தான். உலகத்தில், எப்பேற்பட்ட பலசாலியாயிருந்தாலும் அவனுக்கு இன்னொரு பலசாலியைக் கண்டால் பயம் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். தன்னைப் போல் இன்னொரு பொருள் இல்லை என்ற தீர்மானம் எப்போது ஏற்படுகிறதோ அப்போதுதான் அவனுக்குப் பயம் ஏற்பட வழியில்லை. தீர்மானம் ஏற்பட்டாலும் இரண்டாவது பொருள் இருந்தால், அது பிரயோஜனமில்லை. பந்தம் என்பது அக்ஞானத்தினால் (அறியாமையினால்) வந்தது. ஆகவே இந்த அக்ஞானத்தைப் போக்கடித்தால் பிறகு பந்தம் என்பதே கிடையாது.

த்விதீயாத்வை பயம் பவதி

Koviloor Digital Library

என்பதனால் வைகுண்டம் போன்ற லோகங்களில் சேர்ந்தாலும் கூட இரண்டாவது பொருளைப் பற்றிய அறிவு இருப்பதால் அப்போதும் பயம் இருக்கவே இருக்கும். ஜயவிஜயர்கள் வைகுண்ட லோகத்திலேயே இருந்தாலும் அவர்களுக்கும் பயம் வந்தது. மறுபடியும் அவர்கள் ஜன்மம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால்

அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே (1.16)

என்பதுபோல் யார் இந்தப் பிறவியிலேயே ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றுக் கொண்டாரோ அவருக்கு மறுபிறவி வந்தது என்று எந்த ஓர் உபநிஷத்தோ, புராணமோ, இதிஹாஸமோ சொல்வதாக எங்குமே கிடையாது. யாருக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டதோ அவருக்கு

ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி (4.)

(அவருடைய ப்ராணன் உத்க்ரமணம் (வெளிக்கிளம்புவது) ஆவது கிடையாது.)

என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு இதுபோல் இல்லை. மேலும் ஞானி விஷயத்தில்

அத்ரைவ ஸமவனீயந்தே (4.)

என்றும் சொல்லப்பட்டிருப்பதால் எந்தெந்தப் பூதங்களிலிருந்து இவ்வுடல் வந்ததோ, அந்தந்த பூதங்களிலேயே இது போய்ச் சேர்ந்துவிடும் என்றும் தெரிகிறது. அதனால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுக் கொண்டால்தான் நமக்கு, பிறப்பு இறப்பென்னும் சக்கரத்திலிருந்து விடுதலை கிடைக்கும். இதை விடுத்து வேறு எந்தவிதமான உபாஸனை செய்தாலும், எந்தவித விசேஷமான கர்மாவைச் செய்தாலும் அதனால் கிடைக்கும் பலன் அழிபட்டுவிடும்.

யதேஹ கர்மசிதோ லோக: க்ஷீயதே ஏவமேவ அமுத்ர
புண்யசிதோ லோக: க்ஷீயதே (5.)

Koviloor Digital Library

இந்த உலகத்தில் கர்மத்தின் பலனாய் உள்ளவை கண்ணுக்குப் புலப்படும் லோகத்தில் எவ்வாறு அழிவடைகின்றனவோ, அதேபோல் புண்ணியத்தினாலும், மஹா யக்ஞங்களினாலும் சம்பாதிக்கப்படும் (பலன்களான) லோகங்களும்கூட நசித்துப் போய் விடுகின்றன. அதனால் நாம் நம் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு அக்ஞானத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

நைவ தஸ்ய க்ருதேநார்த்தோ நாக்ருதேநேஹ கச்சன |
ந சாஸ்ய ஸர்வபூதேஷு கச்சிதர்த்தவ்யபாச்ரய: || (1.19)

(இங்கு (ஒன்று) செய்யப்பெற்றதனாலும், செய்யப் பெறாததனாலும் அவனுக்கு (ஞானிக்கு) ஒரு பிரயோஜனமும் இல்லவே இல்லை. இன்னும், இவனுக்கு ஸகல உயிர்களினிடத்தும் ஒரு பயனுக்காக ஆச்ரயிக்க (சார்ந்திருக்க) வேண்டுவது ஒன்றும் இல்லை.)

ஞானம் பெற்றவன் செயல்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் அவனுக்கு ஒருவிதமான கர்மாவும் கிடையாது. ஆனால் மற்றவர்களுக்கு இவனால் ச்ரேயஸ் அடைய வேண்டுமென்று யோகம் உண்டு. அந்த யோகத்தினால் அவன் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறான்.

ஜன்தூனாம் நரஜன்ம துர்லபம் (6.)

(பிறவிகளில் பெறற்கரிய பிறவி மனிதப் பிறவி.)

நாநா யோனி ஸஹஸ்ர ஸம்பவம்

என்பதற்கேற்ப நமக்கு பல பிறவிகள் ஆகிவிட்டன என்று பார்த்தோம்.

ஜன்மாக்களில் சரம், அசரம் என்று இரு வகை உண்டு. மரம் போன்றவை அசரம். இவ்வுலகில் நாம் பார்க்கும் பிராணிகள் சரம். இவ்விரண்டு வகைகளிலும் உத்தமமானது மனிதப் பிறவியேயாகும். மனிதன் தன் செயல்களினால் தானே தன்னை உத்தமனாக்கிக் கொள்ளலாம். அல்லது தன்னையே கெடுத்துக் கொள்ளவும் செய்யலாம். இவ்வாறு செய்வதற்கெல்லாம் மனிதனுக்கு சுதந்திரம் உண்டு. வேறு எந்த ஜீவனுக்கும்கூட இவ்வித சுதந்திரம் கிடையாது.

Koviloor Digital Library

'இது நல்லது' என்று புரிந்துகொண்டு அதைச் செய்யும் தகுதியோ 'இது தவறு' என்று புரிந்துகொண்டு ஒரு செயலைத் தவிர்க்கும் தகுதியோ மற்ற பிராணிகளுக்கு கிடையவே கிடையாது. அவை எந்த நிமிடத்தில் எவற்றைச் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறதோ அவற்றைச் செய்யும். அவற்றிலிருந்து என்ன பலன் வருமோ அதையே அனுபவிக்கும். மனிதப் பிறவி என்பது அப்படியில்லை. இன்று ஒரு காரியம் செய்யும்போது "சிரமமாய் இருந்தாலும் பிறகு ச்ரேயஸ் உண்டு" என்று தெரிந்தால் மனிதனால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அதனால் மனித ஜன்மா அடைந்துள்ள நாம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற முயற்சி செய்து அறிவும் பெற்றுக்கொண்டு 'குரு *யத்னமஜன்மனி*' என்று கூறப்பட்டிருப்பதைப்போல் பிறவியே இல்லாது செய்து கொள்ள முடியும் என்பது சாஸ்திரத்தினாலும் அனுபவத்தினாலும் தெரியும். நமக்கு மானிட ஜன்மம் வந்திருப்பதால் அதை நன்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஓரிடத்தில் ஒருவர் 'நன்கு சாப்பிடுங்கள், மனது திருப்தியாகும்வரை பானம் அருந்துங்கள், நன்கு சந்தோஷப்படுங்கள். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாய் வைத்துக்கொள்ளுங்கள். அது என்னவென்றால், உடலிலிருந்தும் வேறான ஆத்மா என்ற ஒன்று உண்டு என்றுமட்டும் மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்ளுங்கள்' என்றார். இதுபோல் நாம் மனதில் பதித்துக் கொண்டால்தான் நாம் முன்னேற முடியும். அதற்காகத்தான் 'தேஹ அதிரிக்தமான ஆத்மா' (உடலைக் காட்டிலும் வேறான ஆத்மா) என்பதைத் தீர்மானமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னார்.

இவ்வாறு அறிவில்லாமலிருந்தால், நாம் சார்வாகர்கள் போல் 'ச்ரேயஸ்' விஷயத்திலேயே நம்பிக்கையில்லாதவர்களாக ஆகிவிடுவோம். ஆகவே முதலில் தேஹத்தினின்றும் அப்பாற்பட்ட ஆத்மா உண்டு என்பதை நாம் தீர்மானமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது சில மதங்களைப் பற்றிப் பார்ப்போம்.

தார்க்கீகர்கள், தேஹாதிரிக்தமான (தேஹத்தினும் வேறான) ஆத்மா உண்டு என்று சொல்வர். அதற்கு வேண்டிய சில யுக்திகள் மாத்திரம் அவர்கள் சொல்வரே தவிர ஆத்மாவின் ஸ்வரூபம் என்ன என்றெல்லாம் மேற்கொண்டு அவர்கள் விவரிக்கப் போவதில்லை.

Koviloor Digital Library

ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் சொல்வது யுக்திக்கே சரியாக இருக்காது. அவர்கள் ஆத்மாவிற்கு சுகம், துக்கம் எல்லாம் உண்டு என்பர். இதை ஒப்புக்கொள்ள நம்மால் முடியாது. 'சுகமோ துக்கமோ உண்டு' என்றால் இரண்டும் போக வேண்டியதுதான். இரண்டு நிலைகளும் போய்விட்டால் ஆத்மா எந்த ரூபத்தில் இருக்கும் என்று கேட்க வேண்டும். 'அப்போது ஆத்மா கல் மாதிரி ஆகி விடுமா? கல்லின் நிலையைவிட மேல் நிலையிலிருக்கும் நாங்கள் கல் ஆக முயற்சி செய்ய வேண்டுமா' என்று கேட்டால் அவர்களால் பதில் கூற முடியாது. அதனால் தர்க்க சாஸ்திரத்தில் கூறப்பட்ட மோக்ஷம் கல்லுக்கும் உண்டு; மண்ணுக்கும் உண்டு. அதனால் அத்தகைய மோக்ஷம் பயன்படாது. சிலர், 'இல்லை. ஆத்மாவிற்கு நித்ய சுகம் வந்துவிடும்' என்பர். இதில் ஒரு பிழை உள்ளது. ஏனென்றால் நித்ய சுகம் 'வந்துவிடும்' என்றால் அது நித்ய சுகமே ஆகாது. வந்த 'நித்ய சுகம்' போய்த்தான் ஆக வேண்டும். போன பிறகு ஆத்மா ஜடமாயிருக்க வேண்டும். அதனால் தர்க்க சாஸ்திரத்தில் 'ஆத்மா உண்டு' என்று சொல்லிவிட்டு பிறகு மேற்கொண்டு விமரிசனம் செய்யும் பொறுப்பை நம்மிடத்திலேயே விட்டுவிட்டனர்.

ஸாங்க்ய மதத்தைப் பின்பற்றுபவர்கள், ஆத்மா சுக ஸ்வரூபி (இன்ப வடிவானவன்), ஞான ஸ்வரூபி (அறிவு வடிவானவன்) என்பர். அவர்கள் மதத்தில் எல்லோரும் பலப்பல ஆத்மாக்களாக இருக்கிறார்கள். எல்லோரும் பிறகு முக்தராகிவிடலாம். ஆனால் எல்லோரும் தனித்தனியே அவ்வவ்வாறே இருக்கிறார்கள் அல்லவா? பலர் முக்தர்களாக இருக்கும்போது,

த்விதீயாத்வை பயம் பவதி

என்று சொன்னதுபோல் ஒரு முக்தருக்கு, 'இவ்வளவு முக்தர்களில் யார் உயர்ந்தவர், யார் தாழ்ந்தவர்' என்ற எண்ணம் ஏற்படலாம். எதுவரை 'பேத திருஷ்டி' (வித்தியாச நோக்கு) உள்ளதோ அதுவரை மோக்ஷம் கிடையாது என்று முதலிலேயே கூறினோம். ஆகையால் இந்த மதமும் சரியில்லை.

த்விதீயாத்வை பயம் பவதி

என்ற இடத்தில் ஒன்று கவனிக்கப்பட வேண்டும். பகவதி கூறுவாள்:

Koviloor Digital Library

ஏகைவாஹம் ஜகத்யத்ர த்விதீயா கா மமாபரா (7.)

(நான் ஒருத்தி மட்டும்தான் இந்த உலகில் உள்ளேன். என்னைத்தவிர வேறு இரண்டாவதாக யார் இருக்கிறார்கள்?)

அதுபோல நாமே ஒரு பிசாசை எதிரில் உண்டாக்கி வைத்தால் நாம் பயப்படுவோமா? பயப்படவே மாட்டோம். புதிதாக ஏதாவது பிசாசு வந்தால் பயப்பட நேரிடலாம். அத்வைத மதத்தின்படி இவ்வளவு பிரபஞ்சமும் பிசாசு மாதிரி இவ்வளவு பெரிதாக இருந்தாலும் நம் ஸ்வரூபமே என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே நாம் ஏன் பயப்பட வேண்டும்? ஆகவே அத்விதீயமான (இரண்டற்ற) ப்ரஹ்ம மார்க்கத்தில் இருக்கப்பட்ட ரசம் வேறு எந்த மதத்திலும் கிடையாது.

ஸம்ஸாரத்திற்கு ஆதியே கிடையாது. ஆகவே நாம் எவ்வளவோ பிறவிகள் எடுத்தாகிவிட்டது. இதற்கு முன் பிறவிகளில் நாம் ஞானம் சம்பாதிக்கவில்லையா? என்று கேட்டால், சம்பாதித்திருந்தால் நாம் இப்போது பிறவி எடுத்திருக்கவே முடியாது. ஆகவே நாம் எல்லாம் ஞானிகள் அல்ல. என்ன இது? இவ்வளவு காலமாக நாம் ஜன்மா எடுத்துக்கொண்டு வந்திருந்தும் நாம் ஞானிகள் ஆகவில்லை என்றால் நாம் என்ன அவ்வளவு மூர்க்கர்களா? நாம் மூர்க்கர்கள் இல்லை. எதற்கும் நிறைய தகுதிகள் வேண்டும். மனிதனுக்கு மனுஷ்யத்வம் (மனிதப் பிறவி) என்பதே ஒரு விசேஷம். நமக்கு இதுவரை வந்த ஜன்மாக்கள் எல்லாம் மனுஷ்ய ஜன்மாக்கள்தான் என்று கூற முடியாது. அப்படியே ஏதோ மனித ஜன்மா கிடைத்திருந்தாலும் மஹாபுருஷ ஸம்ச்ரயம் (மஹானின் சம்பந்தம்) கிடைக்காதிருந்திருக்கலாம். மஹாபுருஷ ஸம்ச்ரயம் கிடைத்திருந்தாலும் நமது பிராரப்த கர்மா மிகத் தீவிரமாயிருந்து அதை சரியாக உபயோகம் பண்ணிக்கொள்ளக் கூடிய யோக்யதை இல்லாமல் உதாஸீனம் செய்து காலத்தை வீணடித்திருக்கலாம். இப்போதைக்கு கடவுள் கிருபையினால் மானிட ஜன்மம் கிடைத்திருக்கிறது. மஹாபுருஷ ஸம்ச்ரயமும் கிடைத்திருக்கிறது. குருவின் போதனையால் சரீரத்திலிருந்து வேறான ஆத்மா உண்டு என்றும் தெரிந்திருக்கிறது. உலகத்தை சற்று ஆராய்ந்து பார்த்து சுகமா, துக்கமா என்று பார்த்தால், துன்பத்துடன் கலக்காத இன்பம் உலகில் எங்கும் கிடையாது என்பதை உணரலாம். ஆகவே நாம் எதிர்பார்க்கும்

Koviloor Digital Library

சுகம் வெளிப்பொருள்களினால் வருவதில்லை என்பதையும் தீர்மானமாக சொல்லிவிடலாம். இதனால் ஏதாவது ஒரு வழி தேடி, அதன் மூலம் ச்ரேயஸ் அடைய வேண்டும் என்று ஆசை உண்டாகும். அதற்கு என்ன ஸாதனம் என்பதைப் பகவத்பாதாள் விவேகசூடாமணியில் விளக்கியிருக்கிறார்.

ஸ்வஸ்யாவித்யா – பந்த – ஸம்பந்தமோக்ஷாத்
ஸத்யக்ஞானாநந்த ரூபாத்மலப்தௌ ।
சாஸ்த்ரம் யுக்திர்தேசிகோக்தி: ப்ரமாணம்
சாந்த: ஸித்தா ஸ்வானுபூதி: ப்ரமாணம் ॥ (1.26)

(தனக்கு (ஏற்பட்டிருக்கும்) அக்ஞானமாகிற கட்டின் சம்பந்தத்திலிருந்து விடுபடுவது மூலமாய் எப்பொழுதும் இருப்பதாய், ஞான ஸ்வரூபமாய், ஆனந்த ஸ்வரூபமாயுள்ள ஆத்மாவை அடைகிற விஷயத்தில் ப்ரமாணமாயிருப்பது வேதவாக்கியம், (அதையனுஸரித்த) யுக்தி, குருநாதருடைய உபதேசம் மற்றும் தனக்குள்ளேயே ஸ்திரமாய் ஏற்பட்டிருக்கும் தன்னுடைய அனுபவமும் ப்ரமாணம்.)

பல சாஸ்திரங்களில் "மோக்ஷத்திற்கு என்ன ப்ரமாணம்?" என்ற கேள்விக்கு 'மோக்ஷத்திற்கு சாஸ்திரம்தான் ப்ரமாணம்' என்ற பதிலே கிடைக்கும். "எங்கள் சாஸ்திரத்தின்படி நீ இவை இவற்றைச் செய்தால் வைகுண்டம் போகலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே நீ வைகுண்டத்திற்குப் போக வேண்டுமானால் சாஸ்திரம் சொன்னபடி நட. இல்லாவிட்டால் விடு" என்று சில சாஸ்திரங்கள் கூறுகின்றன. அநேகம் பேர் போகத் தயாரேயில்லை. பகவத்பாதாள் சாஸ்திரம்தான் ப்ரமாணம் என்றுமட்டும் கூறாமல், "நீ மோக்ஷமடைய வேண்டுமானால் உன்னுடைய சொந்த அனுபவமும் ப்ரமாணம்" என்று கூறிவிட்டார்.

"நமக்கு எவ்வளவோ அனுபூதிகள் (அனுபவங்கள்) இருக்கலாம். அவைகளினால் மோக்ஷம் வருவதாகத் தெரியவில்லை. மோக்ஷம் பெற என்ன அனுபூதி ப்ரமாணம்?" என்று ஒருவன் கேட்கலாம். அத்தகைய அனுபூதி வருவதற்கு ஒரு முறை உண்டு. அந்த முறையில்தான் நாம் போக வேண்டும்.

Koviloor Digital Library

ஒரு வைரம் இருக்கிறது. அந்த வைரம் நல்ல வைரமா, அது எப்படியிருக்கிறது என்றெல்லாம் சோதித்துப் பார்க்க விரும்பலாம். ஆனால் அது பளபளப்பாக இருக்கிறது என்பது மட்டும்தான் நமக்குத் தெரியும். இங்கும் நமக்கு 'ப்ரத்யக்ஷ அனுபூதி' (புலன்களால் நேரடியாக ஏற்படும் அனுபவம்) நாம் வைரத்தை பார்க்கையில் ஏற்படுகிறது. (இந்த அனுபூதி முதலில் பிரயோஜனம் இல்லை.) ஆனால் நகைகள் விஷயத்தில் நிபுணனான ஒருவனிடம் அந்த வைரத்தை நாம் கொடுத்தால் அவன், 'ஐயா, இந்த வைரம் அணிந்துகொள்ளப் பயன்படாது. இதற்குள் ஒரு கறுப்புப் புள்ளி உண்டு' என்பான். நமக்கு அப்புள்ளி கண்களுக்கு முதலில் புலப்படவில்லை. அந்த நகை பரிசோதனை செய்பவன் நமக்கு 'இந்தப் பக்கத்திலிருந்து பாருங்கள்! அந்தப் பக்கத்திலிருந்து பாருங்கள்!' என்று கூறி நமக்கு புள்ளியைக் காண்பிப்பான். பிறகு அந்தப்பக்கம் இந்தப்பக்கம் திரும்பித் திரும்பி பார்த்துவிட்டு, "ஆமாம், ஆமாம். நீ சொல்வது மாதிரி தெரிகிறது" என்று நாம் சொல்வோம். "சொல்வது மாதிரி இல்லை ஐயா, நன்கு பாருங்கள்" என்பான். கடைசியில், "ஆமாம், கறுப்புப் புள்ளி இருக்கிறது" என்று ஒப்புக்கொள்வோம், அவனிடமிருந்து இவ்வளவு வார்த்தைகளும் கேட்டபிறகு. ஆகவே சாதாரண சிறிய வைரத்திலுள்ள ஒரு புள்ளியை நாம் தெரிந்து கொள்வதற்கே ஸ்வானுபூதி முதலில் உபயோகப்படுவதில்லை. நம் ஸ்வானுபூதி எப்போது உபயோகப் படும்? இப்படியாக, அவன் தன்னுடைய அனுபூதியையெல்லாம் (அனுபவத்தையெல்லாம்) நமக்குத் தந்துவிட்டபின், மனம் பக்குவப்பட்ட பிறகு நம் அனுபூதியே ப்ரமாணமாகிவிடும். அதுவரையில் மற்றவனுடைய அனுபூதிதான் ப்ரமாணம்.

இத்தகைய ஒரு சிறிய பொருளின் விஷயத்திலேயே இப்படியிருக்கும்போது,

தம் துர்தர்சம் கூடமனுப்ரவிஷ்டம்
குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம் (1.18)

என்ற ப்ரஹ்மத்தின் விஷயத்தைச் சொல்லத் தேவையேயில்லை. மந்திரத்தில் 'துர்தர்சம்' என்று சொல்லப்பட்டதைப்போல் அவனைப் பார்ப்பது மிகவும் அரிது. "குஹாஹிதம்" என்றால் உள்ளே

Koviloor Digital Library

இருக்கப்பட்டவன் என்று பொருள். புள்ளி வைரத்துக்கு உள்ளே எங்கோ இருப்பதுபோல, ஸர்வ வ்யாபியாய் இருக்கப்பட்டவன் ஒரு மூலையில் இருப்பதைப்போல் இருக்கிறானாம்.

காற்று எல்லா இடத்திலும் இருக்கிறது. ஆனால் காற்று வீசினால்தான் 'காற்று இருக்கிறது' என்று சொல்லுவோம். காற்று வீசாவிட்டால் 'காற்றே இல்லை' என்று சொல்வோம். ஆனால் காற்றே இல்லாத வெற்றிடத்தில் நாம் இவ்வளவு பேர் இருக்க முடியுமா? இரண்டு நிமிடங்களுக்கு மேல் இருக்க முடியாது. காற்று இல்லை என்று சொல்பவனின் மூக்கைப் பிடித்தால் காற்று இருக்கிறது என்று அவனும் உணர்வான்.

அதனால் காற்று இருந்தும்கூட காற்று இருக்கிறது என்று நாம் புரிந்து கொள்வதே கஷ்டமாக இருக்கிறது. வெளியில் இருப்பதைப் புரிந்து கொள்வதே கஷ்டமாயிருக்கும்போது, '*குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம்*' என்று கூறப்படும் ப்ரஹ்மத்தைப் புரிந்துகொள்ள வேண்டியிருந்தால், 'இப்படி ஒரு வஸ்து இருக்கிறது' என்று சொல்வதற்கு ஒரு நபர் வேண்டும். அந்த நபருக்கு அது எப்படித் தெரிந்தது என்றால் அவர் நன்கு பரீட்சை செய்து அதை அறிந்து கொண்டிருப்பார்.

நாமாகவே பரீட்சை மற்றும் விசாரணை செய்து பார்த்து ஒரு ஸித்தாந்தத்தை (கோட்பாட்டை) ஏற்படுத்தலாம் என்றால், இன்னொரு நாள் நம்மையும்விட புத்திசாலி ஒருவன் 'அன்றைய நிலைக்கு அது சரியாக இருந்தது. இப்போது இது உபயோகமில்லை' என்று சொல்லி நம் ஸித்தாந்தத்தை மாற்றி வேறொன்றை நிலை நாட்டிவிடுவான். இதைத்தான் வாசஸ்பதிமிச்ரர் மிகவும் சுவாரசியமாக

யத்னேநானுமிதோऽப்யர்த்த: குசலைரனுமாத்ருபி: |
அபியுக்ததரைரன்யைரன்யதைவ உபபாத்யதே || (8.)

(திறமை வாய்ந்த தார்க்கீகர்களால் மிகுந்த பிரயத்தனப்பட்டு நிரூபிக்கப்பட்டவை, அவர்களைக் காட்டிலும் மேலும் திறமை வாய்ந்தவர்களால் அவை தவறு என்று காட்டப்படுகின்றன.)

என்று கூறினார்.

Koviloor Digital Library

தர்க்கத்தில் பண்டிதன் யுக்தியினால், ஆத்மாவிற்கு

ஆத்மன: ஸ்யு: சதுர்தச (9.)

பதினான்கு குணங்களான ராகத்வேஷம் (விருப்பு, வெறுப்பு) இவையனைத்தும் உண்டு என்று சொன்னான். ஆனால் அவனையும் மிஞ்சும் தர்க்க திறமை பெற்ற ஸாங்க்யன் 'ஆத்மாவின்பேரில் ராகத்வேஷம் எதுவுமே ஏற்றக்கூடாது. அவையெல்லாம் ப்ரக்ருதிக்குத்தான் (இயற்கைக்கு) உண்டு' என்று சொல்லி தார்க்கீகன் ஆத்மாவின் குணங்களாகச் சொன்ன ராகத்வேஷம் முதலியவைகளை ஸாங்க்யன், ப்ரக்ருதியின் மேல் ஏற்றிவிட்டு, புருஷனை (ஆத்மாவை) சுத்தப்படுத்தி விட்டான். இவ்வாறு ப்ரக்ருதி என்ற ஒன்றை இருக்குமாறு செய்து அதன் மேல் புருஷனிற்கு விசுவாசத்தை ஏற்படுத்திவைத்து ஒரு பெரிய ஸம்ஸாரத்தையே நடத்துமாறு செய்தான் ஸாங்க்யன். இருவரும் (தார்க்கீகனும், ஸாங்க்யனும்) தர்க்கத்தில் நல்ல திறமை பெற்றிருந்தாலும், தார்க்கீகன் 'மனது'வரை சென்றான். ஸாங்க்யன் அவனுக்கும் மேலே ஒரு படி சென்று 'ப்ரக்ருதி'வரை போனான்.

வேதாந்த சாஸ்திரம் இந்த ஸாங்க்யனை நோக்கி 'அந்த ப்ரக்ருதி யாரால் இயக்கப்படுகிறது என்று உனக்குத் தெரியுமா?' என்று கேட்கையில் ஸாங்க்யன் 'அது தானே இயங்குகிறது' என்கிறான். ஜடமாயிருக்கும் பொருள் எங்கேயாவது தானே உண்டாகி மாறுமா? காற்று வீசினால்தான் இலை ஆடும். காற்று வீசாவிட்டால் ஒரு சிறு இலைகூட ஆடாது. அப்படியிருக்கையில்

தேவாத்மசக்திம் ஸ்வகுணைர்நிகூடாம் (10.)

'அவனுடைய ஸங்கல்பம் இல்லாவிடில் இந்தப் பிரபஞ்சமே இல்லை. அதனால் சைதன்யம்தான் எல்லாவற்றிற்கும் மூலம்' என்று சொல்ல வேண்டியிருந்தால் அது தார்க்கீகர்களினால் சொல்லவே முடியாது. அதனால் தார்க்கீகன் ஓர் அளவிற்குச் சொன்னான். அவனை விடப் பெரிய தார்க்கீகனான ஸாங்க்யன் வேறுமாதிரிச் சொல்லிவிட்டான். அதற்கு மேல் யாரும் போகவே இல்லை. ஆனால்,

வேதாந்தவிக்ஞான ஸுனிச்சிதார்த்தா: (11.)

Koviloor Digital Library

என்று சொன்னதுபோல் வேதாந்திகள் மேலே சென்று விசாரித்தனர். ஆத்ம தரிசனம் ஆவதற்கு

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: (12.)

(அன்புடையவளே! ஆத்மாவைக் காண வேண்டும். அதைப் பற்றிக் கேட்க வேண்டும். சிந்திக்க வேண்டும். ஒரு நிலை மனதுடன் தியானம் செய்ய வேண்டும்.)

என்று வழிகளெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. எதை சிரவணம் பண்ண வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் வேதாந்த சிரவணம் பண்ண வேண்டும்.

தம் த்வௌபநிஷதம் புருஷம் ப்ருச்சாமி (13.)

(உபநிஷத்தால்தான் அவனை அடைய முடியும்.)

சிலர் பின்வரும் எதிர்ப்பைக் கிளப்புவார்கள்.

கர்பஸ்த்த ஏவ ரிஷிர்வாமதேவ: ப்ரதிபேதே
அஹம் மனுரபவம் ஸூர்யச்ச (14.)

'கர்பத்திலிருக்கும்போதே வாமதேவருக்கு ப்ரஹ்ம ஞானம் வந்துவிட்டது என்று நீங்கள் சொல்கிறீர்களே. அதே சமயம் உபநிஷத்தை வாசித்துத்தான் ப்ரஹ்மத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் சொல்கிறீர்கள். இது எப்படி?" இந்தக் கேள்விக்கு ஒரு சிறந்த கோட்பாட்டையே பதிலாகக் கொடுக்கலாம். 'ஆத்மா என்பவன் இந்த உடலல்ல. அவன்தான் வெவ்வேறு சரீரங்களை எடுத்து வருகிறான்' என்பதே அது.

வாமதேவர் கர்பத்திலிருக்கும்போது ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றார் என்பதிலிருந்து அவர் உபநிஷத் விசாரமே செய்திருக்கவில்லை என்று யார் சொன்னார்கள்? அவர் முற்பிறவியில் உபநிஷத் விசாரம் செய்தார் என்று நாம் வைத்துக்கொள்ளலாமே! உபநிஷத் விசாரம் செய்தவுடன் ப்ரஹ்ம ஞானம் அப்போதே வந்திருக்கலாமே என்றால், சிலருக்கு மனு போட்டவுடனேயே வேலை கிடைத்துவிடலாம்; சிலருக்கு ஆறு

Koviloor Digital Library

மாதம் தாமதமாகலாம். ஏனென்றால் அவர்களுக்கு சிபாரிசு அதிகம் இல்லாமலிருந்திருக்கலாம். அதேபோல் ஒருவனுக்கு உபநிஷத் விசாரத்தினால் உடனடியாக ஞானம் வரலாம். இன்னொருவனுக்கு ப்ராரப்த கர்மாவை அனுபவித்த பின் பூர்வ ஸம்ஸ்காரத்தால் ஞானமானது உதயமாகிவிடும். ஆகவே எது எப்படியிருந்தாலும் ஆத்ம ஞானம் உபநிஷத்துக்களின் மூலமாகத்தான் சம்பாதிக்க முடியும். அந்த அனுபூதி ஒருவனுக்கு சாஸ்திரத்தினாலேதான் வருகிறது. ஆகவே அதற்கு முதல் ப்ரமாணம் சாஸ்திரமே ஆகும்.

சாஸ்திரமே முதல் ப்ரமாணம் என்று சொல்லிவிட்டால் நாம் அதை நம்ப முடிவதில்லை. "சாஸ்திரத்திலே ஏதேதோ சொல்லியிருக்கிறார்கள். அவையெல்லாம் புரிவதில்லை. இது மட்டும் புரியுமா" என்பர் சிலர். அதற்காகத்தான் இரண்டாவதாக 'யுக்தி:' என்று கூறினார்.

இனி யுக்தியைப் பார்ப்போம். ஆத்மா நித்யன். அவன் சுக ஸ்வரூபி. ஆத்மாவல்லாத எதுவும் நித்யமாகாது. (ஆத்மா அறிவு வடிவானவன்.) ஒரு விஷயத்தை அறியும்போதும், பல விஷயங்களை அறியும்போதும் இந்த ஞானம் (அறிவு) என்பது மட்டும் எப்போதும் மாறாமலேதான் இருக்கிறது. சூரிய ஒளி பல பொருட்களைப் பிரகாசிக்கும். இதிலிருந்து சூரிய ஒளி வெவ்வேறு என்று சொல்ல முடியுமா? முடியாது. இன்னொரு உதாரணம் பார்ப்போம்.

ஒரே கண்ணாடி, அதற்கு எதிரில் என்னவெல்லாம் வைக்கப் படுகின்றனவோ, அவ்வளவு பொருட்களையும் பிரதிபலிக்கும். அதேபோல் ஜாக்ரத் அவஸ்தையில் (விழிப்பு நிலையில்) இருக்கின்ற ஞானம் (அறிவு) ஒன்றே ஒன்றுதான். அது விஷயங்களை பிரதிபலிக்கும். இல்லாவிட்டால் நிராகாரமாயிருக்கும். ஜாக்ரத் அவஸ்தையைப்போல், ஸ்வப்ன அவஸ்தையிலும் (கனவு நிலையிலும்) அதே ஞானம் (மனதில் தோன்றும் பொருட்களைப் பிரதிபலித்துக் கொண்டு) பிரகாசிக்கிறது. அடுத்ததாக ஸுஷுப்தி அவஸ்தையை (ஆழ்ந்த உறக்க நிலையை) நோக்குவோம். ஸுஷுப்தி அவஸ்தையில் ஞானம் உண்டு. ஆனால் அது உண்டு என்று தெரிந்து கொள்ள முடியாது. தூங்கி எழுந்தவுடன் ஒருவன், "நான் நன்கு தூங்கினேன். ஆனால் ஒன்றுமே தெரியவில்லை" என்று

Koviloor Digital Library

கூறுவதைப் பார்க்கிறோம். "நன்கு சந்தோஷமாகத் தூங்கினேன்" என்பது ஒருவனது நினைவுக்கு வர வேண்டுமானால் அவன் தூக்கத்தின் போது இன்பத்தில் மூழ்கியிருக்க வேண்டும். அதாவது அப்போது ஏற்பட்ட அனுபவத்தையே அவன் தற்போது நினைவு கூர்கிறான். தூங்கும் போதும் ஞானம் இருந்தாலும் 'நான் நன்கு தூங்கிக் கொண்டு உள்ளேன்' என்று ஒருவனுக்கு அப்போது தெரிவதில்லை. அதனால்தான் 'ஸுஷுப்தியில் அனுவ்யவசாயம் இல்லை' என்று சொல்லுவோம். ஆகவே ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று நிலைகளிலும்கூட ஒரே ஞானம்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது. விஷயங்கள் வேறாகும் போது அதற்கு கிடைக்கும் பெயர்களும் வேறு வேறாகின்றன. இவ்வாறு தினம், பக்ஷம், மாதம், ருது, அயனம், வருஷம், கல்பம் ஆகிய எல்லாக் காலங்களிலும் ஒரே ஞானம்தான் பிரகாசித்து 'நித்யமாய்' விளங்குகிறது. இவ்வாறு சைதன்யமானது 'நித்யம்' என்பதற்கு யுக்தியின் மூலம் நிரூபணம் கொடுக்கலாம்.

சைதன்யம் 'சுக ஸ்வரூபி' என்பதற்கும் யுக்தியைப் பார்ப்போம்.

தூங்கும் போது சுகம் உண்டா இல்லையா என்றால், சுகம் உண்டு என்று அனுபவத்தில் தெரியும். அந்த சுகம் எங்கேயிருந்து வந்தது? ஏதாவது தின்பண்டத்தை சாப்பிட்டதனாலோ, ஏதாவது பொருளைப் பார்த்ததாலோ, எவரையாவது கேலி செய்ததாலோ வரவில்லை.

ஆழ்ந்த உறக்கத்தில் எந்தப் பொருளினுடைய சம்பந்தமுமில்லை. வெளியிலிருந்து சுகம் வர வழியேயில்லை. ஆகவே சைதன்ய ஸ்வரூபியாயுள்ள (தேஹத்திலிருந்தும் மனதிலிருந்தும் வேறுபட்ட 'நான்' என்று யாரைச் சொல்வோமோ) அந்த "என்"னிடத்திலிருந்துதான் ஸ்புரித்தது (தோன்றியது). அது நானாக இருந்தால்தான் ஸ்புரிக்க முடியும். இல்லாவிட்டால் மாறிவிடும். ஆகவே 'நான்'தான் ஆனந்த ஸ்வரூபியாய் இருக்கிறேன். மற்ற சமயங்களில் விஷயங்களின் சம்பந்தத்தினால் அந்த ஆனந்தம் என்பது மறைந்து விடுகிறது. அது வெளித்தெரிய வேண்டுமானால் விஷயங்களுடைய சேர்க்கையை எடுக்க வேண்டும். எப்படி அழுக்கான கண்ணாடியில் சரியாக முகம் தெரிய வேண்டுமானால், அழுக்கைத் துடைத்து விடுவோமோ அதேபோல் சுக ஸ்வரூபத்தை

Koviloor Digital Library

அறிய வேண்டுமானால் விஷயங்களின் சேர்க்கையை அகற்ற வேண்டும். இல்லாவிட்டால் 'ஆத்மா சுக ஸ்வரூபி' என்பதைத் தெளிவாக அறிய முடியாது. இவ்வாறு யுக்திகளைக் கூறினார்.

வேதம் என்ன சொல்கிறது?

ஸ யச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே (15.)

(இந்த ஆத்மா ஒருவன்தான் இந்த உடலிலும், ஆதித்ய மண்டலத்திலும் ஸர்வவ்யாபியாய் (எங்கும் நிறைந்து) உள்ளான்.)

வெறுமென சாஸ்திரம் கூறுவதை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் அதில் நம்பிக்கையே வராது. ஆகவே யுக்தி என்பது அவசியமாகிறது. யுக்தி என்பதும் இருக்கலாம், சாஸ்திரம் என்பதும் இருக்கலாம். ஆனால் போய்ப் பார்த்தவன் யாருமே யில்லை என்றால் நமக்கு எப்படி நம்பிக்கை வரும்? அதனால்தான் சங்கரர் 'தேசிகோக்தி ப்ரமாணம்' என்றார். 'தேசிகன்' சொல்வது ப்ரமாணம்தான். தேசிகன் யார்?

சாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ
வஸந்தவல்லோகஹிதம் சரந்த: ।
தீர்ணா: ஸ்வயம் பீமபவார்ணவம் ஜனான்
அஹேதுனாऽன்யானபி தாரயந்த: ॥ (16.)

(வசந்த காலத்தைப் போல் உலகிற்கு நன்மை செய்து கொண்டு தாங்கள் (ஸம்ஸாரக் கடலை) கடந்தவர்களாயிருந்து கொண்டு காரணமில்லாமலேயே மற்ற ஜனங்களையும்கூட பயங்கரமான ஸம்ஸாரமாகிற கடலைத் தாண்ட வைத்துக் கொண்டு சாந்த ஸ்வபாவமுள்ளவர்களாய், ஸாதுக்களாகவுமுள்ள பெரியோர்கள் (உலகில்) வசித்து வருகிறார்கள்.)

என்று கூறப்படுவதுபோல் உள்ளவர் தேசிகர். அவர் ஸம்ஸாரக் கடலைத் தாண்டியவர். அவருடைய சரீரம் இருப்பதற்குச் சிறிதளவு கர்மா காரணமாக இருக்கிறது. தத்துவத்தை அறிந்து கொள்ளக்கூடிய புண்ணியம் சிஷ்யனுக்கு இருக்கிறது. இதனால்,

ஆசார்யாத் லப்தபோதா அபி விதிவசத: ஸந்நிதௌ
ஸம்ஸ்த்திதானாம் ।

Koviloor Digital Library

த்ரேதா தாபம் ச பாபம் ஸகருணஹ்ருதயா:
ஸ்வோக்திபி: க்ஷாலயந்தி || (5.8)

(ஆசார்யரிடமிருந்து, முன் செய்த புண்ணியப் பலனாக ஞானத்தை அடைந்தவர்கள் கூட, தம் முன் இருப்பவர்களுடைய மூன்று விதமான துன்பங்களையும், பாவங்களையும் கருணையுடனிருக்கும் ஹ்ருதயமுள்ளவர்களாக இருந்து, தம் வார்த்தைகளினால் போக்கி விடுகிறார்கள்.)

என்று சங்கரர் கூறியது போல், ஆசார்யர் சொல்லிக் கொடுத்து சீடரும் குருவாகி விடுகிறார்.

'*விதிவசத:*' – குருவிற்கு 'இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும்' என்னும் ஆசை கிடையாது. ஆனால் சரீரம் இன்னும் இருக்கும் போது ப்ராரப்த கர்மா இருப்பதாலும், சிஷ்யனின் 'ஆத்ம ஞானமடைதல்' என்ற யோகத்தினாலும் சொல்லிக் கொடுக்கிறார்.

'*த்ரேதா தாபஞ்ச பாபம்*' – மூன்று விதமான தாபமும், பாவமும் அவருடைய யுக்தியினால் அகல்கின்றன. இதைத்தான் சங்கரர் 'தேசிகோக்தி ப்ரமாணம்' என்று குறிக்கிறார். தேசிகர் சொல்வதை நாம் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பிறகுதான் '... ஸ்வானுபூதி ப்ரமாணம்' என்பது ஏற்படுகிறது.

நமக்கு ஏன் அனுபூதி வரவில்லை என்றால், நாம் சாஸ்திரம் வாசிக்கவில்லை. அதை நன்கு விமரிசை பண்ணவில்லை. நமக்கெல்லாம் நீலகண்ட தீக்ஷிதர் கூறியதுபோல் விவேகம் உண்டு. பானை அநித்யம், பானையாயிருக்கும் தன்மை நித்யம் என்பதுதான் தெரியும். இத்தகைய விவேகம் விவேகமேயில்லை. அவிவேகம்தான் அது. எது நம்முடைய அக்ஞானத்தை (அறியாமையை) போக்குமோ அதுதான் விவேகம். சாஸ்திரம் வாசித்து பிறகு ஏதோ ஒரு மாதிரியாக விவேசனை செய்தோம் என்றால் அதனால் பிரயோஜனமில்லை. நாம் வெறுமென சாஸ்திரம் வாசித்தோம். தேசிகனின் (குருவின்) யுக்தியைக் கேட்டோம். ஆனால் நாம் அவற்றை சாதனைக்கு கொண்டு வந்தோமா? தேசிகரானவர் தமக்கு அனுபூதி ஏற்பட்டதெல்லாவற்றையும் நமக்குக் கூறினாலும், நாம் அதற்கு சாதனை செய்கிறோமா?

Koviloor Digital Library

வேதாந்த சாஸ்திரம் எல்லோரும் வாசிக்கிறார்கள். அவ்வாறு வாசிப்பது யாருக்குப் பலனளிக்கும் என்பது

அதீதேஜ்யாதானவ்ரதஜபஸமாதான நியமை: ।
விசுத்தஸ்வாந்தானாம் ஜகதிதமஸாரம் விம்ருசதாம் ॥ (17.)

என்ற சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. நாம் இத்தகைய ரீதியில் இருக்க வேண்டும். சாஸ்திரங்களைக் கற்று, அதன்படி நம் வர்ணாச்ரம தர்மங்களை நன்கு கடைப்பிடித்து, அதனால் இறைவனின் அருள் பெற வேண்டும். அதுமட்டுமின்றி தானம், விரதம், ஜபம், ஸமாதி இவையெல்லாம்கூட இருக்க வேண்டும் என்று இந்த சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

மனது என்பதே விசித்திரமானது. ஸம்ஸ்காரம் உள்ள மனது என்பது, அது இல்லாத மனதைக் காட்டிலும் முற்றிலும் வேறாக இருக்கிறது. கண்ணனுடைய கதை படித்தால் அவன் வெண்ணையைத் திருடித் தின்றான் என்று வரும். இதைப் படித்துவிட்டு நாமும் ஏன் வெண்ணையைத் திருடித் தின்னக் கூடாது என்று தோன்றலாம். அவ்வாறு கதை சொல்லப்பட்டதன் தாத்பர்யம் (கருத்து) என்னவென்றால், ஜனங்களுக்கு பகவானை வெவ்வேறு வகையில் வர்ணனை செய்தால் அதில் ருசி ஏற்படும் என்பதேயாகும்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரூபத்தில் பகவானை வர்ணனை செய்தால் பிரியமாயிருக்கும். சிலருக்கு நிர்குண நிராகாரமான ரூபமாக பகவானை வர்ணனை செய்தால் பிரியமாக இருக்கும். சிலருக்கு ஸகுணமாக இருக்கப்பட்ட ரூபமாக வர்ணனை செய்தால் பிரியமாக இருக்கும். சாதாரண மக்களுக்கு இறைவனின் பாலலீலைகள் இறைவன் மீது பிரேமையை (அன்பை) உண்டாக்கும். தவிர, பக்தனின் மனத்தை உள்ளே திருப்புவதற்காக பகவான் லீலைகளை காட்டியிருக்கலாம். இதை விடுத்து பகவான் செய்ததைப்போல் நானும் செய்கிறேனென்றால், பகவான் கோவர்தன பர்வதத்தைத் தூக்கியதைப்போல் நீயும் அதைத் தூக்கி வைத்துக்கொள் என்று நாம் சொன்னால், அம்மனிதனுக்கு அது இயலாத செயல். 'யாராவது தூக்கி என் தலை மேல் வைத்தால் நான் தூக்குவேன்' என்று வேண்டுமானால் அவன் சாதுர்யமாகச் சொல்லலாம். நாம் நம் அந்தஃகரணத்தைத் தூய்மையாக

Koviloor Digital Library

வைத்துக்கொள்ள வேண்டும். நாம் நமது வர்ணாச்ரம தர்மங்களைச் சரியாக அனுஷ்டானம் செய்தால் மனது சுத்தமாக இருக்கும். அப்போதுதான் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டவற்றின் தாத்பர்யம் தெரியும். அவ்வாறு இல்லையென்றால் ஒருவன் வேறு வகையில் புரிந்துகொள்வான்.

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

ஒரு சமயம் ஒருவன் கோவிலுக்குச் சென்றான். அதுவரையிலும் அவனுக்கு கோவிலுக்குச் சென்று பழக்கமே கிடையாது. கோவிலில் அவனுக்குத் தீர்த்தம் கொடுத்தார்கள். அவன் அதைப் பருகினான். ஆனால் வாயில் ஏதோ சிக்கிக் கொண்டது போல் இருந்தது. பார்த்தால், அது தீர்த்தத்தோடு வந்திருந்த துளசி இலை. அதை அவன் அங்கேயே துப்பிவிட்டான். உடனே அங்கிருந்த ஒருவன் 'என்னய்யா இது, கோவிலில் துப்பலாமா?' என்று கேட்டான். இவன் உடனே அத்துளசியை எடுத்து அங்கிருந்த இறைவனின் சிலைமீது வைத்துவிட்டான். அதைக் கண்ட மற்றவன் 'இங்கு வைக்காதே அயோக்கியனே' என்றான். துளசியை எடுத்து இவன் இன்னொரு சிலைமீது வைத்தான். அதற்கும் திட்டு வாங்கிக் கொண்டுப் பிறகு கையிலேயே எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

ஸம்ஸ்காரம் (மனப் பக்குவம்) இல்லாதவனிடம் துளசியைத் துப்பக் கூடாது என்றால் அவனுக்கு அதை எங்கேதான் வைப்பது என்பது தெரியாது. ஸம்ஸ்காரம் இருப்பவன் துளசியைத் தீர்த்தத்தோடு சாப்பிட்டுவிடுவான். இதேபோல் வேதாந்த சாஸ்திர விஷயத்திலும்,

ஸாம்ஸாரிகஸுகாஸக்தம் அஹம் ப்ரஹ்மேதி வாதினம் |
கர்மப்ரஹ்மோபயப்ரஷ்டம் தம் த்யஜேத்
அன்த்யஜம் யதா || (18.)

என்பது போல் ஸம்ஸ்காரமில்லாதவனின் நடப்பு இருக்கும். அதாவது அவன் எப்போதும் வேதாந்தம் பார்த்து, யார் வந்தாலும் சரளமாக வேதாந்தத்திற்கு விவரணம் சொல்வான். மற்றொரு பக்கம், 'எனக்குச் சம்பளம் இன்னும் அதிகமாகவில்லை. நான் பெரிய 'சோபா–செட்' வாங்கி வீட்டில் போடவில்லை' என்று சிந்தனை செய்து கொண்டிருப்பான். ஆதலால் அவனுக்கு கர்மாவுமில்லை,

Koviloor Digital Library

ப்ரஹ்மமுமில்லை. அப்படிப்பட்டவனைத் தள்ளி வைத்துவிட வேண்டும் என்று சுலோகம் கூறுகிறது. அதேசமயம் ஸம்ஸ்காரம் இருந்து வேதாந்தம் வாசித்தால்,

யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர: ।
ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்யதே ॥ (19.)

(தற்செயலாக எது கிடைத்தாலும் அதிலேயே திருப்தி அடைபவன், இருமைகளைக் கடந்தவன், பொறாமையில்லாதவன், வெற்றியிலும் தோல்வியிலும் சமமாக இருப்பவன் – கர்மா செய்தாலும் கட்டுப்படுவதில்லை.)

என்பது போல் ப்ராரப்த கர்மாவினால் அவன் தேஹம் காரியங்களைச் செய்து கொண்டு போகிறது. அந்தந்த சமயத்தில் ஏதாவது கிடைத்தால் சரி. இல்லாவிட்டால் அதுவும் பகவானுடைய ஸங்கல்பம் என்றிருந்து விடுவான் இவன். தன்னுடைய மனதின் அமைதி நிலையை விட்டு ஒருபோதும் கீழிறங்க மாட்டான். வேதாந்தம் வாசித்தும் விஷயங்களிலேயே மனதை வைத்தவராய் இருந்தால் ஸம்ஸ்காரம் அவ்வளவு இல்லை என்பதே கருத்து. ஆகவே வேதாந்தம் வாசிக்க வேண்டுமென்றால் அதற்கு மனது நல்ல ஸம்ஸ்காரத்துடனிருந்தால்தான் நாம் வேதாந்தம் வாசித்தது ஸபலம் (கைகூடும்) ஆகும். அப்போதுதான் அனுபூதி வரும்.

இங்கு மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். விசாரம் என்பதை நாம் சாஸ்திரம் வாசித்து அந்த முறையிலேயே விசாரம் செய்ய வேண்டும். மேலும் எந்த ஒரு விசாரத்திற்கும் மூலம் என்பது வேண்டும். மூலம் இல்லாமல் விசாரம் பண்ணவே கூடாது. ஒருவன் திருடினான் என்று வைத்துக்கொள்வோம். 'திருடுவது தவறில்லை என்று நான் கருதுகிறேன்' என்று ஒருவன் சொன்னால் அதற்கு நாம் என்ன சொல்வோம்? 'நீ என்ன வேண்டுமானாலும் சொல். நீ தவறு என்று சொன்னாலும் கூட அது தவறாகாது. இன்னொருவன் சரியென்று சொன்னாலும் அது சரியாகாது. இதற்கெல்லாம் சட்டப் புத்தகம் என்ற ஒன்று உள்ளது. அதில் திருடுவது குற்றம் என்றும், அதற்கு ஆறு மாதம் ஜெயில் தண்டனை உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது' என்று சொல்வோம். அந்த சட்டப் புத்தகம் எழுதி வைக்கப்படவேயில்லையென்றால் அந்த விஷயமே வேறு.

Koviloor Digital Library

இந்தப் புத்தகத்தை மூலமாக வைத்துக்கொண்டு மேற்கொண்டு அவன் உண்மையிலேயே திருடினானா என்றெல்லாம் நாம் விசாரணை செய்யலாம். ஆகவே மூலம் என்பது வேண்டும். அதுவே இல்லாமல் விசாரம் செய்யவே முடியாது. அதேபோல்தான் உபநிஷத்துக்கள் மூலமாகத் தெரிவிக்கப்படும் பரம்பொருளை உபநிஷத்தே இல்லாமல் விசாரம் செய்தால்,

யத்னேனானுமிதோऽப்யர்த்த: குசலைரனுமாத்ருபி: | (8.)

என்பது போல்தான் ஆகும்.

முதலில் நாம் வேதத்தைச் சரணடைய வேண்டும். அதில் கூறியது போல் வாழ்க்கை நடத்த வேண்டும். மனது சுத்தமாக ஆக 'கர்மா' தானாகவே சிறிது சிறிதாக விட்டுப்போய்விடும். விட்டுப்போன கர்மாவிற்காக நாம் அழ வேண்டியதில்லை. விசாரம் தீவிரமாகிறதா என்றுதான் நாம் பார்க்க வேண்டும். அவ்வாறு அது தீவிரமானால்,

அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே (1.16)

என்பது போல் இதே ஜன்மாவிலேயே ப்ரஹ்ம ஞானம் சம்பாதிக்கலாம். இதன் மூலம் மறுபிறவி வராமல் செய்து கொள்ளலாம். ஜன்மாவே இல்லையென்றால் துக்கமேயில்லை. துக்கமற்ற, நித்ய சுகமாய் இருக்கப்பட்ட ஆத்மாவைப் பற்றிய ஞானம் பெற்றுக் கொண்டு, '*ப்ரஹ்மவித் ஆப்னோதிபரம்*' என்பது போல் இருக்க வேண்டும். ப்ரஹ்மத்தைத் தவிர வேறு எந்த வஸ்துவும் 'பரம்' (உத்தமமான) வஸ்து இல்லை. இவ்வாறு '*ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி*' என்று சொன்னது போல் நாம் பரம்பொருளை அடைந்து நம்முடைய இப்பிறவியைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

சங்கரபகவத்பாதாள் ஓரிடத்தில் உதாரணம் ஒன்று கூறுகிறார். நமது உடல் ஒரு படகு போன்றது. இதில் உட்கார்ந்திருக்கும் ஜீவன் என்ற சோம்பேறி, 'எவ்வளவு தண்ணீர் வந்தாலும் என்ன கவலை? நான்தான் படகினுள் அமர்ந்து கொண்டிருக்கிறேனே' என்று நினைப்பான். ஆனால்,

Koviloor Digital Library

பராஞ்சி கானி வ்யத்ருணத்ஸ்வயம்பூ: |
தஸ்மாத்பராங்பச்யதி நாந்தராத்மன் || (20.)

(ஸ்வயம்புவான இறைவன் வெளிச் செல்லும் புலன்களைக் குறையுள்ளவையாகத் தந்துவிட்டான். ஆதலால் ஒருவன் வெளிப் பொருட்களையே பார்க்கிறானே தவிர உள்–ஆத்மாவை அல்ல.)

என்று கூறுவதுபோல் இந்திரியங்கள் எங்கெங்கு ஓடுகின்றனவோ அங்குதான் நாமும் ஓடுகிறோம். இந்திரியங்கள் எல்லாம் நம் படகில் உள்ள ஓட்டைகள். அந்த ஓட்டைகளை நாம் ஏதாவது பசை மூலம் ஒட்டி அடைத்து வைத்தால் ஓடத்தில் நாம் உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அந்த ஓட்டைகளை நாம் அடைக்காவிட்டால் சிறிது தூரம் சென்றவுடன் தண்ணீர் ஓட்டைக்குள் வந்து கொண்டிருக்கும். நாமும் மூழ்கி விடுவோம். ஆதலால் நாம் புண்ணிய ஸாதகமாய், ஞான ஸாதகமாய் இருக்கப்பட்ட மனித ஜன்மத்தை வீணாக்கக் கூடாது.

பகவத்பாதாள் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் எழுதுமிடத்தே சொல்லுவார் :

முஹூர்த்தமாத்ரேSதிக்ராந்தே பகவச்சிந்தனம் வினா |
தஸ்யுபிர்முஷிதேனேவ யுக்தமாக்ரந்திதும் த்ருவம் || (21.)

காலம் என்பது கிடைத்தற்கு அரிது. மற்ற எந்தப் பொருளும் கிடைக்கலாம். ஆனால் காலம் என்பது வ்யர்த்தமாகப் (வீணாக) போய் விட்டதென்றால் பிறகு மீண்டும் சம்பாதிக்க முடியாது. அதனால் நாம் மிகவும் கவனத்துடனிருக்க வேண்டும். நம்முடைய நகையெல்லாம் திருடன் கொண்டு சென்றால் நாம் எப்படி அழுவோமோ, அதேபோல் காலம் சிறிது வீணானாலும் நாம் அழ வேண்டும். கிடைத்துள்ள மனிதப் பிறவி மிகவும் அரிது. அது கிடைத்திருக்கிறது. அதிலும் ஸத் ஸஹவாசம் கிடைப்பது கஷ்டம். அதுவும் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஓரளவிற்கு "பிரபஞ்சம் என்பது இவ்வளவுதான். நாம் சாதிப்பதற்கு ஓர் இலட்சியம் இருக்கிறது. இதிலேயே (இந்த உலகத்திலேயே) நாம் எப்போதும் பிரமித்துக்கொண்டு இருக்கக் கூடாது" என்ற கருத்து உண்டாகியிருக்கிறது. இப்படியிருந்தும் நாம் சோம்பேறிகளாய்

Koviloor Digital Library

இருந்துவிட்டால் அதைவிட முட்டாள்தனம் வேறென்னதான் இருக்க முடியும்?

இத: கோன்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்த்தே ப்ரமாத்யதி |
துர்லபம் மானுஷம் தேஹம் ப்ராப்ய தத்ராபி
பௌருஷம் || (1.34)

(பெறற்கரிய மனித உடலையும், அதிலும் புருஷத் தன்மையையும் அடைந்தபின் எவன் தன் (ஆத்ம) விஷயத்திலேயே தவறுகிறானோ அவனைவிட முட்டாளாக யாரேனும் இருக்க முடியுமா?)

மனிதன் என்று பெயர் வைத்துக்கொண்டு வாழ்க்கையை வீணடித்தால் மூடாத்மா ஆகிவிடுவோம் என்று சொன்னார் பகவத்பாதாள். மானிட ஜன்மம் வந்ததினால், இனிமேல் ஜன்மம் இல்லாமல் செய்துகொள்ள வேண்டும் என்பதில் தீர்மானமான மனது உள்ளவராய் உள்ள உங்களுக்கு பகவான் அதில் முன்னேற்றத்தைச் சாதித்துக் கொடுக்கட்டும் என்று பிரார்த்தனை செய்து இந்த உபந்யாஸத்தை முடித்துக் கொள்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே |
ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் |
ஜய ஜய ராம ராம ||

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

16. சங்கரர் நிலைநாட்டிய உபநிடத தத்துவம்

ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம் ||
நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம் | (1.)

(ச்ருதிகள், ஸ்ம்ருதிகள் மற்றும் புராணங்கள் ஆகியவற்றிற்கு இருப்பிடமானவரும், கருணைக்கு இருப்பிடமானவரும், போற்றத்தக்க பாதாரவிந்தங்களை உடையவரும், உலகத்திற்கு நன்மை செய்பவருமான சங்கரரை நமஸ்கரிக்கிறேன்.)

ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் 1200வது பிறந்த நாளையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இவ்விழாவில் நீங்களெல்லோரும் பங்கேற்க வந்துள்ளீர்கள். ஏன்? அதிலிருந்து நமக்கு ஏதாவது பலன் கிடைக்கலாம் என்ற நல்லெண்ணத்துடன் வந்திருக்கிறீர்கள். பலன் கிடைக்காதிருக்குமேயானால் இந்த விழாவைக் கொண்டாடும் அவசியமே இருந்திருக்காது.

சங்கரபகவத்பாதாளின் மஹிமை குறித்து பண்டிதர்களில் சிறந்தவர் ஒருவர் கூறினார்:

கணதயதியா காராகாராதபேதமனாத்மன:
கபிலமுனினா நிர்ணிக்தாத்மானமஞ்சிதவிக்ரஹம் |
நிகமசிரஸா ஸ்வாராஜ்யே ஸ்வே சிராதபிஷேசிதம்
ஜயதி ஸமவன் தேவம் தாஸ்யாத் குருர்மம தாந்த்ரிகாத் || (2.)

(உடலே ஆத்மா என்ற கொள்கை கணாதரால் நிராகரிக்கப்பட்டு அநாத்மாவான உடல் என்னும் சிறையிலிருந்து ஆத்மா விடுவிக்கப்பட்டது. பிறகு கபிலமுனிவரால் ஆத்மா சுத்த ஸ்வரூபம் என்று நிலைநிறுத்தப்பட்டது. உபநிஷத்தாகிய வேதாந்தத்தால் சுயமாகப் பிரகாசிக்கும் சுதந்திர ஸ்வரூபமாய் பிரதிஷ்டாபனம் செய்யப்பட்ட ஆத்மாவை, தாந்த்ரிகர்களின் கூற்றுப்படி ஆத்மா 'அடிமை' என்ற நிலையிலிருந்து காத்துக்கொண்டு எனது குருநாதர் வெற்றியுடன் திகழ்கிறார்.)

ஆத்ம ஸ்வரூபத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வர்ணித்தனர். சார்வாகர்கள் போன்றவர்கள் இந்த தேஹமே (உடலே) ஆத்மா என்று கூறினர். ஆனால் அவர்களைத் தமது

Koviloor Digital Library

யுக்திகளால் முழுவதும் ஜெயித்து தமது கொள்கையை தார்க்கீகர்கள் நிலைநாட்டினர்.

கணதயதியா காராகாராதபேதமனாத்மன:

இந்த ஆத்மாவானவன், ஒரு காராகாரம் அதாவது சிறை போன்ற இந்த சரீரத்தில் தன்னை அடைத்துக் கொண்டுள்ளதாக சார்வாகர்கள் கூறினர். எப்படி இது ஆயிற்று? சரீரம் எத்தகையது? நான் எத்தகையவன்? என்ற விசாரணை செய்தும் அது தலையில் ஏறாததால் சார்வாகர்களால் இந்த சரீரத்திற்குள் ஆத்மா அடைக்கப்பட்டான். அதனால், சிறையிலிருக்கும் ஆத்மாவை சரீரத்திலிருந்து வேறுபடுத்தினர் தார்க்கீகர்கள்.

ஆனால் தார்க்கீகர்களும் ஆத்மாவின் ஸ்வரூபம் எப்பேற்பட்டது என்பதை சரிவர அறிந்திருக்கவில்லை. ஆத்மாவுக்கு சுகம் மற்றும் துக்கம் உண்டு என்று கூறி விட்டனர் தார்க்கீகர்கள். எது ஒரு பொருளுடைய ஸ்வபாவமோ (இயற்கை நிலையோ) அது என்றும் அப்பொருளைவிட்டு நீங்காமல் நிலைத்திருக்கக்கூடியது. சுக துக்கங்கள் ஆத்மாவின் ஸ்வபாவமாகுமேயென்றால், மோக்ஷத்தில் அவற்றிற்கு என்னவாகும் என்று கேட்டால், துக்கம் நீங்கும் என்று கூறுவர். இது எப்படி முடியும்? ஸ்வபாவம் என்பது வஸ்து உள்ள வரை அழியாமல் இருக்கும். ஆதலால் தார்க்கீகர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

கபிலமுனினா நிர்ணிக்தாத்மானமஞ்சிதவிக்ரஹம் ।

கபிலமுனிவர் அவ்வாத்மாவை நிரஞ்ஜனன் (குணங்கள் என்னும் மாசு இல்லாதவன்) என்று சொன்னார். சுகதுக்காதிகள் புத்தியால் அறியப்படுபவை; அவைகளை தன்னில் ஆரோபம் (ஏற்றுக் கொண்டு) செய்து கொண்டுள்ளான் ஆத்மா. ஆதலால் அவன் நிரஞ்ஜனனாக இருக்க ஆக்ஷேபமில்லை என்று ஒரு சமாதானம் கொடுத்தார் அவர்.

நிகமசிரஸா ஸ்வாராஜ்யே ஸ்வே சிராதபிஷேசிதம்

ஆனால், 'நிகமசிரஸ்' – அதாவது உபநிஷத் என்ன கூறுகிறது என்றால்,

ஸ்வயமேவ ராட் ஸ்வராட் ஸ்வராட்பாவம் ஸ்வாராஜ்யம் (3.)

(தானே ராஜாவாக விளங்குபவர். அவருடைய தன்மை ஸ்வாராஜ்யம். அதாவது தானே அரசனாய் இருக்கும் தன்மை.)

Koviloor Digital Library

இவனே ஸகல ஆனந்தங்களுக்கும் மூலபூதமாக(காரணமாக) இருப்பவன். இவனைச் சார்ந்துதான் மற்றவரின் ஆனந்தம்.

ஏதஸ்யைவானந்தஸ்ய அன்யானி பூதானி மாத்ரா
முபஜீவந்தி (1.29)

(இந்த ஆத்ம ஸ்வரூபானந்தத்தின் துளிகளைத்தான் மற்ற தேவர்கள் யாவரும் அனுபவிக்கிறார்கள்.)

இப்பரமாத்மாவின் ஆனந்தத்தையே, அதனுடையதானதொரு சிறு துளி அளவு ஆனந்தத்தை அனுபவித்துவிட்டு தான் பெரும் பேறு பெற்றவன் என்று ஒருவன் எண்ணுகிறான். ஆனால் உண்மையில் இவன் "ஸச்சிதானந்த ஸ்வரூபன்". அதாவது ஸத் ஸ்வரூபன், சித் ஸ்வரூபன் மற்றும் ஆனந்த ஸ்வரூபன் என்று கூறியது உபநிஷத். மேலும் "அது மற்றவரது (ராஜ்யம்) அல்ல; அவனுடையதே" என்றும் பறைசாற்றியது.

பரமாத்மா எப்படிப்பட்டவன் என்றால், அவன் ஞான ஸ்வரூபன். "ஞானவத்" (ஞானம் கொண்டவன்) என்றால் ஞானம் வேறு, அவன் வேறு என்றாகி, வித்தியாசப்படுத்திப் பார்க்கும் பார்வை வந்து விடும். பேதம் இருந்தால்

த்விதீயாத்வை பயம் பவதி (5.15)

(இரண்டாவது பொருளிலிருந்து பயம் ஏற்படுகிறது.)

என்றுதான் ஆகும். பயத்திற்கு ஆளானவன் பரமாத்மாவாக இருக்க முடியாது. அதனால் அவன் ஞான ஸ்வரூபனே தவிர "ஞானவத்" (ஞானம் கொண்டவன்) இல்லை. மேலும் அவன் ஸத் ஸ்வரூபனும்கூட. ஆகையால் "ஆத்மா ஒரே பதார்த்தம்; அதிலுள்ள ஸச்சிதானந்தங்கள் வெவ்வேறல்ல; அவை ஸமான ரூபமானவை" என்றே இதற்குப் பொருள்.

ஆனால் வேறு சிலர், ஆகமிகர்கள் (ஆகம வழி நடப்பவர்கள் – வேதத்தைப் ப்ரமாணமாகக் கொண்டவர்கள்) அவ்வாத்மாவை 'பகவானுடைய தாஸன்' என்று கூறினர்.

சங்கரபகவத்பாதாள் ஆத்மாவை ஆகமிகர்களிடமிருந்து காத்தார் ! அதாவது உபநிஷத் எந்த ஸ்தானத்தில் ஆத்மாவை

Koviloor Digital Library

நிலைநிறுத்தியதோ அதை நமக்குத் தக்க வைத்துக் கொடுத்தவர் சங்கரபகவத்பாதர். ஆதலால் அவர் நமது வணக்கத்துக்குரியவர்.

நாம் எல்லோரும் விரும்புவது எது என்றால், அது ஆனந்தமேயாகும். 'என்றும் இருக்க வேண்டும்' என்ற "இருப்பை" விரும்புகிறோம். ஆனந்தமும் இருக்கலாம், இருப்பும் இருக்கலாம். ஆனால் ப்ரகாசமே இல்லாமல் போனால் அந்த இரண்டும் இருந்தும் பயனில்லை. ஆதலால் ப்ரகாசமும் தேவை. ஆனந்த ஸ்வரூபனாகவும் இருக்க வேண்டும், சித் ஸ்வரூபனாகவும் இருக்க வேண்டும் என்று ஒருவன் ஆசைப்பட்டால், பகவான் அவனுக்கு வேதங்கள் மூலமாக உபதேசம் அளித்தார்.

பரமாத்மாவின் ஸ்வரூபம் எத்தகையது என்றால்,

ஸத்யம் ஞானமனந்தம் ப்ரஹ்ம (5.2)

(இருப்புத்தன்மை, அறிவு மற்றும் முடிவற்றதுமான ப்ரஹ்மம்)

என்று காட்டிக் கொடுத்தார் பகவான். பரமாத்மா அப்படிப்பட்டவர் என்றால், இவன் (ஜீவாத்மா) எப்படிப்பட்டவன்?

ததாத்மானம் ஸ்வயமகுருத (4.)

(அந்தப் ப்ரஹ்மமானது தன்னையே உலகமாக ஆக்கிக் கொண்டது.)

அதே பரமாத்மாவே ஜீவரூபத்தைத் தாங்கியுள்ளது. பரமாத்மாவே ஜீவரூபத்தைத் தாங்கியது ஏன் என்றால், ஆத்மா ஒன்றே ஒன்றுதான் என்பதே அதற்குக் காரணம்.

இந்த மாமரம் மாமரமாக ஏன் உண்டாயிற்று (முளைத்தது) என்றால், இதன் கொட்டை மாமரத்துக் கொட்டை. அந்தக் கொட்டை எதிலிருந்து வந்தது என்றால் அதுவும் மாமரத்துக் கொட்டையே. அது எப்பொழுது வந்தது என்றால், அதை நம்மால் கூற இயலாது. அவித்யா, காமம், கர்மா என்று இவ்வாறாக பீஜம் (விதை) உள்ளது. அதற்குண்டான பலனைக் கொடுப்பதற்கு எப்பொழுது தகுந்த தருணம் வருகிறதோ, அப்பொழுது ஈச்வரனுக்குத் தகுந்த ஸங்கல்பம் ஏற்படவே வேண்டும். இந்த ஸங்கல்பத்தால் அந்த

Koviloor Digital Library

கர்மா அவசியம் பலிக்கவே வேண்டும். கர்மாவின் பலன் காரணமாக ஜீவன் சுகதுக்கங்களை அனுபவிக்கிறான். ஆனால் இந்த ஜீவன் என்றாவது ஒரு நாள் சாந்தியை அடைய வேண்டுமாயின், “நான் பரம்பொருளேதான்” என்று உணர வேண்டும்.

தமாத்மஸ்த்தம்யேSனு பச்யந்தி தீரா: தேஷாம் சாந்தி: சாச்வதீ நேதரேஷாம் || (5.)

(அப்படிப்பட்ட பரம்பொருளை தனக்குள்ளேயே இருப்பதாக யார் உணர்கிறார்களோ, அந்த அறிவாளிக்குத்தான் சாந்தி நிலைத்திருக்கும். மற்றவர்களுக்கு நிலைத்திருக்காது.)

தமாத்மஸ்த்தம் – நமது ஹ்ருதயத்திலுள்ள எந்த சுத்த நிர்குண பரப்ரஹ்மம் உள்ளதோ, அதை அறிந்துகொண்டு விட்டோமென்றால் பின்னர் நிலைத்து நிற்கும் அமைதி கிடைக்கும். ஏன் ஆத்மாவை கண்டுகொண்ட பின்னரே சாந்தி கிடைக்கும்? என்றால் நமக்கு அசாந்தி (அமைதியின்மை) இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த அசாந்தி நமக்கு உண்டானதற்குக் காரணம் நாம் இந்த பவபந்தத்தில் சிக்கிக் கொண்டதால்தான். இந்த பவபந்தம் ஏன் வந்தது?

ந தம் விதாத்த ய: இதம் ஜஜான அன்யத் யுஷ்மாகம் அந்தரம் பவாதி (6.)

(எவர் இந்த உலகைப் படைத்தாரோ அவரை நீங்கள் அறியவில்லை. நீங்கள் தெரிந்து கொண்டதற்கும் அந்த உண்மைப் பொருளுக்கும் வேறுபாடு உ்ண்டு.)

இந்த பவபந்தத்தை எவ்வாறு களைவது? அதற்கு ஞானம் ஏற்பட வேண்டும். சில க்ரியா ஸாத்யத்தால் (செயல்களால் நடப்பது) ஏற்படும். ஆனால் பவபந்தத்தைக் களைவதோ ஞான ஸாத்யத்தால் (அறிவால் நடப்பது) ஏற்படும்.

உலகத்தில் இரண்டு விதமான பொருட்களுள்ளன. சில, ஞானத்தாலேயே நாசமாகக் கூடியன. சிலவோ கர்மாவினால் நாசமாக்கப்பட வேண்டியவை. எது கர்மாவினால் நாசமாகும், எது ஞானத்தால் நாசமாகும் என்றால் எந்த வஸ்து அது இல்லாமலேயே நமது புத்தியால் கற்பனை செய்யப்பட்டதோ, அப்படிப்பட்ட

Koviloor Digital Library

வஸ்துவுக்கு ஞானத்தினால்தான் நாசம் ஏற்படும். எது அறிவு சம்பந்தப்பட்டதாக இல்லையோ, (வெளிப்பொருளாக இருக்கிறதோ) அதைக் கர்மாவினால்தான் நாசம் செய்ய முடியும்.

இதற்கு ஓர் உதாரணத்தைக் கூறுகின்றனர். பானை, துணி முதலிய பொருட்கள் நாசமடைய வேண்டும் என்றால் அதில் நமது அறிவு ஏற்படுவதால் அவை நாசமாகாது. குடத்தை உடைத்தால்தான் குடம் நாசமாகும். அதேசமயம் ஏதோ ஒரு பொருள் நமது ப்ராந்தியின் (தவறான எண்ணத்தால்) காரணமாக "இருக்கிறது" என்று நமக்குத் தோன்றி விட்டால், அப்பொழுது அந்தப் புத்தியில் தோன்றக்கூடிய பொருள் போக வேண்டுமாயின் நமக்கு அதன் உண்மையான அறிவு அவசியம் தேவை. அதனால்தான்,

இத்தம் ஸித்தே விபாகே ச்ருதிசிகரகிரா வித்திகாத்ய: ப்ரதீத:
பந்தோ மித்யேதி சித்தே ந ததபஹதயே கர்மஜாதம்
ஸமர்த்தம் I (7.)

(இவ்விதம் வேதாந்த வாக்கியத்தினால் உள்ளத்தில் உணரப்பட்டவர், பந்தம் 'மித்யை' என்று உணர்ந்த பிறகு கர்மாக்களை செய்ய விரும்புவது முடியாது.)

இத்தம் சித்தே விபாகே – அதாவது வேதத்தில் என்ன கூறுவர் என்றால், பவபந்தம் (பிறவிப்பிணி) நிவ்ருத்தியாவது (விலகுவது) எப்பொழுது?

ஞானாதேவ து கைவல்யம் (9.30)

(ஞானத்தினால் மட்டுமே மோக்ஷ நிலை ஏற்படுகிறது.)

என்பது ஸ்ம்ருதி வாக்கியம். மேலும் உபநிஷத், "நீ எப்பொழுது பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரத்தை (தரிசனத்தை) அடைவாயோ அப்பொழுது உனக்கு பவபந்தம் இல்லை" என்று கூறுகிறது. அதாவது பவபந்தம் இனி இல்லை என்றால், இந்த பவபந்தம் எதன்னால் நீங்கிற்று? ஞானத்தால் நீங்கிற்று என்று பதில் கூறுகிறோம். ஞானத்தால் நீங்கும் என்றால் பவபந்தம் மித்யாத்மகமாக (உண்மையில் இல்லாமல், இருப்பது போல்) இருந்தது என்று தீர்மானமாகிறது. அதற்கு, பவபந்தம் ஏற்படுவதற்கு, கர்மமென்பது

Koviloor Digital Library

காரணமேயல்ல. ஆதலால் இந்த பந்தத்தை நாம் கர்மாவினால் களைய முடியாது; ஞானத்தால்தான் இது ஸாத்தியம்.

எந்த ஞானத்தால் எதைப் போக்குவது என்றால், எந்த வஸ்துவின் விஷயத்தில் அக்ஞானத்தால் தவறான அறிவு ஏற்பட்டிருக்கிறதோ, அந்த விஷயத்தின் சரியான அறிவு ஏற்படுமாயின், அப்பொழுது அந்தத் தவறான ஞானம் போகும். தூரத்திலுள்ள ஒரு தூணை, வெளிச்சம் சிறிது குறைந்துள்ளபோது பார்க்க நேர்ந்தால் "அது ஒரு மனிதன்" என்று நாம் தவறாக புரிந்து கொண்டு, "அதோ அங்கு ஒரு மனிதன் தெரிகிறான்" என்று வ்யவஹாரம் செய்கிறோம். இந்தத் தவறான எண்ணம் போக வேண்டுமானால் அந்தத் தூணின் அருகில் போய் அதைச் சரியாகப் பார்த்து, "இது உண்மையில் ஒரு தூண்தான், மனிதனல்ல" என்ற ஒரு தீர்மானத்திற்கு வந்தால்தான் முடியும். அதைவிட்டு, அதற்குப் பிராயச்சித்தம் முதலிய வேறு எந்த வழியைக் கையாண்டாலும் அந்தத் தூணில் ஏற்பட்ட தவறான அறிவு நீங்குமா?

அவ்வாறே நாம் அனாத்மாவான சரீரத்தில் "அதுவே ஆத்மா" என்ற தவறான அறிவை வைத்துக்கொண்டு நமது ஸச்சிதானந்த ஸ்வரூபத்தை மறந்து விடுகிறோம்.

ஆத்மா ஸச்சித்ஸுகாத்மாऽனுபவபரிசித:
ஸர்வதேஹாதியந்தா (8.)

(ஆத்மாவானது ஸத்தாயும், ஞானமாயும், ஆனந்தமாயும் இருக்கும் தன்மையுள்ளது. அனுபவத்தினாலேயே (இவ்விதமென்று) பழக்கத்தினால் அறியப்பட்டது; எல்லா சரீரம் (இந்திரியம், பிராணன், மனஸ்) முதலியவைகளை அடக்கி ஏவுவது.)

தேகத்தை நடத்துபவன் ஆத்மா. அதாவது, நடத்துபவன் வேறாக இருந்துகொண்டு, தன்னின்றும் வேறான தேகத்திற்கு சக்தியைக் கொடுத்துக் கொண்டு தேகத்தை நடத்துகிறான். ஆனால் நமது தவறான அறிவு எத்தகையது என்றால்,

அன்யோऽன்யஸ்மின்னன்யோऽன்யாத்மகதாமன்யோऽன்ய
தர்மாம்ச்ச அத்யஸ்ய (9.)

Koviloor Digital Library

(ஒன்றை மற்றொன்றிலும், ஒன்றை மற்றொன்றாகவும் தவறுதலாகப் புரிந்துகொண்டு....)

என்றவாறு "ஆத்மாவை சரீரத்தில்" மற்றும் "சரீரத்தை ஆத்மாவில்" என்று இரண்டிற்கும் பரஸ்பரம் தொடர்பு வைத்து, இரண்டையும் ஒன்றாக கருதிக் கொண்டிருக்கிறோம். இந்த சரீர சுகமே ஆத்மாவின் சுகம் என்ற தவறான அறிவினால், சரீர சுகத்திற்கு நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு முயற்சி செய்தாலும் இது (சரீரம்) அழிவடையக் கூடியது. இது அசுத்தமேயாகும். ஆகையால் எது ஸ்திரமானதோ (நிலைபெற்றிருக்குமோ) அதை நாம் அடைய வேண்டும். இதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால், அக்ஞானம் என்பதைப் போக்க வேண்டும். அதற்கு வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை.

ஆத்மா ஒன்றைப்பற்றிய ஞானம் ஏற்பட்டால் போதும். எதை வேதம் ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்று கூறுகிறதோ அதுவே தனது ஸ்வரூபம் என்ற அறிவு ஏற்பட வேண்டும். இந்த அறிவு ஏற்பட்ட பிறகும் ப்ராரப்த கர்மா இருக்கும்வரை ஸகல செயல்களும் நடக்கலாம். ப்ராரப்த கர்மா முடிந்த பிறகு ஸச்சிதானந்த அத்விதீய (இரண்டற்ற) ஸ்வரூபமான ப்ரஹ்ம ப்ராப்தியே ஒருவனுக்குக் கிடைத்துவிடும். ப்ரஹ்ம நிலையை அடைவது என்றால் ப்ரஹ்மம் இப்போது இல்லாததாக இருந்து பிறகு ப்ரஹ்மத்தை அடைவது என்றல்ல. இது எவ்வாறு என்றால், நாம் நம் மீதே இருக்கும் ஏதாவது ஒரு பொருளை மறந்துவிட்டு அதைப் பிறகு தேடிக் கண்டுபிடித்து "கிடைத்தது" என்போம். "கிடைக்க" வேண்டுமானால் அது தொலைந்து போயிருக்க வேண்டும் அல்லவா? உண்மையில் அது நம்முடனேயே தானே இருந்தது? ஆயினும் 'தொலைந்து போய்விட்டது' என்ற தவறான அறிவு முதலில் ஏற்பட்டுவிட்டு பின்னர் தேடிக் கண்டுபிடித்த பிறகு "கிடைத்தது" என்றுதானே நாம் வ்யாவஹாரம் செய்வோம்? இப்படியேதான் ப்ரஹ்ம ஸ்வரூபமாயிருந்தும் ஏதோ ஒரு கால வசத்தால் அவித்யா (அக்ஞான) சம்பந்தம் ஏற்பட்டு, ப்ரஹ்மத்தின் பிரகாசம் மறைந்திருந்து பின்னர் அப்பிரகாசம் ஏற்படும்போது 'ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஒருவன் அடைகிறான்' என்று கூறுவது தவறான யுக்தியாகாது. 'கிடைத்தது போல' அவ்வளவுதான். முன்பே இருந்தும் கூட அது கிடைக்காதது போலிருந்தது; இப்பொழுது

Koviloor Digital Library

கிடைத்தது போலாயிற்று. இவ்வாறு கூறி பகவத்பாதர் நம்மை இந்த தாஸ்யத்திலிருந்து (ஆகமிகர்கள் ஜீவனை ஈசனின் தாஸன் என்று வர்ணித்திருந்தனர்) காப்பாற்றி, '*சங்கரார்ய: பரேசம் அக்ருத்*' என்றவாறு இந்த ஜீவனை பரேசனாக (உயர்ந்தவனாக) 'ஆக்கி' அமர்த்தினார்.

வேறு சிலரின் கொள்கைகளின்படி நாம் வைகுண்டத்திற்குப் போனாலும், கைலாசத்திற்குப் போனாலும்

த்விதீயாத்வை பயம் பவதி

(இரண்டாவது பொருளிலிருந்து பயம் ஏற்படுகிறது.)

என்றுதான் ஆகும். வைகுண்டாதிலோகங்களில் பணிவிடை செய்யும் தேவர்களின் சரித்திரத்தை நாம் கேள்விப்படுகிறோம். அவர்களும் சாபங்களுக்கு உள்ளானார்கள். பிறகு இந்த உலகத்திற்கு வந்தனர். அவர்களிடமும் பரஸ்பரம் பொறாமை இருந்தது என்றும் கேள்விப்படுகிறோம். ஏனெனின், இன்னொரு வஸ்துவைப் பார்க்கும்போது, அதிலிருக்கும் ஏதாவது ஒரு குணாதிசயத்தைக் காண நேர்ந்தால், அந்த குணாதிசயத்தை நாமும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற வேட்கை (ஆசை) ஸாமான்யமாக எல்லா மனிதர்களுக்கும் இருக்கும். ஆகவே, எந்த லோகம் சென்றாலும் ஜீவனுக்கு இத்தகைய வேட்கை விட்டுப் போகாது. ஆனால், அத்வைத கோட்பாட்டின்படி

யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத்கேன கம் பச்யேத் (10.)

(எந்த நிலையில் எல்லாம் ஆத்ம ஸ்வரூபமாக ஆகி விட்டதோ அப்பொழுது யார் யாரை பார்ப்பது? யார் யாரைக் கேட்பது? .....)

எல்லாமும் ஆத்மாவாகவே ஆகிவிட்டவன் எதைப் பார்ப்பான், எதைக் கேட்பான், எதைத்தான் முகர்வான்? எல்லாமும் ஸத் ஸ்வரூபம் என்று பார்த்து இவன் ஆத்மானந்தத்தில் நிலைத்திருப்பதால், இந்த லௌகிகமான சுகதுக்கங்களிரண்டுமே அவனுக்குத் தோன்றுவது கூட இல்லை. நிச்சயமாக அவை அவனிடமிருந்து விலகிவிட்டன. அப்படிப்பட்ட ஆத்ம ஸுகானுபவத்தைப் பெற்றுக்கொண்டு முக்தி என்ற முக்த ஸ்வரூபத்தில் அவன் (ஜீவன்) விளங்குவான் என்று பகவத்பாதர் இந்த ஜீவனை வர்ணித்தார்.

Koviloor Digital Library

இந்த ஸித்தாந்தத்தை அவர் எதை ஆதாரமாகக் கொண்டு நிலைநாட்டினார் என்று கேட்டால், அது

தம் த்வௌபநிஷதம் புருஷம் ப்ருச்சாமி (15.13)

(உபநிஷத்துக்களினால் மட்டுமே உணர்த்தப்படும் அந்தப் பரம்பொருளைப் பற்றி கேள்வி கேட்கிறேன்.)

உபநிஷத்தின் ஆதாரம் மூலமாகத்தான்.

உபநிஷதைகஸமதிகம்யம் (11.)

(உபநிஷத்தினால் மட்டுமே அறியத்தக்கவர்.)

அதாவது, உலகத்திலுள்ள பல மதங்கள் மோக்ஷம் என்பது அனுபவகம்யம் (அனுபவத்தாலேயே அறிந்து கொள்ள வேண்டியது) என்று கூறுவதில்லை. ஆனால் சாஸ்த்ரகம்யம் (சாஸ்திரத்தினாலே அறிய வேண்டியது) என்று கூறுகிறார்கள். நாம் மோக்ஷம் என்பது அனுபவகம்யமும் மற்றும் சாஸ்த்ரகம்யமும் என்கிறோம். அதாவது மோக்ஷம் என்பதை ஒருவன் தன் அனுபவத்தாலேயே அறிந்து கொள்ள வேண்டியது. இவ்வனுபவம் ஏற்படுவதற்கு முன்பு மோக்ஷ ஸ்வரூபம் பற்றி சாஸ்திரத்திலிருந்தே அறிய வேண்டிய அவசியமும் உள்ளது என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

ப்ரஸ்த்தானத்ரயம் எனப்படும் மூன்றில் ஒன்றான ஸூத்ரபாஷ்யத்தின் ஆரம்பத்தில் சங்கரர்,

யதா ஸம்பவமிஹ அனுபவவேத்யம் ச ப்ரமாணம் (12.)

(பரமாத்ம விஷயத்தில் அவரவர் தகுதிக்கேற்ப தத்தம் அனுபவமும் ப்ரமாணமாகும்.)

அனுபவம் மட்டும்தான் ப்ரமாணமா என்று கேட்டால், அவ்வனுபவம் வருவதற்கு ச்ருதி (வேத) ப்ரமாணமும் அவசியமாகிறது. ச்ருதியிலிருந்து அனுபவம் ஏற்படும். மாறாக, ஏதோ ஒரு பாதையில் சென்று நாம் ஏதோ ஓர் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு அதுவே பரம்பொருளின் (ஆத்ம) தத்துவம் என்று எண்ணி ச்ரேயஸ்ஸிலிருந்து தவறிவிடும் ஓர் ஆபத்து நேரிட வாய்ப்பு இருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக,

Koviloor Digital Library

ச்ருதிப்ரமாணைகமதே: ஸ்வதர்மநிஷ்ட்டா
தயைவாத்மவிசுத்திரஸ்ய ।
விசுத்தபுத்தே: பரமாத்மவேதனம் தேனைவ
ஸம்ஸாரஸமூலநாச: । (7.8)

(ச்ருதியை மட்டும் ப்ரமாணமாகக் கொண்டவர்களுக்கு தன் தர்மத்திலேயே நிலைத்திருப்பதினால் மட்டுமே மனதிற்கு சித்தியேற்படுகிறது. தெளிவான புத்தியுடையவனுக்கு பரமாத்மாவின் அறிவு வருகிறது. அதனால் ஸம்ஸாரம் வேறுடன் நாசமாகிறது.)

என்று கூறினார் பகவத்பாதர். நாம் வேத சாஸ்திரங்களில் உறுதியான நம்பிக்கை வைத்து, அந்தத் திடமான நம்பிக்கையுடன் அவ்வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களை அனுஷ்டித்து வந்தால் நம் அந்தஃகரணம் (மனம்) சுத்தமாகும். எவனுடைய மனது சுத்தமாயுள்ளதோ அவன் வேதாந்தத்தை வாசிக்க தகுதியுடையவன். அவனுக்கு பரமாத்ம அறிவு உண்டாகும். இப்படியின்றி, மனத் தூய்மையை சம்பாதிக்காமல் வேதாந்தத்தைப் படிக்க முற்பட்டால், அதில் கூறப்பட்ட விஷயங்களுக்கு தவறான அர்த்தங்களைக் கற்பித்துக்கொண்டு "நானே இறைவன்" என்று பாவித்து "இறைவன் இருக்கும் இடமான கோவிலில் நானே அமர்ந்து விடுகிறேன்" என்று கோவிலில் உள்ள சிலை மீது அமரவும் ஒருவன் துணிந்துவிடலாம். இப்படிப்பட்ட மனப்பான்மை நமக்கு வரக் கூடாது.

வேதாந்தத்தில் கூறப்படுவது என்ன? இந்தத் தேகத்தில் உள்ள அபிமானத்தை விலக்கி அசைவற்ற, நிர்குணமான (குணங்களற்ற), நிரஞ்ஜனமான (மாசற்ற) எந்த ஆத்மா உள்ளதோ, அதை நாம் ப்ரஹ்மம் என்று அறிய வேண்டும். வேதம் "எல்லையற்ற பரம்பொருளே நீ " என்று கூறியுள்ளதே தவிர, சரீர சம்பந்தத்தை வைத்துக் கொண்டு "நீ ப்ரஹ்மம்" என்று கூறவில்லை. நாம் பரிசுத்த புத்தியுடையவர்களாக ஆகாத வரையில், நம் மனது சாஸ்திரத்திற்குத் தவறான அர்த்தத்தைக் கற்பிக்கக்கூடும். பிறகு நாம் ஏதோ ஒரு தவறான முடிவுக்கு வந்து அழிவை அடையக்கூடும். ஆதலால் நாம் சித்த சுத்தியைத் தரும் கர்மாக்களை அனுஷ்டித்து, மனத்தூய்மை பெற்றுக்கொண்டு பின்னர் வேதாந்த சாஸ்திரத்தை வாசித்தால் நமக்கு அத்யாத்ம வித்யை கைகூடும். பிறகு நாம் இப்பொழுது

Koviloor Digital Library

அனுபவித்துக் கொண்டிருக்கும் கற்பனையான பவபந்தத்திலிருந்து முழுவதும் விடுதலை பெற்று ஆனந்தக்கடலில் திளைப்பவர்களாக இருக்கலாம் என்று கூறி பகவத்பாதர் உபநிஷத் ஸித்தாந்தத்தை நிலைநாட்டினார்.

சங்கரபகவத்பாதர் வாழ்ந்த காலத்தில் வேத சாஸ்திரங்கள்தான் ப்ரமாணம் என்ற நம்பிக்கை மிகவும் குன்றிப் போயிருந்தது. பரமாத்மாவை தெரிந்து கொள்வதற்கான முயற்சி ஜனங்களிடம் துளிக்கூட இல்லாமலிருந்தது. அப்படிப்பட்ட நிலையில் சங்கரர் அவதரித்து இமயம் முதல் குமரிவரை ஸஞ்சரித்து, யார் யார் எந்தெந்த தேவதைகளை உபாஸித்து வந்தனரோ அதைத் தடுக்காமல், அதிலிருந்த தவறான வழிகளை மட்டும் விலக்கி, சரியான வழியைக் காட்டிக் கொடுத்தார். மேலும் சங்கரர், "ஒரே ப்ரஹ்மத்தை வெவ்வேறு உருவங்களில் நீங்கள் ஆராதித்து வருகிறீர்கள். ஆதலால் வேற்றுமை உணர்வைத் துறந்து ப்ரஹ்மத்தை அவரவர் ருசிக்கேற்ப ஆராதனை செய்து, சித்த சுத்தியை அடைந்து ஆத்ம ஞானத்தைப் பெற்று பரப்ரஹ்ம ஸ்வரூபமாக விளங்குங்கள்" என்று உபதேசித்தருளினார். கிங்கரனாக (தாஸனாக) இருக்கும் ஜீவனை பரமேச்வரனாக்கி வைத்தார் சங்கரர். இதைக் காட்டிலும் பெரிய காரியத்தை யார்தான் செய்ய முடியும் ?

ஆதலால் நாம் அவரது ஜெயந்தி நாளன்று அவரை நினைக்காமலிருந்தால், அவரது பூஜையைச் செய்யாமலிருந்தால், அவர் காட்டிய வழியை கடைப்பிடிக்காமலிருந்தால் நம்மிடத்தில் செய்நன்றி காட்டாத தோஷம் ஏற்படும். இத்தோஷம் வராமலிருக்கட்டும் என்று நாம் இந்த சங்கர ஜெயந்தி மஹோத்ஸவத்தைக் கொண்டாடுகிறோம். ஸ்ரீ சங்கரர் காட்டிய பாதையில் சென்று நாம் ச்ரேயஸ்ஸை அடைய வேண்டும் என்பது நமது கடமையாகும் என்று கூறி இந்த உபந்யாஸத்தை முடிக்கிறேன்.

ஹர நம: பார்வதீபதயே ।
ஹர ஹர மஹாதேவ ॥
ஜானகீகாந்தஸ்மரணம் ।
ஜய ஜய ராம ராம ॥

Koviloor Digital Library

அனுபந்தம்

அருளுரைகளில் ஆசார்யாள் கூறும் மேற்கோள்கள்

நூல்களின் சுருக்கம்

1.	ஸ்வாராஜ்ய ஸித்தி	ஸ்.ஸி.
2.	சத சுலோகீ	ச.ஸ்.
3.	பஞ்சதசீ	ப.த.
4.	ப்ரஹ்மஸூத்ர சாங்கர பாஷ்யத்தில் உள்ள அத்யாஸ பாஷ்யம்	ப்ர.ஸூ.அ.
5.	லகுயோக வாஸிஷ்டம்	ல.யோ.
6.	விவேகசூடாமணி	வி.சூ.
7.	பகவத் கீதை	ப.கீ.
8.	கடோபநிஷத்	க.உ.
9.	வைராக்ய சதகம்	வை.ச.
10.	முண்டகோபநிஷத்	மு.உ.
11.	ஏகச்லோகீ	ஏ.ஸ்.
12.	ப்ருஹதாரண்யகோபநிஷத்	ப்ரு. உ.
13.	மனீஷாபஞ்சகம்	ம.ப.
14.	நாராயண ஸூக்தம்	நா.ஸூ
15.	ச்வேதாச்வதரோபநிஷத்	ச்.உ.
16.	தைத்திரீயோபநிஷத்	தை. உ.
17.	உபதேச பஞ்சரத்னம்	உ.ப.
18.	சிவமஹிம்ன ஸ்தோத்ரம்	சி.ஸ்.
19.	ஈசாவாஸ்யோபநிஷத்	ஈ.உ.
20.	ஷட்பதீ ஸ்தோத்ரம்	ஷ. ஸ்.

Koviloor Digital Library

21.	கேனோபநிஷத்	கே.உ.
22.	சாந்தோக்யோபநிஷத்	சா.உ.
23.	பஜகோவிந்தம்	ப.கோ.
24.	ஸ்ரீமத் பாகவதம்	ஸ்ரீ.பா.
25.	புருஷஸூக்தம்	பு.ஸூ.
26.	கௌதமஸூத்ரம்	கௌ. ஸூ.
27.	மனுஸ்ம்ருதி	மனு.ஸ்.
28.	மஹாபாரதம்	ம.பா.
29.	காடகம்	கா.
30.	நிருக்தம்	நி.
31.	ஆத்மவித்யாவிலாஸம்	ஆ.வி.
32.	ஹஸ்தாமலகீயம்	ஹ.ஆ.
33.	சக்திமஹிம்னஃ ஸ்தோத்ரம்	ச.ம.ஸ்.
34.	ஸபாரஞ்ஜன சதகம்	ஸ.ச.
35.	ச்லோகவார்திகம்	ச்.வா.
36.	ஆசார்யாள் ஸம்ஸ்கிருதத்தில் கூறியவை	ஆ.
37.	கூடார்த்த தீபிகா (கீதா பாஷ்யம்)	கூடா.தீ.
38.	தைத்திரீய ஸம்ஹிதை	தை.ஸம்.
39.	ந்யாயம்	ந்யா.
40.	ச்ருதி வாக்கியம்	ச்ருதி.
41.	நாரத பரிவ்ராஜக உபநிஷத்	நா.ப.உ.
42.	விஷ்ணு புராணம்	வி.பு.
43.	ஸமயோசித பத்யமாலிகா	ஸ.ப.மா.
44.	ஸ்ரீ குருபரம்பரா ஸ்தோத்ரம்	குரு.ஸ்.
45.	சாந்தி விலாஸம்	சா.வி.
46.	சபர பாஷ்யம்	ச.பா.

Koviloor Digital Library

47. நைஷ்கர்ம்யஸித்திঃ	நை.ஸி.
48. ந்யாஸ விம்சதிঃ	ந்.வி.
49. ப்ரபோதசுதாகரா	ப்ர.சு.
50. பழமொழி	ப.மொ.
51. ஸர்வவேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்க்ரஹঃ	ஸ.ஸி.ஸா.
52. ஸித்தாந்த ஸித்தாஞ்ஜனம்	ஸி.ஸி.
53. ஜாபால உபநிஷத்	ஜா.உ.
54. சுபாஷிதாவலிঃ	சு.வ.
55. முன்னோர்கள் வாக்கு	மு.வா.
56. நீலகண்ட தீக்ஷிதரின் வைராக்ய சதகம்	நீ.வை.ச.
57. நீதி சதகம்	நீ.ச.
58. துர்கா ஸப்தசதீ	து.ஸ.
59. மந்த்ர ப்ரச்னா	மந்.ப்ர.
60. ப்ரஹ்ம ஞானாவலீ மாலா	ப்.ஞா.மா.
61. காரிகாவலிঃ (ப்ரத்யக்ஷ கண்டம்)	காரி.
62. ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கான பாமதி உரை	ப்ர.பா.உ.
63. ஜீவன்முக்தி விவேகத்தில் (2 வது அத்யாயத்தில்) வரும் மேற்கோள்	ஜீ.வி.
64. பாமினீவிலாஸঃ	பா.வி.
65. குணரத்னம்	கு.

Koviloor Digital Library

1. பரம்பொருளைப் பற்றிய விசாரம்

1. यस्माद्विश्वमुदेति यत्र निवसत्यन्ते यदप्येति यत्
सत्यज्ञानसुखस्वरूपमवधिद्वैतप्रणाशोज्झितम् ।
यज्जाग्रत्स्वपनप्रसुप्तिषु विभात्येकं विशोकं परं
प्रत्यग्ब्रह्म तदस्मि यस्य कृपया तं देशिकेन्द्रं भजे ॥ (ஸ். ஸி. 1-3)

2. आत्मा प्रियतमो यतः (ஆ.)

3. यस्माद्यावत्सुखं स्यादिह हि विषयतस्तावदस्मिन् प्रियत्वं
यावत् दुःखं च यस्माद्भवति खलु ततस्तावदेवाप्रियत्वम् ।
नैकस्मिन् सर्वकालेऽस्त्युभयमपि कदाऽप्यप्रियोऽपि प्रियः स्यात्
प्रेयानप्यप्रियो वा सततमपि ततः प्रेय आत्माख्यवस्तु ॥ (ச. ஸ்.10)

4. श्मश्रुकण्टकवेधेन बाले रुदति तत् पिता ।
चुम्बत्येव, न सा प्रीतिर्बालार्थे स्वार्थ एव सा ॥ (ப. த. 12-10)

5. मा न भूवं हि भूयासमिति प्रेमात्मनीक्ष्यते (ப.த.1-8)

6. तत् पुनर्ब्रह्म प्रसिद्धमप्रसिद्धं वा स्यात् (ப்ர. ஸூ. அ.)

7. यदि प्रसिद्धं न जिज्ञासितव्यम्
अथ अप्रसिद्धं नैव शक्यं जिज्ञासितुमिति (ஆ.)

8. नात्यन्तमज्ञो नो तज्ज्ञः सोऽस्मिञ्शास्त्रेऽधिकारवान्
(ல. யோ. 1-1-2)

9. देहोऽहमित्येव जडस्य बुद्धिः
देहे च जीवे विदुषस्त्वहन्धीः । (வி. சூ. 162)

10. देहावच्छिन्नं चैतन्यम् (ஆ.)

11. वासांसि जीर्णानि यथा विहाय
नवानि गृह्णाति नरोऽपराणि ।
तथा शरीराणि विहाय जीर्णा -
न्यन्यानि संयाति नवानि देही ॥ (ப. கீ. 2-22)

12. विवेकविज्ञानवतो महात्मनो
ब्रह्माहमित्येव मतिः सदात्मनि ॥ (வி. சூ. 162)

Koviloor Digital Library

13. प्रज्ञावानपि पण्डितोऽपि चतुरोऽप्यत्यन्तसूक्ष्मार्थदृग् -
व्यालीढस्तमसा न वेत्ति बहुधा संबोधितोऽपि स्फुटम् ।
भ्रान्त्यारोपितमेव साधु कलयत्यालंबते तद्गुणान्
हन्तासौ प्रबला दुरन्ततमसः शक्तिर्महत्यावृतिः ॥ (வி. சூ. 116)

14. ब्रह्माहमित्येव मतिः सदात्मनि (வி.சூ. 162)

15. सदा वाऽत्मबुद्धिर्ब्रह्माहमिति (ஆ.)

16. अत्र ब्रह्म समश्नुते (க. உ. 2-6-14)

17. अस्मिन्नेव जन्मनि ब्रह्म समश्नुते (ஆ.)

18. तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं
 गुहाहितं गह्वरेष्ठं पुराणम् ।
अध्यात्मयोगाधिगमेन देवं
 मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥ (க. உ. 1-2-12)

19. नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥ (ப. கீ. 3-18)

20. अपथ्यादाहारादपि तव कियन्मानसभयम्

21. पश्चाद्धन्त शरीरे रोगः (ப.கோ.28)

22. भोक्तुं न मोक्तुं क्षमाः (வை. ச. -17)

23. व्यापारैः पुनरुक्तभूतविषयैरित्थंविधेनामुना
संसारेण कदर्थिता वयमहो मोहान्न लज्जामहे ॥ (வை. ச. -44)

24. तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्
समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् (மு. உ. 1-2-12)

25. स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा (ஹ.ஆ. 1)

26. स्वस्याविद्याबन्धसंबन्धमोक्षात्
सत्यज्ञानानन्दरूपात्मलब्धौ ।
शास्त्रं युक्तिर्देशिकोक्तिः प्रमाणं
चान्तः सिद्धा स्वानुभूतिः प्रमाणम् ॥ (வி.சூ. - 475)

Koviloor Digital Library

27. किं ज्योतिस्तव भानुमानहनि मे रात्रौ प्रदीपादिकं
स्यादेवं रविदीपदर्शनविधौ किं ज्योतिराख्याहि मे ।
चक्षुस्तस्य निमीलनादिसमये किं धीर्धियोदर्शने
किं तत्राहमतो भवान् परमकं ज्योतिस्तदस्मि प्रभो ॥ (ஏ. ஸ்)
28. जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरं योऽसौ समुज्जृम्भते
प्रत्यग्रूपतया सदाऽहमहमित्यन्तः स्फुरन्नेकधा ।
नानाकारविकारभाजिन इमान् पश्यन्नहन्धीमुखान्
नित्यानन्दचिदात्मना स्फुरति तं विद्धि स्वमेतं हृदि ॥ (வி. சூ. 219)
29. एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति (ப்ரு.உ.4-3-32)
30. पङ्कापाये जलं स्फुटम् (ஆ.)
31. निर्विषयः यः आनन्दः उपलभ्यते सुषुप्तौ (ஆ.)
32. नानायोनिसहस्रसंभववशाज्जाता जनन्यः कति
प्रख्याता जनकाः कियन्त इति मे सेत्स्यन्ति चाग्रे कति
एतेषां गणनैव नास्ति .... (ச.ம.ஸ். 28)
33. अपि मानुष्यकं लब्ध्वा भवन्ति ज्ञानिनो न हि ।
पशुतैव वरं तेषां प्रत्यवायाप्रवर्तनात् ॥ (ஸ.ச. 7)
34. इतः कोन्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ।
दुर्लभं मानुषं देहं प्राप्य तत्रापि पौरुषम् ॥ (வி.சூ. -5)
35. दिने दिने च वेदान्तश्रवणाद् भक्तिसंयुतात् ।
गुरुशुश्रूषया लब्धात् कृच्छ्राशीतिफलं लभेत् ॥
36. स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् (ப.கீ. 2-40)

2. இலட்சியமும் அதற்கான வழியும்

1. विशुद्धज्ञानदेहाय त्रिवेदीदिव्यचक्षुषे ।
श्रेयः प्राप्तिनित्ताय नमः सोमार्धधारिणे ॥ (ச.வா. 1)
नमामि यामिनीनाथलेखालङ्कृतकुन्तलाम् ।
भवानीं भवसन्तापनिर्वापणसुधानदीम् ॥
2. अयं लोको नास्ति परः (க.உ. 1-2-6)

Koviloor Digital Library

3. अयं लोकः परश्च (ஆ.)
4. शश्वन्नश्वरमेव विश्वमखिलम् (ம. ப. -3)
5. ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति । (ப.கீ.18-61)
6. अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः (நா. ஸூ.)
7. ध्यानाभ्यासवशीकृतेन मनसा यन्निर्गुणं निष्क्रियं
ज्योतिः किञ्चन योगिनो यदि परं पश्यन्ति पश्यन्तु ते ।
(கூடா.தீ. 13-1)
8. निष्कलं निष्क्रियं शान्तं निरवद्यं निरञ्जनम् । (ச. உ. 6-19)
9. अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ॥ (ப. கீ. 4-6)
10. वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥ (ப.கீ. 7-19)
11. सत्यं वद । (தை. உ.1-11)
12. धर्मं चर । (தை. உ.1-11)
13. स्वाध्यायप्रवचनाभ्यां न प्रमदितव्यम् (தை. உ.1-11)
14. मातृदेवो भव । पितृदेवो भव । आचार्यदेवो भव । अतिथिदेवो भव ।
(தை. உ.1-11)
15. अग्नीषोमीयं पशुमालभेत । (தை.ஸம்.6-1-11)
16. अर्धं पाकायार्धं प्रसवाय (ந்யா.)
17. न हिंस्यात् सर्वा भूतानि (ச்ருதி.)
18. वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयतां
तेनेशस्य विधीयतामपचितिः काम्ये मतिस्त्यज्यताम् ।
पापौघः परिधूयतां भवसुखे दोषोऽनुसंधीयता-
मात्मेच्छा व्यवसीयतां निजगृहात्तूर्णं विनिर्गम्यताम् ॥ (உ.ப. 1)
19. येनास्य पितरो याता येन याताः पितामहाः । (மனு.ஸ். 4-178)
20. रुचीनां वैचित्र्याद्दजुकुटिलनानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णव इव ॥ (சி.ஸ். 7)
21. अपवित्रः पवित्रो वा सर्वावस्थां गतोऽपि वा ।
यः स्मरेत्पुण्डरीकाक्षं स बाह्याभ्यन्तरः शुचिः ॥

Koviloor Digital Library

22. अधिकारिणमाशास्ते फलसिद्धिर्विशेषतः । (வி. சூ. 14)
23. त्वयि मयि चान्यत्रैको विष्णु -
व्यर्थं कुप्यसि मय्यसहिष्णुः । (ப.கோ. 24)
24. कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतं समाः । (ஈ. உ.-2)
25. संसारमेव निःसारं दृष्ट्वा सारदिदृक्षया (நா.ப.உ. 3-15)
26. मोहान्न लज्जामहे (வை.ச. 44)
27. क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ॥ (ப. கீ. 9-21)
28. मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥ (ப.கீ. 8-16)
29. ममैवांशो जीवलोके जीवभूतः सनातनः । (ப.கீ. 15-7)
30. यथा नद्यः स्यन्दमानाः समुद्रेऽस्तं गच्छन्ति नामरूपे विहाय ।
(மு. உ. 3-2-8)
31. समुद्र इत्येवं प्रोच्यते (மு.உ. 3.2.8)
32. लीनः परे ब्रह्मणि (ஆ.)
33. परोपदेशे पाण्डित्यम् (ஆ.)
34. अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि तस्य वर्धन्ते आयुर्विद्या यशो बलम् ॥ (மனு.ஸ். 2-121)
35. ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनः । युक्ता आयुक्ताः । अलूक्षा धर्मकामाः स्युः ।
(தை. உ. 1-11)

3. சங்கரரின் சுலோகங்களில் உயர்ந்த தத்துவம்

1. त्वयि मयि चान्यत्रैको विष्णु -
व्यर्थं कुप्यसि मय्यसहिष्णुः ।
सर्वस्मिन्नपि पश्यात्मानं
सर्वत्रोत्सृज भेदज्ञानम् ॥ (ப.கோ. 24)
2. अविनयमपनय विष्णो दमय मनः शमय विषयमृगतृष्णाम् ।
भूतदयां विस्तारय तारय संसारसागरतः ॥ (ஷ. ஸ். 1)
3. यत्पृथिव्यां व्रीहियवं हिरण्यं पशवः स्त्रियः ।
एकस्यापि न पर्याप्तं तदित्यतितृषं त्यजेत् ॥ (வி.பு. 4-10-24)

Koviloor Digital Library

4. परोपकारः पुण्याय पापाय परपीडनम् (ஸ.ப.மா. 95)
5. शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किङ्करी यस्य सा माया शङ्कराचार्यमाश्रये ॥ (குரு.ஸ். 11)

4. ஆத்ம தரிசனமே பிறவிப்பயன்

1. येनाशान्ताः सलिलनिधयो येन सृष्टा प्रतिद्यौः
शस्त्राण्यस्त्राण्यपि कबलितान्येकया यस्य यष्टया ।
कस्तादृशः प्रभवति जनो देवभूदेववर्गे
कालः कीटानिव कबलयामास तानप्ययत्नम् ॥ (சா.வி. 37)
2. ऋणमोचनकर्तारः पितुः सन्ति सुतादयः ।
बन्धमोचनकर्ता तु स्वस्मादन्यो न कश्चन ॥ (வி.சூ. - 53)
3. श्रुतिप्रमाणैकमतेः स्वधर्मनिष्ठा तयैवात्मविशुद्धिरस्य ।
विशुद्धबुद्धेः परमात्मवेदनम् (வி.சூ. 150)
4. मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ॥ (ப. கீ. 16-20)
5. वाग्वैखरी शब्दझरी शास्त्रव्याख्यानकौशलम् ।
वैदुष्यं विदुषां तद्वद्भुक्तये न तु मुक्तये ॥ (வி.சூ. 60)
6. न जायते म्रियते वा कदाचि-
न्नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो
न हन्यते हन्यमाने शरीरे ॥ (ப. கீ. 2-20)

5. பரம்பொருளை அறிவதே உயர்ந்த கல்வி

1. अध्यात्मविद्या विद्यानां वादः प्रवदतामहम् (ப. கீ. 10-32)
2. सत्यं ज्ञानमनन्तं ब्रह्म (தை. உ. 2-1)
3. अचिन्त्याः खलु ये भावा न तांस्तर्केण योजयेत् ।
प्रकृतिभ्यः परं यच्च तदचिन्त्यस्य लक्षणम् ॥ (ப்ர. ஸூ.பா. 2-1-27)
4. न तत्र वागगच्छति नो मनः (கே. உ. 1-3)
5. यतो वाचो निवर्तन्तेऽप्राप्य मनसा सह । (தை. உ. 2-9)

Koviloor Digital Library

6. तं त्वौपनिषदं पुरुषं (ப்ரு. உ. 3-9-26)
7. परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायात् (மு. உ. 1.2.12)
8. आचार्याल्लब्दबोधा अपि विधिवशतः सन्निधौ संस्थितानां
त्रेधा तापं च पापं सकरुणहृदयाः स्वोक्तिभिः क्षालयन्ति ॥ (ச. ஸ்.2)
9. वसन्तवल्लोकहितं चरन्तः (வி. சூ. 39)
10. कार्यमित्येव यत्कर्म नियतं क्रियतेऽर्जुन ।
सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागः सात्त्विको मतः ॥ (ப. கீ. 18-9)
11. अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः ।
प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ॥ (ப. கீ. 15-14)
12. पश्यञ्शृण्वन् स्पृशञ्जिघ्रन्नश्नन्गच्छन्स्वपञ्श्वसन् ॥ (ப. கீ. 5-8)
13. इन्द्रियाणीन्द्रियार्थेषु वर्तन्त इति धारयन् ॥ (ப. கீ. 5-9)
14. ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक त्वा करोति यः ।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा ॥ (ப. கீ. 5-10)
15. द्वितीयाद्वै भयं भवति (ப்ரு. உ. 1-4-2)
16. इदम् सर्वमसृजत । यदिदं किं च । तत् सृष्ट्वा । तदेवानुप्राविशत् ।
(தை. உ. -2-7)
17. सदेव सोम्य इदमग्र आसीत् । (சா.உ. 6-2-1)

6. கீதை புகட்டும் நெறி

1. विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः ॥ (ப.கீ. 1-47)
2. तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत (ப.கீ. 2-10)
3. शारीरकस्य अपि कृते मूढाः पापानि कुर्वते
4. अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत ॥ (ப.கீ. 2-18)
5. तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥ (ப.கீ. 4-13)
6. जातस्य हि ध्रुवो मृत्युर्ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्येऽर्थे न त्वं शोचितुमर्हसि ॥ (ப.கீ. 2-27)
7. नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥ (ப.கீ. 2 - 40)

Koviloor Digital Library

8. हर्षामर्षभयोद्वेगैर्मुक्तो यः स च मे प्रियः ।। (ப.கீ. 12 - 15)
9. अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च (ப.கீ. 12 - 13)

7. ஸத்குருவின் லக்ஷணங்கள்

1. ओं नमः सर्वभूतानि विष्टभ्य परितिष्ठते ।
अखण्डानन्दबोधाय पूर्णाय परमात्मने ।। (தீதிதி.)
2. सिद्धं सत्संप्रदाये स्थिरधियमनघं श्रोत्रियं ब्रह्मनिष्ठं
सत्वस्थं सत्यवाचं समयनियतया साधुवृत्त्या समेतम् ।
दम्भासूयादिमुक्तं जितविषयगणं दीर्घबन्धुं दयालुं
स्खालित्ये शासितारं स्वपरहितपरं देशिकं भूष्णुरीप्सेत् ।। (ந்.வி.1)
3. आचार्याद्धैव विद्या विदिता साधिष्ठं प्रापति (சா. உ. 4-93)
4. स्वयं नष्टः परान्नाशयति (ஆ.)
5. व्यवसायात्मिका बुद्धिरेकेह कुरुनन्दन ।
बहुशाखा ह्यनन्ताश्च बुद्धयोऽव्यवसायिनाम् ।। (ப.கீ. 2 -41)
6. स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।
स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ।। (ப.கீ. 2 -54)
7. ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा । (ப.கீ. 4-37)
8. श्रुतिप्रमाणैकमतेः स्वधर्मनिष्ठा तयैवात्मविशुद्धिरस्य ।
विशुद्धबुद्धेः परमात्मवेदनं तेनैव संसारसमूलनाशः ।। (வி. சூ. 150)
9. धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ।। (ப.கீ. 7 - 11)
10. कर्मेंद्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इंद्रियार्थान् विमूढात्मा मिथ्याचारः स उच्यते ।। (ப.கீ. 3-6)
11. केचिदन्यं धर्ममाहुः केचिदन्यं (ச.பா.)
12. सत्त्वात्संजायते ज्ञानं रजसो लोभ एव च ।
प्रमादमोहौ तमसो भवतोऽज्ञानमेव च ।। (ப.கீ. 14-17)
13. त्रिभिर्गुणमयैर्भावैरेभिस्सर्वमिदं जगत् ।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम् ।। (ப.கீ. 7 - 13)
14. सत्त्वं सुखे संजयति (ப.கீ. 14-9)

Koviloor Digital Library

15. सत्त्वं प्रकृतिजैर्मुक्तं यदेभिः स्यात्त्रिभिर्गुणैः (ப.கீ. 18-40)
16. तच्चिन्तनं तत्कथनमन्योन्यं तत्प्रबोधनम्।
एतदेकपरत्वं च ब्रह्माभ्यासं विदुर्बुधाः ॥ (ல.யோ. 3-2-8)
17. निद्राया लोकवार्तायाः शब्दादेरपि विस्मृतेः।
क्वचिन्नावसरं दत्त्वा चिन्तयात्मानमात्मनि ॥ (வி. சூ. 287)
18. शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः ॥ (ப.கீ. 3-8)
19. यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥ (ப.கீ. 3-9)
20. तस्मादसक्तः सततं कार्यं कर्म समाचर। (ப.கீ. 3-19)
21. शुनां तत्त्वदृशां चैव को भेदोऽशुचिभक्षणे। (நை.ஸி. 4-62)
22. अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥ (ப.கீ. 9 - 22)
23. बाल्यं च पाण्डित्यं च निर्विद्य अथ मुनिः। (ப்ரு.உ. 3-5-1)
24. विद्या ह वै ब्राह्मणमाजगाम गोपाय मा शेवधिष्टेऽहमस्मि।
असूयकायानृजवेऽयताय न मा ब्रूया वीर्यवती तथा स्याम् ॥ (நி.2-1-4)
25. न च मां योऽभ्यसूयति (ப.கீ. 18-67)
26. शब्दादिभिः पञ्चभिरेव पञ्च पञ्चत्वमापुः स्वगुणेन बद्धाः।
कुरङ्गमातङ्गपतङ्गमीनभृङ्गाः नरः पञ्चभिरञ्चितः किम् ॥ (வி. சூ. 78)
27. पुरुषं बध्नाति विषयः (ஆ.)
28. संशयात्मा विनश्यति (ப.கீ. 4 - 40)

8. சீடனுக்கு வேண்டிய தகுதிகள்

1. लौकिकं वैदिकं वापि तथाऽऽध्यात्मिकमेव च।
आददीत यतो ज्ञानं तं पूर्वमभिवादयेत् ॥ (மனு.ஸ். 2-117)
2. सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज। (ப.கீ. 18-66)
3. सद्बुद्धिः साधुसेवी समुचितचरितस्तत्त्वबोधाभिलाषी
शुश्रूषुस्त्यक्तमानः प्रणिपतनपरः प्रश्नकालप्रतीक्षः।
शान्तो दान्तोऽनसूयः शरणमुपगतः शास्त्रविश्वासशाली
शिष्यः प्राप्तः परीक्षां कृतविदभिमतं तत्त्वतः शिक्षणीयः ॥ (ந்.வி. 3)

Koviloor Digital Library

4. अजातमृतमूर्खाणां मृताजातौ वरौ सुतौ ।
तौ किञ्चिच्छोकदौ पुत्रौ मूर्खस्त्वत्यन्तदुःखदः ॥
5. विद्या विवादाय धनं मदाय शक्तिः परेषां परिपीडनाय ।
खलस्य, साधोर्विपरीतमेतज्ज्ञानाय दानाय च रक्षणाय ॥ (சு. 7)
6. मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी । (ப.கீ. 13-10)
विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ॥
7. सङ्गात्सञ्जायते कामः कामात्क्रोधोऽभिजायते । (ப.கீ. 2-62)
8. सत्सङ्गत्वे निःसङ्गत्वं (ப.கோ. 9)
9. लोष्टमर्दी तृणच्छेदी नखखादी च यो नरः ।
स विनाशं व्रजत्याशु सूचकोऽशुचिरेव च ॥ (மனு.ஸ். 5-71))
10. पिशुनैः प्रकाममुदितां परस्य निन्दां शृणोति कर्णाभ्याम् ।
तेन परः किं म्रियते व्यर्थं मनुजोऽतिपापभाग्भवति ॥ (ப்ர.சு. 4-59)
11. य आतृणत्त्यवितथेन कर्णावदुःखं
कुर्वन्नमृतं संप्रयच्छन् ।
तं मन्येन पितरं मातरं च तस्मै न
द्रुह्येत कतमच्चनाह ॥ (நி. 2-1-4)
12. नायं लोको नापरः (ஆ.)
13. गुरुद्वयं शिष्यनिपातहेतुः (ப.மொ.)
14. यः शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥ (ப.கீ.16-23)
15. तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ॥ (ப.கீ.16-24)
16. उपाध्यायाश्च वैद्याश्च कार्यान्तेऽप्रयोजकाः

9. ஆத்ம ஞானமே பேரின்ப சாதனம்

1. वृश्चिकभयात् पलायमानस्य आशीमुखे निपातः (ப.மொ.)
2. अन्धं तमः प्रविशन्ति (ஈ. உ. 12)
3. ये के चात्महनो जनाः (ஈ. உ. 3)
4. सारवद् विश्वतोमुखम्

Koviloor Digital Library

5. तुल्यं कर्षन्ति पृथिवीं तुल्यं शास्त्राण्यधीयते ।
उन्मज्जन्ति निमज्जन्ति दैवस्यैकस्य लीलया ॥ (ஸ.ச. 59)
6. अधर्मेणैधते तावत्ततो भद्राणि पश्यति ।
ततः सपत्नाञ्जयति समूलस्तु विनश्यति ॥ (மனு.ஸ். 4-174)
7. त्रिभिर्वर्षैस्त्रिभिर्मासैस्त्रिभिः पक्षैस्त्रिभिर्दिनैः ।
अत्युत्कटैः पुण्यपापैरिहैव फलमश्नुते ॥
8. गतेऽपि वयसि ग्राह्या विद्या सर्वात्मना बुधैः ।
यद्यपि स्यान्न फलदा सुलभा साऽन्यजन्मनि ॥ (சு.வ. 2645)
9. मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ॥ (ப. கீ. 16-20)
10. भीषाऽस्माद्वातः पवते । भीषोदेति सूर्यः । (தை. உ.2-8)
11. धन्यो जनः प्राज्ञः
12. नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि
13. अशब्दमस्पर्शमरूपमव्ययं तथाऽरसं नित्यमगन्धवच्च यत् । (க.உ.3-15)
14. आकाशवत् सर्वगतश्च नित्यः
15. ध्यानाभ्यासवशीकृतेन मनसा यन्निर्गुणं निष्क्रियं
ज्योतिः किञ्चन योगिनो यदि परं पश्यन्ति पश्यन्तु ते ।
अस्माकं तु तदेव लोचनचमत्काराय भूयाच्चिरं
कालिन्दीपुलिनेषु तत्किमपि यन्नीलमहो धावति ॥ (கூடா.தீ. 13-1)
16. आत्मारामाश्च मुनयो निर्ग्रन्थाऽप्युरुक्रमे ।
कुर्वन्त्यहैतुकीं भक्तिमित्थंभूतगुणो हरिः ॥ (ஸ்ரீ. பா. 1-7-10)
17. पलालमिव धान्यार्थी त्यजेद्ग्रन्थानशेषतः
18. शब्दजालं महारण्यम् (வி. சூ.62)
19. परोपकृतिकैवल्ये तोलयित्वा जनार्दनः ।
गुर्वीमुपकृतिं मत्वा अवतारान् दशाग्रहीत् ॥
20. अजायमानो बहुधा विजायते ॥ (பு. ஸூ.)
21. सखेति मत्वा प्रसभं यदुक्तं
हे कृष्ण हे यादव हे सखेति । (ப. கீ. 11-41)
22. पितासि लोकस्य चराचरस्य । (ப. கீ.11-43)

Koviloor Digital Library

23. प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते (ஸ.ஸி. ஸா. 11)
24. न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥ (ப. கீ.3-22)
25. उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम्। (ப. கீ.3-24)
26. न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम्।
जोषयेत् सर्वकर्माणि विद्वान् युक्तः समाचरन् ॥ (ப. கீ.3-26)
27. यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥ (ப. கீ. 3-21)
28. सेतौ सैकतलिङ्गेन नष्टं मे ताम्रभाजनम्
29. गतानुगतिको लोको न लोकः पारमार्थिकः
30. ज्ञानादेव तु कैवल्यम् (ஸ்ம்ருதி.)

10. ஆன்மீக சாதகனின் எதிரிகள்

1. यथा दण्डोद्यतकरं पुरुषमभिमुखमुपलभ्य मां हन्तुमयमिच्छतीति
पलायितुमारभन्ते, हरिततृणपूर्णपाणिमुपलभ्य तं
प्रत्यभिमुखीभवन्ति .. (ப்ர.ஸூ.அ.)
2. अतः समानः पश्वादिभिः पुरुषाणां प्रमाणप्रमेयव्यवहारः।
(ப்ர.ஸூ.அ.)
3. जानामि धर्मं न च मे प्रवृत्तिः
जानाम्यधर्मं न च मे निवृत्तिः। (ப.த. 6-176)
4. त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः।
कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ॥ (ப. கீ.16-21)
5. अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ॥ (ப. கீ. 5-15)
6. काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः। (ப. கீ. 3-37)
7. कामो बुद्धावुदेति प्रथममिह मनस्युद्दिशत्यर्थजातं
तत् गृह्णातीन्द्रियास्यैस्तदनधिगमतः क्रोध आविर्भवेच्च।
प्राप्तावर्थस्य संरक्षणमतिरुदितो लोभ एतत्त्रयं स्यात्
सर्वेषां पातहेतुस्तदिह मतिमता त्याज्यमध्यात्मयोगात् ॥ (ச.ஸ். 18)

Koviloor Digital Library

8. काम जानामि ते मूलं सङ्कल्पात्त्वं हि जायसे ।
न त्वां सङ्कल्पयिष्यामि तेन मे न भविष्यसि ॥
(ம.பா. 12-177-25) (சாந்தி பர்வம்)

9. ध्यायतो विषयान् पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात् सञ्जायते कामः कामात् क्रोधोऽभिजायते ॥ (ப. கீ.2-62)

10. तृष्णाखनिरगाधेयं दुष्पूरा केन पूर्यते ।
या महद्भिरपि क्षिप्तैः पूरणैरेव खन्यते ॥

11. असौ मया हतः शत्रुर्हनिष्ये चापरानपि ।
ईश्वरोऽहमहं भोगी सिद्धोऽहं बलवान् सुखी ॥ (ப.கீ. 16-14)

12. आढ्योऽभिजनवानस्मि कोऽन्योऽस्ति सदृशो मया । (ப.கீ. 16-15)

13. क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः । (ப.கீ.2-63)

14. नमोऽस्तु कोपदेवाय स्वाश्रयज्वालिने नमः । (ஜீ.வி.)

15 प्राप्तावर्थस्य संरक्षणमतिरुदितो लोभः (ச.ஸ். 18)

16. धावन् धावन् दिशि दिशि शनैरिन्द्रियाश्वा निपेतुः (சா.வி. 12)

17. अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥
(க.உ. 1-2-12)

18. एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारैस्त्रिभिर्नरः ।
आचरत्यात्मनः श्रेयस्ततो याति परां गतिम् ॥ (ப.கீ. 16-22)

19. नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः
नाशान्तमानसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥ (க.உ. 1-2-24)

11. விசாரம் செய்ய நான்கு தகுதிகள்

1. या तिर्यङ्नरदेवताभिरहमित्यन्तः स्फुटा गृह्यते
यद्भासा हृदयाक्षदेहविषया भान्ति स्वतोऽचेतनाः ।
तां भास्यैः पिहितार्कमण्डलनिभां स्फूर्तिं सदा भावयन्
योगी निर्वृतमानसो हि गुरुरित्येषा मनीषा मम ॥ (ம. ப. 4)

2. पुत्रभार्यादिषु विकलेषु सकलेषु वा अहमेव विकलः सकलो वेति
बाह्यधर्मानात्मन्यध्यस्यति ... (ப்ர.ஸூ.அ.)

Koviloor Digital Library

3. युष्मदस्मत्प्रत्ययगोचरयोः विषयविषयिणोः तमः
प्रकाशवद्विरुद्धस्वभावयोः । (ப்ர. ஸூ. அ.)
4. कर्मावबोधानन्तर्यम् । (ப்ர. ஸூ. பா. 1-1-1-1)
5. अनधीत्य द्विजो वेदाननुत्पाद्य तथा सुतान् । (மனு. ஸ். 6-37)
6. मनो मोक्षे निवेशयेत् (மனு.ஸ். 6-36)
7. ब्रह्मचर्यादेव प्रव्रजेद्गृहाद्वा वनाद्वा (ஜா.உ. 4)
8. उपेक्षैवोपायः तव हृदये तेषामुपशमः
9. सवितर्यपि शीतरुचौ चन्द्रे तीक्ष्णेऽप्यधो वहत्यग्नौ ।
मायिकमिदमिति जानन् जीवन्मुक्तो न विस्मयी भवति ॥ (ஆ.வி. -18)
10. ब्रह्मानन्देन तृप्तस्य (ஆ.)
11. यत्सौख्याम्बुधिलेशलेशत इमे शक्रादयोनिर्वृताः (ம.ப. 5)
12. ततस्ततश्चोपरतिः क्रियाभ्यः (ம.பா. 175-37)
13. त्यक्त्वा जातिकुलाश्रमेष्वभिमतिं मुञ्च्यात्सुदूरात् क्रियाः
14. देहादौ असति त्यजात्मधिषणाम्
15. सहनं सर्वदुःखानामप्रतीकारपूर्वकम् ।
चिन्ताविलापरहितं सा तितिक्षा निगद्यते ॥ (வி. சூ.25)
16. शास्त्रस्य गुरुवाक्यस्य सत्यबुद्ध्यावधारणा ।
सा श्रद्धा कथिता सद्भिर्यया वस्तूपलभ्यते ॥ (வி. சூ.26)
17. मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥ (ப. கீ.7-14)
18. प्रदीप्तशिरो जलं प्रविविक्षुरिव (உ.ஸா.)
19. अथवा योगिनामेव कुले भवति धीमताम् । (ப. கீ.6-42)
20. नास्त्यकृतः कृतेन (மு.உ. 1-2-12)
21. कृतेन कर्मणः अकृतः मोक्षः (ஆ.)
22. हरिपदभजनं तन्निवृत्त्यै प्रकुर्मः । (மு.வா.)
23. स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः (ப. கீ.18-46)
24. ज्ञानप्रसादेन विशुद्धसत्त्वः (மு.உ. 3-1-8)
25. निष्णातोऽपि च वेदान्ते वैराग्यं नैति दुर्जनः ।
चिरं जलनिधौ मग्नो मैनाक इव मार्दवम् ॥ (பா.வி.அ-85)

Koviloor Digital Library

26. सर्वो ह्यात्मास्तित्वं प्रत्येति न नाहमस्मीति । (ப்ர.ஸூ.பா.1-1-1)
27. आत्मा च ब्रह्म (ப்ர.ஸூ.பா. 1-1-1)
28. भक्त्या मामभिजानाति यावान् यश्चास्मि तत्त्वतः । (ப. கீ. 18-55)
29. समुद्र इत्येवं प्रोच्यते नामरूपे विहाय । (மு. உ. 3-2-8)
30. नावेदविन्मनुते तं बृहन्तम् (கா. 3-9)
31. ब्रह्म वेद ब्रह्मैव भवति (மு.உ.3-2-9)
32. ज्ञात्वा देवं सर्वपाशाऽपहानि-

    र्नान्यः पन्थाश्चेति भूयोवचोभिः ।

    ज्ञप्तेः साक्षान्मुक्तिहेतुत्वसिद्धौ

    अध्यासत्वं बन्धनस्याऽर्थसिद्धम् ॥ (ஸ்.ஸ்ரீ. 5)
33. आविद्यो ह्येष बन्धो विरमति न विना वेदनं कर्मजालैः (ஸ்.ஸ்ரீ. 7)
34. यदा चर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः ।

    तदा देववमविज्ञाय दुःखस्यान्तो भविष्यति ॥ (ச்.உ.6-20)
35. दुर्लभं त्रयमेवैतद्दैवानुग्रहहेतुकम् ।

    मनुष्यत्वं मुमुक्षुत्वं महापुरुषसंश्रयः ॥ (வி. சூ. 3)

12. பரம்பொருளின் லக்ஷணம்

1. अथातो ब्रह्मजिज्ञासा (ப்ர. ஸூ.1-1-1)
2. जन्माद्यस्य यतः (ப்ர. ஸூ.1-1-2)
3. जन्मादि अस्य परिदृश्यमानस्य प्रपञ्चस्य

   यतः यस्मात् कारणात् सर्वज्ञात् सर्वशक्तात्

   भवति तत् ब्रह्म । (ஆ.)
4. यस्माज्जन्मस्थिंतिभङ्गः (ஆ.)
5. सत्यज्ञानसुखस्वरूपं (ஸ்.ஸ்ரீ. 1-3)
6. त्रिकालाबाध्यत्वं सत्यत्वम् (ஆ.)
7. जगत्कारणं ब्रह्म (ஆ.)
8. यस्मिन् नित्यसुखांबुधौ गलितधीः ब्रह्मैव न ब्रह्मवित् (ம. ப.5)

Koviloor Digital Library

9. अवधिद्वैतप्रणाशोज्झितं (ஸ்.ஸி. 1-3)
10. पादोऽस्य विश्वाभूतानि । त्रिपादस्यामृतं दिवि (பு. ஸூ.)
11. न तस्य प्रतिमा अस्ति (ச். உ. 4-19)
12. ... वाचारंभणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम् (சா. உ. 6-1-4)
13. यज्जाग्रत्स्वपनप्रसुप्तिषु विभात्येकं विशोकं परं (ஸ்.ஸி. 3)
14. न तत्र रथाः न रथयोगा न पन्थानः (ப்ரு. உ.4-3-10)
15. निर्विषयः यः अनुभवः श्रूयते सुखस्य (ஆ.)
16. दुःखजन्मप्रवृत्तिदोषमिथ्याज्ञानानां तदुत्तरोत्तरापाये
    तदनन्तरापायादपवर्गः (கௌ. ஸூ. 1-1-2)
17. कुर्वते कर्म भोगाय कर्म कर्तुं च भुञ्जते (ப.த. 1-30)
18. रागद्वेषमोहा दोषाः (ஆ.)
19. भुक्ता बहवो दारा लब्धाः पुत्राश्च पौत्राश्च ।
    नीतं शतमप्यायुः सत्यं वद, मर्तुमस्ति मनः ॥ (நி.வை.ச. 63)
20. तेषां मोहः पापीयान् (கௌ. ஸூ. 4-4-6)
21. प्रत्यग्ब्रह्म तदस्मि यस्य कृपया तं देशिकेन्द्रं भजे (ஸ்.ஸி. 1-3)
22. प्रत्यगभिन्नं ब्रह्म
23. यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति
    (தை. உ. 2-7)
24. अनेकजन्मसंसिद्धस्ततो याति पराङ्गतिम् ॥ (ப. கீ. 6-45)

13. திசைக்கும் காலத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருள்

1. दिक्कालाद्यनवच्छिन्नानन्तंचिन्मात्रमूर्तये ।
   स्वानुभूत्यैकमानाय नमः शान्ताय तेजसे ॥ (நீ.ச. 1)
2. नाल्पे सुखमस्ति (சா. உ. 2-7-23)
3. यो वै भूमा तत्सुखम् (சா. உ. 7-23)

Koviloor Digital Library

14. அத்வைத அனுபவமும் அதற்கான தகுதிகளும்

1. अन्येषां बलमाश्रित्य युद्धचसे चातिमानिनी (து.ஸ. 10-3)
2. एकैवाहं जगत्यत्र द्वितीया का ममापरा (து.ஸ. 10-5)
3. तयोरैक्यं श्रुत्यन्तेषूपदिश्यते ।
4. आत्मा वै पुत्रनामासि (மந்.ப்ர. 1)
5. देयं दीनजनाय च वित्तम् (ப. கோ. 27)
6. संतोषं जनयेत् प्राज्ञस्तदेवेश्वरपूजनम्
7. द्रव्यं पल्लवतश्च्युतं यदि भवेत् क्वापि प्रमादात्तदा
शोकायाथ तदर्पितं श्रुतवते तोषाय च श्रेयसे ।
स्वातन्त्र्याद्विषयाः प्रयान्ति यदमी शोकाय ते स्युश्चिरं
संत्यक्ताः स्वयमेव चेत्सुखमयं निःश्रेयसं तन्वते ॥ (ப்ர. சு.)
8. अतिपरिचयादवज्ञा भवति विशिष्टेति वस्तुनि प्रायः ।
नित्यं प्रयागवासी कूपस्नानं सदाचरति ॥
9. जीवो ब्रह्मैव नापरः (ப்.ஞா. மா. 20)
10. अधीतेज्यादानं व्रतजपसमाधाननियमै -
र्विशुद्धस्वान्तानां जगदिदमसारं विमृशताम् ।
अरागद्वेषाणामभयचरितानां हितमिदं
मुमुक्षूणां हृद्यं किमपि निगदामः सुमधुरम् ॥ (ஸ். ஸி. 1-4)

15. மனிதப் பிறவியை வீணாக்காதீர்

1. गङ्गापूरप्रचलितजटास्रस्तभोगीन्द्रभीता-
मालिङ्गन्तीमचलतनयां सस्मितं वीक्षमाणः ।
लीलापाङ्गैः प्रणतजनतां नन्दयंश्चन्द्रमौलि-
र्मोहध्वान्तं हरतु परमानन्दमूर्तिश्शिवो नः ॥ (ஸ். ஸி. 1-1)
2. अन्यच्छ्रेयोऽन्यदुतैव प्रेय-
स्ते उभे नानार्थे पुरुषं सिनीतः ।
तयोः श्रेय आददानस्य साधु
भवति हीयतेऽर्थाद्य उ प्रेयो वृणीते ॥ (க. உ. 1-2-1)

Koviloor Digital Library

3. स एष इह प्रविष्टः आ नखाग्रेभ्यः (ப்ரு. உ. 1-4-7)
4. न तस्य प्राणा उत्क्रामन्ति । (ப்ரு. உ.4.4.6)
अत्रैव समवनीयन्ते (ப்ரு. உ.3.2.11)
5. यथेह कर्मचितो लोकः क्षीयते एवमेवामुत्र पुण्यचितो लोकः क्षीयते (சா. உ.8.1.6)
6. जन्तूनां नरजन्म दुर्लभम् (வி. சூ. 2)
7. एकैवाहं जगत्यत्रस्मिन् द्वितीया का ममापरा (து.ஸ. 10-5)
8. यत्नेनानुमितोऽप्यर्थः कुशलैरनुमातृभिः ।
अभियुक्ततरैरन्यैरन्यथैवोपपाद्यते ॥ (ப்ர.பா.உ. 2-1-11)
9. आत्मनः स्युश्चतुर्दश (காரி)
10. देवात्मशक्तिं स्वगुणैर्निगूढाम् (ச். உ.1-3)
11. वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः (மு. உ.3.2.6)
12. आत्मा वा अरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः (ப்ரு.உ. 2-4-5)
13. तं त्वौपनिषदं पुरुषं पृच्छामि (ப்ரு. உ. 3.9.26)
14. गर्भस्थ एव ऋषिर्वामदेवः प्रतिपेदेऽहं मनुरभवं सूर्यश्च (ப்ரு. உ. 1-4-10)
15. स यश्चायं पुरुषे यश्चासावादित्ये (தை. உ. 3.10.4)
16. शान्ता महान्तो निवसन्ति सन्तो
वसन्तवल्लोकहितं चरन्तः ।
तीर्णास्स्वयं भीमभवार्णवं जना-
नहेतुनाऽन्यानपि तारयन्तः ॥ (வி. சூ.39)
17. अधीतेज्यादानव्रतजपसमाधाननियमै -
र्विशुद्धस्वान्तानां जगदिदमसारं विमृशताम् । (ஸ். ஸி. 1-4)
18. सांसारिकसुखासक्तमहं ब्रह्मेति वादिनम् ।
कर्मब्रह्मोभयभ्रष्टं तं त्यजेदन्त्यजं यथा ॥
19. यदृच्छालाभसन्तुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥ (ப. கீ. 4-22)

Koviloor Digital Library

20. पराञ्चि खानि व्यतृणत्स्वयंभू -
स्तस्मात्पराङ्पश्यति नान्तरात्मन् । (க. உ. 2.1.1)
21. मुहूर्तमात्रेऽतिक्रान्ते भगवच्चिन्तनं विना ।
तस्युभिर्मुषितेनेव युक्तमाक्रन्दितुं ध्रुवम् ॥

16. சங்கரர் நிலைநாட்டிய உபநிடத தத்துவம்

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
520 3

1. श्रुति स्मृति पुराणानां आलयं करुणालयम् ।
नमामि भगवत्पादशंकरं लोकशंकरम् ॥
2. कणधयधिया कारागारादपेतमनात्मनः
कपिलमुनिना निर्णिक्तात्मानमञ्चितविग्रहम् ।
निगमशिरसा स्वाराज्ये स्वे चिरादभिषेचितं
जयति समवन्देवं दास्याद्गुरुर्मम तान्त्रिकात् ॥

(ஸி.ஸி.) (2 ம் பாகம் முடிவில்)

3. स्वयमेव राट् स्वराट् स्वराड्भावं स्वाराज्यम् (ஆ.)
4. तदात्मानं स्वयमकुरुत (தை.உ. ஆனந்தவல்லீ)
5. तमात्मस्थं येऽनु पश्यन्ति धीराः तेषां शान्तिः शाश्वती नेतरेषाम्

(க.உ. 2-2-13)

6. न तं विदाथ यः इदं जजान अन्यत् युष्माकं अन्तरं भवाति

(தை.ஸம். 4-6-2)

7. इत्थं सिद्धे विभागे श्रुतिशिखरगिरा वित्तिघात्यः प्रतीतः
बन्धो मिथ्येति सिद्धे न तदपहतये कर्मजातं समर्थम् (ஸ்.ஸி. 1-6)
8. आत्मा सच्चित्सुखात्माऽनुभवपरिचितः सर्वदेहादियन्ता (ச. ஸ். 4)
9. अन्योऽन्यस्मिन्नन्योऽन्यात्मकतामन्योऽन्यधर्मांश्च अध्यस्य

(ப்ர.ஸூ.அ.)

10. यत्र त्वस्य सर्वमात्मैवाभूत् तत्केन कं पश्येत् । (ப்ரு. உ. 2-4-14)
11. उपनिषदैकसमधिगम्यम् (ஆ.)
12. यथा संभवमिह अनुभववेद्यं च प्रमाणम् (ஆ.)

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
5203
R65
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

தமது 13 வது வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டு, 14 வது வயதில் துறவறம் பூண்டு, கடும் தவநெறி மூலம் யோகத்தின் மிக உயர்ந்த நிலையான நிர்விகல்ப ஸமாதியில் நிலைத்திருந்து 20 வயதிற்குள் தலைசிறந்த ஜீவன்முக்தராக விளங்கிய ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35 வது பீடாதிபதியாகப் பொறுப்பேற்று 35 ஆண்டுகள் (1954 – 1989) சிறப்பாகப் பீடத்தை அலங்கரித்தார்.

யோகம், தர்க்கம், வேதாந்தம் ஆகிய சாஸ்திரங்களில் ஆழ்ந்த புலமை பெற்ற குருநாதர் வேதாந்த பாடங்களை தமது குருவிடம் முறையாக கற்கும் முன்னரே யோகத்தின் தலைசிறந்த நிலைகளையும் ஞான அனுபவத்தையும் பெற்று விளங்கியது குறிப்பிடத்தக்கது. மடத்தின் மேன்மைக்காகவும், பக்தர்களின் நலனிற்காகவும் ஆசார்யாள் ஆற்றிய தொண்டுகள் பலப்பல. பாரதம் முழுவதும் பல விஜயயாத்திரைகளை மேற்கொண்டு, தர்ம நெறிகளையும், உபநிஷத்துக்களில் அடங்கியுள்ள நுட்பமான அத்வைத வேதாந்த கருத்துக்களையும் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் ஆசார்யாள் ஆற்றிய உபந்யாஸங்கள் எண்ணற்றவை.

மிகவும் அரிதாக கிடைத்திருக்கும் மானிடப் பிறவியை, தாற்காலிகமான உலக இன்பங்களில் ஈடுபட்டு வீணாக்காமல், பேரின்ப வடிவான அத்வைத நிலையை எய்துவதே பிறவிப்பயன் என்று விளக்கும் ஆசார்யாள், மோக்ஷ மார்க்கத்தை – முக்தி நெறியை தமது உபந்யாஸங்களில் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். அத்தகைய அருளுரைகளில் 16 உபந்யாஸங்கள் இப்புத்தகத்தில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

Rs. 30/-